
# 1984 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 51

**12.01.1984 எப்பொழுதும் சக்திசாலியாக யோசியுங்கள் மற்றும் வர்ணனை செய்யுங்கள்!**

**14.01.1984 இரட்டை சேவாதாரி இயல்பாகவே மாயாவை வென்றவராக இருக்கிறார்!**

**16.01.1984 சுயராஜ்யம் உங்களுடைய பிறப்புரிமை!**

**18.01.1984 நினைவு நாளின் மகத்துவம்!.**

**20.01.1984 மகாதானி ஆகுங்கள், வரதானி ஆகுங்கள்!**

**22.01.1984 பெயர் பெற்ற சேவாதாரி ஆவதற்கான விதி!**

**13.02.1984 அசாந்திக்கான காரணம் பிராப்தியின்மை மேலும் பிராப்தியின்மைக்கான காரணம் தூய்மையின்மை!**

**18.02.1984 பிராமண வாழ்க்கை -விலைமதிக்க முடியாத வாழ்க்கை!**

**20.02.1984 ஒரு மிக உயர்ந்த, மகான் மற்றும் நன்மையே பயக்கும் நேரம்!**

**22.02.1984 சங்கம யுகத்தில் நான்கு இணைந்த ரூபங்களின் அனுபவம்!**

**24.02.1984 பிராமண ஜென்மம் -அவதரித்த ஜென்மம்!**

**26.02.1984 பாப்தாதாவின் அதிசயமான சித்திரக் கூடம்!**

**28.02.1984 புள்ளி மற்றும் துளியின் (சொட்டு) இரகசியம்!**

**01.03.1984 ஒன்றின் கணக்கு!**

**03.03.1984 இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல்!**

**05.03.1984 அமைதி சக்தியின் மகத்துவம்!**

**07.03.1984 கர்மாதீத் (கர்ம பந்தனம் அற்ற நிலை), வானபிரஸ்தி (சப்தத்திலிருந்து விலகிய நிலை) ஆத்மாக்கள் தான் தீவிர வேகமாக சேவை செய்வதற்கு பொறுப்பாளர்கள்!**

**09.03.1984 மாற்றத்தை அழியாததாக ஆக்குங்கள்!**

12.03.1984 ஆன்மீகத் தன்மைக்கான சகஜ விதி -திருப்தி!

15.03.1984 ஹோலி உற்சவம் (பண்டிகை) தூய்மை ஆவதற்கு மற்றும் ஆக்குவதற்கான நினைவுச்சின்னம்!

02.04.1984 பிந்துவின் மகத்துவம்!

04.04.1984 சங்கம யுகத்தின் சிரேஷ்ட வேளை, சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் அடையாள சித்திரத்தை உருவாக்குவதற்கான வேளை!

08.04.1984 சங்கம யுகத்தில் பிராப்தி ஆகியிருக்கும் அதிகாரம் மூலமாக உலக இராஜ்ய அதிகாரி ஆவது!

10.04.1984 பிரபுவின் அன்பு -பிராமண வாழ்க்கைக்கான ஆதாரம்!

12.04.1984 பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் தூய்மை!

15.04.1984 அன்பான, சகயோகி, சக்திசாலி குழந்தைகளின் மூன்று நிலைகள்!

17.04.1984 பல மடங்கு பாக்கியம் நிறைந்தவரின் அடையாளம்!

**19.04.1984 பாவனை உள்ள ஆத்மா மற்றும் ஞானம் நிறைந்த ஆத்மாவின் இலட்சணம்!**

**22.04.1984 விசித்திர தந்தையின் மூலமாக விசித்திர படிப்பு மற்றும் விசித்திர பிராப்தி!**

**24.04.1984 தற்சமய பிராமண ஜென்மம் வைரத்திற்குச் சமமானது!**

**26.04.1984 ஆன்மீக விசித்திர மேளாவில் (சந்திப்பில்) அனைத்து பொக்கிஷங்களின் பிராப்தி!**

**29.04.1984 ஞான சூரியனின் ஆன்மீக நட்சத்திரங்களின் விதவிதமான விசேஷங்கள்!**

**01.05.1984 விஸ்தாரத்தில் சாரத்தின் அழகு!**

**03.05.1984 பரமாத்மாவின் அனைத்திலும் உயர்ந்த முதல் படைப்பு- பிராமணர்கள்!**

**07.05.1984 சமநிலை வைப்பதினால்தான் ஆசீர்வாதங்களின் பிராப்தி இருக்கும்!**

**09.05.1984 எப்பொழுதும் ஒரே சீராக பறக்கும் மற்றும் பறக்கக் வைக்கும் பாடலைப் பாடுங்கள்!**

11.05.1984 பிராமணர்களின் ஒவ்வொரு காலடி, எண்ணம், செயலின் மூலம் சட்டத்தின் படைப்பு!

26.08.1984 இலட்சியத்திற்கு ஏற்றபடி வெற்றியை அடைவதற்காக சுயநலத்திற்குப் பதிலாக சேவைக்காக காரியம் செய்யுங்கள்!

19.11.1984 எல்லைக்கப்பாற்ப்பட்ட வைராக்கிய உணர்வின் மூலம் ஸித்திகளின் பிராப்தி!

21.11.1984 திவ்ய தரிசன மூர்த்தி!

26.11.1984 உண்மையான சகயோகி தான் உண்மையான யோகி!

28.11.1984 எண்ணத்தை வெற்றிகரமாக ஆக்குவதற்கான சுலபமான வழி!

03.12.1984 சர்வசக்தி வாய்ந்த ஆசிரியரின் மேன்மையான மாணவர்கள் ஆகுங்கள்!

05.12.1984 சம்பூர்ண காமத்தை வென்றவர் என்றால் எல்லைக்குட்பட்டமன விருப்பங்களிலிருந்து விடுபட்டவர்!

10.12.1984 பழைய கணக்கு முடிந்ததின் அடையாளம்!

**12.12.1984 விசேஷ ஆத்மாக்களின் கடமை!**

**17.12.1984 வீணானனதை அழிப்பதற்கான சாதனம் -சக்திசாலியான எண்ணங்களின் பொக்கிஷம் -ஞான முரளி!**

**19.12.1984 மிக உயர்ந்த, சகஜ மற்றும் தெளிவான மார்க்கம்!**

**24.12.1984 ஈஸ்வரிய அன்பின் மகத்துவம்!**

**26.12.1984 சத்தியத்தின் சக்தி!**

**31.12.1984 புதிய ஞானம் மற்றும் புதிய வாழ்க்கை மூலமாக புதுமையின் ஜொலிப்பைக் காண்பியுங்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 12.01.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் சக்திசாலியாக யோசியுங்கள் மற்றும் வர்ணனை செய்யுங்கள்!

இன்று சப்தத்திலிருந்து விலகியிருக்கும் தந்தை அனைத்து குழந்தைகளையும் சப்தத்திலிருந்து விலகிய நிலைக்கு அழைத்துச் செல்வதற்காக சப்தம் நிறைந்த உலகத்தில் வந்திருக்கிறார். ஏனென்றால் சப்தத்திலிருந்து விலகிய நிலை மிகுந்த சுகத்தையும் அமைதியையும் அனுபவம் செய்விப்பது. சப்தத்திலிருந்து விலகிய சிரேஷ்ட நிலையில் நிலைத்திருப்பதினால் எப்பொழுதும் தன்னை தந்தைக்குச் சமமான சம்பன்ன நிலையில் அனுபவம் செய்வார்கள். இன்றைய மனிதர்கள் சப்தத்திலிருந்து விலகிய உண்மையான அமைதிக்காக அனேக விதமான முயற்சி செய்து கொண்டே இருக்கிறார்கள். எத்தனை வழிமுறைகளைக் கடைபிடித்துக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் அமைதிக்கடலின் குழந்தைகள் அமைதி சொரூபமாக மாஸ்டர் அமைதிக் கடலாக இருக்கிறீர்கள். ஒரு நொடியில் தன்னுடைய அமைதி சொரூபத்தின் நிலையில் நிலைத்து விடுகிறீர்கள். அந்த மாதிரி நீங்கள் அனுபவிகள் தான் இல்லையா? ஒரு நொடியில் சப்தத்தில் வருவது மேலும் ஒரு நொடியில் சப்தத்திலிருந்து விலகி தனது இயற்கையான குணமாகிய அமைதியில் நிலைத்து விடுவது என்று அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? நீங்கள் இந்த கர்ம இந்திரியங்களின் எஜமானன் தான் இல்லையா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது காரியத்தில் வாருங்கள், எப்பொழுது விரும்புகிறீர்களோ காரியத்திலிருந்து விலகி கர்மாதீத் நிலையில் நிலைத்து விடுங்கள். இந்த நிலையைத் தான் இந்த நேரம் விலகியிருப்பவர், மேலும் அடுத்த நேரம் காரியம் மூலமாக அனைவருக்கும் பிரியமானவர் என்று கூறுவது. அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தி, ஆளுமை சக்தி அனுபவம் ஆகிறது தான் இல்லையா? எந்த விஷயத்தை உலக மனிதர்கள் கடினம் என்று

கூறுகிறார்களோ அந்த கடினமான விஷயம் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களைப் பொருத்தளவில் சகஜம் அல்ல, ஆனால் மிக சகஜம்! ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான். உலகத்தின் மனிதர்களோ இது எப்படி நடக்கும் என்று நினைக்கிறார்கள். இதே குழப்பத்தில் புத்தி மூலமாக, உடல் மூலமாக அலைந்து கொண்டே இருக்கிறார்கள். மேலும் நீங்கள் என்ன கூறுவீர்கள்? எப்படி நடக்கும் என்ற எண்ணம் எப்பொழுதாவது வரமுடியுமா? எப்படி என்றால் கேள்விக்குறி. எனவே எப்படி என்பதற்குப் பதிலாக இப்படி நடக்கும் என்ற வார்த்தை வெளியாகிறது. இப்படி என்றால் முற்றுப்புள்ளி, கேள்விக்குறி மாறி முற்றுப்புள்ளி இடப்பட்டு விட்டது தான் இல்லையா? நேற்று என்னவாக இருந்தேன் மேலும் இன்று என்னவாக இருக்கிறேன். மிகுந்த வித்தியாசம் இருக்கிறது தான் இல்லையா? மிகுந்த வித்தியாசம் ஏற்பட்டு விட்டது என்று புரிந்து கொள்கிறீர்கள். நேற்று ஹே! கடவுளே என்று கூறினீர்கள், மேலும் இன்றோ ஹே! என்பதற்குப் பதிலாக ஆஹா என்று கூறுகிறீர்கள். மிகுந்த வித்தியாசம் இல்லையா? ஆஹா, இனிமையான பாபா! கடவுள் என்று கூறுவதில்லை, ஆனால் பாபா. தந்தை தொலை தூரத்திலிருந்து அருகில் கிடைத்து விட்டார். நீங்கள் தந்தையைத் தேடினீர்கள் என்றால், தந்தையும் குழந்தைகள் உங்களை ஒவ்வொரு மூலையிலிருந்தும் தேடி கண்டுபிடித்து விட்டார் ஆனால் தந்தைக்குக் கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கவில்லை. உங்களுக்கு மிக கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தது. ஏனென்றால், தந்தைக்கு அறிமுகம் இருந்தது, உங்களுக்கு அறிமுகம் இருக்கவில்லை. நீங்கள் அனைவரும் அன்பான பாடல் பாடுகிறீர்கள். பாப்தாதாவும் குழந்தைகள் மேல் உள்ள அன்பின் பாடலை பாடுகிறார். அனைத்தையும் விட மிக உயர்ந்த அன்பின் பாடலைப் பாப்தாதா தினசரி பாடுகிறார். அந்தப் பாடலை கேட்டு கேட்டு அனைத்து அன்பான குழந்தைகளின் மனம் குஷியில் நடனமாடிக் கொண்டே இருக்கிறது. தினசரி பாடல் பாடுகிறார். எனவே அதன் நினைவாக பக்தியில் கூட பாடலின் மகத்துவம் உயர்ந்ததாக இருக்கிறது. தந்தையின் பாடலின் நினைவாக 'கீதா' உருவாக்கியிருக்கிறார்கள். மேலும் குழந்தைகளின் பாடலைக் கேட்டு குஷியில் நடனமாடியதை மேலும் குஷியில் ஆனந்தத்தில், சுகத்தின் விதவித மான அனுபவங்களின் நினைவாக பாகவதத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படி இரண்டின் நினைவுச் சின்னமாக ஆகி விட்டது இல்லையா? அந்த மாதிரி சிரேஷ்ட பாக்கியவானாக தன்னை நினைக்கிறீர்கள் மற்றும்

அனுபவம் செய்கிறீர்கள். புரிந்து கொள்பவர்கள் அனேகர்கள் இருப்பார்கள் ஆனால் அனுபவம் செய்பவர்கள் கோடியில் சிலர் இருக்கிறார்கள். அனுபவம் நிறைந்தவர்கள் தந்தைக்குச் சமமாக முழுமையான அனுபவிகளாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வார்த்தையின், ஒவ்வொரு சம்மந்தத்தின் அனுபவம் இருக்க வேண்டும். சம்மந்தம் மூலமாக விதவிதமான பிராப்தியின் அனுபவம் இருக்க வேண்டும். ஒவ்வொரு சக்தியின் ஒவ்வொரு குணத்தின் அனுபவம் இருக்க வேண்டும். எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது குணங்களின் நகைகளை அணிந்து கொள்ள முடிய வேண்டும். இந்த அனைத்து குணங்களும் வகை வகையான நகைகள். எப்படி நேரமோ, எப்படி இடமோ அப்படி குணங்களின் நகைகளால் தன்னை அலங்காரம் செய்து கொள்ள முடியும். தனக்காக மட்டுமின்றி ஆனால் மற்றவர்களுக்கும் குணங்களின் தானம் செய்ய முடியும். ஞான தானத்தின் கூடவே குண தானத்திற்கும் மிகுந்த மகத்துவம் இருக்கிறது. குணங்களின் மகாதானி ஆத்மா, ஒருபொழுதும் யாருடைய அவகுணத்தை பார்த்து தாரணை செய்ய மாட்டார். யாருடைய அவகுணத்தின் தீய சேர்க்கையில் வர மாட்டார். அதற்கும் மேலாக குணதானம் மூலமாக மற்றவர்களின் அவகுணத்தை குணத்தில் பரிவர்த்தனை செய்து விடுவார். எப்படி பணம், செல்வத்திற்காக யாசிப்பவர்களுக்கு பணம் கொடுத்து நிரம்பியவர்களாக ஆக்கி விடுகிறார்கள். அதே போல் அவகுணம் உள்ளவர்களுக்கு குணதானம் செய்து குணம் நிறைந்தவர்களாக ஆக்கி விடுங்கள். எப்படி யோகதானம், சக்திகளின் தானம், சேவையின் தானம் பிரசித்தியாக இருக்கிறது அதே போல் குண தானமும் விசேஷ தானம். குண தானம் மூலமாக ஆத்மாவில் ஊக்கம் உற்சாகத்தின் ஜொலிப்பை அனுபவம் செய்விக்க முடியும். எனவே அந்த மாதிரி அனைத்து மகாதானியாக அதாவது அனுபவம் நிறைந்தவராகி இருக்கிறீர்களா?

இன்று விசேஷமாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். இரட்டை வெளி நாட்டுக் குழந்தைகளின் விசேஷத்தையோ பாப்தாதா கூறியிருக்கிறார். இருந்தாலும் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளை பாப்தாதா தொலைநோக்கு பார்வையுடைய புத்தியுள்ள குழந்தைகள் என்று கூறுகிறார். தூரமாக இருந்த போதிலும் புத்தி மூலமாக தந்தையைத்

தெரிந்து அதிகாரி ஆகி விட்டார்கள். அந்த மாதிரி தொலைநோக்கு பார்வை நிறைந்த புத்தியுள்ள குழந்தைகள் மேல் விசேஷத்திற்கு ஏற்றபடி பாப்தாதாவிற்கு விசேஷ அன்பிருக்கிறது. நீங்கள் அனைவரும் விட்டில்பூச்சி ஆகி அவரவர்களின் தேசத்திலிருந்து பறந்து பறந்து வந்து ஜோதி மேல் விழுந்து எரிந்து போபவர்களா? அல்லது சிலர் சுற்றி வருபவர்களாக மட்டும் இருக்கிறீர்களா? எரிவது என்றால் சமமாக ஆவது. நீங்கள் எரிபவர்களா அல்லது சுற்றி வருபவர்களா? அதிகமான எண்ணிக்கை எதில் இருக்கிறது? நீங்கள் யாராக இருந்தாலும், எப்படியாக இருந்தாலும் கூட பாப்தாதாவிற்கு விருப்பமானவர்கள். இருந்தும் எவ்வளவு கடின முயற்சி செய்து வந்து சேர்ந்து விட்டீர்கள் இல்லையா? எனவே நான் தந்தையினுடையவன் மேலும் நிரந்தரமாக தந்தையினுடையவனாகவே இருப்பேன் என்று தனக்குத் தானே புரிய வையுங்கள். இந்த திட எண்ணம் எப்பொழுதுமே முன்னேற்றிக் கொண்டே இருக்கும். பலஹீனங்களை அதிகமாக யோசிக்காதீர்கள். பலஹீனங்களை யோசித்து யோசித்து பலஹீனமானவர்களாக ஆகி விடுகிறார்கள். நான் நோயுற்று இருக்கிறேன், நோயுற்று இருக்கிறேன் என்று கூறுவதினால் இரட்டை நோயுள்ளவராக ஆகி விடுகிறீர்கள். நான் அந்த அளவு சக்திசாலியாக இல்லை, என்னுடைய யோகா அந்த அளவு நல்லதாக இல்லை, என்னுடைய சேவை அந்த அளவு நல்லதாக இல்லை என்று கூறுகிறார்கள். நான் பாபாவின் பிரியமானவனா அல்லது இல்லையா? மேலும் வரும் காலங்களில் முன்னேறிச் செல்ல முடியுமா அல்லது முடியாதா என்று இந்த மாதிரி யோசிப்பதும் அதிக பலஹீனமானவராக ஆக்கி விடும். முதலில் மாயா மிக லேசான ரூபத்தில் முயற்சி செய்யும். மேலும் நீங்கள் அதை பெரிய ரூபம் ஆக்கி விடுகிறீர்கள். எனவே மாயாவிற்கு உங்களுடைய துணைவன் ஆவதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகிறது. பலஹீனங்களின் உடன் இருப்பது மாயா. ஒருபொழுதும் பலஹீனமான எண்ணங்களை அடிக்கடி வர்ணனை செய்யாதீர்கள், மேலும் யோசிக்காதீர்கள். அடிக்கடி யோசிப்பதினால் தான் சொரூபம் ஆகி விடுகிறார்கள். எனவே எப்பொழுதுமே நான் பாபாவின் குழந்தை ஆகவில்லை என்றால் வேறு யார் தான் ஆவார்கள். நானே தான் இருந்தேன், மேலும் நானே தான் எப்பொழுதும் இருக்கிறேன். ஒவ்வொரு கல்பத்திலும் நான் தான் இந்த மாதிரி ஆவேன். இந்த எண்ணம் ஆரோக்கியமானவராக மாயாவை வென்றவராக ஆக்கி விடும். பலஹீனம் பின்னால் வருகிறது. நீங்கள்

அதைத் தெரிந்து கொள்ளாமல் சத்தியம் என்று நினைத்து விடுகிறீர்கள். பிறகு மாயா உங்களை தன்னுடையவராக ஆக்கி விடுகிறது. எப்படி சீதாவின் நாடகத்தில் காண்பிக்கிறார்கள் இல்லையா? வந்திருப்பவர் யாசிப்பவராக இல்லை, ஆனால் சீதை, யாசிப்பவன் என்று நினைத்து விட்டார். அவனோ முயற்சி செய்வதற்காக மட்டும் வந்தான், மேலும் அவனை உண்மையானவன் என்று இவர் நினைத்தார். எனவே அவன் உங்களுடைய வெகுளித் தனத்தைப் பார்த்து உங்களை தன்னுடையவனாக ஆக்கி விடுகிறான். 'நான் அப்படிப்பட்டவன் தான்' என்று அந்த மாதிரி செய்து செய்து மாயா தன்னுடைய ஸ்தானத்தை உருவாக்கி விடுகிறது. நீங்கள் அந்த மாதிரி பலஹீன மானவர் இல்லை, சக்திசாலியானவர், மாஸ்டர் சர்வ சக்திவான். பாப்தாதாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கோடியில் ஒருவர். அந்த மாதிரியானவர் பலஹீனமானவராக எப்படி ஆக முடியும்? இந்த மாதிரி யோசிப்பது மாயாவிற்கு இடம் கொடுப்பது. இடம் கொடுத்து பிறகு இவனை வெளியேற்றுங்கள் என்று கூறுகிறீர்கள். ஏன் இடம் கொடுக்கிறீர்கள்? யாரும் பலஹீனமானவர் இல்லை, நீங்கள் அனைவருமே மாஸ்டர்கள். நீங்கள் சதாகாலம் மிகுந்த வீரம் நிறைந்தவர்கள், சதாகாலம் மகாவீர் ஆவீர்கள். இதே உயர்ந்த எண்ணத்தை வையுங்கள். எப்பொழுதும் தந்தையின் துணையில் இருக்கிறீர்கள். எங்கு தந்தை துணைவனாக இருக்கிறாரோ அங்கு மாயா துணைவனாக ஆக முடியாது. மதுபன்னிற்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? (மாயாவை விடுவதற்காக). மதுபன் மகாயக்ஞம் இல்லையா? அந்த மாதிரி யாகத்தில் சுவாஹா செய்வதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா ஆனால் பாப்தாதா கூறுகிறார். நீங்கள் அனைவரும் உங்களுடைய விஜய் அஷ்டமி ஆவதற்காக வந்திருக்கிறீர்கள். வெற்றித் திலகம் இடும் விழாவையும் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். வெற்றியாளர் ஆகி, பிறகு வெற்றித் திலகம் இடும் விழாவை கொண்டாட வந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆமாம் பாபா. அப்படியே காப்பி செய்வதில் அனைவரும் மிகுந்த புத்திசாலிகள். இதுவும் குணம் தான். இங்கேயும் தந்தையை காப்பி தான் செய்ய வேண்டும். பின்பற்றி நடப்பது என்றால் காப்பி செய்வது. இதுவோ சுலபம் தான் இல்லையா? நீங்கள் உங்களுடைய தேசத்தை விட்டு விட்டு வருகிறீர்கள் என்றால் பாப்தாதாவும் தன்னுடைய தேசத்தை விட்டு விட்டு வருகிறார்.

## 1984 அவ்யக்த முரளி

பாப்தாதாவிற்கு குடும்பம் இல்லையா என்ன! முழு உலக காரியத்தை விட்டு விட்டு இங்கு வருகிறார். உலகத்தின் குடும்பம் தந்தையின் குடும்பம் தான் இல்லையா? தந்தைக்காகத் தானே அனைத்து குழந்தைகளும் இருக்கிறார்கள். அஞ்சலியும் அனைவருக்காகவும் கொடுக்க வேண்டும். ஆஸ்தி கொடுக்கவில்லை. அஞ்சலியையோ கொடுக்கிறார் இல்லையா? நல்லது.

அனைத்து சிரேஷ்ட அதிகாரி தந்தைக்குச் சமமான நிரந்தர மகாதானி வரதானி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மிகுந்த வித்தியாசம் மூலமாக தன்னை மகானாக அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் மாயாவை தெரிந்து மாயாவை வென்றவர், அனைத்து சக்தி சொரூப சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, உலகில் நாலா புறங்களிலும் உள்ள பாரதம் மற்றும் வெளிநாட்டு குழந்தைகளுக்கு, முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய, தந்தையுடன் ஆன்மீக உரையாடல் செய்யும் தந்தையோடு சந்திக்கக்கூடிய, அன்பு நினைவுகள் கொடுப்பதற்காக மேலும் கடிதங்கள் மூலமாக அனுப்பக்கூடிய, சில இனிமையான செய்திகள் மற்றும் தன்னுடைய அன்பு நிறைந்த முயற்சியின் செய்தியை கொடுக்கக்கூடிய, அனைத்து குழந்தைகளை பாப்தாதா நேரெதிரில் பார்த்து அன்பு நினைவுகள் கொடுக்கிறார். கூடவே விட்டில் பூச்சியாகி ஜோதி மேல் விழுந்து எரியக்கூடிய அதாவது ஒவ்வொரு அடியில் தந்தையின் சமமாககக் கூடிய குழந்தைகளுக்கு, சிநேகம் நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்

**வரதானம்: சேவையின் பங்கை செய்து கொண்டே அந்த பங்கிலிருந்து விலகி மற்றும் தந்தையின் பிரியமானவராக இருக்கும் சகஜயோகி ஆகுக!**

சில குழந்தைகள் யோகா சில நேரம் செய்ய முடிகிறது, மேலும் சில நேரம் முடிவதில்லை என்று கூறுகிறார்கள். இதற்கான காரணம் -விலகி இருக்கும் தன்மையின் குறைவு. விலகியிருப்பவராக ஆகாத காரணத் தினால் அன்பின் அனுபவம் ஆவதில்லை. மேலும் எங்கு அன்பு இல்லையோ அங்கு நினைவு இல்லை. எவ்வளவு அதிக அன்போ அந்த அளவு சகஜ நினைவு, எனவே சம்மந்தத்தின் ஆதாரத்தில் பங்கைச் செய்யாதீர்கள், சேவையின் சம்மந்தத்தில் பங்கைச் செய்தீர்கள் என்றால்

விலகியிருப்பவராக இருப்பீர்கள். தாமரை மலருக்குச் சமமாக பழைய உலகத்தின் சூழ்நிலையிலிருந்து விலகியவராக மற்றும் தந்தையின் பிரியமானவராக ஆனீர்கள் என்றால் சகஜயோகி ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: யார் காரணம் என்ற வார்த்தையை உள்ளடக்கி ஒவ்வொரு விஷயத்திற்கும் நிவாரணம் செய்து விடுகிறாரோ அவர் தான் ஞானி!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.01.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இரட்டை சேவாதாரி இயல்பாகவே மாயாவை வென்றவராக இருக்கிறார்!

இன்று திலாராம் (பரந்த இதயமுள்ள) தந்தை தன்னுடைய இதய சிம்மாசனதாரி குழந்தைகளோடு மற்றும் தன்னுடைய அன்பிற்குரிய, சகயோகி குழந்தைகளுடன் உள்ளப்பூர்வமாக பேசுவதற்கும், கேட்பதற்கும் வந்திருக்கிறார். தந்தையின் இதயத்தில் என்ன இருக்கிறது மற்றும் குழந்தைகளின் இதயத்தில் என்ன இருக்கிறது என்று இன்று அனைவரின் இதயத்தின் நிலைமையைத் தெரிந்து கொள்ள வந்திருக்கிறார். முக்கியமாக தொலை தூரத்திலிருந்து வந்திருக்கும் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் இதயப்பூர்வமான விஷயங்களை பரிமாரிக் கொள்வதற்காக வந்திருக்கிறார். முரளியையோ கேட்டுக் கொண்டே தான் இருக்கிறீர்கள் ஆனால் இன்று ஆன்மீக உரையாடல் செய்வதற்காக வந்திருக்கிறோம். அனைத்து குழந்தைகளும் சகஜமான, சரள ரூபத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுது ஏதாவது ஈஸ்வரிய மரியாதை மற்றும் ஸ்ரீமத்தின் டைரக்ஷனை (வழிகாட்டுதலை) எண்ணத்தில், வார்த்தையில் மற்றும் காரியத்தில் மீறி நடக்கிறீர்களோ அப்பொழுது குழப்பம் அடைகிறீர்கள். இல்லையென்றால் மிகுந்த குஷியோடு, சுகம், நிம்மதி சௌகரியமாக தந்தையின் கூடவே செல்வதில் எந்தக் கடினமும் இல்லை, எந்தக் களைப்பும் இல்லை, எந்தக் குழப்பமும் இல்லை. ஏதாவது விதமான பலஹீனம் எளிய விசயத்தை கடினமாக்கி விடுகிறது. எனவே குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா இருவரும், இவ்வளவு செல்லமான குழந்தைகள், தேடிக் கண்டெடுக்கப்பட்ட சிரேஷ்ட ஆத்மாக்கள், விசேஷ ஆத்மாக்கள், புண்ணிய ஆத்மாக்கள், மிக சிரேஷ்ட தூய்மையான ஆத்மாக்கள், உலகின் ஆதாரமான ஆத்மாக்களாக இருந்தும் பிறகு இவர்களிடம் கடினம் எப்படி இருக்க முடியும் என்று ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். குழப்பத்தில் எப்படி வர முடியும்? யாருடன் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்? பாப்தாதா தனது அன்பு மற்றும்

சகயோகத்தின் இருகரங்களுக்குள் அரவணைத்துக் கொண்டு உடன் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார். அன்பு, சகயோகத்தின் கரங்களின் மாலை எப்பொழுதும் கழுத்தில் இருக்கிறது. அந்த மாதிரி மாலையில் மணியாக உருளும் குழந்தைகள், குழப்பத்தில் வருகிறார்கள் என்பது எப்படி இருக்க முடியும்? எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் நினைவில் இருப்பவர்கள், கடினம் மற்றும் குழப்பத்தில் வரமுடியாது. எதுவரையிலும் குழப்பம் மற்றும் கடினத்தை அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள்? தந்தையின் பாலனையின் குடைநிழலின் கீழ் இருக்கக் கூடியவர்கள் குழப்பத்தில் எப்படி வர முடியும்? தந்தையின் குழந்தை ஆன பிறகு, சக்திசாலி ஆத்மாக்கள் ஆன பிறகு, மாயாவைப் பற்றி ஞானம் நிறைந்தவராக ஆன பிறகு சர்வ சக்திகள், சர்வ பொக்கிஷங்களின் அதிகாரியாக ஆன பிறகு, மாயா மற்றும் தடை அசைக்க முடியுமா என்ன? (முடியாது). மிகவும் மெது மெதுவாக கூறுகிறீர்கள். சொல்லுங்கள், சதா காலத்திற்கும் முடியாது என்று பார்த்துக் கொள்ளுங்கள், உங்கள் அனைவரின் புகைப்படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் கூறிய பதில் டேப்பில் பதிந்து விட்டது. பிறகு அங்கே உங்களிடத் திற்குச் சென்ற பிறகு மாறி விட மாட்டீர்கள் இல்லையா? இப்பொழுதிலிருந்து அன்பின், சேவையின், பறக்கும் கலையின் விசேஷ அனுபவங்களின் செய்தியை மட்டும் தான் கொடுப்பீர்கள் தான் இல்லையா? மாயா வந்து விட்டது, கீழே விழுந்து விட்டோம், குழப்பம் அடைந்து விட்டோம், களைப்படைந்து விட்டோம், பயந்து விட்டோம் என்று அந்த மாதிரியான கடிதமோ வராது இல்லையா? எப்படி இன்றைய உலகத்தின் செய்தித்தாள்களில் எந்த மாதிரியான செய்திகள் வெளியாகின்றன? துக்கத்தின், அசாந்தியின், குழப்பங்களின் செய்திகள் தான் வருகின்றன ஆனால் உங்களுடைய செய்திப் பத்திரிக்கை எப்படி இருக்கும் எப்பொழுதும் குஷி நிறைந்த செய்தி களுடையதாக இருக்கும். இன்று நான் இந்த விசேஷ அனுபவம் செய்தேன், இன்று இந்த விசேஷ சேவை செய்தேன், இன்று மனசேவையின் அனுபவம் செய்தேன், இன்று மனமுடைந்து போனவர்களை மனமகிழ்ச்சி உடையவராக ஆக்கினேன், கீழே விழுந்தவர்களைத் தூக்கி விட்டேன் என்று குஷியின் அனுபவம் நிறைந்த செய்திப் பத்திரிக்கையைத்தான் எழுதுவீர்கள் இல்லையா? ஏனென்றால் 63- ஜென்மங்கள் குழம்பியும் இருந்தீர்கள், கீழே விழுந்தும் இருந்தீர்கள், ஏமாற்றுதலையும் அடைந்தீர்கள். அனைத்தையும் செய்தீர்கள், மேலும் 63-

# 1984 அவ்யக்த முரளி

ஜென்மங்களுக்கு பிறகு இந்த ஒரு சிரேஷ்ட ஜென்மம், பரிவர்த்தனைக்கான (மாற்றம்) பிறவி முன்னேறும் கலையையும் தாண்டி பறக்கும் கலைக்கான பிறவி, அதிலும் குழம்புவது, விழுவது, களைப் படைவது, புத்தியால் அலைவது என்றிருந்தால், பாப்தாதாவால் அதனைப் பார்க்க முடியாது. ஏனென்றால் நீங்கள் அன்பிற்குரிய குழந்தைகள் தான் இல்லையா? அன்பிற்குரிய குழந்தைகளின் இந்த சிறிதளவு துக்கம் நேரத்தையும் சுக வள்ளல் தந்தையால் பார்க்க முடியாது. புரிந்ததா? எனவே இப்பொழுது சதா காலத்திற்காக கடந்ததை கடந்ததாக ஆக்கி விட்டீர்கள் இல்லையா? எப்போதோ, ஏதாவது ஒரு குழந்தை சிறிதளவு குழப்பத்தில் வருகிறார் மற்றும் மாயாவின் தடைகளின் வசம் ஆகி விடுகிறார், பலஹீனமானவராக ஆகி விடுகிறாறென்றால் அந்த நேரம் சூட்சும வதனத்தில் பாப்தாதாவின் எதிரில் அந்தக் குழந்தைகளின் முகம் எப்படி தென்படுகிறது என்று தெரியுமா? மிக்கி மௌசின் விளையாட்டில் இருப்பது போல தென்படுகிறது. சில நேரம் மாயாவின் சுமை காரணமாக குண்டாகி விடுகிறார்கள். சில நேரம் முயற்சி செய்வதில் தைரியமற்றவராகி, குள்ளமானவர்கள் ஆகி விடுகிறார்கள். மிக்கி மௌசிலும் சில குள்ளமானவர்கள், சில குண்டானவர்கள் இருப்பார்கள் இல்லையா? நீங்கள் மிக்கி மௌசாக ஆக மாட்டீர்கள் இல்லையா? பாப்தாதாவும் இந்த விளையாட்டைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருக்கிறார்கள். சில நேரம் பார்த்தால் ஃபரிஷ்தா ரூபம், சில நேரம் பார்த்தால் மகாதானி ரூபம், சில நேரம் பார்த்தீர்கள் என்றால், அனைவரின் அன்பிற்குரிய சகயோகி ரூபம், சில நேரம் டபுள் லைட் ரூபம், பிறகு சில நேரம் மிக்கி மௌசாகவும் ஆகி விடுகிறார்கள். எந்த ரூபம் நன்றாக இருக்கும்? இந்தக் குள்ளமான குண்டான ரூபம் நன்றாக இருக்காது தான் இல்லையா? குழந்தைகளுக்கு இப்பொழுது எவ்வளவு காரியம் செய்ய வேண்டியது இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். செய்திருக்கிறீர்கள். அதை செய்வதற்கு முன்பு ஒன்றுமே இல்லை. இப்பொழுது எத்தனை பேர்களுக்கு செய்தி கொடுத்திருக்கிறீர்கள்? குறைந்தது சத்யுகத்தின் முதல் ஜனத்தொகை 9-லட்சத்தையாவது உருவாக்குங்கள். அதிகமானவர்களை உருவாக்க வேண்டும், ஆனால் இப்பொழுது 9-லட்சத்தையாவது உருவாக்குங்கள். இப்பொழுது எவ்வளவு சேவை செய்ய வேண்டிய திருக்கிறது, எத்தனை பேர் மேல் இந்த சேவையின் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் எவ்வளவு பிஸியாக இருப்பார்கள். அவர்களுக்கு வேறு ஏதாவது யோசிப்பதற்கும் நேரம்

இருக்குமா? யார் சேவையில் பிஸியாக இருக்கிறாரோ அவர் சுலபமாகவே மாயாவை வென்றவர் ஆகிறார். எதில் பிஸியாக இருக்கிறார். திருஷ்டி மூலமாக, மனசேவை மூலமாக, வாய்மொழி மூலமாக, காரியம் மூலமாக, தொடர்பு மூலமாக, நான்கு விதமான சேவையில் பிஸியாக இருக்கிறார். மனசேவை, வாய்மொழி சேவை மற்றும் காரியம் மூலமாக செய்யும் சேவை ஆகிய இந்த மூன்றும் இணைந்திருக்க வேண்டும். காரியங்கள் செய்கிறீர்கள் என்றாலும், வாய் மூலம் பேசுகிறீர்கள் என்றாலும், எப்படி டபுள் லைட்டாக இருக்கிறீர்கள் என்றாலும், டபுள் கிரீடம் அணிந்தவராக இருக்கிறீர்கள் என்றால், இரட்டை பூஜைக்குரியவர்கள், இரட்டை ஆஸ்தியைப் பெறுகிறீர்கள் என்றால் சேவையும் இரட்டையாக இருக்க வேண்டும். மன சேவை மட்டும் அல்ல, காரியம் மூலம் செய்யும் சேவை மட்டும் அல்ல ஆனால் மனசக்தியின் கூடவே வாய்மொழியின் சேவையும் இருக்க வேண்டும். மனசக்தியின் கூடவே காரியம் மூலம் செய்வதும் இருக்க வேண்டும். இதைத் தான் இரட்டை சேவாதாரி என்று கூறுவது. அந்த மாதிரியான இரட்டை சேவாதாரி இயல்பாகவே மாயாவை வென்றவராக இருக்கிறார். புரிந்ததா? சிங்கிள் சேவை செய்கிறீர்கள். வாய்மொழி மூலம் மட்டும் மேலும் காரியத்தில் மட்டும் வந்து விடுகிறீர்கள் என்றால், மாயாவிற்கு உங்களை துணைவனாக ஆக்கும் வாய்ப்பு கிடைத்து விடுகிறது. மனசேவை என்றால் நினைவு. நினைவு தான் தந்தையின் ஆதரவு அப்படி எங்கு இரட்டை இருக்கிறதோ, துணைவன் உடன் இருக்கிறார் என்றால், மாயா துணைவனாக ஆக முடியாது. தனியாக இருக்கிறீர்கள் என்றால் மாயா துணைவனாகி விடுகிறது. பிறகு சேவையோ அதிகம் செய்திருக்கிறேன், சேவையின் குஷியும் ஏற்படுகிறது ஆனால் பிறகு சேவையின் இடையில் மாயாவும் வந்து விட்டது. என்ன காரணம்? சிங்கிள் சேவை செய்தீர்கள். இரட்டை சேவாதாரியாக ஆகவில்லை. இப்பொழுது இந்த வருடம் இரட்டை வெளிநாட்டினர் எந்த விஷயத்தில் பரிசை பெறுவீர்கள்? பரிசைப் பெற வேண்டும் இல்லையா?

எந்த சேவை நிலையம் இந்த வருடம் சேவையில், சுயநிலையில் எப்பொழுதும் தடையற்றதாக இருந்து, தடையற்றதாக ஆக்குவதின் என்ன எண்ண அலைகளை உலகில் பரப்புவார்களோ, முழு வருடத்தின் எந்த ஒரு தடையின் வசம் ஆக மாட்டார்களோ அந்த மாதிரி சேவை மற்றும் நிலையில் எந்த சேவை நிலையம் ஒரு உதாரணமாக இருக்குமோ அதற்கு

முதல் பரிசு கிடைக்கும். அந்த மாதிரி பரிசைப் பெறுவீர்கள் இல்லையா? எத்தனை சென்டர்கள் வேண்டுமென்றாலும் பெற்றுக் கொள்ளலாம். அது பாரதத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், அல்லது வெளிநாட்டைச் சேர்ந்ததாக இருந்தாலும் ஆனால் முழு வருடமும் தடையற்றதாக இருக்க வேண்டும். சென்டரின் இந்த கணக்குக்கான சார்ட்டை எழுதுங்கள். எப்படி மற்ற கணக்குகளை எழுதுகிறீர்கள் இல்லையா? எத்தனை கண்காட்சிகள் நடந்தன, எத்தனை மனிதர்கள் வந்தார்கள் என்று, அதே போல் இந்தக் கணக்கையும் ஒவ்வொரு மாதமும் குறித்து கொள்ளுங்கள். இந்த மாதத்தில் வகுப்பிற்கு வரும் அனைத்து பிராமண குடும்பத் தினரும் தடையற்று இருந்தார்கள். மாயா வந்தது, இதில் அந்த மாதிரி எந்த விஷயமும் இல்லை. மாயா வரவே வராது என்று அப்படி இல்லை. மாயா வரும் ஆனால் மாயாவின் வசம் ஆகக்கூடாது. மாயாவின் வேலை வருவது மேலும் உங்களுடைய வேலை மாயாவை வெற்றி அடைவது. அதன் பிரபாவத்தில் வரக்கூடாது. தன்னுடைய பிரபாவத்தினால் மாயாவை விரட்ட வேண்டுமேயன்றி மாயாவின் பிரபாவத்தில் வரக்கூடாது. எனவே எந்தப் பரிசை பெற வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? ஒருவர் தடையில் வந்தால் கூட பரிசு கிடையாது. ஏனென்றால் உங்களுடன் இருப்பவர் இல்லையா? அனைவரும் ஒருவர் இன்னொருவரின் துணை கொடுத்து தன்னுடைய வீட்டிற்குச் செல்ல வேண்டும் இல்லையா. இதற்காக எப்பொழுதும் சேவை நிலையத்தின் சூழ்நிலைய அந்த மாதிரி சக்திசாலியாக ஆக்குங்கள், அந்த சூழ்நிலையும் அனைத்து ஆத்மாக்களுக்காக எப்பொழுதிற்குமான சகயோகி ஆகி விட வேண்டும். சக்திசாலியான சூழ்நிலை பலஹீன மானவரையும் சக்திசாலி ஆக்குவதில் சகயோகியாக இருக்கும். எப்படி கோட்டை கட்டுகிறார்கள் இல்லையா. ஏன் கோட்டை கட்டுகிறார்கள்? ஏனென்றால் கோட்டைக்குள் பிரஜைகளும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக. ஒரு பிரஜைக்காக குடிசை கட்டுவதில்லை. கோட்டை கட்டுகிறோம். நீங்கள் அனைவரும் உங்களுக்காக, உங்களுடைய துணைவர்களுக்காக, மற்ற ஆத்மாக்களுக்காக அக்னியின் கோட்டையை கட்டுங்கள். நினைவின் சக்தியின் ஜுவாலை இருக்க வேண்டும். யார் பரிசை பெறுகிறார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். வருடத்தின் கடைசியில் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக வருகிறீர்கள் இல்லையா, அதில் யார் வெற்றி அடைந்தவராக இருப்பாரோ அவர்களை விசேஷமாக அழைப்பிதழ் கொடுத்து

வரச்சொல்லப்படும். தனியாக வெற்றி அடைபவராக இருக்க மாட்டார். முழு சேவை நிலையமும் வெற்றி அடைந்ததாக இருக்கும். அந்த சென்டருக்காக விழா நிகழ்ச்சி வைப்போம். பிறகு வெளிநாடு முன்னால் வருகிறதா அல்லது பாரதம் முன்னால் வருகிறதா என்று பார்க்கலாம். நல்லது. வேறு கஷ்டம் ஏதும் இல்லையே? ஏதாவது மாயாவின் ரூபம் தொந்தரவோ செய்தில்லையே? நினைவுச் சின்னமாக என்ன கதை கேட்டீர்கள். சூர்ப்பனகை அவரை (லக்ஷ்மணன்) தொந்தரவு செய்ய வருகிறாள் என்றால், அவர் என்ன செய்தார்? மாயாவின் மூக்கை வெட்டத் தெரியாதா? இங்கு அனைத்தும் சுலபமாகி விடுகிறது, அவர்களோ ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த மாதிரி கதையை உருவாக்கி விடுகிறார்கள். மாயா மேல் ஒரு தடவை தாக்கி விட்டீர்கள் என்றால், அது போதும். மாயாவில் கொஞ்சம் கூட பலம் இல்லை. மற்றபடி இருப்பது உங்களுக்குள் இருக்கும் பலஹீனம். இறந்து கிடக்கிறது, மிச்சம் இருக்கும் கொஞ்சம் மூச்சு போய்க் கொண்டிருக்கிறது. இதை அழிக்க வேண்டும். மேலும் வெற்றி அடைபவர் ஆக வேண்டும். ஏனென்றால் இறுதி நேரத்திற்கோ வந்து சேர்ந்து விட்டீர்கள் இல்லையா? வெற்றியாளர் ஆகி வெற்றியின் கணக்கின்படி இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டும். எனவே இந்த இறுதி கால சுவாசத்தில் நிமித்த காரணமாக வெற்றியாளர் ஆக வேண்டும். வெற்றி அடைவதற்கான பலன் இராஜ்ய பாக்கியம், எனவே இந்த மாயாவின் விளையாட்டுக்கள் எல்லாமே ஏதோ ஒரு காரணத்திற்காக நடந்து கொண்டிருக்கிறது. யுத்தம் இல்லை, விளையாட்டு. புரிந்ததா? இன்றிலிருந்து மிக்கி மௌசாக ஆகாதீர்கள். நல்லது.

**சத்யுகத்தின் ஸ்தாபனையைப் பற்றி சில விஷயங்கள்:** தன்னுடைய சென்ற கல்பத்தின் உள்ளடங்கி இருக்கும் சொர்க்கத்தின் சம்ஸ்காரங்களை வெளிப்படுத்தினீர்கள் என்றால் நீங்களே தன்னை சத்யுகத்தின் மகாராஜா மற்றும் மகாராணி என்று அனுபவம் செய்வீர்கள். மேலும் எந்த நேரம் அந்த சத்யுகத்தின் சம்ஸ்காரத்தை வெளிக்கொணர்வீர்களோ அந்த நேரம் சத்யுகத்தின் அனைத்து பழக்க வழக்கங்களும் நேற்று நடந்த விஷயம் மாதிரி, தெளிவாக வெளியாகும். நேற்று அந்த மாதிரி செய்தோம் என்று அனுபவம் செய்ய முடியும். சத்யுகத்தின் அர்த்தமே, என்னவெல்லாம் இயற்கையின் சுகம் இருக்கிறது, ஆத்மாவின் சுகம் இருக்கிறது, புத்தியின் சுகம் இருக்கிறது,

மனதின் சுகம் இருக்கிறது, சம்மந்தத்தின் சுகம் இருக்கிறது, அந்த மாதிரி என்னவெல்லாம் சுகம் இருக்கிறதோ அவை அனைத்தும் இருப்பது. இப்பொழுது யோசியுங்கள், இயற்கையின் சுகம் என்னவாக இருக்கும், மனதின் சுகம் என்ன, சம்மந்தத்தின் சுகம் என்ன, அந்த மாதிரி வெளிக்கொணருங்கள். இந்த உலகத்தில் உங்களுக்கு என்னவெல்லாம் மிக நல்லதாகத் தென்படு கின்றனவோ அந்த அனைத்து பொருட்களும் தூய்மையான ரூபத்தில், சம்பன்ன ரூபத்தில், சுகம் நிறைந்த ரூபத்தில் அங்கே இருக்கும். செல்வமாக இருந்தாலும், மனம், சீதோஷ்ண நிலையாக இருந்தாலும், அனைத்து பிராப்திகளுமே சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானது. அதைத் தான் சத்யுகம் என்று கூறுவது. ஒரு மிக நல்ல சுகம் நிறைந்த குடும்பம் இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள், அங்கு இராஜா, பிரஜை வேறுபட்ட பதவி இருந்த போதிலும் அனைவரும் ஒரே குடும்பத்தினராக நடந்து கொள்வார்கள். இவர் தாசன் தாசி (வேலைக்காரர்கள்) என்று யாரும் கூற மாட்டார்கள். வரிசைக்கிரமம் இருக்கும், அதற்கு ஏற்ற சேவையும் இருக்கும் ஆனால் இவர் வேலையாள் என்ற பாவனையோடு நடந்து கொள்ள மாட்டார்கள். எப்படி குடும்பத்தின் அனைத்து சம்மந்தமும் குஷி நிறைந்ததாக, சுகம் நிறைந்த பரிவாரம், சக்திசாலியான பரிவாரம், மேலும் என்னவெல்லாம் உயர்ந்த நிலை இருக்குமோ அவை அனைத்தும் அங்கு இருக்கும். கடைகளிலும் பொருட்கள் வாங்குகிறார்கள் என்றாலும் கணக்கு வைத்து வாங்க மாட்டார்கள். குடும்பத்தின் கொடுக்கல் வாங்கலின் கணக்குப்படி, சிலதைக் கொடுப்பார்கள், சிலதை வாங்கிக் கொள்வார்கள். பரிசு என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி பரிவாரத்தில் நியமம் இருக்கும் யாரிடமாவது ஏதாவது ஒரு பொருள் அதிகமாக இருக்கிறது என்றால், அதை அனைவருக்கும் (பகிர்ந்து) கொடுப்பார்கள். கணக்கு வைத்து கொடுக்க மாட்டார்கள். காரியங்கள் நடக்க வேண்டும் என்பதற்காக சிலருக்கு இந்த மாதிரி வேலை கிடைத்திருக்கிறது, ஒருவருக்கு ஒரு வேலை, இன்னொருவருக்கு இன்னொரு வேலை. எப்படி இங்கே மதுபன்னில் இருக்கிறது இல்லையா? சிலர், துணிமணி ஆடைகளின் சேவை செய்கிறார், சிலர் தானியங்களைப் பார்த்துக் கொள்கிறார், யாருமே பணமோ கொடுப்பதில்லை தான் இல்லையா? ஆனால் பொறுப்பில் இருப்பவர்களோ இருக்கிறார் இல்லையா? அதே போல் அங்கேயும் இருக்கும். அனைத்து பொருள்களும் அளவற்று இருக்கும். எனவே எப்பொழுதும் உடனே கிடைக்கும். குறைவோ இருப்பதே இல்லை.

எவ்வளவு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, அதை எடுத்துக் கொள்ளுங்கள். பிஸியாக இருப்பதற்காக மட்டும் இதுவொரு சாதனம். அதுவும் விளையாடிக் கொண்டும், ஆடிக் கொண்டுமே செய்வது. யாருக்கும் எந்த வரவு செலவு கணக்கை காண்பிக்க வேண்டியதும் இருக்காது. இங்கேயோ சங்கமம் இல்லையா, சங்கமம் என்றால் சிக்கனமாக இருப்பது. சத்யுகம் என்றால் உண்ணுங்கள், அருந்துங்கள், நன்றாக அனுபவியுங்கள் ஆனால் இச்சை என்றால், என்னவென்று அறியாத நிலை. எங்கு இச்சை இருக்குமோ அங்கு கணக்கு வைக்க வேண்டியதாக இருக்கும். இச்சையின் காரணமாகத் தான் ஒரு விஷயம் மேலே கீழே போகும். அங்கு இச்சையும் இல்லை, குறைவும் இல்லை. அனைத்து பிராப்திகளும் இருக்கின்றன, மேலும் சம்பன்னமாகவும் இருக்கின்றன என்றால், வேறு என்ன வேண்டும்? இந்தப் பொருள் நன்றாக இருக்கிறது என்று அதிகமாக வாங்கிக் கொள்ளலாம் என்று அப்படி இருக்காது. நிரம்பி இருக்கும். இதயமும் நிரம்பியிருக்கும். நீங்கள் சத்யுகத்திற்கோ செல்லத் தான் வேண்டும் இல்லையா? இயற்கை அனைத்தும் சேவை செய்யும் (சத்யுகத்தில் பாபாவோ இருக்க மாட்டார் இல்லையா). குழந்தைகளின் விளையாட்டை பார்த்துக் கொண்டே இருப்போம். யாராவது பார்வையாளரும் வேண்டும் இல்லையா? முற்றிலும் விலகியிருப்பவராகத் தான் இருப்போம் இல்லையா? அன்பானவராக இருப்பார், ஆனால் விலகியிருந்து அன்பானவராக இருப்பார். அன்பின் விளையாட்டையோ இப்பொழுது செய்து கொண்டிருக்கிறார் இல்லையா? சத்யுகத்தில் விலகிய நிலை தான் நல்லது. இல்லையென்றால் எப்பொழுது நீங்கள் அனைவருமே கீழே விழுவீர் களோ அப்பொழுது யார் தூக்கி விடுவது. சத்யுகத்தில் வருவது என்றால் சக்கரத்தில் வருவது. நல்லது. சத்யுகத்தில் எப்பொழுது நீங்கள் ஜென்மம் எடுப்பீர்களோ அப்பொழுது அழைப்பு கொடுங்கள், ஒருவேளை நீங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தினீர்கள் என்றால், பிறகு நாம் வருவோம். சத்யுகத்தில் வருவது என்றால் சக்கரத்தில் வருவது. பாப்தாதாவை சொர்க்கத்தின் விஷயங்களில் நீங்கள் கவர்ந்திழுக்கிறீர்கள். நல்லது. அங்கே அந்தளவு வைபவம் இருக்கும், அவை அனைத்தையும் உங்களால் அருந்தவும் முடியாது. பார்த்துக் கொண்டு மட்டும் இருப்பீர்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அனைத்து சக்திசாலியாக இருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மாயாவை வென்று உலகை வென்ற ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சகஜயோகி ஆகுக என்ற வரம் பெற்ற குழந்தைகளுக்கு, டபுள் சேவாதாரி, டபுள் கிரீடதாரி, டபுள் லைட் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**மதராஸ், பெங்களூர், மைசூர், அப்படியே கல்கத்தா சென்று மதுபன் திரும்பிய தாதிஜீயைப் பார்த்து பாப்தாதா கூறினார்:** ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேவை அடங்கி உள்ளது. சக்கரவர்த்தி ஆகி சுற்றி வந்து தனது நினைவிடத்தை உருவாக்கி விட்டீர்கள். எவ்வளவு புனித ஸ்தலங்களை உருவாக்கி விட்டீர்கள். மஹாவீர் குழந்தைகள் சுற்றி வருவது என்றால் நினைவிடத்தை உருவாக்குவதாகும். ஒவ்வொன்றிலும் அவரவரது விசேஷங்கள் உள்ளன. இந்த சுற்றி வருவதிலும் பல ஆத்மாக்களின் இதயபூர்வ நம்பிக்கைகளை நிறைவேற்றும் விசேஷம் வைத்தீர்கள். இந்த இதயபூர்வ நம்பிக்கைகளை நிறைவேற்றுவது என்பது வரதானி ஆவது! வரதானியாகவும், மஹாதானியாகவும் ஆகி விட்டீர்கள். டிராமாபடி என்ன நிகழ்ச்சிநிரல் உருவாகிறதோ அதில் நிறைய ரகசியங்கள் அடங்கி உள்ளன; ரகசியங்கள் பறக்க வைக்கின்றன. நல்லது.

**ஜானகி தாதியுடன்:** நீங்கள் அனைவருக்கும் பெயரின் தானம் அளிக்கிறீர்கள். பெயரின் தானம் என்பது என்ன? உங்கள் பெயர் என்ன? பெயரின் தானம் அளிப்பது என்றால் டிரஸ்டி ஆகி வரதானம் அளிப்பது! உங்கள் பெயரைச் சொல்லும்போதே அனைவருக்கும் என்ன ஞாபகத்தில் வரும்? நொடியில் ஜீவன்முக்தி! டிரஸ்டி ஆவது இது உங்களுடைய பெயரின் விசேஷம். எனவே பெயரின் தானம் அளிப்பது மூலம் அவருடைய துன்பம் தூர ஓடி விடுகிறது. தந்தை உங்களுடைய டிரஸ்டி தன்மையின் மகிமை செய்தார், அதுதான் நினைவுச்சின்னம் ஆகும். அதே ஜனக் அப்படியே அவருக்கும் கிடைத்திருக்கக் கூடும். ஒரே ஜனகருடைய இரண்டு கதைகள். ஒரு ஜனகர் நொடியில் விதேகி ஆனார். இரண்டாமவர் நொடியில் டிரஸ்டி ஆனார். என்னுடையதல்ல, உன்னுடையது. திரேதாவின் ஜனகரையும் காட்டுகிறார்கள் ஆனால் நீங்களோ தந்தையின் ஜனக் ஆனீர்கள், சீதையின் ஜனகர் அல்ல. பெயர் தானத்தின் மகத்துவம் என்ன -இதைப் பற்றி ஒரு வகுப்பு எடுங்கள். பெயர் என்ற

படகின் மூலம் கூட கடக்கின்றனர். எதையும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும்கூட ஆனால் சிவபாபா, சிவபாபா என்று கூறினாலும் சொர்க்கத்தின் நுழைவுச்சீட்டு கிடைத்து விடும். நல்லது.

**மகாரதி சகோதர சகோதரிகளைப் பார்த்து:** சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளுக்கும் மாலை இருக்கிறது தான் இல்லையா? அனைத்து விசேஷ இரத்தினங்கள் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். பொறுப்புள்ளவராகும் விசேஷம் பொறுப்பாளர் ஆக்குகிறது. பிரம்மாபாபாவிற்கு உங்கள் அனைவர் மேலும் ஒரு விஷயத்தின் பெருமிதம் இருக்கிறது. எந்த விஷயத்தின் விசேஷ பெருமிதம் இருக்கிறது? அனைத்து குழந்தைகளும் ஒவ்வொருவரின் கருத்துக்களை இணைத்து தொடக்கத்திலிருந்து ஒற்றுமையின் என்ன ரூபம் காண்பித்தீர்களோ இதன் மேல் பிரம்மாபாபாவிற்கு விசேஷ பெருமிதம் இருக்கிறது. அனைத்து நடவடிக்கைகளையும் பார்க்கவும் செய்கிறீர்கள் தான் இல்லையா?

**லண்டன் குரூப்புடன் சந்திப்பு:** எப்பொழுதும் ஆன்மீக ரோஜா மலர் ஆகி மற்றவர்களுக்கும் நறுமணம் கொடுக்கும் அழியாத பூந்தோட்டத்தின் மலர்கள் நீங்கள் இல்லையா? நீங்கள் அனைவரும் ஆன்மீக ரோஜா மலர்கள். இந்த ஆன்மீக ரோஜா மலரைப் பார்த்து முழு உலகமும் கவர்ந்திழுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆன்மீக ரோஜா மலரும் எவ்வளவு மதிப்புள்ளது. விலைமதிக்க முடியாதது. இன்று வரையிலும் உங்கள் அனைவருடைய ஜடச்சிலைகளுக்கு மதிப்பு இருக்கிறது. ஒவ்வொரு ஜடச்சிலையையும் எவ்வளவு மதிப்புடன் வாங்குகிறார்கள் மற்றும் கொடுக்கிறார்கள். அது சாதாரண கல் தான் அல்லது வெள்ளியோ, தங்கமாக இருந்தாலும் ஆனால் அதற்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது. தங்கச் சிலைக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறார்கள். இந்த அளவு மதிப்புள்ளதாக எப்படி ஆனது. ஏனென்றால் தந்தையினுடையவராக ஆனதினால் சதா காலத்திற்கும் சிரேஷ்டம் ஆகி விட்டார்கள். இந்த பாக்கியத்தின் பாடலை எப்பொழுதும் பாடிக் கொண்டே இருங்கள். ஆஹா என்னுடைய பாக்கியம்! ஆஹா பாக்கியத்தை உருவாக்குபவர்! ஆஹா சங்கமயுகம்! ஆஹா இனிமையான நாடகம். அனைத்திலும் ஆஹா-ஆஹா வருகிறது தான் இல்லையா? ஆஹா ஆஹா என்ற பாடலை பாடிக் கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா? பாப்தாதாவிற்கு லண்டன்

நிவாசிகள் மேல் பெருமிதம் இருக்கிறது. சேவை என்ற மரத்தின் விதையோ லண்டன் தானே! அந்த மாதிரி லண்டன் நிவாசிகளும் விதை ரூபம் ஆகி விட்டார்கள். யு.கே-ஐ சேர்ந்தவர்கள் என்றால், எப்பொழுதும் ஓ.கே-வாக இருப்பவர்கள், எப்பொழுதும் படிப்பு மற்றும் சேவை இரண்டின் சமநிலை வைப்பவர்கள். எப்பொழுதும் ஒவ்வொரு அடியில் தன்னுடைய முன்னேற்றத்தை அனுபவம் செய்பவர்கள். எப்பொழுது தந்தையினுடைய குழந்தை ஆகி விட்டீர்கள் என்றால் தந்தையின் துணை மற்றும் தந்தையின் கை ஒவ்வொரு குழந்தையின் மேல் இருக்கிறது என்று அப்படி அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? யாருடைய தலை மேல் தந்தையின் கை இருக்கிறதோ அவர் எப்பொழுதுமே பாதுகாப்பாக இருக்கிறார். நீங்கள் எப்பொழுதுமே பாதுகாப்பாக இருப்பவர்கள் தான் இல்லையா? ஓ.கே குரூப்பிடம் மாயா வருவதோ இல்லை தான் இல்லையா. மாயாவும் சதா காலத்திற்காக ஓ.கே, ஓ.கே என்று கூறி விடைபெற்றுச் சென்று விடுகிறது. யு.கே என்றால் ஓ.கே குரூப்பின் தொடர்பும் மிக சிரேஷ்டமானது தான் இல்லையா? தொடர்பு நன்றாக இருக்கிறது, வாயுமண்டலம் சக்திசாலியாக இருக்கிறது என்றால் மாயா எப்படி வர முடியும். நிரந்தரமாக பாதுகாப்பாக இருப்பார்கள். ஓ.கே குரூப் என்றால் மாயாவை வென்ற குரூப்.

**மொரீசியஸ் பார்ட்டியுடன் சந்திப்பு:** எப்பொழுதும் தன்னை சிரேஷ்ட பாக்கியவான் என்று நினைக்கிறீர்களா? பாக்கியத்தில் என்ன கிடைத்திருக்கிறது? பகவானே பாக்கியத்தில் கிடைத்து விட்டார். சுயம் பாக்கியத்தை உருவாக்கும் பகவான் பாக்கியத்தில் கிடைத்து விட்டார், இதை விட பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? எனவே உலகில் அனைவரையும் விட மிகப் பெரிய பாக்கியவான் ஆத்மாக்கள் நாங்கள் தான் என்ற குஷி எப்பொழுதும் இருக்கிறது. நாங்கள் இல்லை, நாங்கள் ஆத்மாக்கள். ஆத்மாக்கள் என்று கூறினீர்கள் என்றால், ஒருபொழுதும் தவறான போதை வராது. ஆத்ம அபிமானி ஆவதினால் சிரேஷ்ட போதை - ஈஸ்வரிய போதை இருக்கும். நீங்கள் பாக்கியவான் ஆத்மாக்கள் உங்களுடைய பாக்கியத்தை இன்று வரை மகிமை செய்கிறார்கள். 'பாகவதம்'. உங்களுடைய பாக்கியத்தின் நினைவு சின்னம். உங்களுக்கு அந்த மாதிரி அழியாத பாக்கியம் இருக்கிறது அதை இன்று வரையிலும் மகிமை செய்கிறார்கள், இதே குஷியில் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். குமாரிகளோ

பந்தனம் அற்றவர்கள், உடலாலும் பந்தனம் இல்லை, மனதாலும் பந்தனம் இல்லை. அந்த மாதிரி பந்தனம் அற்றவர்கள் தான் பறக்கும் கலையின் அனுபவம் செய்ய முடியும். நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: ஆன்மீக நிலையில் நிலைத்திருந்து சுயமரியாதையின் ஆசனத்தில் அமர்ந்திருக்கக்கூடிய எப்பொழுதும் சுகமான, அனைத்து பிராப்திகளின் சொரூபமானவர் ஆகுக!**

ஒவ்வொரு குழந்தையிலும் ஏதாவது குணத்தின் விசேஷம் இருக்கிறது. அனைவரும் விசேஷமானவர்கள், குணம் நிறைந்தவர்கள், மகான்கள், மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இந்த ஆன்மீக போதை எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். இதைத் தான் சுவமானம் அதாவது சுயமரியாதை என்று கூறுவது. இந்த சுவமானத்தில் அபிமானம் வர முடியாது. அபிமானத்தின் இருக்கை முட்களின் இருக்கை. எனவே அந்த இருக்கையில் அமர்வதற்கான முயற்சி செய்யாதீர்கள். ஆன்மீகத் தன்மையில் இருந்து, சுவமானத்தின் இருக்கை யில் அமர்ந்து விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் சுகம் நிறைந்தவராக, எப்பொழுதும் சிரேஷ்ட அனைத்து பிராப்தி சொரூபத்தின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள்.

**சுலோகன்: தன்னுடைய சுபபாவனையினால் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஆசீர்வாதம் கொடுப்பவர் மற்றும் மன்னிப்பவர் தான் நன்மை செய்பவர்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 16.01.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயராஜ்யம் உங்களுடைய பிறப்புரிமை!

இன்று பாப்தாதா இராஜ்ய அதிகாரி சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். முழுக் கல்பத்திலும் மிகப் பெரிய இராஜ்ய அதிகாரி சபை இந்த சங்கமயுகத்தில் தான் கூடுகிறது. பாப்தாதா முழு உலகத்தின் பிராமண குழந்தைகளின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து இராஜ்ய அதிகாரிகள் வரிசைக்கிரமமாக தன்னுடைய சம்பூர்ண நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்திருந்து சுயராஜ்யத்தின் ஆன்மீக போதையில் எப்படி கவலையில்லா இராஜாவாகி அமர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரின் நெற்றியின் நடுவில் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் மணி எவ்வளவு அழகாக இருக்கிறது. அனைவரின் தலையில் வரிசைக்கிரமமான பிரகாசிக்கும் ஒளியின் கிரீடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் கிரீடம் அணிந்திருப்பவர்கள் தான் ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். அனைவரின் கண்களில் பாப்தாதாவின் நினைவு நிரம்பியிருக்கும் காரணத்தினால் கண்களில் இருந்து நினைவின் ஒளி நாலாபுறங்களிலும் பரவிக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரியான அலங்கரிக்கப் பட்ட சபையைப் பார்த்து, பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா! என்னுடைய இராஜ்ய அதிகாரி குழந்தைகளே ஆஹா! இந்த சுய இராஜ்யம், மாயாவை வென்றதின் இராஜ்யம் அனைவருக்கும் பிறப்புரிமையாகக் கிடைத்திருக்கிறது. உலகைப் படைப்பவரின் குழந்தைகள் இயல்பாகவே சுயராஜ்ய அதிகாரிகள். சுயராஜ்யம் உங்கள் அனைவரின் அனேக தடவைக்கான பிறப்புரிமை. இப்பொழுதைக்கானது இல்லை ஆனால் மிகப் பழைய அனேக தடவைகள் பிராப்தி செய்திருக்கும் அதிகாரம் நினைவிருக்கிறதா? நினைவு இருக்கிறது தான் இல்லையா? அனேக தடவைகள் சுய இராஜ்யத்தின் மூலம் உலகின் இராஜ்யத்தை அடைந்துள்ளீர்கள். நீங்கள் இரட்டை இராஜ்ய அதிகாரிகள். சுயராஜ்யம் மற்றும் உலக இராஜ்யம். சுயராஜ்யம் சதா காலத்திற்காக இராஜயோகியாக இருப்பவரிலிருந்து இராஜ்ய அதிகாரியாக ஆக்கி

விடுகிறது. சுயராஜ்யம் திரிநேத்ரி, திரிகாலதரிசி, மூன்று உலகங்களின் ஞானம் நிறைந்தவர் அதாவது திரிலோகிநாத் ஆக ஆக்கி விடுகிறது. சுயராஜ்யம் முழு உலகத்தில் கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலரான விசேஷ ஆத்மா ஆக்கி விடுகிறது. சுயராஜ்யம் தந்தையின் கழுத்தின் மாலை ஆக்கி விடுகிறது. பக்தர்களின் மந்திரத்தை ஜபிக்கும் மாலை ஆக்கி விடுகிறது. சுயராஜ்யம் தந்தையின் இதய சிம்மாசனதாரி ஆக்கி விடுகிறது. சுயராஜ்யம் அனைத்து பிராப்திகளின் பொக்கிஷங்களின் அதிபதி ஆக்கி விடுகிறது. உறுதியான ஆடாத அசையாத இடைவிடாத அனைத்து அதிகாரங்களை அடையச் செய்து விடுகிறது. நீங்கள் அந்த மாதிரியான சுயராஜ்ய அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்கள் தான் இல்லையா.

'நான் யார்' என்ற இந்தக் கேள்விக்கான பதிலை மிக நல்ல முறையில் தெரிந்து விட்டீர்கள் தான் இல்லையா? நான் யார், இந்த பட்டத்திற்கான மாலை எவ்வளவு பெரியது. நினைவு செய்து கொண்டே இருங்கள், மேலும் ஒவ்வொரு மணியையும் நகற்றிக் கொண்டே இருங்கள். எவ்வளவு குஷி இருக்கும். தன்னுடைய மாலையை நினைவில் கொண்டு வந்தீர்கள் என்றால், எவ்வளவு போதை இருக்கும். அந்த மாதிரியான போதை இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை போதை இருக்கும் இல்லையா? அழியாத போதை தான் இல்லையா? இந்த போதையை யாராவது குறைக்க முடியுமா என்ன? அனைத்து சக்திகள் நிறைந்த அதிகாரத்தின் எதிரில் வேறு எந்த சக்தி இருக்க முடியும்? அலட்சியம் என்ற ஆழ்ந்த தூக்கத்தில் மட்டும் தூங்கி விடுகிறீர்கள். பிறகு உங்களுடைய அதிகாரத்தின் சாவியை அதாவது நினைவை மாயா திருடி விடுகிறது. அனேகர்கள் அந்த மாதிரி தூக்கத்தில் தூங்கி விடுகிறார்கள். என்ன நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது. இந்த அலட்சியம் என்ற தூக்கம் சில நேரம் ஏமாற்றத்தையும் கொடுத்து விடுகிறது. பிறகு நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை, விழித்துக் கொண்டு தான் இருக்கிறேன் என்று அனுபவமும் செய்விக்கிறது ஆனால் திருடு போய் விட்டது என்பது தெரியவருவதில்லை. பார்க்கப்போனால் பிரகாசமாக ஒளிவிடும் ஜோதி சர்வ சக்திவானின் அதிகாரத்தின் எதிரில் எந்தவொரு அதிகாரமும் இல்லை. கனவில் கூட எந்தவொரு அதிகாரமும் அசைக்க முடியாது. நீங்கள் அந்த மாதிரியான இராஜ்ய அதிகாரிகள். புரிந்ததா? நல்லது.

# 1984 அவ்யக்த முரளி

இன்றோ சந்திக்கும் சபையில் வந்திருக்கிறோம். எப்படி குழந்தைகள் பாபாவை சந்திப்பதற்கான தன்னுடைய டர்ன் அதாவது வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் தந்தையும் குழந்தைகளின் சந்திப்பை ஆவாஹனம் (எதிர்பார்த்து அழைத்தல்) செய்கிறார். தந்தைக்கு அனைத்தையும் விட மிகப் பிரியமான காரியமே குழந்தைகளைச் சந்திப்பது தான். அது அவ்யக்த ரூபத்திலும், வியக்த ரூபத்திலும் இருக்கிறது. தந்தையின் தினசரி நிகழ்ச்சி நிரலின் விசேஷ காரியம் கண்டெடுக்கப்பட்ட அன்பிற்குரிய குழந்தை களோடு சந்திப்பு செய்வதற்கானது. அவர்களை அலங்கரித்து, பாலனை செய்து, சமமாக ஆக்கி உலகத்தின் எதிரில் பொறுப்பாளர் ஆக்க வேண்டும். இந்தக் காரியம் தான் தினசரி இருக்கிறது. பாபா இதில் மிகவும் பிஸியாக இருக்கிறார். விஞ்ஞானிகளைத் தூண்டுதல் செய்கிறார் என்றாலும் அதுவும் குழந்தைகளுக்காகத் தான். பக்தர் களுக்கு பாவனையின் பலனைக் கொடுக்கிறார் என்றாலும், குழந்தைகளைத் தான் முன்னுக்கு வைக்கிறார். பிந்துவையோ யாரும் தெரிந்திருக்கவில்லை. தேவி தேவதைகளைத் தான் தெரிந்திருக்கிறார்கள். பக்தர்களின் எதிரிலும் குழந்தைகளைத் தான் பிரத்யக்ஷம் செய்கிறார். அனைவரையும் முக்தியில் அழைத்துச் செல்கிறோம் என்றாலும் குழந்தைகள் உங்களுக்கு சுகம், சாந்தி நிறைந்த இராஜ்யம் கொடுப்பதற்காகத் தான். நல்லது.

அந்த மாதிரி சதா காலத்திற்குமான சுயராஜ்ய அதிகாரி, எப்பொழுதும் உறுதியான, இடைவிடாத ஆடாத நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் ஆன்மீக போதையில் அழியாது இருக்கக்கூடிய, இரட்டை இராஜ்ய அதிகாரி, பாப்தாதாவின் கண்களில் நிரம்பியிருக்கும் கண்ணின் மணிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதி அவர்கள் சென்னை, பெங்களூர், மைசூர் மற்றும் கல்கத்தாவிற்கு சேவைக்காக சுற்றி வந்து மதுபன் வந்தடைந்திருக்கிறார். தாதிஜியைப் பார்த்து பாப்தாதா கூறினார்: ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேவை நிரம்பியிருக்கிறது. சக்கரவர்த்தியாகி சக்கரம் போல் சுற்றி வந்து தன்னுடைய நினைவுச்சின்ன ஸ்தானத்தை உருவாக்கி விட்டீர்கள். எத்தனை இடங்கள் தீர்த்த ஸ்தானங்களாக ஆகி விட்டன. மகாவீர் குழந்தைகள் சுற்றி வருவது என்றால் நினைவுச் சின்னங்களை

உருவாக்குவது. ஒவ்வொரு குழந்தைகளிலும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது. இந்த சுற்றி வந்தததிலும் அனேக ஆத்மாக்களின் இதயத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் விசேஷம் இருந்தது. இந்த இதயத்தின் ஆசையை நிறைவேற்றுவது என்றால் வரதானி ஆவது. வரதானியாகவும் ஆகியிருக்கிறீர்கள். மேலும் மகாதானியாகவும் ஆகியிருக்கிறீர்கள். நாடகத்திட்டப்படி என்னென்ன நிகழ்ச்சிகள் உருவாகின்றனவோ அவற்றில் அனேக இரகசியங்கள் நிரம்பியிருக்கின்றன. அந்த இரகசியங்கள் உங்களை அங்கே அழைத்துச் சென்று விடுகிறது. நல்லது.

**ஜானகி தாதியுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவருக்கும் பெயரின் தானம் கொடுக்கிறீர்கள். பெயரின் தானம் என்றால் என்ன? உங்களுடைய பெயர் என்ன? பெயரின் தானம் கொடுப்பது என்றால் டிரஸ்டி ஆகி வரதானம் கொடுப்பது. உங்களுடைய பெயரை எடுத்தவுடனேயே அனைவருக்கும் என்ன நினைவு வரும்? ஒரு நொடியில் ஜீவன்முக்தி. டிரஸ்டி ஆக வேண்டும். இது உங்களுடைய பெயரின் விசேஷம், எனவே பெயர் தானமும் கொடுத்து விட்டீர்கள் என்றால் யாருடைய படகும் கரை சேர்ந்து விடும். இப்பொழுது தந்தை உங்களுடைய டிரஸ்டி தன்மையின் விசேஷத்தை மகிமை செய்தார், இது தான் நினைவுச்சின்னம். அதே ஜனக் வார்த்தை அவருக்கு கிடைத்திருக்கலாம். ஒரே ஒரு ஜனக்கின் இரண்டு கதைகள். ஒரு ஜனக் யார், ஒரு விநாடியில் உடலற்றவர் ஆகி விட்டார். இன்னொரு ஜனக், ஒரு நொடியில் டிரஸ்டி ஆகி விட்டார். என்னுடையது அல்ல உன்னுடையது. திரேதாயுகத்து ஜனக்கையும் காண்பிக்கிறார்கள் ஆனால் நீங்களோ தந்தையின் ஜனக், சீதையின் ஜனக் இல்லை. பெயர் தானத்தின் மகத்துவம் ஏன் இருக்கிறது என்ற இதைப் பற்றி வகுப்பு எடுங்கள். பெயரின் படகு மூலமாகவும் கடந்து சென்று விடுகிறார்கள். வேறு எதுவும் புரியவில்லை என்றாலும், ஆனால் சிவபாபா, சிவபாபா என்று கூறினாலே சொர்க்கத்தின் அனுமதிச் சீட்டு கிடைத்து விடும். நல்லது.

**ஆஸ்திரேலியா பார்ட்டியுடன் சந்திப்பு:** பாப்தாதாவிற்கு ஆஸ்திரேலியா நிவாசிகள் மிகப்பிரியமானவர்கள், ஏன்? ஆஸ்திரேலியாவின் விசேஷம் என்ன? ஆஸ்திரேலியாவின் விசேஷம், அவர்கள் தனக்குள் தைரியத்தை வளர்த்து, நாலாபுறங்களிலும் சேவை

செய்யும் சேவாதாரியாகி, சேவை ஸ்தானங்களை திறக்கும் விதி நன்றாக இருக்கிறது. எங்கு தைரியம் இருக்கிறதோ அங்கு தந்தை தைரியம் உள்ள குழந்தைகளைப் பார்த்து விசேஷமாக குஷி அடைகிறார். லண்டனிற்கும் விசேஷம் இருக்கிறது. அங்கு விசேஷ பாலனை அனேக அனுபவங்கள் நிறைந்த இரத்தினங்கள் மூலமாகக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மேலும் ஆஸ்திரேலியாவிற்கு இந்த அளவு பாலனையின் வாய்ப்பு கிடைப்பதில்லை ஆனால் இருந்தும் தன் கால்களிலேயே நின்று கொண்டு சேவையின் வளர்ச்சி மற்றும் வெற்றியை மிக நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அனைவரும் நினைவு மற்றும் சேவையின் ஆர்வத்தில் நன்றாக இருக்கிறார்கள். நினைவில் மிக நல்ல ஆர்வம் வைத்திருக்கிறார்கள். எனவே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள், மேலும் முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். பெரும்பான்மை யோர் தடையற்றவர்களாக இருக்கிறார்கள். சில நல்ல நல்ல குழந்தைகள் விட்டு சென்றும் விட்டார்கள் ஆனால் இருந்தும் தந்தையை இப்பொழுதும் நினைவு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்காகவும் எப்பொழுதும் சுபபாவனை வைத்து அவர்களையும் மீண்டும் தந்தையின் அருகில் அவசியம் கொண்டு வர வேண்டும். அம்மாதிரியான ஊக்கம் வருகிறது தான் இல்லையா? மரத்திலிருந்து கொஞ்சம் பழங்கள் கீழே விழத்தான் செய்யும், புதிய விஷயம் ஒன்றும் இல்லை. எனவே இப்பொழுது தன்னையும், மற்றவர்களையும் அந்த மாதிரி உறுதியானவர்களாக ஆக்குங்கள். அதனால் அவர்களும் வெற்றி சொரூபம் ஆகி விட வேண்டும். வந்திருக்கும் இந்த குரூப் உறுதியானது தான் இல்லையா? இதற்கிடையே மாயா பிடித்து விடாதே! ஒருவேளை ஏதாவது பலஹீனம் இருந்தாலும் கூட இங்கு மதுபன்னில் சம்பன்னம் ஆகியே செல்லுங்கள். மதுபன்னில் இருந்து அமரர் ஆகுக! என்ற வரதானத்தைப் பெற்றுச் செல்லுங்கள். அந்த மாதிரியான வரதானத்தை எப்பொழுதும் தன்னுடன் வைத்துக் கொள்ளுங்கள் மேலும் மற்றவர்களையும் இதே வரதானத்தினால் விழிப்படையச் செய்யுங்கள். இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள். மேல் பாப்தாதாவிற்கு பெருமிதம் இருக்கிறது. உங்களுக்கும் தந்தை மீது பெருமிதம் இருக்கிறது தான் இல்லையா? முழு உலகத்தினரிலிருந்து நாங்கள் தந்தையைத் தெரிந்து கொண்டோம் என்ற போதை உங்களுக்கும் இருக்கிறது தான் இல்லையா? எப்பொழுதும் இதே குஷியில் மற்றும் போதையில் அழியாதவர்களாக இருங்கள். இப்பொழுது

பாப்தாதா அனைவரின் புகைப்படத்தையும் எடுத்து விட்டார். பிறகு நீங்கள் வந்திருந்தீர்கள் என்று புகைப்படத்தை காண்பிப்போம். மாயாவின் ஞானம் நிறைந்தவராகவும் ஆகிச் செல்லுங்கள். ஞானம் நிறைந்தவர் ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய மாட்டார். ஏனென்றால் மாயா எப்பொழுது வருகிறது? மேலும் எப்படி வருகிறது? என்ற இதன் ஞானம் இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாயா எப்பொழுது வருகிறது என்று தெரியும் தான் இல்லையா? எப்பொழுது தந்தையை விட்டு விலகி தனியானவர் ஆகி விடுகிறீர்களோ அப்பொழுது மாயா வருகிறது. எப்பொழுதும் இணைந்திருப்பதினால் மாயா ஒருபொழுதும் வராது. ஆஸ்திரேலியாவின் விசேஷம் அதிகமாக பாண்டவ சேனை பொறுப்பிலிருப்பவர்களாக இருக்கிறார்கள். இல்லை என்றால் பெரும்பான்மையோர் சக்திகள் தான் இருப்பார்கள். இங்கு பாண்டவர்கள் அதிசயக் காரியம் செய்திருக்கிறார்கள். பாண்டவர்கள் என்றால், எப்பொழுதும் பாண்டவபதியின் உடன் இருப்பவர்கள். நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள், பாப்தாதா குழந்தைகளின் சேவைக்காக வாழ்த்துக்கள் கூறுகிறார். இப்பொழுது அழியாதவர் ஆகுக! என்ற வரதானத்தை எப்பொழுதும் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும். நல்லது.

**பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர்களுடன் சந்திப்பு:** அன்பான ஆத்மாக்கள் அன்புக் கடலில் மூழ்கியிருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். உடலால் எவ்வளவு தான் தூரமாக இருந்தாலும், அன்பான குழந்தைகள் எப்பொழுதும் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். முழு ஈடுபாடு அனைத்து தடைகளையும் கடந்து வந்து தந்தையின் அருகில் வந்து சேருவதில் உதவியாளராக ஆகிறது, எனவே பாப்தாதா குழந்தைகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். எவ்வளவு கடின முயற்சியை அன்பில் மாற்றம் செய்து இங்கு வரை வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். எனவே அன்புக் கரங்களினால் பாப்தாதா குழந்தைகளை எப்பொழுதும் பிடித்து விட்டுக் கொண்டே இருக்கிறார். யார் மிக அன்பிற்குரிய குழந்தைகளாக இருப்பார்களோ அவருடைய தாய் தந்தையர் எப்பொழுதும் மிக அன்போடு எண்ணெய் தேய்த்து மாலிஷ் செய்வார்கள் இல்லையா? பாப்தாதா குழந்தைகளின் அதிர்ஷ்ட நட்சத்திரங்களைப் பார்க்கிறார். நீங்கள் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள். தேசத்தின் நிலைமை

என்னவாக இருந்தாலும், தந்தையின் குழந்தைகள் எப்பொழுதும் தந்தையின் அன்பில் இருக்கும் காரணத்தினால் பாதுகாப்பாக இருப்பார்கள். பாப்தாதாவின் பாதுகாப்பு குடைநிழல் எப்பொழுதும் உங்கள் உடன் இருக்கிறது. நீங்கள் அந்த மாதிரியான கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகள். குழந்தைகள் அனேக கடிதங்களின் மாலையை பாப்தாதாவின் கழுத்தில் போட்டார்கள், இதற்கு பலனாக அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். எவ்வளவு அன்போடு கடிதம் எழுதியிருக்கிறார்களோ, செய்தி கொடுத்திருக்கிறார்களோ அந்த அளவே அன்போடு அதை ஏற்றுக் கொண்டோம் என்று அனைவரிடமும் கூறுங்கள், மேலும் தைரியமுள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி எப்பொழுதுமே இருக்கிறது மேலும் எப்பொழுதுமே இருக்கும். மாலை கிடைத்தது மேலும் மாலையின் மணிகளை பாப்தாதா இப்பொழுது நினைவு செய்து கொண்டிருக்கிறார். உடலால் தூரமாக இருந்தாலும், மனதால் இவர்கள் அனைவரும் மதுபன் நிவாசிகள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். மனதால் எப்பொழுதும் மன்மனாபவ ஆக இருக்கும் காரணத்தினால் தந்தையின் அருகில் மற்றும் எதிரில் இருக்கிறார்கள். அந்த மாதிரி அருகில் மற்றும் எதிரில் இருக்கும் குழந்தைகளை பாப்தாதா எதிரில் பார்த்து ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய பெயரையும் சேர்த்து அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். மேலும் எப்பொழுதும் சிரேஷ்டமாகி, சிரேஷ்டமாக ஆக்கும் சேவையில் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள் என்ற இந்த வரதானத்தையும் அனைத்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும் கொடுக்கிறார். அனைவரும் தங்களுடைய பெயரைச் சேர்த்து அன்பு நினைவை ஏற்றுக் கொள்ளுங்கள். நல்லது.

**வரதானம்: சாந்தியின் சக்தி மூலமாக அனைவரையும் ஆகர்ஷணம் (கவரக்) செய்யக்கூடிய மாஸ்டர் சாந்தி தேவா ஆகுக!**

எப்படி வாய்மொழி மூலமாக சேவை செய்வதற்கான முறை வந்து விட்டது. அதே போல் இப்பொழுது சாந்தியின் அம்பைப் பாய்ச்சுங்கள், இந்த சாந்தியின் சக்தி மூலமாக மணலிலும் பசுமையான தோட்டத்தை உருவாக்க முடியும். எவ்வளவு தான் கடும் பாறையாக இருந்தாலும் அதிலேயும் தண்ணீரை எடுக்க முடியும். இந்த சாந்தியின் மகான் சக்தியை எண்ணம், சொல் மற்றும் செயலில் நடைமுறையில் கொண்டு வந்தீர்கள்

என்றால் மாஸ்டர் சாந்தி தேவா ஆகி விடுவீர்கள். பிறகு சாந்தியின் கிரணங்கள் உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கும் சாந்தியின் அனுபவத்தின் பக்கம் ஆகர்ஷணம் செய்யும். மேலும் நீங்கள் சாந்தியின் காந்தம் ஆகி விடுங்கள்.

**சுலோகன்: ஆத்ம அபிமானி நிலையின் விரதத்தைக் கடைபிடித்தீர்கள் என்றால், விருத்திகள் அதாவது உள்உணர்வுகள் பரிவர்த்தனை ஆகி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.01.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு நாளின் மகத்துவம்!

இன்று மதுவனத்தில் வசிக்கும் தந்தை மதுவனத்தில் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். இன்று அமிர்தவேளையில் அன்பான குழந்தைகளின் அன்பான பாட்டு, சமமான குழந்தைகளின் சந்திப்பிற்கான கொண்டாடத்தின் பாட்டு, தொடர்பில் இருக்கும் குழந்தைகளின் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய உற்சாகம் நிறைந்த ஓசை, பந்தனமுள்ள சகோதரிகளின் அன்பான இனிய புகார்கள், சில குழந்தைகளின் அன்பான மலர்கள் பாப்தாதாவிடத்தில் வந்தடைந்தன. உள்நாட்டு, வெளிநாட்டு குழந்தைகளின் சக்திசாலியான சங்கல்பங்களின் உயர்ந்த உறுதிமொழிகள் அனைத்தும் பாப்தாதாவிடத்தில் வந்தடைந்தன. பாப்தாதா அனைத்து குழந்தைகளின் அன்பான சங்கல்பங்கள் மற்றும் சக்திசாலியான சங்கல்பங்களுக்கு பதிலளித்துக் கொண்டிருக்கின்றார். சதா பாப்தாதாவிற்கு பிரியமானவர்களாக இருங்கள். சதா சக்திசாலியாக இருங்கள், சதா ஆர்வம், உற்சாகத்தினால் நெருக்கத்தில் இருங்கள், ஆர்வம் என்ற அக்னியின் மூலம் பந்தனமற்ற சுதந்திர ஆத்மா ஆகுங்கள். குழந்தைகள் பந்தனத்திலிருந்து விடுபடும் நாள் வந்தே விட்டது. குழந்தைகளின் அன்பான உள்ளத்தின் ஓசைகள் கும்பகர்ணன் ஆத்மாக்களை அவசியம் எழுப்பிவிடும். பந்தனம் ஏற்படுத்துபவர்களே சுயம் பிரபுவின் அன்பு பந்தனத்தில் கட்டுண்டு விடுவார்கள். விசேஷமாக பந்தனத்திலுள்ள சகோதரிகளின் சுபமான நாட்கள் வருவதற்கான உள்ளப்பூர்வமான விருப்பத்தினை பாப்தாதா தெரிவித்துக் கொண்டிருக்கின்றார். ஏனெனில், இன்றைய விசேஷமான நாளன்று விசேஷமான அன்பான முத்துக்கள் பாப்தாதாவிடத்தில் வந்தடைகிறது. இந்த அன்பான முத்துக்கள் தான் சிரேஷ்ட வைரங்களாக ஆகி விடுகின்றன. இன்றைய நாள் சக்திசாலியான நாளாகும். இன்றைய நாள் சமமான குழந்தைகளுக்கு தத்தத்துவம் (அவ்வாறே ஆகுக) என்ற வரதானத்திற்கான நாளாகும். இன்றைய நாள் பாப்தாதா சக்தி

சேனைகளுக்கு சர்வ சக்திகளையும் உயிலாகக் கொடுக்கின்றார், மனோ பலம் கொடுக்கின்றார். மனோ சக்தியைக் கொடுக்கின்றார். இன்றைய நாள் தந்தைக்கு முதுகெலும்பாகி, குழந்தைகளை உலக மைதானத்தில் முன்னிறுத்திய நாளாகும். தந்தை குப்தமாக (அன்நோன்) இருக்கின்றனர், குழந்தைகள் பிரபலமானவர்களாக (வெல்நோன்) இருக்கின்றார். இன்றைய நாள் பிரம்மாபாபா கர்மாதீத நிலை அடைந்த நாளாகும். தீவிர வேகத்தில் உலக நன்மை, உலகை வலம் வரும் காரியத்தை ஆரம்பித்த நாளாகும். இன்றைய நாள் குழந்தைகள் என்ற கண்ணாடியின் மூலம் பாப்தாதா வெளிப்படும் நாளாகும். உலகிலுள்ள குழந்தைகளுக்கு உலகத் தந்தையின் அறிமுகம் கொடுக்கும் நாளாகும். அனைத்து குழந்தைகளும் தனது மனநிலை, ஞான தூண், சக்தி என்ற தூண் அதாவது தூண் போன்று ஆடாது, அசையாது உறுதியாக இருப்பதற்கான தூண்டுதல் கொடுக்கும் நாளாகும். ஒவ்வொரு குழந்தையும் தந்தையின் நினைவார்த்தமாக அமைதியின் தூண்களாக இருக்கிறீர்கள். ஸ்தூலத்தில் இந்த அமைதி தூண் (சாந்தி ஸ்தம்பம்) உருவாக்கப்பட்டிருக்கிறது ஆனால் தந்தையின் நினைவில் இருக்கக் கூடிய நினைவுத் தூண்களாக சைத்தன்ய குழந்தைகள் நீங்கள் இருக்கிறீர்கள். பாப்தாதா அனைத்து சைத்தன்ய தூண்களாக இருக்கும் குழந்தைகளை சுற்றி வந்து பார்க்கின்றார். எவ்வாறு இன்று சாந்தி ஸ்தம்பத்தில் நிற்கிறீர்களோ, பாப்தாதா நினைவுத் தூண்களாக இருக்கக் கூடிய உங்கள் அனைவரின் எதிரில் இருக்கின்றார். இன்று நீங்கள் விசேஷமாக தந்தையின் அறைக்கு செல்கிறீர்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையின் உள்ளம் என்ற அறையில் குழந்தைகளிடத்தில் உளமாற உரையாடல் செய்கின்றார், நீங்கள் குடிலுக்கு செல்கிறீர்கள். குடில் என்றால் அன்பானவர் மற்றும் அன்புக்குரியவரின் நினைவுச்சின்னமாகும். அன்புக்குரிய குழந்தைகளிடத்தில் அன்பான தந்தை விசேஷமாக சந்திக்கின்றார். ஆக பாப்தாதாவும் அன்புக்குரிய குழந்தைகளின் வித விதமான இசைகளை கேட்டுக் கொண்டே இருக்கின்றார். சிலர் அன்பு என்ற தாளத்தின் மூலம் இசைக் கருவி வாசிக்கின்றனர், சிலர் சக்தி என்ற தாளத்தின் மூலம், சிலர் ஆனந்தம், சிலர் அன்பு அன்ற தாளத்தின் மூலம் வாசிக்கின்றனர். விதவிதமான தாளத்தின் இசைளைக் கேட்டுக் கொண்டே இருக்கின்றார். பாப்தாதாவும் அனைவரின் கூடவே உலா வந்து கொண்டே இருக்கின்றார். ஆக இன்றைய நாளின் விசேஷ மகத்துவத்தைப் புரிந்து கொண்டீர்கள்.

## 1984 அவ்யக்த முரளி

இன்றைய நாள் வெறும் நினைவு நாள் மட்டும் கிடையாது, ஆனால் நினைவு மற்றும் சக்திக்குரிய நாளாகும். இன்றைய நாள் வைராக்கியத்திற்கான நாள் கிடையாது, ஆனால் சேவாதாரிக்கான கிரீடத்தை அணிந்து கொள்ளும் நாளாகும். சக்திசாலியான நினைவு என்ற திலக்கத்திற்குரிய நாளாகும். முதலில் குழந்தைகள், பிறகு தந்தை - இந்த சங்கல்பத்தை நடைமுறையில் கொண்டு வந்த நாளாகும். இன்றைய நாள் பிரம்மாபாபா விசேஷமாக இரட்டை அயல்நாட்டு குழந்தைகளை தந்தையின் சங்கல்பம் மற்றும் அழைப்பின் வெளிப்படையான பலன் சொரூபமாகும். இவ்வாறு சர்வசக்திகளின் ரசனை நிறைந்த சிரேஷ்ட பழங்களைப் பார்த்து பிரம்மாபாபா குழந்தைகளுக்கு விசேஷமாக வாழ்த்துக்கள் மற்றும் வரதானங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சதா எளிய விதியின் மூலம் விருத்தியடைந்து கொண்டே இருங்கள். எவ்வாறு குழந்தைகள் ஒவ்வொரு அடியும் தந்தையின் அதிசயம் என்ற பாட்டைப் பாடுகிறீர்கள், அவ்வாறு பாப்தாதாவும் குழந்தைகளின் அதிசயம் என்றே கூறுகின்றார். தூர தேசத்தினர்களாக, தூர தர்மத்தினர்களாக இருந்தாலும் எவ்வளவு நெருக்கத்தில் வந்து விட்டனர்! நெருக்கத்தில் அபுவில் இருப்பவர்கள் தூரமானவர்களாக ஆகி விட்டனர். குழந்தைகளின் அதிசயம் அல்லவா! ஆகையால் இவ்வாறு அதிஷ்டசாலி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் சதா குஷியடைகின்றார். நீங்கள் அனைவரும் இரட்டை குஷியடைகிறீர்கள் அல்லவா! நல்லது.

இவ்வாறு சதா சமம் ஆகக் கூடிய சிரேஷ்ட சங்கல்பமுடைய, சர்வசக்திகள் என்ற உயில் மூலம் மனோ பலத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு, சதா அன்பானவரின் அன்புக்குரியவர்களாக ஆகி விதவிதமான இசைகளை வாசிக்கக் கூடிய சதா தூணுக்கு சமமாக ஆடாது, அசையாது இருக்கக் கூடியவர்களுக்கு, சதா எளிய விதியின் மூலம் விருத்தியடையக் கூடியவர்களுக்கு, சதா இனிய சந்திப்பு செய்யக் கூடிய உள்நாடு, அயல்நாட்டின் அனைத்து வகையான குழந்தைகளுக்கும் மலர் மாலை சகிதமாக பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

இன்று அனைத்து விசேஷமாக அன்பு நிறைந்த சேவாதாரி குழந்தைகள் வதனத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஜெகதம்பாவும் அழைக்கப்பட்டிருந்தார், தீதியும் அழைக்கப்பட்டிருந்தார். விஸ்வகிஷோர்

போன்ற மகான் குழந்தைகள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். விசேஷமாக நினைவு நாள் கொண்டாடுவதற்காக அனைத்து ஒப்பற்ற, இரட்டை சேவைக்கு நிமித்தமாக இருக்கக் கூடிய குழந்தைகள் சங்கமத்தில் ஈஸ்வரிய சேவையில் சதா துணையாக இருக்கின்றனர். மேலும் எதிர்காலத்தில் இராஜ்யம் செய்விக்கும் சேவையிலும் துணையாக இருக்கின்றனர். ஆக இரட்டை சேவதாரிகள் ஆகி விடுகிறீர்கள் அல்லவா! இவ்வாறு இரட்டை சேவாதாரி குழந்தைகள் விசேஷ ரூபத்தில் மதுவனத்திற்கு வந்திருக்கும் சகயோகி, அன்பான ஆத்மாக்களுக்கு அன்பு நினைவுகள் கொடுக்கின்றனர். இன்று பாப்தாதா அவர்கள் சார்பாக அன்பு நினைவிற்கான செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். புரிந்ததா! சிலர் யாரையோ நினைக்கின்றனர், சிலர் வேறு யாரையோ நினைக்கின்றனர். தந்தையின் கூடவே சேவையின் பொருட்டு அட்வான்ஸ் முயற்சியாளர் குழந்தைகளை யாரெல்லாம் சங்கல்பத்தில் நினைவு செய்தார்களோ அவர்கள் அனைவரையும் நினைவிற்கு கைமாறாக அனைவரும் அன்பு நினைவுகளை வழங்கினர். புஷ்பசாந்தாவும் அன்பாக நினைவு செய்தார். இவ்வாறு எத்தனை பேர்களின் பெயர்களை கூறுவது! அனைவரின் விசேஷ குழு வதனத்தில் இருந்தது. இரட்டை அயல் நாட்டினருக்கு தீதி விசேஷமான அன்பு நினைவுகள் தந்தார். இன்று தீதியை பலர் விசேஷமாக நினைவு செய்தீர்கள் அல்லவா! ஏனெனில் இவர்கள் தீதியைத் தான் பார்த்திருக்கின்றனர். ஜெகதம்பா மற்றும் விஷ்வ கிஷோரைப் பார்த்தது கிடையாது, ஆகையால் தீதியின் நினைவு விசேஷமாக வந்தது. அவர் கடைசி நேரத்தில் எந்த சங்கல்பமும் அற்றவராக (நிர்சங்கல்பம்) மற்றும் பற்றறவராக இருந்தார். அவருக்கும் நினைவும் வருகிறது அல்லவா! ஆனால் அது ஈர்க்கக் கூடிய நினைவு கிடையாது, சுதந்திர ஆத்மாவாக இருக்கின்றார். அவர்களது குழுவும் சக்திசாலியாக ஆகிக் கொண்டிருக்கிறது. அனைவரும் பிரபலமானவர்கள் அல்லவா! நல்லது.

சில அயல்நாட்டு சகோதர, சகோதரிகள் அயல்நாட்டு சேவைக்கு செல்வதற்காக பாப்தாதாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டிருக்கின்றனர்: அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா கூறுவது என்னவெனில், செல்கிறீர்கள் என்பது கிடையாது, மீண்டும் வருவதற்காக, சேவை செய்து மீண்டும் தந்தையின் முன் பூங்கொத்து (வி.ஐ.பி.களின்) கொண்டு

வருவதற்காக செல்கிறீர்கள். ஆகையால் வீட்டிற்கு செல்லவில்லை, சேவைக்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். வீடு அல்ல, சேவைக்கான இடமாகும். இதுவே சதா நினைவில் இருக்க வேண்டும். கருணை உள்ளமுடைய தந்தையின் குழந்தைகள் எனில் துக்கமான ஆத்மாக்களுக்கும் நன்மை செய்யுங்கள். சேவையின்றி நிம்மதியாக உறங்கவே முடியாது. கனவும் சேவை பற்றி வருகிறது அல்லவா! கண்கள் திறந்ததும் பாபாவை சந்திக்கிறீர்கள், பிறகு முழு நாளும் தந்தை மற்றும் சேவை. ஒரே ஒரு குழந்தை மட்டும் சேவாதாரி அல்ல, அனைவருமே சேவாதாரிகள் என்ற பெருமிதம் பாப்தாதாவிற்கு எவ்வளவு இருக்கிறது! ஒவ்வொரு குழந்தையும் விஷ்வ கல்யாணகாரிகள். யார் பெரிய பூங்கொத்தை எடுத்து வருகிறீர்கள் என்பதைப் பார்ப்போம்! ஆக செல்கிறீர்களா? அல்லது திரும்பி வந்து கொண்டிருக்கிறீர்களா? அதிக அன்பு யாருக்கு இருக்கிறது. தந்தைக்கா? அல்லது உங்களுக்கா? குழந்தைகளின் அன்பு அதிகமாக இருந்தால் தந்தை பாதுகாப்பாக இருப்பார். மகாதானி, வரதானி, சம்பன்ன ஆத்மாக்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள், இப்போது பல ஆத்மாக்களை செல்வந்தர்களாக ஆக்கி, அலங்கரித்து தந்தையின் முன் அழைத்து வர வேண்டும். சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பது கிடையாது, ஆனால் சேவை செய்து ஒன்று மூன்று மடங்கு ஆகி வருவீர்கள். சரீர ரீதியில் எவ்வளவு தொலைவில் செல்கிறீர்கள், ஆனால் ஆத்மா சதா தந்தையின் கூடவே இருக்கிறது. பாப்தாதா சகயோகி குழந்தைகளை சதா கூடவே இருப்பதாகப் பார்க்கின்றார். சகயோகி குழந்தைகளுக்கு சதா சகயோகம் பிராப்தியாக கிடைக்கிறது. நல்லது.

**இரட்டை அயல்நாட்டு சகோதர, சகோதரிகளின் கேள்வி -பாப்தாதாவின் பதில்:**

**கேள்வி: சில பிராமண ஆத்மாக்களிடத்திலும் கெட்ட ஆவிகளின் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. அந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும்?**

பதில்: இதற்கு சேவை நிலையத்தின் சூழ்நிலை மிகவும் சக்திசாலியாக சதா இருக்க வேண்டும், மேலும் தனது மனோநிலையும் சதா சக்திசாலியாக இருக்க வேண்டும். பிறகு இந்த கெட்ட ஆவி ஒன்றும் செய்ய முடியாது. அது மனதைப் பிடித்துக் கொள்கிறது. மன சக்தி பலவீனமாக ஆகின்ற காரணத்தினால் தான் இதன் பாதிப்பு ஏற்பட்டு

விடுகிறது. ஆக ஆரம்பத்திலேயே அவர்களுக்காக யோகயுக்த் ஆத்மாக்கள் விசேஷமாக யோக பட்டி வைத்து அவர்களுக்கு சக்தி கொடுக்க வேண்டும். மேலும் அந்த யோகயுக்த குரூப்பைச் சார்ந்தவர்கள் இந்த விசேஷ காரியத்தை நாம் செய்ய வேண்டும் என்று நினைக்க வேண்டும். மற்ற நிகழ்ச்சிகளுக்கு எவ்வளவு கவனம் கொடுப்பீர்களோ அதே போன்று இந்த நிகழ்ச்சிக்கும் கவனம் கொடுத்து செய்வீர்கள் எனில், ஆரம்பத்திலேயே அந்த ஆத்மாவிற்கு சக்தி கிடைத்து விடுவதால் தப்பித்து விடும். அந்த ஆத்மா குழப்பத்தில் இருக்கின்ற காரணத்தினால் யோகாவில் அமர முடியாமலும் இருக்கலாம், ஏனெனில் அதன் மீது மற்றொருவரின் பிரபாவம் இருக்கிறது. ஆக அவர் அமராமல் இருந்தாலும் பரவாயில்லை ஆனால் நீங்கள் தங்களது காரியத்தை நிச்சயபுத்தியுடன் செய்து கொண்டே இருங்கள். பிறகு சிறிது சிறிதாக அதன் சஞ்சலம் அமைதியாகிக் கொண்டே செல்லும். அந்த கெட்ட ஆவி முதலில் உங்கள் மீதும் யுத்தம் செய்ய முயற்சிக்கும் ஆனால் இந்த காரியம் செய்தே ஆக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள், பயப்படாதீர்கள், பிறகு சிறிது சிறிதாக அதன் பாதிப்பு நீங்கி விடும்.

**கேள்வி: சேவை நிலையத்தில் ஆவி பிரவேசமான ஆத்மாக்கள் ஞானம் கேட்பதற்கு வந்தால் என்ன செய்ய வேண்டும்?**

பதில்: ஞானம் கேட்பதால் அதனிடத்தில் ஏதாவது வித்தியாசம் ஏற்பட்டால் அல்லது விநாடியில் அனுபவம் செய்கிறது எனில், அதனை உற்சாகத்தில் கொண்டு வர வேண்டு. சில நேரங்களில் ஆத்மாவிற்கு அடைக்கலம் கிடைக்காத காரணத்தினாலும் உங்களிடத்தில் வரும், மாறுவதற்காக வருகிறதா அல்லது பைத்தியம் போன்று போகின்ற பாதையில் வந்ததா? வந்து விட்டதா? என்பதை கண்டறிய வேண்டும். ஏனெனில், அப்படிப்பட்ட பைத்தியக்காரர்கள் இருக்கின்றனர், அதாவது கதவு திறந்திருந்திருப்பதை பார்த்து விட்டால் உடனேயே வந்து விடுவர். விழிப்புணர்வுடன் இருக்கமாட்டார்கள். இவ்வாறு பலர் வருவார்கள், அவர்களை முதலில் கண்டறிய வேண்டும். இல்லையெனில் அதில் நேரம் வீணாகி விடும். மற்றபடி யாராவது நல்ல இலட்சியத்துடன் வருகிறார்கள், மயக்கத்தில் இருக்கிறார்கள் எனில், அவர்களுக்கு சக்தி கொடுப்பது நமது காரியமாகும் ஆனால் அப்படிப்பட்ட ஆத்மாக்களை ஒருபோதும் தனியாகக் கவனிக்கக் கூடாது. எந்த குமாரியும் இப்படிப்பட்ட ஆத்மாவை தனியாக கவனிக்கக் கூடாது. ஏனெனில் குமாரியின் தனிமையைப்

பார்த்து பைத்தியத்தின் பைத்தியம் மேலும் அதிகரித்து விடும். ஆகையால் இந்த ஆத்மா தகுதியானவர் என்று நினைக்கிறீர்கள் எனில், இரண்டு அல்லது மூன்று பேருக்கு நேரம் அவருக்கு கொடுக்க வேண்டும் அல்லது யாராவது பொறுப்பானவர்கள், சில வயதானவர்கள் இருக்கிறார்கள் எனில் அவர்களை அந்த நேரத்தில் அழைத்து அமர்த்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் காலம் மிகவும் மோசமாக இருக்கிறது, மேலும் மிகக் கெட்ட எண்ணங்களுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இதில் மிகவும் தெளிவான புத்தி தேவை. ஆகையால் சிறிது கவனம் வைப்பதும் மிகவும் அவசியமாகும். தெளிவான புத்தியுடையவர்கள் எனில் இவர் எந்த இலட்சியத்துடன் வந்திருக்கிறார் என்று ஒவ்வொருவரது மன அதிர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

**கேள்வி: இன்றைய நாட்களில் சில இடங்களில் திருட்டு மற்றும் பயத்தின் சூழ்நிலைகள் அதிகம் இருக்கின்றன. அதிலிருந்து எப்படி தப்பிப்பது?**

பதில்: இதற்கு அதிக யோக சக்தி தேவை. யாராவது உங்களை பயமுறுத்தும் எண்ணத்துடன் வருகின்றனர் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் யோக சக்தி கொடுங்கள். ஒருவேளை சிறிது பேசினாலும் நஷ்டம் ஏற்பட்டு விடும். ஆகையால் இப்படிப்பட்ட நேரத்தில் அமைதி சக்தி கொடுங்கள். அந்த நேரத்தில் ஏதாவது கூறினீர்கள் எனில், நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் ஆகி விடும். நீங்கள் அக்கறையற்றவர்கள் போன்று இருங்கள், நமக்கு எந்த அக்கறையும் கிடையாது. என்ன செய்தாலும் அதை சாட்சியாக இருந்து அமைதி சக்தியை கொடுங்கள், பிறகு அவரது கை ஓங்காது. இவருக்கு எந்த அக்கறையும் கிடையாது என்பதை அவர் புரிந்து கொள்வார். இல்லையெனில் பயமுறுத்துவார், பயந்து விட்டால் அல்லது குழப்பத்தில் வந்து விட்டால் அவர்கள் மேலும் குழப்பத்தில் கொண்டு வருவார். பயமும் அவர்களுக்கு தைரியத்தைக் கொடுக்கிறது, ஆகையால் பயத்தில் வந்து விடக் கூடாது. அப்படிப்பட்ட நேரத்தில் சாட்சியாகப் பார்க்கும் ஸ்திதியைப் பயன்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நேரத்தில் நன்கு பயிற்சி செய்ய வேண்டும்.

**கேள்வி: பாப்தாதாவிடமிருந்து அடையும் ஆசீர்வாதத்தை தவறான முறையில் பயன்படுத்துவது என்றால் என்ன?**

பதில்: சில நேரங்களில் பாப்தாதா குழந்தைகளை சேவாதாரி அல்லது ஒப்பற்ற குழந்தைகள் என்று கூறுகின்றார் அல்லது ஏதாவது விசேஷ பட்டங்களைக் கொடுக்கின்றார் எனில், அந்த பட்டங்களை தவறாகப் பயன்படுத்தி விடுகின்றனர். நான் அவ்வாறு ஆகியே விட்டேன் என்று நினைக்கின்றனர். நான் அவ்வாறே இருக்கிறேன். இவ்வாறு புரிந்து கொண்டு தனது எதிர்கால முயற்சியை விட்டு விடுகின்றனர். இது தவறாகப் பயன்படுத்துவது என்று கூறப்படுகிறது, ஏனெனில் பாப்தாதா என்ன வரதானம் கொடுக்கிறாரோ அதை தனக்காக மற்றும் சேவைக்காகப் பயன்படுத்த வேண்டும். இது தான் சரியான முறையில் பயன்படுத்துவதாகும், மேலும் சோம்பேறியாகி விடுவது என்பது தவறாக பயன்படுத்துவதாகும்.

**கேள்வி: கடைசியில் ஆன்டி கிறைஸ்டின் (Anti-Christ) ரூபம் இருக்கும் என்று பைபிளில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் ரகசியம் என்ன?**

பதில்: எதிர்மறையான கிறிஸ்து என்றால் அந்த தர்மத்தின் பிரபாவத்தை குறைப்பது. இன்றைய நாட்களில் அதே கிறிஸ்தவ தர்மத்தில் கிறிஸ்தவ தர்மத்தின் மதிப்பை குறைவாக நினைத்துக் கொண்டே செல்வதை பார்க்கிறீர்கள். அதே தர்மத்தைச் சார்ந்தவர்கள் தனது தர்மம் அந்த அளவிற்கு சக்திசாலியானதாக நினைப்பது கிடையாது, மற்றவர்களிடத்தில் அதிக சக்தியிருப்பதாக அனுபவம் செய்கின்றனர். இதுவே ஆன்டி கிறைஸ்ட் ஆகி விட்டது. இன்றைய நாட்களில் சில பாதிரியார்கள் பிரம்மச்சரியத்திற்கு மதிப்பு கொடுப்பது கிடையாது. மேலும் அவர்கள் கிரஹஸ்தி ஆக்கக் கூடிய தூண்டுதல் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். ஆக அதே தர்மத்தைச் சார்ந்த அவர்கள் ஆன்டி கிறைஸ்ட் ஆகி விடுகின்றனர். நல்லது.

**வரதானம்: தந்தைக்கு வலது கரமாகி, ஒவ்வொரு காரியத்திலும் சதா எவரெடியாக இருக்கக் கூடிய மாஸ்டர் பாக்கிய விதாதா ஆகுக!**

எந்த குழந்தைகள் வலது கரமாகி தந்தையின் ஒவ்வொரு காரியத்திலும் சதா உதவியாளராக, சதா எவரெடியாக இருக்கிறார்களோ, கட்டளைப்படி நடப்பவர்களாகி ஆம் பாபா, நான் தயாராக இருக்கிறேன் என்று

கூறுகிறார்களோ, தந்தையும் அப்படிப்பட்ட சகயோகி குழந்தைகளை சதா பரிபாலிக்கும் குழந்தை (முரபி குழந்தை), நல்ல குழந்தை, உலகை அலங்கரிக்கும் குழந்தை என்று கூறி மாஸ்டர் வரதாதா மற்றும் பாக்கிய விதாதா என்ற வரதானம் கொடுத்து விடுகின்றார். இப்படிப்பட்ட குழந்தைகள் இல்லறத்தில் இருந்தாலும் இல்லறத்தின் விருத்தியிலிருந்து தூர விலகியிருப்பார்கள், உலகிய நடைமுறையில் இருந்தாலும், சதா ஆன்மீக நடைமுறையில் இருப்பதில் கவனம் செலுத்துவார்கள்.

**சுலோகன்: ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயலில் சத்தியம் மற்றும் தூய்மை இருந்தால், பிரபுவின் பிரியமான ரத்தினமாகி விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 20.01.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாதானி ஆகுங்கள், வரதானி ஆகுங்கள்!

இன்று பாப்தாதா, அனைத்துக் குழந்தைகளின் தூய்மையின் பர்சனாலிட்டி மற்றும் சர்வ பிராப்தி சொரூபத்தின் ராயல்டி, ஆன்மிக ஸ்மிருதி சொரூபத்தின் ரியலிட்டியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைத்துக் குழந்தைகளையும் தூய்மையின் பர்சனாலிட்டியினால் ஜொலிக்கின்ற ஒளியின் கிரீடதாரியாகப் பார்த்துக் கொண்டுள்ளார். ஒரு பக்கம் சர்வ பிராப்தி சொரூபக் குழந்தைகளின் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்னொரு பக்கம் உலகத்தின் அல்பகாலப் பிராப்தி இருந்த போதும் பிராப்தியற்றவர்களாக இருக்கும் ஆத்மாக்களின் பிராப்தி சொரூபமாக இல்லாத நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் திருப்தியாக இல்லை. சதா எதையாவது பெற வேண்டும் என்ற ஆசை இருந்து கொண்டிருக்கிறது. சதா இது வேண்டும், அது வேண்டும் என்ற ஆர்வம் இருந்து கொண்டே இருக்கிறது. அதற்காக ஓடிக் கொண்டே இருக்கின்றனர். தவித்துக் கொண்டு இங்குமங்கும் உடலால், மனதால், செல்வத்தால், மக்களால் ஏதேனும் பிராப்தி கிடைக்க வேண்டும் என்ற ஆசையில் அலைந்து கொண்டிருக்கின்றனர். விசேˆமாக மூன்று விˆயங்களின் பக்கம் ஆசை வைத்து, அநேக விதமான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். ஒன்று, உடலுக்கு சக்தி வேண்டும். பிறகு செல்வத்தின், பதவியின், புத்தியின் சக்தி மற்றும் இரண்டாவது, பக்தி வேண்டும். இரு கணமாவது உண்மையான மனதோடு பக்தி செய்ய வேண்டும் என்ற பக்திக்கான ஆசையும் பக்த ஆத்மாக்கள் வைக்கின்றனர். மூன்றாவது லிலி அநேக ஆத்மாக்கள் துவாபரயுகத்தில் இருந்து துக்கம் மற்றும் புகாரின் உலகத்தைப் பார்த்துப் பார்த்து, துக்கம் மற்றும் அசாந்தியின் காரணத்தால் அல்பகாலப் பிராப்தி கானல்நீர் என உணர்ந்து துக்கத்தின் உலகத்தில் இருந்து, இந்த விகாரி துக்கங்களின் பந்தனங்களிலிருந்து முக்தி வேண்டுகின்றனர். பக்தர்கள் பக்தியை விரும்புகின்றனர் மற்றும் வேறு சிலர் சக்தியை விரும்புகின்றனர்,

இன்னும் சிலர் முக்தியை விரும்புகின்றனர். அத்தகைய திருப்தியற்ற ஆத்மாக்களுக்கு சுகம் மற்றும் சாந்தியின், பவித்திரதாவின், ஞானத்தின் துளியைக் கொடுக்கக் கூடிய மற்றும் பிராப்தி செய்விக்கக் கூடிய திருப்தியின் மணிகள் யார்? நீங்களா? இரக்கமனம் உள்ள தந்தையின் குழந்தைகள், எப்படி தந்தைக்கு இரக்கம் வருகிறது, வள்ளலின் குழந்தைகளாக இருந்து கொண்டு, அற்பகாலப் பிராப்திக்காக வேண்டும்-வேண்டும் என்ற முழக்கத்தை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். மாஸ்டர் வள்ளலின் குழந்தைகள், பிராப்தி சொரூபக் குழந்தைகளாகிய உங்களுக்கு உலகின் ஆத்மாக்கள் மீது இரக்கம் வருகிறது, லிலி நம்முடைய சகோதரர்கள் அல்பகாலத்தின் ஆசையில் எவ்வளவு அலைந்து கொண்டிருக்கின்றனர்! அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஊக்கம் வருகிறதா? வள்ளலின் குழந்தைகள் தங்களின் சகோதரர்கள் மீது தயை மற்றும் இரக்கத்தின் பார்வை வையுங்கள். மகாதானி ஆகுங்கள், வரதானி ஆகுங்கள். ஜொலிக்கின்ற திருப்தியின் மணிகளாகி, அனைவருக்கும் சந்தோˆத்தைக் கொடுங்கள். இப்போது சந்தோஷி என்ற தாயை அதிகமாக அழைக்கின்றனர். ஏனென்றால் எங்கே திருப்தி உள்ளதோ, அங்கே அப்பிராப்தி (இல்லை) என்பதே இருக்காது. திருப்தியின் ஆதாரத்தில் ஸ்தூல செல்வத்திலும் கூட அபரிமிதத்தை அனுபவம் செய்கின்றனர். திருப்தி உள்ளவர்களின் செல்வம் இரண்டு ரூபாய் என்றாலும் அது இரண்டு லட்சத்திற்குச் சமம். கோடீஸ்வரனாக இருந்தாலும் திருப்தி இல்லை என்றால் கோடி என்பது கோடியல்ல, இச்சைகளின் யாசகம். ஆசை (இச்சா) என்றால் மனக்கவலை கொள்வதாகும். ஆசை (இச்சா) ஒரு போதும் நல்லவராக (அச்சா) ஆக விடாது. ஏனென்றால் அழியக்கூடிய ஆசை பூர்த்தியாவதுடன் கூடவே மேலும் அநேக ஆசைகளை உருவாக்கி விடுகிறது. ஆகவே ஆசைகளின் சக்கரத்தில் சிலந்திவலையில் சிக்குவது போல் சிக்கிக் கொள்கின்றனர். விடுபட விரும்பினாலும் விடுபட முடியாது. எனவே அத்தகைய வலையில் சிக்கிக் கொண்டுள்ள தங்களின் சகோதரர்களை இச்சா மாத்திரம் அவித்யா (ஆசை பற்றி அறியாதர்களாக) ஆக்குங்கள். மனக்கவலை என்றால் பெருமைக்கு அப்பாற் பட்டு இருப்பது. நாம் அனைவரும் ஈஸ்வரிய குழந்தைகள், வள்ளலின் குழந்தைகள், அனைத்துப் பிராப்திகளும் நமது பிறப்புரிமை. இந்தப் பெருமையிலிருந்து விலகி விடுகின்ற காரணத்தால் மனக்கவலைக்குள்ளாகின்றனர். அத்தகைய

# 1984 அவ்யக்த முரளி

ஆத்மாக்களுக்குத் தங்களின் சிரேஷ்ட பெருமையைச் சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா?

இரட்டை வெளிநாட்டினராகிய குழந்தைகள் அனைவரும் அவரவர் இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? போய் என்ன செய்யப் போகிறீர்கள்? மகாதானிலிவரதானி ஆகி அனைத்து ஆத்மாக்களுக்கும் சுகம்லிசாந்தியின் பிராப்திகள் மூலம் பையை நிரப்பிவிட வேண்டும். இந்த சங்கல்பத்துடன் தான் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? பாப்தாதா குழந்தைகளின் தைரியம் மற்றும் சிநேகத்தைப் பார்த்து சதா சிநேகத்திற்குப் பிரதிபலனாகப் பல கோடி மடங்கு சிநேகத்தைக் கொடுக்கிறார். தூரதேசத்தினர் அறிமுகம் மற்றும் பிராப்தியினால் சமீபமாக ஆகி விட்டனர். இந்த தேசத்தினர் அறிமுகம், பிராப்தியில் இருந்து தூரமாகி விட்டனர். ஆகவே சதா டபுள் வெளிநாட்டுக் குழந்தைகள் பிராப்தி சொரூபத்தின் உறுதி மற்றும் திருப்தியின் ஊக்கத்தில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பாக்கியவிதாதா சர்வ பிராப்திகளின் வள்ளல் சதா உங்களோடு கூடவே இருக்கிறார். நல்லது.

அந்த மாதிரி இரக்க மனம் உள்ள தந்தையின் இரக்க மனம் உள்ள குழந்தைகளுக்கு, அனைவரையும் திருப்தியின் கஜானாவினால் நிரம்பியவராக ஆக்கக் கூடிய திருப்தியின் மணிகளாகிய குழந்தைகளுக்கு, சதா பிராப்தி சொரூபமாகி, அனைவருக்கும் பிராப்தி செய்விப்பதற்கான சுபபாவனையில் இருக்கக் கூடிய சுபசிந்தனையாளர் குழந்தைகளுக்கு, அனைவரையும் அழியக்கூடிய ஆசைகளில் இருந்து இச்சா மாத்திரம் அவித்யா ஆக்கக் கூடிய, அனைத்து சக்திசாலிக் குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா பேசினார்: இந்த குரூப்பில் யாரையாவது இங்கேயே அமர்ந்து விடுங்கள் என்று சொன்னால் அதற்கு எவர்லிரெடியாக இருக்கிறீர்களா? உங்களுக்கு எந்த ஒரு பந்தனமும் இல்லாதிருக்கிறதா? இப்படியும் ஆகும் லிலி சமயம் வரும் போது அனைவரின் டிக்கெட்டும் ரத்து செய்யப்பட்டு இங்கேயே அமர வைக்கப்படுவீர்கள். அந்த மாதிரி சமயத்தில் எந்த வசதிகளும் பெற்றுக் கொள்ள முடியாது. அனைவருக்கும் நினைவிருக்கிறதா - பிரம்மாபாபா

# 1984 அவ்யக்த முரளி

அவ்யக்தமான போது அந்த நான்கு நாள் எப்படிக் கழிந்து போனது? கட்டடம் பெரியதாக இருந்ததா? பிறகு 4 தினங்கள் எப்படிக் கழிந்தன? விநாசத்தின் தினங்களும் இது போல் தான் கழிந்து செல்லும். அந்தச் சமயம் அன்பில் மூழ்கிய நிலையில் இருந்தனர். அது போலவே அன்பில் மூழ்கிய நிலையில் முடிவு வரும். பிறகு இங்குள்ள மலைகள் மீது அமர்ந்து தபஸ்யா செய்வீர்கள். மூன்றாவது கண் மூலமாக முழு விநாசத்தையும் பார்ப்பீர்கள். அந்த மாதிரி கவலையற்றவராக இருக்கிறீர்கள் இல்லையா? எந்த ஒரு கவலையும் கிடையாது. லௌகிக வீட்டைப் பற்றிய, பரிவாரத்தைப் பற்றிய, பணியைப் பற்றிய எந்த ஒரு கவலையும் இல்லை. சதா கவலையற்று, என்னவாகும் என்ற கேள்வி இல்லை. என்ன நடக்குமோ, அது நல்லதாகவே நடக்கும். இது தான் கவலையற்ற நிலை எனச் சொல்லப்படும். சென்டரின் கட்டடம் நினைவு வருகிறது, பாங்க்கில் உள்ள கையிருப்பு நினைவு வந்தது என்று எந்த ஒரு நினைவும் வரக் கூடாது. ஏனென்றால் உங்களுடையது உண்மையான செல்வம் இல்லையா? கட்டடத்தில் முதலீடு செய்யப் பட்டிருந்தாலும் சரி, வங்கியில் இருந்தாலும் சரி ஆனால் உங்களுடையதோ பல கோடி மடங்காக உங்களுக்குக் கிடைக்கும். நீங்களோ காப்பீடு (இன்சூரன்ஸ்) செய்து விட்டிருக்கிறீர்கள் இல்லையா? மண், மண்ணாகவே போய்விடும் ஆனால் உங்களுடைய உரிமை உங்களுக்குப் பல மடங்காகி, உங்களுக்குக் கிடைக்கும். வேறென்ன வேண்டும்? உண்மையான செல்வம் ஒரு போதும் வீணாகிப் போகாது. புரிந்ததா? இது போல் சதா கவலையற்றவராக இருங்கள். பின்னால் சென்டருக்கு என்னவாகுமோ தெரியவில்லையே? வீட்டுக்கு என்னவாகும்? இந்தக் கேள்வியெல்லாம் இல்லை. வெற்றி கிடைத்தே விட்டது. வெற்றி ஆகுமா இல்லையா என்பதில்லை. இந்தக் கேள்வியே கிடையாது. முதலிலேயே வில் (உயில்) செய்தாகி விட்டது இல்லையா? எப்படி யாராவது வில் எழுதி விட்டுச் செல்கின்றனர். அப்போது முதலிலேயே கவலையற்றவராக ஆகின்றனர் இல்லையா? ஆக, நீங்கள் அனைவருமே உங்களது ஒவ்வொரு சுவாசம், சங்கல்பம், விநாடி, செல்வம், சரீரம் அனைத்தையும் வில் செய்து விட்டீர்கள் தானே? வில் செய்து விட்ட பொருளை ஒரு போதும் தனக்காகப் பயன்படுத்த முடியாது.

ஸ்ரீமத் இல்லாமல் ஒரு விநாடி அல்லது ஒரு பைசாவைக் கூடப் பயன்படுத்த முடியாது. அனைத்தும் பரமாத்மாவுடையதாக ஆகி

விட்டதென்றால் ஆத்மாக்கள் தங்களுக்காக அல்லது ஆத்மாக்களுக்காகப் பயன்படுத்த முடியாது. கட்டளைப்படி பயன்படுத்த முடியும். இல்லையென்றால் உங்களை நம்பி ஒப்படைக்கப் பட்ட பொருளைக் கையாடல் செய்ததாக ஆகும் இல்லையா? கொஞ்சம் பணத்தைக் கூட கட்டளைக்குப் புறம்பாக எங்காவது காரியத்தில் ஈடுபடுத்தினால் அந்தப் பணம் உங்களையும் அந்தப் பக்கம் ஈர்த்து விடும். பணம், மனதை ஈர்த்து விடும். மேலும் மனம், உடலைக் கவர்ந்திழுக்கும் மற்றும் மனக்கவலையை உண்டாக்கும். ஆக, வில் செய்து விட்டீர்கள் இல்லையா? கட்டளைப் பிரமாணம் செய்கிறீர்கள் என்றால் எந்த ஒரு பாவமும் இல்லை. எந்த ஒரு சுமையும் இல்லை. அதை நீங்கள் தாராளமாகச் செய்யலாம். கட்டளையையோ புரிந்து கொண்டீர்கள் இல்லையா? அனைத்துக் கட்டளைகளும் கிடைத்து விட்டன. தெளிவாகிறது இல்லையா? ஒரு போதும் குழப்பமடையவில்லையே? இந்தக் காரியத்தில் இதைச் செய்யலாமா, வேண்டாமா என்று குழம்ப வில்லையே? எங்காவது கொஞ்சம் குழப்பம் இருக்குமாயின் நிமித்தமாகி இருப்பவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள் அல்லது பிறகு சுயஸ்திதி சக்திசாலியாக இருக்குமானால் அமிர்தவேளையின் டச்சிங் சதா யதார்த்தமாக இருக்கும். அமிர்தவேளையில் மனதின் உணர்வுகளைக் கலப்படம் செய்து கொண்டு அமர வேண்டாம் ஆனால் தெளிவான (ஒளிவு மறைவற்ற) புத்தியுடன் அமருங்கள். பிறகு டச்சிங் யதார்த்தமாக இருக்கும்.

அநேகக் குழந்தைகள் ஏதாவது பிரச்சினை வந்தால் தங்களின் மனதின் உணர்வுகளை நிரப்பிக் கொண்டு அமர்ந்து விடுகின்றனர். செய்ய வேண்டியதோ இது தான், நடக்க வேண்டியதோ இது தான், எனது சிந்தனையில் இது சரி தான் இது போன்ற சிந்தனை இருந்தால் டச்சிங் சரியாக இருக்காது. தன்னுடைய மனதின் சங்கல்பங்களுக்கு பதிலளிக்கும் வகையில் செயலில் வருகின்றனர். ஆகவே எங்காவது வெற்றி கிடைக்காமல் போகிறது. பிறகு குழப்பமடைகின்றனர், அமிர்தவேளையில் இந்தக் கட்டளை தான் கிடைத்தது. பிறகு ஏன் இப்படி ஆயிற்று, வெற்றி ஏன் கிடைக்கவில்லை, தெரியவில்லையே! ஆனால் மனதின் உணர்வைக் கலப்படம் செய்தீர்கள், அந்த உணர்வுக்கான பலன் தான் கிடைக்கிறது. மனதின் வழிப்படி நடப்பதால் பலன் என்ன கிடைக்கும்? குழம்புவீர்கள் இல்லையா? இதைத் தான் தனது மனதின்

சங்கல்பத்தையும் கூட வில் செய்வது எனச் சொல்வது. எனது சங்கல்பம் இப்படிச் சொல்கிறது, ஆனால் பாபா என்ன சொல்கிறார்? நல்லது.

**டீச்சர்களுடன்**: பாப்தாதாவுக்கு டீச்சர்களிடம் விசேட அன்பு உள்ளது. ஏனென்றால் பாபாவுக்கு சமமானவர்கள். பாபாவும் டீச்சர் மற்றும் நீங்கள் மாஸ்டர் டீச்சர். அதிலும் சமமானவர்கள் அன்பானவராக இருப்பார்கள். மிகவும் நல்ல ஊக்கம் உற்சாகத்துடன் சேவையில் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் சக்கரவர்த்திகள். சுற்றி வந்து அநேக ஆத்மாக்களின் சம்மந்தத்தில் வந்து, அநேக ஆத்மாக்களை சமீபத்தில் கொண்டு வருவதற்கான காரியத்தைச் செய்து கொண்டிருகக்றீர்கள். பாப்தாதா குஷியடைகிறார். பாப்தாதா நம் மீது குஷியாக உள்ளார் என்று தோன்றுகிறதா அல்லது இன்னும் கொஞ்சம் குஷிப் படுத்த வேண்டும் என நினைக்கிறீர்களா? குஷியாக உள்ளார், இன்னும் கூடக் குஷிப் படுத்த வேண்டும். நன்கு முயற்சி செய்கிறீர்கள். முயற்சியை அன்போடு செய்கிறீர்கள். அதனால் கஷ்டமாகத் தோன்றவில்லை. பாப்தாதா சேவாதாரிக் குழந்தைகளை எப்போதுமே தலையின் கிரீடம் என்றே சொல்கிறார். தலைக்கிரீடமாக இருக்கிறீர்கள். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம்லிஉற்சாகத்தைப் பார்த்து இன்னும் ஊக்கம்லிஉற்சாகத்தை அதிகப் படுத்துவதற்கான சகயோகம் கொடுக்கிறார். ஓரடி குழந்தைகள் எடுத்து வைத்தால் பல மடங்கு பாபா அடியெடுத்து வைப்பார். எங்கே தைரியம் உள்ளதோ, அங்கே உற்சாகத்தின் பிராப்தி இயல்பாகவே இருக்கிறது. தைரியம் இருந்தால் பாபாவின் உதவி உள்ளது. ஆகவே நீங்கள் கவலையற்ற மகாராஜாக்கள். சேவை செய்து கொண்டே செல்லுங்கள். வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லது.

**வரதானம்: சர்வ சம்மந்தங்களையும் ஒரு தந்தையுடன் இணைத்து மாயாவுக்கு விடை கொடுக்கக் கூடிய சகஜயோகி ஆகுக!**

எங்கே சம்மந்தம் உள்ளதோ, அங்கே நினைவு தானாகவே சுலபமாகி விடும். அனைத்து உறவினராக (சர்வ சம்மந்தியாக) ஒரு தந்தையை ஆக்கிக் கொள்வது தான் சகஜயோகி ஆவதாகும். சகஜயோகி ஆவதன் மூலம் மாயாவுக்கு சகஜமாக விடை கிடைத்து விடுகின்றது. எப்போது மாயா விடை பெற்றுக் கொள்கிறதோ, அப்போது பாபாவின் வாழ்த்துகள்

மிகவும் முன்னேற்றத்தில் செல்ல வைக்கின்றன. யார் ஒவ்வோர் அடியிலும் பரமாத்ம ஆசிர்வாதங்கள், பிராமணப் பரிவாரத்தின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டே இருக்கின்றனரோ, அவர்கள் சகஜமாகப் பறந்து கொண்டே இருப்பார்கள்.

**சுலோகன்: சதா பிஸியாக இருக்கக் கூடிய பிஸினெஸ்மேன் ஆவீர்களானால் ஒவ்வோர் அடியிலும் பல கோடி மடங்கு வருமானம் கிடைக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 22.01.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பெயர் பெற்ற சேவாதாரி ஆவதற்கான விதி!

இன்று பாப்தாதா சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தன்னுடைய தீபங்களின் தீபமாலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி ஒவ்வொரு சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தீபம் ஆடாது தடையின்றி தன்னுடைய ஜோதி மூலம் உலகிற்கு வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம். இந்த தீபங்களின் வெளிச்சம் ஆத்மாக்களை எழுப்புவதற்கான வெளிச்சம். உலகின் அனைத்து ஆத்மாக்களின் எதிரில் அஞ்ஞானத்தின் மதில்சுவர் இருக்கிறது. அதை அகற்றுவதற்காக எப்படி அவர்களே விழித்தெழுந்து மேலும் மற்றவர்களையும் எழுப்பி கொண்டிருக்கிறார்கள், இருளின் காரணமாக அனேக விதமாக தட்டுதடுமாறிக் கொண்டிருப்பவர்கள். பிரகாசித்துக் கொண்டிருக்கும் தீபங்கள் உங்கள் பக்கம் மிகவும் அன்போடு வெளிச்சத்தின் இச்சையுடன், தேவையுடன் பார்க்கிறார்கள். அந்த மாதிரி இருளில் அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஞானத்தின் வெளிச்சம் கொடுங்கள். அதனால் ஒவ்வொரு வீட்டிலும் தீபம் எரிந்து விட வேண்டும் (மின்சாரம் தடைபட்டது). இப்பொழுது கூட பாருங்கள். இருள் நன்றாக இருக்கிறதா? வெளிச்சம் பிரியமானதாக இருக்கிறது தான் இல்லையா? எனவே அந்த மாதிரி தந்தையுடன் தொடர்பை இணைத்து விடுங்கள். தொடர்பை இணைப்பதற்கான ஞானம் சொல்லுங்கள்.

இப்பொழுது இரட்டை வெளிநாட்டினர் புத்துணர்வு அடைந்து, அதாவது சக்திசாலி ஆகி, லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி, ஞானம் நிறைந்தவர் ஆகி, சக்தி நிறைந்தவர் ஆகி வெற்றி நிறைந்தவர் ஆகி மீண்டும் வருவதற்காக அவரவர்களுடைய சேவை நிலையங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். செல்வது என்றால், வெற்றி சொரூபத்தின் பங்கை செய்து ஒருவரிலிருந்து அனேகர்களாக ஆகி வருவது. தன்னுடைய குடும்பத்தின் மற்ற ஆத்மாக்களை தந்தையின் வீட்டிற்கு அழைத்து

வருவதற்காகச் செல்கிறீர்கள். எப்படி எல்லைக்குட்பட்ட யுத்தம் செய்யும் போர் வீரர்கள் உடல் பலம், அறிவியல் பலம் உள்ள போர் வீரர்கள் அனைத்து ஆயுதங்களினால் அலங்கரிக்கப்பட்டு யுத்த மைதானத்திற்கு வெற்றி பதக்கத்தைப் பெறுவதற்காகச் செல்கிறார்கள். அதே போன்று நீங்கள் அனைத்து ஆன்மீக போர் வீரர்கள் சேவையின் மைதானத்தில் வெற்றிக் கொடியை பறக்க விடுவதற்காகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். எந்த அளவு வெற்றியாளர் ஆகிறீர்களோ அந்த அளவு தந்தை மூலமாக அன்பு, சகயோகம், நெருக்கம், சம்பூர்ண நிலையின் வெற்றிப் பதக்கத்தைப் பெறுகிறீர்கள். எனவே இதுவரை எனக்கு எத்தனை பதக்கங்கள் கிடைத்திருக்கின்றன என்று சோதனை செய்யுங்கள். என்னென்ன விசேஷங்கள் இருக்கின்றன மற்றும் பட்டங்கள் கொடுக்கிறோம் மற்றும் எத்தனை பதக்கங்களை பிராப்தி செய்திருக்கிறோம். இப்பொழுதோ மிகக் குறைந்தவர்கள் தான் உருவாகியிருக்கிறார்கள். குறைந்ததிலும் குறைந்தது 108-வது இருக்க வேண்டும் இல்லையா? மேலும் தன்னுடைய இத்தனை பதக்கங்களைப் பார்த்து போதையில் இருங்கள். எத்தனை பதக்கங்களினால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறீர்கள். செல்கிறீர்கள் என்றால் எப்பொழுதும் விசேஷத்தின் காரியம் செய்து புதியதிலும் புதிய பதக்கங்களைப் பெற்றுச் செல்லுங்கள். எப்படி செயலோ அப்படி பதக்கம் கிடைக்கிறது. இவ்வருடம் சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஏதாவது ஒரு விசேஷத்தின் ஏதாவது புதுமையான விசேஷ காரியம் செய்ய வேண்டும் என்ற லட்சியம் வைக்க வேண்டும். இது இதுவரையிலும் நாடகத்தில் மறைந்திருக்கிறது, நிரம்பியும் இருக்கிறது. இந்தக் காரியத்தை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்த) செய்ய வேண்டும். எப்படி உலகியல் காரியத்தில் யாராவது ஏதாவது விசேஷ காரியம் செய்கிறார் என்றால் பெயர் பெற்றவராக ஆகி விடுகிறார். நாலாபுறங்களிலும் விசேஷத்தின் கூடவே விசேஷ ஆத்மாவின் பெயர் கிடைத்து விடுகிறது. அந்த மாதிரி நானும் விசேஷ காரியம் செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். வெற்றிப் பதக்கத்தைப் பெற வேண்டும். பிராமண பரிவாரத்தின் இடையில் விசேஷ சேவாதாரிகளின் பட்டியலில் பெயர் பெற்றவர் ஆக வேண்டும். ஆன்மீக போதையில் இருக்க வேண்டும். பெயர் கிடைத்ததின் போதையில் இருக்கக்கூடாது. ஆன்மீக சேவையின் போதையில்

கருவியாக மற்றும் பணிவாக இருந்ததின் சான்றிதழையும் சேர்த்து பெயர் பெற்றவர் ஆக வேண்டும்.

இன்று இரட்டை வெளிநாட்டினரின் குரூப்பிற்கு வெற்றியாளர் ஆகி, வெற்றி ஸ்தானத்திற்குச் செல்வதற் கான பாராட்டு விழா. யாராவது வெற்றி ஸ்தலத்திற்குச் செல்கிறார் என்றால் மிகவும் கோலாகலமாக குஷியின் மேளதாளங்களோடு வெற்றித் திலகமிட்டு பாராட்டுக்களை கொண்டாடுவார்கள். விடை கொடுப்பதில்லை, ஆனால் பாராட்டுக்கள் கொடுப்பார்கள். ஏனென்றால் பாப்தாதா மற்றும் பரிவாரத்தினர் அந்த மாதிரி சேவாதாரி களின் வெற்றி நிச்சயிக்கப்பட்டது என்று தெரிந்திருக்கிறார்கள். எனவே பாராட்டுதல் விழாவை கொண்டாடு கிறோம். வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது தான் இல்லையா? ஒரு கருவியாகி மட்டும் மீண்டும் அதையே செய்ய வேண்டும். ஏனென்றால், செய்வதினால் கருவியாகி செய்வீர்கள், மேலும் அடைவீர்கள். என்னென்ன காரியங்கள் செய்வீர்களோ அது நிச்சயம் பிரத்யக்ஷ பலனைக் கொடுக்கும். மற்றவர்களை அதிகாரியாக ஆக்கி அழைத்து வருவதற்காக இந்த நிச்சயத்தின் ஊக்கம் உற்சாகத்துடன் சென்று கொண்டிருக்கிறீர்கள். பாண்டவர்கள் முன்னுக்கு செல்கிறார்களா அல்லது சக்திகள் முன்னுக்கு செல்கிறார்களா என்று இப்பொழுது பார்ப்போம். விசேஷமாக யார் புதிய காரியம் செய்கிறார்களோ அவர்களுக்கு பதக்கம் கிடைக்கும். அந்த மாதிரி விசேஷ சேவைக்குப் பொறுப்பான ஆத்மாக்கள் யாரையாவது உருவாக்குங்கள். சேவை ஸ்தானத்தை மற்றும் வளர்ச்சியை பிராப்தி செய்வியுங்கள். நாலாபுறங்களிலும் பெயரை பரப்புவதற்கான ஏதாவது விசேஷ காரியம் வேண்டுமென்றாலும் செய்து காண்பியுங்கள். அந்த மாதிரி பெரிய குரூப்பை தயார் செய்து பாப்தாதாவின் எதிரில் கொண்டு வாருங்கள். ஏதேனும் விசேஷ சேவை செய்யக்கூடியவர்களுக்கு வெற்றியின் பதக்கம் கிடைக்கும். அந்த மாதிரி விசேஷ காரியம் செய்பவர்களுக்கு அனைத்து சகயோகமும் கிடைத்து விடும். அவர்களே ஏதாவது பயணச்சீட்டையும் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். தொடக்கக் காலத்தில் எப்பொழுது நீங்கள் அனைவரும் சேவைக்காக வெளி இடங்களுக்குச் சென்றீர்களோ அப்பொழுது சேவை செய்து முதல் வகுப்பில் பயணம் செய்தீர்கள். மேலும் இப்பொழுது பயணச்சீட்டும் வாங்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் இரண்டாவது, மூன்றாவது வகுப்பில் வருகிறீர்கள். அந்த மாதிரி ஏதாவது

கம்பெனியின் சேவை செய்யுங்கள். பிறகு அனைத்தும் நடந்தேறி விடும். சேவாதாரிக்கு சாதனமும் கிடைத்து விடும். புரிந்ததா? அனைவரும் திருப்தியாகி வெற்றியாளராகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஏதாவது பலஹீனத்தை தன்னுடன் எடுத்துச் சென்று கொண்டிருக்கவில்லையே! பலஹீனங்களை ஸ்வாஹா (அர்ப்பணித்து) செய்து சக்திசாலியான ஆத்மா ஆகி, சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஏதாவது பலஹீனம் தங்கிப் போய் விடவில்லையே? ஒருவேளை ஏதாவது இருந்து விட்டது என்றால், அதற்காக விசேஷ நேரம் எடுத்து அழித்து விட்டுச் செல்லுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் உறுதியான, சுடர்விட்டுக் கொண்டிருக்கும் தீபம், எப்பொழுதும் ஞான வெளிச்சத்தின் மூலம் இருளை அகற்றக்கூடிய, ஒவ்வொரு நேரமும் சேவையின் விசேஷத்தில் விசேஷ பங்கை செய்யக்கூடிய, தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் அனைத்து பதக்கங்களையும் அணிந்திருக்கும், எப்பொழுதும் வெற்றி நிச்சயிக்கப்பட்டது என்ற நிச்சயத்தில் இருக்கக்கூடிய அழியாத வெற்றியின் திலகமிட்டிருக்கும், எப்பொழுதும் அனைத்து பிராப்திகளினால் நிரம்பிய திருப்தியான ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**ஜெகதீஷ் சகோதரருடன் சந்திப்பு:** பாப்தாதாவின் சாகார பாலனையில் வளர்ந்திருக்கும் இரத்தினங்களுக்கு மதிப்பு இருக்கிறது. எப்படி உலகீய முறையிலும் கூட மரத்திலேயே பழுத்திருக்கும் பழம் எவ்வளவு நன்றாக இருக்கும். அந்த மாதிரி அனுபவி ஆத்மாக்கள் உங்களை அனைவரும் எவ்வளவு அன்போடு பார்க்கிறார்கள். முதல் சந்திப்பிலேயே வரதானத்தைப் பெற்று விட்டீர்கள் இல்லையா? பாலனை என்றால் வளர்ப்பே வரதானங்களினால் ஆனது இல்லையா? எனவே எப்பொழுதும் பாலனையின் அனுபவம் மூலம் அனேக ஆத்மாக்களை பாலனை செய்து அவர்கள் முன்னேறிச் செல்வதற்காக தூண்டுதல் செய்து கொண்டே இருப்பார்கள். கடலின் விதவிதமான சம்மந்தங்களின் அலைகளில், அனுபவங்களின் அலைகளில் மிதந்து கொண்டே இருப்பார்கள். சேவையின் தொடக்கக் காலத்தில் சிக்கனமாக இருந்த காலம் பொறுப்பாக ஆனது. சிக்கனமான காலம் பொறுப்பாக ஆனதின் காரணத்தினால் சேவையின் பலன் எப்பொழுதும் உயர்ந்ததாக இருந்தது.

நேரத்திற்கு ஏற்றபடி சகயோகி ஆனீர்கள். எனவே வரதானம் கிடைத்தது. நல்லது.

**மகாநாட்டிற்காக பாப்தாதாவின் மகாவாக்கியங்கள்:** அனைவரும் ஒன்றாகக் கூடி ஏதாவது ஒரு காரியத்தை ஊக்கம் உற்சாகத்துடன் செய்கிறீர்கள் என்றால், அதில் வெற்றி சுலபமாக கிடைத்து விடுகிறது. அனைவரின் ஊக்கத்தினால் காரியம் நடந்து கொண்டிருக்கிறது இல்லையா? எனவே அவசியம் வெற்றி கிடைக்கும். அனைவரையும் ஒன்றாகச் சேர்ப்பது என்பதும் ஒரு உயர்ந்த நிலையின் அடையாளம். அனைவரும் ஒன்றாகக் கூடியதினால் மற்ற ஆத்மாக்களும் சந்திப்பதற்காக அருகில் வருகிறார்கள். உள்ளத்தின் எண்ணத்தை இணைப்பது என்றால் அனேக ஆத்மாக்களின் இணைப்பைக் கொண்டாடுவது. இந்த இலட்சியத்தை நோக்கி செய்து கொண்டிருக்கிறீர்கள், மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள். நல்லது. - வெளிநாட்டினர் அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா? திருப்தியாக இருக்கிறீர்களா? இப்பொழுது அனைவரும் பெரியவர்கள் ஆகி விட்டீர்கள். மற்றவர்களைக் கவனிப்பவர் ஆகி விட்டீர்கள். முதலில் சிறு குழந்தைகளாக இருந்தீர்கள். எனவே குறும்புக் காரியங்கள் செய்தீர்கள், இப்பொழுது மற்றவர்களை கவனிப்பவர்களாக ஆகி விட்டீர்கள். என்னை யாராவது கவனிக்க வேண்டும் என்ற நிலை இப்பொழுது இல்லை. இப்பொழுது மற்றவர்களின் உழைப்பை பெறுபவர்களாக இல்லை, தன்னுடைய உழைப்பை மற்றவர்களுக்குக் கொடுப்பவர்களாக ஆகி விட்டீர்கள். புகார் செய்பவர்களாக இன்றி முழுமையானவர்களாக இருக்கிறீர்கள். இப்பொழுதும் ஏதும் எந்த புகாரும் இல்லை, மேலும் வரும் காலத்திலும் இராது, அந்த மாதிரி தான் இல்லையா? எப்பொழுதும் குஷி நிறைந்த செய்தியைக் கொடுங்கள். மேலும் யாரெல்லாம் வரவில்லையோ அவர்களையும் மாயாவை வென்றவர் ஆக்க வேண்டும். பிறகு அதிக கடிதம் எழுத வேண்டியதாக இருக்காது. ஓ.கே. என்று மட்டும் தான் எழுத வேண்டும். நல்ல நல்ல விஷயங்களை வேண்டுமென்றால் எழுதுங்கள் ஆனால் சுருக்கமாக. நல்லது.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** பாப்தாதாவிற்கு டீச்சர்கள் மேல் விசேஷ அன்பு இருக்கிறது. ஏனென்றால் சமமானவர்கள். தந்தையும் டீச்சர் மற்றும் நீங்கள் மாஸ்டர் டீச்சர். பொதுவாகவே சமமானவர்கள் பிரியமானவர்

களாக இருப்பார்கள். மிக நல்ல ஊக்கம் உற்சாகத்தோடு சேவையில் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். அனைவரும் சக்கரவர்த்திகள், சக்கரமாக சுற்றி வந்து அனேக ஆத்மாக்களின் சம்மந்தத்தில் வந்து, அனேக ஆத்மாக்களை அருகில் கொண்டு வருவதற்கான காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இதற்காக பாப்தாதா குஷி அடைகிறார். பாப்தாதா என் மேல் குஷியாக இருக்கிறார் என்று உணருகிறீர்கள் தான் இல்லையா அல்லது இன்னும் கொஞ்சம் குஷிப் படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களா? குஷியாக இருக்கிறார், இன்னும் குஷி படுத்த வேண்டும். நன்றாக உழைக்கிறீர்கள், அன்போடு உழைக்கிறீர்கள் என்பதினால் அந்த உழைப்பு, உழைப்பாகப் படவில்லை. சேவை செய்யும் குழந்தைகளை எப்பொழுதுமே பாப்தாதா தலையின் கிரீடம் என்று கூறுகிறார். நீங்கள் தலையின் கிரீடம் ஆவீர்கள். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து இன்னும் மேலும் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பதற்கான சகயோகம் கொடுக்கிறார். ஒரு அடி குழந்தைகளினுடையது மற்றும் ஆயிரம் அடி தந்தையினுடையது. எங்கு தைரியம் இருக்கிறதோ அங்கு உற்சாகத்தின் பிராப்தி இயல்பாகவே இருக்கிறது. தைரியம் இருக்கிறது என்றால் தந்தையின் உதவி இருக்கிறது. எனவே நீங்கள் கவலையற்ற மகாராஜாவாக இருக்கிறீர்கள். சேவை செய்து கொண்டே இருங்கள், வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லது.

**வரதானம்: தன்னுடைய ஒவ்வொரு காரியம் மூலமாக தெய்வீகத் தன்மையை அனுபவம் செய்விக்கக்கூடிய தெய்வீக வாழ்க்கை உள்ளவர் ஆகுக!**

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தெய்வீக வாழ்க்கை அதாவது தெய்வீக எண்ணம், தெய்வீக பேச்சு, தெய்வீக காரியம் செய்யும் தெய்வீக மூர்த்திகளாக ஆக்கியிருக்கிறார். தெய்வீகத்தன்மை சங்கமயுக பிராமணர்களின் சிரேஷ்ட அலங்காரம் தெய்வீக வாழ்க்கை உள்ள ஆத்மா எந்தவொரு ஆத்மாவிற்கும் தன்னுடைய ஒவ்வொரு காரியம் மூலமாக சாதாரணத் தன்மையிலிருந்து விலகி தெய்வீகத் தன்மையின் அனுபவத்தை செய்விக்கும். தெய்வீகப் பிறவி எடுத்துள்ள பிராமணன் உடலால் சாதாரணக் காரியத்தையும் மனதால் சாதாரண

எண்ணத்தையும், செய்ய முடியாது. அவர்கள் பணத்தையும் சாதாரண முறையில் காரியத்தில் ஈடுபடுத்த முடியாது.

**சுலோகன்: உள்ளத்தால் என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என்ற இதே பாடலை பாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் முகம் குஷி நிறைந்ததாக இருக்கும்**!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அசாந்திக்கான காரணம் பிராப்தியின்மை மேலும் பிராப்தியின்மைக்கான காரணம் தூய்மையின்மை!

இன்று அன்புக்கடல், அமைதியின் கடல் தந்தை தன்னுடைய அமைதியை விரும்பும், அமைதி சொரூபமான குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். முழு உலகத்திலுள்ள ஆத்மாக்களின் ஒரே ஒரு ஆசை அமைதி மற்றும் உண்மையான அன்பு என்பதைப் பார்த்து அனைத்து குழந்தைகளின் இந்த ஆசையை நிறைவேற்றுவதற்காக எளிய விதியைக் கூறுவதற்காக குழந்தைகளிடம் பாப்தாதா வந்து சேர்ந்து விட்டார். நீண்ட காலமாக பற்பல ரூபங்களில் இதே ஆசையை நிறைவேற்றுவதற்காக குழந்தைகள் என்னென்ன முயற்சி செய்திருந்தார்களோ அதைப் பார்த்து பார்த்து இரக்க மனமுடைய தந்தைக்கு குழந்தைகள் மீது இரக்கம் வருகிறது. வள்ளலின் குழந்தைகளாக இருந்து ஒரு நொடிக்காக, கொஞ்ச நேரத்திற்காக அமைதி கொடுத்து விடுங்கள் என்று கேட்கிறார்கள். அதிகாரி குழந்தைகள் பிச்சைக்காரர்களாகி அமைதி மற்றும் அன்புக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அலைந்து அலைந்து சில குழந்தைகள் மனமுடைந்தவர்களாக ஆகி விட்டார்கள். உலகத்தில் அழியாத அமைதி ஏற்பட முடியுமா? அனைத்து ஆத்மாக்களிடமும் சுயநலமற்ற உண்மையான அன்பு இருக்க முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

குழந்தைகளின் இதே கேள்விக்குப் பதில் கொடுப்பதற்காக தந்தை அவரே வரவேண்டியதாக ஆனது. பாப்தாதா குழந்தைகளுக்கு என்னுடைய குழந்தைகள் நீங்களே நேற்று அமைதி மற்றும் சுகம் நிறைந்த உலகத்தின் அதிபதிகளாக இருந்தீர்கள் என்ற இதே குஷியான செய்தியைக் கூறுவதற்காக வந்திருக்கிறார். அனைத்து ஆத்மாக்களும்

உண்மையான அன்பு என்ற கயிறில் கட்டப்பட்டிருந்தனர். அமைதி மற்றும் அன்போ உங்களுடைய வாழ்க்கையின் விசேஷமாக இருந்தது. அன்பான உலகம், சுகமான உலகம், பந்தனமற்ற வாழ்க்கை உள்ள உலகம் அந்த மாதிரி உலகம் வேண்டும் என்று ஆசை வைத்திருந்தீர்கள். அந்த மாதிரி இருக்க வேண்டும் என்று யோசிக்கிறீர்கள், அந்த உலகத்தின் அதிபதியாக நேற்று இருந்தீர்கள். இன்று அந்த உலகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். பிறகு நாளை அதே உலகத்தில் இருப்பீர்கள். நாளையின் விஷயம் மட்டும் தான். இதே உங்களுடைய பூமி நாளை சொர்க்க பூமியாக இருக்கும், என்ன இதை மறந்து விட்டீர்களா? தன்னுடைய இராஜ்யம் சுகம் நிறைந்த இராஜ்யம், அங்கு துக்கம் அசாந்தியின் பெயர் அடையாளம் இல்லை, பிராப்தியின்மை ஒன்றும் இல்லை. பிராப்தியின்மை தான் அமைதியின்மைக்கான காரணம். மேலும் பிராப்தி யின்மைக்கான காரணம் தூய்மையின்மை. அப்படியானால் எங்கு தூய்மையின்மை இல்லையோ, பிராப்தி யின்மை இல்லையோ அங்கு என்ன இருக்கும்? என்ன விரும்புகிறீர்களோ, எந்த திட்டத்தை யோசிக்கிறீர்களோ அது நடைமுறையில் இருக்கும். அது நாடகத்தில் மிகவும் உறுதியாக இருக்கிறது. இதை யாரும் மாற்ற முடியாது. ஏற்கனவே உருவாக்கப்பட்டு நடந்து மீண்டும் உருவாகிறது. தந்தை மூலமாக புது படைப்பு ஆகியே விட்டது, நீங்கள் அனைவரும் யார். புது படைப்பின் அஸ்திவார கல் நீங்கள். உங்களை அந்த மாதிரி அஸ்திவார கல் என்று நினைக்கிறீர்கள். அதனால் தான் இங்கு வந்திருக்கிறீர்கள் இல்லையா? பிராமண ஆத்மா என்றால் புது உலகத்தின் ஆதார மூர்த்தி. அந்த மாதிரி ஆதார மூர்த்தி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். பாப்தாதாவும் ஆஹா என்னுடைய செல்லமான, மீண்டும் கண்டெடுக்கப்பட்ட இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! என்ற பாடலைப் பாடுகிறார். நீங்களும் பாடல் பாடுகிறீர்கள் இல்லையா? நீங்களே தான் என்னுடையவர் என்று கூறுகிறீர்கள். மேலும் நீங்களே தான் என்னுடையவர் என்று தந்தையும் கூறுகிறார். குழந்தைப் பருவத்தில் இந்தப் பாடலை அதிகம் பாடினீர்கள் இல்லையா (இரண்டு மூன்று சகோதரிகள் இந்தப் பாடலை பாடினார்கள், மேலும் பாப்தாதாவும் அதற்கு பதில் கூறிக் கொண்டிருந்தார்)

வாயின் ஓசை எப்படியிருந்தாலும் சரி. பாப்தாதாவோ இதயத்தின் ஓசையைக் கேட்கிறார். தந்தை பாடலை தயாரித்தார் மேலும் குழந்தைகள்

பாடினார்கள். நல்லது. (சில சகோதர சகோதரிகள் கீழே ஹாலில் மற்றும் ஓம் சாந்தி பவனில் முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், மகாநாட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர்களை பாப்தாதா மெடிடேஷன் ஹாலில் சந்தித்துக் கொண்டிருக்கிறார்). கீழேயும் அதிக குழந்தைகள் அமர்ந்திருக்கிறார்கள். அன்பு நிறைந்த முகங்கள் மற்றும் இனிமையான முறையீடுகளையும் பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் உள்ளப்பூர்வமாக, உயிருக்குயிராக, மிகவும் அன்புடன் உலக சேவையின் பங்கை செய்தார்கள். அனைவரின் முழு ஈடுபாட்டிற்காக பாப்தாதா அனைவரையும் அன்பு என்ற ஊஞ்சலில் ஆட்டிக் கொண்டே வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். நீடூழி வாழுங்கள்! வளர்ந்து கொண்டே இருங்கள், பறந்து கொண்டே இருங்கள், எப்பொழுதும் வெற்றி அடையுங்கள். அனைவரின் அன்பின் சகயோகம் உலக காரியத்தை வெற்றி அடையச் செய்தது. ஒருவேளை ஒவ்வொரு குழந்தையின் அன்பு நிறைந்த உழைப்பைப் பார்த்தோம் என்றால், பாப்தாதா இரவு பகலாக வர்ணனை செய்து கொண்டே இருந்தாலும் கூட குறைவானதாகத் தான் இருக்கும். எப்படி தந்தையின் மகிமை அளவற்றதோ அதே போன்று தந்தையின் சேவாதாரி குழந்தைகளின் மகிமையும் அளவற்றது. நாம் உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கு சாந்தியின் செய்தியை அவசியம் கொடுக்க வேண்டும் என்பதின் ஒரே ஈடுபாடு, ஒரே ஊக்கம், ஒரே திட எண்ணத்தின் முழு ஈடுபாட்டை பிரத்யக்ஷ ரூபத்தில் வெற்றி அடைந்ததை பார்த்தோம். மேலும் எப்பொழுதுமே இருக்கும். தூரத்தில் இருப்பவர்கள் கூட அருகில் தான் இருக்கிறார்கள். கீழே அமர்ந்து கொண்டிருக்கவில்லை, ஆனால் பாப்தாதாவின் கண்களில் இருக்கிறார்கள். சிலர் பஸ்ஸில், சிலர் ரயி-ல் சென்று கொண்டிருக்கிறார்கள், ஆனால் அனைவரும் தந்தைக்கு நினைவிருக்கிறார்கள். அவருடைய மனதின் எண்ணமும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. நல்லது.

தந்தையின் வீட்டில் விருந்தினராக இல்லை, ஆனால் மகான் ஆத்மா ஆகுபவர்கள் வந்திருக்கிறார்கள். பாப்தாதாவோ அனைவரையும் ஐ.பி அல்லது வி.ஐ.பி என்று பார்ப்பதில்லை, ஆனால் மீண்டும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் என்றே பார்க்கிறார். வி.ஐ.பி- யோ வருவார்கள் மேலும் கொஞ்ச நேரம் பார்த்து கேட்டு விட்டு சென்று விடுவார்கள் ஆனால் குழந்தைகள் எப்பொழுதும் இதயத்தில்

இருக்கிறார்கள். அவர்கள் எங்கு சென்றாலும், இதயத்திலேயே இருப்பார்கள். தன்னுடைய மற்றும் தந்தையின் வீட்டிற்கு வந்ததற்கு வாழ்த்துக்கள்! அனைத்து குழந்தைகளையும் மதுபன்னின் அதாவது தன்னுடைய வீட்டின் அலங்காரம் என்று பாப்தாதா நினைக்கிறார். குழந்தைகள் வீட்டின் அலங்காரம். நீங்கள் அனைவரும் யார்? அலங்காரம் தான் இல்லையா. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் திட எண்ணம் வைத்திருக்கும் வெற்றியின் நட்சத்திரங்கள், எப்பொழுதும் இதய சிம்மாசனதாரி, எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய, புது படைப்பின் ஆதார மூர்த்தி, உலகிற்கு சதா காலத்திற்காக புதிய ஒளி, புதிய வாழ்க்கை கொடுக்கக்கூடிய, அனைவருக்கும் உண்மையான அன்பின் அனுபவம் செய்விக்கக்கூடிய, அன்பான சகயோகி நிரந்தர துணைவர்களான குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அபு மகாநாட்டிற்கு (சம்மேளனம்) வந்துள்ள விருந்தாளிகளோடு உரையாடல்! 1 - (டாக்டர் ஜோன்ஹா, உதவி பொதுச்செயலாளர், ஐ.நா.):** பாப்தாதா குழந்தைகளின் மனதின் சங்கல்பங்களுக்கு சதா சகயோகம் கொடுத்துப் பூர்த்தி செய்து கொண்டே இருப்பார். உங்களுடைய சங்கல்பங்களை நனவாக்குவதற்காகத் தகுந்த இருப்பிடத்திற்குத் தான் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இவர் நம்முடைய அனைத்து சங்கல்பங்களையும் பூர்த்தி செய்யக் கூடிய துணைவர் எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? சதா நினைவின் மூலம் சாந்தியின் அனுபவத்தைச் செய்து கொண்டே இருப்பீர்கள். மிகவும் இனிய சுகமயமான சாந்தியின் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும். சாந்தியின் மீது பிரியமுள்ள பரிவாரத்தில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அதனால் சேவைக்கு நிமித்தமாக ஆனீர்கள். சேவைக்கு நிமித்தமாக ஆனதற்குப் பிரதிபலனாக எப்போது தந்தையை நினைவு செய்தாலும் சகஜ வெற்றியை அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். தன்னை சதா நான் சாந்தி சொரூப ஆத்மா, சாந்திக்கடலின் குழந்தை, சாந்தியின் மீது அன்பு கொண்ட ஆத்மா” என உணர்ந்து, இதே நினைவில் இருக்க வேண்டும் மற்றும் இந்த அனுபவத்தின் மூலம் யார் தொடர்பில் வந்தாலும் அவர்களுக்கு செய்தி கொடுப்பவராகி, செய்தி கொடுத்துக் கொண்டே

இருக்க வேண்டும். இதே அலௌகிகத் தொழில், சதா சிரேஷ்ட கர்மம் மற்றும் சிரேஷ்ட கர்மத்தின் மூலம் சிரேஷ்ட பிராப்தி செய்வித்துக் கொண்டே இருக்கும். நிகழ்காலம் மற்றும் வருங்காலம் இரண்டுமே சிரேஷ்டமாக இருக்கும். சாந்தியை அனுபவம் செய்யக்கூடிய தகுதியுள்ள ஆத்மா! சதா சாந்திக் கடலின் அலைகளில் ஆடிக் கொண்டே இருக்க வேண்டும்.

எப்போது ஏதாவது காரியத்தில் கஷ்டம் உள்ளதோ, அப்போது சாந்தியின் ஃபரிஸ்தாக்களோடு தனது தொடர்பை வைப்பீர்களானால் கஷ்டம் என்பது சுலபமாகி விடும். பிறகும் கூட நீங்கள் மிகவும் பாக்கியவான் ஆத்மா! இந்த பாக்கியவிதாதாவின் பூமியில் வந்து சேர்பவர் கோடியில் சிலர், அந்தச் சிலரிலும் மிகச் சிலர் தாம் இருப்பார்கள். பாக்கியவானாகவோ ஆகியே விட்டீர்கள். இப்போது பல கோடி மடங்கு பாக்கியவானாக அவசியம் ஆக வேண்டும். அத்தகைய லட்சியம் தான் உள்ளது இல்லையா? நிச்சயமாக ஆவீர்கள் லிலி அதற்காக சாந்தியின் ஃபரிஸ்தாக்களின் துணையை மட்டும் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். விசேˆ ஆத்மாக்கள், விசேˆ பார்ட் நடிப்பவர்கள் இங்கே வந்து சேர்கின்றனர். உங்களுக்கு முன்னாலும் கூட விசேˆ பார்ட் உள்ளது. அது இன்னும் போகப்போகத் தெரிய வந்து கொண்டே இருக்கும். இந்தக் காரியமோ வெற்றி பெற்றே தீரும். யாரெல்லாம் சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்குபவர்களோ, அவர்களின் பாக்கியத்தை உருவாக்குவதற்காக மட்டும் இது சேவையின் சாதனமாகும். இதுவோ நடந்தே தீரும். அநேக தடவைகள் நடந்துள்ளது. உங்கள் சங்கல்பம் மிக நன்றாக உள்ளது. மேலும் யாரெல்லாம் உங்கள் துணையில் உள்ளனரோ, யார் இங்கிருந்து சென்றுள்ளனரோ, சிநேகி, சகயோகிகள். அவர்கள் அனைவர்க்கும் கூட பூக்களோடு கூடவே பாப்தாதாவின் அன்பு நினைவுகளை நீங்கள் தர வேண்டும்.

**2- மேடம் அன்வர் சதாத் உடன் அவ்யக்த பாப்தாதாவின் உரையாடல் - எகிப்துக்காக செய்தி:** தங்களின் தேசத்திற்குச் சென்ற பின் செல்வத்தின் சிக்கனம் பற்றிக் கற்பிக்க வேண்டும். மனதின் குஷியினால் செல்வத்தின் அனுபவம் ஏற்படும். மேலும் செல்வத்தின் சிக்கனம் தான் மனதின் குஷிக்கான ஆதாரமாகும். இது போல் செல்வத்தின் சிக்கனம் மற்றும் மனதின் குஷிக்கான சாதனம் பற்றிச்

சொல்வீர்களானால் அவர்கள் (உங்கள் தேசத்தவர்) உங்களை, செல்வம் மற்றும் மனதின் குஷியைக் கொடுக்கும் குஷியின் ஃபரிஸ்தா என அனுபவம் செய்வார்கள். ஆகவே இப்போது இங்கிருந்து சாந்தி மற்றும் குஷியின் ஃபரிஸ்தா ஆகிச் செல்ல வேண்டும். இந்த சாந்திக் குண்டத்தின் அவிநாசி வரதானத்தை சதா தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும். எப்போதெல்லாம் ஏதேனும் பிரச்சினை முன்னால் வருகிறதோ, அப்போது மேரா பாபா" (என்னுடைய தந்தை) எனச் சொல்வதால் அந்தப் பிரச்சினை சுலபமாகி விடும். சதா எழுந்ததுமே தந்தையோடு இனிமையிலும் இனிமையான ஆன்மிக உரையாடல் செய்ய வேண்டும் மற்றும் பகலிலும் கூட இடையிடையில் தன்னைத் தான் சோதிக்க வேண்டும் லிலி தந்தையின் துணையில் இருக்கிறோமா? மேலும் இரவில் தந்தையின் துணையுடன் தான் தூங்க வேண்டும். அப்போது சதா தந்தையின் துணையை அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். அனைவர்க்கும் தந்தையின் அறிமுகம் கொடுத்துக் கொண்டே இருப்பீர்கள். நீங்கள் அதிக சேவை செய்ய முடியும். ஏனென்றால் அனைவர்க்கும் குஷி கிடைக்கட்டும், சாந்தி கிடைக்கட்டும் என்ற ஆசை உள்ளது. மனதில் என்ன ஆசை உள்ளதோ, அதன் மூலம் என்ன காரியம் செய்கிறீர்களோ, அதில் வெற்றி கிடைக்கவே செய்கிறது. நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கை -விலைமதிக்க முடியாத வாழ்க்கை!

இன்று சதா அன்பில் மூழ்கி இருக்கும் அன்பான குழந்தைகளோடு சந்திப்பைக் கொண்டாடுவதற்காக அன்புக்கடல் வந்துள்ளார். எப்படி அன்போடு பாபாவை நினைவு செய்கின்றனரோ, அது போல் பாபாவும் அன்பான குழந்தைகளுக்குப் பல மடங்கு பிரதிபலனை அளிப்பதற்காக, சாகார சிருஷ்டியில் சந்திப்பதற்காக வந்துள்ளார். பாபா குழந்தைகளைத் தமக்கு சமமாக அசரீரி, நிராகாரமாக ஆக்குகிறார் மற்றும் குழந்தைகள் அன்போடு நிராகாரி மற்றும் ஆகாரி தந்தையரைத் தங்களுக்கு சமமாக சாகாரி ஆக்கி விடுகின்றனர். இது குழந்தைகளுடைய அன்பின் அற்புதம். குழந்தைகளின் அத்தகைய அன்பின் அற்புதத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். குழந்தைகளின் குணங்களின் பாடலைப் பாடுகிறார் -- அதாவது எப்படி சதா பாபாவின் சங்கத்தின் (தொடர்பு) நிறத்தில் பாப்சமான் ஆகிக் கொண்டே செல்கின்றனர் என்று. பாப்தாதா அது போல் தந்தையைப் பின்பற்றக் கூடிய குழந்தைகளை, கீழ்ப்படிதலான, உண்மையுள்ள, கட்டளைப்படி நடக்கிற உண்மையிலும் உண்மையான விலைமதிக்க முடியாத ரத்தினங்கள் எனச் சொல்கிறார். குழந்தைகளாகிய உங்களுக்கு முன்னால் இந்த ஸ்தூல வைரம்-வைடூரியங்கள் கூட மண்ணுக்கு சமமாகும். அவ்வளவு விலைமதிக்க முடியாதவர்கள் நீங்கள்! அது போல் தங்களை அனுபவம் செய்கிறீர்களா, அதாவது நான் பாப்தாதாவின் கழுத்து மாலையின் விலைமதிக்க முடியாத வெற்றி ரத்தினம் என்பதாக? அந்த மாதிரி சுவமான் உள்ளதா?

இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு போதை மற்றும் குஷி உள்ளது -அதாவது நம்மை பாப்தாதா, இவ்வளவு தூரத்தில் இருந்த போதும் தூரதேசத்தில் இருந்து தேர்ந்தெடுத்துத் தம்முடையவர்களாக ஆக்கிக் கொண்டுள்ளார். உலகம் பாபாவைத் தேடிக் கொண்டிருக்கிறது, பாபா

நம்மைத் தேடிக் கண்டெடுத்துள்ளார். அது போல் தன்னை உணர்கிறீர்களா? உலகம் அழைத்துக் கொண்டிருக்கிறது -- வாருங்கள் என்று ஆனால் நீங்கள் அனைவரும் நம்பர்வார் என்ன பாடல் பாடுகிறீர்கள்? உங்களோடு அமர்வோம், உங்களோடு உண்போம், உங்களுடைய துணையில் சதா கூடவே இருப்போம். எங்கே அழைப்பு மற்றும் எங்கே சதா உடன் இருப்பது? இரவு-பகலுக்குள்ள வேறுபாடு ஆகிறது இல்லையா? எங்கே ஒரு விநாடியின் உண்மையான அவிநாசி பிராப்திக்காகத் தவித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் மற்றும் எங்கே பிராப்தி சொரூப ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும்! அவர்கள் மகிமை பாடுகிறவர்கள் மற்றும் நீங்கள் அனைவரும் பாபாவின் மடியில் அமர்பவர்கள். அவர்கள் கதறுபவர்கள் மற்றும் நீங்கள் ஒவ்வொரு அடியிலும் அவரது அறிவுரைப்படி நடப்பவர்கள். அவர்கள் தரிசனத்திற்காகத் தவித்துக் கொண்டிருப்பவர்கள் மற்றும் நீங்கள் தந்தை மூலமாக சுயம் தரிசனத்திற்குரிய மூர்த்தியாக ஆகி விட்டீர்கள். துக்கம்-வேதனையின் அனுபவம் இன்னும் கொஞ்சம் அதிகமாகட்டும். அதன் பிறகு பாருங்கள், உங்களுடைய ஒரு விநாடி தரிசனம், விநாடியின் திருஷ்டிக்காக எவ்வளவு பேர் தவித்துக் கொண்டிருப்பவர்களாகி உங்கள் முன்னால் வருகின்றனர் என்று!

இப்போது நீங்கள் அழைப்புக் கொடுக்கிறீர்கள், அழைக்கிறீர்கள். பிறகு உங்களோடு ஒரு விநாடி சந்திப்பதற்காக அதிக முயற்சி செய்வார்கள் -- எங்களைச் சந்திக்க விடுங்கள் என்று. அது போல் சாட்சாத் சாட்சாத்கார சொரூபம் உங்கள் அனைவருக்கும் உருவாகும். அந்த மாதிரி சமயத்தில் தங்களின் சிரேஷ்ட வாழ்க்கை மற்றும் சிரேஷ்ட பிராப்தியின் மகத்துவத்தைக் குழந்தைகளாகிய உங்களுக்குள்ளும் கூட அந்தச் சமயம் அதிகமாக அறிந்து கொள்வார்கள். இப்போது கவனக்குறைவு மற்றும் சாதாரணத் தன்மையின் காரணத்தால் தங்களின் உயர்வு மற்றும் சிறப்பை மறந்தும் விடுகிறீர்கள் ஆனால் எப்போது பிராப்தியற்ற ஆத்மாக்கள் பிராப்தியின் தாகத்தால் உங்கள் முன்னால் வருகின்றனரோ, அப்போது அதிக அனுபவம் செய்வார்கள், நாம் யார், இவர்கள் யார் என்று. இப்போது பாப்தாதாவிடமிருந்து சகஜமாக மற்றும் அதிக கஜானாக்கள் கிடைப்பதால் அவ்வப்போது தன்னுடைய மற்றும் கஜானாவின் மதிப்பை சாதாரணமாக எண்ணி விடுகிறீர்கள் ஆனால் ஒவ்வொரு மகா வாக்கியம், ஒவ்வொரு விநாடி, பிராமண வாழ்க்கையின் ஒவ்வொரு சுவாசமும்

எவ்வளவு சிரேஷ்டமானது! அதை இன்னும் போகப்போக அதிகம் அனுபவம் செய்வீர்கள். பிராமண வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் ஒரு பிறவியல்ல, ஆனால் பல பிறவிகளின் பிராலப்தத்தை (பலன்) உருவாக்கக் கூடியதாகும். ஒரு விநாடி சென்று விட்டது என்றால் அநேகப் பிறவிகளின் பிராலப்தம் சென்று விட்டது. அத்தகைய விலை மதிக்க முடியாத வாழ்க்கையைக் கொண்ட சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள். அத்தகைய சிரேஷ்ட அதிர்ஷ்டசாலி ஆத்மாக்கள் நீங்கள். நாம் யார் எனப் புரிந்து கொண்டீர்களா? அத்தகைய சிரேஷ்டமான குழந்தைகளோடு பாபா சந்திப்பதற்காக வந்துள்ளார். இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு இது சதா நினைவிருக்கிறது இல்லையா? அல்லது சில நேரம் மறந்து போகிறது, சில நேரம் நினைவிருக்கிறதா? நினைவு சொரூபமாக ஆகி விட்டீர்கள் இல்லையா? யார் சொரூபமாக ஆகி விடுகின்றனரோ, அவர்கள் ஒரு போதும் மறக்க முடியாது. நினைவு செய்பவர்களாக அல்ல, நினைவு சொரூபமாக ஆக வேண்டும். நல்லது.

**போலந்து மற்றும் மற்ற தேசங்களில் இருந்து வந்திருக்கக் கூடிய புதுப்புதுக் குழந்தைகளுடன்:** அனைவரும் தங்களை பாக்கியவான் என உணர்கிறீர்களா? எத்தகைய பாக்கியம்? இந்த சிரேஷ்ட பூமிக்கு (மதுபன்) வருவது தான் அனைத்திலும் பெரிய பாக்கியம்! இந்த பூமி மகான் தீர்த்த பூமி. ஆக, இங்கே வந்து சேர்ந்து விட்டாலே பாக்கியம் தான் ஆனால் இப்போது இனி என்ன செய்யப் போகிறீர்கள்? நினைவில் இருக்க வேண்டும், நினைவின் அப்பியாசத்தை முன்னேற்றத்தில் கொண்டு சென்று கொண்டே இருக்க வேண்டும். எவ்வளவு தான் கற்றுக் கொண்டாலும் அதை முன்னேற்றத்தில் கொண்டு சென்று கொண்டே இருக்க வேண்டும். சதா சம்மந்தத்தில் இருந்து கொண்டே இருப்பீர்களானால் சம்மந்தத்தின் மூலம் மிகுந்த பிராப்தியை அடைந்து கொண்டே இருப்பீர்கள். இன்றைய உலகில் அனைவருக்கும் குஷி மற்றும் சாந்தி இரண்டும் தேவை. ஆக, இரண்டுமே இந்த இராஜயோக அப்பியாசத்தின் மூலம் சதா காலத்துக்கும் பிராப்தியாகி விடும். இந்தப் பிராப்தியை விரும்புகிறீர்கள் என்றால் சகஜ சாதனம் இது தான். இதை விட்டு விடக் கூடாது. கூடவே வைத்துக் கொள்ள வேண்டும். மிகுந்த குஷி கிடைக்கும். குஷியின் சுரங்கமே கிடைத்து விட்டது போலாகும். இதன் மூலம் மற்றவர்களுக்கும் கூட உண்மையான குஷியைப் பகிர்ந்தளிக்க முடியும். மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும், மற்றவர்களுக்கும் இந்த

வழியைச் சொல்ல வேண்டும். உலகத்தில் இத்தனை ஆத்மாக்கள் உள்ளனர் ஆனால் அவர்களிலும் மிகக் குறைவான ஆத்மாக்களே இங்கே வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இதுவும் மிகுந்த அதிர்ஷ்டத்தின் அடையாளமாகும். சாந்தி குண்டத்தில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். சாந்தியோ அனைவருக்கும் அவசியமாக உள்ளது இல்லையா? தானும் சாந்தியாக இருந்து மற்றவர்களுக்கும் சாந்தியைக் கொடுத்துக் கொண்டே இருப்பது தான் மனிதர்களின் விசேசம் ஆகும். சாந்தி இல்லை என்றால் மனித வாழ்க்கை என்பதே என்ன? ஆத்மிக, அவிநாசி சாந்தி. தனக்கும் மற்றும் அநேகருக்கும் கூட உண்மையான சாந்தி கிடைக்கச் செய்வதற்கான வழியை நீங்கள் சொல்ல முடியும். புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள். யாராவது அமைதியற்ற ஆத்மாக்களுக்கு அமைதியைக் கொடுத்து விட்டீர்கள் என்றால் எவ்வளவு பெரிய புண்ணியம்! தான் முதலில் நிரம்பியவராக ஆகுங்கள். பிறகு மற்றவர்களுக்காகவும் புண்ணியாத்மா ஆக முடியும். இதைப் போன்ற புண்ணியம் வேறெதுவும் கிடையாது. துக்கத்திலிருக்கும் ஆத்மாக்களுக்கு சுகம் சாந்தியின் ஜொலிப்பைக் காட்ட முடியும். எங்கே ஈடுபாடு உள்ளதோ, அங்கே மனதின் சங்கல்பம் பூர்த்தியாகி விடும். இப்போது பாபாவிடம் இருந்து என்ன செய்தி கிடைத்துள்ளதோ, அந்த செய்தியைச் சொல்லக் கூடிய சந்தேஷி (தூதுவர்) ஆகிச் சென்று கொண்டே இருங்கள்.

**சேவாதாரிகளுடன்**: சேவையின் லாட்டரியும் கூட சதா காலத்திற்கும் நிரம்பியவராக ஆக்கி விடுகின்றது. சேவையினால் சதா காலத்துக்குமாக கஜானாக்களால் நிரம்பப் பெற்றவர்களாக ஆகி விடுகிறீர்கள். அனைவரும் நம்பர் ஒன் சேவை செய்திருக்கிறீர்கள். அனைவரும் முதல் பரிசு பெறக்கூடியவர்கள் இல்லையா? முதல் பரிசு என்பது திருப்தியாக இருப்பது மற்றும் அனைவரையும் திருப்திப் படுத்துவது. ஆக, என்ன புரிந்து கொள்கிறீர்கள், எத்தனை நாள் சேவை செய்தீர்களோ, அத்தனை நாள் தானும் திருப்தியாக இருந்து மற்றவர்களையும் திருப்திப் படுத்தினீர்களா, அல்லது யாராவது கோபப் பட்டார்களா? திருப்தியாக இருந்தீர்கள் மற்றும் திருப்திப் படுத்தினீர்கள் என்றால் நம்பர் ஒன் ஆகி விட்டீர்கள். ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியாளர் ஆவதென்றால் நம்பர் ஒன் ஆவதாகும். இது தான் வெற்றி. தானும் சஞ்சலமடையக் கூடாது, மற்றவர்களையும் சஞ்சலப் படுத்தக் கூடாது. ஆக, அத்தகைய

சதா காலத்தின் வெற்றி ரத்தினங்கள். வெற்றி என்பது சங்கமயுகத்தின் உரிமை. ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் சர்வசக்திவான் இல்லையா?

உண்மையான சேவாதாரி என்றால் சதா ஆன்மிக திருஷ்டி மூலம், ஆன்மிக விருத்தி மூலம் ஆன்மிக ரோஜாவாகி ஆத்மாக்களைக் குஷிப் படுத்துபவர்கள். ஆக, எவ்வளவு சமயம் சேவை செய்தாலும் ஆன்மிக ரோஜா ஆகி சேவை செய்தீர்களா? இடையில் யாரும் முள்ளாக ஆகி வரவில்லையே? சதா ஆன்மிக ஸ்மிருதியில் இருக்க வேண்டும் மற்றும் ஆன்மிக ரோஜா என்ற ஸ்திதியில் இருக்க வேண்டும். எப்படி இங்கே இந்த அப்பியாசத்தைச் செய்கிறீர்களோ, அது போல் அவரவர் இருப்பிடங்களிலும் இதே போன்ற சிரேஷ்ட ஸ்திதியில் இருக்க வேண்டும். கீழே வரக் கூடாது. எது நடந்தாலும், எத்தகைய வாயுமண்டலமாக இருந்தாலும் சரி, ரோஜா மலர் எப்படி முள்ளோடு இருந்தாலும் சுயம் சதா மணம் தருவதாக உள்ளதோ, அது போல் முட்களின் கூடவே இருந்தாலும் தான் முள்ளாக ஆகக் கூடாது. அத்தகைய ஆன்மிக ரோஜா சதா சூழ்நிலையின் பிரபாவத்தில் இருந்து விலகியவராகவும் அன்பானவராகவும் இருக்க வேண்டும். அங்கே சென்ற பிறகு, என்ன செய்வேன், மாயா வந்து விட்டது என்று அந்த மாதிரி எழுதக் கூடாது. சதா மாயாஜீத் ஆகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? மாயா வருவதற்கான வாய்ப்பைக் கொடுத்து விடக் கூடாது. வாசலை சதா மூடியே வைத்திருக்க வேண்டும். இரட்டைப்பூட்டு -நினைவு மற்றும் சேவை. எங்கே இந்த இரட்டைப் பூட்டு உள்ளதோ, அங்கே மாயா வர முடியாது.

**தாதிஜி மற்றும் பெரிய சகோதரிகளுடன்:** எப்படி பாபா சதா குழந்தைகளின் ஊக்கம்-உற்சாகத்தை அதிகப் படுத்திக் கொண்டே இருக்கிறாரோ, அது போல் தந்தையைப் பின்பற்றக் கூடிய குழந்தைகள். விசேஷமாக டீச்சர்கள் அனைவர்க்கும், தேசத்திலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வந்துள்ள அனைவர்க்கும் பாப்தாதா சேவைக்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். ஒவ்வொருவரும் தங்களின் பெயரோடு கூட பாபாவின் நினைவு மற்றும் அன்பிற்கு உரிமையுள்ளவர் என உணர்ந்து தங்கள் மீது தாங்களே அன்பு கொள்ள வேண்டும். ஒவ்வொருவரின் குணங்களைப் பாடினால் எவ்வளவு பேரின் குணங்களைப் பாடலாம்! அனைவரும் அதிக முயற்சி செய்திருக்கிறீர்கள். முந்தைய வருடத்தைக் காட்டிலும் இப்போது முன்னேற்றத்தை

அடைந்திருக்கிறீர்கள். மேலும் இனி வரும் காலத்திலும் இதைக் காட்டிலும் அதிகமாக சுயம் மற்றும் சேவை மூலம் முன்னேற்றத்தை அடைந்து கொண்டே இருப்பீர்கள். நமக்கு பாப்தாதா சொல்லவில்லை எனப் புரிந்து கொள்ள வேண்டாம், அனைவருக்காகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார். பக்தர்கள் தந்தையின் பெயரைச் சொல்வதற்கு முயற்சி செய்து கொண்டுள்ளனர். தந்தையின் பெயர் வாயில் இருந்து கொண்டிருக்க வேண்டும் என யோசிக்கின்றனர் ஆனால் தந்தையின் வாயில் யாருடைய பெயர் உள்ளது? குழந்தைகள் உங்களுடைய பெயர் தந்தையின் வாயில் உள்ளது. புரிந்ததா? நல்லது.

**இரட்டை வெளிநாட்டின் சகோதர சகோதரிகளின் கேள்விகளுக்கு பாப்தாதாவின் பதில்! கேள்வி: இந்த வருட சேவைக்கான புதிய திட்டம் என்ன?**

பதில்: சமயத்தை சமீபத்தில் கொண்டு வருவதற்காக ஒன்று, விருத்தி மூலம் வாயுமண்டலத்தை சக்திசாலி ஆக்குவதற்கான சேவை செய்ய வேண்டும். இதற்காக தன்னுடைய விருத்தியின் மீது விசேˆ கவனம் கொடுக்க வேண்டும் மற்றும் இரண்டாவது, மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக விசேˆமாக அப்படிப்பட்ட ஆத்மாக் களைக் கொண்டு வாருங்கள், இதன் மூலம் சாந்திக்கான விதி உண்மையிலேயே இங்கிருந்து தான் கிடைக்க முடியும் என அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சாந்தி நிலவுமானால் அது இந்த விதி மூலம் தான் என்ற வார்த்தை அனைவரிடம் இருந்தும் வெளிப்பட வேண்டும். இந்த ஒரு விதி தான் உலகத்திற்கு அவசியமானது - அது இந்த விதி இல்லாமல் இருக்காது. இந்த சூழ்நிலை நாலாபுறமும் சேர்ந்து உருவாக வேண்டும். பாரதத்திலும் சரி, வெளிநாடுகளிலும் சரி, அமைதியின் ஜொலிப்பு பிரசித்த ரூபத்தில் வெளிப்பட வேண்டும். நாலாபுறங்களில் இருந்தும் இது அனைவருக்கும் டச் ஆக வேண்டும், கவர்ச்சியாக வேண்டும், யதார்த்த இருப்பிடமோ இது தான் என்று. எப்படி அரசுகளின் சார்பில் ஐ.நா. சபை உருவாகியுள்ளது என்றால் எப்போதெல்லாம் ஏதேனும் நிகழ்கிறதோ, அப்போது அனைவரின் கவனமும் அந்தப் பக்கம் செல்கிறது. இது போல் எப்போதெல்லாம் ஏதேனும் அசாந்தியின் சூழ்நிலை இருக்கிறதோ, அப்போது அனைவரின் கவனமும் அமைதியின் செய்தியைக் கொடுக்கின்ற இந்த ஆத்மாக்கள் பக்கம் செல்லும். அசாந்தியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான இருப்பிடம் இது ஒன்று

தான், இங்கு தான் அடைக்கலம் பெற முடியும் என அனுபவம் செய்ய வேண்டும். இந்த வருடம் இந்த வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும். ஞானம் நன்றாக உள்ளது, வாழ்க்கை நன்றாக இருக்கிறது, இராஜயோகம் நன்றாக இருக்கிறது – இதை அனைவருமே சொல்கின்றனர் ஆனால் அசல் பிராப்தி இங்கிருந்து தான் கிடைக்க முடியும். உலகத்தின் நன்மை இந்த இருப்பிடம் மற்றும் விதியின் மூலம் தான் கிடைக்க வேண்டும். இந்த பேச்சு பரவ வேண்டும். இதற்காக விசேசமாக சாந்தியைப் பற்றி விளம்பரம் செய்யுங்கள். யாருக்கு அமைதி வேண்டுமோ, இங்கிருந்து அதற்கான விதிமுறை கிடைக்கும். அமைதி வாரம் கொண்டாடுங்கள். அமைதியின் சந்திப்பு வையுங்கள். அமைதியின் அனுபவத்திற்கான முகாம் நடத்துங்கள். இது போல் அமைதியின் அதிர்வலைகளைப் பரப்புங்கள்.

சேவையில் எப்படி மாணவர்களை உருவாக்குகிறீர்கள், அது நல்லது தான்! அது எப்படியாகிலும் விருத்தி யடையத் தான் போகிறது ஆனால் இப்போது ஒவ்வொரு வகையான மக்கள், எப்படி கறுப்பு, வெள்ளை, விதவிதமான தர்மங்களின் ஆத்மாக்கள் உள்ளனர், அது போல் விதவிதமான தொழில்களைக் கொண்டவர்கள் ஒவ்வோர் இருப்பிடத்திலும் இருக்க வேண்டும். சிலர் எங்கே சென்றாலும் ஒவ்வொரு தொழில் செய்பவர்களும் தங்களின் ரீதியில் தங்களுடைய அனுபவங்களைச் சொல்ல வேண்டும். எப்படி இங்கே வொர்க்ஷாப் (கருத்துப் பட்டறை) வைக்கிறீர்கள் -- சில நேரம் டாக்டர்கள், சில நேரம் வக்கீல்கள் என்று விதவிதமான தொழில் செய்பவர்கள் ஒரே சாந்தியின் வி ̂யம் பற்றித் தங்களின் தொழிலின் ஆதாரத்தில் பேசுகின்றனர் என்றால், நன்றாக உள்ளது. அது போல் ஏதாவது சென்டருக்கு வந்தால் ஒவ்வொரு தொழில் செய்பவர்களும் தங்களுடைய சாந்தியின் அனுபவத்தைச் சொல்ல வேண்டும். இதன் பிரபாவம் அனைவருக்கும் ஏற்படும். அனைத்துத் தொழில் செய்பவர்களுக்கும் இது சகஜமான விதியாகும் -இது அனுபவம் ஆக வேண்டும். எப்படி குறைந்த காலத்திற்குள் இந்த விளம்பரம் நன்றாக ஆகி விட்டுள்ளது -அனைத்து தர்மங்களைச் சார்ந்தவர்களுக்கும் இந்த ஒரு விதி தான் என்ற பேச்சு எழ வேண்டும். இதே ரீதியில் இப்போது செய்தியைப் பரப்புங்கள். யார் தொடர்பில் வருகின்றனரோ, அல்லது மாணவர்களாக உள்ளனரோ, அவர்கள் வரையில் இந்த சப்தம் செல்கிறது ஆனால் இப்போது கொஞ்சம்

இன்னும் நாலாபுறமும் பரவச் செய்வதற்கான கவனம் இன்னும் கொஞ்சம் வைக்க வேண்டும். பிராமணர்களும் இப்போது மிகச் சிலரே உருவாகியுள்ளனர். வரிசைக்கிரமமாக பிராமணர் ஆவதற்கான இந்த கதியை வேகமானது எனச் சொல்ல மாட்டார்கள் இல்லையா? இப்போதோ குறைந்தது ஒன்பது லட்சமாவது வேண்டும். குறைந்தது சத்யுகத்தின் ஆரம்பத்தில் ஒன்பது லட்சம் பேருக்கு மேல் தான் இராஜ்யம் செய்வீர்கள் இல்லையா? அதில் பிரஜைகளும் இருப்பார்கள் ஆனால் தொடர்பில் நன்றாக வந்தால் தான் பிரஜை ஆவார்கள். ஆக, இந்தக் கணக்கின்படி வேகம் எப்படி இருக்க வேண்டும்? இப்போதோ எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. இப்போது மொத்த வெளிநாட்டினரின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்? குறைந்தது வெளிநாட்டினரின் எண்ணிக்கை இரண்டு-மூன்று லட்சமாவது இருக்க வேண்டும். முயற்சியோ நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அப்படி எந்த ஒரு விˆயமும் இல்லை ஆனால் இன்னும் கொஞ்சம் அதிக வேகம் இருக்க வேண்டும். பொதுவான சூழ்நிலையினால் வேகம் அதிகரிக்கும். நல்லது.

**கேள்வி: அந்த மாதிரி சக்திசாலி சூழ்நிலையை உருவாக்குவதற்கான யுக்தி என்ன?**

பதில்: சுயம் சக்தி நிறைந்தவராக ஆகுங்கள். அதற்காக அமிர்தவேளையிலிருந்து ஒவ்வொரு கர்மத்திலும் தனது ஸ்டேஜ் சக்திசாலியா இல்லையா என்பதை சோதிப்பதில் கொஞ்சம் விசேˆ கவனம் வையுங்கள். மற்றவர்களின் சேவையில் அல்லது சேவையின் திட்டங்களில் பிஸி ஆவதனால் தனது ஸ்திதியில் லேசான தன்மை வந்து விடுகிறது. ஆகவே இந்தச் சூழ்நிலை சக்திசாலி ஆவதில்லை. சேவை நடைபெறுகிறது, ஆனால் சக்திசாலி ஆவதில்லை. இதற்காகத் தன் மீது விசேஷ கவனம் வைக்க வேண்டும். கர்மம் மற்றும் யோகம், கர்மத்துடன் கூடவே சக்திசாலி ஸ்டேஜ், இந்த சமநிலையில் கொஞ்சம் குறை உள்ளது. சேவையில் மட்டும் பிஸியாக இருப்பதன் காரணத்தால் சுயத்தின் ஸ்திதி சக்திசாலியாக இருப்பதில்லை. எவ்வளவு நேரம் சேவைக்காகக் கொடுக்கிறீர்களோ, எவ்வளவு உடல்-மனம்-செல்வத்தை சேவையில் ஈடுபடுத்துகிறீர்களோ, அதன் பிரமாணம் ஒன்றுக்கு லட்சம் மடங்காக என்ன கிடைக்க வேண்டுமோ, அது கிடைப்பதில்லை. இதற்கான காரணம், கர்மம் மற்றும் யோகத்தின் சமநிலை இல்லை. எப்படி சேவைக்கான திட்டத்தை உருவாக்குகிறீர்கள், நோட்டீஸ் அச்சடிக்கிறீர்கள்,

அது போல் டி.வி., ரேடியோவில் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்கிறீர்கள். எப்படி அந்த வெளிப்புற சாதனங்களை உருவாக்குகிறீர்கள், அது போல் முதலில் தனது மனதை சக்திசாலி ஆக்குவதற்கான சாதனம் விசேசமானதாக இருக்க வேண்டும். இந்த கவனம் குறைவாக உள்ளது. பிறகு சொல்கிறீர்கள், பிஸியாக இருந்து விட்டோம், கொஞ்சம் தவறி விட்டது. பிறகு இரட்டை பலன் கிடைக்க முடியாது. நல்லது.

**வரதானம்: சேவை மூலம் கிடைத்த மதிப்பு, பதவியைத் தியாகம் செய்து அவிநாசி பாக்கியத்தை உருவாக்கக் கூடிய மகா தியாகி ஆகுக!**

குழந்தைகள் நீங்கள் என்ன சிரேஷ்ட கர்மம் செய்கிறீர்களோ, இந்த சிரேஷ்ட கர்மம் அல்லது சேவையின் பிரத்தியட்ச பலன் -- அனைவரின் மூலமாகவும் மகிமை செய்யப் படுவீர்கள். சேவாதாரிக்கு சிரேஷ்ட மகிமைப் பாடலின் இருக்கை கிடைக்கிறது. மரியாதை, பதவி என்ற இருக்கை கிடைக்கிறது, இந்த சித்தி (வெற்றி) அவசியம் பிராப்தியாகிறது ஆனால் இந்த சித்திகள் என்பவை பாதைகளின் தங்குமிடங்கள் மட்டுமே! இவை இறுதி இலக்குகள் அல்ல. ஆகவே இதன் தியாகவான், பாக்கியவான் ஆகுங்கள். இதைத் தான் மகா தியாகி ஆவது எனச் சொல்லப் படுவது. குப்த மகாதானியின் சிறப்பு, தியாகத்தையும் கூடத் தியாகம் செய்வதாகும்.

**சுலோகன்: ஃபரிஸ்தா ஆக வேண்டுமென்றால் சாட்சியாக இருந்து ஒவ்வொரு ஆத்மாவின் பாகத்தைப் பாருங்கள் மற்றும் சகாஷ் கொடுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒரு மிக உயர்ந்த, மகான் மற்றும் நன்மையே பயக்கும் நேரம்!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை அனைத்து உயர்ந்த பாக்கியவான் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். எப்படி ஒவ்வொரு குழந்தையும் சென்ற கல்பத்தில் வந்தது போல் தன்னுடைய அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தி வந்து சேர்ந்து விட்டார்களோ அப்படியே நீங்கள் அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தி விட்டு வந்திருக்கிறீர்கள். தெரிந்து கொள்வது என்றால் அதிர்ஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்வது! விசேஷமாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் கூட்டம் வரதான பூமியில் கூடியிருக்கிறது. இந்தக் கூட்டம் அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளின் கூட்டம். அனைத்தையும் விட முதலில் அதிர்ஷ்டம் உண்டாவதற்கான உயர்ந்த நேரம் மற்றும் உயர்ந்த வேளை எதுவென்றால், எப்பொழுது குழந்தைகள் தெரிந்து கொண்டார்கள், ஏற்றுக் கொண்டார்கள். மேலும் என்னுடைய பாபா என்று கூறினார்களோ அந்த நேரம் தான் உயர்ந்த நேரம். அந்த நேரம் தான் முழுக் கல்பத்திலும் சிரேஷ்ட மானது மேலும் நன்மையே பயப்பது. அனைவருக்கும் அந்த நேரத்தின் நினைவு இப்பொழுதும் வருகிறது தான் இல்லையா? ஆவது, சந்திப்பது, அதிகாரத்தை அடைவது என்ற இதையோ முழு சங்கமயுகத்திலும் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள் ஆனால் அந்த நேரம் எதில் நீங்கள் அனாதையிலிருந்து அனைத்தும் நிறைந்தவராக ஆனீர்கள், என்னவாக இருந்ததிலிருந்து என்னவாக ஆனீர்கள். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கிடைத்தீர்கள். பிராப்தியில்லாத ஆத்மா பிராப்தியின் வள்ளலாக ஆனீர்கள் என்ற அந்த முதல் மாற்றத்தின் நேரம் அதிர்ஷ்டம் எழுவதற்கான நேரம் எவ்வளவு சிரேஷ்டமானது, மகான் ஆனது. சொர்க்கத்தின் வாழ்க்கையை விடவும் அந்த முதல் நேரம் எப்பொழுது தந்தையின் குழந்தை ஆனீர்களோ அது மகான் ஆனது. என்னுடையது என்பது உன்னுடையது ஆனது. உன்னுடையது என்று ஏற்றுக் கொண்டீர்கள், மேலும் டபுள் லைட் ஆனீர்கள். என்னுடையது என்ற சுமையிலிருந்து சுமையற்றவர் ஆகி

விட்டீர்கள். குஷியின் இறக்கை வந்து விட்டது. தரையிலிருந்து ஆகாயத்தில் பறக்கத் தொடங்கினீர்கள். கல்லிலிருந்து வைரம் ஆகி விட்டீர்கள். அனேக குழப்பங் களிலிருந்து விடுபட்டு சுயதரிசன சக்கரதாரி ஆகி விட்டீர்கள். அந்த நேரம் நினைவிருக்கிறதா? அந்த பிரகஸ்பதியின் திசையின் நேரம் அதில் உடல், மனம், செல்வம் மற்றும் மக்கள் என்று அனைத்து பிராப்தியின் அதிர்ஷ்டம் நிரம்பியிருந்தது. அந்த மாதிரி திசையில் அந்த மாதிரி ரேகை உள்ள நேரத்தில் சிரேஷ்ட அதிர்ஷ்டம் நிறைந்தவராக ஆனீர்கள். மூன்றாவது கண் திறந்தது. மேலும் தந்தையை பார்த்தீர்கள். அனைத்து அனுபவமும் இருக்கிறது தான் இல்லையா? இதயத்தில் ஆஹா உயர்ந்த பிராப்திக்கான நேரம். அதிர்ஷ்டமோ அந்த நேரத்தினுடையது தான் இல்லையா? பாப்தாதா அந்த மாதிரி மகான் வேளையில் அதிர்ஷ்டம் நிறைந்த வேளையில் வந்திருக்கும் குழந்தைகளை பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்.

என்னுடைய ஆதிதேவனின் ஆதிகாலத்தின் இராஜ்ய பாக்கிய அதிகாரி குழந்தைகளே என்று பிரம்மாபாபா கூறினார். சிவபாபா ஆஹா! என்னுடைய அனாதி காலத்தின் அனாதி அழியாத அதிகாரத்தை அடையக் கூடிய குழந்தைகளே என்று கூறினார். நீங்கள் தந்தை மற்றும் பிரம்மாபாபா இருவர்களின் அதிகாரி தேடிக் கண்டெடுக்கப்பட்ட அன்பிற்குரிய துணைவர்கள், குழந்தைகள். உலகத்தில் அனைத்து ஆத்மாக்களும் வாழ்க்கைத் துணையை, உண்மையான துணையை, மிக அன்புடன் நடந்து கொள்ளும் துணையை மிகவும் தேடின பிறகு அடைகிறார்கள். இருந்தும் திருப்தி ஆவதில்லை என்று பாப்தாதாவிற்கு போதை இருக்கிறது. ஒருவருக்கு கூட அந்த மாதிரி துணைவர் கிடைப்பதில்லை. மேலும் பாப்தாதாவிற்கோ எத்தனை வாழ்க்கை துணைவிகள் கிடைத்திருக்கிறார்கள். மேலும் ஒவ்வொருவரும் ஒருவர் இன்னொருவரைவிட மகான். நீங்கள் உண்மையான துணைவிகள் தான் இல்லையா? நீங்கள் அந்த மாதிரி உண்மையான துணைவிகள், யார் உயிரே சென்று விட்டாலும் கூட, பாபா மேல் அன்புடன் நடந்து கொண்டிருப்பது சென்று விடாது. நீங்கள் அந்த மாதிரி உண்மையான வாழ்க்கை துணைவிகள்.

பாப்தாதாவின் வாழ்க்கை என்ன என்று அதை தெரிந்திருக்கிறீர்களா? உலக சேவை தான் பாப்தாதாவின் வாழ்க்கை. அந்த மாதிரி

வாழ்க்கையின் துணைவர்கள் நீங்கள் அனைவரும் தான் இல்லையா? எனவே உண்மையான வாழ்க்கையின் துணைவன், துணையை வைத்து நடந்து கொள்ளும் பாப்தாதாவிற்கு எத்தனை குழந்தைகள். இரவு பகலாக எதில் பிஸியாக இருக்கிறீர்கள். தந்தையின் துணையை வைத்துக் கொள்வதில் தான் இல்லையா? அனைத்து வாழ்க்கைத் துணைவர்கள் குழந்தைகளின் மனதில் எப்பொழுதும் என்ன எண்ணம் இருக்கிறது? சேவையின் முரசு ஒலிக்க வேண்டும். இப்பொழுது கூட அனைவரும் அன்பில் மூழ்கி இருக்கிறீர்கள். சேவையின் துணைவனாகி சேவை செய்து அதற்கான நிரூபணத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இலட்சியத்திற்கு ஏற்றபடி வெற்றியை அடைந்து கொண்டே இருக்கிறீர்கள். எவ்வளவு செய்வீர்களோ அது நாடகத்தின்படி மிக நன்றாக செய்திருக்கிறீர்கள். மேலும் இன்னும் முன்னேற வேண்டும் இல்லையா? இந்த வருடம் செய்தியை பரவச் செய்திருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது சில இடங்களிலிருந்து மைக்கை கொண்டு வந்திருக்கிறீர்கள். நாலாபுறங்களிலும் உள்ள மைக் வரவில்லை. எனவே செய்தியோ பரவியுள்ளதுதான்! ஆனால் நாலாபுறங்களிலும் உள்ள பொறுப்பாக ஆகியிருக்கும், செய்தியைப் பரப்பக்கூடிய பெரிய மைக் என்று கூறினாலும் சரி சேவைக்கு பொறுப்பாளர் ஆத்மாக்கள் என்று கூறினாலும் சரி அவர்கள் இங்கு வரட்டும் மேலும் ஒவ்வொருவரும் தன்னை தன்னுடைய தரப்பின் மெசஞ்சர் என்று புரிந்து செல்ல வேண்டும். இப்பொழுது எந்தப் பக்கத்திலிருந்து வந்திருக்கிறீர்களோ அவர்கள் அந்தப் பக்கத்தில் செய்தி பரப்பாளர் ஆக வேண்டும் ஆனால் நாலாபுறங்களிலும் உள்ள மைக் வர வேண்டும் மேலும் செய்தியாளர் ஆகி விட வேண்டும். நாலாபுறங்களிலும் ஒவ்வொரு மூலையில் அனைவருக்கும் இந்த செய்தி கிடைத்து விட வேண்டும் எனவே, அதற்காக ஒரே நேரத்தில் நாலாபுறங்களிலுமிருந்து செய்தியைப் பரப்ப வேண்டும். இதைத் தான் பெரிய முரசு ஒலிப்பது என்று கூறுவது. நாலாபுறங்களிலும் உள்ள முரசு ஒன்றே தான், ஒருவரே தான் என்று ஒலித்தது என்றால், அதை பிரத்யக்ஷத்தின் முரசு என்று கூறுவோம்.

இப்பொழுது ஒவ்வொரு தேசத்தின் பேண்ட் வாத்தியம் ஒலிக்க வேண்டும். பேண்ட் வாத்தியம் ஒலிக்க வேண்டியது இப்பொழுது தான். பேண்ட் வாத்தியத்தை நன்றாக வாசித்தீர்கள். எனவே வேறு வேறு தேசத்தில் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் மூலமாக பல வகையான

# 1984 அவ்யக்த முரளி

பேண்ட் வாத்தியத்தை கேட்டு மற்றும் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கிறோம். பாரதத்தின் பேண்ட் வாத்தியத்தையும் கேட்டு, பேண்ட் வாத்தியத்தின் ஒலியில் மேலும் முரசின் ஒலியிலும் வித்தியாசம் இருக்கிறது. கோயில்களில் பேண்ட் வாத்தியத்திற்குப் பதிலாக முரசை அடிப்பார்கள். இன்னும் வரும் நாட்களில் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? கூட்டமாக சேர்ந்து ஒலிக்கும் ஓசை நாலாபுறமும் பரவும் ஓசையாக இருக்கும். இப்பொழுது கூட ஒருவர் சரி நான் செய்கிறேன் என்று கூறுகிறார். மேலும் அனைவரும் ஒன்றாகக் கூடி சரி செய்கிறேன் என்று கூறினார்கள் என்றால், எவ்வளவு வித்தியாசம் இருக்கும் இல்லையா? ஒருவர் இருக்கிறார், அந்த ஒருவர் மட்டுமே தான்! இவர் தான் அந்த ஒருவர் என்ற இந்த சப்தமான ஓசை நாலாபுறங்களிலுமிருந்தும் ஒரே நேரத்தில் வெளியாக வேண்டும். டி.வி -யில் பாருங்கள், ரேடியோவில் கேளுங்கள், செய்தித் தாள்களில் பாருங்கள், வாயில் இந்த ஒரே ஒரு ஓசை தான் வெளியாக வேண்டும். உலக அளவில் செய்தி பரவ வேண்டும். எனவே தான் பாப்தாதா வாழ்க்கைத் துணைவர்களைப் பார்த்து குஷி அடைகிறார். யாருக்கு இத்தனை வாழ்க்கைத் துணைவர்கள் இருக்கிறார்கள். மேலும் ஒவ்வொருவரும் மகான் என்றால் அனைத்துக் காரியமும் நிச்சயமாக நடந்தேறும். தந்தை ஒரு கருவியாகி மட்டும் சிரேஷ்ட காரியத்தின் பிராப்தியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். நல்லது. இப்பொழுதோ சந்திப்பதற்கான சீசன். அனைவரையும் விட மிகச் சிறிய மற்றும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் போலந்த் தேசத்தைச் சேர்ந்தவர்கள். சிறு குழந்தைகள் எப்பொழுதுமே மிகவும் பிடித்தமானவர்களாக இருப்பார்கள். போலந்த் தேசத்தை சேர்ந்தவர்களுக்கு நாம் மற்ற அனைவரையும் விட அதிகமாக தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்கள் என்ற போதை இருக்கிறது இல்லையா? அனைத்து பிரச்சனை களையும் கடந்து வந்து சேர்ந்தும் விட்டீர்கள் இல்லையா? இதைத் தான் முழுமையான ஈடுபாடு என்று சொல்வது. முழு ஈடுபாடு தடையை அகற்றி விடுகிறது. நீங்கள் பாப்தாதாவிற்கும் மேலும் பரிவாரத்திற்கும் மிகவும் அன்பானவர்கள். போலந்த் மற்றும் போர்ச்சுகல் இரண்டு தேசங்களைச் சேர்ந்தவர்களும் மிகவும் ஈடுபாடு உள்ளவர்கள். மொழியைப் பார்க்கவில்லை, பணத்தைப் பார்க்கவில்லை ஆனால் முழு ஈடுபாடு பறக்க வைத்து விட்டது. எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு அவசியம் சகயோகம் கிடைக்கும். அசம்பவத்திலிருந்து சம்பவம் ஆகி விடும். எனவே

பாப்தாதாவும் அந்த மாதிரி இனிமையான குழந்தைகளின் அன்பைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மேலும் முழு ஈடுபாட்டோடு சேவை செய்யக்கூடிய பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். மிகவும் நன்றாக அன்புடன் கடுமையாக உழைத் திருக்கிறீர்கள்.

பொதுவாக இந்த வருடம் அனைவருமே நல்ல குரூப்பை அழைத்து வந்திருக்கிறீர்கள் ஆனால் இந்த தேசங்களுக்கும் விசேஷம் இருக்கிறது, எனவே பாப்தாதா விசேஷமாக பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் அவரவர்களுடைய இடத்தில் நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறீர்கள். எனவே ஒவ்வொரு இடத்தின் பெயரைக் கூறவில்லை ஆனால் ஒவ்வொரு இடத்தின் விசேஷம் அவரவர்களினுடையது. மதுபன் வரை வந்தடைவது என்பது தான் சேவையின் விசேஷம். நாலாபுறங்களிலுமுள்ள பொறுப்பிலிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷமாக அன்பு மலர்களை அளிக்கிறார். நாலாபுறங்களில் பண விஷயத்தில் கொஞ்சம் மேலே கீழே இருந்த போதிலும் இத்தனை ஆத்மாக்களைப் பறக்க வைத்து அழைத்து வந்திருக்கிறீர்கள். இது தான் அன்பின் கூடவே உழைப்பின் அடையாளம். இது வெற்றியின் அடையாளம்! எனவே ஒவ்வொருவரும் தனது பெயரையும் சேர்த்து அன்பு மலர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். யாரெல்லாம் வரவும் இல்லையோ அவர்களுடைய நினைவு கடிதங்களாக அதிக மாலைகளையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே பாப்தாதா ஆகார ரூபத்தில் இங்கு வந்து சேராத குழந்தைகளுக்கும் அன்பு நிறைந்த அன்பு நினைவுகளை கொடுக்கிறார். நாலாபுறங்களிலிருந்து வந்திருக்கும் குழந்தைகளுக்கு அவர்களுடைய அன்பிற்கான பிரதிபலன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அனைவருமே அன்பிற்குரியவர்கள். நீங்கள் பாப்தாதாவின் வாழ்க்கைத் துணைவர்கள், எப்பொழுதும் துணையை வைத்து நடந்து கொள்ளும் நெருக்கமான இரத்தினங்கள், எனவே அனைவரின் நினைவு கடிதங்களுக்கு முன்பே, செய்தி கொண்டு வருபவர்களுக்கு முன்பாகவே பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. மேலும் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. அனைத்து குழந்தைகளும் இப்பொழுது மிகவும் விமர்சையாக சேவை செய்யுங்கள். தந்தை மூலமாக கிடைத்திருக்கும் அமைதி மற்றும் குஷியின் பொக்கிஷங்களை அனைத்து ஆத்மாக்களுக்கும் அதிகமாக வழங்குங்கள். அனைத்து

ஆத்மாக்களுக்கும் இது தான் தேவையாக இருக்கிறது. உண்மையான குஷி மற்றும் உண்மையான சாந்தி வேண்டும் என்று விரும்புகிறார்கள். குஷிக்காக எவ்வளவு நேரத்தை, பணத்தை மற்றும் உடல் சக்தியை அழித்துக் கொள்கிறார்கள். ஹிப்பி ஆகி விடுகிறார்கள். இப்பொழுது அவர்களை ஹேப்பி ஆக்குங்கள். அனைவரின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அன்னப்பூர்னாவின் பாத்திரம் ஆகுங்கள். இந்தச் செய்தியை அனைத்து வெளிநாட்டுக் குழந்தைகளுக்கும் அனுப்பி விடுங்கள். அனைத்து குழந்தைகளுக்கும் செய்தி சொல்லிக் கொண்டிருக்கிறோம். சில குழந்தைகள் அந்த மாதிரியும் இருக்கிறார்கள். இந்த வாழ்க்கையில் இருந்து கொண்டே ஏதாவது கொஞ்சம் அலட்சியத்தின் காரணத்தினால் தீவிரமாக முயற்சி செய்பவரிலிருந்து தொய்வான முயற்சி செய்பவராக ஆகி விடுகிறார். மேலும் சிலர் மாயாவின் சுழற்சியில் கொஞ்ச காலத்திற்காகவும் வந்து விடுகிறார்கள். இருந்தும் எப்பொழுது மாட்டிக் கொள்கிறார்களோ அப்பொழுது வேதனை அடைவதில் வந்து விடுகிறார்கள். முதலில் மாயாவின் கவர்ச்சியின் காரணமாக இது சுழற்சி என்று அனுபவம் ஆவதில்லை, ஆனால் நல்ல ஒரு ஓய்வை அனுபவம் செய்கிறார். பிறகு எப்பொழுது சுழற்சியில் மாட்டிக் கொள்கிறார் என்றால், உணர்வில் வந்து விடுகிறார்கள். மேலும் எப்பொழுது உணர்வில் வருகிறார் என்றால் பாபா, பாபா என்ன செய்வது என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி சுழற்சியில் வசமான குழந்தைகளிடமிருந்தும் அதிக கடிதம் வருகின்றன. அந்த மாதிரி குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். மேலும் மீண்டும் இதே நினைவை ஊட்டுகிறார். எப்படி பாரதத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. ஒருவேளை இரவில் காணாமல் போனவர் பகலில் வந்து விட்டார் என்றால் காணாமல் போனவர் என்று கூற முடியாது. அந்த மாதிரி மீண்டும் விழிப்புணர்வு வந்திருக்கிறது என்றால், கடந்ததை கடந்ததாக ஆக்குங்கள். மீண்டும் புதிய ஊக்கம், புதிய உற்சாகத்தில் புதிய வாழ்க்கையை அனுபவம் செய்து முன்னேறிச் செல்ல முடியும்.

பாப்தாதாவும் மூன்று தடவை மன்னிக்கிறார். இருந்தும் மூன்று தடவை வாய்ப்பு கொடுக்கிறார். எனவே யாரும் சங்கோஜப்பட வேண்டாம். சங்கோஜத்தை விட்டு விட்டு அன்பில் வந்து விட்டார் என்றால், மீண்டும் தன்னுடைய முன்னேற்றத்தை செய்ய முடியும். அந்த மாதிரி குழந்தைகளுக்கும் விசேஷ செய்தியைக் கொடுங்கள். சிலரால்

சூழ்நிலையின் காரணமாக வர முடியவில்லை. மேலும் அவர்கள் மிகுந்த துடிப்புடன் நினைவு செய்கிறார்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் உண்மையான உள்ளத்தைத் தெரிந்திருக்கிறார். எங்கு உண்மையான உள்ளம் இருக்கிறதோ அங்கு இன்று இல்லை என்றாலும் நாளை அவசியம் பலன் கிடைக்கிறது. நல்லது.

எதிரில் இரட்டை வெளிநாட்டினர் இருக்கிறார்கள். அவர்களுடைய சீசன் இல்லையா! சீசனைச் சேர்ந்தவர்களுக்கு முதலில் உணவளிக்கப்படும். அனைத்து பாரதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதாவது பாக்கிய வான் ஆத்மாக்களுக்கு, நான் தந்தையின் அவதார பூமியைச் சேர்ந்தவன் என்ற அதிகப்படியான போதை இருக்கிறது. அந்த மாதிரி சேவையின் பாரத பூமி, தந்தையின் அவதார பூமி மேலும் எதிர்காலத்தின் இராஜ்ய பூமியைச் சேர்ந்த அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷமாக அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். ஏனென்றால், அனைவரும் அவரவர்களின் முழு ஈடுபாடு, ஊக்கம் உற்சாகத்தின் பிரகாரம் சேவை செய்தார்கள். மேலும் சேவை மூலமாக அனேக ஆத்மாக்களை தந்தையின் அருகில் கொண்டு வந்தார்கள். எனவே சேவையின் பிரதிபலனாக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் அன்பு மலர்களின் பூச்செண்டை வழங்குகிறார், வரவேற்றுக் கொண்டிருக்கிறார். நீங்களும் அனைவரையும் பூச்செண்டு கொடுத்து வரவேற்றீர்கள் இல்லையா? எனவே அனைத்து குழந்தைகளுக்கும் பூச்செண்டும் கொடுக்கிறார். மேலும் வெற்றியின் பேட்ஜையும் அணிவிக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் அவரவர்களின் பெயரால் பாப்தாதா மூலமாக கிடைத்திருக்கும் பேட்ஜையும் பூச்செண்டையும் ஸ்வீகாரம் (ஏற்றுக் கொள்தல்) செய்யுங்கள். நல்லது.

செல்லக்கூடிய தாதிகளோ சேர்மேன். சேர்மேன் என்றால் எப்பொழுதும் இருக்கையில் அமர்ந்திருப்பவர். யார் எப்பொழுதும் இருக்கையில் அமர்ந்திருக்கிறாரோ அவரைத் தான் சேர்மேன் என்று கூறுவது. எப்பொழுதும் சேர் உடன் அருகிலும் இருக்கிறார். எனவே எப்பொழுதும் தொடக்கத்திலிருந்து இறுதி வரை ஒவ்வொரு அடியிலும் தந்தையின் துணைவர்கள். தந்தையின் அடி மற்றும் அவர்களின் அடி எப்பொழுதுமே ஒன்றாக இருக்கும். அடி மேல் அடி எடுத்து வைப்பவர்கள். எனவே அந்த மாதிரி நிரந்தரமான துணைவர்களுக்கு ஒவ்வொரு அடியிலும் பல பல

கோடி மடங்குகள் அன்பு நினைவுகளைக் கொடுக்கிறோம். மேலும் மிக அழகான வைரத்தினால் ஆன தாமரை மலரை தந்தையிடமிருந்து ஏற்றுக் கொள்ளுங்கள். மகாரதிகளில் சகோதரர்களும் வந்து விடுகிறார்கள். பாண்டவர்கள் எப்பொழுதும் சக்திகளின் துணைவர்கள். பாண்டவர்களுக்கு சக்திசேனை மற்றும் பாண்டவர்கள் இருவரும் சேர்ந்து தந்தையின் காரியத்தில் பொறுப்பாளர் ஆகி பயனுள்ளதாக ஆக்கும் வெற்றி மூர்த்திகள். எனவே பாண்டவர்களும் குறைந்தவர்கள் இல்லை. பாண்டவர்களும் மகான்கள். ஒவ்வொரு பாண்டவனின் விசேஷம் அவரவருடையது, விசேஷ சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் அதே விசேஷத்தின் ஆதாரத்தில் தந்தை மற்றும் பரிவாரத்தின் எதிரில் விசேஷ ஆத்மாக்கள். எனவே சேவைக்குப் பொறுப்பான விசேஷ ஆத்மாக்களுக்கு விசேஷ ரூபத்தில் பாப்தாதா வெற்றித் திலகமிட்டு வரவேற்கிறார். புரிந்ததா? நல்லது.

இப்பொழுது அனைவருமோ சந்தித்து விட்டீர்கள் இல்லையா? தாமரை, திலகம், பூச்செண்டு, பேட்ஜ் அப்படி அனைத்தும் கிடைத்தது இல்லையா. இரட்டை வெளிநாட்டினரின் வரவேற்பு எத்தனை விதமாக ஆகி விட்டது. அன்பு நினைவோ அனைவருக்குமே கிடைத்தே விட்டது. இருந்தாலும் இரட்டை வெளிநாட்டினர் மற்றும் நமது தேசத்தை சேர்ந்தவர் அனைத்து குழந்தைகளும் எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டே இருங்கள். உலகை பரிவர்த்தனை செய்து நிரந்தரமாக சுகங்களின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். அந்த மாதிரியான விசேஷ சேவாதாரி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**ட்ரினிடாட் பார்ட்டியுடன் சந்திப்பு:** எப்பொழுதும் தன்னை சங்கமயுகத்தின் சிரேஷ்ட பிராமண ஆத்மா என்று நினைக்கிறீர்களா? பிராமணர்களுக்கு எப்பொழுதும் உச்சங்குடுமியை அடையாளமாகக் காண்பிக்கிறார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை, மேலும் உயர்ந்ததிலும் உயர்ந்த காலம் என்றால் சுயம் அவர்களும் உயர்ந்தவர்களாக ஆனார்கள். யார் எப்பொழுதும் உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கிறாரோ அவர் தன்னை எப்பொழுதுமே டபுள் லைட்டாக அனுபவம் செய்கிறார். எந்த விதமான சுமை இல்லை. ஏதாவது சம்மந்தத்தின் அல்லது தன்னுடைய பழைய சுபாவம் சம்ஸ்காரத்தின்

சுமை இல்லை. இதைத் தான் அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்ட நிலை என்று கூறுவது. நீங்கள் அந்த மாதிரி இருக்கிறீர்களா? முழு குரூப்பும் பந்தனமற்ற குரூப். ஆத்மாவுடன் மற்றும் சரீரத்தின் சம்மந்தத்திலிருந்தும் பந்தனம் இல்லை. பந்தனமற்ற ஆத்மாக்கள் என்ன செய்வார்கள்? சென்டரை கவனித்து கொள்வார் இல்லையா? அப்படியானால் எத்தனை சேவை நிலையங்கள் திறக்க வேண்டும். நேரமும் இருக்கிறது, மேலும் டபுள் லைட்டாகவும் இருக்கிறீர்கள் என்றால் மற்றவர்களை தனக்குச் சமமாக ஆக்குவீர்கள் இல்லையா. என்ன கிடைத்திருக்கிறதோ அதை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும். இன்றைய உலகத்தின் ஆத்மாக்களுக்கு இதே அனுபவத்தின் எவ்வளவு அவசியம் இருக்கிறது என்று புரிந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? அந்த மாதிரியான நேரத்தில் பிராப்தி சொரூப ஆத்மாக்கள் என்ன காரியம் செய்ய வேண்டும்? எனவே இப்பொழுது சேவையில் இன்னும் வளர்ச்சியை அடையுங்கள். பார்க்கப்போனால் ட்ரினிடாட் சம்பன்ன தேசம். அனைத்தையும் விட அதிகமான எண்ணிக்கை ட்ரினிடாட் சென்டரில் இருக்க வேண்டும். அக்கம் பக்கத்திலும் மிகுந்த இடங்கள் இருக்கின்றன, அவர்கள் மேல் உங்களுக்கு இரக்கம் வரவில்லையா? சென்டரையும் திறங்கள், மேலும் பெரிய பெரிய மைக்கையும் கொண்டு வாருங்கள். இந்த அளவு தைரியம் உள்ள ஆத்மாக்கள் நீங்கள். என்ன விரும்புகிறீர்களோ அதை செய்ய முடியும். யார் சிரேஷ்ட ஆத்மாக்களோ அவர்கள் மூலமாக சிரேஷ்ட சேவை நிரம்பியிருக்கிறது. நல்லது.

**வரதானம்: பல விதமான அனுபவங்கள் மூலமாக எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் நிரம்பியிருக்கக்கூடிய தடைகளை வென்றவர் ஆகுக!**

தினசரி அமிர்தவேளையில் முழு நாளுக்கான பல விதமான ஊக்கம் உற்சாகத்தின் பாய்ன்ட்டுகளை புத்தியில் எமர்ஜ் செய்யுங்கள். ஒவ்வொரு நாளின் முரளியிலிருந்து ஊக்கம் உற்சாகத்திற்கான பாய்ன்ட்டுகளை குறித்துக் கொள்ளுங்கள், அந்த பல விதமான பாய்ன்ட்டுகள் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிக்கும். மனித ஆத்மாக்களின் இயல்பு பல விதமானவைகள் மேல் விருப்பம் ஏற்படும். எனவே ஞானத்தின் துளிகளை சிந்தனை செய்யுங்கள் அல்லது ஆன்மீக உரையாடல் செய்யுங்கள், பல வகையான ரூபத்தில் பூஜ்ஜியம் ஆகி தன்னுடைய

கதாநாயக பாத்திரத்தின் நினைவில் இருங்கள் பிறகு ஊக்கம் உற்சாகத்தினால் நிரம்பியவராக இருப்பீர்கள். பிறகு அனைத்து தடைகளும் சுலபமாக அகன்று விடும்.

**சுலோகன்: தன்னுடைய மனநிலையை அந்த அளவிற்கு அமைதி நிறைந்ததாக ஆக்கி விட்டீர்கள் என்றால், கோபம் என்ற பூதம் தூரத்திலிருந்தே ஓடி விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தில் நான்கு இணைந்த ரூபங்களின் அனுபவம்!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் இணைந்த ரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் தன்னுடைய இணைந்த ரூபத்தை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? ஒன்று -சிரேஷ்ட ஆத்மாக்கள், இந்த இறுதி, பழைய ஆனால் மிகவும் விலைமதிக்க முடியாதவர் ஆக்கக்கூடிய உடலோடு இணைந்திருப்பவர். அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்கள் இந்த உடலின் ஆதாரத்தினால் சிரேஷ்ட காரியம் மற்றும் பாப்தாதாவையும் சந்திக்கும் அனுபவத்தையும் செய்து கொண்டிருக்கிறீர்கள். இது பழைய உடல் தான் ஆனால் இந்த பழைய இறுதி உடலின் ஆதாரத்தினால் தான் சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் ஆன்மீக அனுபவம் செய்கிறீர்கள். அப்படி ஆத்மா மற்றும் உடல் இரண்டுமாக இணைந்திருக்கிறீர்கள். இந்த பழைய உடலின் உணர்வில் வர வேண்டாம் ஆனால் எஜமானன் ஆகி, இதன் மூலமாக காரியம் செய்விக்க வேண்டும். எனவே ஆத்ம அபிமானி ஆகி, கர்மயோகி ஆகி கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியம் செய்விக்கிறீர்கள்.

இரண்டாவது -ஆன்மீக விசித்திர இணைந்த ரூபம்: முழுக் கல்பத்திலும் இந்த இணைந்த ரூபத்தின் அனுபவத்தினை இப்பொழுது மட்டும் தான் உங்களால் செய்ய முடியும். அந்த ரூபம் 'நீங்கள் மற்றும் தந்தை'. இந்த இணைந்த ரூபத்தின் அனுபவம் எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவான், எப்பொழுதும் வெற்றி அடைபவர், எப்பொழுதும் அனைவரின் தடைகளை அழிப்பவர். எப்பொழுதும் சுப பாவனை, சிரேஷ்ட விருப்பங்கள், சிரேஷ் வார்த்தைகள், சிரேஷ்ட திருஷ்டி, சிரேஷ்ட காரியம் மூலமாக உலகிற்கு நன்மை செய்யும் சொரூபத்தின் அனுபவம் செய்விக்கிறது. ஒரு நொடியில் அனைத்து பிரச்சனைகளுக்கு சமாதான சொரூபம் ஆக்குகிறது. தனக்காகவும், அனைவருக்காகவும் வள்ளல் மற்றும் மாஸ்டர் வரமளிக்கும் வள்ளல் ஆக்குகிறது. இந்த இணைந்த ரூபத்தில்

எப்பொழுதும் நிலைத்து மட்டும் இருந்தீர்கள் என்றால், சுலபமாகவே நினைவு மற்றும் சேவையில் சித்தி (வெற்றி) சொரூபமாக ஆகி விடுவீர்கள். விதி ஒரு காரணத்திற்காக மட்டும் இருந்து விடும் மேலும் சித்தி அதாவது வெற்றி எப்பொழுதுமே உடன் இருக்கும். இப்பொழுது விதியை கடைபிடிப்பதில் அதிக நேரம் எடுக்கிறது. சித்தி சக்திக்கு ஏற்றபடி அனுபவம் ஆகிறது ஆனால் எந்த அளவு இந்த ஆன்மீக சக்திசாலியான இணைந்த ரூபத்தில் எப்பொழுதும் இருப்பீர்களோ அந்த அளவு விதியைக் விட அதிகமாக சித்தி அனுபவம் ஆகும். முயற்சி செய்வதின் மூலம் பிராப்தி அதிகமாக அனுபவம் ஆகும். சித்தி சொரூபத்தின் அர்த்தமே ஒவ்வொரு காரியத்திலும் சித்தி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இது நடைமுறையில் அனுபவம் ஆக வேண்டும்.

மூன்றாவது இணைந்த ரூபம் -பிராமணனாக இருக்கும் நான் தான் ஃபரிஷ்தாவாக ஆகப் போகிறவன். பிராமண ரூபம் மற்றும் இறுதி கர்மாதீத் ஃபரிஷ்தா சொரூபம். இந்த இணைந்த ரூபத்தின் அனுபவம் உலகின் எதிரில் சாட்சாத்காரம் அளிப்பவர் ஆக்கும். பிராமணனாக இருக்கும் நான் தான் ஃபரிஷ்தா ஆவேன் என்ற இந்த நினைவு மூலமாக நடைமுறையில் காரியங்கள் செய்து கொண்டே இந்த ஸ்தூல உடலில், ஸ்தூல உலகில் வாழ்க்கையின் பங்கை ஆற்றிக் கொண்டே தன்னை பிரம்மாபாபாவின் துணைவனாக சூட்சும உலகத்தின் ஃபரிஷ்தாவான நான் ஸ்தூல உலகில் மற்றும் ஸ்தூல உடலில் உலக சேவைக்காக வந்திருக்கிறேன் என்று ஸ்தூல உணர்விலிருந்து விலகிய அவ்யக்த ரூபமுடையவராக தன்னை அனுபவம் செய்வார்கள். இந்த அவ்யக்த உணர்வு அதாவது ஃபரிஷ்தா தன்மையின் உணர்வு இயல்பாகவே அவ்யக்தம் அதாவது பௌதீக பேச்சு, நடத்தை, பௌதீக உணர்வின் சுபாவம் சம்ஸ்காரத்தை சுலபமாகவே பரிவர்த்தனை (மாற்றம்) செய்து விடும். உணர்வு மாறிவிட்டது என்றால் அனைத்தும் மாறி விடும். அந்த மாதிரியான அவ்யக்த உணர்வை எப்பொழுதும் சொரூபத்தில் கொண்டு வாருங்கள். பிராமணன் நான் தான் ஃபரிஷ்தா ஆவேன் என்பது நினைவில் இருக்கிறது. இப்பொழுது இந்த நினைவை நடைமுறையில் கொண்டு வாருங்கள். சொரூபம் நிரந்தர மானதாக இயல்பானதாக சுலபமாகவே ஆகி விடும். நடைமுறை சொரூபத்தில் கொண்டு வருவது என்றால், நிரந்தர அவ்யக்த ஃபரிஷ்தாவாக ஆவது. சில நேரம் மறப்பது,

## 1984 அவ்யக்த முரளி

சில நேரம் நினைவில் வருவது - இந்த நினைவில் இருப்பது முதல் நிலை. சொரூபம் ஆகி விடுவது உயர்ந்த நிலை.

நான்காவது -எதிர்கால நான்கு புஜங்களின் சொரூபம்: லட்சுமி மற்றும் நாராயணனின் இணைந்த ரூபம், ஏனென்றால் இந்த நேரம் ஆத்மாவில் லட்சுமி மற்றும் நாராயணன் இருவர்களாக ஆவதற்கான சம்ஸ்காரத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். சில நேரம் லட்சுமி ஆவீர்கள், சில நேரம் நாராயணன் ஆவீர்கள். எதிர்கால பிராப்தியின் இந்த இணைந்த ரூபம் அந்த அளவே தெளிவாக இருக்க வேண்டும். இன்று ஃபரிஷ்தா, நாளை தேவதை. இந்த நேரம் ஃபரிஷ்தா அடுத்த நேரம் தேவதை. நம்முடைய இராஜ்யம், நம்முடைய இராஜ்ய சொரூபம் வந்தே விட்டது, ஆகியே விட்டோம். அந்த மாதிரி எண்ணம் தெளிவாகவும் சக்திசாலியாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் உங்களுடைய இந்த தெளிவான சக்திசாலியான எண்ணத்தின் வெளிப்பாட்டின் மூலம் உங்களுடைய இராஜ்யம் அருகில் வரும். உங்களுடைய வெளிப்பட்ட ரூபத்தின் எண்ணம் புது உலகத்தைப் படைக்கும் அதாவது உலகத்தில் கொண்டு வரும். உங்களுடைய எண்ணம் உள்ளடங்கி இருக்கிறது என்றால் புது உலகம் வெளிப்பட முடியாது. பிரம்மாவின் கூடவே பிராமணர்களின் இந்த எண்ணம் மூலமாக இந்த பூமியில் புது உலகம் பிரத்யக்ஷம் ஆகும். பிரம்மாபாபாவும் புது உலகத்தில் புதிய தன்னுடைய முதல் வாழ்க்கைப் பங்கினை செய்வதற்காக உடன் செல்வோம் என்ற உறுதிமொழியின் காரணமாக பிராமண குழந்தைகளுக்காக காத்துக் கொண்டிருக்கிறார். அவர் மட்டும் பிரம்மாவிலிருந்து கிருஷ்ணன் ஆகி விட்டார் என்றால், தனியாக என்ன செய்வார். உடன் படிப்பவர்களும், விளையாடுபவர்களும் வேண்டும் இல்லையா? எனவே பிரம்மாபாபா பிராமணர்களுக்காக, அவ்யக்த ரூபமுடைய தந்தை எனக்கு சமமாக அவ்யக்த நிலையிலுள்ள ஃபரிஷ்தா ரூபம் ஆகுங்கள் என்று கூறுகிறார். ஃபரிஷ்தாவிலிருந்து தேவதை ஆவீர்கள். புரிந்ததா? இந்த அனைத்து இணைந்த ரூபத்தில் நிலைத்திருப்பதினால் தான் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆகி விடுவீர்கள். தந்தைக்குச் சமமானவர் ஆகி சுலபமாகவே செய்யும் காரியத்தில் வெற்றியை அனுபவம் செய்வீர்கள்.

இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு பாப்தாதாவுடன் ஆன்மீக உரையாடல் செய்வதற்கும் மற்றும் சந்திப்பை செய்வதற்கும் தீவிரமான

ஆர்வம் இருக்கிறது. அனைவருமே நாம் இன்றே சந்தித்து விட வேண்டும் என்று நினைக்கிறார்கள் ஆனால் இந்த பௌதீக உலகத்தில் அனைத்தையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. சூரியன், சந்திரன் ஆகியவற்றின் உள்ளே இருக்கும் உலகம் இல்லையா? அதைவிட விலகியிருக்கும் உலகத்திற்கு வந்து விட்டீர்கள் என்றால் முழு நேரமும் அமர்ந்து கொள்ளலாம். பாப்தாதாவிற்கும் ஒவ்வொரு குழந்தையும் அவரவர்களின் விசேஷங்களின் காரணமாக மிகப் பிரியமானவர்கள். யாராவது இவர் பிரியமானவர், இவர் குறைவாகப் பிரியமானவர் என்று நினைக்கிறார் என்றால் அந்த மாதிரியான விஷயம் ஒன்றும் இல்லை. மகாரதி அவருடைய விசேஷத்தின் மூலம் பிரியமானவர், மேலும் தந்தையின் எதிரில் அனைவரும் அவரவர்களின் ரூபத்தினால் மகாரதிகள். மகான் ஆத்மாக்கள், எனவே மகாரதிகள். இதுவோ காரியத்தை நடத்துவிப்பதற்காக யாரையாவது அன்புடன் பொறுப்பாளர் ஆக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லை என்றால் காரியம் செய்வதற்காக அவரவர்களுக்கு என்று ஸ்தானம் கிடைத்திருக்கிறது. ஒருவேளை அனைவருமே தாதிகள் ஆகி விட்டார்கள் என்றால் காரியம் நடக்குமா? பொறுப்பாளராக ஆக்க வேண்டியது இருக்கிறது தான் இல்லையா? பார்க்கப் போனால் அனைவரும் அவர்களுடைய முறையில் தாதிகள் தான். உங்கள் அனைவரையுமே தீதி மற்றும் தாதி என்றோ கூறுகிறார்கள் தான் இல்லையா? இருந்தும் நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருவரைப் பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறீர்கள் தான் இல்லையா? நீங்கள் அனைவருமே ஆக்கினீர்களா அல்லது தந்தை மட்டும் தான் ஆக்கினாரா? அல்லது காரிய நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்ற காரணத்திற்காக மட்டும் அவரவர்களின் காரியத்தின் அனுசாரம் பொறுப்பாளராக ஆக்க வேண்டியதே இருக்கிறது. அதற்காக நீங்கள் அனைவரும் மகாரதி இல்லை என்று அப்படி அர்த்தம் அல்ல. நீங்களும் மகாரதிகள், மகாவீரர்கள். மாயாவிற்கு சவால் விடுபவர்கள், மகாரதி இல்லை என்றால் என்னவாக இருக்கிறார்.

பாப்தாதாவைப் பொருத்தளவில் ஒரு வார பாடத்தை கற்றுக் கொடுக்கும் குழந்தையும் மகாரதி தான். ஏனென்றால் ஒரு வார பாடத்தையும் எப்பொழுது கற்றுக் கொடுக்கிறார் என்றால், எப்பொழுது தானும் சிரேஷ்ட வாழ்க்கையை உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறாரோ அப்பொழுது தான்! சவால் விட்டிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் மகாரதி,

மகாவீர் ஆகி விட்டீர்கள். பாப்தாதா எப்பொழுதுமே ஒரு சுலோகனை அனைத்து குழந்தைகளும் காரியத்தில் கொண்டு வருவதற்காக நினைவூட்டிக் கொண்டே இருக்கிறார். ஒன்று தன்னுடைய சுயநிலையில் இருப்பது, இன்னொன்று காரிய நடவடிக்கையில் வருவது. சுயநிலையில் நினைத்திருப்பதில் அனைவரும் சிறியவர்கள் அல்ல. பெரியவர்களாகி விட்டீர்கள். காரிய நடவடிக்கையில் பொறுப்பாளராக ஆக்கவே வேண்டியது இருக்கிறது. அதாவது காரிய நடவடிக்கையில் வெற்றி அடைவதற்கான ஒரே ஒரு சுலோகன் -மரியாதை கொடுப்பது, மரியாதையை பெறுவது. மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பது தான் மரியாதையைப் பெறுவது. கொடுப்பதில் பெறுவது நிரம்பியிருக்கிறது. மரியாதை கொடுத்தீர்கள் என்றால், மரியாதை கிடைக்கும். மரியாதையை பெறுவதற்கான வழியே மரியாதையைக் கொடுப்பது. நீங்கள் மரியாதை கொடுக்கிறீர்கள், மேலும் உங்களுக்கு அது கிடைப்பதில்லை என்பது இருக்கவே முடியாது ஆனால் உள்ளப்பூர்வமாக கொடுங்கள், ஏதாவது தேவைக்காகக் கொடுக்காதீர்கள். யார் உள்ளப்பூர்வமாகக் கொடுக்கிறாரோ அவருக்கு உள்ளப்பூர்வமாக மரியாதை கிடைக்கிறது. ஏதாவது தேவைக்காக மரியாதை கொடுத்தீர்கள் என்றால், கிடைப்பதும் ஏதாவது தேவைக்காகத் தான் இருக்கும். எப்பொழுதுமே உள்ளப்பூர்வமாகக் கொடுங்கள் மற்றும் உள்ளப்பூர்வமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். இந்த சுலோகன் மூலமாக எப்பொழுதுமே தடையற்ற, எண்ணமற்ற, கவலையற்றவராக இருப்பீர்கள். எனக்கு என்னவாகும் என்ற இந்தக் கவலை இருக்காது. எனக்கு என்ன நடக்க வேண்டுமோ அது நிச்சயிக்கப்பட்டது என்ற கவலையில்லாத நிலையில் இருப்பார்கள். மேலும் அந்த மாதிரியான சிரேஷ்ட ஆத்மாவில் சிரேஷ்ட பிராப்தியானது நிகழ்காலத்திலும் மற்றும் எதிர்காலத்திலும் நிச்சயிக்கப்பட்ட ஒன்று தான். இதை யாரும் மாற்ற முடியாது. யாரும் மற்ற யாருடைய ஆசனத்தையும் பெற முடியாது என்பது நிச்சயிக்கப்பட்டது. நிச்சயிக்கப்பட்டது எனவே கவலையின்றி இருக்கிறார். இவரைத் தான் தந்தைக்குச் சமமான தந்தையைப் பின்பற்றி நடப்பவர் என்று கூறுவது. புரிந்ததா?

இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் மீது பாபாவிற்கு விசேஷ அன்பு இருக்கிறது. ஏதாவது தேவைக்கான அன்பு இல்லை. உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது. ஒரு பழைய பாடல் உள்ளது... உயர்ந்த உயர்ந்த

சுவர்கள்... இது இரட்டை வெளிநாட்டினரின் பாடல் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். சமுத்திரத்தைக் கடந்து, மதம், தேசம், பாஷை ஆகிய அனைத்து மிக உயர்ந்த சுவர்களைத் தாண்டி தந்தையின் குழந்தை ஆகி விட்டார்கள். எனவே தந்தைக்குப் பிரியமானவர்கள். பாரதவாசிகளோ தேவதைகளின் பூஜாரிகளே தான். அவர்கள் உயர்ந்த சுவர்களைத் தாண்டி வரவில்லை ஆனால் நீங்கள் அனைத்து இரட்டை வெளிநாட்டினரோ இந்த மிக உயர்ந்த சுவர்களை எவ்வளவு சுலபமாகக் கடந்து வந்துள்ளீர்கள். எனவே பாப்தாதா உள்ளப்பூர்வமாக குழந்தைகளின் இந்த விசேஷங்களின் பாடலைப் பாடுகிறார். புரிந்ததா? உங்களை குஷிப் படுத்துவதற்காக மட்டும் இதைக் கூறிக் கொண்டிருக்கவில்லை. சில குழந்தைகள் பாப்தாதாவோ அனைவரையும் குஷிப்படுத்தி விடுகிறார் என்று கூறுகிறார்கள் ஆனால் அர்த்தத்துடன் குஷிப்படுத்துகிறார். நீங்கள் பாப்தாதா அப்படியே கூறிவிடுகிறாரா அல்லது இது நடைமுறையில் உண்மையா என்று உங்களை நீங்களே கேளுங்கள். மிக உயர்ந்த சுவர்களைக் கடந்து வந்து விட்டீர்கள் தான் இல்லையா? எவ்வளவு கடினத்துடன் பயணச்சீட்டை வாங்குகிறீர்கள். இங்கிருந்து திரும்பிச் சென்றவுடனேயே மீண்டும் பணத்தைச் சேர்க்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் குழந்தைகளின் அன்பை பாப்தாதா பார்க்கிறார், அன்பின் காரணமாக வந்து சேருவதற்காக என்னென்ன வழிமுறைகளைக் கடைபிடிக்கிறார்கள், எப்படியோ வந்து சேர்ந்து விடுகிறார்கள். அந்த மாதிரி அன்பான ஆத்மாக்களின் அன்பின் சாதனத்தை பாப்தாதா பார்த்து, ஆர்வத்தை பார்த்து குஷி அடைகிறார். இந்த தூர தேசத்தில் இருப்பவர்களை, நீங்கள் எப்படி வருகிறீர்கள் என்று கேளுங்கள். கடின முயற்சி செய்து இருந்தும் வந்து சேர்ந்து விடுகிறார்கள் தான் இல்லையா? நல்லது.

எப்பொழுதும் இணைந்த ரூபத்தில் நிலைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமான அவ்யக்த உணர்வில் நிலைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் சித்தி சொரூபத்தை அனுபவம் செய்யக்கூடிய, தன்னுடைய சக்திசாலியான சமமான சொரூபத்தின் மூலமாக சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் கவலையின்றி எப்பொழுதும் நிச்சயமுள்ள வெற்றி அடையும் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# 1984 அவ்யக்த முரளி

**சான்ஃபிரான்சிஸ்கோ குரூப்புடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் தன்னை முழு உலகத்திலும் நாங்கள் விசேஷ ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் முழு உலகத்தின் பலகோடி ஆத்மாக்களிலிருந்து தந்தையைத் தெரிந்து கொள்வதற்கான பாக்கியம் விசேஷ ஆத்மாக்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையைத் தெரிந்து கொள்வது எவ்வளவு பெரிய பாக்கியம். தெரிந்து கொண்டீர்கள், சம்மந்தத்தை இணைத்தீர்கள் மேலும் பிராப்தியும் ஆகி விட்டது. இப்பொழுது தன்னை தந்தையின் அனைத்து பொக்கிஷங்களுக்கு அதிபதி என்று அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது சதா காலத்திற்கான குழந்தை என்றாலே அதிகாரி. நான் யார், யாருடைய குழந்தை என்ற இந்த நினைவை மீண்டும் மீண்டும் நினைவு செய்யுங்கள். அமிர்தவேளை சக்திசாலியான நினைவு சொரூபத்தை அனுபவம் செய்பவர் தான் சக்திசாலியாக இருக்கிறார். அமிர்தவேளை சக்திசாலியாக இருக்கவில்லை என்றால் முழு நாளிலும் மிகுந்த தடைகள் வரும். எனவே அமிர்தவேளை சக்திசாலியாக இருக்க வேண்டும். அமிர்தவேளை நேரத்தில் சுயம் தந்தை குழந்தைகளுக்கு விசேஷ வரதானம் கொடுப்பதற்காக வருகிறார். அந்த நேரத்தில் யார் வரதானத்தை பெற்றுக் கொள்கிறாரோ அவர் முழு நாளும் சகஜயோகி நிலையில் இருக்கிறார். எனவே முரளி வகுப்பு மற்றும் அமிர்தவேளையின் சந்திப்பு இந்த இரண்டுமே விசேஷமாக சக்திசாலியாக இருக்கிறது என்றால், எப்பொழுதுமே பாதுகாப்பாக இருப்பீர்கள்.

**ஜெர்மனி குரூப்புடன் சந்திப்பு:** எப்பொழுதும் தன்னை உலகிற்கு நன்மை செய்யும் தந்தையின் குழந்தை, உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அதாவது அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவர். எப்பொழுது தன்னிடம் பொக்கிஷங்கள் நிரம்பியிருக்குமோ அப்பொழுது தான் மற்றவர்களுக்கு கொடுப்பீர்கள் இல்லையா? அந்த மாதிரி எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினாலும் நிரம்பிய ஆத்மாக்கள் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகுபவர். அப்படி அனுபவம் செய்கிறீர்களா? தந்தை என்று கூறினீர்கள் என்றால் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகி விட்டார். இதே நினைவு இயல்பாகவே உலகிற்கு நன்மை செய்பவராக ஆக்கி விடும். மேலும் இதே

நினைவு எப்பொழுதும் குஷியில் பறக்க வைக்கும். இது தான் பிராமண வாழ்க்கை. சம்பன்னமாக இருக்க வேண்டும், குஷியில் பறக்க வேண்டும். மேலும் எப்பொழுதும் தந்தையின் பொக்கிஷங்களின் அதிகாரத்தின் போதையில் இருக்க வேண்டும். நீங்கள் அந்த மாதிரியான சிரேஷ்ட பிராமண ஆத்மாக்கள். நல்லது.

**வரதானம்: தன்னுடைய ஒவ்வொரு காரியம் மற்றும் வார்த்தை மூலமாக நடமாடிக் கொண்டே ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அறிவுரை கொடுக்கக்கூடிய மாஸ்டர் ஆசிரியர் ஆகுக!**

எப்படி இன்றைய நாட்களில் நடமாடும் நூலகம் இருக்கிறது, அதே போல் நீங்களும் நடமாடும் மாஸ்டர் ஆசிரியர் ஆவீர்கள். எப்பொழுதும் தன் எதிரில் மாணவர்களை பாருங்கள், நீங்கள் தனியாக இருக்கவில்லை, எப்பொழுதும் மாணவர்களின் எதிரில் இருக்கிறீர்கள். எப்பொழுதும் படித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். மேலும் படிப்பித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். தகுதியான ஆசிரியர் ஒருபொழுதும் மாணவர்களின் எதிரில் அலட்சியமாக இருக்க மாட்டார், கவனம் வைப்பார். நீங்கள் தூங்குகிறீர்கள், எழுகிறீர்கள், நடக்கிறீர்கள், உணவு அருந்துகிறீர்கள் இப்படி ஒவ்வொரு நேரத்திலும் நான் பெரிய கல்லூரியில் அமர்ந்திருக்கிறேன், மாணவர்கள் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து வாருங்கள்.

**சுலோகன்: ஆத்ம நிச்சயத்தின் மூலம் தன்னுடைய சம்ஸ்காரங்களை சம்பூர்ண தூய்மையாக ஆக்குவதுதான் சிரேஷ்ட யோகா!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 24.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண ஜென்மம் -அவதரித்த ஜென்மம்!

பாப்தாதா அனைவரையும் சப்தத்திலிருந்து விலகிய நிலைக்கு அழைத்துச் செல்வதற்காக சப்தத்தில் வருகிறார். அனைவரையும் உடலற்ற நிலை உள்ளவர்களாக ஆக்குவதற்காக பௌதீக தேசத்தில் பௌதீக உடலில் பிரவேசம் ஆகுகிறார். எப்பொழுதும் தன்னை உடலற்ற நிலையில் உள்ள சூட்சும ஃபரிஷ்தா என்று நினைத்து பௌதீக உடலில் அவதரிக்கிறீர்களா? நீங்கள் அனைவரும் அவதரித்திருக்கும் அவதாரங்கள். இதே நினைவில் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டு, செய்யும் காரியத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்ட கர்மாதீத் அவதாரம் ஆவீர்கள். அவதாரம் என்றால் சிரேஷ்ட காரியம் செய்வதற்காக மேலே இருந்து கீழே வருகிறார்கள். நீங்கள் அனைவரும் கூட உயர்ந்த நிலையில் இருந்து கீழே அதாவது உடலின் ஆதாரம் எடுத்து சேவைக்காக காரியம் செய்வதற்காக பழைய உடலில் பழைய உலகத்தில் வருகிறீர்கள் ஆனால் உங்களுடைய நிலை உயர்ந்ததாகவே இருக்கிறது. எனவே நீங்கள் அவதாரம் ஆவீர்கள். அவதாரம் எப்பொழுதும் பரமாத்மாவின் செய்தியைக் கொண்டு வருவார்கள். நீங்கள் அனைத்து சங்கமயுக சிரேஷ்ட ஆத்மாக்களும் பரமாத்மாவின் செய்தியைக் கொடுப்பதற்காக, பரமாத்மாவின் சந்திப்பை செய்விப்பதற்காக அவதரித்திருக்கிறீர்கள். இந்த உடல் இப்பொழுது உங்களுடைய உடலாக இருக்கவில்லை. உடலையும் தந்தையிடம் கொடுத்து விட்டீர்கள். அனைத்தும் உன்னுடையது என்று கூறினீர்கள் அதாவது எதுவும் என்னுடையது அல்ல. இந்த உடலை சேவைக்காக தந்தை எனக்கு கடனாகக் கொடுத்திருக்கிறார். கடனாக கொடுத்திருக்கும் பொருள் மேல் என்னுடையது என்ற அதிகாரம் இருக்க முடியாது. எப்பொழுது என்னுடைய உடல் இல்லை என்றால் உடல் உணர்வு எப்படி வர முடியும்? ஆத்மாவும் தந்தையினுடையதாக ஆகி விட்டது, உடலும் தந்தையின் உடலாக ஆகி விட்டது என்றால் நான் மற்றும் என்னுடையது

எங்கிருந்து வந்தது? என்னுடையது என்பது - 'நான் தந்தையினுடையவன்' என்ற ஒரே ஒரு எல்லைக்கு அப்பாற் பட்டது மட்டும் தான் இருக்கிறது. எப்படி தந்தையோ அப்படி நான் மாஸ்டர். அம்மாதிரி இந்த எல்லைக்கப்பாற்பட்ட என்னுடையது என்பது இருக்கிறது. எல்லைக்குட்பட்ட என்னுடையது என்பது தடைகளில் கொண்டு வரும். எல்லைக்கப்பாற்பட்ட என்னுடையது என்பது தடையற்ற, தடையை அழிப்பவராக ஆக்குகிறது. அதே போலவே எல்லைக்குட்பட்ட என்னுடையது, என்னுடைய என்னுடைய என்ற குழப்பத்தில் கொண்டு வருகிறது. மேலும் எல்லைக்கப்பாற்பட்ட என்னுடையது என்பது ஜென்மங்களின் சக்கரத்திலிருந்து விடுவிக்கிறது.

'என்னுடைய பாபா' என்பது எல்லைக்கப்பாற்பட்ட என்னுடையது. எனவே எல்லைக்குட்பட்டவை விடுபட்டு விட்டது இல்லையா! அவதாரம் ஆகி உடலின் ஆதாரம் எடுத்து சேவையின் காரியத்தில் வாருங்கள். தந்தை சேவைக்காக கடனாக அதாவது தன்னுடைய சொத்தை கொடுத்திருக்கிறார். அதை வேறு எந்த வீணான காரியத்திலும் ஈடுபடுத்த முடியாது. இல்லை என்றால் ஒப்படைக்கப்பட்ட சொத்தில் ஏமாற்றுக் காரியம் செய்ததின் கணக்கு உருவாகி விடும். அவதாரம் வீணான கணக்கை உருவாக்க மாட்டார். வந்தார், செய்தியைக் கொடுத்தார், மேலும் சென்று விட்டார். நீங்கள் அனைவரும் கூட சேவைக்காக, செய்தி கொடுப்பதற்காக பிராமண ஜென்மத்தில் வந்திருக்கிறீர்கள். பிராமண ஜென்மம் அவதரித்த ஜென்மம், சாதாரண ஜென்மம் இல்லை. எனவே எப்பொழுதும் தன்னை அவதரித்திருக்கும் உலகிற்கு நன்மை செய்பவர், எப்பொழுதும் சிரேஷ்ட அவதரித்த ஆத்மா என்ற இதே நிச்சயம் மற்றும் போதையில் இருங்கள். தற்காலிகமாக வந்திருக்கிறீர்கள் மேலும் பிறகு செல்லவும் வேண்டும். இப்பொழுது செல்ல வேண்டும் என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? நான் அவதாரம், வந்திருக்கிறேன், இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும். இந்த நினைவு தான் விடுபட்ட நிலையை மற்றும் அளவற்ற பிராப்தியின் அனுபவத்தை செய்விக்கும். ஒரு பக்கம் விடுபட்ட நிலை, இன்னொரு பக்கம் அளவற்ற பிராப்தி. இரண்டு அனுபவமும் சேர்ந்தே இருக்கும். நீங்கள் அந்த மாதிரி அனுபவம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? நல்லது.

இப்பொழுது கேட்டதை சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். கேட்பது என்றால் அந்த மாதிரி ஆவது. இன்று விசேஷமாக தன்னைப் போன்றவர்களுடன் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். நீங்கள் அனைவரும் சமமானவர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா. சத்தியமான ஆசிரியர் பொறுப்பிலிருக்கும் ஆசிரியர்களுடன் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். சேவையின் துணைவர்களோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறார். நல்லது.

எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட என்னுடையது என்பதின் நினைவு சொரூபமான, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட என்னுடைய தந்தை என்ற இதே சக்திசாலியான சொரூபத்தில் நிலைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து உடலின் ஆதாரத்தை எடுத்து அவதரித்திருக்கும் அவதாரக் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** இந்தக் குழு எப்பொழுதும் சேவை செய்யும் சேவாதாரி ஆத்மாக்களின் குழு தான் இல்லையா? எப்பொழுதும் தன்னை எல்லைக்கப்பாற்பட்ட உலக சேவாதாரி என்று நினைக்கிறீர்களா? நீங்கள் எல்லைக்குட்பட்ட சேவாதாரியோ இல்லை தான் அல்லவா? நீங்கள் அனைவருமே எல்லைக்கு அப்பாற்பட்ட வர்களா? யாரையாவது எந்த இடத்திலிருந்தாவது வேறு எந்த இடத்திற்காவது அனுப்பி விட்டோம் என்றால் செல்வதற்கு தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் அனைவரும் பறக்கும் பறவைகளா? தன்னுடைய உடல் உணர்வு என்ற கிளையை விட்டு விட்டுச் செல்லும் பறக்கும் பறவையா? அனைத்தையும் விட மிக அதிகமாக தன் பக்கம் ஈர்க்கக்கூடிய கிளை இந்த உடலின் உணர்வு. கொஞ்சமாவது பழைய சம்ஸ்காரம் தன் பக்கம் கவர்ந்திழுக்கிறது என்றால் அது உடல் உணர்வாகும். என்னுடைய சுபாவம் அந்த மாதிரி, என்னுடைய சம்ஸ்காரம் அந்த மாதிரி, நான் வாழும் முறை அந்த மாதிரி, என்னுடைய பழக்கம் அந்த மாதிரி என்ற இவை அனைத்தும் தேக உணர்வின் அடையாளம். அப்படியானால் இந்தக் கிளையை விட்டு விட்டு பறக்கும் பறவையாக இருக்கிறீர்களா? இதைத் தான் கர்மாதீத் நிலை என்று கூறுவது. எந்தவொரு பந்தனம் இல்லாத நிலை. கர்மாதீத் என்பதின் அர்த்தம் எந்தவொரு காரியத்திலிருந்தும் விடுபட்டு விட்டீர்கள் என்பதல்ல, ஆனால் காரியத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டவர். எனவே

தேகத்தின் காரியம், எப்படி சிலருடைய இயல்பாக இருக்கிறது - சௌகரியமாக இருக்க வேண்டும், சௌகரியமான நேரத்தில் உணவருந்த வேண்டும், நடந்து கொள்ள வேண்டும். இதுவும் கர்மத்தின் பந்தனம். தன் பக்கம் இழுக்கிறது. இந்த கர்மத்தின் பந்தனம், இந்த பழக்கத்திலிருந்தும் விலகியவர். ஏனென்றால் நீங்கள் பொறுப்பிலிருக்கும் ஒரு கருவி இல்லையா?

எதுவரை நீங்கள் அனைத்து பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் கர்மத்தின் பந்தனங்களிலிருந்து, தேகத்தின் சம்ஸ்காரம் சுபாவங்களிலிருந்து விலகியவராக ஆகவில்லை என்றால் மற்றவர்களை எப்படி ஆக்குவீர்கள்? எப்படி உடல் நோய் செய்த பாவ கர்மத்தின் விளைவை அனுபவிப்பது, இதே முறையில் ஒருவேளை ஏதாவது கர்மத்தின் பந்தனம் தன் பக்கம் இழுக்கிறது என்றால் இதுவும் கர்மத்தின் விளைவுகள் தடை போடுகிறது. எப்படி உடல் நோய் கர்மத்தின் விளைவு தன் பக்கம் அடிக்கடி இழுக்கிறது, வலி ஏற்படுகிறது என்றால் இழுக்கிறது தான் இல்லையா! எனவே என்ன செய்வது, பொதுவாக நன்றாகத் தான் இருக்கிறேன் ஆனால் கர்மத்தின் விளைவுகள் கடுமையாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். அதே போல் ஏதாவது விசேஷ பழைய சுபாவம் சம்ஸ்காரம் மற்றும் பழக்கம் தன் பக்கம் ஈர்க்கிறது என்றால் இதுவும் கர்மத்தின் விளைவாக ஆகி விட்டது. எந்தவொரு கர்மத்தின் விளைவை அனுபவிப்பது கர்மயோகியாக ஆகவிடாது. எனவே இதையும் கடந்தவராக ஆக வேண்டும். ஏன்? நீங்கள் அனைவருமே நம்பர் ஒன்-ல் செல்லக்கூடிய ஆத்மாக்கள் தான் இல்லையா? நம்பர் ஒன்-ன் அர்த்தமே ஒவ்வொரு விஷயத்திலும் வின் (வெற்றி) அடைபவர். எந்தவொரு குறையும் இல்லை. டீச்சர்களின் அர்த்தமே எப்பொழுதும் தன்னுடைய மூர்த்தி மூலமாக கர்மாதீத் நிலையில் உள்ள பிரம்மாபாபாவை, மேலும் விலகியிருந்து அன்பாக இருக்கும் சிவபாபாவை அனுபவம் செய்விப்பவர்கள். அவ்வாறு இந்த விசேஷம் இருக்கிறது தான் இல்லையா? நீங்கள் நண்பர்கள் தான் இல்லையா? நண்பர்கள் எப்படி உருவாவார்கள்? சமமாக இல்லாமல் நண்பர்கள் ஆக முடியாது. நீங்கள் அனைவரும் தந்தையின் நண்பர்கள், இறை நண்பர்கள் சமமாக இருப்பது தான் நட்பு, நீங்கள் தந்தையின் அடி மேல் அடியெடுத்து வைப்பவர்கள், ஏன் என்றால் நண்பர்களாகவும் இருக்கிறீர்கள் மேலும் பிறகு தலைவனின் தலைவியாகவும் இருக்கிறீர்கள். தலைவி எப்பொழுதும் தலைவனின் அடி மேல் அடி

எடுத்து வைப்பார்கள். இந்த பழக்கம் இருக்கிறது தான் இல்லையா? எப்பொழுது திருமணம் நடக்கிறது என்றால் என்ன செய்விப்பார்கள்? இதைத் தான் செய்விக்கிறார்கள் இல்லையா! இந்த முறை எங்கிருந்து உருவானது? உங்களிலிருந்து தான் உருவானது. உங்களுடையது புத்தி என்ற கால்கள் மேலும் அவர்கள் ஸ்தூலமான கால் என்று புரிந்து கொண்டார்கள். நீங்கள் ஒவ்வொரு சம்மந்தத்தில் விசேஷத்தின் சம்மந்தத்தை வைத்து நடந்து கொள்ளும் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள்.

பொறுப்பிலிருக்கும் ஆசிரியர்களுக்கு மற்றவர்களை விட மிக சகஜ சாதனம் இருக்கிறது. மற்றவர்களுக்கோ என்னதான் இருந்தாலும் மனிதர்களின் சம்மந்தத்தில் இருக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் உங்களுடைய சம்மந்தம் எப்பொழுதும் சேவை மற்றும் தந்தையோடு இருக்கிறது. உலகியல் காரியங்கள் செய்தாலும் கூட நேரம் இருக்கிறது என்றால் சேவைக்குச் செல்ல வேண்டும் என்ற இந்த நினைவு தான் எப்பொழுதுமே இருக்கிறது. மேலும் உலகியல் காரியம் யாருக்காக செய்யப்படுகிறதோ அவருடைய நினைவு இயல்பாகவே வரும். எப்படி குடும்பத்தில் தாய் தந்தை குழந்தைகளுக்காக சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு இயல்பாகவே நினைவு வரும். அதே போல் நீங்களும் எந்த நேரம் உலகியல் காரியம் செய்கிறீர்கள் என்றால் யாருக்காக செய்கிறீர்கள்? சேவைக்காக செய்கிறீர்கள் - அல்லது உங்களுக்காக செய்கிறீர்களா? ஏனென்றால் எந்தளவு சம்பாதித்ததை சேவையில் ஈடுபடுத்துவீர்களோ அந்த அளவு குஷி ஏற்படுகிறது. எனவே ஒருபொழுதும் இது குடும்ப சேவை என்று புரிந்து செய்யாதீர்கள். இதுவும் சேவைக்கான ஒரு வழி, ரூபம் மாறுபட்டது ஆனாலும் சேவைக்காகத் தான். இல்லை என்றால் பாருங்கள் ஒருவேளை உலகியல் சேவை செய்து கொண்டே தந்தையின் சேவைக்கான சாதனம் இல்லை என்றால் எங்கிருந்து வரும், எப்படி வரும் என்ற எண்ணம் மனதில் எழும். எப்பொழுது நடக்கும் என்று தெரியவில்லை. இந்த எண்ணம் நேரத்தை வீணாக இழக்க வைக்கவில்லையா? எனவே ஒருபொழுதும் உலகியல் வேலை செய்து கொண்டிருக்கிறேன் என்ற இந்த வார்த்தையைக் கூறாதீர்கள். நீங்கள் செய்யும் வேலை சேவைக்காக செய்கிறீர்கள். ஆன்மீக வேலை. பிறகு ஒருபொழுதும் சுமை அனுபவம் ஆகாது. இல்லை என்றால் சில நேரம் சுமை ஆகி விடுகிறது, எதுவரை இருக்கும், என்ன

நடக்கும் என்ற எண்ணம் எழ ஆரம்பித்து விடும். இதுவோ உங்களுக்காக பிராப்தியை மிக சுலபமாக ஆக்குவதற்கான சாதனம்.

உடல் -மனம் -பணம் மூன்று பொருட்கள் இருக்கின்றன இல்லையா! ஒருவேளை மூன்றையுமே சேவையில் ஈடுபடுத்துகிறீர்கள் என்றால் மூன்றின் பலன் யாருக்குக் கிடைக்கும்? உங்களுக்கு கிடைக்குமா அல்லது தந்தைக்குக் கிடைக்குமா? மூன்று விதத்திலும் தன்னுடைய பிராப்தியை உருவாக்க வேண்டும் என்றால் மற்றவர்களை விட இது அதிகப்படியான பிராப்தியாக ஆகி விட்டது. எனவே ஒருபொழுதும் இந்த விஷயத்தில் சுமையானவர்களாக ஆகாதீர்கள். பாவனையை மட்டும் மாற்றம் செய்யுங்கள். குடும்பத்திற்காக இல்லை ஆனால் ஆன்மீக சேவைக்காக செய்து கொண்டிருக்கிறீர்கள். இதே பாவனையை மாற்றம் செய்யுங்கள். புரிந்ததா? இப்படி ஆனால் இன்னும் இரட்டை சமர்ப்பணம் ஆகி விட்டார். பணத்தினாலும் சமர்ப்பணம் ஆகி விட்டார், அனைத்தும் தந்தைக்காக இருக்கிறது. சமர்ப்பணம் என்பதின் அர்த்தம் என்ன? என்னென்ன இருக்கிறதோ அவை அனைத்தும் தந்தைக்காக இருக்கிறது. அதாவது சேவைக்காக இருக்கிறது. இதைத் தான் சமர்ப்பணம் என்று கூறுவது. உங்களில் யார் சமர்ப்பணம் ஆகவில்லை என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். அதற்கான விழாவைக் கொண்டாடி விடுவோம். குழந்தை குட்டிகளும் பிறந்து விட்டார்கள். மேலும் நான் சமர்ப்பணம் ஆகவில்லை என்று கூறுகிறீர்கள். நீங்கள் வேண்டுமென்றால் திருமண நாளை பலே! கொண்டாடுங்கள்! ஆனால் திருமணமே ஆகவில்லை என்று இதை மட்டும் கூறாதீர்கள்! என்ன நினைக்கிறீர்கள்? முழு குரூப்புமே சமர்ப்பணமான குரூப் தான் இல்லையா?

பாப்தாதாவோ இரட்டை வெளிநாட்டினர் மற்றும் இரட்டை வெளிநாட்டின் ஸ்தானத்தில் பொறுப்பாளர் ஆகியிருக்கும் டீச்சர்களை மிகவும் மகிமை செய்கிறார். அப்படியே மகிமை செய்வதில்லை ஆனால் நீங்கள் அன்போடு விசேஷமாக கடும் உழைப்பும் செய்கிறீர்கள். உழைப்போ மிகவும் செய்ய வேண்டியதாக இருக்கிறது ஆனால் அன்போடு செய்வதினால் கடின உழைப்பாக அனுபவம் ஆவதில்லை. பாருங்கள், எவ்வளவு தூரத்திலிருந்து குரூப்பை தயார் செய்து அழைத்து வருகிறீர்கள். எனவே குழந்தைகளின் உழைப்பின் மேல் பாப்தாதாவும்

பலியாகி விடுகிறார். இரட்டை வெளிநாட்டினரின் பொறுப்பிலிருக்கும் சேவாதாரிகளிடம் ஒரு மிக நல்ல விசேஷம் இருக்கிறது. என்ன விசேஷம் என்று தெரிந்திருக்கிறீர்களா? (அனேக விசேஷங்கள் கூறப்பட்டன) என்னென்ன விஷயங்கள் சொல்லப்பட்டனவோ அவற்றை தன்னில் சோதனை செய்து, ஒருவேளை குறைவாக இருக்கிறது என்றால் நிரப்பி விடுங்கள். ஏனென்றால் மிக நல்ல நல்ல விஷயங்களைக் கூறி இருக்கிறீர்கள். ஒரு விசேஷத்தை இரட்டை வெளிநாட்டு சேவாதாரிகளிடம் பார்த்தோம் என்று பாப்தாதா கூறிக் கொண்டிருந்தார். பாப்தாதா என்ன டைரக்ஷன் கொடுக்கிறாரோ இதை செய்து வாருங்கள் என்று கூறுகிறார் என்றால் அதை நடைமுறையில் கொண்டு வருவதற்காக எப்பொழுதுமே எவ்வளவு தான் முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தாலும் ஆனால் நடைமுறையில் கண்டிப்பாக கொண்டு வரத்தான் வேண்டும் என்ற இந்த லட்சியம் நடைமுறையில் மிக நன்றாக இருக்கிறது. எப்படி குரூப்பை அழைத்து வர வேண்டும் என்று பாப்தாதா கூறினார். எனவே குரூப்-களையும் அழைத்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

வி.ஐ.பி -களின் சேவை செய்ய வேண்டும் என்று பாப்தாதா கூறினார், முதலில் மிகவும் கடினம் என்று கூறினீர்கள் - ஆனால் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று தைரியம் வைத்தீர்கள் அதனால் இப்பொழுது பாருங்கள்! இரண்டு வருடங்களாக குரூப்கள் வருகிறார்கள் தான் இல்லையா? இலண்டனிலிருந்து வி.ஐ.பி வருவது மிகவும் கடினம் என்று கூறினீர்கள் ஆனால் இப்பொழுது பாருங்கள் நடைமுறை நிரூபணத்தை பிரத்யக்ஷமாக காண்பித்தீர்கள் இல்லையா! இந்த தடவையோ பாரதத்தைச் சேர்ந்தவர்களும் ஜனாதிபதியை அழைத்து வந்து காண்பித்தார்கள் ஆனால் இருந்தும் இரட்டை வெளிநாட்டினரின் இந்த ஊக்கம், டைரக்ஷன் கிடைத்தது மேலும் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ற ஈடுபாடு மிக நன்றாக இருக்கிறது. நடைமுறை ரிசல்ட்டை பார்த்து பாப்தாதா விசேஷத்தின் மகிமை செய்கிறார். சென்டர் திறக்கிறீர்கள் என்றால் அது பழைய விஷயமாகி விட்டது. அதையோ திறந்து கொண்டே தான் இருப்பீர்கள். ஏனென்றால் அங்கு சாதனம் மிகவும் சகஜமானது. இங்கிருந்து அங்கு சென்று திறக்க முடியும். பாரதத்தில் அந்த சாதனம் இல்லை. எனவே சென்டர் திறப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் நல்ல நல்ல வாரிசு குழந்தைகளைத் தயார் செய்ய வேண்டும்.

ஒன்று வாரிசு தரம் உள்ளவர்களை தயார் செய்ய வேண்டும் மற்றும் இன்னொன்று சப்தமாக செய்தியைப் பரப்புபவர்களை தயார் செய்ய வேண்டும். இருவரும் அவசியம் தேவை. வாரிசு தரமுள்ளவர்கள் - எப்படி நீங்கள் சேவையில் ஊக்கம் உற்சாகத்தில் உடல், மனம், பணம், செல்வத்தையும் சேர்த்து அனைத்தும் இருந்தபோதிலும் சமர்ப்பண புத்தி உள்ளவர்களாக இருக்கிறீர்கள், இதைத் தான் வாரிசு தரமுள்ளவர்கள் என்று கூறுவது. அந்த மாதிரி வாரிசு தரமுள்ளவர்களையும் உருவாக்க வேண்டும். இதன் மேலேயும் விசேஷ கவனம் இருக்க வேண்டும். ஒவ்வொரு சேவை நிலையத்திலும் அந்த மாதிரி வாரிசு தரமுள்ளவர்கள் இருக்கிறார்கள் என்றால் சேவை நிலையம் அனைத்தையும் விட நம்பர் ஒன் ஆகி விடும்.

ஒன்று சேவையில் சகயோகி ஆவது, இன்னொன்று முழுமையாகவே சமர்ப்பணம் ஆவது. அந்த மாதிரி வாரிசுகள். எத்தனை பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு சேவை நிலையத்திலும் அந்த மாதிரி வாரிசுகள் இருக்கிறார்களா? இறை மாணவனாக ஆக்குபவர்கள், சேவையில் சகயோகி ஆகுபவர்கள் என்ற பட்டியலோ நீளமாக இருக்கும் ஆனால் வாரிசாக சிலர் தான் இருப்பார்கள். யாருக்கு எந்த நேரம் என்ன டைரக்ஷன் கிடைத்ததோ, என்ன ஸ்ரீமத் கிடைத்ததோ அதன் பிராகாரம் நடந்து கொண்டே இருப்பது. எனவே இரண்டு விதமானவர்களையும் உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை வையுங்கள். அந்த மாதிரியான ஒரு வாரிசு தரமுள்ளவர், அனேக சென்டர்கள் திறப்பதற்கு பொறுப்பாளர் ஆக முடியும். இதுவும் இலட்சியம் வைத்தால் நடைமுறையில் ஆகிக் கொண்டே இருக்கும். தன்னுடைய விசேஷத்தையும் புரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா! நல்லது.

திருப்தியாகவோ இருக்கிறீர்கள், அல்லது இருக்கிறீர்களா என்று கேட்க வேண்டுமா? நீங்களே திருப்திபடுத்துபவர்கள் தான். யார் திருப்திபடுத்துபவராக இருப்பாரோ சுயம் அவரும் திருப்தியாகத் தான் இருப்பார் இல்லையா! எப்பொழுதாவது சேவை குறைவாக நடக்கிறது என்று பார்த்து குழப்பத்திலோ வருவதில்லையே? சேவை நிலையத்தில் எப்பொழுது ஏதாவது தடை வருகிறது என்றால் தடையைப் பார்த்து பயப்படுவதில்லையே? உதாரணமாக மிகப் பெரிய தடை வந்து விட்டது - நெருக்கமான யாரோ ஒருவர் எதிராளி ஆகி விட்டார். மேலும் தொந்தரவு

கொடுக்கிறார் என்றால் உங்களுடைய சேவையிலோ என்ன செய்ய முடியும்? என்ன பயப்பட வேண்டும். ஒன்று அவருக்காக நன்மை பயக்கும் பாவனை வைத்து இரக்கம் வைப்பது என்பது வேறு விஷயம் ஆனால் தன்னுடைய நிலையே மேலே கீழே செல்கிறது அல்லது வீணான எண்ணம் ஓடுகிறது என்றால் இதைக் குழப்பத்தில் வருவது என்று கூறுவது. எனவே எண்ணத்தின் படைப்பையும் படைக்க வேண்டாம். இந்த எண்ணம் கூட அசைக்க முடியக்கூடாது. இதைத் தான் ஆடாத அசையாத நிலை என்று கூறுவோம். ஒன்றும் புதிதல்ல என்று அந்த மாதிரி அலட்சியமானவராகவும் ஆகி விடக்கூடாது. சேவையும் செய்யுங்கள் அவருக்காக இரக்க மனமுடையவராகவும் ஆகுங்கள், ஆனால் குழப்பத்தில் வராதீர்கள். அந்த மாதிரி நீங்கள் அலட்சியமானவரும் இல்லை, ஃபீலிங்கில் வருபவரும் இல்லை. எப்பொழுதுமே எந்த ஒரு சூழ்நிலையிலும் வாயுமண்டலத்தில் இருந்தாலும் ஆடாமல் அசையாமல் இருங்கள். எப்பொழுதாவது பொறுப்பிலிருப்பவர் ஏதாவது அறிவுரை கூறுகிறார் என்றால் அதில் குழப்பம் அடையாதீர்கள். இதை ஏன் கூறுகிறார் அல்லது இது எப்படி நடக்கும் என்று யோசிக்காதீர்கள். ஏனென்றால் யார் பொறுப்பிலிருப்பவராகி இருக்கிறாரோ அவர் அனுபவி ஆகி விட்டார். மேலும் யார் நடைமுறையில் இந்த மார்க்கத்தில் செல்பவராக இருக்கிறாரோ அதில் சில புதியவர்கள், சிலர் கொஞ்சம் பழையவர்களும் இருக்கிறார்கள் ஆனால் எந்த நேரம் என்ன விஷயம் அவரின் எதிரில் வருகிறதோ அந்த விஷயத்தின் காரணமாக அந்த அளவு தெளிவான புத்தியுடையவராகி விஷயத்தின் முதல், இடை, கடையைத் தெரிந்து கொள்ள முடியாது. நிகழ் காலத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடியும். எனவே நிகழ்காலத்தை மட்டும் பார்த்து, அந்த நேரம் முதல், இடை, தெளிவாக இல்லாத காரணத்தினால் குழப்பம் அடைந்து விடுகிறார். எப்பொழுதாவது ஏதாவது ஒரு டைரக்ஷன் ஒருவேளை தெளிவாகப் புரியவில்லை என்றால் ஒருபொழுதும் குழப்பம் அடையக்கூடாது. தைரியமாக இதைப் புரிந்து கொள்வதற்காக முயற்சி செய்வேன் என்று கூறுங்கள். அதற்காக கொஞ்சம் நேரம் கொடுங்கள் என்று கூறுங்கள். அதே நேரத்தில் குழப்பமாகி இது இல்லை, அது இல்லை, அப்படி இல்லை என்று கூறாதீர்கள். ஏனென்றால் இரட்டை வெளிநாட்டினருக்கு சுதந்திரமான மனம் அதிகமாக இருக்கிறது எனவே இல்லை என்றும் சுதந்திரமான மனதால் சொல்லி விடுவார்கள். எனவே என்ன விஷயம் கிடைக்கிறதோ அதைக் கொஞ்சம் கம்பீரமாக முதலில் யோசியுங்கள்.

அதில் ஏதாவது இரகசியம் மறைந்திருக்கிறது. இதன் இரகசியம் என்ன என்று அவரிடம் நீங்கள் கேட்கலாம். இதனால் என்ன இலாபம் ஏற்படும், எனக்கு கொஞ்சம் தெளிவாகப் புரியவையுங்கள் என்று கூறலாம் ஆனால் ஒருபொழுதும் கிடைத்த டைரக்ஷனுக்கு மறுப்புக் கூறாதீர்கள். மறுப்பு கூறுகிறீர்கள் எனவே குழப்பம் அடைகிறீர்கள். இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு இந்த விசேஷ கவனம் கொஞ்சம் கொடுக்கிறோம். இல்லை என்றால் என்ன நடக்கும். எப்படி பொறுப்பாளர் ஆகியிருக்கும் சகோதரிகளின் டைரக்ஷனைத் தெரிந்து கொள்வதற்கு நீங்கள் முயற்சி செய்யவில்லை, மேலும் குழப்பத்தில் வந்து விட்டீர்கள் என்றால் உங்களைப் பார்த்து யாருக்காக நீங்கள் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ அவர்களில் இந்த சம்ஸ்காரம் நிரம்பிவிடும். பிறகு எப்பொழுதாவது சிலர் மோதுவார், எப்பொழுதாவது வேறு சிலர் மோதுவார். பிறகு சேவை நிலையத்தில் இதே விளையாட்டு நடந்து கொண்டிருக்கும். புரிந்ததா? நல்லது.

**வரதானம்: ஞானம் மற்றும் யோகத்தின் சக்தி மூலம் ஒவ்வொரு சூழ்நிலையையும் ஒரு நொடியில் கடந்து செல்லக்கூடிய மகாவீர் ஆகுக!**

மகாவீர் என்றால் எப்பொழுதும் லைட் மற்றும் மைட் ஹவுஸ், ஞானம் லைட் மற்றும் யோகம் மைட். யார் இந்த இரண்டு சக்திகளால் நிரம்பி இருக்கிறாரோ அவர் ஒவ்வொரு சூழ்நிலையையும் ஒரு நொடியில் கடந்து விடுவார். ஒருவேளை அந்த நேரத்தில் தேர்ச்சி அடையாததற்கான சம்ஸ்காரம் ஏற்பட்டு விடுகிறது என்றால் இறுதியிலும் அந்த சம்ஸ்காரம் முழுமையாக தேர்ச்சி அடைய விடாது. யார் அந்த நேரத்தில் முழுமையாகத் தேர்ச்சி அடைகிறாரோ அவரைத் தான் மதிப்புடன் தேர்ச்சி அடைபவர் என்று கூறுவோம். தர்மராஜரும் அவருக்கு மரியாதை கொடுப்பார்.

**சுலோகன்: யோக அக்னி மூலம் விகாரங்களின் விதையை பஸ்பம் (சாம்பல்) செய்து விட்டீர்கள் என்றால் தேவையான நேரத்தில் ஏமாற்றம் கிடைக்க முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் அதிசயமான சித்திரக் கூடம்!

பாப்தாதா இன்று தன்னுடைய சித்திரக்கூடத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவிடம் எந்த சித்திரக்கூடம் இருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? இன்று வதனத்தில் ஒவ்வொரு குழந்தையின் சரித்திரத் தின் சித்திரத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். தொடக்கத்திலிருந்து இதுவரையிலும் ஒவ்வொருவரின் சரித்திரத் தின் சித்திரம் எப்படி இருந்தது என்பதைப் பார்த்தோம். யோசித்துப் பாருங்கள் சித்திரக்கூடம் எவ்வளவு பெரியதாக இருக்கும். அந்தச் சித்திரத்தில் ஒவ்வொரு குழந்தைகளின் மூன்று விசேஷமான விஷயங்களைப் பார்த்தோம். ஒன்று - தூய்மையின் சிறப்புத்தன்மை. இரண்டாவது உண்மையின் இராயல்தன்மை, மூன்றாவது சம்மந்தங்களின் நெருக்கம். இந்த மூன்று விஷயங்களையும் ஒவ்வொரு சித்திரத்திலும் பார்த்தோம்.

தூய்மையின் சிறப்புத்தன்மை ஒளி ரூபமான சித்திரத்தின் நாலாபுறங்களிலும் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் லைட் தென்பட்டது. உண்மைத்தன்மையின் ராயல்தன்மை முகத்தில் சிரித்த முகம் மற்றும் தூய்மை பிரகாசமாக இருந்தது. மேலும் சம்மந்தங்களில் நெருக்கம் இருபுருவ மத்தியில் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரமாக அதில் சில நட்சத்திரங்களோ நாலாபுறங்களிலும் பரவியிருக்கும் கிரணங்கள் மூலம் பிரகாசமாக இருந்தது. சிலர் சிறிதளவு கிரணங்களினால் பிரகாசமாக இருந்தார்கள். நெருக்கமான ஆத்மா தந்தைக்குச் சமமான எல்லைக்கப்பாற்பட்ட அதாவது நாலாபுறங்களிலும் பரவியிருக்கும் கிரணங்கள் உள்ளதாக இருந்தது. ஒளி மற்றும் சக்தி இரண்டிலும் தந்தைக்குச் சமமானவர் என்ற லைட் மற்றும் மைட் இரண்டும் தென்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மாதிரி மூன்று விசேஷங்களினால் ஒவ்வொரு குழந்தையின் சரித்திரத்தின் சித்திரத்தைப் பார்த்தோம். கூடவே தொடக்கத்தில் இருந்து இறுதி அதாவது இன்று வரையிலும்

மூன்று விஷயங்களிலுமே எப்பொழுதும் சிரேஷ்டமாக இருந்தார்களா அல்லது சில நேரம் அப்படியும் மேலும் சில நேரம் இப்படியும் இருந்தார்களா என்பதின் ரிசஸ்ட்டை ஒவ்வொருவரின் சித்திரத்தில் பார்த்தோம். எப்படி ஸ்தூல உடலில் நாடி சரியான வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறதா அல்லது மேலே கீழே போகிறதா என்று சோதனை செய்வார்கள். வேகமாக இருந்ததா அல்லது மெதுவாக இருந்ததா என்பதின் மூலம் ஆரோக்கியத்தை தெரிந்து கொள்ளலாம். அப்படி ஒவ்வொரு சித்திரத்தின் மத்தியில் இதயத்தில் லைட் கீழேயிருந்து மேலே வரை சென்று கொண்டிருந்தது. அதில் வேகமும் தென்பட்டது. ஒரே வேகத்தில் லைட் கீழே இருந்து மேலே செல்கிறதா அல்லது அவ்வப்பொழுது வித்தியாசம் ஏற்படுகிறதா என்பது தென்பட்டது. கூடவே இடை இடையில் லைட்டின் வண்ணம் மாறுகிறதா அல்லது ஒரே மாதிரி சென்று கொண்டிருக்கிறதா. மூன்றாவது நடைமுறையில் லைட் எங்கேயாவது நிற்கிறதா அல்லது சென்று கொண்டே இருக்கிறதா? இந்த விதி மூலமாக ஒவ்வொருவரின் சரித்திரத்தின் சித்திரத்தை பார்த்தோம். நீங்களும் உங்களுடைய சித்திரத்தை பார்க்க முடியும் இல்லையா!

தனிச்சிறப்பு, இராயல்தன்மை மற்றும் நெருக்கம் இந்த மூன்று விசேஷங்களினால் என்னுடைய ரூபம் எப்படி இருக்கும் என்று சோதனை செய்யுங்கள். என்னுடைய ஒளியின் நிலை எப்படி இருக்கும். வரிசைக்கிரமமாகவோ இருக்கவே இருக்கிறது ஆனால் மூன்று விசேஷங்கள் மற்றும் மூன்று விதமான ஒளியின் நிலை தொடக்கத்திலிருந்து எப்பொழுதுமே இருந்ததாக இருக்க வேண்டும். அந்த மாதிரியான சித்திரம் அதிகமானவர்களிடம் இல்லை ஆனால் குறைந்தவர்களிடம் தான் இருந்தது. மூன்று ஒளியின் நிலை மற்றும் மூன்று விசேஷங்கள். அப்படி ஆறு விஷயங்கள் ஆகி விட்டன இல்லையா. ஆறு விஷயங்களிலிருந்து அதிகமானவர்கள் நான்கு, ஐந்து வரையிலும் மற்றும் சிலர் மூன்று வரையிலும் வந்திருந்தார்கள். தூய்மையின் தனிச்சிறப்பில் ஒளிவடிவமான ரூபம் சிலருக்கு கிரீடத்திற்கு சமமாக முகத்தில் அக்கம் பக்கத்தில் இருந்தது. மேலும் சிலருக்கு பாதி உடல் வரை மேலும் சிலருக்கு முழு உடலிலும் அக்கம் பக்கத்தில் தென்பட்டது. எப்படி புகைப்படம் எடுக்கிறீர்கள் இல்லையா. யார் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தொடக்கத்திலிருந்து இதுவரை தூய்மையாக இருந்தார்கள். மனதில் தனக்காக அல்லது வேறு யாருக்காகவாவது

வீணானவை என்ற தூய்மையற்ற எண்ணம் கூட இருக்கவில்லை. எந்தவொரு பலஹீனம் மற்றும் அவகுணம் என்ற தூய்மையற்ற எண்ணத்தைத் தாரணை செய்திருக்கவில்லை. எண்ணத்தில் ஜென்மத்திலிருந்தே வைஷ்ணவனாக இருந்தார். எண்ணம் புத்திக்கான உணவு. ஜென்மத்திலிருந்தே வைஷ்ணவன் என்றால் அசுத்தம் மற்றும் அவகுணம், வீணான எண்ணத்தை புத்தி மூலமாக, மனம் மூலமாகப் கிரஹித்திருக்கவில்லை. இவரைத் தான் உண்மையான வைஷ்ணவன் மற்றும் பால பிரம்மச்சாரி என்று கூறுவது. அம்மாதிரி ஒவ்வொருவரின் சித்திரத்தில் அப்படிப்பட்ட தூய்மையின் தனிச்சிறப்பின் ரேகைகளை ஒளியின் உடல் மூலமாக பார்த்தோம். யார் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தூய்மையாக இருந்தார்கள்! (செயலில் சம்மந்தம், தொடர்பு அனைத்தும் வந்து விடுகிறது). அவருடைய நெற்றியிலிருந்து கால் வரை ஒளியின் உடல் மின்னிக் கொண்டிருக்கும் ரூபமாக இருந்தது புரிந்ததா! ஞானம் என்ற கண்ணாடியில் தன்னுடைய சித்திரத்தைப் பார்க்கிறீர்களா? மிக நல்ல முறையில் என்னுடைய சித்திரம் எப்படி இருந்தது என்பதை பாப்தாதா பார்த்திருக்கிறார், அது எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். நல்லது.

சந்திப்பவர்களின் பட்டியலோ மிக நீளமாக இருக்கிறது. அவ்யக்த வதனத்திலோ வரிசை எண்ணும் கிடையாது. மேலும் நேரத்திற்கான எந்த விஷயமும் இருக்காது. எப்பொழுது விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ மேலும் எத்தனை பேர் சந்திக்க விரும்புகிறீர்களோ சந்திக்க முடியும். ஏனென்றால் அது எல்லைக்குட்பட்ட உலகத்திலிருந்து விலகியது. இந்த பௌதீக உலகத்தில் இந்த அனைத்து பந்தனங்களும் இருக்கிறது. எனவே பந்தனமற்றவரையும் பந்தனத்தில் கட்டிப்போட வேண்டியதாக இருக்கிறது. நல்லது.

டீச்சர்களோ திருப்தியாகி விட்டீர்கள் இல்லையா? அனைவருக்கும் தன்னுடைய முழுமையான பங்கு கிடைத்தது இல்லையா? நீங்கள் பொறுப்பாளர் ஆகியிருக்கும் விசேஷ ஆத்மாக்கள். பாப்தாதாவும் விசேஷ ஆத்மாக்கள் மேல் விசேஷ மரியாதை வைக்கிறார். இருந்தும் சேவைக்கு துணைவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? பார்க்கப்போனால் அனைவருமே துணைவர்கள் தான். இருந்தாலும் பொறுப்பிலிருப்பவருக்கு தன்னை ஒரு பொறுப்பிலிருக்கும் கருவி என்று

புரிந்து கொள்வதில் தான் சேவையின் வெற்றி இருக்கிறது. சேவையில் அனேக குழந்தைகள் மிக வேகமாக ஊக்கம் உற்சாகத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு மரியாதை கொடுப்பது என்றால் தந்தைக்கு மரியாதை கொடுப்பது. மேலும் மரியாதைக்கான பலனாக தந்தை மூலமாக இதயப்பூர்வமான அன்பை பெறுவது. புரிந்ததா! நீங்கள் டீச்சர்களுக்கு மரியாதை கொடுப்பதாக அர்த்தமில்லை, ஆனால் தந்தையிடமிருந்து இதயத்தின் அன்பை பலனாகப் பெறுகிறீர்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் திலாராம் தந்தை மூலமாக இதயத்தின் அன்பைப் பெறுவதற்கு பாத்திரமான ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் தன்னுடைய தூய்மையின் தனிச்சிறப்பு, இராயல் தன்மையின் உண்மை நிலையை அனுபவம் செய்யக்கூடிய நெருக்கமான மற்றும் சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**இங்கிலாந்து குரூப்புடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** நீங்கள் அனைத்து இரகசியங்களினால் நிரம்பிய இரகசியம் தெரிந்து நடந்து கொள்ளும், யோக சொரூப ஆத்மாக்கள் தான் இல்லையா! நீங்கள் தொடக்கத்திலிருந்தே பாப்தாதாவின் பெயரை உலகின் நாலாபுறங்களிலும் பிரத்யக்ஷம் செய்வதற்காக பொறுப்பான ஆத்மாக்கள். பாப்தாதா அந்த மாதிரியான ஆதி இரத்தினங்களை, சேவையின் துணைவர்களைப் பார்த்து எப்பொழுதும் குஷி அடைகிறார். அனைவரும் பாப்தாதாவின் வலதுகரமான குரூப். மிக நல்ல நல்ல இரத்தினங்கள் இருக்கிறார்கள். சிலர் ஒரு மாதிரியும், சிலர் வேறு மாதிரியும் இருக்கிறார்கள் ஆனால் அனைவருமே இரத்தினங்கள். ஏனென்றால் நீங்களே அனுபவம் நிறைந்தவராகி மற்றவர்களை அனுபவியாக ஆக்குவதற்கு பொறுப்பாளராகியிருக்கும் ஆத்மாக்கள். அனைவரும் எவ்வளவு ஊக்கம் உற்சாகத்துடன் நினைவு மற்றும் சேவையில் எப்பொழுதும் மூழ்கியிருக்கும் ஆத்மாக்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். நினைவு மற்றும் சேவையைத் தவிர மற்ற அனைத்து பக்கங்களும் முடிவடைந்து விட்டது. ஒருவர் தான் இருக்கிறார். நான் அந்த ஒருவரினுடையவன், ஒரே ஒருவரின் இரசனையில் இருப்பவன். இது தான் அனைவரின் மனதிலிருந்து எழும் ஓசை. உண்மையிலேயே இது

தான் உயர்ந்த வாழ்க்கை. அந்த மாதிரி உயர்ந்த வாழ்க்கை உள்ளவர்கள் எப்பொழுதுமே பாப்தாதாவின் நெருக்கத்தில் இருக்கிறார்கள். நிச்சயபுத்தி உள்ளவர்கள் என்று வெளிப்படையாக நிரூபணம் கொடுப்பவர்கள். எப்பொழுதுமே ஆஹா என்னுடைய பாபா மேலும் ஆஹா என்னுடைய சிரேஷ்ட பாக்கியம் என்ற இது தான் நினைவு இருக்கிறது இல்லையா. பாப்தாதா அந்த மாதிரியான நினைவு சொரூப குழந்தைகளைப் பார்த்து ஆஹா என்னுடைய சிரேஷ்ட குழந்தைகளே என்று எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். அந்த மாதிரி குழந்தைகளின் பாடலை பாப்தாதா பாடுகிறார். இலண்டன் வெளிநாட்டு சேவைக்கான அஸ்திவாரம். நீங்கள் அனைவரும் சேவையின் அஸ்திவார கற்கள். நீங்கள் அனைவரும் உறுதியாக ஆனதின் பிரபாவத்தினால் சேவை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறது. அஸ்திவாரம் மரத்தின் வளர்ச்சியில் உள்ளடங்கி விடுகிறது, ஆனால் நீங்களோ அஸ்திவாரம் தான் இல்லையா? மரத்தின் வளர்ச்சியின் அழகைப் பார்த்து அதன் பக்கம் பார்வை செல்லும். அஸ்திவாரம் மறைந்து இருந்து விடும். அதே போல் நீங்களும் கொஞ்சம் பொறுப்பிலிருப்பவராகி மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பவர்களாக ஆகி விட்டீர்கள். என்ன தான் இருந்தாலும் முதலில் வந்தவர்கள் முதன்மையானவர்கள் தான்! மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து முன்னுக்கு கொண்டு வருவதில் உங்களுக்கு குஷி ஏற்படுகிறது இல்லையா? இந்த வெளிநாட்டினர் வந்ததினால் நாங்கள் மறைந்து விட்டோம் என்று அப்படியோ நினைப்பதில்லையே! இருந்தாலும் பொறுப்பிலிருப்பவர்கள் நீங்கள் தான். அவர்களுக்கு ஊக்கம் உற்சாகம் கொடுப்பதற்காக நீங்கள் தான் பொறுப்பாளர்கள். யார் மற்றவர்களை முன்னுக்கு வைக்கிறார்களோ சுயம் அவர்களே முன்னுக்குத் தான் இருக்கிறார்கள். எப்படி சிறு குழந்தைகளை முன்னால் செல் என்று எப்பொழுதும் கூறுவார்கள். பெரியவர்கள் பின்னால் இருப்பார்கள். சிறியவர்களை முன்னால் வைப்பது தான் பெரியவர்கள் முன்னுக்கு இருப்பது. அதற்கான பிரத்யக்ஷ பலன் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. ஒருவேளை நீங்கள் சகயோகி ஆகவில்லை என்றால் இலண்டனில் இத்தனை சென்டர்கள் திறந்திருக்காது. ஒவ்வொருவரும் அங்கங்கே அதற்கான பொறுப்பாளர்கள் ஆகியிருக்கிறீர்கள். நல்லது.

**மலேசியா, சிங்கப்பூர் குரூப்புடன் சந்திப்பு:** அனைவரும் தன்னை தந்தையின் அன்பிற்குரிய ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா?

எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இதே நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? இந்த நிலையைத் தான் ஒரே சீராக ஒருவரின் இரசனையில் இருக்கும் நிலை என்று கூறுவது. ஏனென்றால் எங்கு ஒன்று இருக்கிறதோ அங்கு ஒரே சீரான நிலை இருக்கும். அனேகம் இருக்கிறது என்றால் நிலை மேலே கீழே ஆட்டம் காணும். ஒன்றில் அனைத்தையும் பாருங்கள் என்று தந்தை சகஜ வழியைக் கூறியிருக்கிறார். அனேகர்களை நினைவு செய்வதிலிருந்து, அனேக பக்கங்களில் அலைவதிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். ஒருவர் இருக்கிறார், நான் அந்த ஒருவரினுடையவன் இந்த ஒரே சீரான நிலை மூலமாக எப்பொழுதும் தன்னை முன்னேறி செல்ல வைக்க முடியும்.

சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங்கைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது சைனாவில் சென்டர் திறப்பதற்கான எண்ணம் வைக்க வேண்டும். முழு சைனாவிலும் இப்பொழுது எந்த கிளை நிலையமும் இல்லை. அவர்களைத் தொடர்பில் கொண்டு வந்து அனுபவம் செய்வியுங்கள். தைரியத்தில் வந்து நினைத்தீர்கள் என்றால் நடந்தேறி விடும். இராஜாயோகா மூலம் பிரபுவின் அன்பு, சாந்தி, சக்தியின் அனுபவம் செய்வியுங்கள் பிறகு ஆத்மாக்கள் தானாகவே பரிவர்த்தனை ஆகி விடுவார்கள். இராஜயோகி ஆக்குங்கள், தேவதை ஆக்க வேண்டாம், இராஜயோகி தேவதையாக தானாகவே ஆகி விடுவார். நல்லது.

**போலந்து குரூப்புடன் சந்திப்பு:** அனைத்து குழந்தைகளும் தங்களுடைய இனிமையான இல்லத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்கள் என்று பாப்தாதாவிற்கு குஷி இருக்கிறது. உங்களுக்கும் நாங்கள் அந்த மாதிரியான மகான் தீர்த்த ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்து விட்டோம் என்ற குஷி இருக்கிறது இல்லையா? சிரேஷ்ட வாழ்க்கையோ பயிற்சி செய்து செய்து உருவாகியே விடும் ஆனால் அந்த மாதிரியான சிரேஷ்ட பாக்கியத்தை அடைந்து விட்டீர்கள் அதன் காரணமாக இந்த ஸ்தானத்தில் தன்னுடைய உண்மையான ஈஸ்வரிய அன்புள்ள பரிவாரத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். இவ்வளவு செலவு செய்து வந்திருக்கிறீர்கள், இவ்வளவு கடும் முயற்சி செய்து வந்திருக்கிறீர்கள், இந்த செலவு, கடின உழைப்பு அனைத்தும் பயனுள்ளதாக ஆகி விட்டது என்று இப்பொழுது புரிந்து கொள்கிறீர்கள். எங்கே வந்து சேர்ந்து விட்டோம் என்று நினைப்பதில்லையே! எவ்வளவு பரிவாரத்தின் மற்றும் தந்தையின்

# 1984 அவ்யக்த முரளி

பிரியமானவர்கள். பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் விசேஷத்தைப் பார்க்கிறார். நீங்கள் உங்களுடைய விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்களா? இவ்வளவு ஆர்வத்தோடு இவ்வளவு தொலைதூரம் வந்து சேர்ந்து விட்டீர்கள் இந்த விசேஷமோ இருக்கிறது. இப்பொழுது எப்பொழுதும் தன்னுடைய ஈஸ்வரிய பரிவாரத்தை மேலும் இந்த ஈஸ்வரிய விதி இராஜயோகத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொண்டே இருங்கள். அங்கே உங்கள் இடத்திற்கு சென்ற பிறகு இராஜயோகா கேந்திரத்தை மிக நல்ல முறையில் முன்னேற்றம் அடையச் செய்யுங்கள். ஏனென்றால் அனேக அந்த மாதிரி ஆத்மாக்கள் இருக்கிறார்கள் அவர்கள் உண்மையான அமைதி, உண்மையான அன்பு மற்றும் உண்மையான சுகத்தின் தாகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வழியோ கூறுவீர்கள் தான் இல்லையா! பொதுவாக யாராவது தண்ணீர் தாகம் உள்ளவராக இருக்கிறார், ஒருவேளை அவருக்கு தேவையான நேரத்தில் தண்ணீர் கிடைக்கிறது என்றால் அவர் வாழ்க்கை முழுவதும் தண்ணீர் கொடுத்தவரை புகழ் பாடுவார். நீங்கள் பல ஜென்மங்களின் ஆத்மாக்களின் சுகம் - சாந்தியின் தாகத்தைத் தீருங்கள். இதன் மூலம் புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள். உங்களுடைய குஷியைப் பார்த்து அனைவரும் குஷி அடைவார்கள். குஷி தான் சேவைக்கான சாதனம்.

இந்த மகான் தீர்த்த ஸ்தலத்திற்கு வந்து சேர்வதினால் அனைத்து தீர்த்த ஸ்தலங்களும் இதில் அடங்கியிருக்கிறது. இந்த மகான் தீர்த்த ஸ்தலத்தில் ஞான ஸ்நானம் செய்யுங்கள் மற்றும் என்னென்ன பலஹீனம் இருக்கிறதோ அதை தானம் செய்யுங்கள். தீர்த்த ஸ்தலத்தில் எதையாவது விட்டுச் செல்ல வேண்டியதாக இருக்கும். எதை விடுவீர்கள்? எந்த விஷயத்தில் நீங்கள் நிலைகுலைந்து போகிறீர்களோ அதைத் தான் விட வேண்டும். அவ்வளவு தான். அப்பொழுது தான் மகான் தீர்த்த ஸ்தலத்தில் வந்ததின் பலன் கிடைக்கும். இதைத் தான் தானம் செய்யுங்கள், மேலும் இதே தானத்தினால் புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள், ஏனென்றால் தீயதை விடுவது என்றால் நல்லதை தாரணை செய்வது. எப்பொழுது அவகுணத்தை விடுகிறீர்கள், குணத்தை தாரணை செய்கிறீர்கள் என்றால் புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள். இது தான் இந்த மகான் தீர்த்த ஸ்தலத்தின் வெற்றி. மகான் தீர்த்த ஸ்தலத்தில் வந்திருக்கிறீர்கள் இதுவோ மிகவும் நல்லது. வருவது என்றால்

பகவானின் பட்டியலில் இருப்பவராக ஆகி விடுவது. அந்த அளவு இந்த மகான் தீர்த்த ஸ்தலத்திற்கு சக்தி இருக்கிறது ஆனால் இன்னும் வரும் நாட்களில் என்ன செய்ய வேண்டும்? ஒன்று பாக்கியவான் ஆவது, இன்னொன்று சௌபாக்கியவான் ஆவது, மேலும் அதற்கு மேலே பல கோடி மடங்கு பாக்கியவான் ஆவது. எந்தளவு தொடர்பிலே இருப்பீர்களோ, குணங்களை தாரணை செய்து கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு பல கோடி மடங்கு பாக்கியவானாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். நல்லது.

**இரட்டை வெளிநாட்டு டீச்சர்களுடன் சந்திப்பு:** நான் மற்ற மதத்திலிருந்து இங்கு வந்திருக்கிறேன் என்று டீச்சர்களின் மனதில் ஒருபொழுதும் எண்ணம் இருக்கக்கூடாது. இதுவோ புதியவர்கள் செய்யும் காரியம், நீங்களோ பழையவர்கள் அதனால் தான் பொறுப்பிலிருப்பவராகவும் ஆகியிருக்கிறீர்கள். நான் மற்ற தர்மத்திலிருந்து இந்த தர்மத்திற்கு வந்திருக்கிறேன் என்ற எண்ணமே இருக்கக்கூடாது. இதே தர்மத்தைச் சேர்ந்தவராக இருந்தீர்கள், மேலும் இதே தர்மத்தில் வந்து விட்டீர்கள். நான் வேறு மற்றும் இவர்கள் வேறு என்ற எண்ணம் கனவில் கூட வரக்கூடாது. பாரதம் வேறு, வெளிநாடு வேறு என்பதும் இருக்கக்கூடாது. இந்த எண்ணம் ஒற்றுமையைப் பிரித்து விடுகிறது. பிறகோ நான் வேறு மற்றும் நீ வேறு ஆகி விடும் இல்லையா.? எங்கு நான் வேறு மற்றும் நீ வேறு ஆகி விடுகிறதோ அங்கு என்ன நடக்கும். பிரச்சனை இருக்கும் இல்லையா? எனவே நாம் அனைவரும் ஒன்று. இரட்டை வெளிநாட்டினர் என்று அடையாளப் படுத்துவதற்காகத் தான் பாப்தாதா கூறுகிறார். மற்றபடி நீங்கள் வேறு என்பது இல்லை. நாம் இரட்டை வெளிநாட்டினர் என்றால் வேறு பட்டவர்கள் மற்றும் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் வேறு என்று அப்படி புரிந்து கொள்ளாதீர்கள். எப்பொழுது பிராமண ஜென்மம் கிடைத்தது, பிராமண ஜென்மத்தின் காரணமாக என்னவாகி விட்டீர்கள்? பிராமணர்கள் ஒரு ஜென்மத்தை சேர்ந்தவர்கள், அதில் வெளிநாட்டினர், பாரதவாசி என்பது இருப்பதில்லை. நாம் அனைவரும் ஒரு பிராமண தர்மத்தைச் சேர்ந்தவர்கள், பிராமண வாழ்க்கை உள்ளவர்கள், மேலும் ஒரே ஒரு தந்தையின் சேவைக்கு பொறுப்பாளர். ஒருபொழுதும் எங்களுடைய கருத்து இது மேலும் இந்தியாவைச் சேர்ந்த உங்களுடைய கருத்து இது என்று அந்த வார்த்தையை ஒருபொழுதும் உபயோகிக்காதீர்கள். மாறுபட்ட

கருத்துக்களோ பாரதவாசி களிடமும் இருக்கிறது, அது வேறு விஷயம். மற்றபடி பாரதம் மற்றும் வெளிநாடு என்ற வேறுபாட்டை ஒருபொழுதும் செய்யாதீர்கள். வெளிநாட்டினர் எங்களுக்கு இப்படித் தான் இருக்கும், எங்களுடைய சுபாவம் அந்த மாதிரி, எங்களுடைய நேச்சர் அந்த மாதிரி என்று ஒருபொழுதும் யோசிக்காதீர்கள். தந்தை ஒருவர், மேலும் அனைவரும் அந்த ஒருவரினுடையவர்கள். பொறுப்பிலிருக்கும் ஆசிரியர்கள் எந்த மாதிரி வார்த்தைகளை உபயோகிப்பார்களோ அதே போல் மற்றவர்களும் பேசுவார்கள். எனவே மிக மிக யுக்தியாக ஒவ்வொரு வார்த்தையையும் பேச வேண்டும். யோகயுக்த் மற்றும் யுக்த்யுக்த் இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். சிலர் யோகத்தில் மிக முன்னுக்கு செல்கிறார்கள் ஆனால் செய்யும் காரியத்தில் யுக்தியுக்தாக இருப்பதில்லை. இரண்டின் சமநிலை இருக்க வேண்டும். யோகயுக்தின் அடையாளமே யுக்தியுக்த் தான். நல்லது.

**சேவாதாரிகளுடன் சந்திப்பு:** யக்ஞ சேவையின் பாக்கியம் கிடைப்பது என்ற இதுவும் மிகப் பெரிய பாக்கியத்தின் அடையாளம். சொற்பொழிவு நிகழ்த்தவில்லை என்றாலும், ஏழு நாள் பாடம் எடுக்கவில்லை என்றாலும் ஆனால் சேவைக்கான மதிப்பெண்களோ கிடைக்கும் இல்லையா! இதிலேயும் தேர்ச்சி அடைந்து விடுவீர்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் அதனதற்கான மதிப்பெண்கள் இருக்கிறது. என்னால் சொற்பொழிவு நிகழ்த்த முடியாது என்றால் நான் பின்னுக்கு இருக்கிறேன் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். சேவாதாரிகள் எப்பொழுதுமே நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் பலனுக்கு உரியவர்கள். குஷி ஏற்படுகிறது தான் இல்லையா! மாதர்களுக்கு மனதால் நடனம் ஆடத் தெரியுமா? வேறு எதுவும் செய்யாதீர்கள், குஷியால், மனதால் நடனம் ஆடிக் கொண்டு மட்டும் இருந்தீர்கள் என்றாலும் கூட மிகுந்த சேவை நடந்து விடும்.

**வரதானம்: சமநிலையின் பாவனை இருந்தபோதிலும் ஒவ்வொரு அடியில் விசேஷத்தை அனுபவம் செய்விக்கக்கூடிய விசேஷ ஆத்மா ஆகுக!**

ஒவ்வொரு குழந்தையிலும் அவரவர்களுக்கு என்ற விசேஷங்கள் இருக்கின்றன. விசேஷ ஆத்மாக்கள் செய்யும் காரியம் சாதாரண

ஆத்மாக்கள் செய்யும் காரியத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கும். ஒவ்வொருவர் மீதும் சமமான பாவனை தான் வைக்க வேண்டும் ஆனால் இவர் விசேஷ ஆத்மா என்று தென்பட வேண்டும். விசேஷ ஆத்மாக்கள் என்றால் வெறும் வாயளவில் சொல்பவர்கள் அல்ல, ஆனால் விசேஷ காரியம் செய்பவர். ஒவ்வொருவருக்கும் இவர் அன்பின் களஞ்சியம் என்ற உணர்வு வரும். ஒவ்வொரு அடியில், ஒவ்வொரு பார்வையில் அன்பு அனுபவம் ஆக வேண்டும். இது தான் விசேஷம்.

**சுலோகன்: உலகின் முடிவுக்கு முன்பு தன்னுடைய குறைகள், பலஹீனங்களுக்கு முடிவு கட்டுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.02.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புள்ளி மற்றும் துளியின் (சொட்டு) இரகசியம்!

இன்று கள்ளம்கபடமற்ற பாபா தனதுகள்ளமில்லாத குழந்தைகளிடம், குழந்தைகள் மற்றும் தந்தையின் அவதார தினத்தை அதாவது அலௌகீக ஆன்மீகப் பிறந்தநாளை கொண்டாட வந்திருக்கிறார். கள்ளம் கபட மற்ற பாபாவிற்கு அனைவரையும் காட்டிலும் பிரியமானவர்கள்கள்ளமில்லாத குழந்தைகள் தான்.கள்ள மில்லாதவர் என்றாலே சதா சரள சுபாவம் உடையவர்கள், நல்லுணர்வு மற்றும் தூய்மையான நிறைந்தவர்கள். மனம் மற்றும் செயல் இரண்டிலும் உண்மை மற்றும் நேர்மை, அப்படிப்பட்டகள்ளமில்லாத குழந்தைகள் போலாநாத் பாபாவைக் கூட தன்மீது கவர்ந்து இழுக்கின்றனர். போலநாத் பாபா அப்படிப்பட்ட சரள சுபாவமுள்ளகள்ளமில்லாக் குழந்தைகளின் குணங்களின் மாலையை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் அனேக பிறவிகளாக பாபாவின் பெயர் என்ற மாலையை நினைவு செய்து வந்தீர்கள் மற்றும் பாபா இப்பொழுது சங்கமயுகத்தில் குழந்தைகளுக்கு கைமாறு செய்து கொண்டிருக்கிறார். குழந்தை களின் குண மாலையை நினைவு செய்து கொண்டிருக்கிறார். போலாநாத்திற்கு அன்பான குழந்தைகள் எத்தனை பேர் இருக்கின்றனர்! எவ்வளவு ஞான சொரூபம், ஞானம் நிறைந்தவரோ, சக்தி நிறைந்தரோ அந்தளவுகள்ளமில்லாத தன்மை. பகவானுக்குகள்ளமில்லாத தன்மை பிடித்திருக்கிறது. அவ்வாறு தனது உயர்ந்த பாக்கியத்தை தெரிந்திருக்கிறீர்கள் தானே! அது பகவானேயை பற்று கொள்ள வைத்து விட்டது. தன்னுடையவர் ஆக்கி விட்டது.

இன்று பக்தர் மற்றும் குழந்தைகள் இருவருமே விசேஷமாக கொண்டாடப்படும் தினமாகும். பக்தர்கள் ஏற்பாடுகள் செய்துக் கொண்டிருக்கிறார்கள், எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், மற்றும் நீங்களோ முன்னால் அமர்ந்து இருக்கிறீர்கள். பக்தர்களின்

விளையாட்டையும் பாபா பார்த்துப் பார்த்து புன்முறுவல் செய்கிறார். மேலும் குழந்தைகளின் சந்திப்பு என்ற விளையாட்டையும் பார்த்துப் பார்த்து புன்முறுவல் செய்கிறார். ஒருபக்கம் பிரிந்திருக்கின்ற பக்த ஆத்மாக்கள், மறுபக்கம் சகஜ யோகிக் குழந்தைகள். இருவருமே தத்தமது ஈடுபாட்டினால் பிரியமானவர்களாக இருக்கின்றனர். பக்தர்களும் குறைந்தவர் அல்ல. நாளைய தினம் சூட்சம் இஷ்ட ரூபத்தில் உலா வந்து பாருங்கள். பாபாவுடன் சாலிகிராம் குழந்தைகளுக்குக் கூட விசேஷ ரூபத்தில் பூஜை நடை பெறும். பாபாவுடன் சேர்த்து நமது பூஜையையும் பக்தர்கள் எவ்வாறு செய்கிறார்கள் என்று பாருங்கள். இப்பொழுது கடைசி வரை கூட தீவிர பக்தர் சிலர் இருக்கின்றனர், அவர்கள் உண்மையான அன்புடன் பக்தி செலுத்தி பக்தியின் பாவனைக்கான சிறிது நேரத்திற்கான பலனை அனுபவம் செய்கிறார்கள். நாளைய தினம் பக்தர்களின் பக்தியில் விசேஷ ஈடுபாட்டிற்கான தினமாகும், புரிந்ததா!

நீங்கள் அனைவரும் பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவீர்களா அல்லது தன்னுடையதா? முழு கல்பத்தில் தந்தை மற்றும் குழந்தைகளுக்கு ஒரே நாளில் பிறந்த நாள் இருக்க முடியுமா? தேதி வேண்டுமென்றால் ஒன்றாக இருக்கலாம், ஆனால் வருடம் ஒன்றாக இருக்க முடியாது. தந்தை மற்றும் குழந்தைக்கு வித்தியாசம் இருக்கும் தானே! ஆனால் அலௌகீக பிறந்த நாள் தந்தை மற்றும் குழந்தைகளுக்கு இணைந்தே இருக்கிறது. நீங்கள் சொல்வீர்கள், நாங்கள் பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் என்று, மற்றும் பாபா சொல்வார் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் என்று, அதனால் அதிசயமான பிறந்த நாள் ஆகி விட்டது அல்லவா! தன்னுடையதையும் கொண்டாடுகிறீர்கள், தந்தையினுடையதையும் கொண்டாடுகிறீரகள். இதை வைத்தே புரிந்து கொள்ளுங்கள் - போலாநாத் பாபாவிற்கு குழந்தைகளுடன் எவ்வளவு அன்பு உள்ளது, அதனால் தான் பிறந்த நாள் கூட ஒன்றாக இருக்கிறது. எனவே போலாநாத்தையே பற்று கொள்ள வைத்து விட்டீர்கள் அல்லவா! பக்தர்கள் தங்கள் பக்தியின் போதையில் மயங்கியிருக்கின்றனர். மேலும் நீங்களோ அடைந்து விட்டோம் என்ற இந்தக் குஷியில் இணைந்தே கொண்டாடுகிறீர்கள், பாடுகிறீர்கள், ஆடுகிறீர்கள்! நினைவுச் சின்னமாக என்ன உருவாக்கப் பட்டுள்ளதோ, அதிலும் கூட நிறைய இரகசியங்கள் அடங்கியுள்ளன.

பூஜையில், திருவுருவச் சிலையில் குறிப்பாக இரண்டு சிறப்பம்சங்கள் இருக்கின்றன. ஒன்று புள்ளியின் சிறப்பம்சம், மற்றொன்று துளித் துளியின் சிறம்பம்சம். பூஜையின் விதியில் துளித் துளியின் மகத்துவம் உள்ளது. இந்த சமயம் குழந்தைகளாகிய நீங்கள் புள்ளியின் (பிந்து) இரகசியத்தில் நிலைத்திருக்கிறீர்கள். குறிப்பாக முழு ஞானத்தின் சாரம் ஒரு புள்ளி என்ற வார்த்தையில் அடங்கியுள்ளது. பாபாவும் புள்ளி, ஆத்மாக்கள் நீங்களும் புள்ளி, மற்றும் டிராமாவின் ஞானத்தை தாரணை செய்வதற்காக எது முடிந்தோ, ஃபினிஷ் அதாவது ஃபுல் ஸ்டாப், முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது. பரமாத்மா, ஆத்மா மற்றும் இந்த இயற்கையின் விளையாட்டு அதாவது டிராமா என்ற மூன்றின் ஞானத்தை நடைமுறை வாழ்க்கையில் புள்ளியாகத் தான் அனுபவம் செய்கிறீர்கள் தானே! எனவே பக்தியிலும் சிலைக்கு நடுவில் புள்ளிக்கு மகத்துவம் உள்ளது. மற்றொன்று - துளியின் மகத்துவம். நீங்கள் அனைவரும் நினைவில் அமர்ந்தீர்கள் அல்லது யாரையேனும் நினைவில் அமர வைக்கிறீர்கள் என்றால் எந்த விதியினால் செய்ய வைக்கிறீர்கள்? எண்ணங்களின் துளிகள் மூலமாக, நான் ஆத்மா என்ற இந்தத் துளியை கொடுத்தீர்கள். நான் பாபாவின் குழந்தை -இது இரண்டாவது துளி அவ்வாறு சுத்த எண்ணம் என்ற துளி மூலமாக சந்திப்பின் வெற்றியை அனுபவம் செய்கிறீர்கள் தானே! எனவே ஒன்று சுத்த எண்ணங்களின் நினைவு என்ற துளி, இரண்டாவது எப்பொழுதெல்லாம் ஆன்மீக உரையாடல் செய்கிறீர்களோ, பாபாவின் ஒவ்வொரு மகிமை மற்றும் பிராப்திகளின் சுத்த எண்ணம் என்ற துளியைக் கொடுக்கிறீர்கள் தானே! நீங்கள் அப்படிப்பட்டவர் பாபா! நீங்கள் எங்களை இப்படி (பிராமணன்) ஆக்கி விட்டீர்கள்! இதுபோன்ற இனிமையிலும் இனிமையான, குளிர்ச்சியான துளிகளை பாபா மீது அர்ப்பணிக்கிறீர்கள். அதாவது பாபாவுடன் ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் பேசி விட்டு யோசிக்கிறீர்கள் இல்லையா! ஒட்டு மொத்தமாக அல்ல. மூன்றாவது விஷயம் -அனைத்து குழந்தைகளும் உடல், மனம், பொருளினால் சகயோகம் என்ற துளியை அர்ப்பணிக்கிறீர்கள். எனவே நீங்கள் விசேஷமாக கூறுகிறீர்கள் சிறு துளி பெரு வெள்ளம். இவ்வளவு பெரிய உலக மாற்ற காரியம், சர்வ சக்திவானுடைய எல்லையற்ற விசால காரியம், அதில் நீங்கள் ஒவ்வொருவரும் என்னவெல்லாம் உதவி செய்கிறீர்களோ, அது துளிக்கு நிகரான உதவி தான் ஆனால் அனைவரின் ஒவ்வொரு துளியின் சகயோகத்தினால் உதவி என்ற பரந்த

கடல் ஆகி விடுகிறது. எனவே தான் பூஜைக்கான விதியில் கூட துளிக்கு மகத்துவம் காட்டப்பட்டுள்ளது.

விசேஷமாக விரதத்திற்கான விதி காட்டப்பட்டுள்ளது. விரதம் இருக்கின்றீர்கள் தானே! நீங்கள் அனைவரும் பாபாவின் உதவியாளர் ஆவதில் வீணான எண்ணங்கள் என்ற உணவின் விரதம் இருக்கின்றீர்கள் -ஒருபொழுதும் புத்தியில் அசுத்தமான வீணான எண்ணங்களை ஏற்றுக்கொள்ள மாட்டோம். இந்த விரதம் அதாவது திட சங்கல்பம் செய்கிறீர்கள் மற்றும் பக்தர்கள் அசுத்த உணவினுடைய விரதம் இருக்கின்றனர். மேலும் கூடவே நீங்கள் சதா காலத்திற்காக ஏற்றப்பட்ட ஜோதியாகி விடுகிறீர்கள் மற்றும் அவர்கள் அதனுடைய நினைவு சொரூபமாக கண் விழிக்கின்றனர். குழந்தைகளாகிய உங்களது ஆன்மீக உள்நோக்குமுகமான விதிகளை, பக்தர்கள் ஸ்தூலமாக வெளிநோக்குமுகமான விதிகளாக உருவாக்கி விட்டனர் ஆனால் காப்பி (அப்படியே செய்தல்) உங்களைப் பார்த்து செய்திருக்கிறார்கள். என்னவெல்லாம் உணர்ந்தனரோ (டச்), இரஜோ பிரதான புத்தியிருந்த காரணத்தினால் அவ்வாறே விதியே உருவாக்கி விட்டனர். அது போல் இரஜோ குண நம்பர் ஓன் பக்தர்கள், மற்றும் பக்தியின் கணக்குப் படி சதோகுண பக்தர்களோ பிரம்மா மற்றும் விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் நிமித்தமாகியிருக்கின்றனர் ஆனால் முதலில் மனதின் அன்பு மற்றும் மனதின் சக்தி இருக்கக் கூடிய காரணத்தினால் மானசீக உணர்வின் பக்தி ஆரம்பமாகிறது. இந்த ஸ்தூல விதிகள் பின்னாளில் மெது மெதுவாக அதிகரிக்கின்றன. இருந்தாலும் படைப்பவரான தந்தை, தனது பக்த ஆத்மாக்களான படைப்புகளை மற்றும் அவர்களது விதிகளைப் பார்த்து, இந்த பக்தர்களின் உணரக்கூடிய (டச்சிங்) புத்தி கூட அதிசயமானது என்று தான் சொல்வார். இருந்தாலும் இந்த விதிகள் மூலமாக புத்தியை பிஸியாக வைப்பதினால், விகாரங்களில் செல்வதிலிருந்து சிறிது ஒதுங்கியிருக்கின்றனர் அல்லவா! புரிந்ததா -உங்களது சரியான வெற்றியின் விதியானது பக்தியில் என்னென்னாக நடந்து வந்து கொண்டிருக்கிறது என்று? இதுவே நினைவுச் சின்னத்தின் மகத்துவமாகும்.

இரட்டை வெளிநாட்டு குழந்தைகளோ, பக்தியைப் பார்ப்பதிலிருந்து விலகியிருக்கின்றனர் ஆனால் உங்கள் அனைவருடைய பக்தர்களாக

இருக்கின்றனர், எனவே பக்தர்களின் விளையாட்டை குழந்தைகள் நீங்கள் அனுபவம் செய்கிறீர்கள் அதாவது பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய நமக்கு இப்பொழுதும் கூட பக்த ஆத்மாக்கள் எவ்வாறு பூஜை செய்து கொண்டிருக்கின்றனர் மற்றும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர் என்று. அவ்வாறு உணர்கிறீர்களா? பக்தர்களின் அழைப்பு எப்பொழுதாவது அனுபவம் ஆகிறதா? இரக்கம் வருகிறதா? பக்தர்களைப் பற்றிய ஞானமும் நல்ல முறையில் இருக்கின்றது தானே! பக்தர்கள் அழைக்கின்றனர், நீங்களோ புரிந்து கொள்ளவில்லை என்றால் பக்தர்களின் நிலை என்னவாகும்? எனவே பக்தர் யார்? பூஜாரிகள் யார்? பூஜை என்றால் என்ன? என்ற இந்த இரகசியத்தையும் தெரிந்திருக்கிறீர்கள். பூஜைக்குரியவர் மற்றும் பூஜாரியின் இரகசியத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் தானே! நல்லது. எப்பொழுதேனும் பக்தர்களின் அழைப்பு அனுபவம் ஆகிறதா? பாண்டவர்களுக்கும் ஆகிறதா? அல்லது சக்திகளுக்கு மட்டும் ஆகிறதா? சாலிகிராமங்களோ நிறைய இருக்கின்றனர், இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் ஆனால் தேவதைகள் இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் இருப்பதில்லை. தேவி தேவதைகளோ ஆயிரக்கான எண்ணிக்கையில் தான் இருப்பார்கள், இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் இருக்க மாட்டார்கள். நல்லது -இதைப் பற்றிய இரகசியத்தை பிறகு எப்பொழுதாவது சொல்வோம். இரட்டை வெளிநாட்டினரிலும் கூட யார் ஆரம்பத்தில் வந்தார்களோ, யார் ஆரம்பத்தில் உதாரணம் ஆனார்களோ, அவர்கள் பாண்டவர்களானலும் சரி, சக்திகளானாலும் சரி, அவர்களுக்கும் கூட விசேஷத் தன்மை இருக்கிறது தானே! பாபாவோ எல்லாரையும் விட முதலாவது பெரிய வெளிநாட்டைச் சேர்ந்தவர். அனைவரையும் விட அதிகமான நேரம் வெளிநாட்டில் இருப்பது யார்? பாபா தானே இருக்கின்றார்!

இப்பொழுது நாளுக்கு நாள் எவ்வளவு சமயம் நெருங்கி வருமோ, அவ்வளவு பக்தர்களின் அழைப்பின் குரல், அவர்களது பாவனைகள் அனைத்தும் உங்களுக்குத் தெளிவாக அனுபவமாகும். எந்த இஷ்ட தேவி மற்றும் தேவதை என்பது கூட தெரிய வரும். சற்று உறுதியாகி விடுங்கள், பிறகு இந்த அனைத்தும் தெய்வீக புத்தியின் உணர்வு மூலமாக, தெய்வீகப் பார்வையினால் தெளிவாக தென்படுவதுப் போல் அனுபவமாகும். இப்பொழுதோ அலங்கரித்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே பாபாவை வெளிப்படுத்துவது என்ற திரை விலக்கப் படவில்லை.

எப்பொழுது அலங்காரம் நிறைவு பெறுமோ, அப்பொழுது திரை விலக்கப்படும், மற்றும் தன்னையும் பார்ப்பீர்கள். பிறகு இந்த தேவியும் வந்து விட்டது, இந்த தேவதையும் வந்து விட்டார் என்ற வார்த்தை அனைவரது வாயிலிருந்தும் வெளிவரும். நல்லது!

சதா போலாநாத் பாபாவின் சரளமான உள்ளம் மற்றும் சகஜ சுபாவமுடைய சகஜயோகி,கள்ளமில்லாத குழந்தைகள், சதா புள்ளி மற்றும் துளியின் இரகசியத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடிய, தாரணை சொரூப ஆத்மாக்களுக்கு, சதா மனம், சொல், செயலில் உறுதியான எண்ணம் என்ற விரதம் இருக்கக் கூடிய ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, சதா தனது பூஜைக்குரிய சொரூபத்தில் நிலைத்திருக்கக் கூடிய பூஜ்ய ஆத்மாக்களுக்கு, போலாநாத், வரத்தை வழங்கும் வள்ளல், விதியை உருவாக்கும் பாபாவுடைய அன்பு நினைவுகள் மற்றும் சமஸ்காரம் உரித்தாகுக!

**கொடியேற்றிய பின்பு இனிய மகா வாக்கியம்!** குழந்தைகளது கொடி சதா உயர்ந்தது என்று பாபா கூறுகிறார். குழந்தைகள் இல்லையென்றால் பாபாவும் என்ன செய்வார்? நீங்கள் சொல்கிறீர்கள் பாபாவின் கொடி சதா உயர்ந்தது (பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது) மேலும் பாபா கூறுகின்றார் -குழந்தைகளது கொடி சதா உயர்ந்தது. எப்பொழுதும் அனைத்து குழந்தைகளின் நெற்றியில், வெற்றி என்ற கொடி ஏற்றப்பட்டிருக்க வேண்டும். அனைவரது கண்களில், அனைவரது நெற்றியில் வெற்றி என்ற கொடி ஏற்றப்பட்டுள்ளது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் - இந்த ஒரு கொடி மட்டும் ஏற்றப்படவில்லை, ஆனால் அனைவரது நெற்றியின் கூடவே வெற்றி என்ற கொடி அழிவில்லாமல் ஏற்றப்பட்டுள்ளது.

பாபா மற்றும் குழந்தைகளின் அதிசய பிறந்த நாளிற்கான வாழ்த்துக்கள்! நாலா புறமுமுள்ள அதிக அன்புள்ள, சேவையின் துணைவர்கள், சதா அடி மீது அடிவைக்கக் கூடிய குழந்தைகளுக்கு, இந்த அலௌகீக பிராமண வாழ்க்கையின் பிறந்த நாள் வாழ்த்துக்கள். சதா அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்களுக்குப் பிரதிபலனாக அன்பு நிறைந்த கைகள் என்ற மாலையை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்துக்

கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தை களுக்கும் இந்த பிறந்த அலௌகீக நாளை உலகின் ஒவ்வொரு ஆத்மாவும் நினைவுச் சின்னமாக கொண்டாடிக் கொண்டே வருகின்றனர். ஏனென்றால் பாபாவுடன் குழந்தைகளும், பிராமண வாழ்க்கையில் அனைத்து ஆத்மாக்களுக்கும் மிக, மிக, மிக சுகம் சாந்தி, மற்றும் சக்தியின் சகயோகம் கிடைத்திருக்கிறது. இந்த சகயோகத்தின் காரணத்தினால் அனைவரும் மனதார சிவன் மற்றும் சாலிகிராமங்களுக்கு பிறந்த நாளான சிவஜெயந்தியைக் கொண்டாடுகின்றனர். எனவே அப்படிப்பட்ட சாலிகிராம் குழந்தைகளுக்கு சிவபாபா மற்றும் பிரம்மாபாபா இருவரது சதா கோடி மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். சதா வாழ்த்துக்கள், சதா வளர்ச்சியடையுங்கள் மற்றும் சதா விதிப் பூர்வமாக வெற்றியை அடையுங்கள். நல்லது.

**விடைபெறும் நேரத்தில்:** காலை வணக்கமோ அனைவரும் சொல்கிறீர்கள், ஆனால் உங்களுக்கோ கடவுளுடன் பொழுது புலர்கிறது. அதனால் காட்லி மார்னிங் ஆகி விட்டது அல்லவா! கடவுளுடன் இரவைக் கழித்து விட்டீர்கள். மேலும் கடவுளுடன் மார்னிங் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே சதா காட் (கடவுள்) மற்றும் குட் (நல்லது) இரண்டினுடைய நினைவும் இருக்கட்டும். இறைவனுடைய நினைவு தான் குட் (நல்லது) ஆக்குகிறது. ஒருவேளை இறைவனது நினைவு இல்லையென்றால் குட் (நல்லவர்) ஆக முடியாது. உங்கள் அனைவருக்கும் எப்பொழுதும் காட்லி லைஃப் (இறை வாழ்க்கை) தான். எனவே ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு எண்ணமும் நன்மையே நன்மை தான். ஆகையால் குட் மார்னிங், குட் ஈவினிங், குட் நைட் மட்டுமல்ல, ஆனால் ஒவ்வொரு வினாடியும் கடவுளின் நினைவின் காரணத்தினால் குட் (நல்லது). அவ்வாறு அனுபவம் செய்கிறீர்கள் தானே! இப்பொழுது வாழ்க்கையே குட் (நல்லது) தான், ஏனெனில் வாழ்க்கையே கடவுளின் கூடவே இருக்கிறது. ஒவ்வொரு காரியமும் பாபாவுடன் இணைந்து செய்கிறீர்கள் தானே! தனியாகவோ செய்வது இல்லை தானே? பாபாவுடன் சாப்பிடுகிறீர்களா, அல்லது தனியாக சாப்பிடுகிறீர்களா? சதா காட் மற்றும் குட் இரண்டின் சம்மந்தத்தை நினைவில் வையுங்கள் மற்றும் கொண்டு வாருங்கள். புரிந்ததா? - நல்லது! அனைவருக்கும் பாப்தாதாவினுடைய விசேஷ அமிர்தவேளைக்கான அழிவற்ற அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: மகாதானியாகி பரந்த மனதுடன் குஷி என்ற பொக்கிஷத்தை பகிர்ந்தளிக்கக் கூடிய மாஸ்டர் இரக்க மனமுடையவர் ஆகுக!**

உலகினர் சிறிது கால மகிழ்ச்சியை அடைவதற்காக, எவ்வளவு நேரத்தையும், செல்வத்தையும் செலவழிக் கின்றனர். இருப்பினும் உண்மையான மகிழ்ச்சி கிடைப்பதில்லை. அவ்வாறு தேவைப்படும் நேரத்தில் ஆத்மாக் களாகிய நீங்கள் மகாதானியாகி பரந்த மனதுடன் மகிழ்ச்சியின் தானத்தைக் கொடுங்கள். அதற்காக இரக்கம் மனம் என்ற குணத்தை வெளிப்படுத்துங்கள். உங்களது ஜடச் சித்திரங்கள் வரதானங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆகையால் நீங்களும் சைதன்யமாக இரக்கமனமுடையவர் ஆகி பகிர்ந்தளியுங்கள். ஏனெனில் பிற வசத்தில் உள்ள ஆத்மாக்களாக இருக்கின்றனர். ஒருபொழுதும் இவ்வாறு யோசிக்காதீர்கள் -இவர்களோ கேட்கக் கூடியவர்களே அல்ல. நீங்கள் இரக்க மனமுடைவராகி கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். உங்களது சுப பாவனை அவர்களுக்கு அவசியம் பலனைக் கொடுக்கும்.

**சுலோகன்: யோக சக்தி மூலமாக ஒவ்வொரு கர்மேந்திரியத்தையும் கட்டளைப்படி நடத்தக் கூடியவர் தான் சுயராஜ்ய அதிகாரி ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 01.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஒன்றின் கணக்கு!

இன்று பாப்தாதா அனைத்து சகஜயோகி, நிரந்தர சகயோகி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். அனைத்து பக்கங்களிலிருந்தும் வந்திருக்கும் தந்தையின் குழந்தைகள் ஒரு பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை, ஒரு வழி, ஒருவரின் இரசணை, ஒருவரை மட்டும் மகிமை பாடக்கூடிய, ஒருவருடன் மட்டும் அனைத்து உறவுகளை வைத்து நடந்து கொள்ளும், ஒருவருடன் எப்பொழுதும் இருக்கக்கூடிய ஒரே பிரபு பரிவாரத்தின் ஒரு இலட்சியம், ஒரே இலட்சணம், அனைவரையும் ஒரே ஒரு சுப மற்றும் சிரேஷ்ட பாவனை யோடு பார்க்கக்கூடிய, அனைவரையும் ஒரே ஒரு சிரேஷ்ட நல்விருப்பங்களினால் எப்பொழுதும் உயரே பறக்கச் செய்யக்கூடிய, ஒரே ஒரு உலகம், ஒரே உலகத்தில் அனைத்து பிராப்தியையும் அனுபவம் செய்யக்கூடிய, கண்கள் திறந்தவுடனேயே ஒரு பாபா, ஒவ்வொரு காரியம் செய்யும் போதும் ஒரு துணைவன் பாபா, தினத்தை முடிவு செய்து, கர்மயோகா மற்றும் சேவையின் காரியத்தை முடித்து விட்டு ஒருவரின் அன்பில் ஐக்கியமாகி விடுகிறார்கள், ஒருவருடன் அன்பில் ஐக்கியமாகி இருப்பவராக ஆகி விடுகிறார்கள். அதாவது ஒருவரின் அன்பு என்ற மடியில் நிரம்பிவிடுகிறார்கள். இரவையும் பகலையும் ஒரே ஒருவருடன் அனைத்து தினசரி நடவடிக்கை களையும் செய்து கழிக்கிறார்கள். சேவையின் சம்மந்தத்தில் வந்து கொண்டு, பரிவாரத்தின் சம்மந்தத்தில் வந்து கொண்டே பலரிலும் ஒருவரைப் பார்க்கிறோர்கள். ஒரு தந்தையின் பரிவாரம், ஒரு தந்தை சேவைக்காக என்னை பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறார். இதே விதி மூலம் பலரது சம்மந்தம் தொடர்பில் வந்து கொண்டே அனேகர் களிலும் ஒருவரைப் பார்க்கிறார்கள். பிராமண வாழ்க்கையில், கதாநாயக பாத்திரம் ஏற்று செய்பவராக ஆகும் வாழ்க்கையில், மதிப்புடன் தேர்ச்சி அடைபவராக ஆகும் வாழ்க்கையில் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் என்ன கற்றுக் கொள்ள வேண்டும்? ஒன்றின் கணக்கு. ஒருவரைத் தெரிந்தார் என்றால் அனைத்தையும்

தெரிந்து கொண்டார். அனைத்தையும் அடைந்தார். ஒன்றை எழுதுவது, கற்றுக் கொள்வது, நினைவு செய்வது, அனைத்தையும் விட சரளமானது, சகஜமானது. மூன்று, ஐந்து பேர்களின் விஷயத்தை பேசாதே, ஒருவரின் விஷயத்தை பேசு என்ற பழமொழியும் பாரதத்தில் இருக்கிறது. மூவர் ஐவரின் விஷயங்கள் கடினமாக இருக்கும். ஒருவரை நினைவு செய்வது, ஒருவரை தெரிந்து கொள்வது மிக சுலபம். அந்த மாதிரி இங்கு என்ன கற்றுக் கொள்கிறீர்கள்? ஒன்று தான். கற்றுக் கொள்கிறீர்கள் இல்லையா! ஒருவரில் தான் அனைத்தும் நிரம்பி இருக்கிறது. எனவே பாப்தாதாவும் ஒருவரின் சகஜ வழியைத் தான் கூறுகிறார். ஒருவரின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் மகான் ஆகுங்கள். அனைத்து விஸ்தாரமும் ஒன்றில் நிரம்பியிருக்கிறது. அனைத்து ஞானமும் வந்து விட்டது இல்லையா. இரட்டை வெளிநாட்டினரோ ஒருவரை நல்ல முறையில் தெரிந்து கொண்டார்கள் இல்லையா! நல்லது. இன்று வந்திருக்கும் குழந்தைகளுக்கு மரியாதை கொடுப்பதற்காக, வரவேற்பு செய்வதற்காக மட்டும் ஒருவரின் கணக்கைக் கூறிவிட்டோம்.

இன்று பாப்தாதா சந்திப்பதற்காக மட்டும் வந்திருக்கிறார். இருந்தும் இன்று மற்றும் நேற்று வந்திருக்கும் குழந்தைகளுக்காக கொஞ்சம் கூறிவிட்டோம். அன்பின் காரணமாக எப்படி கடுமையான முயற்சி செய்து வருவதற்கான வழியை கையாளுகிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். கடும் உழைப்பின் மீது தந்தை யினுடைய பல கோடி மடங்கு அன்பு குழந்தைகள் மேல் இருக்கிறது. எனவே தந்தையும் அன்பு மற்றும் பொன்னான வாக்கியங்கள் மூலம் அனைத்து குழந்தைகளை வரவேற்பு செய்கிறார். நல்லது.

அனைத்து புறங்களிலுமுள்ள அன்பில் மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கு, அனைத்து அன்பில் மூழ்கியிருக்கக்கூடிய மனதால் அன்பிற்குரிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒரு தந்தையின் பாடலை பாடக் கூடிய குழந்தைகளுக்கு அன்பின் உறவை வைத்து நடந்து கொள்ளக்கூடிய துணைவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: சாரத்தில் கொண்டு வருவதற்கான சக்தி மூலமாக ஒரு நொடியில் முற்றுப்புள்ளி இடக்கூடிய பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவர் ஆகுக!**

இறுதி நேரத்தில் கடைசி பரீட்சைக்கான கேள்வியாக ஒரு நொடியில் முற்றுப்புள்ளி இடுவது இருக்கும். வேறு எதுவும் நினைவில் வரக்கூடாது. தந்தை மற்றும் நான் அவ்வளவு தான் மூன்றாவது எந்த விஷயமும் இல்லை. . . ஒரு விநாடியில் என்னுடைய பாபா வேறு யாரும் இல்லை. . . இதை யோசிப்பதிலும் நேரம் எடுக்கும் ஆனால் நிலைத்து விட வேண்டும், ஆடக்கூடாது. ஏன், என்ன . . . என்பதின் கேள்வி எழக்கூடாது அப்பொழுது தான் பற்றுதலை வென்ற நினைவு சொரூபமானவராக ஆகி விடுவீர்கள். எனவே எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விஸ்தாரத்தில் வருவதற்கும் மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது சுருக்கத்தில், சாரத்தில் வருவதற்கான பயிற்சி செய்யுங்கள். பிரேக் சக்திசாலியாக இருக்கட்டும்.

**சுலோகன்: யாருக்கு சுயமரியாதையின் அபிமானம் இல்லையோ அவர் தான் எப்பொழுதும் பணிவானவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல்!

இரட்டை வெளிநாட்டினர் என்றால் எப்பொழுதும் சுயதேசம், இனிமையான இல்லத்தின் அனுபவம் செய்பவர்கள். நான் எப்பொழுதும் சுயதேசம், இனிமையான இல்லத்தில் இருப்பவன், மாற்றான் தேசத்தில் மாற்றான் இராஜ்யத்தில் அதாவது ஆத்மீக இராஜ்யம் மற்றும் சுகத்தின் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்வதற்காக குப்த ரூபத்தில் இயற்கையின் ஆதாரத்தை எடுத்து பங்கைச் செய்வதற்காக வந்திருக்கிறேன். சுயதேசத்தைச் சேர்ந்தவன் தான், ஆனால் மாற்றான் தேசத்தில் எனது பங்கைச் செய்து கொண்டிருக்கிறேன். இது இயற்கையின் பௌதீகமானீ தேசம்; சுயதேசம் ஆத்மாவின் தேசம். இப்பொழுது இயற்கை மாயாவின் வசத்தில் இருக்கிறது. மாயாவின் இராஜ்யம் இருக்கிறது. எனவே மாற்றான் தேசம் ஆகி விட்டது. இதே இயற்கை நீங்கள் மாயாவை வென்றவர் ஆவதினால் சுகம் கொடுக்கும் உங்களுடைய சேவாதாரி ஆகி விடும். மாயாவை வென்றவர், இயற்கையை வென்றவர் ஆவதினால் தன்னுடைய சுகமான இராஜ்யம், மிக உயர்ந்த தூய்மையான இராஜ்யம் பொன்னுலகம் ஆகி விடும். இது தெளிவாக நினைவில் வருகிறது தான் இல்லையா! ஒரு நொடியில் ஆடையை மட்டும் மாற்ற வேண்டும். பழையதை விட்டு விட்டு புதிய ஆடையை அணிய வேண்டும். எவ்வளவு நேரம் எடுக்கும்? ஃபரிஷ்தாவாக இருப்பதிலிருந்து தேவதை ஆவதில் ஆடையை மட்டும் மாற்றுவதில் எவ்வளவு நேரம் எடுக்கும். இனிமையான வீட்டிற்கு சென்று அங்கிருந்து செல்வீர்கள் ஆனால் நினைவு இறுதி நேரத்தில் ஃபரிஷ்தாவாக இருக்கும் நான் தேவதையாகி விட்டேன் என்பது தான் இருக்கும். தேவதையின் உடல், தேவதையின் வாழ்க்கை, தேவதைகளின் உலகம் மிக தூய்மையான இயற்கையின் காலம் நினைவு இருக்கிறதா? அனேக தடவைகள் ராஜ்யம் செய்தது, நிரம்பியிருக்கும்

தேவதை வாழ்க்கையின் சம்ஸ்காரம் வெளிப்படுகிறதா? ஏனென்றால் எதுவரையிலும் தேவதையாக ஆகப்போகிறவர்கள் உங்களுடைய சம்ஸ்காரம் வெளிப்படவில்லை என்றால் சாகார ரூபத்தில் பொன்னுலகம் எப்படி வெளிப்படும். உங்களுடைய வெளிப்படையான எண்ணத்தினால் தேவதைகளின் உலகம் இந்த பூமியில் பிரத்யக்ஷம் ஆகும். எண்ணம் இயல்பாகவே வெளிப்படுகிறதா அல்லது இன்னும் நீண்ட காலம் இருக்கிறது என்று இப்பொழுது நினைக்கிறீர்களா? தேவதை உடல், தேவ ஆத்மாக்கள் உங்களை ஆவஹானம் செய்து கொண்டிருக்கிறது. உங்களுடைய தேவதை உடல் தென்படுகிறதா? எப்பொழுது அதை தாரணை செய்வீர்கள்? பழைய உடல் மேலேயோ உள்ளத்தின் பற்றுதல் ஏற்பட்டு விடவில்லையே? இறுக்கமான பழைய ஆடையையோ அணிந்திருக்கவில்லையே? பழைய உடல், பழைய ஆடை இன்னும் இருக்கிறது அதனால் தேவையான நேரத்தில் ஒரு நொடியில் விட முடிவதில்லை, பந்தனமற்ற நிலை என்றால் தொய்வான ஆடை அணிவது. இரட்டை வெளிநாட்டினருக்கு என்ன விருப்பமாக இருக்கிறது -தொய்வானதா அல்லது இறுக்கமானதா? இறுக்கமானதோ விருப்பம் இல்லை தான் இல்லையா? பந்தனமோ இல்லையே?

உங்களுக்கு நீங்களே எவரெடியாக இருக்கிறீர்களா? நேரத்தை விடுங்கள், நேரத்தை எண்ணிக் கொண்டிருக்காதீர்கள். இப்பொழுது இது நடக்க வேண்டும். இது நடக்க வேண்டும் என்பது நேரத்திற்கும் தெரியும், தந்தைக்கும் தெரியும். சேவைக்கும் தெரியும், தந்தைக்கும் தெரியும். சுயத்தின் சேவை மேல் திருப்தியாக இருக்கிறீர்களா? உலக சேவையை ஒரு புறம் வையுங்கள், சுயத்தைப் பாருங்கள். சுயத்தின் நிலையில் சுயத்தின் சுதந்திர இராஜ்யத்தில், சுயத்தின் மேல் திருப்தியாக இருக்கிறீர்களா? சுயத்தின் இராஜ்யத்தை சரியாக நடத்த முடியுமா? இந்த அனைத்து வேலைக்காரர்கள், மந்திரி, மகாமந்திரி அனைவரும் உங்களின் அதிகாரத்திற்குள் இருக்கிறார்களா? எங்காவது அடிமைத்தனமோ இல்லையே? எப்பொழுதாவது உங்களுடையவே மந்திரி, மகாமந்திரி ஏமாற்றத்தையோ கொடுப்பதில்லையே? எங்காவது உள்ளுக்குள்ளேயே குப்தமாக உங்களுடைய வேலைக்காரர்களே மாயாவின் துணைவர்களாக ஆகி விடுவதில்லையே? சுயத்தின் இராஜ்யத்தில் இராஜாக்கள் உங்களுடைய ஆளுமை சக்தி, கட்டுப்படுத்தும் சக்தி யதார்த்த ரூபத்தில் காரியம் செய்து

கொண்டிருக்கின்றனவா? நீங்கள் சுப எண்ணம் வைத்து நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை இடுகிறீர்கள். மேலும் வீணான எண்ணங்கள் மனதில் ஓடுகிறது என்று அப்படி இல்லையே? சகித்துக் கொள்ளும் குணத்திற்கு கட்டளை இடுகிறீர்கள், மேலும் குழப்பம் செய்யும் அவகுணம் வந்து விடுகிறது. அனைத்து சக்திகள், அனைத்து குணங்கள் ஹே சுயராஜாவே உன்னுடைய கட்டளைக்குள் இருக்கிறதா? இவை தானே உங்களுடைய இராஜ்யத்தில் உடலின் துணைவர்களாக இருப்பவர்கள் எனவே அனைவரும் உங்களுடைய கட்டளைக்குள் இருக்கிறார்களா? எப்படி இராஜாக்கள் ஆணை இடுகிறார்கள் மற்றும் அனைவரும் ஒரு நொடியில் வந்தேன் ஐயா என்று சலாம் செய்கிறார்கள், அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தி, ஆளுமை சக்தி உங்களுக்குள் இருக்கிறதா? இந்த விஷயத்தில் எவரெடியாக இருக்கிறீர்களா? தன்னுடைய பலஹீனம், தன்னுடைய பந்தனம் ஏமாற்றத்தையோ கொடுக்காதே?

இன்று பாப்தாதா சுயராஜ்ய அதிகாரிகளிடமிருந்து தன்னுடைய ராஜ்யத்தின் நிலைமையைப் பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறார். ராஜாக்கள் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் பிரஜைகளோ இல்லை தான் இல்லையா? எதனுடையவாவது அடிமை என்றால் பிரஜை அதிகாரி என்றால் இராஜா. அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? இராஜாக்கள். நீங்கள் இராஜயோகியா அல்லது பிரஜாயோகியா அனைத்து இராஜாக்களின் சபை கூடியிருக்கிறது தான் இல்லையா? சத்யுகத்தின் இராஜ சபையிலோ மறந்து விடுவீர்கள், நாம் அனைவரும் அதே சங்கமயுக வாசிகள் என்று ஒவ்வொருவரையும் தெரிந்து கொள்ள மாட்டீர்கள். இப்பொழுது மூன்று காலங்களையும் தெரிந்தவராகி ஒவ்வொருவரையும் தெரிந்திருக்கிறீர்கள், பார்க்கிறீர்கள். இப்பொழுதைய இந்த இராஜ சபை சத்யுகத்தை விட சிரேஷ்டமானது அந்த மாதிரியான இராஜ சபை சங்கமயுகத்தில் மட்டும் தான் கூடும். அனைவரின் இராஜ்யத்தின் நிலைமை சரியாக இருக்கிறது தான் இல்லையா? சரியாக இருக்கிறது என்று சப்தமாக கூறவில்லை.

பாப்தாதாவிற்கும் இந்த இராஜசபை பிரியமாக இருக்கிறது. இருந்தும் தன்னுடைய இராஜ சபையை தினசரி கூட்டி சோதனை செய்யுங்கள், ஒருவேளை ஏதாவது ஒரு வேலைக்காரன் கொஞ்சமாவது அலட்சியமானவனாகி விட்டான் என்றால் என்ன செய்வீர்கள்? அவனை

விட்டு விடுவீர்களா? நீங்கள் அனைவரும் தொடக்க காலத்தின் சரித்திரத்தை கேட்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒருவேளை ஏதாவது சிறு குழந்தை குழப்பம் செய்கிறார் என்றால் அவருக்கு என்ன தண்டனை கொடுத்தார் அவருக்கு உணவு கொடுக்காமல் நிறுத்தி விடுவது அல்லது கயிறுகளினால் கட்டி விடுவது இவையோ பொதுவான விஷயம் ஆனால் அவருக்கு தனிமையில் அமர்வதற்கான, அதிக மணி நேரங்கள் அமருவதற்கான தண்டனை கொடுத்தார். குழந்தைகள் தான் இல்லையா? குழந்தைகளோ அமர முடியாது. எனவே ஒரே இடத்தில் எந்த காரியங்களும் செய்யாமல் 4-5 மணி நேரங்கள் அமர்வது அவருக்கு எவ்வளவு பெரிய தண்டனை! அம்மாதிரி இராயல் தண்டனை கொடுத்தார் அதே போல் இங்கேயும் ஏதாவது ஒரு கர்மேந்திரியம் அப்படி, இப்படி செய்கிறது என்றால் உள்நோக்கு முகம் என்ற பட்டியில் அதை அமர வைத்து விடுங்கள். வெளிமுகமாக அதை வரவே விடாதீர்கள். இதே தண்டனையை அதற்கு கொடுங்கள் வெளியில் வருகிறது என்றால் உள்ளே தள்ளி விடுங்கள். குழந்தைகளும் செய்கிறார்கள் இல்லையா! குழந்தைகளை அமர வைக்கிறீர்கள். பிறகு அவர்கள் எழுந்து விடுகிறார்கள் என்றால் மீண்டும் அமர வைத்து விடுவார்கள். அதே போல் வெளிமுகமாக இருப்பதிலிருந்து உள்முகமாக இருப்பதின் பழக்கம் ஏற்பட்டு விடும். எப்படி சிறு குழந்தைகளுக்கு உட்காருங்கள், நினைவு செய்யுங்கள் என்ற பழக்கத்தை ஏற்படுத்துகிறார்கள் தான் இல்லையா. அவர்கள் காலை மடக்கி அமர மாட்டார்கள் நீங்கள் மீண்டும் மீண்டும் அவர்களை அமர வைப்பீர்கள் எவ்வளவு தான் அவர்கள் காலை அசைத்தாலும் நீங்கள் அவரிடம் இல்லை இல்லை அப்படியே உட்கார் என்று கூறுவீர்கள் அதே போல உள்முகமாக இருப்பதின் பயிற்சி என்ற பட்டியில் மிக நல்ல முறையில் திட எண்ணத்துடன் கட்டிப்போட்டு அமர வைத்து விடுங்கள் வேறு எந்த கயிறையும் கட்ட வேண்டாம்; ஆனால் திட எண்ணம் என்ற கயிறு, உள்நோக்கு முகம் என்ற பயிற்சியின் பட்டியில் அமர வைத்து விடுங்கள். உங்களுக்கு நீங்களே தண்டனை கொடுங்கள். மற்றவர்கள் கொடுத்தார்கள் என்றால் பிறகு என்னவாகும்? ஒருவேளை மற்றவர்கள் உங்களிடம் உங்களுடைய வேலைக்காரர்கள் சரியில்லை, அவர்களுக்கு தண்டனை கொடுங்கள் என்று கூறினார்கள் என்றால் என்ன செய்வீர்கள்? இவர் ஏன் கூறுகிறார் என்று மனதில் கொஞ்சம் நினைப்பீர்கள் இல்லையா? ஆனால் உங்களுக்கு நீங்களே கொடுத்தீர்கள் என்றால் அது சதா காலத்திற்கும் இருக்கும். மற்றவர்கள் கூறுவதினால்

சதா காலம் இருக்காது. மற்றவர்களின் சமிக்ஞைகளையும் எதுவரை தன்னுடையதாக ஆக்கவில்லையோ அதுவரை சதா காலத்திற்கு இருக்காது. புரிந்ததா?

நீங்கள் ராஜாக்கள் எப்படி இருக்கிறீர்கள்? இராஜ சபை மிகவும் நன்றாக பிடித்திருக்கிறது தான் இல்லையா? நீங்கள் அனைவரும் பெரிய இராஜாக்கள், சிறிய ராஜாக்கள் இல்லை. நல்லது! இன்று பிரம்மாபாபா முக்கியமாக இரட்டை வெளிநாட்டினரைப் பார்த்து ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார். அதைப் பற்றி பின்பு கூறுவோம். நல்லது!

எப்பொழுதும் மாயாவை வென்றவர், இயற்கையை வென்றவர், இராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள், குணங்கள் மற்றும் அனைத்து சக்திகளின் பொக்கிஷங்களை தன்னுடைய அதிகாரத்தின் மூலம் காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய, எப்பொழுதும் சுயராஜ்யம் மூலமாக அனைத்து வேலைக்காரர்களையும் நிரந்தரமான அன்பிற்குரிய துணைவர்களாக ஆக்கக்கூடிய எப்பொழுதும் பந்தனமற்று எவரெடியாக இருக்கக்கூடிய திருப்தியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**ஆஸ்திரேலியா குரூப்புடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் சமநிலை வைத்து பாப்தாதா மற்றும் அனைத்து ஆத்மாக்கள் மூலமாக ஆசீர்வாதங்களை பெறுபவர்கள் தான் இல்லையா. எப்பொழுதும் முயற்சி செய்வதின் கூடவே ஆசீர்வாதங்கள் பெற்றுக் கொண்டே முன்னேறிக் கொண்டிருப்பது தான் பிராமண வாழ்க்கையின் விசேஷம். பிராமண வாழ்க்கையில் இந்த ஆசீர்வாதம் ஒரு லிஃப்ட்டின் வேலை செய்கிறது. இதன் மூலமாக பறக்கும் கலையின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். ஆஸ்திரேயாவில் இருப்பவர்கள் மேல் பாப்தாதாவிற்கு விசேஷ அன்பு இருக்கிறது, ஏன்? ஏனென்றால் எப்பொழுதும் ஒருவர் அனேகர்களை அழைத்து வருவதில் தைரியம் மற்றும் ஊக்கத்தில் இருக்கிறார்கள். இந்த விசேஷம் தந்தைக்கும் பிரியமானது. ஏனென்றால் தந்தையின் காரியமே அதிகத்திலும் அதிக ஆத்மாக்களை ஆஸ்தியின் அதிகாரிகளாக ஆக்குவது தந்தையை பின்பற்றி நடக்கும் குழந்தைகள் விசேஷமாக பிரியமானவர்களாக இருப்பார்கள் இல்லையா? வந்தவுடனேயே நல்ல

ஊக்கம் இருக்கிறது. ஆஸ்திரேலியாவின் பூமிக்கு இது ஒரு வரதானமாக கிடைத்திருக்கிறது. ஒருவர் அனேகர்களுக்கு பொறுப்பாளர் ஆகி விடுகிறார். பாப்தாதாவோ ஒவ்வொரு குழந்தையின் மகிமையின் மாலையை ஜெபித்துக் கொண்டே இருக்கிறார். ஆஸ்திரேலியாவிற்கு விசேஷமும் அதிகம் இருக்கிறது, ஆனால் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் மாயாவிற்கும் கொஞ்சம் அதிகமாகப் பிரியமானவர்கள். யார் தந்தைக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மாயாவிற்கும் பிரியமானவர்கள் ஆகி விடுகிறார்கள். எத்தனை நல்ல நல்ல குழந்தைகள் கொஞ்ச நேரத்திற்காக கூட மாயாவின் குழந்தைகளாக ஆகியே விடுகிறார்கள் தான் இல்லையா. நீங்கள் அனைவருமோ அந்த மாதிரி பிஞ்சானவர்களோ இல்லையே. உங்களில் யாராவது மாயாவின் சுழற்சியில் வருபவர்களோ இல்லையே? பாப்தாதாவிற்கு இப்பொழுது கூட அந்தக் குழந்தைகள் நினைவில் இருக்கிறார்கள். என்ன நடக்கிறது என்றால் ஏதாவது ஒரு விஷயத்தை முழுமையாக புரிந்து கொள்ளாத காரணத்தினால் ஏன் மற்றும் என்ன என்பதில் வந்து விடுகிறார்கள், பிறகு மாயா வருவதற்கான கதவுகள் திறந்து விடுகிறது. நீங்களோ மாயாவின் கதவுகளை தெரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா. எனவே ஏன், என்ன என்பதில் செல்லாதீர்கள். மேலும் மாயா வருவதற்கான வாய்ப்பைக் கொடுக்காதீர்கள். எப்பொழுதும் இரட்டை பூட்டு போடப்பட்டு இருக்கட்டும். நினைவு மற்றும் சேவை தான் இரட்டைப் பூட்டு. சேவை மட்டும் இருக்கிறது என்றால் அது ஒரு பூட்டு. நினைவு மட்டும் இருக்கிறது, சேவை இல்லை என்றால் அதுவும் ஒரு பூட்டு. இரண்டின் சமநிலை இருப்பது தான் இரட்டைப் பூட்டு. பாப்தாதாவின் டி.வி-யில் உங்களுடைய புகைப்படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பின்பு இந்த போட்டோவில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று பாப்தாதா காண்பிப்பார். நல்லது! இருந்தாலும் எண்ணிக்கையில் நிச்சயத்துடன், தைரியத்துடன் நல்ல எண்ணிக்கை வந்திருக்கிறது. நீங்கள் தந்தைக்கு அதிகமாக பிரியமானவர்களாக இருக்கிறீர்கள். எனவே மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான யுக்தியைக் கூறினோம். நல்லது! ஓம் சாந்தி.

**வரதானம்: சாரத்தில் கொண்டு வருவதற்கான சக்தி மூலமாக ஒரு நொடியில் முற்றுப்புள்ளி இடக்கூடிய பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவர் ஆகுக!**

இறுதி நேரத்தில் கடைசி பரீட்சைக்கான கேள்வியாக ஒரு நொடியில் முற்றுப்புள்ளி இடுவது இருக்கும். வேறு எதுவும் நினைவில் வரக்கூடாது. தந்தை மற்றும் நான் அவ்வளவு தான் மூன்றாவது எந்த விஷயமும் இல்லை ஒரு விநாடியில் என்னுடைய பாபா வேறு யாரும் இல்லை இதை யோசிப்பதிலும் நேரம் எடுக்கும் ஆனால் நிலைத்து விட வேண்டும், ஆடக்கூடாது. ஏன், என்ன என்பதின் கேள்வி எழக்கூடாது அப்பொழுது தான் பற்றுதலை வென்ற நினைவு சொரூபமானவராக ஆகி விடுவீர்கள். எனவே எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விஸ்தாரத்தில் வருவதற்கும் மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது சுருக்கத்தில் சாரத்தில் வருவதற்கான பயிற்சி செய்யுங்கள் பிரேக் சக்திசாலியாக இருக்கட்டும்.

**சுலோகன்: யாருக்கு சுயமரியாதையின் அபிமானம் இல்லையோ அவர் தான் எப்பொழுதும் பணிவானவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அமைதி சக்தியின் மகத்துவம்!

அமைதிக்கடல் தந்தை தன்னுடைய அமைதியின் அவதார குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இன்றைய உலகத்தில் அனைத்தையும் விட மிக அவசியமான ஒன்று அமைதி. அதே அமைதியை வழங்குபவர்கள் குழந்தைகள் நீங்கள். யாராவது எவ்வளவு தான் அழியும் பணம், செல்வம் மற்றும் அழியும் சாதனம் மூலமாக அமைதியைப் பெற விரும்பினாலும் உண்மையான அழியாத அமைதி கிடைக்க முடியாது. இன்றைய உலகம் செல்வம் நிறைந்ததாக இருந்தும், சுகத்தின் சாதனங்கள் இருந்தும். ஆத்மாக்கள் அழியாத நிரந்தர அமைதியின் பிச்சைக்காரர்களாக உள்ளனர். அந்த மாதிரி அமைதியை யாசிக்கும் ஆத்மாக்களுக்கு நீங்கள் மாஸ்டர் அமைதியின் வள்ளல், அமைதியின் களஞ்சியம், அமைதி சொரூப ஆத்மாக்கள் அஞ்சலி கொடுத்து அனைவரின் அமைதியின் தாகத்தைத் தீர்த்து, அமைதியின் விருப்பத்தை நிறைவேற்றம் செய்யுங்கள். பாப்தாதா விற்கு அமைதியற்ற குழந்தைகளைப் பார்த்து இரக்கம் வருகிறது. இவ்வளவு முயற்சி செய்து அறிவியல் சக்தி மூலம் எங்கிருந்து எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள், என்னென்ன உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், பகலை இரவாகவும் ஆக்க முடியும், இரவைப் பகலாகவும் ஆக்க முடியும் ஆனால் தன்னுடைய ஆத்மாவின் இயற்கையான குணம் அமைதியை அடைய முடியாது. எவ்வளவு தான் அமைதியை அடைவதற்காக ஓடுகிறார் களோ அந்த அளவே அற்ப கால அமைதிக்குப் பிறகு முடிவாக அமைதியின்மை தான் கிடைக்கிறது. அழியாத அமைதி, அனைத்து ஆத்மாக்களின் ஈஸ்வரிய பிறப்புரிமை ஆனால் பிறப்புரிமையை அடைவதற்காக எவ்வளவு உழைப்பு செய்கிறார்கள். ஒரு நொடிக்கான பிராப்தி ஆனால் ஒரு நொடியில் அடையும் பிராப்தியைத் தேடி முழுமையான அறிமுகம் இல்லாத காரணத்தினால் எவ்வளவு தட்டு தடுமாறுகிறார்கள், கூக்குரல் இடுகிறார்கள், கதறுகிறார்கள், நொந்து போகிறார்கள். அந்த மாதிரி

# 1984 அவ்யக்த முரளி

அமைதியைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் தன்னுடைய ஆத்மீக சகோதரர்களுக்கு, சகோதர சகோதரனின் திருஷ்டியைக் கொடுங்கள். இதே திருஷ்டி மூலம் தான் அவர்களுடய உலகம் மாறும். நீங்கள் அனைத்து அமைதியின் அவதார ஆத்மாக்கள் எப்பொழுதும் அமைதி சொரூப நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? அமைதியின்மைக்கு நிரந்தரமாக விடை கொடுத்து விட்டீர்கள் இல்லையா. அமைதியின்மையின் விடையளிப்பு விழாவைக் கொண்டாடி விட்டீர்களா அல்லது இனி மேல் தான் கொண்டாட வேண்டுமா? யாரெல்லாம் அமைதியின்மயின் விடையளிப்பு விழாவைக் கொண்டாட வில்லையோ, மேலும் இனி மேல் தான் கொண்டாட வேண்டும் என்றிருக்கிறார்களோ அவர்கள் இங்கே இருக்கிறார்களா? அதற்கான தேதியை நிர்ணயம் செய்து விட்டீர்களா? யாருக்கு விழா கொண்டாட வேண்டியது இருக்கிறதோ, அவர்கள் கையை உயர்த்துங்கள். ஒருபொழுதும் கனவில் கூட அமைதியின்மை வர வேண்டாம். கனவும் அமைதி நிறைந்ததாக ஆகி விட்டது தான் இல்லையா? அமைதியின் வள்ளல் தந்தை, நீங்கள் அமைதி சொரூபமானவர்கள். தர்மமும் அமைதி, காரியமும் அமைதி என்றால் அமைதியின்மை எங்கிருந்து வந்தது. நீங்கள் அனைவரும் செய்யும் காரியம் என்ன? அமைதி கொடுப்பது. இப்பொழுது கூட உங்கள் அனைவரின் பக்தர்கள் ஆரத்தி எடுக்கிறார்கள் என்றால் என்ன கூறுகிறார்கள். சாந்தி தேவா! என்று அப்படி இது யாருக்கு ஆரத்தி எடுக்கிறார்கள்? உங்களுடையதா அல்லது தந்தையினுடையது மட்டும் தானா? சாந்தி தேவனின் குழந்தைகள் எப்பொழுதும் சாந்தியின் பெரும் வள்ளல், வரதானி ஆத்மாக்கள். அமைதியின் கிரணங்களை உலகத்தில் மாஸ்டர் ஞான சூரியனாகி பரப்புபவர்கள் என்ற இந்த போதை இருக்கிறது தான் இல்லையா? தந்தையுடன் சேர்ந்து நானும் மாஸ்டர் ஞான சூரியன் மற்றும் அமைதியின் கிரணங்களைப் பரப்பும் மாஸ்டர் சூரியன்.

ஒரு விநாடியில் இயற்கையான குணத்தின் அறிமுகம் கொடுத்து சுயரூபத்தில் நிலைத்திருக்கச் செய்ய முடியும் இல்லையா? தன்னுடைய உள்உணர்வு மூலமாக, எந்த உள்உணர்வு? எந்த ஆத்மாவிற்கும் அதாவது என்னுடைய இந்த சகோதரனுக்கும் தந்தையின் ஆஸ்தி கிடைத்து விட வேண்டும் என்ற இந்த நல்ல உள்உணர்வு மற்றும் இந்த சுபபாவனை மூலம் அனேக ஆத்மாக்களுக்கு அனுபவம் செய்விக்க முடியும், ஏன்?

பாவனையின் பலன் அவசியம் கிடைக்கிறது. உங்கள் அனைவருக்கும் சிரேஷ்ட பாவனை இருக்கிறது. சுயநலமற்ற பாவனை இருக்கிறது, இரக்கத்தின் பாவனை, நன்மை பயக்கும் பாவனை இருக்கிறது. அந்த மாதிரி பாவனையின் பலன் கிடைக்கவில்லை என்பது இருக்கவே முடியாது. எப்பொழுது விதை சக்திசாலியாக இருக்கிறது என்றால், பழம் அதாவது பலனும் அவசியம் இருக்கிறது. இந்த சிரேஷ்ட பாவனையின் விதைக்கு எப்பொழுதும் நினைவு என்ற தண்ணீர் விட்டுக் கொண்டே இருந்தீர்கள் என்றால், சக்திசாலியான பலன், உடனடி பலன் ரூபத்தில் அவசியம் பிராப்தி ஆகியே விடும். ஆகுமா அல்லது ஆகாதா? என்ற கேள்வியே இல்லை. எப்பொழுதும் சக்திசாலியான நினைவின் தண்ணீர் இருக்கிறது அதாவது அனைத்து ஆத்மாக்களுக்காக சுபாவனை இருக்கிறது என்றால், உலக அமைதிக்கான பிரத்யக்ஷ பலன் கண்டிப்பாக கிடைக்கும். அனைத்து ஆத்மாக்களின் பல ஜென்மங்களின் விருப்பத்தை தந்தையுடன் சேர்ந்து அனைத்து குழந்தைகளும் நிறைவேற்றி கொண்டு இருக்கிறீர்கள். மேலும் அனைவருக்கும் அவசியம் கிடைத்து விடும்.

எப்படி இப்பொழுது அமைதியின்மையின் சப்தம் நாலாபுறங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உடல், மனம், பணம், செல்வம், மனிதர்கள் அனைத்து பக்கங்களிலிருந்தும் அமைதியின்மையை அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். பயம், அனைத்து பிராப்திகளின் சாதனங்களும் அமைதிக்குப் பதிலாக அமைதியின்மையை அனுபவம் செய்வித்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய ஆத்மாக்கள் ஏதாவது பயத்தின் வசமாகியிருக்கிறார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள், நடந்து கொண்டிருக்கிறார்கள், சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள், அற்ப கால மகிழ்ச்சியையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பயத்தின் கூடவே, நாளை என்னவாகும் என்று தெரியாது. எங்கு பயத்தின் சிம்மாசனம் இருக்கிறதோ, எப்பொழுது தலைவர்களும் பயத்தின் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார்கள் என்றால், பிரஜைகளின் கதி என்னவாகும்? எவ்வளவு பெரிய தலைவராக இருப்பாரோ அந்த அளவு மெய்காப்பாளர்கள் இருப்பார்கள். ஏன்? பயம்! இல்லையா? பயத்தின் சிம்மாசனத்தில் அற்பகாலத்தின் மகிழ்ச்சியாக என்னவிருக்கும்? அமைதி நிறைந்ததாகவா அல்லது அமைதியற்றதாகவா? பாப்தாதா அந்த மாதிரி பயம் நிறைந்த குழந்தைகளுக்கு சதா காலத்திற்கு சுகம் நிறைந்த, அமைதி நிறைந்த வாழ்க்கையைக் கொடுப்பதற்காக அனைத்து

குழந்தைகள் உங்களை அமைதியின் அவதாரத்தின் ரூபத்தில் பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறார். அமைதியின் சக்தி மூலம் செலவின்றி எங்கிருந்து எங்கு வரை சென்றடைய முடியும்? இந்த உலகத்தை விட்டு தொலைதூரம் தன்னுடைய இனிமையான இல்லத்திற்கு எவ்வளவு சுலபமாக சென்றடைந்து விடுகிறீர்கள். கடினம் அனுபவம் ஆகிறதா? அமைதியின் சக்தி மூலம் இயற்கையை வென்றவர், மாயாவை வென்றவராக எவ்வளவு சுலபமாக ஆகிறீர்கள்? எதன் மூலமாக? ஆத்மீக சக்தி மூலமாக எப்பொழுது அணு மற்றும் ஆத்மீகம் இரண்டு சக்திகளும் இணைந்து விடுமோ அப்பொழுது ஆத்மீக சக்தி மூலம் அணு சக்தியும் மிகத் தூய்மையான புத்தி மூலம் சுகத்தின் காரியத்தில் ஈடுபடுத்தப்படும். அப்பொழுது இரண்டு சக்திகளின் இணைப்பு மூலமாக அமைதி நிறைந்த உலகம் இந்த பூமியில் பிரத்யக்ஷம் ஆகும். ஏனென்றால் அமைதி, சுகம் நிறைந்த சொர்க்க இராஜ்யத்தில் இரண்டு சக்திகளும் இருக்கும். தூய்மையான புத்தி என்றால் எப்பொழுதும் சிரேஷ்ட, சத்திய காரியம் செய்யும் புத்தி. சத்தியம் என்றால், அழியாதது என்ற அர்த்தமும் இருக்கிறது. ஒவ்வொரு காரியமும் அழியாத தந்தை, அழியாத ஆத்மா என்ற இந்த நினைவின் மூலம் அழியாத பிராப்தி உடையதாக இருக்கும். எனவே தான் சத்திய காரியம் என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி நீங்கள் சதா காலத்திற்கும் அமைதி கொடுக்கக்கூடிய அமைதியின் அவதாரம். புரிந்ததா. நல்லது!

அந்த மாதிரி எப்பொழுதும் சதோபிரதான நிலை மூலமாக சத்திய காரியம் செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய சக்திசாலி பாவனை மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு சாந்தியின் பலன் கொடுக்கக்கூடிய, எப்பொழுதும் மாஸ்டர் வள்ளலாகி, சாந்தி தேவனாகி சாந்தியின் கிரணங்களை உலகில் பரப்பக்கூடிய அந்த மாதிரி தந்தையின் விசேஷ காரியத்தில் சகயோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி லண்டனைச் சேர்ந்த ஜோசிபசன் பாப்தாதாவை சந்திக்கிறார்:** அமைதியின் சக்தியின் அனுபவத்தையும் அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் அமைதியின் சக்தி முழு உலகத்தையும் அமைதி நிறைந்ததாக ஆக்கக்கூடியது. நீங்களும் அமைதியை விரும்பும் ஆத்மா தான் இல்லையா? அமைதியின்

சக்தி மூலமாக அறிவியல் சக்தியையும் யதார்த்த ரூபத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவதினால் உலக நன்மை காரியம் செய்வதற்கு பொறுப்பாளர் ஆக முடியும். அறிவியலின் சக்தி அவசியம் தான், ஆனால் சதோபிரதான (மிக உயர்ந்த தூய்மையான) புத்தியாக ஆவதினால் மட்டும் இதை யதார்த்த ரூபத்தில் காரியத்தில் உபயோகிக்க முடியும். இன்று இதை யதார்த்த முறையில் காரியத்தில் எப்படி ஈடுபடுத்துவது என்ற ஞானத்தின் குறை இருக்கிறது. இதே அறிவியல் இந்த ஞானத்தின் ஆதாரத்தினால் புது உலகப் படைப்பிற்கு பொறுப்பாளர் ஆகும் ஆனால் இன்று அந்த ஞானம் இல்லாத காரணத்தினால் விநாஷத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. எனவே இப்பொழுது இதே அறிவியலின் சக்தியை அமைதியின் சக்தியின் ஆதாரத்தினால் மிகவும் நல்ல காரியத்தில் ஈடுபடுத்துவதற்கு பொறுப்பாளர் ஆகுங்கள். இதிலேயும் நோபல் பரிசு பெறுவீர்கள் இல்லையா? ஏனென்றால், இதே காரியத்தின் அவசியம் இருக்கிறது. எப்பொழுது எந்தக் காரியம் அவசியமாக இருக்கிறதோ அதற்கு பொறுப்பாளர் ஆகுபவரை அனைவரும் சிரேஷ்ட ஆத்மாவின் பார்வையோடு பார்ப்பார்கள். எனவே என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இப்பொழுது அறிவியல் மற்றும் அமைதியின் இணைப்பு எப்படி இருக்கிறது, மேலும் இரண்டின் இணைப்பின் காரணமாக எவ்வளவு வெற்றி கிடைக்க முடியும் என்ற இந்த ஆராய்ச்சியை செய்யுங்கள். ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது இல்லையா. இப்பொழுது இதைச் செய்யுங்கள். இவ்வளவு பெரிய காரியம் செய்ய வேண்டும். அந்த மாதிரி உலகத்தை உருவாக்குவீர்கள் இல்லையா. நல்லது!

**யு.கே குரூப்புடன் சந்திப்பு:** கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் எப்பொழுதுமே தந்தையை சந்தித்திருக்கிறார்கள். எப்பொழுதுமே தந்தை என் உடன் இருக்கிறார் என்ற இந்த அனுபவம் எப்பொழுதும் இருக்கிறது தான் இல்லையா? ஒருவேளை தந்தையின் துணையிலிருந்து கொஞ்சமாவது விலகி விட்டீர்கள் என்றால், மாயாவின் பார்வை மிகக் கூர்மையானது. இவர் கொஞ்சம் விலகி இருக்கிறார் என்று பார்த்து விடுகிறது என்றால் தன்னுடையவராக ஆக்கி விடுகிறது, எனவே ஒருபொழுதும் தந்தையின் துணையிலிருந்து பிரிந்து விலகாதீர்கள். எப்பொழுதும் உடன் இருக்க வேண்டும். எப்பொழுது பாப்தாதா அவரே எப்பொழுதும் உடன் இருப்பதற்கான வாய்ப்பை முன் வைக்கிறார்

என்றால், துணையை எடுத்துக் கொள்ள வேண்டும் இல்லையா? அந்த மாதிரியான துணை, அதாவது தந்தை அவரே என்னோடு இரு என்று சொல்லும் வாய்ப்பு முழுக் கல்பத்திலும் ஒருபொழுதும் இருக்காது. அந்த மாதிரியான பாக்கியம் சத்யுகத்திலும் இருக்காது. சத்யுகத்திலும் ஆத்மாக்களின் தொடர்பில் இருப்பீர்கள். முழுக் கல்பத்திலும் தந்தையின் உடன் இருப்பது எவ்வளவு காலம் கிடைக்கிறது. மிகக் குறைந்த காலம் இல்லையா? எனவே குறைந்த காலத்தில் இவ்வளவு பெரிய பாக்கியம் கிடைக்கிறது என்றால் அது சதா காலமும் இருக்க வேண்டும் இல்லையா? பாப்தாதா எப்பொழுதும் பரிபக்குவ நிலையில் நிலைத்திருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவின் எதிரில் எவ்வளவு மிகவும் அன்பிற்குரிய குழந்தைகள் அமர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் மிகவும் அன்பானவர். பாப்தாதாவும் இந்த அளவு அன்போடு அனைவரையும் எங்கெங்கிருந்தெல்லாமோ தேர்ந்தெடுத்து ஒன்றாக ஆக்கியிருக்கிறார். அந்த மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் எப்பொழுதுமே உறுதியானவர்களாக இருப்பார்கள். பிஞ்சாக இருக்க மாட்டார்கள். நல்லது!

**தனிப்பட்ட மகாவாக்கியம் -விசேஷ கதாபாத்திரம் என்றால் ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு நொடியும் எப்பொழுதும் கவனக்குறைவானவராக இன்றி எச்சரிக்கையாக இருப்பவர்!** எப்பொழுதும் தன்னை நடைமுறை காரியங்கள் செய்து கொண்டே, போனாலும், வந்தாலும், அருந்தினாலும், உண்ணும்போதும் எல்லைக்கப்பாற்பட்ட நாடக மேடையில் விசேஷ கதாபாத்திரம் ஏற்று செய்யும் ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? யார் விசேஷ கதாபாத்திரமாக இருப்பாரோ அவருக்கு எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் தன்னுடைய காரியம் அதாவது பாத்திரத்தின் மேல் கவனம் இருக்கும். ஏனென்றால், முழு நாடகத்தின் ஆதாரம் கதாநாயகனாக இருப்பார். இந்த முழு நாடகத்தின் ஆதாரம் நீங்கள் தான் இல்லையா? அப்படி விசேஷ ஆத்மாக்களுக்கு மற்றும் விசேஷ நடிகர்களுக்கு எப்பொழுதும் இந்த அளவே கவனம் இருக்கிறதா? விசேஷ நடிகன் ஒருபொழுதும் கவனக்குறைவாக இருக்க மாட்டார், எச்சரிக்கையாக இருப்பார். எப்பொழுதாவது கவனக்குறைவோ வருவதில்லையே? செய்து கொண்டு தான் இருக்கிறோம், சென்றடைந்தோ விடுவோம்... என்று அப்படி நினைப்பதில்லையே? செய்து கொண்டிருக்கிறோம் ஆனால் எந்த

வேகத்தில் செய்து கொண்டிருக்கிறோம்? நடந்து கொண்டிருக்கிறோம் ஆனால் எவ்வளவு வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறோம்? வேகத்திலோ வித்தியாசம் இருக்கும் இல்லையா! நடந்து செல்பவர் எங்கே மேலும் விமானத்தில் பறப்பவர் எங்கே? சொல்வதற்கோ, நடந்து செல்பர்களும் சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் விமானத்தில் செல்பவர்களும் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவார்கள் ஆனால் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. சென்று கொண்டிருக்கிறோம் என்றால் பிரம்மா குமார் ஆகி விட்டோம் அதாவது சென்று கொண்டிருக்கிறோம் என்பதாகும் ஆனால் எந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கிறோம். அதிவேகத்தில் செல்பவர் தான் நேரத்தில் இலக்கைச் சென்றடைய முடியும். இல்லையென்றால் பின்னால் தங்கி போய் விடுவார். இங்கேயும் பிராப்தியோ ஆகிறது ஆனால் சூரிய வம்சிக்கு ஆகிறதா? அல்லது சந்திரவம்சிக்கு ஆகிறதா? வித்தியாசமோ இருக்கும் இல்லையா? எனவே சூரியவம்சத்தில் வருவதற்காக ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தையிலும் சாதாரணத் தன்மை முடிவடைந்து விட வேண்டும். ஒருவேளை ஏதாவது கதாநாயக நடிகன் சாதாரண நடிப்பை நடிக்கிறார் என்றால் அவரைப் பார்த்து அனைவரும் சிரிப்பார்கள் இல்லையா? எனவே நான் விசேஷமான நடிகன் எனவே என்னுடைய ஒவ்வொரு காரியமும் விசேஷமாக இருக்க வேண்டும், ஒவ்வொரு அடியும் விசேஷமாக இருக்க வேண்டும், ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு எண்ணமும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நினைவு எப்பொழுதுமே இருக்க வேண்டும். இதுவோ 5-நிமிடங்கள் தான் சாதாரணமாக இருந்தது என்று அப்படியல்ல, 5-நிமிடங்கள், 5-நிமிடங்கள் இல்லை, சங்கமயுகத்தின் 5-நிமிடங்கள் மிகவும் மகத்துவம் நிறைந்தது, 5-நிமிடங்கள் 5-வருடங்களையும் விட அதிகமானது. எனவே இந்த அளவு கவனம் இருக்க வேண்டும். இதைத் தான் தீவிரமாக முயற்சி செய்வது என்று கூறுவது. தீவிர முயற்சியாளர்களுக்கான சுலோகன் எது? "இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை" -இந்த சுலோகன் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? ஏனென்றால் சதா காலத்திற்கும் இராஜ்ய பாக்கியத்தை பிராப்தி செய்கிறீர்கள் என்றால் கவனமும் சதா காலத்திற்கும் இருக்க வேண்டும். இப்பொழுது கொஞ்ச காலத்திற்கு சதா காலத்தின் கவனம் நீண்ட காலம் இருக்கிறது என்றால் அது சதா காலத்திற்கும் பிராப்தி செய்விக்கும். எனவே நடைமுறையில் எப்பொழுதாவது சாதாரணத்தன்மை வந்து விடவில்லையே என்ற

நினைவு மற்றும் சோதனை ஒவ்வொரு நேரமும் இருக்க வேண்டும். எப்படி தந்தை பரமாத்மா என்று கூறப்படுகிறார். அவர் உயர்ந்தவர் தான் இல்லையா? எப்படி தந்தையோ அப்படி குழந்தைகளும் ஒவ்வொரு விஷயத்திலும் பரம் அதாவது உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். எனவே இப்பொழுது சுயத்தின் முயற்சியில் தீவிர வேகம் இருக்க வேண்டும். மேலும் சேவையிலும் குறைந்த நேரம், குறைந்த உழைப்பை ஈடுபடுத்தி வெற்றி அதிகமாக இருக்க வேண்டும். ஒருவர் அனேகர்கள் செய்யும் அளவிற்கு காரியம் செய்ய வேண்டும். அந்த மாதிரியான திட்டத்தை உருவாக்குங்கள். பஞ்சாப் மிகவும் பழமையானது. சேவையின் தொடக்கத்திலிருந்தே இருக்கிறது என்றால், ஆதி ஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது ஆதி இரத்தினத்தை உருவாக்குங்கள். பொதுவாக பஞ்சாபை சிங்கம் என்று கூறுவார்கள். சிங்கம் கர்ஜிக்கிறதா. கர்ஜிக்கிறது என்றால் வலுவான ஓசை எழுப்புவது. என்ன செய்வார்கள் மற்றும் யார் செய்வார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். நல்லது.

**வரதானம்: அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரையிலும் நினைவின் விதிப்பூர்வமாக ஒவ்வொரு காரியத்தையும் செய்யக்கூடிய சித்தி சொரூபமானவர் ஆகுக!**

அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை என்ன காரியம் செய்தாலும் நினைவில் விதிப்பூர்வமாக செய்தீர்கள் என்றால் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி கிடைக்கும். அனைத்தையும் விட மிகப் பெரிய வெற்றி உடனடி பலன் ரூபத்தில் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஆவது. எப்பொழுதும் சுகத்தின் அலைகளில், குஷியின் அலைகளில் நீந்திக் கொண்டே இருப்பார்கள். இந்த உடனடி பலனும் கிடைக்கிறது, மேலும் பிறகு எதிர்கால பலனும் கிடைக்கிறது. இந்த நேரத்தின் உடனடி கிடைக்கும் பலன் எதிர்காலத்தின் அனேக ஜென்மங்களின் பலனை விட உயர்ந்தது. இப்பொழுது செய்தீர்கள், உடனேயே அடைந்தீர்கள் என்ற இதைத் தான் பிரத்யக்ஷ பலன் என்று கூறுவது.

**சுலோகன்: தன்னை பொறுப்பாளர் என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்தீர்கள் என்றால், விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் இருப்பீர்கள், நான் எனது என்பது வர முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மாதீத் (கர்ம பந்தனம் அற்ற நிலை), வானபிரஸ்தி (சப்தத்திலிருந்து விலகிய நிலை) ஆத்மாக்கள் தான் தீவிர வேகமாக சேவை செய்வதற்கு பொறுப்பாளர்கள்!

மதுபன் வரதான பூமி, சக்தி நிறைந்த பூமி, சிரேஷ்ட குழுவினரின் பூமி, சகஜ பரிவர்த்தன பூமி, அனைத்து பிராப்திகளை அனுபவம் செய்விக்கும் பூமி. அம்மாதிரியான பூமியில் வந்து அனைவரும் தன்னை சம்பன்னமாக அதாவது அனைத்து விஷயங்களால் நிரம்பியவராக அனுபவம் செய்கிறீர்களா? ஏதாவது பிராப்தியின்மையோ இல்லையே? என்னென்ன அனைத்து பொக்கிஷங்களும் கிடைத்திருக்கின்றனவோ அவற்றை சதா காலத்திற்காக தாரணை செய்திருக்கிறீர்களா? இங்கிருந்து சேவை ஸ்தானத்திற்கு சென்று பெரும் வள்ளலாகி இதே சக்திகளை, அனைத்து பிராப்திகளை அனைவருக்கும் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆவேன் என்று அப்படி நினைக் கிறீர்களா? சதா காலத்திற்கும் தன்னை விக்ன விநாஷக், சமாதான சொரூபமாக அனுபவம் செய்தீர்களா? தன்னுடைய பிரச்சனையோ வேறு, ஆனால் மற்ற ஆத்மாக்களின் பிரச்சனைகளுக்கும் சமாதான சொரூபம்.

நேரத்திற்கு தகுந்தாற்போல் இப்பொழுது பிராமண ஆத்மாக்கள் பிரச்சனைகளில் வசமாவதிலிருந்தும் கடந்து சென்று விட வேண்டும். பிரச்சனைகளுக்கு வசமாவது குழந்தைப் பருவம். இப்பொழுது பிராமண ஆத்மாக்களின் குழந்தைப் பருவத்தின் காலம் முடிவடைந்து விட்டது. வாலிப நிலையில் மாயாவை வென்றவர் ஆவதற்கான விதி மூலம் மகாவீர் ஆனீர்கள், சேவையில் சக்கரவர்த்தி ஆனீர்கள், அனேக ஆத்மாக்களுக்கு வரமளிப்பவராகி, பெரும் வள்ளலாக ஆனீர்கள், அனேக

விதமான அனுபவம் செய்து மகாரதி ஆனீர்கள், இப்பொழுது கர்மாதீத் வானபிரஸ்த நிலையில் செல்வதற்கான நேரம் வந்து சேர்ந்து விட்டது. கர்மாதீத் வானபிரஸ்த நிலை மூலமாகத் தான் உலகின் அனைத்து ஆத்மாக்களை அரைக் கல்பத்திற்காக கர்ம பந்தனங்களிலிருந்து விடுபட்டவராக்கி முக்தியில் அனுப்புவீர்கள். விடுபட்ட (முக்த்) ஆத்மாக்கள் தான் ஒரு விநாடியில் முக்தியின் ஆஸ்தியை தந்தையிடமிருந்து பெற வைக்க முடியும். பெரும்பான்மையான ஆத்மாக்கள் முக்தியை யாசிப்பதற்காக கர்மாதீத் வானபிரஸ்த பெரும் வள்ளல் வரமளிக்கும் வள்ளல் குழந்தைகள் உங்களிடம் வருவார்கள். எப்படி இப்பொழுது உங்களுடைய ஜட விக்கிரகங்களுக்கு எதிரில் சிலர் கோயில்களுக்கு சென்று பிரார்த்தனைகள் செய்து சுகம் சாந்தியை வேண்டுகிறார்கள். சிலர் தீர்த்த ஸ்தானங்களில் சென்று வேண்டுகிறார்கள், சிலர் வீட்டில் அமர்ந்து கொண்டே வேண்டுகிறார்கள். யாருக்கு எந்த அளவு சக்தி இருக்குமோ அதுவரை சென்றடைகிறார்கள் ஆனால் சக்திகேற்றபடி பலனை பிராப்தி செய்கிறார்கள். சிலர் தூர இடத்தில் அமர்ந்து கொண்டும் உள்ளப்பூர்வமாக செய்கிறார்கள். மேலும் சிலர் மூர்த்தியின் எதிரில் தீர்த்த ஸ்தானங்கள் மற்றும் கோயில்களில் சென்றும் வெளிப்பகட்டளவில் செய்கிறார்கள். சுயநல வசமாகி செய்கிறார்கள். அந்த அனைத்து கணக்கின் அனுசாரம் எப்படி காரியமோ, எப்படி பாவனையோ அப்படி பலன் கிடைக்கிறது. அதே போல் இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி சைத்தன்ய பெரும் வள்ளல் வரமளிக்கும் வள்ளல் மூர்த்திகள் உங்களின் எதிரில் பிரார்த்தனை செய்வார்கள். சிலர் சேவை ஸ்தானம் என்ற கோயிலில் செல்வார்கள், சிலர் மகான் தீர்த்த ஸ்தானம் மதுபன் வரை வருவார்கள். மேலும் சிலர் வீட்டில் அமர்ந்து கொண்டே காட்சிகளைப் பார்த்து தெய்வீக புத்தி மூலமாக பிரத்யக்ஷத்தின் அனுபவம் செய்வார்கள். எதிரில் வரவில்லை என்றாலும் அன்பு மற்றும் திட எண்ணத்தோடு பிரார்த்தனை செய்வார்கள். மனதால் சைத்தன்ய ஃபரிஷ்தாக்கள் உங்களை ஆவஹானம் செய்து முக்தியின் ஆஸ்திக்கான அஞ்சலி கேட்பார்கள். குறைந்த காலத்தில் அனைத்து ஆத்மாக்களை ஆஸ்தியை பெற வைக்கும் காரியம் அதிவேகத்தில் செய்ய வேண்டியதாக இருக்கும். எப்படி விநாஷத்திற்கான சாதனம் மிகவும் நுட்பமாக இருப்பதால் அதிவேகத்தில் முடிப்பதற்கு பொறுப்பாளர் ஆகும், அதே போல் பெரும் வள்ளல் வரமளிக்கும் வள்ளல் ஆத்மாக்கள் நீங்கள் தன்னுடைய கர்மாதீத் ஃபரிஷ்தா சொரூபத்தின் சம்பூர்ண சக்திசாலியான

சொரூபம் மூலமாக, அனைவரின் பிரார்த்தனையின் பலனாக முக்தியின் ஆஸ்தியை பெற வைப்பீர்கள். அதிவேகமாக இந்தக் காரியத்தை செய்வதற்காக மாஸ்டர் சர்வ சக்திவான், சக்திகளின் களஞ்சியம், ஞானத்தின் களஞ்சியம், நினைவு சொரூபமானவர்கள் நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? விநாஷத்தின் இயந்திரம் மற்றும் வரதானத்தின் இயந்திரம் இரண்டும் அதிவேகத்தில் சேர்ந்தே இயங்கும்.

நீண்ட காலமாக அதாவது இப்போதிலிருந்தே எவரெடி. அதி வேகமுள்ளவராக கர்மாதீத், சமாதான சொரூபமாக எப்பொழுதும் இருப்பதற்கான பயிற்சி செய்யவில்லை என்றால் அதி வேகத்தின் நேரம் கொடுப்பவராக ஆவதற்கு பதிலாக பார்ப்பவராக ஆக வேண்டியது வரும். நீண்ட காலமாக தீவிரமாக முயற்சி செய்பவர் அதிவேகத்தின் சேவை செய்வதற்கு பொறுப்பாளர் ஆக முடியும். இது தான் வானபிரஸ்த் அதாவது அனைத்து தடைகளிலிருந்து விடுபட்ட, விலகியிருக்கும் மற்றும் தந்தையுடன் சேர்ந்து அதிவேகமாக சேவையின் பிரியமான நிலை. எனவே இப்பொழுது கொடுப்பவராக ஆவதற்கான நேரமேயன்றி இப்பொழுது கூட தனக்காகவும் பிரச்சனைகளுக்காகவும் பெறுபவராக ஆவதற்கான நேரம் இல்லை. தன்னுடைய பிரச்சனைகளின் குழப்பத்தில் வருவது -இப்பொழுது அந்த நேரம் கடந்து சென்று விட்டது. பிரச்சனையும் கூட தன்னுடைய பலஹீனத்தின் படைப்பு தான். யார் மூலமாவது மற்றும் ஏதாவது சூழ்நிலை மூலமாவது வந்திருக்கும் பிரச்சனை உண்மையில் தன்னுடைய பலஹீனத்தின் காரணம் தான். எங்கு பலஹீனம் இருக்குமோ அங்கு நபர் மூலமாக, சூழ்நிலை மூலமாக பிரச்சனை தாக்குதல் செய்யும். ஒருவேளை பலஹீனம் இல்லை என்றால் பிரச்சனை தாக்காது. வந்திருக்கும் பிரச்சனை பிரச்சனைக்குப் பதிலாக சமாதான ரூபத்தில் அனுபவியாக ஆக்கும். இது தன்னுடைய பலஹீனத்தினால் உருவாகியிருக்கும் மிக்கி மௌஸ். இப்பொழுதோ நீங்கள் அனைவரும் சிரிக்கிறீர்கள். மேலும் எந்த நேரம் வருகிறதோ அந்த நேரம் என்ன செய்கிறீர்கள்? நீங்களே மிக்கி மௌஸ் ஆகி விடுகிறீர்கள். அதனோடு விளையாடுங்கள் மற்றபடி பயப்படாதீர்கள் ஆனால் இதுவோ குழந்தைப் பருவத்து விளையாட்டு. எனவே இதை உருவாக்காதீர்கள். நேரத்தையும் இழக்காதீர்கள். இதை விட்டும் விலகிய நிலையான வானபிரஸ்தி ஆகி விடுங்கள். புரிந்ததா?

# 1984 அவ்யக்த முரளி

நேரம் என்ன கூறுகிறது? தந்தை என்ன கூறுகிறார்? இப்பொழுது கூட பொம்மைகளுடன் விளையாடுவது பிடித்திருக்கிறதா என்ன? எப்படி கலியுகத்தின் மனிதப் படைப்பு கூட என்னவாகி விட்டது? முரளியில் கேட்கிறீர்கள் தான் இல்லையா! தேள் - பூரான் ஆகி விட்டார்கள். அந்த மாதிரி இந்த பலஹீனத்தின் பிரச்சனை களை உருவாக்குவதும் தேள், பூரான் மாதிரி தன்னையே கடிக்கிறது, சக்தியற்றவர் ஆக்கி விடுகிறது. எனவே அனைவரும் மதுபன்னிலிருந்து சம்பன்னம் ஆகி இப்பொழுதிலிருந்து தன்னுடைய பிரச்சனைகளையோ முடித்து விட்டேன் ஆனால் யாருக்காகவும் பிரச்சனை சொரூபமாக ஆக மாட்டேன் என்ற உறுதியான எண்ணத்தை எடுத்து செல்லுங்கள். தனக்காக மற்றும் அனைவருக்காக எப்போதும் சமாதான சொரூபமாக இருப்பேன். புரிந்ததா?

இவ்வளவு செலவு செய்து கடுமையாக முயற்சி செய்து இங்கே வருகிறீர்கள் என்றால் கடின முயற்சிக்கான பலனாக இந்த உறுதியான எண்ணம் மூலம் சகஜமாக எப்பொழுதும் கிடைத்துக் கொண்டே இருக்கும். எப்படி முக்கியமான விஷயம் தூய்மையாக இருப்பதற்காக, இறந்து விடுவேன், சகித்துக் கொள்வேன் ஆனால் இந்த விரதத்தை அவசியம் கடைபிடிப்பேன் என்ற திட எண்ணம் செய்தீர்கள் இல்லையா? கனவிலும் அல்லது எண்ணத்தில் கூட ஒருவேளை கொஞ்சமாவது தடுமாற்றம் இருக்கிறது என்றால் அதை பாவம் என்று நினைக்கிறீர்கள் இல்லையா? அதே போல் பிரச்சனை சொரூபமாக ஆவது அல்லது பிரச்சனைக்கு வசமாகி விடுவது என்ற இதுவும் பாவக்கணக்கு. பாவத்தின் விளக்கத்தைத் தெரிந்திருக்கிறீர்கள். எங்கு பாவம் இருக்குமோ அங்கு தந்தையின் நினைவு இருக்காது, துணை இருக்காது. பாவம் மற்றும் தந்தை, இரவு மற்றும் பகல் மாதிரி. அதனதால் எப்பொழுது பிரச்சனை வருகிறதோ அந்த நேரம் தந்தை நினைவில் வருகிறாரா? நினைவு விலகி விடுகிறது தான் இலலையா? பிறகு எப்பொழுது நொந்து போகிறீர்களோ அப்பொழுது தந்தையின் நினைவு வருகிறது. மேலும் அதுவும் பக்தனின் ரூபத்தில் நினைவு செய்கிறீர்கள். அதிகாரியின் ரூபத்தில் இல்லை. சக்தி கொடுங்கள். ஆதரவு கொடுங்கள், கடந்து விடச் செய்யுங்கள் என்றெல்லாம் கூறுகிறீர்கள். அதிகாரியின் ரூபத்தில், துணைவனின் ரூபத்தில், சமமானவராகி நினைவு செய்வதில்லை. எனவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நிறைவு விழாவைக்

கொண்டாட வேண்டும் இல்லையா? பிரச்சனைகளுக்கான முடிவு விழாவை கொண்டாடுவீர்கள் இல்லையா அல்லது நடனம் மட்டும் ஆடுவீர்களா? நல்ல நல்ல நாடகம் நடத்துகிறீர்கள் இல்லையா? இப்பொழுது இந்த நிகழ்ச்சியை செய்யுங்கள் ஏனென்றால் இப்பொழுது சேவைக்கு அதிக நேரம் தேவையாக இருக்கிறது. அங்கே கூக்குரலிட்டு அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இங்கு நிலைகுலைந்து போய் கொண்டிருக்கிறார். இதுவோ நல்லது இல்லை தான் இல்லையா? அவர்கள் வரமளிக்கும் வள்ளலே! பெரும் வள்ளலே! என்று கூறி நினைவு செய்து கெண்டிருக்கிறார்கள். மேலும் நீங்கள் மூட் ஆஃப் ஆகி அழுது கொண்டிருக்கிறீர்கள் என்றால் எப்படி பலன் கொடுப்பீர்கள்? அவர்களிடமும் உங்களுடைய சூடான கண்ணீர் சென்று சேர்ந்து விடும். அவர்களும் பயந்து கொண்டே இருப்பார்கள். எனவே இப்பொழுது நான் பிரம்மாபாபாவுடன் சேர்ந்து இஷ்ட தேவன் பூஜைக்குரிய ஆத்மா என்று நினைவு வையுங்கள். நல்லது.

எப்பொழுதும் நீண்ட காலமாக தீவிர முயற்சி செய்பவர்களுக்கு, தீவிர வேகத்தின் சேவைக்காக எவரெடியாக இருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் உலகை மாற்றம் செய்பவராக இருப்பவரிலிருந்து பிரச்சனைகளை பரிவர்த்தனை செய்யும் சமாதான சொரூப குழந்தைகளுக்கு, எப்பொழுதும் இரக்க மனமுடையவராகி பக்த ஆத்மாக்களின் மற்றும் பிராமண ஆத்மாக்களின் அன்பிற்குரிய மற்றும் சகயோகியாக இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிரச்சனைகளிலிருந்து விலகியிருக்கக்கூடிய, கர்மாதீத் வானபிரஸ்த நிலையில் இருக்கக்கூடிய சம்பன்ன சொரூப குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**நியூயார்க் பார்ட்டியுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் தன்னை தந்தையின் விசேஷ ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தை எப்பொழுதுமே சிரேஷ்டமாக இருக்கிறார் அதே போல் குழந்தைகள் நாங்களும் தந்தைக்குச் சமமாக சிரேஷ்டமானவர்கள் என்ற இந்த குஷி எப்பொழுதுமே இருக்கிறதா? இந்த நினைவு மூலம் எப்பொழுதுமே ஒவ்வொரு காரியமும் இயல்பாகவே சிரேஷ்டம் ஆகி விடும். எப்படி எண்ணம் இருக்குமோ அப்படி காரியம் இருக்கும். நீங்கள் எப்பொழுதும் நினைவு மூலமாக சிரேஷ்ட நிலையில் நிலைத்திருக்கும்

விசேஷ ஆத்மாக்கள். எப்பொழுதுமே தன்னுடைய இந்த சிரேஷ்ட ஜென்மத்தின் குஷிகளைக் கொண்டாடிக் கொண்டே இருங்கள். அந்த மாதிரியான சிரேஷ்ட ஜென்மம் எதில் நீங்கள் பகவானின் குழந்தைகளாக ஆகி விட்டீர்களோ, அந்த மாதிரியான ஜென்மம் முழுக் கல்பத்திலும் இருக்காது. ஐயாயிரம் ஆண்டுகளில் இந்த நேரம் மட்டும் தான் இந்த ஆன்மீக ஜென்மம் கிடைக்கிறது. சத்யுகத்தில் கூட ஆத்மாக்களின் பரிவாரத்தில் வருவீர்கள் ஆனால் இப்பொழுது பரமாத்மாவின் குழந்தை. எனவே இதே விசேஷத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நான் பிராமணன் உயர்ந்ததிலும் உயர்ந்த தர்மம், காரியம் மற்றும் பரிவாரத்தைச் சேர்ந்தவன் என்ற இதே நினைவு மூலம் எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். முயற்சி செய்வதின் வேகம் எப்பொழுதுமே தீவிரமாக இருக்கட்டும். பறக்கும் கலை எப்பொழுதுமே மாயாவை வென்றவராக மற்றும் பந்தனமற்றவராக ஆக்கி விடும். எப்பொழுது தந்தையை தன்னுடையவராக ஆக்கி விட்டீர்கள் என்றால் இன்னும் வேறு என்ன தான் இருக்கிறது? ஒன்று தான் மிச்சம் இருந்தது இல்லையா. அந்த ஒன்றில் தான் அனைத்தும் அடங்கியிருக்கிறது. ஒருவரின் நினைவில், ஒருவரின் இரசனை என்ற நிலையில் நிலைத்திருப்பதினால் சாந்தி, சக்தி மற்றும் சுகத்தின் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும். எங்கு ஒன்று இருக்கிறதோ அங்கு நம்பர் ஒன் இருக்கும். அப்படி நீங்கள் அனைவரும் நம்பர் ஒன் தான் இல்லையா. ஒருவரை நினைவு செய்வது சுலபமா அல்லது அனேகர்களை நினைவு செய்வதா? தந்தை இந்தப் பயிற்சியை மட்டும் தான் செய்விக்கிறார் வேறு ஒன்றும் இல்லை. பத்து பொருட்களை தூக்குவது சுலபமா அல்லது ஒரு பொருளை தூக்குவது சுலபமா? புத்தி மூலமாக ஒருவரின் நினைவிலேயே இருப்பது மிக சுலபம். அனைவரின் இலட்சியம் மிக நல்லதாக இருக்கிறது. இலட்சியம் நல்லதாக இருக்கிறது என்றால் இலட்சணமும் நல்லதாக ஆகிக் கொண்டே இருக்கும். நல்லது.

**வரதானம்: எண்ணம் மற்றும் சொல்லின் ஒருங்கிணைப்பு மூலமாக மந்திர காரியம் செய்யக்கூடிய புதுமை மற்றும் விசேஷம் நிரம்பியவர் ஆகுக!**

எண்ணம் மற்றும் சொல்லின் ஒருங்கிணைப்பு மந்திர சக்தியின் காரியம் செய்கிறது. இதன் மூலம் குழுவின் சின்ன சின்ன விஷயங்கள், நீங்கள்

நினைத்தீர்கள் அப்படியே நடந்தது என்று மந்திரம் போட்டது போல் முடிவடைந்து விடும். மனதால் சுபபாவனை மற்றும் சுப ஆசீர்வாதங்கள் கொடுப்பதிலேயே பிஸியாக இருந்தீர்கள் என்றால் மனதின் குழப்பம் முடிவடைந்து விடும், முயற்சி செய்வதில் ஒருபொழுதும் மனமுடைந்து போக மாட்டீர்கள். குழுவில் ஒருபொழுதும் பயப்பட மாட்டீர்கள். எண்ணம், சொல்லில் இணைந்து சேவை செய்வதினால் விஸ்தாரமான மார்க்கத்தின் சேவையின் பிரபாவத்தைப் பார்ப்பீர்கள். இப்பொழுது சேவையில் இதே புதுமை மற்றும் விசேஷத்தினால் சம்பன்னம் ஆனீர்கள் என்றால் 9-இலட்சம் பிரஜைகள் சகஜமாக தயாராகி விடுவார்கள்.

**சுலோகன்: எப்பொழுது முழுமையாக விகாரமற்றவராக ஆவீர்களோ அப்பொழுது புத்தி சரியான முடிவைக் கொடுக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாற்றத்தை அழியாததாக ஆக்குங்கள்!

பாப்தாதா அனைத்து சாதகப்பறவை குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவருக்கும் கேட்க வேண்டும், சந்திக்க வேண்டும் மற்றும் ஆக வேண்டும் என்ற இதே ஆர்வம் இருக்கிறது. கேட்பதில் அனைவரும் நம்பர் ஒன் சாதகப் பறவைகள். சந்திப்பதில் வரிசை எண் இருக்கிறது மேலும் ஆவதில் அவர்களின் சக்திக்கேற்றபடி சமமாக ஆக வேண்டும் ஆனால் அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்கள், பிராமண ஆத்மாக்கள் இந்த மூன்றின் சாதகப் பறவைகளாக அவசியம் இருக்கிறார்கள். நம்பர் ஒன் சாதகப் பறவை மாஸ்டர் முரளிதரன், மாஸ்டர் சர்வ சக்திவானாக இருப்பவர், தந்தைக்குச் சமமாக நிரந்தரமாக மற்றும் சகஜமாக ஆகி விடுகிறார். கேட்பது என்றால் முரளிதரன் ஆவது. சந்திப்பது என்றால் தொடர்பின் பிரபாவத்தில் அவருக்குச் சமமாக சக்திகள் மற்றும் குணங்களில் நிரம்பி விடுவது. ஆவது என்றால் எண்ணத்தின் அடி மேல், வார்த்தைகளின் அடி மேல், காரியத்தின் அடி மேல் அடி வைத்து சாட்சாத் தந்தைக்குச் சமமாக ஆவது. குழந்தைகளின் எண்ணத்தில் தந்தையின் எண்ணம் சமமாக அனுபவம் ஆக வேண்டும். வார்த்தையில், காரியத்தில், எப்படி தந்தையோ அப்படி குழந்தை என்று அனைவருக்கும் அனுபவம் ஆக வேண்டும். இதைத் தான் சமமாக ஆவது மற்றும் நம்பர் ஒன் சாதகப் பறவை என்று கூறுவது. இந்த மூன்றிலிருந்து நான் யார் என்று சோதனை செய்யுங்கள். அனைத்து குழந்தைகளின் ஊக்கம் உற்சாகம் நிறைந்த எண்ணம் பாப்தாதாவிடம் வந்து சேருகிறது. எண்ணத்தை மிகவும் நல்ல தைரியம் மற்றும் திடத்தன்மையுடன் செய்கிறார்கள். எண்ணம் என்ற விதை சக்திசாலியாக இருக்கிறது ஆனால் தாரணை செய்வதின் பூமி, ஞானத்தின் கங்கா ஜலம் மற்றும் நினைவு என்ற வெயில் என்று கூறினாலும் அல்லது வெப்பம் என்று கூறினாலும், அடிக்கடி தன் மேல் கவனம் என்ற மேற்பார்வையில் அங்கங்கே கவனக்குறைவானவர் ஆகி விடுகிறார்கள். ஒரு விஷயத்தின் குறை இருக்கும் காரணத்தினாலும் எண்ணம் என்ற விதை எப்பொழுதும்

பழம் (பலன்) கொடுப்பதில்லை. கொஞ்ச காலத்திற்காக ஒரு சீசன், இரண்டு சீசன்களுக்கு பழம் கொடுக்கும். எப்பொழுதும் பழம் கொடுக்காது. பிறகு விதையோ சக்திசாலியாக இருந்தது, உறுதிமொழியையும் உறுதியாக செய்திருந்தோம், தெளிவும் ஆகி விட்டது இருந்தும் என்ன ஆகி விட்டது என்று தெரியவில்லை என்று யோசிக்கிறார்கள். 6-மாதங்களோ மிகுந்த ஊக்கம் இருந்தது. பிறகு போகப்போக என்ன ஆகி விட்டது என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள். இதற்காக எந்த விஷயங்களை முதலில் கூறியிருந்தோமோ அதன் மேல் எப்பொழுதும் கவனம் இருக்க வேண்டும்.

இன்னொரு விஷயம் -சின்ன விஷயத்தில் விரைவில் பயந்து விடுகிறீர்கள். பயந்து விடும் காரணத்தினால் சின்ன விஷயத்தையும் பெரியதாக ஆக்கி விடுகிறீர்கள். விஷயம் எறும்பு மாதிரி இருக்கிறது, அதை யானை மாதிரி ஆக்கி விடுகிறீர்கள், எனவே சமநிலை இருப்பதில்லை. சமநிலை இல்லாத காரணத்தினால் வாழ்க்கை சுமையாக ஆகி விடுகிறது. இருந்தால் போதையில் முற்றிலும் உயரே சென்று விடுகிறார்கள் அல்லது சின்னஞ் சிறிய கல் கூட கீழே அமர வைத்து விடுகிறது. ஞானம் நிறைந்தவராகி ஒரு நொடியில் அதை அகற்றுவதற்காக கல் வந்து விட்டது, நின்று விட்டேன், கீழே வந்து விட்டேன், இது நடந்து விட்டது என்று இதை யோசிப்பதில் ஈடுபட்டு விடுகிறார்கள். நோய் வந்து விட்டது, காய்ச்சல் மற்றும் வலி வந்து விட்டது என்று ஒருவேளை இதையே யோசிக் கிறார்கள் மற்றும் கூறிக் கொண்டே இருக்கிறார்கள் என்றால் என்ன நிலைமை ஆகும்! அந்த மாதிரியான சின்ன சின்ன விஷயங்கள் என்ன வருகின்றனவோ அவற்றை அழியுங்கள், அகற்றுங்கள் மற்றும் பறந்து செல்லுங்கள். ஆகி விட்டது, வந்து விட்டது, இதே எண்ணத்தில் பலஹீனம் ஆகாதீர்கள். மருந்து எடுத்து கொள்ளுங்கள் மற்றும் ஆரோக்கியமானவராக ஆகுங்கள். சில நேரம் பாப்தாதா குழந்தைகளின் முகத்தைப் பார்த்து இப்பொழுது என்னவாக இருந்தார், அடுத்த நேரமே என்னவாகி விட்டார்! என்று யோசிக்கிறார். இது அவரே தானா அல்லது இன்னொருவராக ஆகி விட்டாரா! விரைவில் மேலே கீழே போவதினால் என்ன நடக்கிறது,? தலை பாரமாகி விடுகிறது. பொதுவாகவே நடைமுறையிலும் மேலே கீழே சென்று வந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் தலை சுற்றுவது போல் அனுபவம் செய்வீர்கள் இல்லையா! எனவே இந்த சம்ஸ்காரத்தை பரிவர்த்தனை செய்யுங்கள்.

நம்முடைய பழக்கமே அந்த மாதிரி தான் என்று அப்படி யோசிக்காதீர்கள். தேசத்தின் காரணமாக மற்றும் வாயுமண்லத்தின் காரணமாக மற்றும் ஜென்மத்தின் சம்ஸ்காரம், நேச்சரின் காரணமாக அந்த மாதிரி ஆகத் தான் செய்யும் என்ற அந்த மாதிரியான நம்பிக்கைகள் பலஹீனமானவராக ஆக்கி விடுகிறது. ஜென்மம் மாறியது என்றால் சம்ஸ்காரத்தையும் மாற்றுங்கள். எப்பொழுது உலகை மாற்றுபவராக இருக்கிறீர்கள் என்றால் சுயத்தை மாற்றுபவராக முன்பாகவே இருக்கிறீர்கள் தான் இல்லையா? தன்னுடைய ஆதி, அனாதி சுபாவ சம்ஸ்காரத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அது தான் உண்மையான சம்ஸ்காரம். இவையோ போலியானவை. என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய நேச்சர் என்று கூறுவது மாயாவின் வசமானதின் நேச்சர். சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுடைய ஆதி, அனாதி நேச்சர் இது இல்லை, எனவே இந்த விஷயங்களின் மேல் மீண்டும் உங்களுடைய கவனத்தை ஈர்க்கிறோம். மீண்டும் படிப்பிக்கிறோம். இந்த பரிவர்த்தனையை அழியாததாக ஆக்குங்கள்.

விசேஷங்களும் அதிகம் இருக்கிறது. அன்பில் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள், சேவையின் ஊக்கத்திலும் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள். ஸ்தூலமாக தூரமாக இருந்த போதிலும் அருகில் இருக்கிறீர்கள். கேட்ச்சிங் பவர் (தந்தை கூறுவதை புரிந்து கொள்ளும் சக்தி) மிக நன்றாக இருக்கிறது. உணரும் சக்தியும் மிகத் தீவிரமாக இருக்கிறது. குஷிகளின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டும் இருக்கிறீர்கள். ஆஹா பாபா, ஆஹா பரிவாரம், ஆஹா நாடகம் என்ற பாடலையும் நன்றாக பாடுகிறீர்கள். திடத்தன்மையும் விசேஷமும் நன்றாக இருக்கிறது. தெரிந்து கொள்ளும் புத்தியும் கூர்மையாக இருக்கிறது. தந்தை மற்றும் பரிவாரத்தின் கண்டெடுக்கப்பட்ட மிகச் செல்லமான குழந்தைகளாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் மதுபன்னின் அலங்காரம். மேலும் மிகவும் கலகலப்பாகவும் இருக்கிறீர்கள். வகைவகையான கிளைகள் ஒன்றாக சேர்ந்து ஒரு சந்தனத்தின் மரமாக ஆவதின் உதாரணத்திலும் மிக நன்றாக இருக்கிறீர்கள். உங்களிடம் எத்தனை விசேஷங்கள் இருக்கின்றன! விசேஷங்கள் அதிகம் மேலும் பலஹீனம் ஒன்று இருக்கிறது என்றால் ஒன்றை அகற்றுவதோ மிகவும் சுலபம் தான் இல்லையா? பிரச்சனைகள் முடிவடைந்து விட்டன தான் இல்லையா! புரிந்ததா!

எப்படி தெளிவாகக் கூறுகிறீர்கள், அதே போல் உள்ளத்தின் தூய்மை காரணமாக மற்றவர்களிடமிருந்து விஷயத்தை பெறுவதிலும் நம்பர் ஒன். விசேஷங்களின் மாலையை உருவாக்கினோம் என்றால் மிக நீளமானதாக ஆகி விடும். இருந்தாலும் பாப்தாதா வாழ்த்துக்கள் கூறுகிறார். இந்த பரிவர்த்தனையை 99-சதவிகிதமோ செய்து விட்டீர்கள், இன்னும் ஒரு சதவிகிதம் மிச்சம் இருக்கிறது. அதுவும் கண்டிப்பாக பரிவர்த்தனை ஆகி விடும். புரிந்ததா! நீங்கள் எவ்வளவு நல்லவர்கள்! இப்பொழுதே மாறிவிட்டு முடியாது என்பதிலிருந்து முடியும் என்று சொல்லிவிடுகிறீர்கள். இதுவும் விசேஷம் தான் இல்லையா! மிக நல்ல பதில் கொடுக்கிறீர்கள். இவர்களிடம் சக்திசாலியாக, வெற்றி அடைபவராக இருக்கிறீர்களா என்று கேட்கிறோம். அதற்கு இப்பொழுதிலிருந்து இருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இதுவும் பரிவர்த்தனையின் சக்தி அதிகவேகமாக இருக்கிறது இல்லையா! எறும்பு, எலியிடம் மட்டும் பயப்படும் சம்ஸ்காரம் இருக்கிறது. மாவீரனாகி எறும்பை காலின் கீழே வைத்து விடுங்கள். மேலும் எலியை சவாரியாக ஆக்கி விடுங்கள், கணேஷன் ஆகி விடுங்கள். இப்பொழுதிலிருந்து விக்ன விநாஷக் அதாவது கணேஷன் ஆகி எலி மேல் சவாரி செய்யத் தொடங்கி விடுங்கள். எலியை கண்டு பயப்படாதீர்கள். எலி சக்திகளை கடித்து விடுகிறது. சகித்துக் கொள்ளும் சக்தியை அழித்து விடுகிறது. சரளத்தன்மையை அழித்து விடுகிறது. அன்பை அழித்து விடுகிறது. கடிக்கிறது தான் இல்லையா? எறும்பு நேராக தலைக்குள் சென்று விடுகிறது. டென்ஷனில் மயக்கமடையச் செய்து விடுகிறது. அந்த நேரம் மிகவும் பிரச்சனை செய்து விடுகிறது தான் இல்லையா! நல்லது.

எப்பொழுதும் மகாவீர் ஆகி சக்திசாலி நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, ஒவ்வொரு எண்ணம் சொல் மற்றும் செயல் என்ற ஒவ்வொரு அடி மேல் அடி எடுத்து வைத்து தந்தை கூடவே செல்லக்கூடிய உண்மையான வாழ்க்கை துணைவர்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய விசேஷங்களை எதிரில் வைத்து பலஹீனங்களுக்கு நிரந்தரமாக விடை கொடுக்கக்கூடிய, எண்ணம் என்ற விதையை எப்பொழுதும் நன்றாக பழம் கொடுப்பதாக ஆக்கக்கூடிய, ஒவ்வொரு நேரமும் எல்லைக்கப்பாற்பட்ட பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்தக்கூடிய, அனைத்து பிராப்திகள் என்ற ஊஞ்சலில் ஆடக்கூடிய நிரந்தரமான சக்திசாலியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ஃபிரான்ஸ் குரூப்புடன் சந்திப்பு: நீங்கள் அனைவரும் அனேக தடவைகள் சந்தித்திருக்கிறீர்கள் மேலும் இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் ஏனென்றால் சென்ற கல்பத்தில் முதலில் சந்தித்திருக்கிறீர்கள் அதனால் இப்பொழுது சந்தித்து கொண்டிருக்கிறீர்கள். சென்ற கல்பத்தின் ஆத்மாக்கள் மீண்டும் தன்னுடைய உரிமையைப் பெறுவதற்காக வந்து சேர்ந்து விட்டீர்களா? புதியதாக அனுபவம் இல்லை தான் இல்லையா! நான் பல தடவைகள் சந்தித்திருக்கிறேன் என்ற அறிமுகம் நினைவு வருகிறது. தெரிந்த வீடாக அனுபவம் ஆகிறது. எப்பொழுது தன்னுடையவர் யாராவது கிடைத்து விட்டார் என்றால் தன்னுடையவர்களைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. இப்பொழுதோ இதற்கு முன்பு என்ன சம்மந்தம் இருந்ததோ அது சுயநலத்தின் சம்மந்தமாக இருந்தது. உண்மையானதாக இருக்கவில்லை என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்கள். தன்னுடைய பரிவாரத்தில், தன்னுடைய இனிமையான இல்லத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதாவும் வாருங்கள், வாருங்கள் என்று கூறி வரவேற்கிறார்.

திடத்தன்மை வெற்றியை கொண்டு வரும். இது நடக்குமா அல்லது நடக்காதா என்ற எண்ணம் எங்கு இருக்குமோ அங்கு வெற்றி கிடைக்காது. எங்கு திடத்தன்மை இருக்குமோ அங்கு நிச்சயம் வெற்றி இருக்கும். ஒருபொழுதும் சேவையில் மனமுடைந்து போகாதீர்கள் ஏனென்றால் இது அழியாத தந்தையின் அழியாத காரியம். வெற்றியும் அழியாததாக கண்டிப்பாக இருக்கும். சேவைக்கான பலன் கிடைக்கவில்லை என்பது இருக்கவே முடியாது. சில பலன் அந்த நேரம் கிடைக்கும், சிலவை கொஞ்ச காலத்திற்கு பிறகு கிடைக்கும் எனவே ஒருபொழுதும் இந்த மாதிரி எண்ணத்தையும் வைக்காதீர்கள். சேவை கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் புரிந்து கொள்ளுங்கள்.

**ஜப்பான் குரூப்புடன் சந்திப்பு:** தந்தை மூலமாக அனைத்து பொக்கிஷங்களும் பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறதா? நான் நிரம்பிய ஆத்மா என்று அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? இந்த பொக்கிஷங்கள் ஒரு ஜென்மத்திற்கு இல்லை ஆனால் 21-ஜென்மங்கள் வரை உடன் இருக்கும். இன்றைய உலகத்தில் யாராவது எவ்வளவு தான் செல்வந்தனாக இருந்தாலும் ஆனால் என்ன பொக்கிஷங்கள்

உங்களிடமிருக்கிறதோ அது வேறு யாரிடமும் இல்லை. அப்படியானால் வாஸ்தவமாக உண்மையான வி.ஐ.பி யார்? நீங்கள் தான் இல்லையா! இந்த பதவியோ இன்றிருக்கும் நாளை இருக்காது ஆனால் உங்களுடைய இந்த ஈஸ்வரிய பதவியை யாரும் பறிக்க முடியாது. நீங்கள் தந்தையின் வீட்டின் அலங்காரமான குழந்தைகள். எப்படி மலர்களால் வீட்டை அலங்கரிப்பார்கள் அதே போல் நீங்கள் தந்தையின் வீட்டின் அலங்காரங்கள். எனவே எப்பொழுதும் நான் தந்தையின் அலங்காரம் என்று புரிந்து தன்னை உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்யுங்கள். ஒருபொழுதும் பலஹீனமான விஷயங்களை நினைவு செய்யாதீர்கள். கடந்த காலத்து விஷயங்களை நினைவு செய்வதினால் இன்னும் பலஹீனம் வந்து விடும். கடந்ததை நினைத்தீர்கள் என்றால் அழுகை வரும். எனவே கடந்தது என்றால் முடிந்தது. தந்தையின் நினைவு சக்திசாலி ஆத்மாவாக ஆக்கி விடுகிறது. சக்திசாலியான ஆத்மாவை பொறுத்தளவில் கடின உழைப்பும் அன்பில் மாறிவிடுகிறது. எந்த அளவில் ஞானத்தின் களஞ்சியத்தை மற்றவர்களுக்கு கொடுப்பீர்களோ அந்த அளவு அது பெருகும். தைரியம் மற்றும் உற்சாகத்தின் மூலமாக எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். நல்லது.

**வரதானம்: பிரச்சினைகளை சாலையோரக் காட்சிகள் என்று புரிந்து கடந்து செல்லக்கூடிய நினைவு சொரூப சக்திசாலியான ஆத்மா ஆகுக!**

நினைவு சொரூப ஆத்மா சக்திசாலியாக இருக்கும் காரணத்தினால் பிரச்சினைகளை விளையாட்டு என்று நினைக்கிறார்கள். எவ்வளவு தான் பெரிய பிரச்சனையாக இருந்தாலும் ஆனால் சக்திசாலியான ஆத்மாவை பொறுத்தளவில் இலட்சியத்தை சென்றடைவதற்கு இந்த அனைத்து பாதைகளும் பக்கத்து காட்சிகள். மனிதர்களோ பணம் செலவழித்தும் சுற்றுலா காட்சிகளை பார்ப்பதற்கு செல்கிறார்கள். எனவே நினைவு சொரூப சக்திசாலியான ஆத்மாவை பொறுத்தளவில் பிரச்சனை என்று கூறினாலும், சோதனை, தடை என்று கூறினாலும் அனைத்தும் பக்கத்து காட்சிகள் மேலும் இந்த இலட்சியத்தை சென்றடைவதின் பக்கத்து காட்சிகளை எண்ணிலடங்கா தடவை நான் கடந்து வந்திருக்கிறேன், ஒன்றும் புதிதல்ல என்ற நினைவு இருக்கிறது.

**சுலோகன்: மற்றவர்களை கரெக்ஷன் (சரி செய்வது) செய்வதற்கு பதிலாக தந்தையுடன் கனெக்ஷனை (தொடர்பை) இணைத்து கொண்டீர்கள் என்றால் வரதானங்களின் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 12.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீகத் தன்மைக்கான சகஜ விதி -திருப்தி!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள தூரத்தில் இருந்த போதிலும் அருகில் இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளின் திருப்தி மற்றும் ஆன்மீகத் தன்மை மற்றும் மகிழ்ச்சி நிறைந்த புன்முறுவலை பார்த்துக் கொண்டிருந்தனர். திருப்தி ஆன்மீகத் தன்மைக்கான சகஜ விதி. பிரசன்னமாக இருப்பது சகஜ சித்தி (வெற்றி). யாரிடம் திருப்தி இருக்கிறதோ அவர் எப்பொழுதும் பிரசன்ன சொரூபமாக அவசியம் தென்படுவார். திருப்தி அவர்களின் அனைத்து பிராப்தி சொரூபம். திருப்தி எப்பொழுதும் ஒவ்வொரு விசேஷத்தையும் தாரணை செய்வதற்கான சுலபமான சாதனம். திருப்தி என்ற பொக்கிஷம் அனைத்து பொக்கிஷங்களையும் இயல்பாகவே தன் பக்கம் ஈர்க்கிறது. திருப்தி ஞான பாடத்தின் நடைமுறை நிரூபணம். திருப்தி கவலையில்லா இராஜா ஆக்கி விடுகிறது. திருப்தி எப்பொழுதும் சுயமரியாதை என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பதற்கான சாதனம். திருப்தி பெரும் வள்ளலாக, உலகிற்கு நன்மை செய்பவராக, வரம் அளிப்பவராக, சுலபமாகவும், நிரந்தரமாகவும் ஆக்கி விடுகிறது. திருப்தி எல்லைக்குட்பட்ட எனது, உனது என்ற சக்கரத்திலிருந்து விடுவித்து சுயதரிசன சக்கரதாரி ஆக்குகிறது. திருப்தி எப்பொழுதும் தீய எண்ணமற்ற, ஒரே ஒருவரின் (பாபா) ரசனை என்ற வெற்றி ஆசனத்திற்கு அதிகாரியாக ஆக்குகிறது. எப்பொழுதும் பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரி, சகஜமாக நினைவு என்ற திலகமிட்டவர், உலக மாற்றத்தின் சேவையின் கிரீடமணிந்தவர் என்ற இந்த அதிகாரங்களின் சம்பன்ன சொரூபத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது. திருப்தி பிராமண வாழ்க்கைக்கான உயிர்தானம். பிராமண வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சகஜ சாதனம் தன் மேல் திருப்தி, ஈஸ்வர்ய குடும்பத்தின் மீது திருப்தி, மேலும் பரிவாரம் அவர் மேல் திருப்தியாக இருப்பது. எந்தவொரு சூழ்நிலையிலும் வாயுமண்டலம், வைப்ரேஷனின் குழப்பத்திலும் திருப்தியாக இருப்பவர். அந்த மாதிரி

## 1984 அவ்யக்த முரளி

திருப்தி சொரூப சிரேஷ்ட ஆத்மா வெற்றி இரத்தினத்தின் சான்றிதழை பெறுவதற்கு உரியவர். (1) தன் மீது தானே திருப்தியாக இருப்பது (2) தந்தை மூலமாக எப்பொழுதும் திருப்தியாக இருப்பது (3) பிராமண குடும்பத்தின் மூலமாக திருப்தியாக இருப்பது! இதன் மூலம் தன்னுடைய நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சிரேஷ்டமாக ஆக்கிக் கொள்ள முடியும். இப்பொழுது கூட சான்றிதழ் பெறுவதற்கான நேரம் இருக்கிறது, பெற முடியும், ஆனால் அதிக நேரம் இல்லை. இப்பொழுது கால தாமதம் ஆகி விட்டது, ஆனால் அதிக காலதாமதம் (டூ லேட்) ஆகவில்லை. இப்பொழுது கூட திருப்தி என்ற விசேஷம் மூலம் முன்னேறிச் செல்ல முடியும். இப்பொழுது கடைசியாக வந்தவரும் வேகமாகச் சென்று முதலில் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது இல்லையெனில் பிறகு கடைசியில் வந்தவர் கடைசியாகவே இருந்து விடுவார் என்று பாப்தாதா இதே சான்றிதழை சோதனை செய்து கொண்டிருந்தார். நீங்களே உங்களை சோதனை செய்ய முடியும். மகிழ்ச்சி நிறைந்து இருக்கிறேனா அல்லது கேள்வி நிறைந்து இருக்கிறேனா? இரட்டை வெளிநாட்டினர் மகிழ்ச்சி நிறைந்து இருக்கிறீர்களா மற்றும் திருப்தியாக இருக்கிறீர்களா? கேள்வி அகன்று விட்டது என்றால் பிரசன்னமாக ஆகியே விட்டீர்கள். திருப்தியாக இருப்பதின் நேரமே சங்கமயுகம். திருப்தியின் ஞானமும் இப்பொழுது தான் கிடைக்கிறது. அங்கே சத்யுகத்தில் திருப்தி மற்றும் அதிருப்தி என்பதின் ஞானத்திலிருந்து விலகியிருப்பீர்கள். இப்பொழுது சங்கமயுகத்தின் பொக்கிஷம் தான் இது. நீங்கள் அனைவரும் திருப்தியான ஆத்மாக்கள், அனைவருக்கும் திருப்தி என்ற பொக்கிஷத்தை கொடுப்பவர்கள். வள்ளலின் குழந்தைகள் நீங்கள் மாஸ்டர் வள்ளல். அந்த அளவு சேமித்திருக்கிறீர்கள் தான் இல்லையா? கையிருப்பை முழுமையாக நிரப்பி விட்டீர்களா? அல்லது கொஞ்சம் குறைவு இருக்கிறதா? ஒருவேளை கையிருப்பு குறைவாக இருக்கிறது என்றால் உலகிற்கே நன்மை செய்பவராக ஆக முடியாது. வெறும் நன்மை செய்பவராக மட்டும் ஆக முடியும் ஆனால் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் இல்லையா. நல்லது!

அனைத்து பாரதம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பி மாஸ்டர் சர்வ சக்திவானாகி சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வருவது என்றால் செல்லவும் வேண்டும். தந்தையும் வருகிறார் என்றால் சென்றும் விடுகிறார்

இல்லையா? குழந்தைகளும் வருகிறார்கள் மேலும் சம்பன்னம் ஆகிச் செல்கிறார்கள். மற்றவர்களை தந்தைக்குச் சமமாக ஆக்குவதற்காகச் செல்கிறார்கள். தன்னுடைய பிராமண பரிவாரத்தை வளர்ச்சி அடையச் செய்வதற்காக செல்கிறார்கள். தாகத்திலிருக்கும் ஆத்மாக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காகச் செல்கிறார்கள், எனவே தான் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? தன்னுடைய மனம் விருப்பப்படியோ மற்றும் பந்தனத்திலேயோ சென்று கொண்டிருக்கவில்லை ஆனால் தந்தையின் டைரக்ஷன் பிரகாரம் சேவைக்காக கொஞ்ச காலத்திற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி புரிந்து சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நானோ அமெரிக்காவைச் சேர்ந்தவன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவன் என்று அப்படி நினைத்து சென்று கொண்டிருக்கவில்லையே! கொஞ்ச காலத்திற்காக பாப்தாதா உங்களை சேவை செய்வதற்காக பொறுப்பாளர் ஆக்கி அனுப்புகிறார். தந்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உங்களுடைய மனவிருப்பப்படி சென்று கொண்டிருக்கவில்லை. என்னுடைய வீடு, என்னுடைய தேசம் என்று அப்படியில்லை. தந்தை உங்களை சேவை ஸ்தானத்திற்கு அனுப்புகிறார். நீங்கள் அனைவரும் எப்பொழுதும் விலகியிருப்பவர்கள் மற்றும் தந்தையின் பிரியமானவர்கள், எந்த பந்தனமும் இல்லை. சேவையின் பந்தனமும் இல்லை. தந்தை அனுப்பியிருக்கிறார், அவருக்குத் தான் தெரியும். பொறுப்பாளர் ஆகியிருக்கிறோம். எதுவரையிலும் மற்றும் எந்த இடத்திற்கு பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறாரோ அதுவரையிலும் பொறுப்பாளர். அந்த மாதிரி டபுள் லைட்டாக இருக்கிறீர்கள் இல்லையா? பாண்டவர்களும் விலகியிருப்பவர்கள் மற்றும் அன்பானவர்கள் தான் இல்லையா? பந்தனம் உள்ளவர்களோ யாரும் இல்லை. விலகியிருப்பவராக ஆவது தான் அன்பானவர் ஆவது. நல்லது!.

எப்பொழுதும் திருப்தியின் ஆன்மீகத்தன்மையில் இருக்கக்கூடிய, பிரசன்னம் நிறைந்து இருக்கக்கூடிய, எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணம், சொல், செயல் மூலமாக அனைவருக்கும் திருப்தியின் பலம் கொடுக்கக் கூடிய, மனமுடைந்து போன ஆத்மாக்களை பொக்கிஷங்களினால் சக்திசாலியாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்யக்கூடிய, எல்லைக்கப்பாற்பட்ட கவலையில்லா இராஜாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அவ்யக்த பாப்தாதாவுடன் தாதி மற்றும் தாதி ஜானகி அவர்களின் சந்திப்பு:** புனித அன்னப்பறவைகளின் ரூப் - பசந்த் -ன் ஜோடி நன்றாக இருக்கிறது. இவர் (ஜானகி தாதி) அமைதியான ரூபமாகி, சேவை செய்வதற்கு அதிகம் விரும்புகிறார். மேலும் இவருக்கோ (தாதி) பேசவோ வேண்டிய திருக்கிறது. அவர் எப்பொழுது விரும்பினாலும் ஏகாந்தத்தில் சென்று விடுகிறார். இவருக்கு ரூபம் மூலம் செய்யும் சேவை விருப்பமாக இருக்கிறது, அனைவருமே ஆல்ரவுண்டர்கள் தான். இருந்தும் இவர்கள் இருவரும் ரூப் மற்றும் பசந்தின் ஜோடி. பொதுவாக இரண்டு விதமான சம்ஸ்காரங்களின் தேவை இருக்கிறது. எங்கு வார்த்தைகள் காரியம் செய்ய முடியாதோ அங்கு ரூபம் காரியம் செய்யும், மேலும் எங்கு ரூபம் காரியம் செய்ய முடியாதோ அங்கு பசந்த் காரியம் செய்யும். எனவே இவர்கள் நல்ல ஜோடி! யார் ஜோடி ஆகிறார்களோ அவர்கள் அனைவரும் நன்றாக இருக்கிறார்கள். அந்த ஜோடியும் நன்றாக இருந்தது (தீதியைப் பற்றி கூறுகிறார்). இந்த ஜோடியும் நன்றாக இருக்கிறது. நாடகத்தில் அவர் குப்த (மறைவான) நதியாகி விட்டார். அவர் மேல் இரட்டை வெளிநாட்டினருக்கும் மிகுந்த அன்பு இருந்தது. பரவாயில்லை. தீதியின் இன்னொரு ரூபத்தை பார்த்து விட்டீர்கள். அனைவரும் பார்த்து எவ்வளவு குஷி அடைகிறார்கள். அனைத்து மகாரதிகளும் உடன் இருக்கிறார்கள். பிரிஜ் இந்திரா, நிர்மல் சாந்தா அனைவரும் தூர இடத்தில் இருந்த போதும் துணையாக இருக்கிறார்கள். சக்திகளின் நல்ல சகயோகம் கிடைக்கிறது. அனைவரும் ஒருவர் இன்னொருவரை முன்னுக்கு வைக்கும் காரணத்தினால் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பொறுப்பாளர்களாக சக்திகளை முன்னுக்கு வைக்கும் காரணத்தினால் அனைவரும் முன்னுக்கு இருக்கிறார்கள். சேவை அதிகரிப்பதற்கான காரணமே ஒருவர் இன்னொருவரை முன்னுக்கு வைப்பது தான். உங்களுக்குள் அன்பு இருக்கிறது, ஒற்றுமை இருக்கிறது. எப்பொழுதும் மற்றவர்களின் விசேஷத்தை வர்ணிப்பது தான் சேவையை வளர்ச்சி அடையச் செய்வது. இதே விதியை கடைப்பிடித்ததினால் எப்பொழுதும் வளர்ச்சி அடைந்தது, மேலும் அடைந்து கொண்டே இருக்கும். எப்பொழுதும் விசேஷத்தை பார்ப்பது மேலும் விசேஷத்தைப் பார்ப்பதற்காக மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பது இது தான் குழு என்ற மாலையின் கயிறு ஆகும். முத்துக்களையும் கயிறில் கோர்ப்பார்கள் இல்லையா? குழுவின் கயிறே இது தான். விசேஷத்தைத் தவிர வேறு எந்த வர்ணனையும் இல்லை. ஏனென்றால் மதுபன் மகான் பூமி.

மகாபாக்கியமும் இருக்கிறது என்றால், மகாபாவமும் இருக்கிறது, மதுபன்னிலிருந்து சென்று விட்டு ஒருவேளை யாராவது அந்த மாதிரி வீணானதைப் பேசுகிறார் என்றால், அது மிகுந்த பாவமாக ஆகி விடுகிறது. எனவே எப்பொழுதும் விசேஷத்தைப் பார்க்கும் கண்ணாடி அணிந்திருக்க வேண்டும். வீணானதைப் பார்க்கக் கூடாது. சிகப்பு கண்ணாடி மூலம் சிகப்பைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியாது. எனவே விசேஷத்தைப் பார்க்கும் கண்ணாடி எப்பொழுதுமே அணியப் பெற்றிருக்க வேண்டும். எப்பொழுதாவது ஏதாவது விஷயத்தைப் பார்த்தாலும் கூட அதைப் பற்றி ஒருபொழுதும் வர்ணனை செய்யாதீர்கள். வர்ணனை செய்தீர்கள் என்றால் உடனே பாக்கியம் சென்று விட்டது. ஏதாவது குறை இருக்கிறது என்றால், அதற்கு பொறுப்பு தந்தை. இவர்களை தந்தை தான் பொறுப்பாளர் ஆக்கினார் இல்லையா? எனவே பொறுப்பிலிருப்பவர்களின் குறையை வர்ணிப்பது என்றால் தந்தையின் குறையை வர்ணிப்பது. எனவே இவர்களைப் பொறுத்தளவில் சுபபாவனையைத் தவிர வேறு எதையும் ஒருபொழுதும் வர்ணனை செய்ய முடியாது.

பாப்தாதாவோ இரத்தினங்களான உங்களை தன்னைவிடவும் சிரேஷ்டமானவர்களாகப் பார்க்கிறார். தந்தையின் அலங்காரம் இவர்கள் தான் இல்லையா? அப்படி தந்தையை அலங்கரிக்கக்கூடிய குழந்தைகள் சிரேஷ்டமாக ஆகிறார்கள் இல்லையா? பாப்தாதாவோ குழந்தைகளின் மகிமை செய்து குஷி அடைந்து கொண்டே இருக்கிறார். ஆஹா என்னுடைய இந்த இரத்தினம்! ஆஹா என்னுடைய இந்த இரத்தினம்! என்ற இதே மகிமையைத் தான் செய்து கொண்டே இருக்கிறார். தந்தை ஒருபொழுதும் யாருடைய பலஹீனத்தையும் பார்ப்பதில்லை. சமிக்ஞை கொடுக்கிறார் என்றாலும் கூட விசேஷம் நிரம்பிய மரியாதைப்பூர்வமான சமிக்ஞை கொடுக்கிறார். இல்லை என்றால் தந்தைக்கோ அதிகாரம் இருக்கிறது இல்லையா? ஆனாலும் எப்பொழுதும் மரியாதை கொடுத்து பிறகு சமிக்ஞை கொடுக்கிறார். தந்தையின் இதே விசேஷம் குழந்தைகளிலும் எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

**பாப்தாதாவின் எதிரில் அனைத்து முக்கிய சகோதரிகள் (தாதிகள்) அமர்ந்திருக்கிறார்கள்:** ஜீவன்முக்த் ஜனக் என்று உங்களுடைய

மகிமை இருக்கிறது இல்லையா? ஜீவன்முக்த் மற்றும் விதேகி (தேக உணர்வற்ற நிலை). இந்த இரண்டு பட்டங்கள் உங்களுக்கு இருக்கின்றன. (தாதிக்காக) இவரோ மணியாகவே இருக்கிறார், திருப்தி மணி, நெற்றியின் மணி, வெற்றியின் மணி எத்தனை மணிகள். அனைத்தும் மணிகளே மணிகள் தான்! மணிகளை எவ்வளவு தான் மறைத்து வைத்தாலும், மணியின் மினுமினுப்பை ஒருபொழுதும் மறைக்க முடியாது. தூசியிலிருந்தாலும் மினுமினுக்கும், லைட்டின் காரியம் செய்யும், எனவே பெயரும் அதே தான், செய்யும் காரியமும் அதே தான். இவருடைய (தாதி ஜானகியின்) குணமும் அதுவே தான் தேகமுக்த், ஜீவன்முக்த். எப்பொழுதும் வாழ்க்கையின் குஷியின் அனுபவத்தின் ஆழத்தில் இருக்கிறார். இதைத் தான் ஜீவன்முக்த் என்று கூறுகிறோம். நல்லது!

**சேவாதாரியின் விசேஷம்:** ஒரு பக்கம் மிகவும் பணிவானவர், உலக சேவகன், இன்னொரு பக்கம் ஞானத்தின் அதிகாரம் நிறைந்தவர். எந்த அளவு பணிவானவரோ அந்த அளவே கவலையில்லா இராஜா. பணிவு மற்றும் அதிகாரம் இரண்டின் சமநிலை. பணிவுத் தன்மை, பொறுப்புணர்வு, எல்லைக்கப்பாற்பட்ட பாவனை. இவைகள் தான் சேவையின் வெற்றிக்கான விசேஷ ஆதாரம். எந்த அளவு சுயமரியாதை இருக்கிறதோ அந்த அளவே பணிவானவராக இருப்பது. சுயமரியாதையில் அபிமானம் வேண்டாம். நானோ உயர்ந்தவன்! மற்றவர்கள் சிறியவர்கள் அல்லது அவர்களுக்காக வெறுப்புணர்வு இருக்கிறது என்று அப்படி வேண்டாம், மேலும் இந்த மாதிரி இருக்கக்கூடாது. எப்படிப்பட்ட ஆத்மாக்களாக இருந்தாலும், இரக்கப் பார்வையோடு பாருங்கள், அபிமானத்தின் பார்வையோடு பார்க்காதீர்கள். அபிமானமும் வேண்டாம், அவமானமும் வேண்டாம். இப்பொழுது பிராமண வாழ்க்கையில் இந்த மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. ஒருவேளை அபிமானம் இல்லை என்றால் அவமானம், அவமானமாக அனுபவம் ஆகாது. அவர் எப்பொழுதும் பணிவாக மற்றும் படைப்புக் காரியத்திலேயே பிஸியாக இருப்பார். யார் பணிவாக இருக்கிறாரோ அவர் தான் புதியபடைப்புக் காரியத்தை செய்ய முடியும். சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் விதையே பொறுப்புணர்வு மற்றும் பணிவான பாவனை. எல்லைக்குட்பட்ட மரியாதை இல்லை, ஆனால் பணிவானவராக இருப்பது. பண்பற்ற நிலையின் அடையாளம் பிடிவாதம்,

மேலும் பண்பின் அடையாளம் பணிவு. பணிவானவராகி பண்பு நிரம்பிய விவகாரம் செய்வது தான் பண்பாக இருப்பது மற்றும் சத்தியமாக இருப்பது. வெற்றி நட்சத்திரமாக எப்பொழுது ஆவீர்கள் என்றால், எப்பொழுது தன்னுடைய வெற்றியின் அபிமானம் இல்லை, வர்ணனையும் செய்யாமல் இருக்க வேண்டும். தன்னுடைய மகிமையின் பாடலை பாட வேண்டாம், ஆனால் எந்த அளவு வெற்றியோ அந்த அளவு பணிவு நிறைந்த நிர்மல சுபாவம் உடையவர். மற்றவர்கள் உங்களது மகிமை பாடட்டும், ஆனால் நீங்கள் எப்பொழுதும் தந்தையின் மகிமை பாடுங்கள்! அம்மாதிரியான பணிவுத் தன்மை படைப்பின் காரியத்தை சுலபமாக செய்கிறது. எதுவரை பணிவானவர் ஆகவில்லையோ அதுவரை படைப்புக் காரியம் செய்ய முடியாது. பணிவு நிரம்பியவராக இருப்பது மற்றும் சரி ஐயா! செய்கிறேன், என்ற பாடத்தை படிக்கும் ஆத்மாவைப் பற்றி சில சமயம் தவறாகப் புரிந்து கொள்வதினால் மற்றவர்களுக்கு தோல்வியாகத் தென்படலாம் ஆனால் உண்மையில் அது அவருடைய வெற்றி ஆனால் அந்த நேரம் மட்டும் மற்றவர்கள் கூறுவதினால் மேலும் வாயுமண்டலத்தில் நிச்சயபுத்தி உடையவராக இருந்தவர், சந்தேக ரூபமானவராக மாறி விட வேண்டாம். வெற்றியா அல்லது தோல்வியா என்ற சந்தேகத்தை வைக்காமல் தன்னுடைய நிச்சயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். எதை மற்றவர்கள் இன்று தோல்வி என்று கூறுகிறார்களோ, அவர்களே நாளை ஆஹா! ஆஹா! என்ற மலர்களைத் தூவுவார்கள். சம்ஸ்காரத்தில் பணிவு மற்றும் படைப்பு என்ற இந்த இரண்டு விசேஷங்கள் எஜமானத்தன்மையின் அடையாளம். கூடவே அனைத்து ஆத்மாக்களின் தொடர்பில் வர வேண்டும், அன்பானவராக வேண்டும். அனைவரின் உள்ளத்தின் அன்பின் ஆசீர்வாதங்கள் அதாவது சுபபாவனை அந்த ஆத்மாவிற்காக அனைவரின் மனதிலிருந்து எழ வேண்டும். தெரிந்திருந்தாலும் அல்லது தெரியாவிட்டாலும் தூரத்து சம்மந்தம் மற்றும் தொடர்பு இருந்தாலும், யார் பார்த்தாலும் அன்பின் காரணமாக இவர் நம்முடையவர் என்ற மாதிரியே அனுபவம் செய்ய வேண்டும். எந்த அளவு குணங்களின் தாரணையில் சம்பன்னம், குணம் என்ற பலன் சொரூபமாக ஆவீர்களோ அந்த அளவே பணிவானவர் ஆகுங்கள். பணிவான நிலை மூலமாக ஒவ்வொரு குணத்தையும் வெளிப்படுத்துங்கள், அப்பொழுது தான் இவர் தர்ம சக்தியுள்ள மகான் ஆத்மா என்று கூறுவோம். சேவாதாரி என்றால் படைப்பு காரியம் செய்பவர், மேலும் பணிவாக இருப்பவர். பணிவுத்

தன்மை தான் சேவையின் வெற்றிக்கான சாதனம். பணிவானவர் ஆவதினால் எப்பொழுதும் சேவையில் சுமையற்று லேசாக இருப்பார்கள். பணிவு இல்லை மற்றும் மரியாதை கிடைக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது என்றால், சுமையாகி விடும். சுமையுள்ளவர் எப்பொழுதும் நின்று விடுவார். வேகமாகச் செல்ல முடியாது, எனவே ஒருவேளை ஏதாவது சுமையான உணர்வு இருக்கிறது என்றால், பணிவாக இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். எங்கு பணிவுத் தன்மை இருக்கிறதோ அங்கு கோபம் இருக்காது ஆன்மீகம் இருக்கும். எப்படி தந்தை எந்த அளவு பணிவு நிறைந்தவராக வருகிறாரோ அதே போல் தந்தையைப் பின்பற்றி நடங்கள். ஒருவேளை கொஞ்சமாவது சேவையில் முறைத்துக் கொள்ளுதல் இருக்கிறது என்றால், அந்த சேவை நின்று விடும். பிரம்மாபாபா தன்னை எவ்வளவு பணிவானவராக ஆக்கிக் கொண்டார் - குழந்தைகளின் கால்களைப் பிடித்து விடுவதற்கும் கூட தயாரானவர் ஆகி, அந்த அளவு பணிவு நிறைந்த சேவாதாரியாக ஆனார். குழந்தைகள் என்னை விட முன்னுக்கு இருக்கிறார்கள், குழந்தைகள் என்னை விட நன்றாக சொற்பொழிவு நடத்த முடியும். 'முதலில் நான்' என்று ஒருபொழுதும் கூறவில்லை. குழந்தைகள் முன்னுக்கு, முதலில் குழந்தைகள், குழந்தைகள் பெரியவர்கள் என்று கூறி தன்னைத் தாழ்த்திக் கொள்வது, உண்மையில் தாழ்ந்தவராக ஆவதில்லை ஆனால் உயர்ந்தவராக ஆவது. இதைத் தான் உண்மையான நம்பர் ஒன் தகுதியான சேவாதாரி என்று கூறுவது. மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்து தான் பணிவானவர் ஆவது தான் பரோபகாரம். இதைக் கொடுப்பது தான் நிரந்தரமாகப் பெறுவது. அற்ப கால அழியும் மரியாதையை தியாகம் செய்து சுயமரியாதையில் நிலைத்திருங்கள், பணிவானவராகி மரியாதையைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். இவ்வாறு கொடுப்பது தான் பெறுவதாக ஆகி விடுகிறது. மரியாதை கொடுப்பது என்றால் அந்த ஆத்மாவை ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்து முன்னுக்கு வைப்பது. இந்த சதா காலத்திற்கான ஊக்கம் உற்சாகம் அதாவது குஷியின் மற்றும் தன்னுடைய சகயோகத்தின் பொக்கிஷம், ஆத்மாவை சதா காலத்திற்கும் புண்ணிய ஆத்மாவாக ஆக்கி விடுகிறது.

**வரதானம்: வீணான எண்ணங்களை சக்திசாலியாக பரிவர்த்தனை (மாற்றம்) செய்து சகஜ யோகி ஆகக்கூடிய சக்திசாலியான ஆத்மா ஆகுக!**

சில குழந்தைகள் என்னுடைய பங்கோ அந்த அளவு தென்படவில்லை, யோகா செய்ய முடியவில்லை, அசரீரி ஆவதில்லை என்று யோசிக்கிறார்கள் -இது வீணான எண்ணம். இந்த எண்ணங்களை பரிவர்த்தனை செய்து நினைவோ என்னுடைய இயற்கையான குணம், நான் தான் ஒவ்வொரு கல்பத்திலும் சகஜயோகியாக இருந்தேன், நான் யோகி ஆகவில்லை என்றால், யார் ஆவார்கள் என்ற சக்திசாலியான எண்ணங்களை வையுங்கள். ஒருபொழுதும் என்னுடைய உடலோ ஒன்றும் செய்ய முடியாது, இந்த பழைய உடலோ உதவாதது என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள். ஆஹா! ஆஹா! என்ற எண்ணத்தை வையுங்கள். இந்த இறுதி உடலின் மகிமை பாடுங்கள், பிறகு சக்தி வந்து விடும்.

**சுலோகன்: சுபபாவனைகளின் சக்தி, பிறரது வீணான பாவனைகளையும் கூட பரிவர்த்தனை செய்ய முடியும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 15.03.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலி உற்சவம் (பண்டிகை) தூய்மை ஆவதற்கு மற்றும் ஆக்குவதற்கான நினைவுச்சின்னம்!

மிகப் புனிதமான தந்தை புனித அன்னப்பறவைகளுடன் ஹோலி டே (புனித நாளை) கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார். புனித நாள் என்று இந்த சங்கமயுகம் அழைக்கப்படுகிறது. சங்கமயுகமே புனித நாள் தான். அம்மாதிரி மிகப்புனிதமான தந்தை புனிதமான குழந்தைகளுடன் புனித நாளைக் கொண்டாடுவதற்கு வந்திருக்கிறார். உலகத்தின் ஹோலி ஓரிரு நாட்களின் பண்டிகையாக இருக்கும். மேலும் புனித அன்னப் பறவைகள் நீங்கள் முழு சங்கமயுகத்திலும் ஹோலி கொண்டாடுகிறீர்கள். அவர்கள் வண்ணத்தைப் பூசுவார்கள், மேலும் நீங்கள் தந்தையின் தொடர்பின் காரணமாக அவருடைய சிறப்புக்கள், குணங்கள், சக்திகளால் வண்ண மயமாக்கப்பட்டு தந்தைக்குச் சமமாக சதா காலத்திற்காக ஹோலி அதாவது தூய்மையாகி விடுகிறீர்கள். எல்லைக்குட்பட்டவரிலிருந்து எல்லைக்கப்பாற்பட்டவராக ஆகி விடுவதினால் சதா காலத்திற்காக ஹோலி அதாவது தூய்மையாகி விடுகிறீர்கள். இந்த ஹோலி உற்சவம், ஹோலி அதாவது தூய்மை ஆக்குவதற்கு மற்றும் ஆவதற்கான உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியது. என்னென்ன விதிகளை நினைவுச்சின்னமாகக் கடைப்பிடிக் கிறார்களோ அந்த அனைத்து விதிகளிலும் தூய்மை ஆக வேண்டும் என்ற சாரம் நிரம்பி இருக்கும். முதலில் ஹோலி ஆவதற்கு மற்றும் ஹோலியைக் கொண்டாடுவதற்காக தூய்மையின்மை, தீயவைகளை சாம்பலாக்க வேண்டும், எரிக்க வேண்டும். எதுவரை தூய்மையின்மையை முழுமையாக அழிக்கவில்லையோ அதுவரை தூய்மையின் பிரபாவம் என்ற வண்ணம் பூசப்பட மாட்டாது. தூய்மையான பார்வையுடன் ஒருவர் இன்னொருவர் மேல் வண்ணம் பூசும் உற்சவத்தைக் கொண்டாட முடியாது. பலவிதமான பாவனைகளை மறந்து நாம் அனைவரும் ஒரே பரிவாரத்தைச்

சேர்ந்தவர்கள், ஒரே சமமானவர்கள் அதாவது சகோதரன் - சகோதரன் என்ற ஒரு சமமான உள்உணர்வுடன் கொண்டாடுவதற்கான நினைவு பண்டிகையாகும். வெளியுலக மனிதர்களோ உலகியல் ரூபத்தில் கொண்டாடு வதற்காக சிறியவர்கள் பெரியவர்கள், ஆண்கள் பெண்கள் அனைவரும் சம உணர்வோடு கொண்டாட வேண்டும் என்ற இந்த பாவனையோடு கொண்டாடுகிறார்கள். உண்மையில் சகோதரன் - சகோதரனின் சமமான சொரூபத்தின் நினைவு அழியாத வண்ணத்தின் (பிரபாவத்தின்) அனுபவம் செய்விக்கிறது. எப்பொழுது இந்த சமமான சொரூபத்தில் நிலைத்து விடுவார்களோ அப்பொழுது தான் அழியாத குஷியின் ஜொலிப்பு அனுபவம் ஆகிறது. மேலும் அனைத்து ஆத்மாக்களுக்கும் அந்த மாதிரி அழியாத வண்ணத்தைப் பூச வேண்டும் என்ற உற்சாகம் சதா காலத்திற்கும் இருக்கிறது. வண்ணத்தை பீச்சாங்குழல் மூலமாக மற்றவர்கள் மீது பூசுவார்கள். உங்களுடைய பீச்சாங்குழல் எது? உங்களுடைய தெய்வீக புத்தி என்ற பீச்சாங்குழலில் அழியாத வண்ணம் நிரப்பப்பட்டிருக்கிறது தான் இல்லையா? நெருக்கத்தின் தொடர்பின் வண்ணத்தை (பிரபாவத்தை) அனுபவம் செய்கிறீர்கள், அந்த விதவிதமான அனுபவங்களின் வண்ணத்தினால் பீச்சாங்குழல் நிரம்பியிருக்கிறது தான் இல்லையா.? நிரம்பி யிருக்கும் புத்தி என்ற பீச்சாங்குழல் மூலம் எந்த ஆத்மாவிற்கும் பார்வை மூலமாக, உள்உணர்வு மூலமாக, வாய் மூலமாக இந்த வண்ணத்தினால் அவருக்கு வண்ணம் பூச முடியும். அதனால் அவர் சதா காலத்திற்கும் ஹோலி அதாவது தூய்மையானவர் ஆகி விட வேண்டும். அவர்கள் ஹோலி கொண்டாடுகிறார்கள். மேலும் நீங்கள் ஹோலியாக ஆக்குகிறீர்கள். அனைத்து நாளையும் ஹோலி டே அதாவது புனித நாளாக ஆக்கி விடுகிறீர்கள். அவர்கள் அற்பகாலத்திற்காக குஷி நிறைந்த தன்னுடைய மூட்-ஐ (மனநிலையை) உருவாக்குகிறார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் எப்பொழுதும் கொண்டாடுவதற்காக ஹோலி மற்றும் ஹேப்பி மூட்-ல் இருக்கிறீர்கள். மூட்-ஐ உருவாக்க வேண்டியதாக இருக்காது. எப்பொழுதும் ஹோலி மூட்-ல் (மனநிலையில்) இருக்கிறீர்கள். மேலும் வேறு எந்த விதமான மூட்-ம் இல்லை. நீங்கள் ஹோலி மூட்-ல் எப்பொழுதும் லேசானவராக, எப்பொழுதும் கவலையற்றவராக, எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களால் நிரம்பியவராக, எல்லைக்கப்பாற்பட்ட சுயராஜ்ய அதிகாரியாக இருக்கிறீர்கள். யார் தன்னுடைய மனநிலையை அடிக்கடி பலவிதமாக மாற்றிக்

கொள்கிறார்கள், சில நேரம் குஷியில், சில நேரம் அதிகம் யோசிக்கும், சில நேரம் லேசானவராக, சில நேரம் சுமையானவராக இருக்கும் இந்த அனைத்து மனநிலையை மாற்றி எப்பொழுதும் சந்தோஷம் மற்றும் தூய்மையான மனநிலை உள்ளவராக ஆகி விடுகிறீர்கள். அந்த மாதிரியான அழியாத உற்சவத்தை தந்தையுடன் கொண்டாடு கிறீர்கள். அழிக்க வேண்டும், கொண்டாட வேண்டும். மேலும் பிறகு சந்திப்பைச் செய்ய வேண்டும். இதற்கான நினைவாக எரிக்கிறார்கள், வண்ணத்தைப் பூசுகிறார்கள். பிறகு ஒருவர் இன்னொருவரை சந்திக்கிறார்கள். நீங்கள் அனைவரும் எப்பொழுது தந்தையின் வண்ணத்தில் வண்ணமாக்கப்பட்டு விடுகிறீர்கள், ஞானத்தின் வண்ணத்தில், குஷியின் வண்ணத்தில் அப்படி எத்தனை வண்ணங்களினால் ஹோலி விளையாடு கிறீர்கள். எப்பொழுது இந்த அனைத்து வண்ணங்களால் வண்ணமயமாக்கப்பட்டு விடுகிறீர்களோ அப்பொழுது தந்தைக்குச் சமமானவர் ஆகி விடுகிறீர்கள். மேலும் சமமானவர்கள் எப்பொழுது அவர்களுக்குள் சந்திக்கிறார்கள் என்றால் எப்படி சந்திப்பார்கள்? ஸ்தூலத்திலோ கட்டி அணைத்துக் கொள்வார்கள், ஆனால் நீங்கள் எப்படி சந்திக்கிறீர்கள்? எப்பொழுது சமமானவர் ஆகி விடுகிறீர்கள் என்றால் அன்பில் மூழ்கி விடுகிறார்கள். மூழ்கி விடுவது தான் சந்திப்பது. இந்த அனைத்து விதிகளும் எங்கிருந்து தொடங்கியது? நீங்கள் அழியாததாகக் கொண்டாடுகிறீர்கள், அவர்கள் அழியும் நினைவுச் சின்ன ரூபத்தில் கொண்டாடி குஷியடைந்து விடுகிறார்கள். இதை வைத்து கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நீங்கள் அனைவரும் எந்த அளவு அழியாத உற்சவம் அதாவது உற்சாகத்தில் இருப்பதற் கான அனுபவியாக ஆகியிருக்கிறீர்கள். அதன் காரணமாக உங்களுடைய நினைவுச் சின்ன நாளை கொண்டாடு வதிலும் குஷியடைந்து விடுகிறார்கள். இறுதிவரையிலும் உங்களுடைய உற்சாகம் மற்றும் குஷியின் நினைவுச் சின்னமாக அனேக ஆத்மாக்களுக்கு குஷியின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரியான உற்சாகம் நிரம்பிய வாழ்க்கை, குஷிகளினால் நிரம்பிய வாழ்க்கையை உருவாக்கி விட்டீர்கள் தான் இல்லையா?

அழியாத உற்சவத்தைக் கொண்டாடிக் கொண்டே தன்னுடைய நினைவுச் சின்னமான உற்சவத்தையும் பார்க்கிறீர்கள் என்பது தான் நாடகத்தில் இருக்கும் சங்கமயுகத்தின் ஒரு அதிசயமான பாகம் ஆகும். ஒரு பக்கம்

சைத்தன்ய சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் இருக்கிறீர்கள். இன்னொரு பக்கம் தன்னுடைய படங்கள் விக்கிரகங் களைப் பார்க்கிறீர்கள். ஒரு பக்கம் நினைவு சொரூபமாக ஆகியிருக்கிறீர்கள், இன்னொரு பக்கம் தன்னுடைய ஒவ்வொரு சிரேஷ்ட காரியத்தின் நினைவுச் சின்னத்தைப் பார்க்கிறீர்கள். மகிமைக்குத் தகுதியானவர் ஆகி விட்டீர்கள், மேலும் சென்ற கல்பத்தின் மகிமையை கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இது அதிசயம் தான் இல்லையா? மேலும் நினைவின் மூலம் பார்த்தீர்கள் என்றால் இது நம்முடைய மகிமை தான் என்பது தெரியும். பார்க்கப்போனால் ஒவ்வொரு ஆத்மாவும் வேறு பெயர் ரூபத்தில் தன்னுடைய சிரேஷ்ட காரியத்தின் நினைவுச் சின்ன படங்களை, விக்கிரகங்களைப் பார்க்கவும் செய்கிறார்கள் ஆனால் தெரிந்திருக்கவில்லை. இப்பொழுது காந்தி அவர்களும் வேறு பெயர் ரூபத்தில் தன்னுடைய படத்தைப் பார்ப்பவராக இருப்பார் இல்லையா? ஆனால் அறிமுகம் இல்லை ஆனால் நீங்கள் தெரிந்து தன்னுடைய படங்களைப் பார்க்கிறீர்கள். இது நம்முடைய படம் தான் என்று தெரிந்திருக்கிறீர்கள். இது நம்முடைய உற்சாகம் நிறைந்த நாட்களின் நினைவுச்சின்னத்தை உற்சவத்தின் ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முழு ஞானமும் வந்து விட்டது தான் இல்லையா. இரட்டை வெளிநாட்டினரின் விக்கிரகங்கள் கோவில்களில் இருக்கின்றனவா? இந்த தில்வாடா கோவிலில் தன்னுடைய சிலையைப் பார்த்தீர்களா? அல்லது இது பாரதத்தைச் சேர்ந்தவர்களின் சிலைகள் மட்டும் தானா? அனைவருமே தன்னுடைய விக்கிரகங்களைப் பார்த்திருக்கிறீர்களா? இது என்னுடைய விக்கிரகம் தான் என்று தெரிந்து கொண்டீர்களா.? எப்படி ஹே! அர்ஜுன் என்று ஒருவரை உதாரணமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதே போல் நினைவுச் சின்னத்திலும் கொஞ்சம் தான் காண்பிக் கிறார்கள் ஆனால் அவை அனைவரின் நினைவுச்சின்னம் தான்! இவை மிகக் குறைந்த விக்கிரகங்கள் தான் இதில் நான் எப்படி இருக்க முடியும் என்று அப்படி நினைக்காதீர்கள். இதுவோ சேம்பிள் (மாதிரி) காண்பித் திருக்கிறார்கள் ஆனால் இது உங்கள் அனைவரின் நினைவுச்சின்னம். யார் நினைவில் இருக்கிறார்களோ அவர்களுடைய நினைவுச்சின்னம் கண்டிப்பாக உருவாகும். புரிந்ததா? அனைவரின் பெரிய பீச்சாங்குழல் நிரம்பியிருக்கிறது தான் இல்லையா? ஒரு தடவையிலேயே காலியாகி விடும் மாதிரியான மிக சிறியதாகவோ இல்லையே!. பிறகோ அடிக்கடி

நிரப்ப வேண்டியதாக இருக்கும். அந்த மாதிரி கஷ்டப்படுவதற்கும் அவசியம் இல்லை. அனைவரையும் அழியாத வண்ணத்தினால் வண்ணமாக்கி விடுங்கள். ஹோலி (தூய்மை) ஆக்குவதற்காக ஹோலியைக் கொண்டாடுங்கள். உங்களுடைய ஹோலி முடிந்து விட்டது தான் இல்லையா அல்லது கொண்டாட வேண்டுமா? ஹோலி முடிந்து விட்டது என்றால் ஹோலி கொண்டாடி விட்டீர்கள். வண்ணம் பூசப்பட்டு இருக்கிறது தான் இல்லையா? இந்த வண்ணத்தைக் கழுவி சுத்தப்படுத்த வேண்டியது இருக்காது. மிகவும் குஷியோடு ஸ்தூல வண்ணத்தைப் பூசவும் செய்கிறார்கள். மேலும் பிறகு அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் விரும்புகிறார்கள். உங்களுடைய இந்த வண்ணமோ அந்த மாதிரியானது இன்னும் பூசுங்கள் என்று சொல்வார்கள். இதைக் கண்டு யாரும் பயப்பட மாட்டார்கள். அந்த வண்ணத்திலோ கண்ணில் விழுந்து விடக்கூடாது என்று பயப்படுவார்கள். இங்கேயோ எவ்வளவு பூசுகிறீர்களோ அவ்வளவு நல்லது என்று சொல்வார்கள். அந்த மாதிரி ஹோலியைக் கொண்டாடி விட்டீர்கள் தான் இல்லையா? ஹோலி (தூய்மை) ஆகி விட்டீர்கள். இது தூய்மை ஆவதற்கு மற்றும் ஆக்குவதற் கான நினைவுச்சின்னம்.

இங்கு பாரதத்திலோ அனேக கதைகள் உருவாக்கி விட்டார்கள். ஏனென்றால் கதைகள் கேட்பதற்கு ஆர்வமாக உள்ளார்கள். எனவே ஒவ்வொரு உற்சவத்தின் கதையை உருவாக்கி இருக்கிறார்கள். உங்களுடைய வாழ்க்கைக் கதையிலிருந்து பலவிதமான சின்னச்சின்ன கதைகளை உருவாக்கி விட்டார்கள். சிலர் ராக்கியின் கதையை உருவாக்கியிருக்கிறார்கள், சிலர் ஹோலியின் கதை, சிலர் ஜென்மத்தின் கதையை உருவாக்கியிருக்கிறார்கள். சிலர் இராஜ பதவி ஏற்பு (பட்டாபிஷேகம்) நாளின் கதையை உருவாக்கி விட்டார்கள் ஆனால் இவை அனைத்தும் உங்களுடைய வாழ்க்கைக் கதைகளின் கதைகள். துவாபர்யுகத்தில் காரிய விவகாரத்திற்கும் இந்த அளவு நேரம் கொடுக்க வேண்டியதாக இருந்தது இல்லை. ஓய்வாக இருந்தீர்கள். மக்கள் ஜனத்தொகையும் இப்பொழுதைய ஜனத்தொகையின் கணக்குப்படி மிகக் குறைவாக இருந்தது. செல்வமும் ரஜோ நிலையில் இருந்தது. உங்களுடைய நிலையும் ரஜோ பிரதானமாக இருந்தது. எனவே தன்னைத் தானே பிஸியாக வைத்துக் கொள்வதற்காக இந்த கதை, கீர்த்தனைகள் ஆகியவற்றை உருவாக்கி பயன்படுத்தினார்கள். ஏதாவது சாதனம்

வேண்டும் இல்லையா? நீங்களோ ஒரு வேலையும் இல்லாமல் இருக்கிறீர்கள் என்றால் ஒன்று சேவை செய்கிறீர்கள் அல்லது நினைவில் அமர்ந்து விடுகிறீர்கள். அவர்கள் அந்த நேரம் என்ன செய்வார்கள். பிரார்த்தனை செய்வார்கள் அல்லது கதை கீர்த்தனை கேட்பார்கள். எனவே ஒன்றும் சுமையற்ற புத்தி உடையவராகி மிக நல்ல நல்ல கதைகளை எழுதியிருக்கிறார்கள். அதுவும் நல்லது தான். தூய்மையின்மையில் அதிகம் செல்வதிலிருந்து பாதுகாப்பாகி விட்டார்கள். இன்றைய நாட்களின் சாதனமோ அந்த மாதிரியானது. 5-வருடத்து குழந்தைகளைக் கூட விகாரி ஆக்கி விடுகிறது. மேலும் அந்த நேரம் இருந்தும் கொஞ்சம் மரியாதைகளும் இருந்தன ஆனால் இவை அனைத்துமே உங்களுடைய நினைவுச் சின்னங்கள். நான் என்னுடைய நினைவு சின்னத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய பாடலை பாடிக் கொண்டிருக்கிறேன் என்று அந்த அளவு போதை மற்றும் குஷி இருக்கிறது தான் இல்லையா? எவ்வளவு அன்புடன் பாடலைப் பாடுகிறார்கள். அந்த அளவு அன்பு சொரூபமாக நீங்கள் ஆகியிருக்கிறீர்கள். அதனால் தான் அன்புடன் பாடுகிறார்கள். புரிந்ததா? ஹோலியின் நினைவுச்சின்னம் எது? எப்பொழுதும் குஷியாக இருங்கள், பாரமற்று லேசாக இருங்கள் என்ற இது தான் கொண்டாடுவது. நல்லது. ஒருபொழுதும் மூட் ஆஃப் ஆகி விடாதீர்கள். எப்பொழுதுமே ஹோலி மூட், லைட் மூட், ஹேப்பி மூட் இருக்கட்டும். இப்பொழுது மிக நல்ல ஞானம் நிறைந்தவர் ஆகிக் கொண்டே இருக்கிறீர்கள். முதல் நாள் எப்பொழுது மதுபன்னில் வருகிறீர்களோ அந்த புகைப்படம், மேலும் பிறகு எப்பொழுது செல்கிறீர்களோ அந்த புகைப்படம் இரண்டையுமே எடுத்துக் கொள்ள வேண்டும். சமிக்ஞையினாலே புரிந்து கொள்கிறார்கள். இருந்தும் பாப்தாதாவின் மற்றும் பாப்தாதாவின் வீட்டின் அலங்காரமாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் வந்ததினால் பாருங்கள் மதுபன் எவ்வளவு கலகலகப்பாகி விட்டது. எங்கு பார்த்தாலும் அங்கு ஃபரிஷ்தாக்கள் வந்த போய்க் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் (வீட்டின்) அலங்காரம் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். நல்லது.

அனைவரும் ஞானத்தின் வண்ணத்தினால் வண்ணம் பூசப்பட்டு, எப்பொழுதும் தந்தையின் தொடர்பு என்ற வண்ணத்தில் இருக்கக்கூடிய, தந்தைக்குச் சமமாக சம்பன்னமாகி மற்றவர்களையும் அழியாத வண்ணத்தில் வண்ணமாக்கக்கூடிய, எப்பொழுதும் புனித நாளைக்

## 1984 அவ்யக்த முரளி

கொண்டாடக் கூடிய புனித அன்னப்பறவை ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் சந்தோஷமாக மற்றும் தூய்மையாக இருப்பதற்கான பாப்தாதாவின் வாழ்த்துக்கள் உரித்தாகுக. எப்பொழுதும் தன்னை சம்பன்னம் ஆக்குவதற்கும் ஊக்கம் உற்சாகத்தில் இருப்பதற்குமான வாழ்த்துக்கள் உரித்தாகுக. கூடவே நாலாபுறங்களிலும் உள்ள அன்பிலேயே மூழ்கியிருக்கக் கூடிய, எப்பொழுதும் சந்திப்பை செய்து கொண்டிருக்கக்கூடிய விசேஷ குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: திடத்தன்மையின் சக்தி மூலமாக வெற்றியை அடையக்கூடிய மூன்று காலங்களையும் தெரிந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் ஆகுக!**

திடத்தன்மையின் சக்தி சிரேஷ்ட சக்தியாகும். அது அலட்சியத்தின் சக்தியை சுலபமாக பரிவர்த்தனை செய்து விடுகிறது. எங்கு திடத்தன்மை இருக்கிறதோ அங்கு கண்டிப்பாக வெற்றி இருக்கிறது என்பது பாப்தாதாவின் வரதானம். எப்படி நேரமோ அப்படி விதி மூலம் சித்தி சொரூபமாக மட்டும் ஆகுங்கள். எந்தக் காரியம் செய்வதற்கு முன்பும் அதனுடைய முதல், இடை, கடையை யோசித்து, புரிந்து காரியம் செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள். அதாவது மூன்று காலங்களையும் தெரிந்த ஆசனத்தில் அமர்ந்தவராக ஆகுங்கள். பிறகு அலட்சியம் முடிவடைந்து விடும். எண்ணம் என்ற விதை சக்திசாலியாக திடத்தன்மை நிரம்பியதாக இருக்கிறது என்றால் வார்த்தைகள் மற்றும் செயலில் சுலபமாகவே கண்டிப்பாக வெற்றி இருக்கும்.

**சுலோகன்: எப்பொழுதும் திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்திபடுத்துபவர்தான் திருப்தியான ஆத்மா!**

✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹

# 02.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்துவின் மகத்துவம்!

இன்று பாக்கியவிதாதா தந்தை அனைத்து பாக்கியவான் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்துள்ளார். பாக்கியவிதாதா தந்தை, குழந்தைகள் அனைவருக்கும் பாக்கியத்தை உருவாக்குவதற்கான மிக சகஜமான விதியைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். பிந்துவின் (புள்ளி) கணக்கை மட்டும் அறிந்து கொள்ளுங்கள். பிந்துவின் கணக்கு அனைத்திலும் எளிதானது. பிந்துவின் மகத்துவத்தை அறிந்து கொண்டால் மகான் ஆகி விட்டீர்கள்! அனைத்திலும் சகஜமான மற்றும் மகத்துவம் நிறைந்த பிந்துவின் கணக்கை அனைவரும் நல்லபடியாக அறிந்து கொண்டீர்கள் இல்லையா? பிந்து (பூஜ்யம் -பாபா) எனச் சொல்ல வேண்டும் மற்றும் பிந்து (புள்ளி) ஆகி விட வேண்டும். பிந்து ஆகி பிந்து பாபாவை நினைவு செய்ய வேண்டும். பிந்துவாக இருந்தீர்கள், இப்போது பிந்து ஸ்திதியில் நிலைத்திருந்து பிந்து பாபாவுக்குச் சமமாகி சந்திப்பைக் கொண்டாட வேண்டும். இது சந்திப்பைக் கொண்டாடுவதற்கான யுகம், பறக்கும் கலைக்கான யுகம் எனச் சொல்லப் படுகின்றது. பிராமண வாழ்க்கை என்பதே சந்திப்பதற்கும் கொண்டாடுவதற்குமானது. இந்த விதியின் மூலம் தான் சதா கர்மம் செய்து கொண்டே கர்மங்களின் பந்தனங்களில் இருந்து விடுபட்ட கர்மாதீத் ஸ்திதியின் அனுபவம் செய்கிறீர்கள். கர்மத்தின் பந்தனத்தில் வருவதில்லை, ஆனால் சதா பாபாவின் அனைத்து சம்மந்தங்களிலும் இருக்கிறீர்கள். செய்விப் பவராகிய தந்தை நிமித்தமாக ஆக்கி, செய்வித்துக் கொண்டிருக்கிறார். ஆக, சுயம் சாட்சி ஆகி விட்டீர்கள். ஆகவே இந்த சம்மந்தத்தின் நினைவு பந்தன்முக்த் ஆக்கி விடுகின்றது. எங்கே சம்மந்தத்தில் செய்கிறீர்களோ, அங்கே பந்தனம் இருப்பதில்லை. நான் செய்தேன் -- இது போல் யோசித்தால் சம்மந்தம் மறந்து விடும், பந்தனமாகி விடும். சங்கமயுகம் பந்தனங்களில் இருந்து விடுபட்ட, சர்வ சம்மந்தங்களுடன் கூடிய, ஜீவன் முக்த் ஸ்திதியை அனுபவம் செய்யும் யுகம். ஆக, சோதித்துப் பாருங்கள், சம்மந்தத்தில் இருக்கிறீர்களா, அல்லது

## 1984 அவ்யக்த முரளி

பந்தனத்தில் வருகிறீர்களா? சம்மந்தத்தில் அன்பின் காரணத்தால் பிராப்தி உள்ளது. பந்தனத்தில் ஈர்ப்பு, டென்ஷனின் காரணத்தால் துக்கம் மற்றும் அசாந்தியின் குழப்பம் உள்ளது. ஆகவே எப்போது பாபா பிந்துவின் சகஜமான கணக்கைக் கற்றுத் தந்துள்ளாரோ, அப்போது தேகத்தின் பந்தனமும் முடிந்து போனது. தேகம் உங்களுடைய தல்ல. பாபாவுக்குக் கொடுத்து விட்டீர்கள் என்றால் அது பாபாவுடையதாக ஆகி விட்டது. இப்போது உங்களுடைய உண்மையான பந்தனம், எனது சரீரம் அல்லது எனது தேகம் -- இந்த பந்தனம் முடிந்து விட்டது. எனது தேகம் எனச் சொல்வீர்களா என்ன? உங்களுக்கு அதிகாரம் உள்ளதா? கொடுத்து விட்ட பொருள் மீது உங்களுக்கு எப்படி அதிகாரம் வந்தது? கொடுத்து விட்டீர்களா அல்லது வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? உன்னுடையது எனச் சொல்லி விட்டு என்னுடையது என ஏற்றுக் கொள்வதோ இல்லை தானே?

எப்பொழுது உன்னுடையது எனச் சொல்லி விட்டீர்களோ, அப்போது எனது என்ற பந்தனம் முடிந்து விட்டது. இந்த எல்லைக்குட்பட்ட எனது என்பது தான் மோகத்தின் நூலாகும். நூல் என்று சொன்னாலும் சரி, விலங்கு என்று சொன்னாலும் சரி, கயிறு என்று சொன்னாலும் சரி, இது பந்தனத்தில் கட்டிப் போடுகிறது. அனைத்தும் பாபா, உங்களுடையவை என்றால் இந்த சம்மந்தத்தில் இணைந்து விட்டீர்கள் எனும்போது பந்தனம் முடிந்து சம்மந்தம் ஆகி விடுகிறது. எந்தவித பந்தனமானாலும், தேகத்தினுடையதோ, சுபாவத் தினுடையதோ, சம்ஸ்காரத்தினுடையதோ, மனதின் வளைந்து கொடுத்தலாயினும் இந்த பந்தனம் எதை உறுதி செய்கிறது என்றால் பாபாவிடம் சர்வ சம்மந்தங்களின், சதா கால சம்மந்தத்தில் (முழுமையாக இல்லாமல்) பலவீனம் உள்ளது. அநேகக் குழந்தைகள் சதா மற்றும் சர்வ சம்மந்தத்தில் பந்தன் முக்த்தாக உள்ளனர், இன்னும் அநேகக் குழந்தைகள் சமயத்தின் பிரமாணம் பெயரளவில் சம்மந்தத்தை இணைக்கின்றனர். அதனால் பிராமண வாழ்க்கையின் அலௌகிக ஆன்மிக ஆனந்தம் அடைவதி-ருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆகின்றனர். தனக்குத் தான் திருப்தியடைவதும் இல்லை, மற்றவர்களிடமிருந்து திருப்திக்கான ஆசீர்வாதம் பெற முடிவதும் இல்லை. பிராமண வாழ்க்கை என்பது சிரேஷ்ட சம்மந்தங்களின் வாழ்க்கையாகும். அது பாபா மற்றும் சர்வ பிராமணப் பரிவாரத்தின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான வாழ்க்கையாகும். ஆசீர்வாதம்

என்றால் சுபபாவனைகள், சுபவிருப்பங்கள். பிராமணர்களாகிய உங்கள் ஜென்மமே, பாப்தாதாவின் ஆசீர்வாதங்கள் எனச் சொன்னாலும் சரி, வரதானம் எனச் சொன்னாலும் சரி, இதே ஆதாரத்தில் தான் நடந்துள்ளது. பாபா சொன்னார், நீங்கள் பாக்கியவான் சிரேஷ்ட விசேஷ ஆத்மாக்கள், இந்த ஸ்மிருதி ரூப ஆசீர்வாதம் மற்றும் வரதானத்தின் மூலம் சுபபாவனை, சுபவிருப்பத்தின் மூலம் பிராமணர்களாகிய உங்களுக்குப் புதிய வாழ்க்கை, புதிய ஜென்மம் ஏற்பட்டுள்ளது. சதா ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இது தான் சங்கமயுகத்தின் விசேஷமாகும் ஆனால் இந்த அனைத்தினுடைய ஆதாரம் சர்வ சிரேஷ்ட சம்மந்தமாகும். சம்மந்தம் என்பது எனது-எனது என்ற விலங்குகளை, பந்தனத்தை ஒரு விநாடியில் முடித்து விடுகிறது. மேலும் சம்மந்தத்தின் முதல் சொரூபம் அதே சகஜமான விஷயம் – பாபாவும் பிந்து, நானும் பிந்து மற்றும் அனைத்து ஆத்மாக்களும் பிந்து. ஆக, பிந்துவின் கணக்கு ஆகிறது இல்லையா? இந்த பிந்துவில் தான் ஞானத்தின் சிந்து (கடல்) அடங்கி யுள்ளது. உலகத்தின் கணக்கின் படியும் கூட பிந்து (0) 10-ஐ 100-ஆக ஆக்கி விடுகிறது மற்றும் 100-ஐ 1000-ஆக்கி விடுகிறது. பிந்துவை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள், எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். அப்போது மதிப்பு எதற்கு உள்ளது? பிந்துவுக்குத் தான் மகத்துவம் இல்லையா? அது போல் பிராமண வாழ்க்கையில் சர்வ பிராப்திகளுக்கான ஆதாரம் பிந்து.

படிக்காதவர்கள் கூட பிந்து பற்றி சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். ஒருவர் எவ்வளவு தான் தங்கள் வேலையில் சுறுசுறுப்பாக இருந்தாலும், ஆரோக்கியம் இல்லாமல் இருந்தாலும், புத்தி பலவீனமாக இருந்தாலும் பிந்துவின் கணக்கை அனைவரும் அறிந்து கொள்ள முடியும். மாதாக்களும் கூட கணக்கிடுவதில் சாமர்த்திய சாலிகள் இல்லையா? ஆக, பிந்துவின் கணக்கு சதா நினைவிருக்க வேண்டும். நல்லது.

எல்லா இடங்களில் இருந்தும் தங்களுடைய இனிய வீட்டுக்கு (மதுபன்) வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதாவும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தங்கள் பாக்கியத்தை உருவாக்கிக் கொள்வதற்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். தங்களுடைய வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். இந்த உங்களுடைய வீடு தான் வள்ளலின் வீடு. தங்களின் வீடு என்பது ஆத்மா மற்றும் சரீரத்திற்கு ஓய்வு தரும் வீடு. ஓய்வு கிடைத்துக்

கொண்டிருக்கிறது இல்லையா? இரட்டைப் பிராப்தி உள்ளது. ஓய்வும் கிடைக்கிறது, ராமும் (பாபா) கிடைத்து விட்டார். ஆக, இரட்டைப் பிராப்தி ஆகிறது இல்லையா? பாபாவின் வீட்டுக்கு அலங்காரமாகக் குழந்தைகள் உள்ளனர். பாப்தாதா வீட்டின் அலங்காரமாகிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நல்லது.

சதா சர்வ சம்மந்தத்தின் மூலம் பந்தன்முக்த், கர்மாதீத் ஸ்திதியின் அனுபவம் செய்பவர்கள், சதா பிந்துவின் மகத்துவத்தை அறிந்து மகான் ஆகக் கூடியவர்கள், சதா சர்வ ஆத்மாக்களின் மூலமாக திருப்தியின் சுபபாவனை, சுப விருப்பத்தின் ஆசீர்வாதம் பெறக்கூடியவர்கள், அனைவருக்கும் அத்தகைய ஆசீர்வாதம் தரக்கூடியவர்கள், சதா தன்னை சாட்சியாக உணர்ந்து, நிமித்த பாவத்துடன் கர்மம் செய்பவர்கள், அத்தகைய சதா அலௌகிக ஆனந்தத்தைக் கொண்டாடுபவர்கள், சதா மகிழ்ச்சியின் வாழ்க்கையில் இருப்பவர்கள், சுமையை முடித்து விடுபவர்கள், அப்படிப்பட்ட சதா பாக்கியவான் ஆத்மாக்களுக்கு பாக்கியவிதாதா தந்தையின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**தாதிகளிடம்**: சமயம் தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. எப்படி சமயம் தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறதோ, அது போல் சர்வ பிராமணர்களும் தீவிர வேகத்தில் பறக்கின்றனர். அவ்வளவு லேசாக, டபுள் லைட்டாக ஆகியிருக்கிறீர்களா? இப்போது விசேஷமாகப் பறக்க வைக்கும் சேவை உள்ளது. அது போல் பறக்க வைக்கிறீர்களா? எந்த விதி மூலம் அனைவரையும் பறக்கச் செய்ய வேண்டும்? வகுப்பில் பாடம் கேட்டுக் கேட்டே பாடம் நடத்துபவராக ஆகி விட்டனர். எந்த ஒரு விஷயத்தை நீங்கள் தொடங்கினாலும் அதற்கு முன்பாக அந்த விஷயம் பற்றிய பாயின்ட்டுகள் அனைவரிடமும் இருக்கும். ஆக, எந்த விதி மூலம் பறக்கச் செய்ய வேண்டும்? இதற்கான பிளானை உருவாக்கியிருக்கிறீர்களா? இப்போது லேசாக ஆக்குவதற்கான விதி தேவை. இந்தச் சுமை தான் மேலே-கீழே கொண்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சுமை உள்ளது. தன்னுடைய சம்ஸ்காரங்களின் சுமையாக இருக்கலாம், குழுவினுடையதாக இருக்கலாம் ஆனால் சுமை இருக்குமானால் அது பறக்க விடாது. இப்போது யாராவது பறந்தாலும் கூட அது மற்றவர்களின் வேகத்தினால் தான். எப்படி பொம்மை இருக்கிறது, அதைப் பறக்க வைக்கின்றனர்.

பிறகு என்னவாகிறது? பறந்து பிறகு கீழே வந்து விடுகிறது. நிச்சயமாகப் பறக்கின்றது, ஆனால் சதா பறப்பதில்லை. இப்போது பிராமண ஆத்மாக்கள் அனைவரும் பறப்பார்களானால் மற்ற ஆத்மாக்களைப் பறக்கச் செய்து பாபாவின் அருகில் கொண்டு சேர்க்க முடியும். இப்போதோ பறக்க வைப்பதைத் தவிர, பறப்பதைத் தவிர வேறு எந்த ஒரு விதியும் இல்லை. பறப்பதற்கான வேகம் தான் விதி. காரியங்கள் எவ்வளவு உள்ளன, சமயம் எவ்வளவு உள்ளது?

இப்போது குறைந்த அளவு 9-லட்சம் பிராமண ஆத்மாக்களோ முதலில் வேண்டும். அவ்வாறு எண்ணிக்கை அதிகமாகவே செய்யும் ஆனால் முழு உலகின் மீதும் இராஜ்யம் செய்வீர்களானால் குறைந்தது 9 லட்சமாவது இருக்க வேண்டும். சமயத்தின் பிரமாணம் சிரேஷ்ட விதி வேண்டும். சிரேஷ்ட விதி என்பது பறப்பதற்கான விதி. அதற்கான பிளானை உருவாக்குங்கள். சின்னச்சின்ன குழுக்களைத் தயார் செய்யுங்கள். அவ்யக்த பார்ட்டுக்கும் எத்தனை வருடம் ஆகி விட்டது! சாகார் பாலனை, அதன் பிறகு அவ்யக்த பாலனை -- எவ்வளவு சமயம் கழிந்து போனது! இப்போது கொஞ்சம் புதுமை செய்ய வேண்டும் இல்லையா? பிளான் (திட்டத்தை) உருவாக்குங்கள். இப்போது பறப்பதும் கீழே வருவதுமான சக்கரமோ முடிந்துவிட வேண்டும். 84 பிறவிகள் என்றால் 84 பிறவிகளின் சக்கரம் என்பது பாடப்பட்டுள்ளது. ஆக, 84-இல் எப்போது இந்தச் சக்கரம் முடிவடைகிறதோ, அப்போது சுயதரிசனச் சக்கரம் தூரத்திலுள்ள ஆத்மாக்களை சமீபத்தில் கொண்டு வரும். ஞாபகார்த்தமாக என்ன காட்டுகின்றனர்? ஓரிடத்தில் அமர்ந்தவாறு சக்கரத்தை அனுப்பினார் மற்றும் அந்த சுயதரிசனச் சக்கரம் தானாகவே ஆத்மாக்களை சமீபத்தில் கொண்டு வந்தது. தானே செல்வதில்லை, சக்கரத்தைச் செலுத்துகின்றார். ஆக, முதலில் இந்தச் சக்கரம் முடிவடைந்தால் தான் சுயதரிசனச் சக்கரம் செல்ல முடியும். ஆக, இப்போது 84-ஆம் ஆண்டில் இந்த விதியைத் தனதாக்குங்கள். அதனால் அனைத்து எல்லைக்குட்பட்ட சக்கரங்களும் முடிந்து போக வேண்டும். அது போலத் தான் யோசித்தீர்கள் இல்லையா? நல்லது.

**டீச்சர்களுடன்**: டீச்சர்களோ பறக்கும் கலையில் இருப்பவர்கள்! நிமித்தமாக ஆவது -இது தான் பறக்கும் கலையின் சாதனம். ஆக, நிமித்தமாக ஆகியிருக்கிறீர்கள் என்றால் டிராமா அனுசாரம் பறக்கும்

கலையின் சாதனம் கிடைத்து விட்டிருக்கிறது. இதே விதியின் மூலம் சதா சித்தியை அடையக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள்! நிமித்தமாக ஆவது தான் லிஃப்ட். ஆக, லிஃப்ட் மூலம் நொடியில் சென்று சேரக்கூடிய பறக்கும் கலை உள்ளவர்கள் நீங்கள். ஏறும் கலையினர் அல்ல, அசைந்து கொடுப்பவர்கள் அல்ல, ஆனால் அசைக்கப்படும் போது அசைந்து கொடுக்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்பவர்கள். டீச்சர்கள் என்பதன் அர்த்தமே நிமித்த பாவம். இந்த நிமித்த பாவனை தான் அனைத்து பலன்களின் பிராப்தியைத் தானாகவே செய்விக்கிறது. நல்லது.

**வரதானம்: எனது என்பதை உனது என மாற்றி, பறக்கும் கலையின் அனுபவம் செய்யக்கூடிய டபுள் லைட் ஆகுக!**

இந்த அழியக்கூடிய உடல் மற்றும் செல்வம், பழைய மனம் என்னுடையவை அல்ல. பாபாவுக்குக் கொடுத்து விட்டேன். முதல் சங்கல்பமே இதைத் தான் செய்தேன் -- அதாவது அனைத்தும் உன்னுடையது இதில் பாபாவுக்கு நன்மை இல்லை, உங்களுக்கு நன்மை உள்ளது. ஏனென்றால் எனது எனச் சொல்வதால் சிக்கிக் கொள்கிறீர்கள், உனது எனச் சொல்வதால் விடுபட்டு விடுகிறீர்கள். எனது எனச் சொல்வதால் சுமை உள்ளவர் ஆகி விடுகிறீர்கள். உனது எனச் சொல்வதால் டபுள் லைட், டிரஸ்டி ஆகி விடுகிறீர்கள். எது வரை ஒருவர் லேசாக ஆகவில்லையோ, அது வரை உயர்ந்த ஸ்திதி வரை சென்றடைய முடியாது. லேசாக இருப்பவர்கள் தாம் பறக்கும் கலை மூலம் ஆனந்தத்தின் அனுபவம் செய்கிறார்கள். லேசாக இருப்பதில் தான் ஆனந்தம் உள்ளது.

**சுலோகன்: யார் மீது எந்த ஒரு மனிதரோ இயற்கையோ தனது பிரபாவத்தை ஏற்படுத்த முடியாதோ, அவர் தான் சக்திசாலி ஆத்மா ஆவார்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 04.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தின் சிரேஷ்ட வேளை, சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் அடையாள சித்திரத்தை உருவாக்குவதற்கான வேளை!

இன்று பாப்தாதா ஒவ்வொரு சிரேஷ்ட பிராமண ஆத்மாவின் சிரேஷ்ட வாழ்க்கையின் ஜென்ம வேளையின் அதிர்ஷ்ட ரேகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஜென்ம வேளை (பிறந்த நேரம்) அனைத்து குழந்தைகளுக்கும் சிரேஷ்டம் தான், ஏனென்றால் இப்பொழுது யுகமே புருஷோத்தம சிரேஷ்டமானது. சிரேஷ்ட சங்கமயுகத்தில் அதாவது சிரேஷ்ட வேளையில் அனைவரின் சிரேஷ்ட பிராமண ஜென்மம் ஏற்பட்டது. அனைவரின் ஜென்ம வேளை சிரேஷ்டமானது. அதிர்ஷ்ட ரேகையும், எதிர்காலமும் கூட அனைத்து பிராமணர் களுக்கும் சிரேஷ்டமானது. ஏனென்றால் சிரேஷ்ட தந்தையின் சிவ வம்சி பிரம்மா குமார் மற்றும் குமாரிகள், .சிரேஷ்ட தந்தை, சிரேஷ்ட ஜென்மம், சிரேஷ்ட ஆஸ்தி, சிரேஷ்ட பரிவாரம், சிரேஷ்ட பொக்கிஷங்கள் - அனைவரின் இந்த அதிர்ஷ்ட ரேகை ரேகை ஜென்மத்திலிருந்தே அனைவருக்கும் சிரேஷ்டமானது. வேளையும் சிரேஷ்டமானது. மேலும் பிராப்தியின் காரணமாக அதிர்ஷ்ட ரேகையும் சிரேஷ்டமானது. இந்த அதிர்ஷ்டம் அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு தந்தையிடமிருந்து ஒரே மாதிரி பிராப்தி ஆகியிருக்கியிருக்கிறது. இதில் வித்தியாசம் இல்லை. இருந்தும் ஒரே மாதிரி அதிர்ஷ்டம் பிராப்தி ஆகியிருந்தும் வரிசைக்கிரமம் ஏன்? ஒரு தந்தை, ஒரு ஜென்மம், ஒரு ஆஸ்தி, ஒரு பரிவாரம், வேளையும் ஒரு சங்கமயுகம், இருந்தும் வரிசை எண் ஏன்? அனைத்து பிராப்திகள் அதாவது அதிர்ஷ்டமும் அனைவருக்கும் எல்லையின்றி கிடைத்திருக்கிறது. வித்தியாசமாக எப்படி ஆனது? எல்லையில்லா வாழ்க்கையில் கர்மத்தை நடைமுறைப்படுத்துவதன் அடிப்படை யில்

அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி ஆனது, இதன் காரணத்தினால் வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. பிராமண வாழ்க்கை என்றால் அதிர்ஷ்டத்தை நடைமுறை ரூபத்தில் கொண்டு வருவது. வாழ்க்கையில் கொண்டு வருவது. ஒவ்வொரு காரியத்தில் கொண்டு வருவது, ஒவ்வொரு எண்ணம் மூலம், வார்த்தை மூலம் செய்யும் காரியம் மூலம் நல்ல அதிர்ஷடசாலியின் அடையாளம் அனுபவம் ஆக வேண்டும். அதாவது தென்பட வேண்டும். பிராமணன் என்றால் உயர்ந்த அதிர்ஷ்டசாலி ஆத்மாவின் கண், நெற்றி, வாயின் புன்சிரிப்பு ஒவ்வொரு அடியிலும் அனைவருக்கும் சிரேஷ்ட அதிர்ஷ்டத்தை அனுபவம் செய்விக்க வேண்டும். இதைத் தான் எதிர்காலத்தின் சித்திரத்தை உருவாக்குவது என்று கூறுவது. எதிர்காலத்தை அனுபவம் என்ற எழுதுகோல் மூலம், கர்மம் என்ற காகிதத்தில் ஓவியமாகக் கொண்டு வர வேண்டும். அதிர்ஷ்டத்தை ஓவியத்தில் வரைதல், ஓவியத்தையோ அனைவரும் வரைகின்றீர்கள் ஆனால் சிலருடைய ஓவியம் சம்பன்னமாக (முழுமையாக) இருக்கிறது, மேலும் சிலரின் ஓவியத்தில் ஏதாவது ஒரு விதத்தில் ஏதோ குறை இருந்து விடுகிறது. அதாவது நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வருவதில் சிலருடைய நெற்றியின் ரேகை அதாவது மனதின் எண்ணம், கண்களின் ரேகை அதாவது ஆன்மீக பார்வை, வாயின் புன்முறுவலின் ரேகை அதாவது எப்பொழுதும் அனைத்து பிராப்தி சொரூப திருப்தி யான ஆத்மா, திருப்தி தான் புன்முறுவலின் கோடு. கைகளின் ரேகை என்றால் சிரேஷ்ட கர்மத்தின் ரேகை. காலின் ரேகை என்றால் ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடப்பதற்கான சக்தி. இந்த விதமாக அதிர்ஷ்டத்தின் ஓவியத்தை உருவாக்குவதில் சிலருக்கு சில விஷயத்தில் சிலருக்கு வேறு சில விஷயத்தில் வேற்றுமை ஏற்பட்டு விடுகிறது. எப்படி ஸ்தூல ஓவியம் வரைகிறார்கள் என்றாலும் சிலருக்கு கண்களை வரையத் தெரியாது, சிலருக்கு கால்களை வரையத் தெரியாது. சிலருக்கு புன்முறுவல் செய்வதை வரையத் தெரியாது. அப்படி வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது தான் இல்லையா! எந்த அளவு முழுமையான ஓவியமாக இருக்குமோ அந்த அளவு மதிப்புள்ளதாக இருக்கும். ஒரே ஓவியம் லட்சக்கணக்கான ரூபாய்களையும் சம்பாதிக்கும் மேலும் அதே ஓவியம் நூறு ரூபாயும் சம்பாதிக்கும். எந்த விஷயத்தில் வித்தியாசம் ஏற்பட்டது? சம்பன்னமாக இருக்கும் நிலையில் வித்தியாசம் ஏற்பட்டது. அதே மாதிரியே பிராமண ஆத்மாக்களும் அனைத்து ரேகைகளினால் சம்பன்னம் ஆகாமல்

இருக்கும் காரணத்தினால் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ரேகைகளின் சம்பூர்ண நிலை இல்லாத காரணத்தினால் வரிசைக்கிரமம் உண்டாக்கி விடுகிறார்கள்.

அம்மாதிரி இன்று உயர்ந்த அதிர்ஷ்டசாலி உள்ள குழந்தைகளின் ஓவியத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். எப்படி ஸ்தூல அதிர்ஷ்டத்திலும் பல விதமான அதிர்ஷ்டம் இருக்கும். அதே போல் இங்கு அதிர்ஷ்டத்தின் அதாவது அதிர்ஷ்டத்தின் விதவிதமான ஓவியங்களை பார்த்தோம். ஒவ்வொரு ஓவியத்திலும் முக்கியமாக நெற்றி மற்றும் கண் ஓவியத்தின் மதிப்பை அதிகரிக்கும். அதே போல் இங்கேயும் மனதின் உள்உணர்வின் சக்தி மற்றும் கண்களின் ஆன்மீக திருஷ்டியின் சக்தி இதற்குத் தான் மகத்துவம் இருக்கிறது. இது தான் ஓவியத்தின் அஸ்திவாரம். நீங்கள் அனைவரும் என்னுடைய ஓவியம் எந்த அளவு சம்பன்னம் ஆகியிருக்கின்றீர்கள் என்று உங்களுடைய ஓவியத்தை பாருங்கள். உங்களுடைய ஓவியத்தில் அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர் தென்படும் அளவிற்கு ஓவியம் உருவாகியிருக்கிறதா? ஒவ்வொரு ரேகையையும் சோதனை செய்யுங்கள். இதே காரணத்தினால் வரிசை எண் வந்து விடுகிறது. புரிந்ததா? வள்ளல் ஒருவர், கொடுப்பதும் ஒரே மாதிரி தான் ஆனால் ஆகுபவர்கள் ஆவதில் வரிசைக்கிரமமாக ஆகி விடுகிறார்கள். சிலர் அஷ்ட மற்றும் இஷ்ட தேவன் ஆகி விடுகிறார்கள், சிலர் தேவன் ஆகி விடுகிறார்கள். சிலர் தேவர்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைபவர்களாக ஆகி விடுகிறார்கள். தன்னுடைய சித்திரத்தைப் பார்த்து விட்டீர்கள் தான் இல்லையா! நல்லது.

சாகார ரூபத்தில் (பௌதீக ரூபத்தில்) சந்திப்பதில் நேரத்தையும் எண்ணிக்கையையும் பார்க்க வேண்டிய தாக இருக்கிறது. மேலும் அவ்யக்த சந்திப்பில் நேரம் மற்றும் எண்ணிக்கைக்கான விஷயம் இல்லை. அவ்யக்த சந்திப்பின் அனுபவி ஆகி விட்டீர்கள் என்றால் அவ்யக்த சந்திப்பின் விசித்திர அனுபவத்தை எப்பொழுதும் செய்து கொண்டே இருப்பீர்கள். பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் கட்டளைப்படி நடப்பவர் எனவே அவ்யக்தமாக இருந்தும் வியக்தத்தில் வர வேண்டியதாக இருக்கிறது ஆனால் என்ன ஆக வேண்டும்? அவயக்தம் ஆக வேண்டும் தான் இல்லையா அல்லது வியக்தத்தில் வர வேண்டுமா? அவ்யக்தம் ஆகுங்கள். அவ்யக்தம் ஆவதினால் உடலற்றவராகி

தந்தையுடன் வீட்டிற்கு செல்வீர்கள். இப்பொழுது சூட்சுமவதனம் வழியாக செல்ல வேண்டும், அந்த நிலை வரையிலும் வந்தடையவில்லை. ஃபரிஷ்தா சொரூபத்திலிருந்து நிராகாரமாகி வீடு செல்ல வேண்டும். எனவே இப்பொழுது ஃபரிஷ்தா சொரூபம் ஆகியிருக்கிறீர்களா? அதிர்ஷ்டத்தின் ஓவியத்தை சம்பன்னம் ஆக்கியிருக்கிறீர்களா? சம்பன்ன ஓவியம் தான் ஃபரிஷ்தா. நல்லது.

பல மண்டலங்களிலிருந்து வந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கு ஒவ்வொரு மண்டலத்தின் விசேஷத்தையும் சேர்த்து பார்த்து பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். சிலர் பாஷை தெரியாதவர்களாக இருந்த போதிலும், அன்பு மற்றும் பாவனையின் பாஷையை தெரிந்து கொள்வதில் புத்திசாலிகள். மேலும் வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை ஆனால் முரளியின் பாஷையை தெரிந்திருக்கிறார்கள். புரிந்து கொள்ள முடியாதவர்களும் அன்பு மற்றும் பாவனை மூலம் புரிந்து கொள்கிறார்கள். வங்காளம், பீகாரோ எப்பொழுதும் வசந்த காலத்தில் இருக்கிறார்கள். எப்பொழுதும் வசந்த காலம் தான்.

பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் எப்பொழுதும் மற்றவர்களை பசுமையாக ஆக்குபவர்கள். பஞ்சாபில் விவசாயம் நன்றாக இருக்கிறது. ஹரியானாவோ எப்பொழுதுமே பசுமை (ஹரா) நிறைந்தது. பஞ்சாப் ஹரியானா எப்பொழுதுமே பசுமையால் நிரம்பியிருக்கும். எங்கு பசுமை இருக்குமோ அந்த ஸ்தானத்தை எப்பொழுதும் நல்ல சிரேஷ்ட ஸ்தானம் என்று கூறப்படும். பஞ்சாப் ஹரியானா எப்பொழுதும் குஷியில் பசுமையாக இருக்கிறது. எனவே பாப்தாதாவும் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். இராஜஸ்தானுக்கு என்ன விசேஷம் இருக்கிறது. இராஜஸ்தான் ஓவியம் வரைவதில் பிரசித்தியானது. இராஜஸ்தானின் ஓவியங்கள் மிகுந்த மதிப்புள்ளவைகளாக இருக்கும். ஏனென்றால் நிறைய இராஜாக்கள் வாழ்ந்த இடம் இல்லையா! அந்த மாதிரி இராஜஸ்தான் அதிர்ஷ்டத்தின் (தேவதா) ஓவியத்தை மிக அதிகமாக மதிப்புள்ளதாக வரைபவர்கள். ஓவியங்கள் வரைவதில் எப்பொழுதும் சிரேஷ்டமானவர்கள். குஜராத்தில் என்ன விசேஷம் இருக்கிறது? அங்கு கண்ணாடிகளின் அலங்காரம் அதிகமாக இருக்கும். எனவே குஜராத் கண்ணாடி. கண்ணாடியில் தந்தையின் உருவம் பார்க்க வேண்டும்.

கண்ணாடியில் முகம் பார்ப்பார்கள் இல்லையா! எனவே குஜராத்தின் கண்ணாடி மூலம் தந்தையின் ரூபம், ஃபரிஷ்தா சொரூபத்தின் ரூபம் அனைவருக்கும் காண்பிக்கும் விசேஷம் இருக்கிறது. குஜராத்தின் விசேஷம் தந்தையை பிரத்யக்ஷம் செய்யும் கண்ணாடி. மற்றபடி சின்னஞ்சிறு தமிழ்நாடு மீதம் இருக்கிறது. சிறியவர்கள் தான் அதிசயம் செய்வார்கள். பெரிய காரியம் செய்து காண்பிப்பார்கள். தமிழ்நாடு என்ன செய்வீர்கள்? அங்கு கோவில்கள் அதிகம் இருக்கின்றன. கோவில்களில் நாதஸ்வரம் வாசிப்பார்கள். தமிழ்நாட்டின் விசேஷம் மேளதாளம் வாசித்து தந்தையின் பிரத்யக்ஷத்தின் செய்தியை பரப்ப வேண்டும். நல்ல விசேஷம் இருக்கிறது. சிறு வயதிலேயே நாதஸ்வரம் வாசிப்பார்கள். பக்தர்களும் மிகவும் அன்போடு நாதஸ்வரம் வாசிப்பார்கள், மேலும் குழந்தைகளும் அன்போடு நாதஸ்வரம் வாசிப்பார்கள். இப்பொழுது ஒவ்வொரு ஸ்தானமும் தன்னுடைய விசேஷத்தை பிரத்யக்ஷ சொரூபத்தில் கொண்டு வாருங்கள். அனைத்து மண்டலத்தை சேர்ந்தவர்களையும் சந்தித்து விட்டோம் இல்லையா. இறுதியிலும் இந்த மாதிரியே சந்திப்பு இருக்கும். பழைய குழந்தைகள் எங்களை ஏன் அழைக்கவில்லை என்று கூறுகிறார்கள். பிரஜைகளையும் உருவாக்குகிறார்கள். வளர்ச்சி அடையவும் செய்கிறார்கள். எனவே பழையவர்கள் புதியவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் எண்ணிக்கை அதிகரிக்கும். பழையவர்களும் பழைய மாதிரியே நடந்து கொண்டே இருந்தார்கள் என்றால் புதியவர்களுக்கு என்னவாகும்? பழையவர்கள் வள்ளல், புதியவர்கள் பெறுபவர்கள். எனவே வாய்ப்பு கொடுக்க வேண்டும். இதில் வள்ளல் ஆக வேண்டியதாக இருக்கும். ஸ்தூல சந்திப்பில் அனைத்து எல்லைகளும் வந்து விடுகிறது. அவ்யக்த சந்திப்பில் எந்த எல்லையும் கிடையாது. எண்ணிக்கை அதிகரித்தால் பிறகு என்ன ஆகும் என்று சிலர் கேட்கிறார்கள். ஸ்தூல சந்திப்பின் விதியும் மாறும் தானே! எப்பொழுது எண்ணிக்கை அதிகரிக்கிறது என்றால் கொஞ்சம் தான தர்மமும் செய்ய வேண்டியதாக இருக்கும். நல்லது.

அனைத்து பாரதம் மற்றும் வெளிநாட்டின் நாலாபுறங்களிலுள்ள அன்பிற்குரிய குழந்தைகளின் அன்பு நிறைந்த இதயத்தின் ஓசை, குஷியின் பாடல் மற்றும் இதயத்தின் செய்திகள் நிரம்பிய கடிதங்களுக்கு பதிலாக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் பல கோடி மடங்கு

அன்பு நினைவின் கூடவே எப்பொழுதும் நினைவினால் அமரர் ஆகுக என்ற வரம் பெற்றவராகி முன்னேறிக் கொண்டே இருங்கள் மற்றும் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். அனைத்து ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதா சுயமுன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றத்திற்காக வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். வாழ்த்துக்களுக்கு உரியவர் ஆகுங்கள் எப்பொழுதும் உடன் இருப்பவராக ஆகுங்கள். எப்பொழுதும் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமானவராக இருங்கள் என்ற வரம் பெற்ற அனைத்து குழந்தைகளுக்கு பாப்தாதா மீண்டும் அன்பு நினைவுகள் கொடுக்கிறார். அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** எப்பொழுதும் தன்னை தந்தைக்குச் சமமான சம்பன்ன ஆத்மா என்று நினைக்கிறீர்களா? யார் சம்பன்னமாக இருக்கிறாரோ அவர் எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே இருப்பார். சம்பன்னம் இல்லை என்றால் முன்னேறிச் செல்ல முடியாது. எப்படித் தந்தையோ அப்படி குழந்தைகள். தந்தை கடலாக இருக்கிறார் என்றால் குழந்தைகள் மாஸ்டர் கடல். ஒவ்வொரு குணத்தையும் சோதனை செய்யுங்கள். எப்படி தந்தை ஞானத்தின் கடலாக இருக்கிறார் என்றால் நான் மாஸ்டர் ஞான கடல். தந்தை அன்பின் கடலாக இருக்கிறார் என்றால் நான் மாஸ்டர் அன்பின் கடல். அந்த மாதிரி சமநிலையை சோதனை செய்யுங்கள். அப்பொழுது தான் தந்தைக்குச் சமமாக சம்பன்னம் ஆகி எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்கள். புரிந்ததா. எப்பொழுதும் அந்த மாதிரி சோதனை செய்து கொண்டே இருங்கள். யாரை முழு உலகமும் தேடுகிறதோ அவர் என்னை தன்னுடையவர் ஆக்கி விட்டார் என்ற இதே குஷியில் எப்பொழுதும் இருங்கள்.

**வரதானம்: முழு ஈடுபாட்டின் அக்னியில் அனைத்து கவலைகளை அழிக்கக்கூடிய நிச்சயபுத்தியுடைய கவலையற்றவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் நிச்சயபுத்தி உடையவர்களாக இருப்பார்களோ அவர்கள் அனைத்து விஷயங்களிலும் கவலையின்றி இருப்பார்கள். கவலைகள் அனைத்தும் அகன்று விட்டன. தந்தை கவலைகளின் சிதையிலிருந்து தூக்கி இதய சிம்மாசனத்தில் அமர வைத்து விட்டார். தந்தை மேல் அன்பின் முழு ஈடுபாடு ஏற்பட்டது. அந்த ஈடுபாட்டின்

ஆதாரத்தில், ஈடுபாட்டின் அக்னியில் அனைத்து கவலைகளும் ஒன்றுமே இல்லை என்பது போல் அழிந்து விட்டன. உடலின் எந்த கவலையும் இல்லை, மனதின் ஏதாவது வீணான கவலையும் இல்லை. மேலும் பணம் செல்வத்தின் எந்தக் கவலையும் இல்லை. என்ன ஆகும். . . ஞானத்தின் சக்தி மூலம் அனைத்தையும் தெரிந்து கொண்டீர்கள். எனவே அனைத்து கவலைகளிலிருந்து விடுபட்டு கவலையில்லா வாழ்க்கை ஆகி விட்டது.

**சுலோகன்: எந்த விதமான பிரச்சனையும் புத்தி என்ற கால்களை அசைக்க முடியாத அளவிற்கு ஆடாத அசையாதவர் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 08.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தில் பிராப்தி ஆகியிருக்கும் அதிகாரம் மூலமாக உலக இராஜ்ய அதிகாரி ஆவது!

இன்று பாப்தாதா சுயராஜ்ய அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களின் தெய்வீக தர்பாரை (இராஜசபை) பார்த்துக் கொண்டிருக்கிறார். உலக இராஜ்ய சபை மற்றும் சுயராஜ்ய சபை இரண்டின் அதிகாரிகளாக நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆகிறீர்கள். சுயராஜ்ய அதிகாரி தான் உலக இராஜ்ய அதிகாரி ஆகிறார்கள். இந்த இரட்டை போதை எப்பொழுதும் இருக்கிறதா? தந்தையின் குழந்தை ஆவது என்றால் அனேக அதிகாரங்களை பிராப்தி செய்வது. எத்தனை விதமான அதிகாரங்களை பிராப்தி செய்திருக்கிறீர்கள் என்று தெரிந்திருக்கிறீர்களா? அதிகாரம் என்ற மாலையை நினைவு செய்யுங்கள். முதல் அதிகாரம் - பரமாத்மாவின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்கள் என்றால் மிக உயர்ந்த வந்தனத்திற்குரிய பூஜைக்குரிய ஆத்மா ஆவதற்கான அதிகாரத்தை அடைந்திருக்கிறீர்கள். தந்தையின் குழந்தை ஆகாமல் பூஜைக்குரிய ஆத்மா ஆவதற்கான அதிகாரம் பிராப்தி ஆக முடியாது. முதல் அதிகாரம் பூஜைக்குரிய ஆத்மாவாக ஆகியிருக்கிறீர்கள். இரண்டாவது அதிகாரம் - ஞானத்தின் பொக்கிஷங்களின் அதிபதி ஆனீர்கள், அதாவது அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். மூன்றாவது அதிகாரம் - அனைத்து சக்திகளின் பிராப்தியின் அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். நான்காவது அதிகாரம் - அனைத்து கர்மேந்திரியங்களை வென்ற சுயராஜ்ய அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். இந்த அனைத்து அதிகாரங்கள் மூலமாக மாயாவை வென்றவர் ஆகி உலகை வென்ற உலகராஜ்ய அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். தன்னுடைய இந்த அனைத்து அதிகாரங்களை எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பவர் சக்திசாலியான ஆத்மா ஆகி விடுகிறார். நீங்கள் அந்த மாதிரி சக்திசாலியாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா?

# 1984 அவ்யக்த முரளி

சுயராஜ்யம் மற்றும் உலக இராஜ்யத்தை பிராப்தி செய்வதற்காக விஷேசமாக மூன்று விஷயங்களின் தாரணை மூலம் தான் வெற்றி அடைந்திருக்கிறீர்கள். எந்தவொரு சிரேஷ்ட காரியத்தின் வெற்றிக்கான ஆதாரம் தியாகம், தபஸ்யா. மற்றும் சேவை.. இந்த மூன்று விஷயங்களின் ஆதாரத்தில் வெற்றி இருக்குமா அல்லது இருக்காது என்ற இந்த கேள்வி எழ முடியாது. எங்கு இந்த மூன்று விஷயங்களின் தாரணை இருக்குமோ, அங்கு ஒரு வினாடியில் வெற்றி கண்டிப்பாக இருக்கும். அது நிச்சயக்கப்பட்டது. எந்த விஷயத்தின் தியாகம்? ஒரு விஷயத்தின் தியாகம் மட்டும் மற்ற அனைத்து தியாங்களை சகஜமாக மற்றும் இயல்பாக செய்விக்கிறது. அந்த ஒரு தியாகம் - உடல் உணர்வின் தியாகம், அது எல்லைக்குட்பட்ட நான் என்பதின் தியாகத்தை சுலபமாக செய்வித்து விடுகிறது. இந்த எல்லைக்குட்பட்ட நான் என்பது தபஸ்யா மற்றும் சேவையில் இருந்து ஒருவரை வஞ்சிக்கப்பட்டவராக ஆக்கி விடுகிறது. எங்கு எல்லைக்குட்பட்ட நான் என்பது இருக்கிறதோ, அங்கு தியாகம், தபஸ்யா மற்றும் சேவை இருக்க முடியாது. எல்லைக்குட்பட்ட நான், என்னுடையது என்ற இந்த ஒரு விசயத்தின் தியாகம் வேண்டும். நான் மற்றும் என்னுடையது இல்லையென்றால் வேறு என்ன மீதம் இருக்கிறது? எல்லைக்கு அப்பாற்பட்டது தான் இருக்கிறது. நான் ஒரு தூய்மையான சுத்தமான ஆத்மா மேலும் என்னுடையவரோ ஒரு தந்தையை தவிர வேறு யாருமில்லை. எங்கு எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தை சர்வசக்திவான் இருக்கிறாரோ, அங்கு வெற்றி எப்பொழுது உடன் இருக்கும். இதே தியாகம் மூலமாக தபஸ்யாவும் வந்துவிட்டது இல்லையா! தபஸ்யா என்றால் என்ன? நான் ஒருவருடையவன். ஒருவரின் சிரேஷ்ட வழிப்படி நடப்பவன், இதன் மூலம் ஒரே சீரான நிலை இயல்பாக வந்துவிடும். எப்பொழுதும் ஒரு பரமாத்மாவின் நினைவு என்ற இதுதான் தபஸ்யா. ஒரே சீரான நிலை என்பது தான் சிரேஷ்ட ஆசனம். தாமரை மலருக்கு சமமான நிலை தான் தபஸ்யாவின் ஆசனம். தியாகம் மூலம் தபஸ்யாவும் இயல்பாகவே வந்து விடுகிறது. எப்பொழுது தியாகம் மற்றும் தபஸ்யா சொரூபம் ஆகி விட்டீர்கள் என்றால் என்ன செய்வீர்கள்? தன்னுடையது என்பதின் தியாகம் மற்றும் நான் என்பது முடிவடைந்து விட்டது. ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருக்கும் தபஸ்வி ஆகி விட்டீர்கள் என்றால், சேவையின்றி இருக்க முடியாது. இந்த எல்லைக்குட்பட்ட நான் மற்றும் என்னுடையது என்பது உண்மையான

சேவை செய்ய விடாது. தியாகி மற்றும் தபஸ்வியாக இருப்பவர் உண்மையான சேவாதாரி. நான் இதைச் செய்தேன், நான் அப்படிப்பட்டவன் என்ற தேக உணர்வு கொஞ்சமாவது வந்து விட்டது என்றால், சேவாதாரிக்கு பதிலாக என்னவாகி விடுகிறார்? பெயரளவில் மட்டும் சேவாதாரி ஆகி விடுகிறார், உண்மையான சேவாதாரி ஆவதில்லை. உண்மையான சேவாதாரியின் அஸ்திவாரம் தியாகம் மற்றும் தபஸ்யா. அந்த மாதிரி சேவாதாரி எப்பொழுதும் வெற்றி சொரூபமாக இருக்கிறார். வெற்றி அவருடைய கழுத்தின் மாலை ஆகி விடுகிறது. பிறப்புரிமை உள்ளவராக ஆகி விடுகிறார். எனவே உலகில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தியாகி ஆகுங்கள், தபஸ்யா ஆகுங்கள். உண்மையான சேவாதாரி ஆகுங்கள் என்ற உயர்ந்த அறிவுரையை பாப்தாதா கொடுக்கின்றார்.

இன்றைய உலகம் மரண பயம் உள்ள உலகம். (புயல், சூறாவளி வந்தது) இயற்கை குழப்பத்தில் வந்திருக்கிறது, நீங்களோ உறுதியாக இருக்கிறீர்கள் இல்லையா! மிகவும் தமோகுண இயற்கையின் வேலை குழப்பம் செய்வது மேலும் உறுதியான ஆத்மாக்கள் உங்களுடைய வேலை இயற்கையையும் பரிவர்த்தனை செய்வது. ஒன்றும் புதிதல்ல. இவை அனைத்தும் நடந்தே தீரும். குழப்பம் இருந்தால் தானே நீங்கள் உறுதியானவர் ஆவீர்கள். எனவே சுயராஜ்ய அதிகாரி தர்பாரில் இருக்கும் ஆத்மாக்கள் புரிந்துகொண்டீர்களா? இதுவும் அதாவது இராஜ்ய சபை தான் இல்லையா! இராஜயோகி என்றால் சுயத்தின் இராஜா. இராஜயோகி சபை என்றால் சுயராஜ்ய சபை. நீங்களும் அனைவரும் கூட அரசியல் தலைவர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா! அவர்கள் தேசத்தின் அரசியல் தலைவர்கள், நீங்களோ சுயராஜ்யத்தின் தலைவர்கள். தலைவர் என்றால் நீதிப்படி நடப்பவர்கள், அதேமாதிரி நீங்கள் தர்ம நீதி, சுயராஜ்ய நீதிப்படி நடக்கும் சுயராஜ்ய தலைவர்கள். யதார்த்த சிரேஷ்ட நீதி என்றால் ஸ்ரீமத். ஸ்ரீமத் தான் யதார்த்த (சரியான) நீதி. இந்த நீதிப்படி நடப்பவர்கள் வெற்றியடையும் தலைவர்கள். பாப்தாதா தேசத்தின் தலைவர்களுக்கும் வாழ்த்துக்கள் கூறுகிறார், ஏனென்றால் இருந்தும் கடுமையாக உழைக்கவோ செய்கிறார்கள் தான் இல்லையா! விதவிதமானவர்களோ இருக்கிறார்கள். இருந்தும் தேசத்திற்காக முழு ஈடுபாடு இருக்கிறது. நம்முடைய இராஜ்யம் நீண்ட காலம் இருக்க வேண்டும் என்ற இந்த ஈடுபாட்டுடன் கடுமை உழைப்பையோ செய்கிறார்கள் தான் இல்லையா?

நம்முடைய பாரதம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற இந்த ஈடுபாடு இயல்பாகவே உழைக்க வைத்துவிடும். இப்பொழுது அந்த மாதிரி நேரமும் வரும் எப்பொழுது அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் இருவரும் உடன் இருப்பார்கள், அப்பொழுது உலகில் பாரதத்தின் வெற்றி முழக்கம் ஏற்படும். பாரதம் தான் கலங்கரை விளக்காக இருக்கும். பாரதத்தின் பக்கம் அனைவரின் பார்வை இருக்கும். பாரதத்தைத் தான் முழு உலகமும் பிரேரணை கொடுக்க கூடியது என்ற அனுபவம் செய்வார்கள். பாரதம் அழியாத தேசம். அழியாத தந்தையின் அவதார பூமி எனவே பாரதத்தின் மகத்துவம் எப்பொழுதும் மகான் ஆனது. நல்லது.

அனைவரும் தன்னுடைய இனிமையான இல்லத்திற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் வந்ததற்காக வாழ்த்துகள் தெரிவிக்கிறார். வருக வருக, என்று வரவேற்கிறார். தந்தையின் வீட்டின் அலங்காரங்கள் உங்களை வரவேற்கிறோம். நல்லது.

அனைத்து வெற்றி நட்சத்திரங்களுக்கு, எப்பொழுதும் ஒரே சீரான நிலை என்ற ஆசனத்தில் நிலைத்திருக்கும் தபஸ்வி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒரு பரமாத்மாவின் சிரேஷ்ட நினைவில் இருக்கக் கூடிய மகான் ஆத்மாக்களுக்கு, சிரேஷ்ட பாவனை, சிரேஷ்ட விருப்பங்கள் வைக்கக் கூடிய உலக நன்மை செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அவ்யக்த பாப்தாதாவுடன் குஜராத் மாநில முதல் அமைச்சரின் சந்திப்பு:** தந்தையின் வீட்டிற்கு மற்றும் தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். சேவையில் உள்ள ஈடுபாடு மிக நன்றாக இருக்கிறது என்று தந்தை தெரிந்திருக்கிறார். கோடியில் சிலர் தான் அந்த மாதிரி சேவாதாரிகளாக இருக்கிறார்கள் எனவே சேவையின் உழைப்பினால் மனதில் ஏற்படும் குஷி பிரத்யக்ஷ பலனின் ரூபத்தில் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இந்த உழைப்பு வெற்றிக்கான ஆதாரம். ஒருவேளை அனைத்து பொறுப்பிலிருக்கும் சேவாதாரிகள் நன்றாக உழைத்தார்கள் என்றால், பாரத அரசாங்கம் எப்பொழுதுமே வெற்றி அடைந்து கொண்டேயிருக்கும். வெற்றியோ கண்டிப்பாக கிடைக்கும். இது உறுதியானது, ஆனால் யார் பொறுப்பாளர் ஆகிறார்களோ, பொறுப்பாளர் ஆபவருக்கு சேவையின் பிரத்யக்ஷ பலன் மற்றும் எதிர்கால பலன்

பிராப்தி ஆகிறது. அப்படி நீங்கள் சேவையின் பொறுப்பாளர். பொறுப்புணர்வு வைத்து எப்பொழுதும் சேவையில் முன்னேறி சென்று கொண்டேயிருங்கள். எங்கு பொறுப்பாளர் என்ற உணர்வு, கருவி என்ற உணர்வு இருக்கிறதோ, நான் என்ற உணர்வு இல்லையோ, அங்கு எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டேயிருப்பார்கள். இந்த பொறுப்புணர்வு இயல்பாகவே சுபபாவணை மற்றும் சுப விருப்பங்களை விழிப்படைய வைக்கிறது, இன்று சுபபாவனை, சுப விருப்பங்கள் இல்லை அதன் காரணமாக பொறுப்புணர்விற்கு பதிலாக நான் என்பது வந்துவிட்டது. ஒருவேளை கருவி என்று புரிந்துகொண்டார்கள் என்றால் செய்விப்பவர் தந்தை என்று புரிந்து கொள்வார். செய்பவர் செய்விப்பவர் சுவாமி எப்பொழுதுமே உயர்ந்தாகத் தான் செய்விப்பார். தான் ஒரு டிரஸ்டி என்பதற்குப் பதிலாக இராஜ்யத்தின் குடும்பத்தின் குடும்பஸ்தன் ஆகி விட்டால், குடும்பஸ்தனுக்கு சுமையிருக்கும் மேலும் டிரஸ்டி என்பதில் இலேசான நிலை இருக்கும். எதுவரை சுமையற்று இலேசானவராக இல்லையோ, அதுவரை முடிவெடுக்கும் சக்தியும் இருக்காது. டிரஸ்டியாக இருந்து சுமையற்றவராக இருக்கிறார் என்றால், முடிவெடுக்கும் சக்தி சிரேஷ்டமானதாக இருக்கும், எனவே எப்பொழுதும் நான் டிரஸ்டி. கருவி என்ற பாவனை பலன் கொடுக்கும். பாவனைக்கான பலன் கிடைக்கிறது. இந்த கருவி என்ற பாவனை எப்பொழுதும் சிரேஷ்ட பலனைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். எனவே உங்கள் உடன் இருக்கும் சக அமைச்சர் களுக்கும் நான் ஒரு கருவி என்ற உணர்வை, டிரஸ்டி என்ற உணர்வை வையுங்கள் என்ற நினைவூட்டுங்கள். இந்த அரசு கடமைகள் செய்யும் முறை உலகிற்காக உயர்ந்த வழி காட்டுதல் ஆகி விடும். முழு உலகமும் பாரதத்தின் இந்த அரசு கடமை செய்யும் முறையை அப்படியே பின்பற்றி செய்வார்கள்ஆனால் இதற்கான ஆதாரம் டிரஸ்டி என்ற உணர்வு அதாவது கருவி என்ற உணர்வு.

**குமாரர்களுடன் சந்திப்பு:** குமார் என்றால் அனைத்து சக்திகளை, அனைத்து பொக்கிஷங்களை சேமிப்பு செய்து மற்றவர்களையும் சக்தி நிறைந்தவராக ஆக்கும் சேவை செய்பவர். எப்பொழுதுமே இதே சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? பிஸியாக இருந்தீர்கள் என்றால் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். ஒருவேளை கொஞ்சமாவது ஒய்வாக இருக்கிறீர்கள் என்றால் வீணானவை இருக்கும், சக்திசாலியாக இருப்பதற்காக பிஸியாக

இருங்கள். தன்னுடைய கால அட்டவணையைத் தயாரியுங்கள். எப்படி உடலுக்கான கால அட்டவணை தயாரிக்கிறீர்கள் அதேபோன்று புத்தியின் கால அட்டவணையைத் தயாரியுங்கள். புத்தியால் பிஸியாக இருப்பதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். பிஸியாக இருப்பதினால் எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டேயிருப்பீர்கள். இன்றைய காலத்திற்கு ஏற்றப்படி குமார வாழ்க்கையில் சிரேஷ்டமாக ஆவது மிகப் பெரிய பாக்கியம். நான் சிரேஷ்ட பாக்கியம் நிறைந்த ஆத்மா என்ற இதையே எப்பொழுதும் நினையுங்கள். நினைவு மற்றும் சேவைக்கான சமநிலையை எப்பொழுதும் வையுங்கள். சமநிலை வைப்பவர்களுக்கு எப்பொழுதும் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டேயிருக்கும். நல்லது.

**வரதானம்: பலமற்றவரிலிருந்து பலம் நிறைந்தவர் ஆகி நடக்க முடியாததையும் நடத்திக் காட்டக்கூடிய தைரியம் நிறைந்த ஆத்மா ஆகுக!**

தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. என்ற இந்த வரதானத்தின் ஆதாரத்தில் தைரியத்தின் முதல் திட எண்ணமாக நான் கண்டிப்பாக தூய்மை ஆக வேண்டும் என்பதை வைத்தீர்கள், மேலும் தந்தை நீங்கள் ஆத்மாக்கள் அனாதி - ஆதி தூய்மையானவர்கள் - அனேக தடவைகள் தூய்மையாகி இருக்கிறீர்கள், மேலும் ஆகிக் கொண்டேயிருப்பீர்கள் என்ற உதவி செய்தார். அனேக தடவையின் நினைவு மூலம் சக்திசாலி ஆகி விட்டீர்கள். பலமற்றவரிலிருந்து அந்தளவு பலம் நிறைந்தவராக ஆகி விட்டீர்கள், அதனால் உலகத்தை அவசியம் தூய்மையாக்கி காண்பிப்போம் என்று சவால் விடுகிறீகள். எதை இல்லறத்தில் இருந்துக் கொண்டே தூய்மையாக இருப்பது கடினம் என்று ரிஷி, முனி, மகான் ஆத்மாக்கள் நினைக்கிறார்களோ, அதை நீங்கள் மிக சுலபம் என்று கூறுகிறீர்கள்.

**சுலோகன்: திட எண்ணம் வைப்பது தான் விரதம் இருப்பது; உண்மையான பக்தன் ஒருபொழுதும் விரதத்தை துண்டிப்பதில்லை!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரபுவின் அன்பு -பிராமண வாழ்க்கைக்கான ஆதாரம்!

இன்று பாப்தாதா தன்னுடைய அன்பிற்குரிய, சகயோகி, சகஜயோகி ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவருமோ யோகி ஆத்மாக்கள் தான். இது யோகிகளின் சபை என்று அப்படித் தான் கூறுவோம். அனைத்து யோகியாக இருக்கும் ஆத்மாக்கள் அதாவது பிரபுவிற்கு பிரியமான ஆத்மாக்கள் அமர்ந்திருக்கிறார்கள். எது பிரபுவிற்கு பிரியமானதாக இருக்குமோ அது உலகத்தின் பிரியமானதாக ஆகியே விடுகிறது. அனைவருக்கும், நான் பரமாத்மாவின் அன்பிற்குரிய, பகவானின் பிரியமான மற்றும் உலகத்தின் பிரியமானவன் ஆகி விட்டேன் என்ற ஆன்மீக போதை, ஆன்மீக பெருமிதம், ஆன்மீக கௌரவம் எப்பொழுதும் இருக்கிறதா? ஒரு அரை விநாடிக்கான பார்வை என் மேல் விழுந்து விட வேண்டும் என்று பக்தர்கள் இதன் தாகத்தில் இருக்கிறார்கள். மேலும் இதைத் தான் மகான் நிகழ்வு என்றும் நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் ஈஸ்வரிய அன்பிற்கு உரியவர் ஆகி விட்டீர்கள். பிரபுவிற்கு பிரியமானவர் ஆகி விட்டீர்கள். இது எவ்வளவு மகான் பாக்கியம்! இன்று ஒவ்வொரு ஆத்மாவும் குழந்தை பருவத்திலிருந்து மரணத்தின் வரை என்ன விரும்புகிறது? ஒன்றும் அறியாத குழந்தை கூட வாழ்க்கையில் அன்பை விரும்புகிறது. பணத்தை பின்னால் தான் விரும்புவர் ஆனால் முதலில் அன்பு வேண்டும் என்று விரும்புவர். அன்பு இல்லை என்றால் வாழ்க்கை ஒரு நம்பிக்கையற்ற வாழ்க்கையாக அனுபவம் செய்வார்கள், இரசனையற்ற வாழ்க்கை என்று அனுபவம் செய்வார்கள் ஆனால் அனைத்து ஆத்மாக்கள் உங்களுக்கு பரமாத்மாவின் அன்பு கிடைத்திருக்கிறது, பரமாத்மாவின் பிரியமானவர் ஆகி விட்டீர்கள், இதை விட பெரிய ஒன்று ஏதாவது இருக்கிறதா? அன்பு இருக்கிறது என்றால் உலகம் இருக்கிறது, உயிர் இருக்கிறது. அன்பு இல்லை என்றால் உயிரற்ற, உலகமற்ற நிலை. அன்பு கிடைத்தது என்றால் உலகம் கிடைத்தது. அந்த மாதிரியான அன்பை சிரேஷ்ட

பாக்கியத்தை அனுபவம் செய்கிறீர்களா? உலகம் இதற்கு தாகமுள்ளதாக இருக்கிறது. ஒரு துளிக்கான தாகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். மேலும் குழந்தைகள் உங்களுக்கு இந்த பிரபுவின் அன்பு ஒரு சொத்தாக இருக்கிறது. இதே பிரபுவின் அன்பில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள், அதாவது பிராமண வாழ்க்கையில் முன்னேறிச் செல்கிறீர்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? அன்புக் கடலின் அன்பில் மூழ்கியிருக்கிறீர்களா? அல்லது கேட்க மட்டும் மற்றும் தெரிந்து மட்டும் இருக்கிறீர்களா? அதாவது கடலின் கரையில் நின்று கொண்டே யோசித்துக் கொண்டும், பார்த்துக் கொண்டும் இருக்கிறீர்களா.? கேட்பது மற்றும் தெரிந்து மட்டும் கொள்வது என்பது கரையில் நிற்பது. நம்புவது மற்றும் மூழ்கி விடுவது என்ற இது தான் அன்புக்கடலில் அன்பில் ஐக்கியமாகி விடுவது. பிரபுவின் பிரியமானவர் ஆகியும் கூட கடலில் மூழ்கி விடுவது மற்றும் ஐக்கியமாகி விடுவது என்ற இந்த அனுபவத்தை செய்யவில்லை என்றால் பிரபுவின் அன்பிற்கு பாத்திரமானவர் ஆகி, அடைபவர்களாக இல்லை ஆனால் தாகமுள்ளவராகவே இருந்து விடுகிறார்கள். அருகில் வந்தும் கூட தாகத்தில் இருந்து விடுவது என்பதை என்னவென்று கூறுவது? யார் என்னை தன்னுடைய குழந்தையாக ஆக்கியிருக்கிறார், யாருடைய பிரியமானவராக ஆகியிருக்கிறேன்! மேலும் யாருடைய வளர்ப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்? என்று கொஞ்சம் யோசித்து பாருங்கள். எப்பொழுதுமே அன்பில் மூழ்கியிருக்கும் காரணத்தினால் பிரச்சனைகள் மற்றும் எந்தவிதமான குழப்பத்தின் பிரபாவம் ஏற்பட முடியாது. எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக, சமாதான சொரூபமாக மாயாவை வென்றவராக அனுபவம் செய்வீர்கள்.

சில குழந்தைகள் ஞானத்தின் நுணுக்கமான விஷயங்கள் நினைவிருப்பதில்லை என்று கூறுகிறார்கள் ஆனால் நான் பரமாத்மாவின் அன்பிற்குரியவன் என்ற இந்த ஒரு விஷயம் நினைவிருக்கிறது. பரமாத்மாவின் அன்பிற்கு உரியவன் என்ற இந்த ஒரு நினைவின் மூலம் எப்பொழுதும் சக்திசாலி ஆகி விடுவீர்கள். இதுவோ சுலபம் தான் இல்லையா. இதுவும் மறந்து விடுகிறது என்றால் உள்ளே சென்று வெளியில் எப்படி வருவது என்று தெரியாத நிலையில் மாட்டிக் கொள்வது போல் ஆகியது. இந்த ஒரு விஷயம் மட்டும் அனைத்து பிராப்திகளின் அதிகாரியாக ஆக்கக்கூடியது. எனவே எப்பொழுதும் நான்

பிரபுவின் அன்பிற்குரியவன் மேலும் உலகிற்கு அன்பிற்குரியவன் என்ற இந்த நினைவை வையுங்கள். மேலும் அனுபவம் செய்யுங்கள். புரிந்ததா. இதுவோ சுலபம் தான் இல்லையா! நல்லது. அதிகமாகக் கேட்டிருக்கிறீர்கள். இப்பொழுது நிரப்ப வேண்டும். நிரப்புவது தான், சமமாக ஆவது. புரிந்ததா.

அனைத்து பிரபுவின் அன்பிற்கு பாத்திரமான குழந்தைகளுக்கு, அனைத்து அன்பில் மூழ்கியிருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, அனைத்து அன்பின் வளர்ப்பிற்கு உரிய குழந்தைகளுக்கு, ஆன்மீகப் பெருமிதத்தில் இருக்கக்கூடிய, ஆன்மீக போதையில் இருக்கக்கூடிய, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** அனைவரும் சகஜயோகி ஆத்மாக்கள் தான் இல்லையா? அனைத்து உறவுகளினால் நினைவு செய்வது சகஜயோகி ஆக்கி விடுகிறது. எங்கு சம்மந்தம் இருக்கிறதோ அங்கு சகஜமாக இருக்கும். நான் சகஜயோகி ஆத்மா என்ற இந்த நினைவு அனைத்து பிரச்சனைகளையும் சுலபமாகவே முடிவடையச் செய்து விடுகிறது. ஏனென்றால் சகஜயோகி என்றால் எப்பொழுதும் தந்தை உடன் இருப்பவர். எங்கு சர்வ சக்திவான் தந்தை உடன் இருக்கிறாரோ, அனைத்து சக்திகள் உடன் இருக்கிறது என்றால் பிரச்சனை சமாதான ரூபத்தில் மாறி விடும். எந்தவொரு பிரச்சனையையும் தந்தை தெரிந்து கொள்ளட்டும், பிரச்சனை தெரிந்து கொள்ளட்டும். அந்த மாதிரி சம்மந்தத்தின் அதிகாரம் மூலம் பிரச்சனை முடிவடைந்து விடும். நான் என்ன செய்வது என்பதற்கு பதிலாக தந்தைக்குத் தெரியும், பிரச்சனைக்குத் தெரியும். நான் விலகியிருப்பவன், மேலும் தந்தையின் அன்பிற்குரியவன். எனவே அனைத்து சுமையும் தந்தையினுடையதாக ஆகி விடும், மேலும் நீங்கள் இலேசாகி விடுவீர்கள். எப்பொழுது நீங்களே இலேசாகி விடுவீர்வகளோ அப்பொழுது அனைத்து விஷயங்களும் இலேசாகி விடும். கொஞ்சமாவது யோசிப்பது இருக்கிறது என்றால் சுமையாகி விடுவீர்கள். மேலும் விஷயங்களும் சுமையாகி விடும். எனவே நான் லேசாக இருக்கிறேன், விலகியிருக்கிறேன் என்றால் அனைத்து விஷயங்களும் லேசாக ஆகி விடும். இது தான் விதி, இந்த விதி மூலம் சித்தி அதாவது வெற்றி பிராப்தி ஆகும். கடந்த காலத்து

கணக்கு வழக்கு முடிவடைவதனால் சுமை அனுபவம் ஆகாது. கடந்த காலத்தின் விஷயங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. அந்த மாதிரி சாட்சியாகி பார்ப்பார்கள். மேலும் தற்சமயத்தின் சக்தி மூலம் சாட்சியாகி பார்த்துக் கொண்டிருக்கிறேன். சேமிப்பும் ஆகிக் கொண்டிருக்கிறது, மேலும் முடிக்கப்படுவதும் ஆகிக் கொண்டிருக்கிறது. சேமிப்பின் சக்தி மூலம் முடிப்பதற்கான சுமை இருக்காது. எனவே எப்பொழுதும் நிகழ்காலத்தை நினைவில் வையுங்கள். எப்பொழுது ஒரு பக்கம் சுமை ஆகிறது என்றால் இன்னொரு பக்கம் இயல்பாகவே இலேசாகி விடும். எனவே நிகழ்காலம் சுமையாக இருக்கிறது என்றால் கடந்த காலம் இலேசாகி விடும் இல்லையா! தற்சமயத்தின் பிராப்தியின் சொரூபத்தை எப்பொழுதும் நினைவின் வைத்தீர்கள் என்றால் அனைத்தும் லேசாகி விடும். எனவே கடந்த காலத்து கணக்கை இலேசாக ஆக்குவதற்கான வழி நிகழ்காலத்தை சக்திசாலியாக ஆக்குங்கள். நிகழ்காலமோ சக்திசாலியே தான். தற்சமயத்து பிராப்தியை எதிரில் வைத்தீர்கள் என்றால் அனைத்தும் சுலபமாகி விடும். கடந்து காலத்து விஷயங்கள் ஈட்டியிலிருந்து முள்ளாகி விடும். என்ன, ஏன் என்றிருக்க வேண்டாம். கடந்த காலத்தினுடையது. கடந்ததை ஏன் பார்க்க வேண்டும். எங்கு முழு ஈடுபாடு இருக்கிறதோ அங்கு சுமை பளுவாக இருக்காது. விளையாட்டாக அனுபவம் ஆகும். தற்சமயத்தின் குஷியின் ஆசீர்வாதம் மற்றும் மருந்து மூலம் அனைத்து கணக்கு வழக்குகளை முடிவு கட்டுங்கள்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** நீங்கள் ஒவ்வொரு அடியிலும் எப்பொழுதும் வெற்றியை அனுபவம் செய்பவர்கள் தான் இல்லையா? நீங்கள் அனுபவம் நிறைந்த ஆத்மாக்கள் தான் இல்லையா? அனுபவம் தான் அனைத்தையும் விட மிகப் பெரிய அதிகாரம். அனுபவத்தின் அதிகாரம் உள்ளவரின் ஒவ்வொரு அடி மற்றும் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி கண்டிப்பாக இருக்கும். சேவைக்கு பொறுப்பாளர் ஆவதற்கான வாய்ப்பு கிடைப்பது கூட ஒரு விசேஷத்தின் அடையாளம். என்ன வாய்ப்பு கிடைக்கிறதோ, அதையே அதிகரித்துக் கொண்டே இருங்கள். எப்பொழுதும் பொறுப்பில் இருப்ப வராகி முன்னேறும் மற்றும் முன்னேற்றும் நான் பொறுப்பாளர் மற்றும் கருவி என்ற உணர்வு தான் வெற்றியை பிராப்தி செய்விக்கிறது. கருவி மற்றும் பணிவு என்ற விசேஷத்தை எப்பொழுதும் உங்கள் கூடவே வைத்துக் கொள்ளுங்கள். இந்த விசேஷம் தான் எப்பொழுதும் விசேஷமாக ஆக்கும். பொறுப்பாளர்

ஆகும் பங்கு தனக்கும் லிஃப்ட் கொடுக்கும். மற்றவர்களுக்கு பொறுப்பாளர் ஆவது என்றால் தானே சம்பன்னம் ஆவது. திடத் தன்மையுடன் வெற்றியை பிராப்தி செய்து கொண்டே இருங்கள். கண்டிப்பாக வெற்றி இருக்கிறது என்ற இந்த திடத்தன்மை மூலம் வெற்றி தானாக முன்னுக்குச் செல்லும்.

பிறந்த உடனேயே சேவாதாரி ஆவதற்கான பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே மிகப் பெரிய சான்ஸ்லர் (வாய்ப்பை எடுப்பவர்) ஆகி விட்டீர்கள் இல்லையா? குழந்தைப் பருவத்திலிருந்தே சேவாதாரி என்ற அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதிர்ஷ்டத்தை எழுப்பி விட்டு விட்டு வந்திருக்கிறீர்கள்! எத்தனை ஆத்மாக்களின் சிரேஷ்ட அதிர்ஷ்டத்தை உருவாக்கும் காரியத்திற்கு பொறுப்பாளர் ஆகி விட்டீர்கள்! எனவே ஆஹா! என்னுடைய சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் சிரேஷ்ட ரேகை என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். தந்தை கிடைத்தார், சேவை கிடைத்தது, சேவாஸ்தானம் கிடைத்தது, மேலும் சேவையின் கூடவே சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட பரிவாரம் கிடைத்தது!. என்ன தான் கிடைக்கவில்லை!. இராஜ்ய பாக்கியம் அனைத்தும் கிடைத்து விட்டது! இந்தக் குஷி எப்பொழுதும் இருக்கட்டும். விதி மூலமாக எப்பொழுதும் வளர்ச்சியை அடைந்து கொண்டே இருங்கள். கருவி என்ற உணர்வின் விதி மூலம் சேவையில் வளர்ச்சி ஆகிக் கொண்டே இருக்கும்.

**குமாரர்களுடன் சந்திப்பு:** குமார வாழ்க்கையில் பாதுகாப்பாக ஆகி விடுவது மிகப் பெரிய பாக்கியம். எத்தனை பிரச்சனைகளிலிருந்து தப்பித்து விட்டீர்கள். குமார் என்றால் பந்தனத்திலிருந்து விடுபட்ட ஆத்மாக்கள். குமார வாழ்க்கை பந்தனமற்ற வாழ்க்கை ஆனால் குமார வாழ்க்கையிலும் சுதந்திரமாக இருப்பது என்றால் சுமையைத் தூக்குவது. குமாரர்களுக்காக பாப்தாதா உலகியல் வாழ்க்கையில் இருந்து கொண்டே ஆன்மீக சேவை செய்ய வேண்டும் என்ற டைரக்ஷன் கொடுக்கிறார். உலகியல் சேவை தொடர்பை உருவாக்குவதற்கான சாதனம். இதில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் ஆன்மீக சேவை செய்ய வேண்டும். உலகத்து குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே ஆன்மீக சேவை செய்யுங்கள். பிறகு புத்தி சுமையாக இருக்காது. அனைவருக்கும் தன்னுடைய அனுபவத்தை கூறி சேவை செய்யுங்கள். உலகியல்

சேவையை சேவைக்கான சாதனம் என்று புரிந்து செய்யுங்கள். உலகியல் சாதனம் மிகுந்த சேவை செய்வதற்கான வாய்ப்பை கொடுக்கும். இலட்சியம் ஈஸ்வரிய சேவை செய்வதற்கானது, ஆனால் இது சாதனம் என்று புரிந்து செய்யுங்கள். குமார் என்றால் தைரியம் உள்ளவர்கள். என்ன விரும்புகிறார்களோ அதை செய்ய முடியும். எனவே அனைத்து சாதனங்கள் மூலமாக வெற்றியை பிராப்தி செய்வதற்கான அறிவுரையை பாப்தாதா கொடுக்கிறார். குமார் என்றால் நிரந்தர யோகி ஏனென்றால் குமாரர்களின் உலகமே ஒரு தந்தை தான். எப்பொழுது தந்தையே உலகம் என்றால் உலகத்தை தவிர புத்தி வேறு எங்கு செல்லும்? எப்பொழுது ஒருவரினுடையவராக ஆகி விட்டீர்கள் என்றால் ஒருவரின் நினைவு தான் வரும் இல்லையா? மேலும் ஒருவரை நினைவு செய்வது மிக சுலபம். அனேகர்களிடமிருந்தோ விடுபட்டு விட்டீர்கள். அந்த ஒருவரில் தான் அனைத்தும் நிரம்பியிருக்கிறது. எப்பொழுதும் ஒவ்வொரு காரியம் மூலம் சேவை செய்ய வேண்டும். திருஷ்டி மூலம், வாய் மூலம் சேவையே சேவை தான். யார் மேல் அன்பு ஏற்படுமோ அவரை பிரத்யக்ஷம் செய்வதற்கான ஊக்கம் இருக்கும். ஒவ்வொரு அடியிலும் தந்தை மற்றும் சேவை. எப்பொழுதும் உடன் இருக்கட்டும். நல்லது.

**வரதானம்: தூய்மையை ஆதி அனாதி விசேஷ குணத்தின் ரூபத்தில் சுலபமாக கடைபிடிக்கும் பூஜைக்குரிய ஆத்மா ஆகுக!**

பூஜைக்குரியவராக ஆவதற்காக விசேஷ ஆதாரம் தூய்மையின் மீது இருக்கிறது. எந்த அளவு அனைத்து விதமான தூய்மையை கடைபிடிக்கிறீர்களோ அந்த அளவு அனைத்து விதத்திலும் பூஜைக்குரியவர் ஆகிறீர்கள். யார் விதிப்பூர்வமாக ஆதி, அனாதி விசேஷ குணம் ரூபத்தில் தூய்மையை கடைபிடிக்கிறார்களோ அவர்கள் தான் விதிப்பூர்வமாக பூஜை செய்யப்படுகிறார்கள். யார் ஞானி மற்றும் அஞ்ஞானி ஆத்மாக்களின் தொடர்பில் வந்து கொண்டே தூய்மையான உள்உணர்வு மற்றும் திருஷ்டி, எண்ண அலைகள் மூலம் யதார்த்த உறவு தொடர்பை வைத்து நடந்து கொள்கிறாரோ, கனவில் கூட யாருடைய தூய்மை துண்டிக்கப்படுவதில்லையோ அவர் தான் விதிப்பூர்வமான பூஜைக்கு உரியவர் ஆகிறார்.

**சுலோகன்: உடலில் இருந்து கொண்டே உடலற்ற ஃபரிஷ்தா ஆகி சேவை செய்தீர்கள் என்றால் உலக நன்மைக்கான காரியம் அதிவேகத்தில் நிறைவேறி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் தூய்மை!

இன்று பாப்தாதா அனைத்து புனித அன்னப்பறவைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு புனித அன்னப்பறவையும் எந்தளவு தூய்மையாக ஆகியிருக்கிறார்கள், எந்தளவு அன்னப்பறவை ஆகியிருக்கிறார்கள்? தூய்மை என்றால் புனிதம் ஆவதற்கான சக்தியை எந்தளவு வாழ்க்கையில் அதாவது எண்ணம், சொல் மற்றும் செயலில், சம்மந்தத்தில், தொடர்பில் கொண்டு வந்திருக்கிறார்கள்? ஒவ்வொரு எண்ணமும் புனிதம் அதாவது தூய்மையின் சக்தியினால் நிரம்பியிருக்கிறதா? தூய்மையான எண்ணம் மூலமாக எந்தவொரு தூய்மையற்ற எண்ணம் வைத்திருக்கும் ஆத்மாவை பகுத்தறிந்து மேலும் பரிவர்த்தனை செய்ய முடியுமா? என்று பார்த்துக் கொண்டிருந்தேன்., தூய்மையின் சக்தியின் மூலம் எந்தவொரு ஆத்மாவின் திருஷ்டி, உள்ளுணர்வு மற்றும் செயல் மூன்றையுமே மாற்ற முடியும். அந்த மகான் சக்தியின் எதிரில் தூய்மையற்ற எண்ணம் கூட தாக்குதல் செய்ய முடியாது ஆனால் எப்பொழுது நீங்களே எண்ணம், சொல் மற்றும் செயலில் தோல்வி அடைகிறீர்களோ, அப்பொழுது இன்னொரு நபர் மற்றும் எண்ண அலைகள் (வைப்ரேஷன்) மூலம் தோல்வி ஏற்படுகிறது. யாருடைய சம்மந்தம் மற்றும் தொடர்பில் வந்து தோல்வியடைவது என்பது சுயம் தந்தையுடன் அனைத்து சம்மந்தங்களை இணைப்பதில் தோல்வியடைந்திருக்கிறார் என்பதை நிரூப்பிக்கிறது. அப்பொழுது தான் ஏதாவது சம்மந்தம் மற்றும் தொடர்பில் தோல்வியடைகிறார். தூய்மையில் தோல்வியடைவது என்பதின் விதை ஏதாவது ஒரு நபர் மற்றும் நபரின் குணம், சுபாவம், தனித்தன்மை மற்றும் விசேஷத்தினால் பிராபவம் அடைவது. இந்த நபர் மற்றும் நபரின் விசேஷங்களின் பிரபாவம் ஆவது, பிரபாவமாதில்லை, ஆனால் சீரழிந்து போவது. நபரின் தனித்தன்மை விசேஷம், குணம், சுபாவம் தந்தையால் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷம் அதாவது வள்ளலால் கொடுக்கப்பட்ட கொடை. நபர் மீது பிரபாவம்

அடைவது என்பது ஏமாற்றம் அடைவது. ஏமாற்றமடைவது என்றால், துக்கத்தை அனுபவிப்பது. தூய்மையின்மையின் சக்தி கானல் நீருக்கு சமமான சக்தி அது சம்மந்தம் மற்றும் தொடர்பில் மிக நல்ல அனுபவம் செய்விக்கும், கவர்ந்திழுக்கும். நான் நல்லதின் பக்கம் பிரபாவம் ஆகிக் கொண்டிருக்கிறேன் என்று நினைப்பார், ஆகவே தான் மிக நன்றாக இருக்கிறது, இவருடைய குணம் மற்றும் சுபாவம் பிடித்திருக்கிறது என்று கூறுவார், ஞானம் பிடித்திருக்கிறது, யோகா செய்ய வைப்பது பிடித்திருக்கிறது என்றால் இதில் சக்தி கிடைக்கிறது, சகயோகம் கிடைக்கிறது, அன்பு கிடைக்கிறது. அல்ப காலத்தின் பிராப்தி கிடைக்கிறது ஆனால் ஏமாற்றம் அடைகிறார்கள். கொடுக்கும் வள்ளல் அதாவது விதையை, அஸ்திவாரத்தை அழித்து விட்டார்கள், மேலும் வண்ணமயமான கிளையைப் பிடித்து ஆடுகிறார்கள் என்றால் என்ன நிலையாகும்? அஸ்திவாரம் இல்லாத கிளை ஆட்டுமா அல்லது கீழே தள்ளுமா/? எதுவரை விதை அதாவது வள்ளல், உருவாக்குபவருடன் அனைத்து சம்மந்தம், அனைத்து பிராப்தியின் இரசனையை அனுபவம் செய்யவில்லையென்றால், அதுவரை சில நேரம் நபரிடமிருந்து, சில நேரம் வைபவங்களிலிருந்து, சில நேரம் எண்ண அலைகள் வாயுமண்டலம் ஆகிய விதவிதமான கிளைகளிலிருந்து அல்ப கால பிராப்தியின் கானல் நீருக்குச் சமமான ஏமாற்றத்தை அடைந்து கொண்டேயிருப்பார்கள். இந்த பிரபாவம் ஆவது என்றால் அழியாத பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்படுவது. தூயமையின் சக்தியின் மூலம் எப்பொழுது விரும்புகிறீர்களோ, எந்த நிலையை விரும்புகிறீர்களோ, எந்த பிராப்தியை விரும்புகிறீர்களோ, எந்தக் காரியத்தில் வெற்றியை விரும்புகிறீர்களோ, அவை அனைத்தும் உங்கள் எதிரில் தாசிக்கு சமமாக ஆஜர் ஆகி விடும். எப்பொழுது கலியுகத்தின் இறுதியில் கூட இரஜோ பிரதான தூய்மையின் சக்தியை தாரணை செய்யும் பெயர் பெற்ற மகாத்மாக்களுக்கு இதுவரையிலும் கூட இயற்கை தாசியாவதற்கான எடுத்துக்காட்டை பார்க்கிறீர்கள். இது வரையிலும் கூட பெயர் மகாத்மா என்று இருக்கிறது. இதுவரையிலும் பூஜைக்குரியவர்கள். தூய்மையற்ற ஆத்மாக்கள், அவர்கள் எதிரில் தலை வணங்குகிறார்கள், எனவே இறுதி வரையிலும் தூய்மையின் சக்திக்கு, எவ்வளவு மகான் தன்மை இருக்கிறது என்று யோசித்துப்பாருங்கள். மேலும் பரமாத்மா மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் சதோபிரதான தூய்மை எவ்வளவு சக்திசாலியாக இருக்கும். இந்த சிரேஷ்ட தூய்மையின் சக்தியின் எதிரில்

தூய்மையின்மை தலை வணங்கவில்லை, ஆனால் உங்கள் காலடியில் இருக்கிறது, தூய்மையின்மை என்ற அசுர சக்தி, சக்தி சொரூபத்தின் காலடியில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. யார் காலடியில் தோல்வி அடைந்து கிடக்கிறாரோ, அவர் எப்படி தோல்வி அடையச் செய்ய முடியும்.

பிராமண வாழ்க்கை மற்றும் தோல்வி அடைவது என்பதை பெயரளவில் பிராமணன் என்று கூறுவோம். இதில் அலட்சியமானவராக ஆகாதீர்கள். பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் தூய்மையின் சக்தி. ஒருவேளை அஸ்திவாரம் பலஹீனமாக இருக்கிறது என்றால் பிராப்தி என்ற 21-மாடி கட்டிடம் எப்படி நிற்க முடியும்?. ஒருவேளை அஸ்திவாரம் ஆடிக் கொண்டு இருக்கிறதென்றால் பிராப்தியின் அனுபவம் எப்பொழுதும் இருக்க முடியாது, அதாவது உறுதியானதாக இருக்க முடியாது, மேலும் இப்போதைய யுகத்தின் மற்றும் ஜென்மத்தின் மகான் பிராப்தியின் அனுபவமும் செய்ய முடியாது. யுகத்தின், சிரேஷ்ட ஜென்மத்தின் மகிமை பாடக்கூடிய ஞான பக்தன் ஆகி விடுவார்கள், அதாவது தெரிந்திருக்கிறார் ஆனால் சுயம் அவர் அப்படியில்லை இதைத்தான் ஞானி பக்தன் என்று கூறுவது. ஒருவேளை பிராமணன் ஆகி அனைத்து பிராப்திகளின், அனைத்து சக்திகளின் வரதானம் அல்லது ஆஸ்தியை அனுபவம் செய்ய வில்லையென்றால், அவரை என்னவென்று கூறுவது? வஞ்சிக்கப்பட்ட ஆத்மா என்றா அல்லது பிராமண ஆத்மா என்றா? இந்த தூய்மையின் விதவிதமான ரூபங்களை நல்ல முறையில் தெரிந்து கொள்ளுங்கள், தனக்காக கடுமையாக பார்வை வையுங்கள். அப்படியே தட்டிக் கழிக்காதீர்கள், பொறுப்பாளார் ஆகியிருக்கும் ஆத்மாக்களையும், தந்தையையும் தட்டிக் கழிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். இதுவோ நடக்கத்தான் செய்யும், அந்த மாதிரி யார் ஆகியிருக்கிறார்கள்?. அல்லது இது தூய்மையின்மை இல்லை, மகான் தன்மை இதுவோ சேவைக்கான சாதனம் என்று கூறுவார்கள். பிரபாவம் அடையவில்லை, சகயோகத்தை எடுத்துக்கொள்கிறோம். உதவியாளராக இருக்கிறார், எனவே பிரபாவம் அடைந்து இருக்கிறேன், தந்தையை மறந்தார் மற்றும் மாயாவின் குண்டடி விழுந்தது. பிறகு தன்னை விடுவித்துக்கொள்வதற்காக - நான் செய்வதில்லை, இவர் செய்கிறார் என்று கூருவார் ஆனால் தந்தையை மறந்தீர்கள் என்றால் தர்மராஜின் ரூபத்தில் தான் தந்தை சந்திப்பார். தந்தையின் சுகத்தை ஒருபொழுதும் அடைய முடியாது. எனவே மறைக்காதீர்கள், தட்டிக் கழிக்காதீர்கள். மற்றவர்களை பழி

சொல்லாதீர்கள். கானல் நீரின் கவர்ச்சியில் ஏமாற்றம் அடையாதீர்கள். இந்த தூய்மையின் அஸ்திவாரத்தில் பாப்தாதா தர்மராஜ் மூலமாக 100 மடங்கு, பலகோடி மடங்கு தண்டனையை பெறவைப்பார். இதில் ஒருபொழுதும் நிவாரணம் இருக்க முடியாது. இரக்க மனமுடையவராக ஆக முடியாது. ஏனென்றால், தந்தையுடன் இருந்த உறவை முறித்தீர்கள் அதனால் தான் மற்றவர் மேல் பிரபாவம் ஆகியிருக்கிறீர்கள். பரமாத்மாவின் பிரபாவத்திலிருந்து விலகி ஆத்மாக்களின் பிராபவத்தில் வருவதென்றால், தந்தையை தெரிந்து கொள்ளவில்லை, அறிந்துகொள்ளவில்லை. அந்த மாதிரியானவர்களின் எதிரில் தந்தை, தந்தையின் ரூபத்தில் இல்லாமல் தர்மராஜின் ரூபத்தில் இருக்கிறார். எங்கு பாவம் இருக்குமோ, அங்கு தந்தை இருக்க மாட்டார். எனவே அலட்சியமானவராக ஆகாதீர்கள். இதை சின்ன விஷயம் என்று நினைக்காதீர்கள். அதுவும் யார் மீதாவது பிரபாவம் ஆவது என்பது காமனா (விருப்பம்) அதாவது காம விகாரத்தின் அம்சம். விருப்பமின்றி பிரபாவம் ஆக முடியாது. இந்த காமனாவும் அதாவது விருப்பமும் காம விகாரம். இது மிகப் பெரிய எதிரி. இது இரண்டு ரூபத்தில் வருகிறது. காமனா ஒன்று பிரபாவம் அடையச் செய்யும் அல்லது நோகடிக்கும், எனவே காம விகாரம் நரகத்தின் வாசல் என்று கோஷம் இடுகிறீர்கள், அதே போல் இப்பொழுது தன்னுடைய வாழ்க்கைக்காக எந்தவிதமான அல்பகாலத்தின் காமனா அதாவது மன விருப்பம் கானல் நீருக்கு சமமான ஏமாற்றம் கொடுக்கிறது, காமனா என்றால் ஏமாற்றம் அடைவது. அந்த மாதிரி இந்த காமம் அதாவது காமனா (விருப்பங்கள்) மேல் கடுமையான பார்வையுள்ள காளி ரூபம் ஆகுங்கள். பாவம், நல்லவர், கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது, சரியாகி விடும் என்று அன்பானவர் ரூபம் ஆகாதீர்கள். முற்றிலும் வேண்டாம். பாவக் காரியங்கள் மேல் பயங்கரமான ரூபத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்காக அல்ல. தனக்காக ஆகுங்கள். அப்பொழுது தான் பாவங்களை அழித்து ஃபரிஸ்தா ஆக முடியும். யோகா செய்ய முடியவில்லையென்றால் அவசியம் ஏதோவொரு மறைந்திருக்கும் பாவம் தன் பக்கம் இழுக்கிறது. இதை சோதனை செய்யுங்கள். பிராமண ஆத்மா மேலும் யோகா செய்ய முடியவில்லையென்பது இருக்க முடியாது. பிராமணன் என்றாலே ஒருவருடையவன், அவருக்கு இருப்பதே ஒருவர்தான். எனவே அவர் எங்கே செல்வார்? எதுவுமே இல்லையென்றால் எங்கு செல்வார்? நல்லது.

பிரம்மச்சர்யம் மட்டும் இல்லை, ஆனால் இன்னும் காம விகாரத்தின் குழந்தைகள் குட்டிகள் இருக்கின்றனர். பாப்தாதாவிற்கு ஒரு விஷயத்தின் மேல் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. பிராமணன் என்று கூறுகிறார், பிராமண ஆத்மா மேல் வீணானதின் விகார திருஷ்டி மற்றும் உள்ளுணர்வு செல்கிறது. இது குலத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் விஷயம், சொல்வது சகோதரி அவர்களே மற்றும் சகோதரன் அவர்களே, மேலும் செய்வதென்ன?. குடும்பத்தில் இருக்கும் சகோதரி மேல் கூட ஒருவேளை ஏதாவது தீய பார்வை செல்கிறது, எண்ணமும் வருகிறதென்றால், அவரை குலத்திற்கு களங்கம் ஏற்படுத்துபவர் என்று கூறுவர், அப்படியானால் இங்கு என்ன கூறுவோம்? ஒரு ஜென்மத்திற்கு இல்லை, ஆனால் பல ஜென்மங்களுக்கு களங்கம் ஏற்படுத்துபவர், இராஜ்ய பாக்கியத்தை எட்டி உதைப்பவர். அந்த மாதிரியான பல மடங்கு பாவக்காரியத்தை ஒருபொழுதும் செய்யாதீர்கள். இது பாவம் இல்லை, மகா பாவம். எனவே யோசியுங்கள், புரிந்து கொள்ளுங்கள், பாதுகாத்துக் கொள்ளுங்கள். இந்த பாவம் தான் எமதூதுவர்கள் மாதிரி இழுத்துச் செல்லும். இப்பொழுதோ நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன், யார் பார்க்கிறார், யாருக்குத் தெரியும் என்று நினைக்கிறார், ஆனால் பாவத்திற்கு மேல் பாவம் ஏறிக் கொண்டிருக்கிறது, மேலும் இதே பாவம் தான் உங்களை விழுங்குவதற்கு வரும். பாப்தாதா தெரிந்திருக்கிறார் இதற்கான முடிவு எவ்வளவு கடுமையாக இருக்குமென்று, எப்படி உடலால் யாராவது துடிதுடித்து உடலை விடுகிறரோ, அதே போல் புத்தி பாவங்களினால் துடிதுடித்து உடலை விடுவார். அவர் எதிரில் எப்பொழுதும் இந்த பாவத்தின் எமதூதுவர்கள் இருப்பார்கள். இந்தளவு கடுமையான முடிவாக இருக்கும், எனவே தற்சமயத்தில் தவறுதலாகக் கூட அந்த மாதிரி பாவம் செய்யாதீர்கள். பாப்தாதா எதிரில் அமர்ந்திருக்கும் குழந்தைகளுக்கு மட்டும் சொல்லிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளை சக்திசாலி ஆக்கிக் கொண்டிருக்கிறார், எச்சரிக்கை உள்ளவராக, புத்திசாலியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் புரிந்ததா? -இதுவரையிலும் இந்த விஷயத்தில் பலஹீனம் அதிகம் இருக்கிறது. நல்லது.

அனைவரும் தனக்காக சமிக்ஞை மூலம் புரிந்து கொள்ளக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய தீய எண்ணம் மற்றும் பாவத்தின் மேல்

காளியின் ரூபத்தை எடுக்கக்கூடிய, எப்பொழுதும் பலவிதமான ஏமாற்றங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கும், துக்கங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கும், சக்திசாலி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: சத்தியத்தின் சக்தி மூலமாக எப்பொழுதும் குஷியில் நடனமாடக்கூடிய சக்திசாலி மகான் ஆத்மா ஆகுக!**

உண்மையிருந்தால் மனம் நடனமாடும் என்று கூறப்படுகிறது. உண்மை அதாவது சத்தியத்தின் சக்தியுள்ளவர் எப்பொழுதும் நடனமாடிக் கொண்டேயிருப்பார், ஒருபொழுதும் வாடிப் போக மாட்டார், குழப்பமடைய மாட்டார், பயப்பட மாட்டார், பலஹீனமாக ஆகமாட்டார். அவர் குஷியில் எப்பொழுதும் ஆடிக் கொண்டே யிருப்பார். சக்திசாலியாக இருப்பார். அவரிடம் எதிர்நோக்கும் சக்தி இருக்கும், சத்தியம் ஒருபொழுதும் ஆடுவதில்லை, உறுதியாக இருக்கும். சத்தியம் என்ற படகு ஆடும் ஆனால் மூழ்காது. எனவே சத்தியத்தின் சக்தியை கடைப்பிடிக்கும் ஆத்மா தான் மகான் ஆவார்.

**சுலோகன்: பிஸியான மனம் புத்தியை ஒரு வினாடியில் நிறுத்தி விடுவது தான் மிக உயர்ந்த பயிற்சி ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 15.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பான, சகயோகி, சக்திசாலி குழந்தைகளின் மூன்று நிலைகள்!

பாப்தாதா அனைத்து அன்பான, சகயோகி மற்றும் சக்திசாலி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அன்பான குழந்தைகளில் அனேக விதமான அன்பானவர்கள் இருக்கிறார்கள். ஒரு வகையானவர்கள் மற்றவர்களின் சிரேஷ் வாழ்க்கையைப் பார்த்து, மற்றவர்களின் பரிவர்த்தனையைப் பார்த்து அதில் பிரபாவம் அடைந்து அன்பானவர் ஆகியிருக்கிறார்கள். இரண்டாவது வகையினர் -ஏதாவது குணத்தின், சுகம் மற்றும் சாந்தியின் சிறிதளவு அனுபவத்தின் ஜொலிப்பைப் பார்த்து அன்பானவர் ஆகியிருக்கிறார்கள். மூன்றாவது -தொடர்பு அதாவது குழுவின், சுத்த ஆத்மாக்களின் ஆதரவை அனுபவம் செய்யும் அன்பான ஆத்மாக்கள். நான்காவது வகையினர்கள் -பரமாத்மா மேல் அன்பு வைத்திருக்கும் ஆத்மாக்கள். அனைவருமே அன்பானவர்கள் தான் அன்பிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. யதார்த்த அன்பு வைத்திருப்பவர்கள் என்றால் தந்தையை மிக சரியான முறையில் தெரிந்து அன்பானவர் ஆவது.

அதே போலவே சகயோகி ஆத்மாக்களிலும் பல விதமான சகயோகிகள் இருக்கிறார்கள். ஒருவர் பக்தியின் சம்ஸ்காரத்தின் பிரகாரம் சகயோகி. நல்ல விஷயங்கள். நல்ல இடம், நல்ல வாழ்க்கையுள்ளவர்கள், நல்ல இடத்திற்கு செய்வதினால் நல்ல பலன் கிடைக்கும், இதே ஆதாரத்தில், இதே கவர்ச்சியில் சகயோகி ஆவது என்றால் தன்னிடம் இருக்கும் உடல், மனம், பணம், செல்வத்தை ஈடுபடுத்துவது. இரண்டாவது வகையினர் -ஞானம் மற்றும் தாரணை மூலமாக கொஞ்சம் பிராப்தி செய்வதின் ஆதாரத்தில் சகயோகி ஆவது. மூன்றாவது வகையினர் -ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. ஒரே ஒரு தந்தை, ஒரே ஒரு அனைத்து பிராப்திக்கான ஸ்தானம். தந்தையின் காரியம் தான் என்னுடைய காரியம். அந்த மாதிரி தன்னுடைய தந்தை, தன்னுடைய வீடு, தன்னுடைய

காரியம், சிரேஷ்ட ஈஸ்வரிய காரியம் என்று புரிந்து நிரந்தரமான சகயோகி ஆவது. அப்படி வித்தியாசம் ஆகி விட்டது தான் இல்லையா!

அதே போலவே சக்திசாலி ஆத்மாக்கள், இதிலேயும் பல விதமான நிலையுள்ளவர்கள் இருக்கிறார்கள் -ஞானத்தின் ஆதாரத்தில் மட்டும் நான் ஆத்மா சக்திசாலி சொரூமானவன், சர்வ சக்திவான் தந்தையின் குழந்தை என்று தெரிந்து கொள்பவர்கள். இதைத் தெரிந்து சக்திசாலியான நிலையில் நிலைத்திருப்பதற்காக முயற்சி செய்கிறார்கள் ஆனால் தெரிந்து மட்டும் இருக்கிறார் என்ற காரணத்தினால், எப்பொழுது ஞானத்தின் துளி நினைவில் வருகிறதோ, அந்த நேரம் சக்திசாலியான துளியின் காரணமாக அவர் சிறிது நேரத்திற்காக சக்திசாலி ஆகலாம். பிறகு அந்தத் துளி மறந்து விடுகிறது என்றால் சக்தி இல்லாமல் ஆகி விட்டது. சிறிதளவு மாயாவின் பிரபாவம் ஞானத்தை மறக்க வைத்து பலமற்றவர் ஆக்கி விடுகிறது. இன்னொரு வகையினர் ஞானத்தின் சிந்தனையும் செய்கிறார்கள். வர்ணனையும் செய்கிறார்கள். மற்றவர்களுக்கு சக்திசாலியான விஷயங்களைக் கூறுகிறார்கள். அந்த நேரம் சேவையின் பலன் கிடைக்கும் காரணத்தினால் தன்னை அவ்வளவு நேரம் சக்திசாலியாக அனுபவம் செய்கிறார்கள், ஆனால் சிந்தனை செய்யும் நேரம் வரையிலும் மற்றும் வர்ணிக்கும் நேரம் வரையிலும் தானே அன்றி சதா காலத்திற்கும் இல்லை. முதலில் சிந்தனை நிலை, இன்னொன்று வர்ணிக்கும் நிலை.

மூன்றாவது -எப்பொழுதும் சக்திசாலி ஆத்மாக்கள். சிந்தனை மற்றும் வர்ணனை செய்வது மட்டும் இல்லை ஆனால் மாஸ்டர் சர்வசக்திவான் சொரூபம் ஆகி விடுகிறார்கள். சொரூபம் ஆவது என்றால் சக்திசாலி ஆவது. அவருடைய ஒவ்வொரு அடி, ஒவ்வொரு காரியமும் இயல்பாகவே சக்திசாலியாக இருக்கும். நினைவு சொரூபமாக இருக்கிறார், எனவே எப்பொழுதும் சக்திசாலி நிலை இருக்கிறது. சக்திசாலி ஆத்மா எப்பொழுதும் தன்னை சர்வ சக்திவான் தந்தையுடன் இருப்பதாக, இணைந்த ரூபத்தை அனுபவம் செய்வார்கள். மேலும் ஸ்ரீமத் என்ற கை பாதுகாப்பு குடை நிழலின் ரூபத்தில் எப்பொழுதும் அனுபவம் ஆகும். சக்திசாலி ஆத்மா எப்பொழுதும் திடத்தன்மையின் சாவியின் அதிகாரியாக இருக்கும் காரணத்தினால் வெற்றிக் களஞ்சியத்தின் எஜமானனாக அனுபவம் செய்கிறார்கள். எப்பொழுதும் அனைத்து

பிராப்திகள் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டேயிருப்பார்கள். எப்பொழுதும் தனது சிரேஷ்ட பாக்கியத்தின் பாடலை மனதில் பாடிக் கொண்டேயிருப்பார்கள். எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருக்கும் காரணத்தினால் பழைய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து சுலபமாகவே விலகியிருக்கிறார்கள். கடின முயற்சி செய்ய வேண்டியதிருக்காது. சக்திசாலி ஆத்மாவின் ஒவ்வொரு காரியம், வார்த்தை இயல்பாக மற்றும் சுலபமாக சேவை செய்வித்துக் கொண்டேயிருக்கும். சுய பரிவர்த்தனை மற்றும் உலக பரிவர்த்தனை சக்திகாலியாக இருக்கும் காரணத்தினால் வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற இந்த அனுபவம் எப்பொழுதுமே இருக்கும். எந்த விதமான காரியத்திலும் என்ன செய்வது, என்ன ஆகும் என்பது எண்ணத்தின் அளவில் கூட இருக்காது. வெற்றி மாலை எப்பொழுதும் வாழ்க்கையில் அணிவிக்கப்பட்டிருக்கிறது. வெற்றி அடைபவன் மேலும் நான் வெற்றி மாலையில் இருப்பவன். வெற்றி என்பது பிறப்புரிமை என்ற உறுதியான நிச்சயம் இயல்பாக மற்றும் எப்பொழுதுமே கண்டிப்பாக இருக்கும். புரிந்ததா? இப்பொழுது நான் யார் என்று தன்னைத் தானே கேளுங்கள். சக்திசாலி ஆத்மாக்கள் மிகக் குறைந்தவர்கள். அன்பானவர்கள், சகயோகி அதிலேயும் பெருபான்மையோர் பல விதமானவர்கள். எனவே இப்பொழுது என்ன செய்வீர்கள்? சக்திசாலி ஆகுங்கள். சங்கமயுகத்தின் சிரேஷ்ட சுகத்தை அனுபவம் செய்யுங்கள். புரிந்ததா? தெரிந்து கொள்பவர்களாக மட்டுமின்றி அடைபவர்களாக ஆகுங்கள், நல்லது.

தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். மற்றும் தந்தையின் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். வந்து சேர்ந்து விட்டீர்கள் என்பதைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். நீங்களும் மிகவும் குஷி அடைகிறீர்கள் தான் இல்லையா, இந்தக் குஷி எப்பொழுதும் நிலைத்து இருக்கட்டும். மதுபன்னில் இருக்கும் வரையிலும் மட்டுமின்றி முழு சுங்கமயுகமே உடன் இருக்கட்டும். குழந்தைகளின் குஷியில் தந்தையும் குஷியடைகிறார். எங்கு எங்கிருந்தெல்லாம் வந்து, சகித்துக் கொண்டே வந்து சேர்ந்தோ விட்டீர்கள் இல்லையா? வெப்பம் குளிர், உணவு ஆகியவற்றை சகித்துக் கொண்டு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். மண், தூசி, மழையும் பெய்தது. இதுவெல்லாம் பழைய உலகத்தில் நடக்கத் தான் செய்யும். இருந்தும் சௌகரியம், ஒய்வு கிடைத்து விட்டது இல்லையா! ஒய்வு எடுத்தீர்களா? மூன்று அடி இல்லாவிட்டாலும் இரண்டு அடி இடமோ கிடைத்தது. இருந்தும்

தன்னுடைய வீடு வள்ளலின் வீடு இனிமையாக அனுபவம் ஆகிறது இல்லையா! பக்தி மார்க்கத்தின் யாத்திரைகளை விடவும் நல்ல இடம். குடை நிழலின் கீழே வந்து விட்டீர்கள். அன்பின் பாலனையில் வந்து விட்டீர்கள். யக்ஞத்தின் சிரேஷ்ட பூமியில் வந்து சேர்வது, யக்ஞத்தின் பிரசாதத்திற்கு அதிகாரி ஆவது, எவ்வளவு மகத்துவம் நிறைந்தது. ஒரு பருக்கை அனேக விலை மதிக்க முடியாதவைக்கு சமமானவை. இதையோ அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? அவர்களோ பிரசாதத்தின் ஒரு பருக்கை கிடைக்க வேண்டுமென்ற தாகம் உடையவர்களாக இருக்கிறார்கள், மேலும் உங்களுக்கோ வயிறு நிரம்ப பிரம்மா போஜனம் கிடைக்கும். அப்படியானால் நீங்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள்! இந்த மகத்துவத்தோடு பிரம்மா போஜனத்தை அருந்தினீர்கள் என்றால், நிரந்தரமாக மனமும் மகான் ஆகி விடும்.

நல்லது -மிக அதிகமாக பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். இந்தத் தடவை அதிகமானவர்கள் ஏன் ஓடி வந்திருக்கிறீர்கள்? இத்தனை எண்ணிக்கையில் ஒருபொழுதும் வந்ததில்லை, புத்துணர்வில் வந்து விட்டார்கள், இருந்தாலும் பாப்தாதா பஞ்சாப்பில் சத்சங்கம் மற்றும் அமிர்தவேளைக்கு மகத்துவம் இருக்கிறது என்ற சிரேஷ்ட விசேஷத்தை பார்க்கிறார்.

காலணி அணியாமல் கூட வெறும் காலால் கூட அமிர்தவேளைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். பாப்தாதாவும் பஞ்சாப்பில் வாழும் குழந்தைகளுக்கு, இதே மகத்துவத்தைத் தெரிந்திருக்கும் மகான் தன்மையுடன் பார்க்கிறார். பஞ்சாப்பில் வாழ்பவர்கள் என்றால் எப்பொழுதும் தொடர்பால் ஆன்மீக பிரபாவம் என்ற வண்ணத்தில் வண்ணமயமாக்கப்பட்டவர்கள். எப்பொழுதும் சத்சங் அதாவது சத்தியத்தின் சங்கத்தில் இருப்பவர்கள். நீங்கள் அந்த மாதிரி தான் இல்லையா? பஞ்சாப்பை சேர்ந்த அனைவரும் அமிர்த வேளையில் சக்திசாலி ஆகி சந்திப்பினை செய்கிறீர்களா? பஞ்சாப்பை சேர்ந்தவர்களில் அமிர்தவேளைக்காக சோம்பல் இல்லை தான் இல்லையா? தூங்கி விழுவது இல்லையே? அப்படி பஞ்சாப்பின் விசேஷத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நல்லது.

கிழக்கு மண்டலம் வந்திருக்கிறார்கள், கிழக்கில் விசேஷமாக என்ன இருக்கிறது? சூரிய உதயம் (சன்ரைஸ்). சூரியன் எப்பொழுதும் உதயமாகும், சூரியன் என்றால் வெளிச்சத்தின் குளியல் அனைத்து கிழக்கு மண்டலத்தைச் சேர்ந்தவர்களும் மாஸ்டர் ஞான சூரியன். எப்பொழுதும் இருளை அகற்றி, வெளிச்சம் கொடுப்பவர்கள் தான் இல்லையா? இந்த விசேஷம் இருக்கிறது இல்லையா? ஒருபொழுதும் மாயாவின் இருளில் வராதவர்கள், இருளை அகற்றுபவர்கள் மாஸ்டர் வள்ளல் ஆகி விட்டார்கள் இல்லையா? சூரியன் வள்ளல் தான் இல்லையங? அனைத்து மாஸ்டர் சூரியன் என்றால் மாஸ்டர் வள்ளல் ஆகி உலகிற்கு ஒளி கொடுக்கும் காரியத்தில் பிஸியாக இருக்கிறீர்கள் இல்லையா? யார் அவரே பிஸியாக இருக்கிறார். ஓய்வில் இருப்பதில்லையோ, அவர்களுக்காக மாயாவிற்கும் நேரம் கிடைப்பதில்லை, கிழக்கு மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிழக்கு மண்டலத்தில் மாயா வருகிறதா? வருகிறது என்றாலும் நமஸ்காரம் செய்ய வருகிறதா அல்லது மிக்கி மவுஸாக ஆக்கி விடுகிறதா? மிக்கி மவுஸின் விளையாட்டு பிடித்திருக்கிறதா என்ன? கிழக்கு மண்டலத்தின் இருக்கை தந்தையின் இருக்கை அப்படி இராஜ சிம்மாசனம் ஆகி விட்டது இல்லையா? இராஜ சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பவர்கள், இராஜவாக இருப்பார்களா அல்லது மிக்கி மவுஸாக இருப்பார்களா? நீங்கள் அனைவரும் மாஸ்டர் சூரியன் இல்லையா? ஞான சூரியனின் உதயமும் அங்கு இருந்து தான் ஆனது இல்லையா. தன்னுடைய விசேஷத்தை புரிந்துக் கொண்டீர்களா? பிரவேசத்தின் சிரேஷ்ட இருக்கையின் அதாவது நீங்கள் வரதான ஸ்தானத்தில் இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள். இந்த விசேஷம் வேறு எந்த மண்டலத்திலும் இல்லை. எப்பொழுதும் தன்னுடைய விசேஷத்தை உலக சேவையில் ஈடுப்படுத்துங்கள். என்ன விசேஷத்தை செய்வீர்கள்? எப்பொழுதும் மாஸ்டர் ஞான சூரியன். எப்பொழும் ஒளி. மாஸ்டர் வள்ளல். நல்லது. அனைவரும் சந்திப்பதற்காக வந்திருக்கிறீர்கள். எப்பொழுதும் சிரேஷ்ட சந்திப்பை செய்து கொண்டே இருங்கள். ஒரு வினாடி கூட சந்திப்பதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக ஆக வேண்டாம். நிரந்தர யோகியின் அனுபவத்தை உறுதி ஆக்கிச் செல்லுங்கள். நல்லது.

எப்பொழுதும் ஒரு தந்தையின் அன்பில் இருக்கக் கூடிய அன்பான ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு அடியிலும் ஈஸ்வரிய காரியத்தின் சகயோகி

ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் வெற்றியின் அதிகாரத்தை அனுபவம் செய்யக்கூடிய வெற்றியடையும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்டிகளுடன் சந்திப்பு:** ஒரு பலம் மற்றும் ஒருவர் மீதுள்ள நம்பிக்கை மூலம் எப்பொழுதும் முன்னேற்றத்தை அடைந்து கொண்டேயிருங்கள். எப்பொழுதும் ஒரு தந்தையினுடையவர்கள், ஒரு தந்தையின் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். இதே முயற்சியின் மூலம் முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள்.

சிரேஷ்ட ஞான சொரூபம் ஆவதற்கான அனுபவம் செய்யுங்கள். மகான் யோகி ஆவதற்காக ஆழத்தில் செல்லுங்கள், எந்தளவு ஞானத்தின் ஆழத்தில் செல்வீர்களோ, அந்தளவு விலை மதிக்க முடியாத அனுபவத்தின் இரத்தினங்களின் பிராப்தி செய்வீர்கள். ஒருமித்த புத்தியுள்ளவர்கள் ஆகுங்கள். எங்கு ஒருமித்த நிலையிருக்குமோ, அங்கு அனைத்து பிராப்திகளின் அனுபவம் இருக்கும். அல்ப கால பிராப்தியின் பின்னால் செல்லாதீர்கள். அழியாத பிராப்தியை செய்யுங்கள். அழியும் விஷயங்களின் மேல் கவரப்படாதீர்கள். எப்பொழுதும் தன்னை அழியாத பொக்கிஷங்களின் அதிபதி எனப் புரிந்து எல்லைக்கு அப்பாற்பட்ட நிலையில் வாருங்கள். எல்லைக்குட்பட்டதில் வராதீர்கள். எல்லைக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சி மற்றும் எல்லைக்குட்பட்ட கவர்ச்சியின் மகிழ்ச்சி இதில் இரவுக்கும் பகலுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது, எனவே விவேகம் உள்ளவர் ஆகி விவேகத்துடன் காரியம் செய்யுங்கள், மேலும் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சிரேஷ்டமானதாக ஆக்குங்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பல மடங்கு பாக்கியம் நிறைந்தவரின் அடையாளம்!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை அனைத்து பாக்கியவான் குழந்தைகளை பார்த்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் பாக்யவான் ஆத்மா. பிராமணன் ஆவது என்றால் பாக்கியவான் ஆவது. பகவானின் குழந்தை ஆவது என்றால் பாக்கியசாலி ஆவது. அனைவருமே பாக்கியவான்கள் தான் ஆனால் தந்தையின் குழந்தை ஆன பிறகு தந்தையின் மூலமாக விதவிதமான கஜானக்களின் ஆஸ்தியாக என்ன பிராப்தி ஆகிறதோ, அந்த சிரேஷ்ட ஆஸ்தியின் அதிகாரத்தை பிராப்தி செய்து அதிகாரி வாழ்க்கையை வாழ்வது மற்றும் பிராப்தி ஆகியிருக்கும் அதிகாரத்தை எப்பொழுதும் சகஜ விதி மூலமாக வளர்ச்சி அடையச் செய்வது என்பதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். சிலர் பாக்கியவானாக இருந்து விடுகிறார்கள், சிலர் சௌபாக்கியவானாக ஆகி விடுகிறார்கள். சிலர் ஆயிரம், சிலர் இலட்சம், சிலர் பல கோடி மடங்கு பாக்கியவான் ஆகி விடுகிறார்கள், ஏனென்றால் கஜானாவை விதி மூலம் காரியத்தில் ஈடுபடுத்துவது என்றால் வளர்ச்சியை அடைவது. அதை தன்னை சம்பன்னமாக ஆக்கும் காரியத்தில் ஈடுபடுத்தினாலும் சரி, தன்னுடைய சம்பன்ன நிலை மூலமாக மற்ற ஆத்மாக்களின் சேவையில் ஈடுபடுத்தினாலும் சரி. அதிகம் பணம்/செல்வத்தை செலவழிப்பதினால் குறைகிறது. அழியாத செல்வத்தை செலவழிப்பதினால் பலமடங்கு அதிகரிக்கிறது. எனவே நன்றாக சாப்பிடு, நன்றாக செலவழி என்ற பழமொழி இருக்கிறது. எந்தளவு செலவழித்தீர்களோ, சாப்பிடுகிறீர்களோ, அந்தளவு மகாராஜாக்களுக்கெல்லாம் மகாராஜா தந்தை இன்னும் அனைத்து செல்வங்கள் நிறைந்தவராக ஆக்கி விடுவார், எனவே பிராப்தி ஆகியிருக்கும் கஜானாவின் பாக்கியத்தை சேவைக்காக ஈடுபடுத்துங்கள், முன்னேறிச் செல்லுங்கள். பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர் என்றால், ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு வருமானத்தை சேமிப்பு செய்பவர்,

மேலும் ஒவ்வொரு எண்ணம், வார்த்தை, செயல், தொடர்பு மூலம் சேவாதாரி ஆகி பலகோடி மடங்கு சேவையில் ஈடுபடுத்துபவர். பலமடங்கு பாக்கியம் நிறைந்தவர் எப்பொழுதும் பரந்த மனது, அழியாத, இடைவிடாத பெரும் வள்ளல், அனைவருக்காகவும் அனைத்து பொக்கிஷங்களை கொடுக்கும் வள்ளலாக இருப்பார். நேரம் மற்றும் நிகழ்ச்சியின் அனுசாரம், சாதனங்களின் அனுசாரம் சேவை செய்பவராக மட்டும் இல்லாமல், இடைவிடாத பெரும் வள்ளல். வாய்மொழி மூலம் இல்லையென்றால் மனதால் உடலால் சேவை செய்வது, சம்மந்தம், தொடர்பு மூலமாக ஏதாவது விதி மூலமாக குறைவற்ற கஜானக்களின் இடை விடாத நிரந்தர சேவாதாரி. சேவையின் பலவிதமான ரூபம் இருக்கும், ஆனால் சேவைக்கான நங்கூரம் எப்பொழுதுமே போடப்பட்டிருக்கும். எப்படி நிரந்தர யோகியாக இருக்கிறீர்கள், அதே போல் நிரந்தர சேவாதாரி. நிரந்தர சேவாதாரி சேவையில் சிரேஷ்ட பலன் என்ற பழத்தை எப்பொழுதும் தானும் அருந்திக் கொண்டு மற்றவர்களுக்கும் அருந்த கொடுத்துக் கொண்டேயிருப்பார். அதாவது அவரே நிரந்தரமாக பழத்தை அருந்திக் கொண்டே பிரத்யக்ஷ சொரூபம் ஆகி விடுவார்.

பல கோடி மடங்கு பாக்கியவான் ஆத்மா எப்பொழுதும் பதம் ஆசன நிவாசி அதாவது தாமரை மலருக்குச் சமமான நிலையின் ஆசன நிவாசி எல்லைக்குட்பட்ட கவர்ச்சி மற்றும் எல்லைக்குட்பட்ட பலனை ஏற்றுகொள்வதிலிருந்து விலகியிருப்பவராக மேலும் தந்தை மற்றும் பிராமண குடும்பத்தின், உலகத்தின் அன்பானவராக இருப்பார். அந்த மாதிரி சிரேஷ்ட சேவாதாரி ஆத்மா மேல் அனைத்து ஆத்மாக்களும் எப்பொழுதும் இதயத்தின் அன்பு நிறைந்த குஷியின் மலர்களை தூவுவார்கள். பாப்தாதாவும் அந்த மாதிரியான நிரந்தர சேவாதாரி பலகோடி மடங்கு பாக்கியவான் ஆத்மாவிற்காக அன்பின் மலர்களை தூவுகிறார். பல கோடி மடங்கு பாக்கியவான் ஆத்மா எப்பொழுதும் தன்னுடைய மின்னிக் கொண்டிருக்கும் பாக்கியத்தின் நட்சத்திரம் மூலமாக மற்ற ஆத்மாக்களையும் பாக்கியவான் ஆக்குவதற்கு ஒளி கொடுக்கிறார்கள். பாப்தாதா அந்த மாதிரி பாக்கியவான் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருந்தார். தூரத்தில் இருந்தாலும், எதிரில் இருந்தாலும், எப்பொழுதும் தந்தையின் இதயத்தில் நிரம்பியிருக்கிறார்கள். எனவே சமமாக இருப்பவராகி அருகில் இருக்கிறார்கள். இப்பொழுது நான்

எந்தமாதிரியான பாக்கியவான் என்று தன்னைத் தானே கேளுங்கள். தன்னைத் தானோ தெரிந்து கொள்ள முடியும் தான் இல்லையா,. மற்றவர்கள் கூறுவதை நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி, ஆனால் நான் யார் என்று அனைவரும் தன்னைத் தெரிந்திருக்கிறார்கள். புரிந்ததா. இருந்தும் பாக்கியம் இல்லாதவரிலிருந்து பாக்கியவானாகவோ ஆகி விட்டார்கள் என்று பாப்தாதா கூறுகிறார். அனேக விதமான துக்கம், வேதனையிலிருந்தோ பாதுகாப்பாக ஆகி விடுவார்கள். சொர்க்கத்தின் அதிபதி யாகவோ ஆவர்கள். ஒன்று சொர்க்கத்தில் வருவது. இன்னொன்று இராஜ்ய அதிகாரி ஆவது. அனைவருமே வருபவர்கள் தான் ஆனால் எப்பொழுது மற்றும் எங்கே வருவார்கள் என்பதை தன்னிடமே கேளுங்கள். பாப்தாதாவின் பதிவேட்டில் சொர்க்கத்தில் வருபவர்களின் பட்டியலில் பெயர் வந்து விட்டது. உலகத்தை ஒப்பிடும் பொழுது இது நல்லது ஆனால் நல்லதிலும் நல்லது என்று இல்லை. எனவே என்ன செய்வீர்கள்? எந்த மண்டலம் நம்பர் ஒன்னில் வரும் ஒவ்வொரு மண்டலத்திற்கும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது.

மஹாராஷ்ட்ராவின் விசேஷம் என்ன? தெரிந்திருக்கிறீர்களா? மகானாகவோ இருக்கிறது, ஆனால் முக்கியமான விசேஷாக என்ன வர்ணிக்கப்படுகிறது. மஹாராஷ்டிராவில் கணபதியின் பூஜை அதிகமாக இருக்கும், கணபதியை என்னவென்று கூறுகிறார்கள்? தடைகளை அழிப்பவர். என்ன ஒரு காரியம் தொடங்கினாலும் முதலில் கணேஷாயா நமஹ! என்று கூறுகிறார்கள். அப்படியானால் மகாராஷ்டிராவை சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? ஒவ்வொரு மகான் காரியத்தில் ஸ்ரீகணேஷ் செய்வீர்கள் இல்லையா? மகாரஷ்டிரா என்றால் எப்பொழுதும் தடைகளை அழித்த இராஷ்டிரம். எனவே எப்பொழுதும் தடைகளை அழிப்பவர் ஆகி தனக்கும் மேலும் மற்றவர்களுக்காகவும் இதே மகான் தன்மையை காண்பிப்பீர்கள். மஹாராஷ்ட்ராவில் தடை இருக்கக் கூடாது. அனைவரும் தடைகளை அழிப்பவராக ஆகி விட வேண்டும். (தடை) வந்தது மேலும் தூரத்திலிருந்தே நமஸ்காரம் செய்தது. அம்மாதிரியான தடைகளை அழிக்கும் குரூப்பை அழைத்து வந்திருக்கிறீர்கள் இல்லையா. மகாராஷ்ட்ராவிற்கு எப்பொழுதும் தன்னுடைய இந்த மகான் தன்மையை உலகத்திற்கு எதிரே காண்பிக்க வேண்டும். நீங்கள் தடைகளை கண்டு பயப்படுவர்களோ இல்லை தான் இல்லையா. தடைகளை அழிப்பவர்கள் சவால் விடுபவர்களாக இருப்பார்கள். பொதுவாகவே

மஹாராஷ்டாராவில் தன்னுடைய வீரத் திறமையை காண்பிக்கிறார்கள். நல்லது.

உ.பி. யை சேர்ந்தவர்கள் என்ன அதிசயம் காண்பிப்பீர்கள்? உ.பி.யின் விசேஷம் என்ன? தீர்த்த ஸ்தலங்களும் அதிகம் இருக்கின்றன, நதிகளும் அதிக இருக்கின்றன, ஜெகத்குருவும் அங்கே தான் இருக்கிறார்கள். நான்கு மூலைகளில் நான்கு ஜெகத் குருக்கள் இருக்கிறார்கள் இல்லையா. உ.பி.யில் மகா மண்டலிஷ்வரர் அதிகம் இருக்கிறார்கள். ஹரிதுவார் அதாவது ஹரியின் வாசலும் உ.பி. யின் விசேஷம். எனவே ஹரித் துவார் என்றால் ஹரியிடம் சென்று அடைவதற்கான வாசலை காண்பிக்கக் கூடிய சேவாதாரிகள் உ.பி.யில் அதிகம் இருக்க வேண்டும். எப்படி தீர்த்த ஸ்தானத்தின் காரணமாக உ.பி.யில் வழிகாட்டிகள் அதிகம் இருக்கிறார்கள். அவர்களோ ஒன்றாக சாப்பிடுபவர்கள், குடிப்பவர்கள், ஆனால் இதுவோ ஆன்மீக வழிகாண்பிக்கக் கூடிய ஆன்மீக சேவாதாரி வழிகாட்டிகள். இவர்கள் தந்தையோடு சந்திப்பை செய்துக் கொண்டிருப்பவர்கள். தந்தையின் அருகில் கொண்டு வருபவர்கள். அந்த மாதிரி பாண்டவரான வழிகாட்டிகள். உ.பி.யில் விசேஷமாக இருக்கிறார்கள்? உ.பி.க்கு விசேஷமாக பாண்டவரிலிருந்து வழிகாட்டி ஆகும். பிரத்யக்ஷ ரூபத்தை காண்பிக்க வேண்டும். புரிந்ததா!

மைசூரின் விசேஷம் என்ன? அங்கு சந்தனமும் இருக்கிறது, மேலும் விசேஷ பூங்காக்களும் இருக்கின்றன, எனவே கர்னாடகாவை சேர்ந்தவர்கள் விசேஷமாக எப்பொழுதும் ஆன்மீக ரோஜா மலர், எப்பொழுதும் நறுமணம் வீசும் சந்தனம் ஆகி உலகத்தில் சந்தனத்தின் வாசனை என்று கூறினாலும் மேலும் ஆன்மீக ரோஜா மலர் என்று கூறினாலும் உலகை பூங்காவாக மாற்ற வேண்டும். மேலும் சந்தனத்தின் நறுமணத்தை பரப்ப வேண்டும். சந்தன திலகமிட்டு நறுமணம் நிரம்பியவராக மேலும் சீதளமாக ஆக்க வேண்டும். சந்தனம் சீதளமாகவும் இருக்கும். எனவே மிக அதிக ரோஜா மலர் கர்னாடகாவில் உருவாகும் இல்லையா. இந்த நடைமுறை நிரூபணத்தை கொண்டு வாருங்கள்.

இப்பொழுது அனைவருக்கும் அவரவர்களின் விசேஷத்தின் வெற்றியின் பிரத்யக்ஷ ரூபத்தை காண்பிக்க வேண்டும். மிகவும் நன்றாக மலர்ந்த நறுமணம் நிறைந்த ஆன்மீக ரோஜா மலரை கொண்டு வரவேண்டும்.

கொண்டு வந்தும் இருக்கிறீர்கள், கொஞ்சம் கொஞ்சம் கொண்டு வந்திருக்கிறீர்கள், ஆனால் மலர்ச் செண்டை கொண்டு வரவில்லை. நல்லது.

வெளிநாட்டின் மகிமையையோ அதிகம் கூறியிருக்கிறோம். வெளிநாட்டின் விசேஷம் -மிக வலுவாக விடுபட்டவர்களாக ஆகி விடுகிறார்கள் என்றால், மிக வலுவாக பற்றுதலிலும் வந்துவிடுவார்கள். வெளிநாட்டுக் குழந்தைகளின் விலகியிருந்து அன்பாக இருக்கும் நிலையை பார்த்து, பாப்தாதாவும் மகிழ்ச்சியடைகிறார். அந்த வாழ்க்கையோ கடந்து சென்று விட்டது. எந்தளவு மாட்டிக் கொண்டிருந்தார்களோ, அந்தளவே இப்பொழுது விலகியிருப்பவர்களாகவும் ஆகி விட்டார்கள், எனவே வெளிநாட்டின் விலகியிருந்து அன்பாக இருக்கும் தன்மை பாப்தாதாவிற்கும் மிகவும் பிடித்திருக்கிறது, எனவே விசேஷமாக பாப்தாதாவும் அன்பு நினைவுகள் கொடுக்கிறார். தன்னுடைய விசேஷத்தில் முழ்கி விட்டீர்கள். நீங்கள் அந்த மாதிரி விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர் தான் இல்லையா. பற்றுதலோ இல்லைதான் இல்லையா. இருந்தாலும் பாருங்கள் வெளிநாட்டினர் விருந்தினராகி வீட்டிற்கு வந்திருக்கிறார்கள் என்றால், விருந்தினரை எப்பொழுதும் முன்னுக்கும் வைக்கப் படுவார்கள், எனவே வெளிநாட்டினரை பார்த்து பாரதவாசிகளுக்கு விசேஷ குஷி ஏற்படுகிறது. சில அந்த மாதிரியான விருந்தினர்களும் இருக்கிறார்கள், சிலர் வந்த வீட்டிலேயே அமர்ந்து விடுகிறார்கள், வெளி நாட்டினரின் நடத்தை எப்பொழுதும் இதே மாதிரி தான் இருந்தது. விருந்தினராகி வருகிறார்கள், மேலும் வீட்டில் இருப்பவராகி இருந்து விடுகிறார்கள், இருந்தும் அனேக சுவர்களை இடித்து தந்தையிடம் அதாவது உங்களிடம் வந்திருக்கிறார்கள், எனவே முதலில் நீங்கள் என்று கூறுவீர்கள் இல்லையா. பாரதத்தின் விசேஷம் அதனுடையது, வெளிநாட்டினரின் விசேஷம் அதனுடையது. நல்லது.

அனைவரும் பதம் ஆசனதாரி, பதமா பதம் பாக்கியவான், எப்பொழுதும் ஒவ்வொரு வினாடி, ஒவ்வொரு எண்ணத்தில் நிரந்தர 84-மணிகள் உள்ள தேவிகள் பிரபலமானவர்கள். எனவே இப்பொழுது 84-ல் மணி அடிப்பீர்களா அல்லது இன்னும் காத்துகொண்டிருப்பீர்களா. வெளிநாட்டிலோ பயத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே

எப்பொழுது மணி அடிப்பீர்கள். வெளிநாடு அடிக்குமா அல்லது பாரதம் அடிக்குமா. 84-என்றால் நாலாபுறங்களிலும் உள்ள மணிகள் அடிப்பது. எப்பொழுது இறுதி பூஜையில் ஆரத்தி காண்பிக்கிறார்கள் என்றால், மிகவும் சப்தமாக மணி அடிப்பார்கள் இல்லையா, அப்பொழுது முடிவு ஏற்படும். ஆரத்தி காண்ப்பிப்பது என்றால், முடிவு ஆவது. எனவே இப்பொழுது என்ன செய்வீர்கள்?

அனைத்து பதம் ஆசனதாரி, பதமா பதம் பாக்கியவான், எப்பொழுதும் ஒவ்வொரு வினாடி, ஒவ்வொரு எண்ணத்தில் நிரந்தர சேவாதாரி, எப்பொழுதும் பரந்த மனமுடையவராகி அனைத்து பொக்கிஷங்களை கொடுக்ககூடிய, மாஸ்டர் வள்ளல், எப்பொழுதும் தன்னுடைய சம்பன்ன நிலை மூலமாக மற்றவர்களையும் சம்பன்னம் ஆக்கக் கூடிய, சிரேஷ்ட பாக்கிய அதிகாரி, எப்பொழுதும் சிரேஷ்ட நிரூபணம் கொடுக்கக் கூடிய உண்மையான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் சமஸ்காரம்.

**பஞ்சாப் நிவாசிகளுக்காக பாப்தாதாவின் மகா வாக்கியங்கள்**: தந்தை உங்களுடன் இருக்கிறார், எனவே யோசிப்பதற்கு அவசியமில்லை, என்ன நடக்குமோ, அதில் நன்மை தான் இருக்கும். நீங்களோ அனைவரினுடையவர்கள் இந்துவும் இல்லை, சீக்கியரும் இல்லை, நீங்கள் தந்தையின் உடையவர்கள் என்றால் அனைவரின் உடையவர்கள். பாக்கிஸ்தானிலும் -நீங்களோ அல்லாவின் குழந்தைகள் உங்களுக்கு எந்த விஷயத்தோடு தொடர்பு கிடையாது. நீங்கள் ஈஸ்வரனினுடையவர்கள், வேறுயாருடையவர்களும் கிடையாது என்று தான் கூறினார்கள். என்னவாக இருந்தாலும் ஆனால் பயப்படுபவர்களோ இல்லை. எவ்வளவு தான் நெருப்பு வைத்து கொளுத்தினாலும் பூனையின் குட்டிகளோ பாதுகாப்பாக இருப்பார்கள், ஆனால் யார் யோக சொரூபமாக இருப்பார்களோ, அவர்கள் மட்டும் தான் பாதுகாப்பாக இருப்பார்கள். நான் தந்தையின் உடையவன் என்று கூறிக் கொண்டு மற்றவர்களை நினைப்பதென்று அப்படி இருக்கக் கூடாது. அந்த மாதிரி யானவர்களுக்கு உதவி கிடைக்காது. பயப்படாதீர்கள், நடுங்காதீர்கள், முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். நினைவு யாத்திரையில், தாரணை செய்வதில், படிப்பில் அனைத்து பாடங்களிலும் முன்னேறிச் சென்று

கொண்டேயிருங்கள். எந்தளவு முன்னேறிச் செல்கிறீர்களோ, அந்தளவு சுலபமாகவே பிராப்தி செய்து கொண்டேயிருப்பீர்கள்.

2. அனைவரும் தன்னை இந்த உலக நாடகத்தில் விசேஷ நடிகன் என்று நினைக்கிறீர்களா? சென்ற கல்பத்தில் தன்னுடைய படங்களை இப்பொழுது மீண்டும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுதான் பிராமண வாழ்க்கையின் அதிசயம். என்னவாக இருந்தேன் மற்றும் என்னவாக ஆகி விட்டேன் என்ற இதே விசே'த்தை எப்பொழுதும் நினைவு செய்யுங்கள். கொஞ்சம் மதிப்பில்லாத சோழியிலிருந்து மிகவும் மதிப்புள்ள வைரம் ஆகி விட்டேன். துக்கமான உலகத்திலிருந்து சுகமான உலகத்தில் வந்துவிட்டேன். நீங்கள் அனைவரும் இந்த நாடகத்தின் கதாநாயகன், கதாநாயகி நடிகர்கள்.. ஒவ்வொரு பிரம்மா குமார், குமாரி தந்தையின் செய்தியை கூறக்கூடிய செய்தியாளர்கள். பகவானின் செய்தியை கூறக்கூடிய செய்தியாளர்கள் எவ்வளவு சிரேஷ்ட மானவர்கள் ஆகி விட்டார்கள். எப்பொழுதும் இதே காரியம் செய்வதற்காக அவதரித்து இருக்கிறீர்கள். இந்த செய்தியை கொடுப்பதற்காக மேலேயிருந்து கீழே வந்திருக்கிறேன் என்ற இதே நினைவு எவ்வளவு குஷி கொடுக்கக் கூடியது. எனவே நான் அனைத்து குஷிகளின் சுரங்கத்தின் எஜமானன் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், அவ்வளவுதான். இதுதான் பட்டம்.

3. எப்பொழுதும் தன்னை சங்கமயுகத்தின் சிரேஷ்ட பிராமண ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? உண்மையான பிராமணன் என்றால் எப்பொழுதும் சத்தியமான தந்தையின் அறிமுகம் கொடுப்பவர். பிராமணர்களின் வேலையே கதை கூறுவது. நீங்கள் கதை கூறுவதில்லை, ஆனால் சத்திய அறிமுகத்தை கூறுகிறீர்கள். அந்த மாதிரி சத்தியமான தந்தையின் சத்தியமான அறிமுகம் கொடுக்கும் பிராமண ஆத்மா என்ற இதே போதை எப்பொழுதும் இருக்கட்டும். பிராமணன் தேவதைகளை விடவும் உயர்ந்தவர் எனவே பிராமணர்களின் ஸ்தானமாக உச்சி குடுமியை காண்பித்திருக்கிறார்கள், குடுமி உள்ள பிராமணன் என்றால் உயர்ந்த நிலையில் இருப்பவர். உயர்ந்த இடத்தில் இருப்பதினால் கீழே அனைத்தும் சிறியதாக தென்படும். எந்தவொரு விஷயமும் பெரியதாக அனுபவம் ஆகாது. மேலே அமர்ந்து கொண்டு கீழே உள்ள பொருட்களை பார்த்தீர்கள் என்றால் சிறியதாக தென்படும்.

எப்பொழுதாவது ஏதாவதுவொரு பிரச்சினை பெரியதாக அனுபவம் ஆகிறதென்றால், அதற்கான காரணம் அதை நீங்கள் கீழே அமர்ந்து பார்க்கிறீர்கள், மேலே அமர்ந்து பார்த்தீர்கள் என்றால், கடின முயற்சி செய்ய வேண்டியிருக்காது. எனவே நான் உயர்ந்த ஸ்தானம் உச்சி குடுமியில் இருக்கும் பிராமணன் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் -இதில் பெரிய பிரச்சனையும் கூட ஒரு நொடியில் சிறியதாகி விடும். நீங்கள் பிரச்சனைகள் கண்டு பயப்படுபவர்கள் இல்லை, ஆனால் கடந்து செல்பவர்கள், பிரச்சனைகளுக்கு சமாதானம் செய்பவர்கள். நல்லது.

**இன்று காலை (18/4/84) அமிர்தவேளையில் ஒரு சகோதரர் மாரடைப்பின் காரணமாக தன்னுடைய பழைய உடலை மதுபனில் விட்டு விட்டார், அந்த நேரம் அவ்யக்த பாப்தாதாவால் கூறப்பட்ட மகாவாக்கியம்:** நீங்கள் அனைவரும் நாடகத்தின் ஒவ்வொரு காட்சியை பார்வையாளராகி பார்க்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் தான் இல்லையா. நாடகத்தில் என்ன காட்சி இருந்தாலும் அதை நன்மை பயக்ககூடியது தான் என்று கூறுவோம். ஒன்றும் புதியதல்ல. (அவருடைய குடும்பத்து அன்னியிடம்) என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? பார்வையாளர் என்ற இருக்கையில் அமர்ந்து அனைத்து காட்சிகளையும் பார்ப்பதினால் தனக்கும் நன்மை இருக்கிறது, மேலும் அந்த ஆத்மாவிற்கும் நன்மை இருக்கிறது. இதையோ புரிந்திருக்கிறீர்கள் இல்லையா. நினைவு செய்வதில் நீங்கள் சக்தி ரூபம் தான் இல்லையா. சக்தி எப்பொழுதும் வெற்றியடைபவராக இருப்பார். வெற்றி அடையும் சக்தி ரூபம் ஆகி தனது வாழ்க்கையின் அனைத்து பாகத்தையும் செய்பவர். இதுவும் பாகம் தான். பாகத்தை செய்துகொண்டே ஒருபொழுதும் வேறு எந்த எண்ணமும் வைக்காதீர்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களுக்கென்ற பாகம் இருக்கிறது. இப்பொழுது அந்த ஆத்மாவிற்கு சாந்தி மற்றும் சக்தியின் சகயோகம் கொடுங்கள். இத்தனை அனைத்து தெய்வீக பரிவாரத்தின் சகயோகம் பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறது, எனவே ஏதாவது யோசிப்பதற்கான விஷயம் இல்லை. இது மகான் தீர்த்த ஸ்தலம் தான் இல்லையா. அவர் மகான் ஆத்மா, இது மகான் தீர்த்த ஸ்தலம். எப்பொழுதுமே மகான் தன்மையை மட்டும் யோசியுங்கள். நீங்கள் அனைவரும் நினைவில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா. ஒரு செல்லமான குழந்தை தன்னுடைய இந்த பழைய

உடலின் கணக்கு வழக்கை முடித்துவிட்டு தன்னுடைய புதிய உடலை தயார் செய்வதற்காக சென்றுவிட்டார், எனவே இப்பொழுது நீங்கள் அனைவரும் அந்த பாக்கியவான் ஆத்மாவிற்கு சாந்தி, சக்தியின் சகயோகம் கொடுங்கள். இதுதான் விசேஷ சேவை. ஏன், என்ன என்பதில் செல்லாதீர்கள் ஆனால் நீங்களே சக்தி சொரூபம் ஆகி உலகில் சாந்தியின் கிரணங்களை பரப்புங்கள். சிரேஷ்ட ஆத்மா, வருமானம் செய்யக்கூடிய ஆத்மா எனவே எதுவும் யோசிப்பதற்கான விஷயம் இல்லை. புரிந்ததா.

**வரதானம்: ஃபரிஸ்தா சொரூபத்தின் நினைவு மூலமாக தந்தையின் பாதுகாப்பு குடைநிழலை அனுபவம் செய்யக் கூடிய தடையை வென்றவர் ஆகுக!**

அமிர்தவேளை எழுந்தவுடனேயே நான் ஃபரிஸ்தா என்பதை நினைவில் கொண்டு வாருங்கள். பிரம்மாபாபாவிற்கு மனதிற்கு விருப்பமான இதே பரிசை கொடுத்தீர்கள் என்றால் தினசரி அமிர்தவேளையில் பாப்தாதா உங்களை தன்னுடைய இரு கரங்களுக்குள் அரவணைத்துக் கொள்வார். நீங்கள் நான் பாபாவின் கரங்களுக்குள் அதீந்தீரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்வீர்கள். யார் ஃபரிஸ்தா சொரூபத்தின் நினைவில் இருப்பார்களோ, அவர் எதிரில் ஏதாவது பிரச்சனை மற்றும் தடை வந்தாலும் கூட அவர்களுக்காக தந்தை பாதுகாப்பு குடை நிழல் ஆகி விடுவார். எனவே தந்தையின் குடை நிழலை மற்றும் அன்பை அனுபவம் செய்து கொண்டே தடையை வென்றவர் ஆகுங்கள்.

**சுலோகன்: சுக சொரூப ஆத்மா சுய நிலை மூலம் சூழ்நிலை மேல் சகஜமாக வெற்றி அடைந்து விடுகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 19.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாவனை உள்ள ஆத்மா மற்றும் ஞானம் நிறைந்த ஆத்மாவின் இலட்சணம்!

இன்று பாப்தாதா எந்தக் குழந்தைகள் பாவனையுடன் தந்தையிடம் வந்து சேர்ந்திருக்கிறார்கள், எந்தக் குழந்தைகள் தெரிந்து கொண்டு அடைவதற்காக அதாவது குழந்தையாக ஆவதற்காக வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்று அனைத்துக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருந்தோம். இரண்டு விதமான குழந்தைகளும் தந்தையின் வீட்டிற்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். பாவனை உள்ள குழந்தைகள் பாவனையின் பலன் மற்றும் சக்தி, குஷி, சாந்தி, ஞானம் மற்றும் அன்பின் பலனை பிராப்தி செய்து இதிலேயே குஷி அடைந்து விடுகிறார்கள். இருந்தும் பக்தியின் பாவனை மேலும் இப்பொழுது தந்தையின் அறிமுகம் கிடைத்ததால் தந்தை மற்றும் பரிவாரத்தின் மேல் வைத்திருக்கும் பாவனை இதில் வித்தியாசம் இருக்கிறது. பக்தியின் பாவனை மூட நம்பிக்கையின் பாவனை. மறைமுகமாக சந்திப்பதற்கான பாவனை, அற்பகாலத்து சுயநலம் நிரம்பிய பாவனை. தற்சமயம் ஞானத்தின் ஆதாரத்தினால் குழந்தைகளின் பாவனை என்ன இருக்கிறதோ அது பக்தி மார்க்கத்தை விட மிக உயர்ந்தது. ஏனென்றால், மறைமுகமாக தேவ ஆத்மாக்களின் மூலமாக இருக்கும் பாவனை இல்லை, நேரடியாக தந்தை மேல் வைத்திருக்கும் பாவனை. தெரிந்திருக்கிறார், அறிந்திருக்கிறார் ஆனால் பாவனை நிறைந்து தெரிந்து கொள்ளுதல் மற்றும் ஞானம் மூலமாகத் தெரிந்து கொள்ளுதல் இதில் வித்தியாசம் இருக்கிறது. ஞானத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ளுதல் என்றால் தந்தை என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார், நானும் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் என்று அந்த விதிப்பூர்வமாகத் தெரிந்து கொள்வது அதாவது தந்தைக்குச் சமமாக ஆவது. அனைவருமே தெரிந்திருக்கிறார்கள், ஆனால் பாவனை நிரம்பிய மற்றும் ஞானத்தின் விதி நிறைந்து தெரிந்து கொள்வதில் உள்ள வித்தியாசத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று

# 1984 அவ்யக்த முரளி

பாப்தாதா அனேக குழந்தைகளின் பாவனையைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாவனை மூலமாகவும் தந்தையைத் தெரிந்து கொள்வதினால் ஆஸ்தியை பிராப்தி செய்து விடுகிறார்கள் ஆனால் சம்பூர்ண ஆஸ்தியின் அதிகாரி மற்றும் வெறும் ஆஸ்தியின் அதிகாரி என்ற இந்த வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. சொர்க்கத்த்தின் பாக்கியம் மற்றும் ஜீவன் முக்தியின் அதிகாரம் பாவனை உள்ளவர்களுக்கும் மற்றும் ஞானம் நிறைந்தவர்களுக்கும் இருவர்களுக்குமே கிடைக்கிறது. பதவியின் பிராப்தியில் மட்டும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. பாபா என்ற வார்த்தையை இருவர்களுமே கூறுகிறார்கள். மேலும் குஷியோடு கூறுகிறார்கள். எனவே பாபா என்று கூறுவதினால் மற்றும் புரிந்து கொள்வதின் பலனாக ஆஸ்தியின் பிராப்தியோ கண்டிப்பாக இருக்கும். ஜீவன் முக்தியின் அதிகாரத்திற்கு உரியவர்களாகவோ ஆகி விடுகிறார்கள் ஆனால் அஷ்ட இரத்தினம், 108--வெற்றி இரத்தினம், 16,000 மற்றும் பிறகு 9-லட்சம். எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. மாலை 16,000-க்கும் இருக்கிறது. மேலும் 108--க்கும் இருக்கிறது. 108--ல் 8-விசேஷமானவர்கள் இருக்கிறார்கள். மாலையின் மணியாகவோ அனைவரும் ஆகிறார்கள். இருவர்களையுமே மணிகள் என்று கூறுவோம் இல்லையா? 16,000-ன் மாலையின் மணியும் குஷியோடு மற்றும் பெருமிதத்தோடு என்னுடைய பாபா மற்றும் என்னுடைய இராஜ்யம் என்று கூறுவார். இராஜ பதவியில் இராஜ சிம்மானத்தின் அதிகாரி, இராஜ குடும்பத்தின் அதிகாரி, மேலும் இராஜ குடும்பத்தின் தொடர்பில் வருவதற்கான அதிகாரி என்று இந்த வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

பாவனை உள்ள ஆத்மாக்கள் மற்றும் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் இருவருக்குமே போதை இருக்கிறது. பிரபுவின் அன்பின் விஷயங்களை மிக நல்ல முறையில் கூறுகிறார்கள். அன்பு சொரூபத்தில் உலகத்தின் உணர்வுகளையும் மறந்து விடுகிறார்கள். எனக்கு இருப்பதோ ஒரு தந்தை என்ற இந்த ஈடுபாடு நிறைந்த பாடலையும் நன்றாகப் பாடுகிறார்கள் ஆனால் சக்தி ரூபமாக இருப்பதில்லை. அதிகமானவர்களை குஷியில் இருப்பவர்களாகவும் பார்ப்பீர்கள் ஆனால் ஒருவேளை மிகச் சிறிய மாயாவின் தடை வருகிறது என்றால் பாவனை உள்ள ஆத்மாக்கள் மிக விரைவிலேயே பயந்தும் விடுவார்கள். ஏனென்றால் ஞானத்தின் சக்தி குறைவாக இருக்கிறது. இந்த நேரம் மிகவும் மகிழ்ச்சியில் தந்தையின் பாடலைப் பாடிக் கொண்டிக்கிறார்கள் என்று பார்ப்பீர்கள். மேலும் அடுத்த

நேரம் மாயாவின் மிகச் சிறிய தாக்குதலும் குஷியின் பாடலுக்குப் பதிலாக என்ன செய்வது, எப்படிச் செய்வது, என்னவாகும், எப்படி ஆகும் என்று என்னென்ன பாடல் பாடுவதிலும் குறைவானவர்களாக இருப்பதில்லை. ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் தன்னை எப்பொழுதும் தந்தையுடன் இருக்கும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைப்பதினால் மாயாவை கடந்து வந்து விடுகிறார்கள். என்ன, ஏன் என்ற பாடலை பாடுவதில்லை. பாவனை உள்ள ஆத்மாக்கள் அன்பின் சக்தியினால் மட்டும் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பார்கள். மாயாவை எதிர்நோக்குவதற்கான சக்தி இருப்பதில்லை. ஞானம் நிறைந்த ஆத்மா தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற இலட்சியத்தோடு அனைத்து சக்திகளை அனுபவம் செய்து எதிர்நோக்க முடியும். இப்பொழுது நான் யார், நான் பாவனை உள்ள ஆத்மாவா அல்லது ஞானம் நிறைந்த ஆத்மாவா? என்று உங்களை நீங்களே கேளுங்கள். தந்தையோ பாவனை உள்ளவர்களையும் பார்த்து குஷியடை கிறார். என்னுடைய பாபா என்று கூறியதினால் அதிகாரியாகவோ ஆகியே விட்டார் இல்லையா? மேலும் அதிகாரத்தைப் பெறுவதற்கும் உரிமையுள்ளவராக ஆகியே விட்டார். முழுமையாகப் பெறுவது அல்லது கொஞ்சம் பெறுவது... அது முயற்சி செய்வதின் அனுசாரம் எந்தளவு பையை நிரப்புகிறாரோ அந்த அளவு நிரப்ப முடியும். ஏனென்றால் என்னுடைய பாபா என்று கூறினார் என்றால், சாவியையோ போட்டு திறந்தே விட்டார் இல்லையா? வேறு எந்த சாவியும் இல்லை, ஏனென்றால் பாப்தாதா கடல் தான் இல்லையா? குறைவின்றி இருக்கிறார், அளவற்று இருக்கிறார். எடுத்துக் கொள்பவர்கள் களைப்படைந்து விடுகிறார்கள். கொடுப்பவர் களைப்படைபவர் இல்லை. ஏனென்றால் அவருக்கு உழைப்பு என்று என்ன செய்ய வேண்டியது இருக்கிறது. திருஷ்டி கொடுத்தார் மற்றும் அதிகாரத்தைக் கொடுத்தார். கடின உழைப்பு எடுத்துக் கொள்பவர் களுக்கும் கிடையாது, ஆனால் அலட்சியத்தின் காரணத்தினால் மட்டும் இழந்து விடுகிறார்கள். தன்னுடைய பலஹீனத்தின் காரணமாக இழந்து விட்டு பிறகு அடைவதற்காக கடும் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. இழப்பது அடைவது, அடைவது இழப்பது என்ற இந்த கடும் உழைப்பின் காரணமாக களைப்படைந்து விடுகிறார்கள். எச்சரிக்கை நிறைந்தவர், புத்திசாலி, திறமை நிறைந்தவர் என்றால் எப்பொழுதும் பிராப்தி சொரூபமாக இருக்கிறார். எப்படி சத்யுகத்தில் தாசிகள் சேவை செய்வதற்காக எப்பொழுதும் முன்னுக்கும் பின்னுக்கும் உடன்

இருப்பார்கள் - அதே மாதிரி ஞான சொரூப ஆத்மா தந்தைக்குச் சமமான சிரேஷ்ட ஆத்மாவிற்கு இப்பொழுதும் அனைத்து சக்திகள், அனைத்து குணங்கள் சேவாதாரியின் ரூபத்தில் எப்பொழுதும் உடன் இருந்து சேவை செய்வார்கள். எந்த சக்தியை, எந்த குணத்தை வர வழைக்கிறாரோ அது உடனே ஆஜராகி விடும். அம்மாதிரியான சுயராஜ்ய அதிகாரி, விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆகிறார். இதுவோ கடினமாக இருக்காது தான் இல்லையா? ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு குணத்தின் மூலம் எப்பொழுதும் வெற்றி அடைவேன் என்று அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். எப்படி நாடகத்தில் நடித்துக் காண்பிக்கிறார்கள் இல்லையா? இராவணன் தன் உடன் இருப்பவர்களை தூண்டி விடுகிறார். மேலும் பிராமண ஆத்மா, சுயராஜ்ய அதிகாரி ஆத்மா, தன்னுடைய சக்திகள் மற்றும் குணங்களைத் தூண்டி விடுகிறார். அந்த மாதிரி சுயராஜ்ய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது தேவையான நேரத்தில் இந்த சக்திகளை காரியத்தில் கொண்டு வர முடிவதில்லையா. பலஹீனமான இராஜாவை யாரும் ஏற்றுக் கொள்வதில்லை. இராஜாவை பிரஜைகள் ஏற்று நடக்க வேண்டும் இல்லையா? வீரம் நிறைந்த இராஜாக்கள் அனைத்தையும் தன்னுடைய கட்டளைப்படி நடத்துவார்கள். மேலும் இராஜ்யத்தை பிராப்தி செய்வார்கள். எனவே சுலபமானதை கடினமாக்குவது மேலும் பிறகு களைப்படைந்து விடுவது என்பது அலட்சியத்தின் அடையாளம். பெயர் இராஜா மேலும் அவருடைய கட்டளைப்படி நடப்பவர்கள் யாரும் இல்லை என்றால் இதை என்னவென்று கூறுவது. சிலர் கூறுகிறார்கள் இல்லையா? சகித்துக் கொள்ளும் சக்தி இருக்க வேண்டும் என்று நான் புரிந்து கொண்டேன் ஆனால் காலம் தாழ்த்தி பின்னால் நினைவு வந்தது என்று சிலர் கூறுகிறார்கள் இல்லையா? அந்த நேரம் சகித்துக் கொள்ளும் சக்தி மூலம் காரியத்தை செய்ய முடியாது என்று யோசிக்கவும் செய்கிறார்கள். இதற்கான அர்த்தம் அழைத்தது இப்பொழுது மேலும் வந்தது மறுநாளில். அப்படியானால் அது கட்டளைப்படி இருந்ததா? நடந்து விட்டது என்றால், தன்னுடைய சக்தி தன்னுடைய கட்டளைப்படி இருக்கவில்லை. சேவாதாரி தேவையான நேரத்தில் சேவை செய்யவில்லை என்றால் அந்த மாதிரி சேவாதாரியை என்னவென்று கூறுவோம்? எனவே எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி ஆகி அனைத்து சக்திகளையும், குணங்களையும் தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் சேவையில் ஈடுபடுத்துங்கள். புரிந்ததா? பாவனை உள்ளவராக மட்டும் ஆகாதீர்கள். சக்திசாலியாகவும்

ஆகுங்கள். நல்லது. பலவிதமான ஆத்மாக்களின் சந்திப்பு விழாவை பார்த்து குஷி அடைகிறீர்கள் தான் இல்லையா? மதுபனில் இருப்பவர்கள் எத்தனை மேளாக்களைப் பார்த்திருந்திருப்பார்கள். எத்தனை விதவிதமான குரூப்கள் வருகின்றன. பாப்தாதாவும் பலவகையான மலர்த்தோட்டங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். வருக வருக என்று கூறுகிறார். சிவனின் கல்யாண ஊர்வலம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதை பார்க்கிறீர்கள் தான் இல்லையா? பாபா - பாபா என்று கூறி அனைவரும் வந்து சேர்ந்து விட்டார்கள் இல்லையா? மதுபன்னிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இப்பொழுது சம்பூர்ண லட்சியத்தை சென்றடைய வேண்டும். நல்லது.

எப்பொழுதும் சிரேஷ்ட அதிகாரத்தை அடையும் வெற்றி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய அதிகாரத்தின் மூலம், அனைத்து சக்திகள் மூலம் சேவை செய்யக்கூடிய சக்திசாலி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இராஜ சிம்மாசனத்தின் அதிகாரியாக ஆகக்கூடிய அதிகாரி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தனித்தனி பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: பஞ்சாப் மண்டலத்தோடு சந்திப்பு:** அனைத்து பஞ்சாப் நிவாசிகள் மகாவீர் தான் இல்லையா? பயப்படுபவர்கள் இல்லையே? எந்த விஷயத்திற்கோ பயமோ இல்லை. மிகப் பெரிய பயமாக மரண பயம் இருக்கும். நீங்கள் அனைவருமோ ஏற்கனவே இறந்தே விட்டீர்கள். இறந்து விட்டவர்களுக்கு இறப்பதற்கான என்ன பயம் இருக்க முடியும்? எப்பொழுது இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும். மேலும் அது நிறைவேறாமல் இருக்கிறது என்றால் மரணத்தின் பயம் இருக்கும். நீங்களோ அனைத்துக் காரியங்களையும் முடித்து விட்டு தயாராக இருக்கிறீர்கள். இந்த பழைய ஆடையை விட்டு விட்டு தயாராக இருக்கிறீர்கள் இல்லையா? எனவே பயம் இல்லை. மேலும் யாரெல்லாம் பயபீதி அடைந்திருக்கும் ஆத்மாக்களோ அவர்களையும் சக்திசாலி ஆக்கக் கூடிய, துக்கமான காலத்தில் சுகம் கொடுக்கும் ஆத்மாக்கள் இல்லையா. நீங்கள் சுகவள்ளலின் குழந்தைகள். எப்படி இருளில் நெருப்பு இருக்கிறது என்றால் வெளிச்சமாகி விடுகிறது. அதே போல் துக்கமான சூழ்நிலையில் சுகம் கொடுக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள். அப்படியானால் சுகம் கொடுப்பதற்கான சிரேஷ்ட பாவனை எப்பொழுதும்

இருக்கிறதா? எப்பொழுதும் சுகம் கொடுக்க வேண்டும், அமைதி கொடுக்க வேண்டும். நீங்கள் சாந்தியின் வள்ளலின் குழந்தைகள் சாந்தி தேவர்கள். அப்படியானால் சாந்தி கொடுப்பவர்கள் யார்? தனியாக தந்தை மட்டும் இல்லை, நீங்கள் அனைவரும் தான். எனவே சாந்தி கொடுக்கக் கூடிய சாந்தி தேவா -சாந்தி கொடுக்கும் காரியத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. நீங்கள் என்ன சேவை செய்கிறீர்கள் என்று மக்கள் கேட்கிறார்கள். அதற்கு நீங்கள் இந்த நேரம் எந்த விசேஷமான விஷயத்திற்கு தேவையாக இருக்கிறதோ அந்தக் காரியத்தை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறுங்கள். நல்லது, மற்றவர்கள் துணியும் கொடுப்பார்கள், உணவும் கொடுப்பார்கள், ஆனால் அனைத்தையும் விட அவசியமானது சாந்தி. அப்படி அனைவருக்காகவும் என்ன தேவையாக இருக்கிறதோ அதை நாங்கள் கொடுக்கிறோம், இதை விட பெரிய சேவை வேறு என்ன இருக்கிறது! மனம் அமைதியாக இருக்கிறது என்றால் செல்வமும் உபயோகத்தில் வருகிறது. மனம் அமைதியில்லை என்றால், செல்வத்தின் சக்தியும் தொந்தரவு கொடுக்கும். இப்பொழுது அந்த மாதிரி சாந்தியின் சக்திசாலி அலைகளைப் பரப்புங்கள், அதன் காரணமாக முழு தேசத்தில் இது தான் சாந்தியின் ஸ்தானம் என்று அனைவரும் அனுபவம் செய்யட்டும். ஒவ்வொரு வரிடமிருந்து கேட்டு, அனுபவம் செய்வதற்காக இரண்டு நிமிடம் செல்வதினால் கூட இங்கு மிகுந்த அமைதி கிடைக்கிறது என்று அந்த மாதிரி செய்தியை பரப்பட்டும். சாந்தி கிடைக்குமிடம் இந்த சேவை ஸ்தானம் தான் என்ற செய்தி பரவ வேண்டும். எவ்வளவு தான் அமைதியற்ற ஆத்மாவாக இருந்தாலும், எப்படி நோயாளி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்து விடுகிறார் அதே போல் அமைதியற்ற நேரத்தில் இந்த சாந்தியின் ஸ்தானத்திற்குத் தான் செல்ல வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு, அவரிடமிருந்து இன்னொருவருக்கு என்று அப்படி பரவிக் கொண்டே இருக்கும். யார் அமைதியற்று இருக்கிறார்களோ அவர்களை பிரத்யேகமாக அழைத்தும் சாந்தியின் அனுபவத்தை செய்வியுங்கள். யாரெல்லாம் தொடர்பில் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கும் இங்கு வந்து சாந்தியின் அனுபவம் செய்யுங்கள் என்ற செய்தியை அனுப்புங்கள். பஞ்சாபை சேர்ந்தவர்களுக்கு விசேஷமாக இந்த சேவை செய்ய வேண்டும். இப்பொழுது இந்த செய்தியை நாலாபுறங்களிலும் பரப்புவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏதாவது ஒரு ஸ்தானம் வேண்டும்

என்று அங்கிங்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அது எந்த இடம் என்ற அறிமுகம் இல்லை, தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு இடத்திற்குச் சென்ற பிறகு இது அந்த இடம் இல்லை என்று புரிந்து கொள்கிறார்கள். அந்த மாதிரி அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு இப்பொழுது உங்களால் சகஜமான புகலிடம் கொடுக்க முடியாதா? அந்த மாதிரி சேவை செய்யுங்கள். குழப்பமாக இருந்தாலும், என்னவாக இருந்தாலும் சரி தொடர்பிலோ வருகிறீர்கள் தான் இல்லையா? தொடர்பில் உள்ளவர்களுக்கு அனுபவம் செய்வித்தீர்கள் என்றால் அந்த மாதிரி ஆத்மாக்கள் செய்தியை பரப்பு வார்கள். அவர்களுக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரமாவது யோக பயிற்சி முகாம் வையுங்கள். ஒருவேளை கொஞ்சமாவது அமைதியின் அனுபவம் செய்து விட்டார் என்றால் மிகவும் குஷி அடைவார், நன்றி கூறுவார். நான் செய்ய வேண்டும் என்று எப்பொழுது லட்சியம் இருக்குமோ அப்பொழுது வழியும் கிடைத்து விடும். எனவே அந்த மாதிரி பெயரை புகழடையச் செய்து காண்பியுங்கள். எந்த அளவு பஞ்சாபின் நிலம் உறுதியானதாக இருக்கிறதோ அந்த அளவு மென்மையானதாகவும் ஆக்க முடியும்.

2) எப்பொழுதும் தன்னை ஃபரிஷ்தா அதாவது டபுள் லைட்டாக அனுபவம் செய்கிறீர்களா? இந்த சங்கமயுகத்தின் இறுதி சொரூபம் ஃபரிஷ்தா தான் இல்லையா? பிராமண வாழ்க்கையின் பிராப்தியே ஃபரிஷ்தா வாழ்க்கை. ஃபரிஷ்தா என்றால் யாருக்கு எந்த தேகத்தின் மேலும், தேகத்தின் சம்மந்தத்தின் மேலும் ரிஷ்தா (உறவு) இல்லையோ அவர் தான். தேகம் மற்றும் தேகத்தின் சம்மந்தம் இப்படி அனைவரிடமிருந்தும் உறவு முடிவடைந்து விட்டதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் மாட்டிக் கொண்டிருக்கிறதா? ஒருவேளை கொஞ்சமாவது சூட்சும பற்றுதலின் கயிறு இருக்கிறது என்றால் பறக்க முடியாது. கீழே வந்து விடுவீர்கள். எனவே ஃபரிஷ்தா என்றால் எந்தவொரு பழைய உறவும் இல்லாமலிருப்பது. எப்பொழுது வாழ்க்கையே புதியது என்றால் அனைத்தும் புதியதாக இருக்கும். எண்ணம் புதியது, சம்மந்தம் புதியது, செய்யும் தொழில் புதியது. அனைத்தும் புதியதாக இருக்கும். இப்பொழுது பழைய வாழ்க்கை கனவில் கூட நினைவில் வர முடியாது. ஒருவேளை கொஞ்சமாவது தேக உணர்வில் வருகிறீர்கள் என்றால், உறவு இருக்கிறது என்பதாகும். அதனால் தான் தேக உணர்வில் வருகிறீர்கள்.

ஒருவேளை உறவு இல்லை என்றால் புத்தி செல்ல முடியாது. உலகத்தில் இத்தனை ஆத்மாக்கள் இருக்கிறார்கள் அவர்களோடு உறவு இல்லை என்றால் நினைவு வருவது இல்லை தான் இல்லையா. யாருடன் உறவு இருக்கிறதோ அவர் நினைவு வருகிறது. எனவே தேகத்தின் உணர்வு வருவது என்றால் தேகத்தின் உறவு இருக்கிறது என்பதாகும். ஒருவேளை கொஞ்சமாவது தேகத்தின் மேல் பற்றுதல் இருக்கிறது என்றால் எப்படி மேலே செல்வீர்கள். சுமையான பொருளை எவ்வளவு தான் மேலே வீசினாலும் கீழே வந்து விடும். அப்படி ஃபரிஷ்தா என்றால் லேசான எந்த சுமையும் இல்லாதவர். மர்ஜீவா (உடலிலிருந்து இறந்து மறுபிறவியில் வாழ்வது) ஆவது என்றால் சுமையிலிருந்த விடுபடுவது. ஒருவேளை கொஞ்சமாவது இன்னும் ஏதாவது இருந்து விட்டது என்றால் மிக விரைவாக அதை அழித்து விடுங்கள். இல்லை என்றால் எப்பொழுது நேரத்தின் விசில் ஊதப்படுமோ அப்பொழுது அனைவரும் மேலே பறந்து செல்வார்கள். மேலும் சுமை உள்ளவர் கீழேயே இருந்து விடுவார். சுமையுள்ளவர்கள் பறப்பவர்களை பார்ப்பவர்களாகி விடுவார்கள். ஏதாவது சூட்சும கயிறுகளும் இருந்து விடவில்லையே என்று சோதனை செய்யுங்கள். புரிந்ததா? நான் பந்தனமற்ற ஃபரிஷ்தா ஆத்மா, பந்தனத்திலிருந்து விடுபட்ட ஆத்மா என்ற இன்றைய விசேஷ வரதானத்தை நினைவில் வையுங்கள். ஃபரிஷ்தா என்ற வார்த்தையை ஒருபொழுதும் மறக்காதீர்கள். ஃபரிஷ்தா என்று நினைப்பதினால் மேலே பறந்து விடுவீர்கள். வரமளிக்கும் வள்ளலின் வரதானத்தை நினைவு வைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் அனைத்தும் நிறைந்தவர் ஆகி விடுவீர்கள்.

3) எப்பொழுதும் தன்னை அமைதியின் செய்தி கொடுக்கும் செய்தியாளர் என்று நினைக்கிறீர்களா? பிராமண வாழ்க்கையின் காரியமே செய்தி கொடுப்பது. எப்பொழுதாவது இந்தக் காரியத்தை மறப்பதில்லையே? சிரேஷ்ட ஆத்மா என்னுடைய சிரேஷ்ட காரியமாக என்ன இருக்கிறதோ அதை எந்த அளவு நான் செய்திருக்கிறேன் என்று தினசரி சோதனை செய்யுங்கள். எத்தனை பேருக்கு செய்தி கொடுத்தேன்? எத்தனை பேருக்கு அமைதியின் தானம் கொடுத்தேன்? என்று சோதித்துப் பாருங்கள். நீங்கள் செய்தி கொடுக்கும் பெரும் வள்ளல், வரமளிக்கும் ஆத்மாக்கள். உங்களுக்கு எத்தனை பட்டங்கள் இருக்கின்றன? இன்றைய உலகத்தில் எவ்வளவு தான் மிகப் பெரிய பட்டங்கள் இருந்தாலும், உங்கள்

எதிரில் அவை அனைத்தும் சிறியவை. அங்கு பட்டம் கொடுப்பவர்கள் ஆத்மாக்கள் ஆனால் குழந்தைகள் உங்களுக்கு பட்டம் கொடுப்பவர் சுயம் தந்தை. தன்னுடைய பல விதமான பட்டங்களை நினைவில் வைத்து அதே குஷி, அதே சேவையில் எப்பொழுதும் இருங்கள். பட்டங்களின் நினைவு மூலம் சேவை இயல்பாகவே நினைவில் வரும். நல்லது.

**வரதானம்: ஒருமித்த நிலையின் சக்தி மூலம் அடிமைத்தன நிலையை பரிவர்த்தனை செய்யும் அதிகாரி ஆத்மா ஆகுக!**

பிராமணன் என்றால் அதிகாரி ஆத்மா அவர் ஒருபொழுதும் எவருடைய / எதனுடைய அடிமையாக ஆக முடியாது. தன்னுடைய பலஹீனமான சுபாவம், சம்ஸ்காரத்தின் வசமும் ஆக முடியாது. ஏனென்றால் சுபாவம் என்றால் தனக்காகவும் மற்றும் அனைவர்களுக்காகவும் ஆத்மீக உணர்வு இருக்கிறது என்றால் பலஹீனமான சுபாவத்தின் வசம் ஆக முடியாது. மேலும் அனாதி, ஆதி சம்ஸ்காரங்களின் நினைவின் மூலம் பலஹீனமான சம்ஸ்காரமும் சுலபமாக பரிவர்த்தனை ஆகி விடுகிறது. ஒருமித்த நிலையின் சக்தி அடிமைத்தனத்தின் நிலையை பரிவர்த்தனை செய்து எஜமானத்தன்மையின் நிலையின் ஆசனத்தில் அமர வைத்து விடுகிறது.

**சுலோகன்: கோபம் ஞான சொரூப ஆத்மாவை பொறுத்தளவில் மிகப் பெரிய எதிரி!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 22.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசித்திர தந்தையின் மூலமாக விசித்திர படிப்பு மற்றும் விசித்திர பிராப்தி!

இன்று ஆன்மீகத் தந்தை தன்னுடைய ஆன்மீகக் குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். ஆன்மீக தந்தை, ஒவ்வொருவரிடமும் எந்தளவு ஆன்மீக சக்தி நிரம்பியிருக்கிறது என்று ஒவ்வொரு ஆத்மாவையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு ஆத்மாவும் எந்தளவு குஷியின் சொரூபம் ஆகியிருக்கிறார். ஆன்மீக தந்தை அழியாத குஷியின் பொக்கிஷத்தை குழந்தைகளுக்கு பிறப்புரிமையாகக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொருவரும் தன்னுடைய ஆஸ்தியை, அதிகார உரிமையை வாழ்க்கையில் எந்தளவு பிராப்தி செய்திருக்கிறார். குழந்தையாக இருப்பவர் பொக்கிஷங்களின் அதிபதியாக ஆகியிருக்கிறாரா என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தை வள்ளல், அனைத்து குழந்தைகளுக்கும் முழுமையான அதிகாரத்தைக் கொடுக்கிறார், ஆனால் ஒவ்வொரு குழந்தையும் அவரவர்களின் தாரணையின் சக்திக்கு ஏற்றப்படி அதிகாரி ஆகுகிறார்கள். தந்தைக்கோ அனைத்து குழந்தைகளுக்காக ஒவ்வொரு ஆத்மா என்ற குழந்தை எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பி அனேக ஜென்மங்களுக்காக சம்பூர்ண ஆஸ்தியின் அதிகாரி ஆகி விடவேண்டும் என்ற ஒரே நல்ல எண்ணம் தான் இருக்கிறது. அந்த மாதிரி பிராப்தி செய்வதின் ஊக்கம், உற்சாகத்தில் இருக்கும் குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொரு சிறிய - பெரிய குழந்தை, வாலிபர் மற்றும் வயோதிகர், இனிமையான தாய்மார்கள், படித்திருந்தாலும் சரி, படிக்காவிட்டாலும், உடலால் பலமற்று இருந்தாலும், சரி ஆத்மாக்கள் எவ்வளவு பலம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள்! ஒரு பரமாத்மா மேல் உள்ள அன்பு எவ்வளவு இருக்கிறது! நான் பரமாத்மாவை தெரிந்து கொண்டேன் என்றால், அனைத்தையும் தெரிந்து கொண்டேன்

என்ற அனுபவம் இருக்கிறது. பாப்தாதாவும் அந்த மாதிரி அனுபவி ஆத்மாக்களுக்கு - ஹே முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கும் குழந்தைகளே! எப்பொழுதும் நினைவு செய்வதில் நீடுழி வாழ்க! எப்பொழுதும் சுகம் சாந்தியின் பிராப்தியில் வளர்ந்து கொண்டேயிருங்கள், அழியாத குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டேயிருங்கள். மேலும் உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்கள் என்ற தனது ஆன்மீக சகோதர களுக்கு சுகம் சாந்தியை அடைவதற்காக சகஜ வழியைக் கூறி, அவர்களையும் ஆன்மீகத் தந்தையின் ஆன்மீக ஆஸ்திக்கு உரியவர் ஆக்குங்கள் என்ற வரதானத்தைத் தான் கொடுக்கிறார். நாம் அனைத்து ஆத்மாக்களும் ஒரு தந்தையின் குழந்தைகள், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே வீட்டைச் சேர்ந்தவர்கள், ஒரே உலக நாடக மேடையில் வாழ்க்கை என்ற பாகத்தை ஏற்று நடிக்கும் நடிகர்கள் என்ற இந்த ஒரு பாடத்தை அனைவருக்கும் கற்பியுங்கள். அனைத்து ஆத்மாக்களாகிய நமக்கு ஒரே இயற்கையான குணம் அமைதி மற்றும் தூய்மை. இதே பாடத்தின் மூலம் சுயபரிவர்த்தனை மற்றும் உலக பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கிறீர்கள், மேலும் நிச்சயம் அது நடக்கும் அவ்வளவு தான்! சுலபமான விஷயம் தான் இல்லையா? கடினம் இல்லையே? படிப்பறிவு இல்லாதவர்கள் கூட இந்த பாடத்தின் ஞானம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறார்கள்,. ஏனென்றால் படைப்பவர் விதையைத் தெரிந்து, படைப்பவர் மூலமாக படைப்பை இயல்பாகவே தெரிந்து விடுகிறார்கள். அனைவரும் ஞானம் நிறைந்தவர் தான் இல்லையா? முழு படைப்பை படைத்தவர் மற்றும் படைப்பின் மூன்று வார்த்தைகளை மட்டும் படித்து விட்டீர்கள். ஆத்மா, பரமாத்மா மற்றும் படைப்பு சக்கரம். இந்த மூன்று வார்த்தைகளினால் என்னவாக ஆகி விட்டீர்கள், என்ன சான்றிதழ் கிடைத்திருக்கிறது? பி.ஏ., எம்.ஏ-ன் சான்றிதழ் கிடைக்கவில்லை, ஆனால் திரிகாலதரிசி (மூன்று காலங்களை தெரிந்தவர்), ஞானம் சொரூபம் என்ற இந்த பட்டம் கிடைத்திருக்கிறது தான் இல்லையா? மேலும் வருமானத்திற்கான ஆதாரமாக என்ன உள்ளது? என்ன கிடைத்திருக்கிறது? சத்தியமான ஆசிரியர் மூலமாக பல ஜென்மங்களுக்கு அழியாத அனைத்து பிராப்திகளின் உத்திரவாதம் கிடைத்திருக்கிறது. பொதுவாக எப்பொழுதும் சம்பாதித்துக் கொண்டே இருப்பாய்! செல்வந்தனாக இருப்பாய்! என்று ஆசிரியர் உத்திரவாதம் கொடுப்பதில்லை. அவரோ கற்பித்து, தகுதியானவர் ஆக்கி விடுவார். குழந்தைகள் உங்களுக்கு அல்லது இறை மாணவர்களுக்கு தந்தை

# 1984 அவ்யக்த முரளி

ஆசிரியர் மூலமாக தற்சமயத்தின் ஆதாரத்தில் 21-ஜென்மங்கள் சத்யுகம் திரேதாயுகத்தில் நிரந்தர சுகம், சாந்தி, செல்வம், ஆனந்தம், அன்பு நிறைந்த பரிவாரம் கண்டிப்பாக கிடைக்கும். கிடைக்கும் என்பதில்லை, கண்டிப்பாகக் கிடைக்கும். இந்த உத்திரவாதம் இருக்கிறது, ஏனென்றால் அழியாத தந்தை, அழியாத ஆசிரியர். எனவே அழியாதவர் மூலமாகக் கிடைக்கும் பிராப்தியும் அழியாதது. எனவே நான் சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர் மூலமாக அனைத்து பிராப்தியின் அதிகாரத்தை (உரிமை) அடைந்துவிட்டேன் என்ற இந்த குஷி நிறைந்த பாடலைப் பாடிக் கொண்டேயிருங்கள். இதைத் தான் விசித்திர தந்தை, விசித்திரமானவர்கள் மேலும் விசித்திர படைப்பு, விசித்திர பிராப்தி என்று கூறுவது. யாராவது எவ்வளவு தான் படித்தவராக இருந்தாலும், இந்த விசித்திர தந்தையின் மற்றும் ஆசிரியரின் படிப்பு மற்றும் ஆஸ்தியை தெரிந்து கொள்ள முடியாது. படங்களை வரையவும் முடியாது. எப்படி தெரிந்து கொள்ள முடியும். இவ்வளவு பெரிய உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை, ஆசிரியர் மேலும் எங்கே கற்பிக்கிறார், மேலும் யாருக்குக் கற்பிக்கிறார். எவ்வளவு சாதரணமாக இருக்கிறார். மனிதனை தேவதை ஆக்கும், சதா காலத்திற்கும் சரித்திரவானாக ஆக்கும் படிப்பு மேலும் படிப்பவர்கள் யார்? யாருக்கு வேறு யாரும் கற்பிக்க முடியாதோ, அவர்களுக்கு தந்தை கற்பிக்கிறார். யாருக்கு உலகம் கற்பிக்க முடியுமோ, தந்தையும் அவர்களுக்கு கற்பிக்கிறார் என்றால், அது என்ன பெரிய விஷயம். நம்பிக்கையற்ற ஆத்மாக்களைத் தான் நம்பிக்கைக்குரியவராக ஆக்குகிறார். அசம்பவத்தை சம்பவம் ஆக்குகிறார், எனவே தான் உன்னுடைய காரியம், நீ கூறும் வழியை நீ மட்டும் அறிவாய்! உனக்குத் தான் தெரியும் என்று வர்ணித்து இருக்கிறார்கள். பாப்தாதாவும் நம்பிக்கையற்றவர்களிலிருந்து நம்பிக்கைக்குரியவர் ஆகும், அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். வாருங்கள், வாருங்கள் தந்தையின் வீட்டின் அலங்காரமே, வருக! வருக!. என வரவேற்கிறார். நல்லது.

எப்பொழுதும் தன்னை சிரேஷ்ட பிராப்தியின் அதிகாரி என்று அனுபவம் செய்யும், சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, ஒரு ஜென்மத்தில் அனேக ஜென்மங்களின் பிராப்தியை சேமிக்கக் கூடிய ஞான சொரூப குழந்தை களுக்கு, எப்பொழுதும் ஒரு பாடத்தை படிக்கும் மற்றும் கற்பிக்கும் சிரேஷ்ட குழந்தைகளுக்கு, எப்பொழுதும் வரம் அளிக்கும் வள்ளல்

தந்தையின் வரதானங்களில் வளர்ந்து கொண்டிருக்கும் பாக்கியவான் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் சமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 24.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்சமய பிராமண ஜென்மம் வைரத்திற்குச் சமமானது!

இன்று பாப்தாதா தன்னுடைய மிக உயர்ந்த குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். உலகில் தாழ்ந்த தூய்மையற்ற ஆத்மாக்களின் மத்தியில் இவர்கள் எவ்வளவு சிரேஷ்ட ஆத்மாக்கள். உலகத்தில் அனைத்து ஆத்மாக்களும் இறைவனை அழைத்துக் கொண்டிருப்பவர்கள், அங்கும் இங்கும் அலைந்துக் கொண்டிருப்பவர்கள், பிராப்தி இல்லாத ஆத்மாக்கள் அழியக் கூடிய அனைத்து பிராப்திகள் எவ்வளவு தான் இருந்தாலும், ஏதாவது பிராப்தியற்ற தன்மை அவசியம் இருக்கும். பிராமண குழந்தைகளாகிய உங்களுக்கு அனைத்து பிராப்திகளின் வள்ளலின் குழந்தைகளுக்கு, கிடைக்காதது என்று ஒருபொருளும் கிடையாது. நீங்கள் எப்பொழுதும் பிராப்தி சொரூபமானவர்கள். அற்ப காலத்தின் சுகத்தின் சாதனம், அற்ப காலத்தின் வைபவங்கள், அற்ப காலத்தின் இராஜ்ய அதிகாரம் இல்லாவிட்டாலும் ஒரு பைசா இல்லாத மகாராஜாக்கள். கவலை இல்லாத இராஜாக்கள். மாயாவை வென்ற, இயற்கையை வென்ற சுயராஜ்ய அதிகாரிகள். நீங்கள் எப்பொழுதும் ஈஸ்வரிய வளர்ப்பில் வளரக் கூடிய, குஷியின் ஊஞ்சலில், அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடக் கூடியவர்கள் அழியும் செல்வத்திற்குப் பதிலாக அழியாத செல்வத்தின் அதிபதிகள். இரத்தினம் பதித்த கீரிடம் இல்லை, ஆனால் தந்தை பரமாத்மாவின் தலையின் கீரிடமாக இருக்கிறீர்கள். இரத்தினம் பதித்த அலங்காரம் இல்லை, ஆனால் ஞான இரத்தினங்கள், குணங்கள் என்ற இரத்தினங்களின் அலங்காரத்தினால் எப்பொழுதும் அலகரிக்கப் பட்டவர்கள். எவ்வளவு தான் பெரிய அழியக் கூடிய மிக உயர்ந்த வைரமாக இருந்தாலும், மிக மதிப்புள்ளதாக இருந்தாலும், ஆனால் ஒரு ஞானத்தின் இரத்தினம், குணத்தின் இரத்தினத்தின் மத்தியில் அதனுடைய மதிப்பு என்ன இருக்கிறது? இந்த இரத்தினங்கள் எதிரில் அதுவோ கல்லுக்குச் சமமானது ஏனென்றால் அழியக் கூடியது. 9-லட்ச மாலையின் எதிரிலும் சுயம் நீங்கள் தந்தையின்

கழுத்தின் மாலை ஆகி விட்டீர்கள். பிரபுவின் கழுத்தின் மாலையின் எதிரில் 9-லட்சம் என்று கூறினாலும் அல்லது 9-கோடி என்று கூறினாலும் அல்லது எண்ணிலடங்காத கோடிக்கணக்கான மாலை ஒன்றுமில்லை. 36-வகையான போஜனமும் இந்த பிரம்மா போஜனத்திற்கு எதிரில் ஒன்றுமில்லை. ஏனென்றால் நேரடியாக பாப்தாதாவிற்கு போக் சமர்ப்பித்து இந்த போஜனத்தை பரமாத்மாவின் பிரசாதமாக ஆக்கி விடுகிறீர்கள். இந்தக் கடைசி ஜென்மத்தில் கூட பக்த ஆத்மாக்களிடம் பிரசாதத்திற்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது? நீங்கள் சாதாரண போஜனத்தை அருந்தவில்லை, பிரபுவின் பிரசாத்தை அருந்துகிறீர்கள் அதன் ஒவ்வொரு துளியும் பல கோடியை விட உயர்ந்தது. நீங்கள் அந்த மாதிரி மிக உயர்ந்த ஆத்மாக்கள். அந்த மாதிரி ஆன்மீக சிரேஷ்ட போதை இருக்கிறதா? நடைமுறையில் காலபோக்கில் தன்னுடைய சிரேஷ்ட தன்மையை மறந்து விடுவதில்லையே? தன்னை சாதாரணமாக நினைக்கவில்லையே? கேட்பவர் அல்லது சொல்பவராக மட்டும் இல்லாமல், சுயமரியாதை உள்ளவராக ஆகியிருக்கிறீர்களா? கேட்கும் மற்றும் சொல்பவர்களோ, அனேகர் இருக்கிறார்கள். சுய மரியாதையில் இருப்பவர்கள் கோடியில் சிலர் இதில் நீங்கள் யார்? அனேகர்களில் இருக்கிறீர்களா அல்லது கோடியில் சிலராக இருக்கிறீர்களா? பிராப்தியின் நேரத்தில் அலட்சியம் ஆனவராக ஆவது, இந்தமாதிரியானவர்களை பாப்தாதா எந்த மாதிரி புத்தியுள்ள குழந்தைகள் என்று கூறுவார்? அடைந்திருக்கும் பாக்கியத்தை, கிடைத்திருக்கும் பாக்கியத்தை அனுபவம் செய்யவில்லையென்றால், இப்பொழுது மகான் பாக்கியவனாக ஆகவில்லை என்றால், எப்பொழுது ஆவீர்கள் இந்த சிரேஷ்ட பிராப்தியின் சங்கமயுகத்தில் ஒவ்வொரு அடியிலும், இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை என்ற சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். புரிந்ததா? நல்லது.

இப்பொழுது குஜராத் மண்டலம் வந்திருக்கிறது. குஜராத்தின் விசேஷம் என்ன? குஜராத்தில் சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் அவசியம் நடனமாடுவார்கள். இதுதான் அதனுடைய விசேஷம் தன்னுடைய சிறு வயது பருவத்தை உடல் பருமனை அனைத்தையும் மறந்து விடுவார்கள். நடனத்தின் ஆர்வத்தில் மூழ்கி விடுவார்கள். முழு இரவு கூட நடனமாடிக் கொண்டேயிருப்பார்கள். எப்படி நடனமாடும் ஆர்வத்தில்

முழ்கியிருக்கிறீர்கள், அதேபோல் எப்பொழுதும் ஞானத்தின் குஷியின் நடனமாடுவதிலும் முழ்கியிருக்கிறீர்கள் தான் இல்லையா. இந்த அழியாத ஆர்வத்தில் முழ்கியிருப்பதிலும் நம்பர் ஒன் பயிற்சி உள்ளவர்கள் தான் இல்லையா? விஸ்தாரமும் நன்றாக ஆகியிருக்கிறது. இந்த தடவை முக்கிய ஸ்தானம் மதுபனிற்கு அருகில் உள்ள துணையான இரண்டு மண்டலமும் வந்திருக்கிறீர்கள். ஒரு பக்கம் குஜராத், இன்னொரு பக்கம் இராஜஸ்தான். இரண்டும் அருகில் இருக்கின்றன இல்லையா? அனைத்து காரியத்தின் சம்மந்தமும் இராஜஸ்தான் மற்றும் குஜராத்துடன் இருக்கிறது. எனவே நாடகத்தின் அனுசாரம் இரண்டு ஸ்தானக்களுக்கும் சக யோகி ஆவதற்கான பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இருவரும் ஒவ்வொரு காரியத்திலும் அருகில் இருப்பவர்களாக மற்றும் சகயோகியாக ஆகியிருக்கிறார்கள். சங்கமயுகத்தின் சுயராஜ்யத்தின் இராஜ்ய சிம்மாசனமோ இராஜஸ்தானில் இருக்கிறது இல்லையா? எத்தனை இராஜாக்களை தயார் செய்திருக்கிறீர்கள்? இராஜஸ்தானில் இராஜாக்களை மிகவும் மகிமை செய்திருக்கிறார்கள். எனவே இராஜக்கள் தயார் ஆகி விட்டார்களா அல்லது ஆகிக் கொண்டு இருக்கிறார்களா? இராஜஸ்தானில் இராஜாக்களின் குதிரை சவாரி ஊர்வலம் இருக்கும். அப்படி இராஜஸ்தானைச் சேர்ந்தவர்களுக்கு அந்த மாதிரி முழுமையான சவாரியை தயார் செய்து கொண்டுவரவேண்டும். அப்பொழுது தான் அனைவரும் மலரால் மழை பொழிவார்கள் இல்லையா? மிகவும் கம்பீரத்துடன் சவாரியில் வருவார்கள். அந்த மாதிரி எத்தனை இராஜாக்களின் சவாரி வரும். குறைந்தது எங்கெல்லாம் சேவை நிலையங்கள் இருக்கின்றனவோ, அங்கிருந்து ஒவ்வொரு இராஜா வந்தால் கூட எத்தனை இராஜக்கள் ஆகி விடுவார்கள். 25 ஸ்தானங்களிலிருந்து 25 இராஜாக்கள் வந்தார்கள் என்றால் சவாரி அழகானதாக ஆகி விடும் இல்லையா? நாடகத்தின் அனுசாரம் இராஜஸ்தானில் தான் சேவையின் ஆசனம் உருவாகியிருக்கிறது. அப்படி இராஜஸ்தானிற்கும் விசேஷ பங்கு இருக்கிறது. இராஜஸ்தானில் இருந்துதான் விசேஷ சேவையின் குதிரைகள் உருவானர்கள் இல்லையா? நாடகத்தில் பங்கு இருக்கிறது. அதை மீண்டும் அப்படியே செய்ய மட்டும் வேண்டும்.

கர்நாடகாவும் மிக நன்றாக விஸ்தாரம் ஆகி விட்டது. இப்பொழுது கர்நாடகாவைச் சேர்ந்தவர்களுக்கு விஸ்தாரத்திலிருந்து வெளியில்

வரவேண்டும். எப்பொழுது கடைந்து வெண்ணெய் எடுக்கிறார்கள் என்றால், முதலில் விஸ்தாரமாக இருக்கும், பிறகு அதிலிருந்து சாரமாக உருவாகும். எனவே கர்நாடகாவிற்கும் இப்பொழுது விஸ்தாரத்திலிருந்து வெண்ணெய் எடுக்க வேண்டும். சார சொரூபம் ஆகவேண்டும் மற்றும் ஆக்க வேண்டும். நல்லது.

தன்னுடைய சிரேஷ்ட சுய கௌவரத்தில் நிலைத்திருக்கக் கூடிய, அனைத்து பிராப்திகளின் களஞ்சியம் எப்பொழுதும் சங்கமயுகத்தின் சிரேஷ்ட சுயராஜ்யம் மற்றும் மகான் பாக்கியத்தின் அதிகாரி ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் ஆன்மீக போதை மற்றும் குஷி சொரூப ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** அனைவரும் தன்னை சுயராஜ்ய அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? சுயராஜ்யத்தின் அதிகாரம் கிடைத்து விட்டதா? அந்த மாதிரி அதிகாரி ஆத்மாக்கள் சக்திசாலியாக இருப்பார்கள் இல்லையா? இராஜ்யம் செய்வதை சக்தி என்று கூறப் படுகிறது. இன்றைய நாட்களின் அரசாங்கத்தையும் ஆட்சி சக்தியில் உள்ள கட்சி என்று கூறுவார்கள். அப்படி இராஜ்யம் செய்வது என்றால் சக்தி அப்படியானால் சுயராஜ்யம் எவ்வளவு பெரிய சக்தி? அந்த மாதிரி சக்தி பிராப்தி ஆகியிருக்கிறதா? அனைத்து கர்மேயந்திரியங்களும் உங்களுடைய சக்திக்கு ஏற்றப்படி காரியம் செய்து கொண்டிருக்கின்றனவா? இராஜா எப்பொழுதும் தன்னுடைய இராஜ்ய சபையை கூட்டி எப்படி இராஜ்யம் இராஜ்ய தர்பாரை நடந்துக் கொண்டிருக்கிறது என்று கேட்கிறாரா? உங்களுடைய சுயராஜ்ய அதிகாரி இராஜாக்களின் காரிய நடவடிக்கைகள் நன்றாக நடந்து கொண்டிருக்கிறதா? அல்லது எங்காவது மேலே கீழே போகிறதா எப்போதாவது ஏதாவது இராஜ்யத்தின் காரியம் செய்பவர் ஏமாற்றத்தைக் கொடுப்பதில்லையே? சில நேரம் கண் ஏமாற்றுகிறது. சில நேரம் காது ஏமாற்றுகிறது. சில நேரம் கை, கால்கள் என்று அப்படி ஏமாற்றுப்பட்டுக் கொண்டே இருக்கவில்லையே. ஒருவேளை இராஜ்ய சக்தி சரியாக இருக்கிறது என்றால், ஒவ்வொரு வினாடி, ஒவ்வொரு எண்ணத்தில் பல கோடியின் வருமானம் இருக்கிறது. ஒருவேளை ராஜ்யசக்தி சரியில்லையென்றால், ஒவ்வொரு வினாடியிலும் பல கோடியின் நஷ்டம் ஏற்படுகிறது. பிராப்தி இருக்கிறது என்றாலும், ஒன்றுக்கு பல கோடி

மடங்கு மேலும் இழக்கிறீர்கள் என்றால், ஒன்றுக்கு பலகோடி மடங்கு இழக்கிறீர்கள். எவ்வளவு கிடைக்கிறதோ, அந்தளவு சென்று விடவும் செய்கிறது. இது ஒரு கணக்கு. எனவே முழு நாளின் ராஜ்ய நடவடிக்கைகளைப் பாருங்கள். கண் என்ற மந்திரி சரியாக வேலை செய்கிறாரா? காது என்ற மந்திரி சரியாக வேலை செய்கிறாரா? அனைவரின் இலாக்களும் சரியாக இருந்ததா. அல்லது இல்லையா? இதை சோதனை செய்கிறீர்களா அல்லது களைப்படைந்து தூங்கி விடுகிறீர்களா?

பொதுவாக காரியம் செய்வதற்கு முன்பாகவே சோதனைசெய்து பிறகு காரியம் செய்ய வேண்டும். முதலில் யோசிக்க வேண்டும். பிறகு செய்ய வேண்டும். முதலில் செய்வது, பிறகு யோசிப்பது என்று அப்படியிருக்கக் கூடாது முழு முடிவையும் பார்ப்பது வேறு விஷயம் ஆனால் ஞானி ஆத்மா முதலில் யோசிப்பார், பிறகு செய்வார். அந்த மாதிரி யோசித்து புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா? நீங்கள் முதலில் யோசிப்பவர்களா அல்லது பின்னால் யோசிப்பீர்களா? ஒருவேளை ஞானி பின்னால் யோசிக்கிறார் என்றால் அவரை ஞானி என்று கூறமாட்டோம். எனவே நீங்கள் எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள். மேலும் இதே சுயராஜ்யத்தின் அதிகாரம் மூலம் உலக இராஜ்யத்தின் அதிகாரியாகவும் ஆகவே வேண்டும். ஆவேனா அல்லது இல்லையா என்ற கேள்வியே இல்லை. சுயராஜ்யம் இருக்கிறது என்றால் விஷ்வ இராஜ்யமும் கண்டிப்பாக இருக்கிறது. சுயராஜ்யத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லைதான் இல்லையா? துவாபர் யுகத்தில் இருந்தே பிரச்சனையுள்ள இடங்களில் சுற்றி சுற்றியே வந்திருக்கிறீகள். இப்பொழுது பிரச்சனையுள்ள இடங்களிலிருந்து வெளிப்பட்டு வந்துவிட்டீர்கள், இப்பொழுது பின்பு ஒருபொழுதும் எந்த விதமான பிரச்சனையுள்ள இடங்களில் கால் வைக்காதீர்கள். இது அந்த மாதிரி பிரச்சனையுள்ள இடங்கள் - ஒரு தடவை கால் வைத்தீர்கள் என்றால், வெளியில் வர தெரியாமல் மறக்க வைக்கும் விளையாட்டு பிறகு வெளியேறுவது கடினமாகி விடும் எனவே எப்பொழுதும் ஒரே வழி, ஒரே வழியில் பிரச்சனை இருக்காது. ஒரே வழியில் செல்பவர் எப்பொழுதும் குஷியாகவும், எப்பொழுதும் திருப்தியாகவும் இருப்பார்.

**பெங்களூர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** எந்த ஸ்தானத்தில் மேலும் என்ன அனுபவம் செய்துக் கொண்டிருக்கிறீர்கள்? அனுபவம் அனைத்தையும் விட மிகப் பெரிய அமுதல் அனுபவம் ஆத்மா அபிமானி ஆவதாகும். எப்பொழுது ஆத்ம அபிமானியின் அனுபவம் ஆகிறது என்றால், பரமாத்மாவின் அன்பு, பரமாத்மா பிராப்தியின் அனுபவமும் இயல்பாகவே ஆகி விடுகிறது எந்தளவு அனுபவம் இருக்குமோ, அந்தளவு சக்திசாலி ஆகி விடுகிறார். நீங்கள் பல ஜென்மங்களில் துக்கங்களிலிருந்து விடுவிப்பதற்கான தீர்ப்பு கூறுபவர் தான் இல்லையா? அல்லது ஒரு ஜென்மத்தின் துக்கங்களிலிருந்து விடுவிக்கும் நீதிபதியா? அவர்களோ உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி இது ஆன்மீக நீதிமன்றம், இந்த நீதிபதி ஆவதற்கு படிப்பதற்கும் மற்றும் நேரத்திற்கும் அவசியம் இல்லை ஆத்மா மற்றும் பரமாத்மா என்ற இரண்டு வார்த்தைகளைப் படிக்க வேண்டும் அவ்வளவு தான் இதன் அனுபவி ஆகி விட்டீர்கள் என்றால், ஆன்மீக நீதிபதி ஆகி விட்டீர்கள். எப்படி தந்தை பல ஜென்மங்களிலிருந்து துக்கங்களிலிருந்து விடுவிப்பவர், எனவே தந்தையை சுகம் கொடுக்கும் வள்ளல் என்று கூறுகின்றோம் எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள்! இரட்டை நீதிபதி ஆவதினால், அனேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்வதற்கான பொறுப்பாளர் ஆகி விடுவீர்கள். ஒரு வழக்குக்காக வருவார் மேலும் பல ஜென்மக்களின் வழக்கில் வெற்றியடைந்து செல்வார். மிகவும் குஷி அடைவார். எனவே உங்களுக்கு தந்தையின் கட்டளை ஆன்மீக நீதிபதி ஆகுங்கள் என்பதே நல்லது. ஓம்சாந்தி.

**வரதானம்: சர்வ சக்திவான் தந்தையை இணைந்த ரூபத்தில் உடன் துணையாக வைத்துக் கொள்ளும் வெற்றியடைபவர் ஆகுங்கள்!**

எந்தக் குழந்தைகளுடன் சர்வசக்திவான் தந்தை இணைந்திருக்கிறாரோ, அவருக்கு சர்வ சக்திகள் மீது அதிகாரம் இருக்கிறது. மேலும் எங்கு சர்வ சக்திகளும் இருக்கிறதோ, அங்கு வெற்றி இல்லை என்பது அசம்பவம். ஒருவேளை எப்பொழுதும் தந்தையுடன் இணைந்திருப்பதில் குறை இருக்கிறது என்றால், வெற்றியும் குறைவாகவே இருக்கும் எப்பொழுதும் துணைவனாக இருந்து நடந்து கொள்ளும் அழியாத துணைவனை இணைந்த ரூபத்தில் வைத்தீர்கள் என்றால் வெற்றி பிறப்புரிமை ஆகி

விடும், ஏனென்றால் வெற்றி மாஸ்டர் சர்வ சக்திவானின் முன்னுக்கு பின்னுக்கு சுற்றுகிறது.

**சுலோகன்: யார் விகாரங்கள் என்ற அசுத்தத்தைத் தீண்டுவது கூட இல்லையோ, அவர் தான் உண்மையான வைஷ்ணவன்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 26.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக விசித்திர மேளாவில் (சந்திப்பில்) அனைத்து பொக்கிஷங்களின் பிராப்தி!

இன்று பாப்தாதா, சந்திக்க வேண்டும் என்று குழந்தைகளிடமிருக்கும் ஆர்வத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் தொலைதூரத்திலிருந்து எதற்காக வந்திருக்கிறீர்கள்? சந்திப்பதற்காக அதாவது மேளாவில் வந்திருக்கிறீர்கள். இந்த ஆன்மீக மேளா விசித்திர மேளா, இந்த மேளாவில் சந்திப்பதும் விசித்திரமானது. விசித்திர (உடலற்ற) ஆத்மாக்கள், விசித்திர தந்தையை சந்திக்கிறார்கள். இது கடல் மற்றும் நதிகளின் சந்திப்பு. ஈஸ்வரிய குடும்பத்தினர் சந்திப்பதற்கான மேளா. இந்த ஒரு தடவையின் சந்திப்பினால் அனேக தடவைகள் அனைத்து பிராப்திகளையும் செய்வதற்கான மேளாவாக ஆகி விடுகிறது. இந்த மேளாவில் திறந்த களஞ்சியம், திறந்த பொக்கிஷங்கள் கிடைக்கின்றன. யாருக்கு என்ன பொக்கிஷம் வேண்டுமோ, எவ்வளவு வேண்டுமோ அந்த அளவு செலவின்றி அதிகாரத்துடன் எடுத்துக் கொள்ள முடியும். இது லாட்டரியும் கூடத் தான். எந்த அளவு பாக்கியத்தில் சிரேஷ்ட லாட்டரியைப் பெற விரும்புகிறீர்களோ அந்தளவு பெற முடியும். இப்பொழுது லாட்டரி சீட்டை வாங்கிக் கொள்ளுங்கள். பிறகு பின்னால் நம்பர் வெளியாகும் என்று அப்படியில்லை. இப்பொழுது என்ன பெற விரும்புகிறீர்களோ, எந்த அளவு பாக்கிய ரேகையை உறுதியான எண்ணம் மூலம் போட விரும்புகிறீர்களோ அந்தளவு போட முடியும். ஒரு விநாடியில் லாட்டரியைப் பெற முடியும். இந்த மேளாவில் பல ஜென்மங்களுக்காக இராஜ பதவியின் அதிகாரத்தை பெற முடியும். அதாவது இந்த மேளாவில் இராஜயோகியாக இருப்பவர் வரும் பல ஜென்மங்களுக்கு விஷ்வ இராஜா ஆக முடியும். எவ்வளவு பெரிய பிராப்தியின் ஆசனத்தை விரும்புகிறீர்களோ அந்த ஆசனத்திற்கு முன் பதிவு செய்ய முடியும். இந்த மேளாவில் அனைவருக்கும் விசேஷமாக ஒரு

பொன்னான வாய்ப்பும் கிடைக்கிறது. அந்த பொன்னான வாய்ப்பு 'உள்ளப்பூர்வமாக என்னுடைய பாபா என்று கூறுங்கள். மேலும் தந்தையின் இதயசிம்மாசனதாரி ஆகுங்கள்'. இந்த மேளாவில் ஒரு விசேஷ பரிசும் கிடைக்கிறது. அந்தப் பரிசு 'சின்னஞ்சிறிய, சுகம் நிறைந்த மற்றும் சம்பன்ன உலகம்'. அந்த உலகத்தில் என்ன விரும்புகிறீர்களோ அது எப்பொழுதுமே பிராப்தி ஆகிறது. அந்த சின்னஞ்சிறு உலகம், தந்தையில் தான் அந்த உலகம் இருக்கிறது. இந்த உலகத்தில் இருப்பவர்கள் எப்பொழுதுமே பிராப்திகளின், குஷிகளின் ஆன்மீக ஊஞ்சலில் ஆடுகிறார்கள். இந்த உலகத்தில் இருப்பவர்கள் எப்பொழுதும் இந்த தேகம் என்ற மண்ணால் அழுக்காகாமல் ஃபரிஷ்தா ஆகி, மேலே பறந்து செல்லும் கலையில் பறந்து கொண்டே இருப்பார்கள். எப்பொழுதும் இரத்தினங்களுடன் விளையாடுகிறார்கள், எப்பொழுதும் பரமாத்மாவின் துணையை அனுபவம் செய்கிறார்கள். உன்னோடு தான் அருந்துவேன், நீ சொல்வதைத் தான் கேட்பேன், உன்னோடு தான் பேசுவேன், உன்னோடு தான் அனைத்து உறவுகளின் அன்பை வைத்து நடந்து கொள்வேன், உன்னுடைய ஸ்ரீமத்படி, கட்டளைப்படி ஒவ்வொரு அடியையும் எடுத்து வைப்பேன்....' என்ற ஊக்கம் உற்சாகம் நிறைந்த, குஷி நிறைந்த பாடலைப் பாடிக் கொண்டே இருப்பார்கள். அந்த மாதிரியான உலகம் இந்த சந்திப்பு மேளாவில் கிடைக்கிறது. தந்தை கிடைத்தார். உலகம் கிடைத்தது அந்த மாதிரி இது சிரேஷ்ட மேளா. அந்த மாதிரி மேளாவில் வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? மேளாவைப் பார்த்து பார்த்து ஒரே ஒரு பிராப்தியில் அந்த அளவு மூழ்கி விடுகிறீர்கள், அதனால் அனைத்து பிராப்திகளையும் அடையாமல் இருந்து விட்டன என்று அப்படியும் ஆகி விட வேண்டாம். இந்த ஆன்மீக மேளாவில் அனைத்து பிராப்திகளையும் அடைய வேண்டும். நிறைய கிடைத்திருக்கிறது என்று அதிலேயே குஷி அடைந்து சென்று விட்டேன் என்று அப்படிச் செய்யாதீர்கள். முழுமையாக அடைந்து விட்டுச் செல்லுங்கள். இந்த மேளாவில் அனைத்து பிராப்திகளையும் பிராப்தி செய்திருக்கிறேனா என்று இப்பொழுது கூட சோதனை செய்யுங்கள். எப்பொழுது திறந்த கஜானாவாக இருக்கிறது என்றால் நிரம்பியவராகித் தான் செல்ல வேண்டும். பிறகு அங்கே உங்கள் இடத்திற்குச் சென்ற பிறகு இதையும் செய்ய வேண்டியதாக இருந்தது, எவ்வளவு தேவையோ அந்த அளவு செய்யவில்லை என்று கூறாதீர்கள். அந்த மாதிரி கூற மாட்டீர்கள் இல்லையா? இந்த மேளாவின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டீர்களா?

மேளா கொண்டாடுவது என்றால் மகான் ஆவது. வந்து போவது மட்டுமில்லை, ஆனால் நிரம்பிய பிராப்தி சொரூபம் ஆக வேண்டும். அந்த மாதிரி மேளாவைக் கொண்டாடினீர்களா? பொறுப்பாளராக இருக்கும் சேவாதாரிகள் என்ன நினைக்கிறீர்கள்? வளர்ச்சி விதியையும் மாற்றி விடுகிறது. வளர்ச்சி ஆவதும் அவசியம் மேலும் ஒவ்வொரு விதியில் சம்பன்னமாகவும் திருப்தியாக இருப்பதும் அவசியம். இப்பொழுதோ இருந்தும் தந்தை மற்றும் குழந்தைகள் என்ற சம்மந்தத்தில் சந்திக்கிறீர்கள். அருகில் வருகிறீர்கள். பின்போ தரிசனம் செய்தோம் என்று மட்டும் இருந்து விடும். நல்லது.

அனைத்து ஆன்மீக சந்திப்பு மேளாவை கொண்டாடக்கூடிய, அனைத்து பிராப்திகளின் சம்பூர்ண அதிகாரத்தை பெறக்கூடிய, எப்பொழுதும் சுகம் நிறைந்த சம்பன்ன உலகத்தில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் பிராப்திகளின் குஷியின் பாடல் பாடக்கூடிய, எப்பொழுதும் சிரேஷ்ட வழிப்படி நடந்து கொள்ளும், கட்டளைப்படி நடக்கும் நல்ல பாத்திரமான குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** எப்பொழுதும் நீங்கள் நினைவு மற்றும் சேவையின் சமநிலை வைப்பவர்கள். மேலும் எப்பொழுதும் தந்தையின் ஆசீர்வாதங்களைப் பெறுபவர்கள். எங்கு சமநிலை இருக்குமோ அங்கு தந்தை மூலமாக இயல்பாகவே ஆசீர்வாதம் என்ன வரதானமே பிராப்தியாகிறது. எங்கு சமநிலை இல்லையோ அங்கு வரதானமும் இல்லை. மேலும் எங்கு வரதானம் இல்லையோ அங்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும். வரதானம் பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறது என்றால், அனைத்து பிராப்திகளும் சகஜமாக ஆகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் அந்த மாதிரி வரதானங்களை பிராப்தி செய்யும் சேவாதாரி தான் இல்லையா? எப்பொழுதும் ஒரு தந்தை, ஒரே சீரான நிலை மற்றும் ஒரு வழியில் நடப்பவர்களாகி இருக்கிறீர்கள் இல்லையா? அந்த மாதிரியான உண்மையான சேவாதாரி, எப்பொழுதும் தன்னை டபுள் லைட் என்று புரிந்து சேவை செய்து கொண்டே இருங்கள். எவ்வளவு லேசாக இருப்பீர்களோ அந்த அளவு சேவையில் சுமையற்ற நிலை இருக்கும். மேலும் எவ்வளவு சேவையில் லேசான நிலை வருமோ அந்த அளவு அனைவரும் சுலபமாகவே பறந்து செல்வார்கள், மற்றவர்களையும் பறக்க வைப்பார்கள். டபுள் லைட் ஆகி சேவை

செய்வது, நினைவில் இருந்து சேவை செய்வது என்பது தான் வெற்றிக்கான ஆதாரம். அந்த சேவையின் பிரத்யக்ஷ பலன் அவசியம் கிடைக்கிறது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சங்கமயுகம் எப்பொழுதும் அனைத்து பிராப்திகள் செய்வதற்கான யுகம். சங்கமயுகம் சிரேஷ்டமாக ஆவதற்கும், ஆக்குவதற்குமான யுகம். அந்த மாதிரி யுகத்தில் தனது பங்கை செய்யக்கூடிய ஆத்மாக்கள் எவ்வளவு சிரேஷ்டமாக ஆகி விட்டார்கள். அப்படியானால் நான் சங்கமயுகத்தின் சிரேஷ்ட ஆத்மா என்று எப்பொழுதும் நினைவு இருக்கிறதா? அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆகிறதா? தந்தையிடமிருந்து என்ன பிராப்தி ஆகிறதோ அந்த பிராப்தியின் ஆதாரத்தில் சதா தன்னை சம்பன்னமான நிரம்பிய ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அந்த அளவு நிரம்பியிருக்க வேண்டும் அதன் மூலம் நீங்களும் அருந்திக் கொண்டே இருங்கள். மேலும் மற்றவர்களுக்கும் கொடுங்கள். எப்படி தந்தையைப் பற்றி களஞ்சியம் எப்பொழுதும் நிரம்பியே இருக்கிறது என்று கூறுவார்கள். அதே போல் குழந்தைகள் உங்களுடைய களஞ்சியமும் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது. ஒருபொழுதும் காலியாக முடியாது. எந்த அளவு மற்றவர்களுக்கு கொடுப்பீர்களோ அந்த அளவு இன்னும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். சங்கமயுகத்தின் விசேஷமாக என்ன இருக்கிறதோ அது உங்களுடைய விசேஷமாகவும் இருக்கிறது. நாம் சங்கமயுகத்தின் அனைத்து பிராப்தி சொரூப ஆத்மா என்ற இதே நினைவில் இருங்கள். சங்கமயுகம் புருஷோத்தம யுகம் இந்த யுகத்தில் தனது வாழ்க்கை பங்கை செய்பவர்களும் புருஷோத்தமர்கள் ஆனார்கள் இல்லையா? உலகத்தின் அனைத்து ஆத்மாக்களும் உங்களின் எதிரே சாதாரணமானவர்கள். நீங்கள் தெய்வீகமான மற்றும் விலகியிருக்கும் ஆத்மாக்கள். அவர்கள் அஞ்ஞானி, நீங்கள் ஞானி. அவர்கள் சூத்திரர்கள், நீங்கள் பிராமணர்கள். அவர்கள் துக்கமான உலகத்தைச் சேர்ந்தவர்கள் மேலும் நீங்கள் சங்கமயுகத்தைச் சேர்ந்தவர்கள். சங்கமயுகமும் சுகமான உலகம். எத்தனை துக்கங்களிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டீர்கள். இப்பொழுது இந்த உலகம் எவ்வளவு துக்கமானது என்று சாட்சியாக இருந்து பார்க்கிறீர்கள். அதை ஒப்பிடும் போது நீங்கள் எவ்வளவு சுகமானவர்கள். வித்தியாசம் தெரிகிறது தான் இல்லையா? எனவே எப்பொழுதும் நான் புருஷோத்தம யுகத்தின் புருஷோத்தம ஆத்மா, சுகசொரூப சிரேஷ்ட

ஆத்மா என்ற இதே நினைவில் இருங்கள். ஒருவேளை சுகமில்லை, உயர்ந்த தன்மை இல்லை என்றால் அது வாழ்க்கை இல்லை.

எப்பொழுதும் நினைவின் குஷியில் இருக்கிறீர்கள் தான் இல்லையா? குஷி தான் அனைத்தையும் விட மிகப் பெரிய ஆசீர்வாதம் மற்றும் மருந்து. எப்பொழுதும் இந்த குஷியின் மருந்து மற்றும் ஆசீர்வாதத்தை எடுத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், எப்பொழுதும் குஷியாக இருக்கும் காரணத்தினால் உடலின் கணக்கு வழக்கும் தன் பக்கம் இழுக்காது. விலகி இருந்து மேலும் அன்பானவராகி, உடலின் கணக்கு வழக்கையும் முடிப்பீர்கள். எவ்வளவு தான் பெரிய கர்ம விளைவை அனுபவிப்பதாக இருந்தாலும், அதுவும் ஈட்டியிலிருந்து முள்ளாக ஆகி விடும். பெரிய விஷயமாக அனுபவம் ஆகாது. இது கணக்கு வழக்கு என்று ஞானத்தின் ஆதாரத்தில் தெரிந்து கொண்டதினால் மிகவும் குஷியோடு கணக்கு வழக்கை முடிப்பவர்களுக்கு அனைத்தும் சுலபமாகி விடுகிறது. அஞ்ஞானி ஐயோ! ஐயோ! என்று கதறுவார். மேலும் ஞானி எப்பொழுதும் ஆஹா இனிமையான பாபா, ஆஹா, நாடகம் என்ற நினைவில் இருப்பார். எப்பொழுதும் குஷியின் பாடலைப் பாடுங்கள். நான் வாழ்க்கையில் என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன் என்ற இதை மட்டும் நினைவு செய்யுங்கள். என்ன பிராப்தி தேவையாக இருந்ததோ அவை அனைத்தும் கிடைத்து விட்டது. அனைத்து பிராப்திகளின் நிரம்பிய களஞ்சியம். எங்கு எப்பொழுதும் களஞ்சியம் நிரம்பி இருக்குமோ அங்கு துக்கம் வேதனை அனைத்தும் முடிவடைந்து விடும். எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தை பார்த்து ஆஹா. என்னுடைய சிரேஷ்ட பாக்கியமே! என்று மகிழ்ச்சி அடைந்து கொண்டே இருங்கள். எப்பொழுதும் மனதால் இந்தப் பாடலை பாடிக் கொண்டே இருங்கள். உங்களுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம் இருக்கிறது. உலகத்தினருக்கோ பாக்கியத்தில் குழந்தை கிடைக்கும், பணம், செல்வம் கிடைக்கும் ஆனால் இங்கு என்ன கிடைக்கிறது? சுயம் பாக்கியத்தை உருவாக்குபவரே பாக்கியத்தில் கிடைத்து விடுகிறார். பாக்கியத்தை உருவாக்குபவரே என்னுடையவராக எப்பொழுது ஆகி விடுகிறார் என்றால் வேறு என்ன மிச்சம் இருக்கிறது. இந்த அனுபவம் இருக்கிறது இல்லையா? அங்கிங்கு இருந்து கேள்விப்பட்டதின் ஆதாரத்தில் மட்டும் நீங்கள் இந்த வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கவில்லை. பெரியவர்கள் பாக்கியம் கிடைக்கிறது என்று கூறினார்கள். மேலும் நீங்கள் இந்த வாழ்க்கையில்

வந்து விட்டீர்கள் என்பதைத் தான் அங்கு இங்கிருந்து கேள்விப்பட்டதின் ஆதாரத்தில் செல்வது என்று கூறுவது. கேட்பதினால் புரிந்து கொள்கிறீர்களா அல்லது அனுபவத்தினால் புரிந்து கொள்கிறீர்களா? அனைவரும் அனுபவிகளா? சங்கமயுகமே அனுபவம் செய்வதற்கான யுகம், இந்த யுகத்தில் அனைத்து பிராப்திக்கான அனுபவம் செய்ய முடியும். இப்பொழுது என்ன அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களோ அது சத்யுகத்தில் இருக்காது. இங்கு என்ன நினைவு இருக்கிறதோ அது சத்யுகத்தில் உள்ளடங்கிப் போய் விடும். இங்கு தந்தை கிடைத்திருக்கிறார் என்று அனுபவம் செய்கிறீர்கள், அங்கு தந்தையின் விஷயமே இருக்காது. சங்கமயுமே அனுபவம் செய்வதற்கான யுகம். இந்த யுகத்தில் நீங்கள் அனைவரும் அனுபவிகள் ஆகி விட்டீர்கள். அனுபவி ஆத்மாக்கள் ஒருபொழுதும் மாயாவிடம் ஏமாற்றம் அடைய முடியாது. ஏமாற்றம் அடைபவர்களுக்கு துக்கம் ஏற்படுகிறது. அனுபவத்தின் அதிகாரம் உள்ளவர்கள் ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய முடியாது. எப்பொழுதுமே வெற்றியை பிராப்தி செய்து கொண்டே இருப்பார்கள். எப்பொழுதும் குஷியாக இருப்பார்கள். எனவே தற்சமயத்து சீசனின் வரதானமான - 'அனைத்து பிராப்தி சொரூப திருப்தியான ஆத்மா, அனைவரையும் திருப்தி படுத்துபவன்' என்பதை நினைவில் வையுங்கள். நல்லது.

**பாப்தாதாவின் எதிரில் வருமான வரி அதிகாரி அமர்ந்திருக்கிறார், அவருக்காக கூறப்பட்ட இனிமையான மகாவாக்கியங்கள்:**
தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறேன் என்று புரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா? இந்த வீடு யாருடையது? பரமாத்மாவின் வீடு என்பது அனைவரின் வீடாக ஆனது இல்லையா? அப்படி உங்களுடைய வீடாகவும் ஆனது இல்லையா? வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள், இதுவோ மிக நல்ல காரியம் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது இன்னும் வேறு நல்லதிலும் நல்ல காரியம் என்ன செய்ய வேண்டும்? சிறந்ததிலும் சிறந்ததாகச் செய்ய வேண்டும். மேலும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆக வேண்டும் - இதுவோ வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கவே இருக்கிறது. இப்பொழுது நல்லதிலும் நல்லதாக என்ன செய்ய வேண்டும்? என்ன பாடத்தை இப்பொழுது கூறினோமோ அந்த ஒரு பாடத்தை மட்டும் உறுதியாக்கி விட்டீர்கள் என்றால் இந்த ஒரு பாடத்தில் அனைத்து படிப்புகளும் நிரம்பியிருக்கிறது. இது அதிசயமான விஷ்வ

வித்தியாலயம், பார்ப்பதற்கு வீடாகவும் இருக்கிறது ஆனால் தந்தை தான் சத்தியமான ஆசிரியர். வீடாகவும் இருக்கிறது மேலும் வித்தியாலயமாகவும் இருக்கிறது, எனவே சிலர் இது வீடா அல்லது வித்தியாலயமா என்று புரிந்து கொள்ள முடிவதில்லை ஆனால் வீடாகவும் இருக்கிறது. மேலும் வித்தியாலயமாகவும் இருக்கிறது. ஏனென்றால் எது அனைத்தையும் விட உயர்ந்த பாடமோ அது இங்கு படிப்பிக்கப்படுகிறது. கல்லூரியில் மற்றும் பள்ளியில் கற்பிப்பதற்கான லட்சியமாக என்ன இருக்கும்? சரித்திரவான் ஆக வேண்டும், சம்பாதிப்பதற்கு தகுதியானவர் ஆக வேண்டும். பரிவாரத்தை நல்ல முறையில் பாலனை செய்பவராக ஆக வேண்டும் என்ற இந்த லட்சியம் தான் இருக்கும் இல்லையா? இங்கே அந்த அனைத்து இலட்சியமும் நிறைவேறியே விடுகிறது. ஒவ்வொரு வரும் சரித்திரவான் ஆகி விடுகிறார்கள்.

பாரத தேசத்தின் தலைவர்கள் என்ன விரும்புகிறார்கள்? பாரதத்தின் பாபுஜி (மகாத்மா காந்திஜி) என்ன விரும்பினார்? பாரதம் கலங்கரை விளக்கு ஆக வேண்டும் என்ற இதைத் தான் விரும்பினார் இல்லையா. பாரதம் உலகத்தின் ஆத்மீக சக்திக்கான கேந்திரம் ஆக வேண்டும் என்றும் விரும்பினார். அதே காரியங்கள் இங்கு குப்த ரூபத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை ஒருவராவது ராம் சீதைக்கு சமமாக ஆகி விட்டார் என்றால் ஒரு ராம் சீதையின் காரணமாக ராம் இராஜ்யம் ஏற்பட்டது மேலும் அனைவரும் ராம் சீதைக்கு சமமாக ஆகி விட்டார்கள் என்றால் என்ன ஆகி விடும்? இந்த பாடம் கடினமானதில்லை, மிகவும் சுலபமானது. இந்தப் பாடத்தைப் படித்து உறுதியாக்கினீர்கள் என்றால் நீங்களும் சத்திய ஆசிரியர் மூலமாக ஆன்மீக சான்றிதழும் பெறுவீர்கள். மேலும் வருமானத்திற்கான ஆதாரத்திற்கு உத்திரவாதமும் பெற்றுக் கொள்வீர்கள். மற்றபடி அவசியம் அதிசயமானது. தாத்தாவும், தாத்தாவின் தந்தையும் இங்கே தான் படிக்கிறார்கள் என்றால் பேரன்களும், கொள்ளுப் பேரன்களும் இங்கே தான் படிக்கிறார்கள். ஒரே வகுப்பில் இருவர்களுமே படிக்கிறார்கள். ஏனென்றால் இங்கு ஆத்மாக்களுக்கு கற்பிக்கப்படுகிறது. உடலைப் பார்ப்பதில்லை. ஆத்மாவிற்கு கற்பிக்கப்படுகிறது. 5 வயது குழந்தையாக இருந்தாலும் கூட அவரும் இந்தப் பாடத்தை படிக்க முடியும் இல்லையா? மேலும் குழந்தை அதிக காரியம் செய்ய முடியும். மேலும் யார் வயோதிகர் ஆகி விட்டாரோ அவர்களுக்கும் இந்தப் பாடம் மிக அவசியம், இல்லை என்றால் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து விடுவார்கள்.

படிக்காத மாதர்களுக்கும் உயர்ந்த வாழ்க்கை வேண்டும் இல்லையா. எனவே சத்தியமான ஆசிரியர் அனைவருக்கும் படிப்பிக்கிறார். அப்படியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? பாடத்தை படிப்பீர்கள் தான் இல்லையா? உங்களுக்குத் தான் லாபமாக இருக்கும். யார் செய்வார்களோ அவர்கள் அடைவார்கள். எவ்வளவு செய்வார்களோ அந்த அளவு லாபம் இருக்கும். ஏனென்றால் இங்கு ஒன்றிற்கு பல கோடி மடங்கு பலனாக கிடைக்கிறது. அங்கு (வெளியுலகில்) அழியக்கூடியதில் அந்த மாதிரியில்லை. அழியாத படிப்பில் ஒன்றிற்கு பல மடங்கு ஆகி விடுகிறது. ஏனென்றால் வள்ளல் இல்லையா. நல்லது.

**இராஜஸ்தான் மண்டலத்தோடு பாப்தாதாவின் சந்திப்பு:**

இராஜஸ்தான் மண்டலத்தின் விசேஷம் என்ன? இராஜஸ்தானில் தான் தலைமையகம் இருக்கிறது. எப்படி மண்டலத்திற்கு விசேஷம் இருக்கிறதோ அதே போல் இராஜஸ்தான் நிவாசிகளுக்கும் விசேஷம் இருக்கும் இல்லையா. இப்பொழுது ஏதாவது விசேஷ வைரம் உருவாக வேண்டும் அல்லது நீங்களே விசேஷ வைரமா? நீங்களோ அனைவரையும் விட விசேஷமானவரே தான் ஆனால் சேவையின் ஷேத்திரத்தில், உலகத்தின் பார்வையில் யார் விசேஷமாக இருக்கிறாரோ அவரையும் சேவைக்கு பொறுப்பாளர் ஆக்க வேண்டும். அந்த மாதிரி சேவை செய்திருக்கிறீர்களா? இராஜஸ்தானோ அனைவரையும் விட நம்பர் ஒன் ஆக இருக்க வேண்டும். எண்ணிக்கையில், தரத்தில், சேவையின் விசேஷத்தில் அப்படி அனைத்திலும் நம்பர் ஒன். தலைமையகமோ நம்பர் ஒன்னே தான் ஆனால் அதனுடைய பிரபாவம் முழு இராஜஸ்தானிலும் இருக்க வேண்டும். இப்பொழுது நம்பர் ஒன் எண்ணிக்கையில் மகாராஷ்ட்டிரா, குஜராத்தை கூறுகிறார்கள். இப்பொழுது அனைவரையும் விட நம்பர் ஒன் இராஜஸ்தான் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது இந்த வருடம் அதற்கான ஏற்பாடு செய்யுங்கள். அடுத்த வருடம் மகாராஷ்ட்டிரா மற்றும் குஜராத்தையும் விட நம்பர் ஒன்னில் செல்ல வேண்டும். நிச்சயபுத்தி உடையவர்கள் வெற்றி அடைவார்கள். எத்தனை நல்ல நல்ல அனுபவி இரத்தினங்கள் இருக்கிறார்கள். சேவையை முன்னேற்றி வளரச் செய்தீர்கள் என்றால் அது அவசியம் வளர்ச்சி அடையும். நல்லது.

## 1984 அவ்யக்த முரளி

**வரதானம்: பகவான் மற்றும் பாக்கியத்தின் நினைவின் மூலம் மற்றவர்களுக்கும் பாக்கியத்தை உருவாக்கக்கூடிய குஷி நிறைந்த அதிர்ஷ்டம் மிக்கவர் ஆகுக!**

அமிர்தவேளையிலிருந்து இரவு வரை தன்னுடைய பல விதமான பாக்கியத்தை நினைவில் கொண்டு வாருங்கள். மேலும் ஆஹா, என்னுடைய சிரேஷ்ட பாக்கியமே! என்ற இதே பாடலை பாடிக் கொண்டே இருங்கள். யார் பகவான் மற்றும் பாக்கியத்தின் நினைவில் இருக்கிறார்களோ அவர்கள் தான் மற்றவர்களை பாக்கியவான் ஆக்க முடியும். பிராமணன் என்றாலே எப்பொழுதும் பாக்கியவான், எப்பொழுதும் அதிர்ஷ்டம் நிறைந்தவர். பிராமண ஆத்மாவின் குஷியைக் குறைப்பதற்கு யாருக்கும் தைரியம் கிடையாது. நீங்கள் ஒவ்வொருவரும் குஷி நிறைந்தவர்கள், அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். பிராமண வாழ்க்கையில் குஷி இல்லாமல் ஆவது அசம்பவம். உடலே சென்று விட்டாலும் குஷி செல்ல முடியாது.

**சுலோகன்: மாயாவின் ஊஞ்சலை விட்டு விட்டு அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 29.04.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞான சூரியனின் ஆன்மீக நட்சத்திரங்களின் விதவிதமான விசேஷங்கள்!

இன்று ஞான சூரியன், ஞான சந்திரன் தங்களுடைய பலவிதமான நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் அன்பான நட்சத்திரங்கள், சிலர் விசேஷ சகயோகி நட்சத்திரங்கள், சிலர் சகஜயோகி நட்சத்திரங்கள், சிலர் சிரேஷ்ட ஞானி நட்சத்திரங்கள், சிலர் விசேஷமாக சேவைக்கான ஊக்கம் வைத்திருக்கும் நட்சத்திரங்கள். சிலர் கடின உழைப்பின் பலன் என்ற பழத்தை அருந்தும் நட்சத்திரங்கள், சிலர் சுலபமாக வெற்றியடையும் நட்சத்திரங்கள் அந்த மாதிரி அனைத்து நட்சத்திரங்களும் விதவிதமான விசேஷங்கள் உள்ளவர்கள். ஞான சூரியன் மூலமாக அனைத்து நட்சத்திரங்களுக்கும் ஆன்மீக ஒளி கிடைக்கும் காரணத்தினால் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாகவோ ஆகி விட்டார்கள் ஆனால் ஒவ்வொரு விதமான நட்சத்திரங் களின் விசேஷத்தின் ஜொலிப்பு விதவிதமானது. எப்படி ஸ்தூல நட்சத்திரங்கள் பலவிதமான கிரகத்தின் ரூபத்தில் அற்ப காலத்திற்காக பலவிதமான பலனை பிராப்தி செய்விக்கிறது. அதே போல் ஞான சூரியனின் ஆன்மீக நட்சத்திரங்களுக்கும் அனைத்து ஆத்மாக்களுக்கும் அழியாத பிராப்தியின் சம்மந்தம் இருக்கிறது. எப்படி சுயம் அவரே எந்த விசேஷத்தில் சம்பன்னமாக இருக்கும் நட்சத்திரமாக இருக்கிறோ, அதே போல் மற்றவர்களுக்கும் அதன் பிரகாரம் பலனை பிராப்தி செய்விப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறார். எந்தளவு அவரே ஞான சந்திரன் மற்றும் சூரியனின் அருகில் இருக்கிறரோ அந்தளவு மற்றவர்களையும் நெறுக்கமான சம்மந்ததில் கொண்டு வருகிறார். அதாவது ஞான சூரியன் மூலமாக கிடைத்திருக்கும் விசேஷங்களின் ஆதாரத்தில் மற்றவர்களையும் விசேஷங்களின் சக்தியின் ஆதாரத்தினால் இந்தளவு நெருக்கமாகப் கொண்டு வந்திருக்கிறார்.

அதனால் அவர்களுக்கு நேரடியாக ஞான சூரியன், ஞான சந்திரனுடன் சம்மந்தம் ஏற்பட்டு விடுகிறது. நீங்கள் அந்தளவு சக்திசாலியான நட்சத்திரங்கள் தான் இல்லையா? ஒருவேளை அவரே சக்திசாலியாக இல்லை, நெருக்கத்திலும் இல்லையென்றால் நேரடியாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. தூரமாக இருப்பதற்கான காரணம் அதே நட்சத்திரங்களின் விசேஷத்தின் அனுசாரம் அவர்கள் மூலமாக எந்தளவு சக்தி, சம்மந்தம் தொடர்பை பிராப்தி செய்ய முடியுமோ, அந்தளவு சக்திக்கு ஏற்றப்படி பிராப்தி அடைந்து கொண்டிருக்கிறார்கள். நேரடியாக சக்தியைப் பெறுவதற்கான சக்தி இருப்பதில்லை, எனவே எப்படி ஞான சூரியன் உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கிறாரோ, விசேஷ நட்சத்திரங்கள் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறார்களோ, அதேபோல் உயர்ந்த நிலையின் அனுபவம் செய்ய முடியாது. சக்திக்கு ஏற்றப்படி பிராப்தி செய்கிறார்கள். எந்தளவு சக்திசாலியான நிலை இருக்க வேண்டுமோ, அதை அனுபவம் செய்வதில்லை.

அந்த மாதிரி ஆத்மாக்களின் மனதிலிருந்தும் மற்றும் வாயிலிருந்தும் என்ன நடக்க வேண்டுமோ, அது நடக்கவில்லை என்ற வார்த்தைகள் தான் வெளியாகும். இந்த மாதிரி ஆகவேண்டும், ஆனால் இன்னும் ஆகவில்லை. இதைத் தான் செய்ய வேண்டும், ஆனால் செய்ய முடியாது. இந்த நிலையைத் தான் அவரின் சக்திக்கு ஏற்றப்படி செய்யும் ஆத்மாக்கள் என்று கூறுவது. அனைத்து சக்திகளும் நிறைந்த ஆத்மாக்களாக இல்லை. அந்த மாதிரியான ஆத்மாக்கள் தனது மற்றும் பிறரது தடைகளை அழிப்பவராக ஆக முடியாது. கொஞ்சம் முன்னேறிச் செல்வார், தடை வரும், ஒரு தடையை அகற்றுவார், சற்று தைரியம் வரும், குஷி ஏற்படும். பிறகு இன்னொரு தடை வந்துவிடும். வாழ்க்கையில் முயற்சி செய்யும் இணைப்பு எப்பொழுதும் தெளிவாக இருக்காது. நிற்பது, முன்னேறிச் செல்வது இந்த விதியின் மூலம் தான் முன்னேறிச் சென்றுக் கொண்டேயிருப்பார், மேலும் மற்றவர்களுக்கும் படிப்பித்துக் கொண்டேயிருப்பார்கள். ஆக நிற்பது மேலும் முன்னேறிவதின் காரணமாக அதிவேகத்தின் அனுபவம் ஆவதில்லை. சில நேரம் நடக்கும் கலை, சில நேரம் ஏறும் கலை, சில நேரம் பறக்கும் கலை என்றிருக்குமே தவிர. ஒரே சீரான சக்திசாலியின் அனுபவம் ஆவதில்லை. சில நேரம் பிரச்சனைகள், சில நேரம் சமாதான சொரூபம், ஏனென்றால் அவரவரின் சக்தி ஏற்றப்படி செய்கிறார்கள், ஞான சூரியனிடமிருந்து அனைத்து

சக்திகளையும் கிரஹிப்பதற்கான சக்தியில்லை. இடையில் யாருடைய ஆதரவாவது அவசியம் தேவையாக இருக்கிறது. இதைத் தான் அவருடைய சக்திக்கு ஏற்றப்படி செய்யும் ஆத்மா என்று கூறுவது.

எப்படி இங்கு உயர்ந்த மலையில் ஏறுகிறீர்கள். எந்த வாகனத்தில் வந்தாலும், அது பேருந்து அல்லது சிறிய வாகனமாக இருந்தாலும் இஞ்சின் சக்திசாலியாக இருக்கிறது என்றால், அதி வேகத்துடன் எந்தவொரு தண்ணீர் அல்லது காற்றின் ஆதாரமின்றி நேரடியாகவே வந்து சேர்ந்து விடுகிறீர்கள். மேலும் ஒருவேளை இஞ்சின் பலஹீனமாக இருக்கிறதென்றால் நின்று தண்ணீர் மற்றும் காற்றின் ஆதாரத்தை எடுக்க வேண்டியதாக இருக்கும். எங்கும் நிற்காமல் வர முடியாது. நிற்க வேண்டியதாக இருக்கும். அதே போன்று அவரவர்களின் சக்திக்கு ஏற்றப்படி செய்யும் ஆத்மாக்கள் ஏதாவதொரு ஆத்மாவின் அவர் செய்யும் உதவியின் மற்றும் சாதனங்களின் ஆதாரத்தை எடுக்காமல் அதி வேகத்துடன் பறக்கும் கலையின் மூலம் இலக்கை சென்று அடைய முடியாது. சில நேரம், இன்று குஷி குறைந்து விட்டது, இன்று யோகா அந்தளவு சக்திசாலியாக இருக்கவில்லை, இன்று இந்த தாரணை செய்வதைப் புரிந்து கொண்ட போதும், பலஹீனமாக இருக்கிறேன். இன்று சேவை செய்வதின் ஊக்கம் வரவில்லை. சில நேரம் தண்ணீர் வேண்டும், சில நேரம் காற்று வேண்டும், சில நேரம் தள்ளி விட வேண்டியிருக்கும். இதை சக்திசாலி நிலை என்று சொல்வோமா? பார்க்கப்போனால் அவர் அதிகாரி தான் பெறுவதில் நம்பர் ஒன் அதிகாரி, யாரை விடவும் குறைந்தவரில்லை. மேலும் செய்ய வேண்டியபோது என்ன கூறுகிறார்? நானோ சிறியவன். நான் புதியவன், பழையவன் இல்லை, இன்னும் சம்பூரணம் ஆகவில்லை. இப்பொழுது இன்னும் நேரம் இருக்கிறது. இது பெரியவர்களின் குறை, என்னுடையது இல்லை. கற்றுக் கொண்டிருக்கிறேன், கற்றுக் கொண்டு விடுவேன். பாப்தாதாவோ அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று எப்பொழுதுமே கூறுகிறார். எனக்கும் இந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும். நான் கூறுவதையும் கேட்க வேண்டும், இப்படி கேட்டுப் பெறுவதில் நான்! ஆனால் செய்வதில் எப்படி பெரியவர்கள் செய்வார்களோ. அப்படி! அதிகாரத்தை பெறும் விஷயத்தில் இப்பொழுது உடன்! ஆனால் செய்வதில் பின்னால் எப்பொழுதாவது (எப்படியாவது) செய்து விடுவோம்! பெறுவதில் பெரியவர்கள் ஆகி விடுகிறார்கள். செய்வதில்

சிறியவர்கள் ஆகி விடுகிறார்கள். இதைத் தான் அவரவரின் சக்திக்கு ஏற்றப்படி செய்யும் ஆத்மா என்று கூறுவது.

பாப்தாதா இந்த ரமணீகரமான விளையாட்டைப் பார்த்துப் பார்த்து புன்முறுவல் செய்துக் கொண்டிருக்கிறார். தந்தையோ மிகவும் சாதுர்யமானவர் ஆனால் மாஸ்டர் சாதுர்யமானவர்களும் குறைந்தவர்கள் அல்ல! எனவே சக்திக்கு ஏற்றப்படி செய்யும் ஆத்மாவிலிருந்து இப்பொழுது மாஸ்டர் சர்வசக்திவான் ஆகுங்கள். செய்பவராக ஆகுங்கள். இயல்பாகவே சக்திசாலியான காரியத்தின் பலன், சுபபாவனை, சிரேஷ்ட விருப்பங்களின் பலன் கிடைத்து விடுகிறது. அனைத்து பிராப்திகளும் அவைகளாகவே உங்களுக்குப் பின்னால் நிழலுக்குச் சமமாக கண்டிப்பாக வரும். ஞான சூரியனிடமிருந்து பிராப்தி ஆகியிருக்கும் சக்திகளின் கிரணங்களின் பிரகாஷத்தில் மட்டும் சென்று கொண்டேயிருந்தீர்கள் என்றால், அனைத்து பிராப்தி என்ற நிழல் தனாகவே உங்கள் பின்னால் வரும். புரிந்ததா? இன்று அவரவர்களின் சக்திக்கு ஏற்றப்படி செய்யும் மற்றும் சக்திசாலி நட்சத்திரங்களின் மழைச் சாரலை பார்த்துக் கொண்டிருந்தோம். நல்லது.

அனைவரும் அதி வேகமாக ஒடி ஒடி வந்து சேர்ந்து விட்டீர்கள். தந்தையின் வீட்டிற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்றால், குழந்தைகளை வாருங்கள் வாருங்கள் என்று தான் வரவேற்போம். எப்படி எத்தனை ஸ்தானங்கள் இருக்கின்றனவோ, அவை அனைத்தும் உங்களுடைய வீடு தான். வீடோ ஒரு நாளில் அதிகரிக்காது, ஆனால் உறுபினர்களின் எண்ணிக்கையோ அதிகரித்து விட்டது தான் இல்லையா? எனவே உள்ளடக்க வேண்டும். ஸ்தானம் மற்றும் நேரத்தை எண்ணிக்கைக்கு ஏற்றப்படி தான் நடத்துவிக்க வேண்டி யிருக்கும். அனைத்தும் நிரம்பி விட்டது தான் இல்லையா? வரிசையோ அனைத்து விஷயங்களிலும் நிச்சயம் உருவாகும். இருந்தும் இப்பொழுது கூட நீங்கள் மிக மிக அதிர்ஷ்டசாலிகள். ஏனென்றால், பாண்டவ பவன் மேலும் என்னென்ன ஸ்தானங்கள் இருக்கின்றனவோ, அதனுள்ளேயே நிரம்பி விட்டீர்கள். வெளியில் வரை வரிசையோ நிற்கவில்லை தான் இல்லையா? வளர்ச்சியோ கண்டிப்பாக அடையும். வரிசையும் கண்டிப்பாக உருவாகும். எப்பொழுதும் ஒவ்வொரு விஷயத்திலும் குஷி மற்றும் மகிழ்ச்சியில் இருங்கள். இருந்தும் தந்தையின் வீட்டில் இருப்பது போல் மனதிற்கு

ஒய்வு வேறு எங்காவது கிடைக்க முடியுமா?. எனவே எந்தச் சூழ்நிலையிலும் எப்பொழுதும் திருப்தியாக இருங்கள். சங்கமயுகத்தின் வரதான பூமியின் மூன்று அடி நிலம் கூட சத்தியுகத்தின் மாளிகைகளை விட சிரேஷ்டமானது. அமருவதற்காக இந்தளவு இடம் கிடைத்திருக்கிறதே, அதுவும் சிரேஷ்டமானது. இந்த நாளும் பிற்காலத்தில் நினைவு வரும். இப்பொழுது இருந்தும் திருஷ்டி மற்றும் டோலி கிடைக்கிறது, பின்பு திருஷ்டி மற்றும் டோலியை கொடுப்பவர்களாக (நீங்கள்) ஆகவேண்டும். வளர்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறது, இதுவும் குஷியின் விஷயம் தான் இல்லையா? என்ன கிடைக்கிறதோ, எப்படி கிடைக்கிறதோ, அனைத்திலும் திருப்தியாக இருப்பது, மேலும் வளர்ச்சி அதாவது நன்மை பெறுவது. நல்லது.

விசேஷமாக கர்னாடகா தேடிக் கண்டு பிடிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மஹாராஷ்ட்ராவும் எப்பொழுதும் எண்ணிக்கையில் மகானாக இருந்ததிருக்கிறது.. டெல்லியும் பந்தயம் செய்தார்கள். வளர்ச்சி நன்றாக அடைந்து கொண்டேயிருங்கள். உத்திரபிரதேசமும் யாரையும் விட குறைந்து இல்லை. ஒவ்வொரு மண்டலத்திற்கும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது. அதை பின்பு கூறுவோம்.

பாப்தாதாவிற்கும் ஸ்தூல உடலை ஆதாரமாக எடுக்கும் காரணத்தினால், நேரத்தின் எல்லையையும் வைக்க வேண்டியதாக இருக்கிறது. இருந்தும் கடனாக பெற்ற உடல் என்னுடையதோ இல்லை, உடலுக்கான பொறுப்பும் பாப்தாதாவினுடையதாக ஆகி விடுகிறது. எனவே எல்லைக்கு அப்பாற்பட்ட எஜமானன் கூட எல்லைக்குள் கட்டிப்போடபடுகிறார். அவ்யக்த வதனமோ எல்லையற்றது. இங்கேயோ கட்டுபாடு, நேரம் மற்றும் உடலின் சக்தி அனைத்தையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எனவே எல்லையற்றதில் வாருங்கள். சந்திப்பை செய்யுங்கள். அங்கே உங்களை யாருமே இப்பொழுது வாருங்கள், இப்பொழுது செல்லுங்கள் அல்லது வரிசைக்கிரமாக வாருங்கள் என்று கூறமாட்டார்கள். திறந்த அழைப்பு இருக்கிறது, மேலும் திறந்த அதிகாரம் இருக்கிறது. விரும்பினால் 2-மணிக்கும் வாருங்கள். நல்லது.

எப்பொழுதும் அனைத்து சக்திகள் நிறைந்த சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஞான சூரியனின் அருகில் மற்றும் சமமான உயர்ந்த

நிலையில் நிலைத்திருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு காரியம் செய்யும் பொழுதும் முதலில் நான் என்ற ஊக்கம் உற்சாகம் வைக்கக் கூடிய தைரியம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைவரையும் சக்திசாலியான ஆத்மாவாக ஆக்கக் கூடிய அனைத்து நெருக்கமான குழந்தைகளுக்கு, ஞான சூரியன், ஞான சந்திரனின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன் சந்திப்பு:** பாப்தாதாவிற்கு குழந்தைகளாகிய உங்கள் மீது பெருமிதம் இருக்கிறது. எந்த விஷயத்தில் பெருமிதம் இருக்கிறது? எப்பொழுதும் தந்தை தனக்குச் சமமாக குழந்தைகளைப் பார்த்து பெருமிதம் அடைகிறார். எப்பொழுது குழந்தைகள் தந்தையையும் விட விசேஷ காரியம் செய்து காண்பிக்கிறார்கள் என்றால், தந்தைக்கு எவ்வளவு பெருமிதம் இருக்கும். இரவு பகலாக தந்தையின் நினைவு மற்றும் சேவை இந்த இரண்டின் ஈடுபாடு இருக்கிறது ஆனால் மகாவீர் குழந்தைகளின் விசேஷமே முதன்மையாக நினைவை வைப்பார்கள், பிறகு சேவையை வைப்பார்கள். குதிரைப் படை மற்றும் காலாட் படையாக இருப்பவர்கள். முதலில் சேவை பிறகு நினைவு என்று வைத்துக் கொள்வார்கள், எனவே வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது, முதலில் நினைவு பிறகு சேவை செய்தீர்கள் என்றால் வெற்றி கிடைக்கும். சேவையை முதன்மையாக வைப்பதினால், என்னென்ன நன்மை மற்றும் தீமை காரியம் நடக்கிறதோ அதனுடைய விளைவில் வந்து விடுகிறார்கள், மேலும் முதலில் நினைவை வைப்பதினால் சுலபமாகவே விலகியிருப்பவர் ஆகி விடுகிறார், அந்த மாதிரி சமமாக இருக்கும் குழந்தைகளைப் பார்த்து தந்தைக்கும் பெருமிதம் இருக்கிறது. முழு உலகத்தில் அந்த மாதிரி சமமான குழந்தைகள் யாருக்கு இருப்பார்கள்? ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தை வர்ணனை செய்தோம் என்றால், பாகவதம் ஆகி விடும். தொடக்கத்திலிருந்தே ஒவ்வொரு மகாரதியின் விசேஷத்தை வர்ணனை செய்தோம் என்றால், பாகவதம் ஆகி விடும். எப்பொழுது மதுபனில் ஞான சூரியன் மற்றும் நட்சத்திரங்கள், ஒரு குழுவாக மின்னிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், மதுபனின் ஆகாயத்தின் அழகு எவ்வளவு உயர்ந்தாக ஆகி விடும். ஞான சூரியனுடன் நட்சத்திரங்களும் அவசியம் வேண்டும்.

**தம்பதியர்களின் குரூப்புடன் பாப்தாதாவின் சந்திப்பு:** **1.** ஒருவழி என்ற தண்டவாளத்தில் செல்பவர்களோ மிக அதிக வேகமுடையவர்களாக இருப்பார்கள். இருவர்களின் வழியும் ஒன்று, இந்த ஒரு வழிதான் சக்கரங்கள். ஒரு வழியின் சக்கரத்தில் செல்பவர்கள் எப்பொழுதும் அதிக வேகத்தில் செல்பவர்களாக இருப்பார்கள். இரண்டு சக்கரங்களும் உயர்ந்தாக இருக்க வேண்டும். ஒன்று தொய்வானது வேகத்தினாலன்று இருக்காது தான் இல்லையா. இரண்டு சக்கரங்களும் ஒரே சீராக இருக்கிறது. தீவிர முயற்சி செய்வதில் பாண்டவர்கள் முதல் எண்ணில் இருக்கிறார்களா? அல்லது சக்திகள் இருக்கிறார்கள்? ஒருவர் மற்றவரை முன்னேற வைக்கிறார் என்றால், தன்னை முன்னேற்றுவது. மற்றவர்களை முன்னேற வைத்து தானே பின் தங்கி விடுகிறார் என்பது அப்படி இருக்கக் கூடாது. மற்றவர்களை முன்னேற்றுவது என்றால், தானும் முன்னேறுவது. நீங்கள் அனைவரும் அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்கள் தான் இல்லையா? டெல்லி மற்றும் மும்பை நிவாசிகள் விசேஷமாக அதிர்ஷ்டசாலிகள், ஏனென்றால் வழியில் சென்றுக் கொண்டிருக்கும் பொழுதும் மிகுந்த பொக்கிஷம் கிடைக்கிறது. விசேஷஆத்மாக்களின் தொடர்பு, அல்லது சகயோகம், அறிவுரை அனைத்தும் கிடைக்கிறது, கேட்காமலேயே கிடைத்து கொண்டிருக்கிறது என்பது வரதானம் தான். மற்றவர்கள் எவ்வளவு கடின உழைப்பு செய்கிறார்கள், முழு பிராமண வாழ்க்கையில் அல்லது சேவையின் வாழ்க்கையில் அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்கள். எங்காவது இரண்டு மூன்று தடவைகள் கூட செல்வதில்லை, ஆனால் நீங்கள் அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் உங்களிடம் சுலபமாகவே வந்து சேர்ந்து விடுகிறார். அந்த மாதிரி சேர்க்கையின் பாதிப்பு எது பிரசித்தமானதோ, அது விசேஷ ஆத்மாக்களின் சேர்க்கையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது. அந்த மாதிரி நீங்கள் எவ்வளவு சுலபமாக பாக்கியத்தை பிராப்தி அடையும் பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள். ஆஹா! என்னுடைய சிரேஷ்ட பாக்கியம்! என்ற பாடலை எப்பொழுதும் பாடிக் கொண்டேயிருங்கள். என்ன பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறதோ, அதனுடைய பலனாக எப்பொழுதும் பறக்கும் கலை இருக்கும். நிற்பது மற்றும் நடப்பதாக இருக்காது, எப்பொழுதும் பறப்பதாக இருக்கும்.

2. எப்பொழுதும் தன்னை தந்தையின் பாதுகாப்பு குடை நிழலின் கீழ் இருப்பவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? தந்தையின் நினைவு தான்

குடை நிழல். யார் குடை நிழலின் கீழ் இருப்பாரோ, அவர் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பார். எப்பொழுதாவது மழை அல்லது வெயில் இருக்கிறதென்றால், குடை நிழலின் கீழே சென்று விடுவார்கள். அந்த மாதிரி தந்தையின் நினைவு குடை நிழல். குடை நிழலின் கீழ் இருப்பவர் சுலபமாகவே மாயாவை வென்றவராக இருப்பார். நினைவை மறந்தார் என்றால், குடை நிழலிலிருந்து வெளியில் வந்துவிட்டார். எனவே தந்தையின் நினைவு எப்பொழுதும் உங்கள் கூடவே இருக்கட்டும். யார் அந்த மாதிரி குடை நிழலின் கீழ் இருப்பார்களோ, அவர்களுக்கு தந்தையின் சகயோகம் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு சக்தியின் பிராப்தியின் சகயோகம் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. அவர் ஒருபொழுதும் பலஹீனமானவராகி மாயாவிடம் தோல்வி அடைய முடியாது. எப்பொழுதாவது மாயா நினைவை மறக்க வைத்து விடவில்லையே? 63- ஜென்மங்கள் மறந்தே இருந்தீர்கள், சங்கமயுகம் நினைவில் இருப்பதற்கான யுகம். இந்த நேரம் மறக்கக் கூடாது. மறப்பதினால் வேதனை அடைந்தீர்கள், துக்கம் கிடைத்தது. பிறகு இப்பொழுது எப்படி மறப்பீர்கள். இப்பொழுது நீங்கள் எப்பொழுதுமே நினைவில் இருப்பவர்கள்.

**விடைபெறும் நேரத்தில் கூறிய மகாவாக்கியம்:** சங்கமயுகமே சந்திப்பதற்கான யுகம். எந்தளவு சந்திப்பீர்களோ, அந்தளவு இன்னும் சந்திக்க வேண்டுமென்ற ஆசை அதிகரிக்கும். மேலும் சந்திக்க வேண்டுமென்ற நல்ல ஆசை இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த சந்திப்பதற்கான நல் ஆசை தான் மாயாவை வென்றவர் ஆக்கி விடுகிறது. இந்த சந்திக்க வேண்டுமென்ற நல் எண்ணம் எப்பொழுதும் தந்தையின் நினைவை இயல்பாகவே கொண்டு வந்து விடுகிறது. இது இருக்கத் தான் வேண்டும். இது நிறைவேறி விட்டதென்றால் சங்கமயுகம் முடிவடைந்துவிடும். மற்ற அனைத்து ஆசைகளும் நிறைவேறி விட வேண்டும், ஆனால் நினைவில் எப்பொழுதும் முழ்கியிருக்க வேண்டுமென்ற நல் ஆசை முன்னேற்றத்தை செய்வித்துக் கொண்டேயிருக்கும். அப்படித் தான் இருக்கிறது இல்லையா? எனவே எப்பொழுதுமே சந்திப்பு விழா நிகழ்ந்துக் கொண்டேயிருக்கும், அது அவ்யக்தமாக இருக்கலாம், அல்லது வியக்தமாக இருக்கலாம். எப்பொழுதுமே கூடவே தான் இருக்கிறோம் பிறகு சந்திப்பதற்கான அவசியம் தான் என்ன? ஒவ்வொரு சந்திப்பிற்கும் அதனதன் சொரூபம்

மற்றும் பிராப்தி இருக்கிறது. அவ்யக்த சந்திப்பு வேறு, மற்றும் சாகார சந்திப்பு வேறு. சந்திப்பதோ நல்லதே தான். நல்லது. எப்பொழுதுமே நல்ல மற்றும் சிரேஷ்ட காலை இருக்கும். அவர்களோ குட்மார்னிங் என்று மட்டும் சொல்வார்கள் ஆனால் இங்கே நல்லதாக இருக்கிறது, சிரேஷ்டமாகவோ இருக்கிறது. ஒவ்வொரு வினாடியும் நல்லது மற்றும் சிரேஷ்டமானது, எனவே ஒவ்வொரு வினாடிக்காக வாழ்த்துக்கள்! நல்லது. ஓம்சாந்தி.

**வரதானம்: தந்தையின் துணை மூலமாக தூய்மை என்ற இயற்கையான குணத்தை சுலபமாகக் கடைப்பிடிக்கக் கூடிய மாஸ்டர் சர்வசக்திவான் ஆகுக!**

ஆத்மாவின் இயற்கையான குணமே தூய்மை, தூய்மையின்மை மாற்றானின் குணம். எப்பொழுது இயற்கையான குணத்தின் நிச்சயம் ஏற்பட்டு விட்டது என்றால், மாற்றானின் குணம் அசைக்கவே முடியாது. தந்தை என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார் என்று ஒருவேளை அவரை யதார்த்தமாக தெரிந்து கொண்டு உடன் வைத்துக் கொள்கிறீர்கள் என்றால், தூய்மை என்ற இயற்கையான குணத்தை தாரணை செய்வது மிக சுலபம். ஏனென்றால், உடன் இருக்கும் துணைவன் சர்வ சக்திவான். சர்வ சக்திவானின் குழந்தைகள் மாஸ்டர் சர்வசக்திவானின் எதிரில் தூய்மையின்மை வரமுடியாது. ஒருவேளை எண்ணத்தில் மாயா வருகிற தென்றால், அவசியம் ஏதோவொரு கதவு திறந்திருக்கிறது, மேலும் நிச்சயத்தில் குறை இருக்கிறது.

**சுலோகன்: மூன்று காலங்களையும் தெரிந்தவர் எந்தவொரு விஷயத்தையும் ஒரு காலத்தின் கண்ணோட்டதோடு பார்ப்பதில்லை, ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை இருக்கிறது என்று நினைப்பார்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.05.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விஸ்தாரத்தில் சாரத்தின் அழகு!

பாப்தாதா விஸ்தாரத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார் மற்றும் விஸ்தாரத்தில் சார சொரூப குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். விஸ்தாரம் என்பது இந்த ஈஸ்வரிய மரத்தின் அலங்காரமாகும் மற்றும் சார சொரூப குழந்தைகள் இந்த மரத்தின் பலன் (பழம்) சொரூபம் ஆவார்கள். விஸ்தாரம் என்பது எப்பொழுதும் விதவிதமான ரூபத்தில் இருக்கிறது மேலும் விதவிதமான சொரூபத்தின் அலங்காரம் நன்றாக இருக்கிறது. விதவிதமான அலங்காரம் மரத்திற்கு இன்னும் அழகாக இருக்கிறது ஆனால் சார சொரூபத்தின் பலன் சக்திசாலியாக இருக்கிறது. விஸ்தாரத்தைப் பார்த்து சதா குஷி அடைகின்றனர். மேலும் பலனைப் (பழம்) பார்த்து சக்திசாலி ஆவதற்கான நல்விருப்பம் வைக்கின்றனர். பாப்தாதாவும் விஸ்தாரத்திற்கு நடுவில் சாரத்தை பார்த்துக் கொண்டிருந்தார். விஸ்தாரத்தில் சாரம் எவ்வளவு அழகாக இருக்கிறது இதிலோ அனைவரும் அனுபவசாலிகள். சாரத்தின் சதவீதம் மற்றும் விஸ்தாரத்தின் சதவீதம் இரண்டிலும் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது! இதையோ தெரிந்திருக்கிறீர்கள் தானே? விஸ்தாரத்தின் விசேஷத் தன்மை தனிப்பட்டது. மேலும் விஸ்தாரமும் அவசியமாகும், ஆனால் முக்கிய சார சொரூபம் பழமாகும் (பலன்). எனவே பாப்தாதா இரண்டையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றனர். விஸ்தாரம் என்ற இலைகளின் மீதும் அன்பு இருக்கிறது. மலர்களின் மீதும் அன்பு, பழங்களின் மீதும் அன்பு இருக்கிறது, எனவே பாப்தாதாவிற்கு குழந்தைகளுக்கு சமமாக சேவாதாரியாகி சந்திப்பதற்கு வந்தே தீரவேண்டியுள்ளது. எதுவரை சமமாக வில்லையோ, அதுவரை சாகார சந்திப்பைக் கொண்டாட முடியாது. விஸ்தார சொரூப ஆதமாக்களாக இருந்தாலும் சரி, சார சொரூப ஆத்மாக்களாக இருந்தாலும் சரி இருவருமே பாபாவினுடையவர் ஆகியிருக்கிறார்கள், அதாவது குழந்தைகள் ஆகியிருக்கின்றனர். எனவே பாபாவிற்கு அனைத்து வரிசைக்கிரமமான குழந்தைகளின் சந்திப்பின் பாவனைக்கான

பலனைக் கொடுத்தே ஆகவேண்டியுள்ளது, எப்பொது பக்தர்களுக்கு கூட பக்திக்கான பலன் அல்ப காலத்திற்கு பிராப்தி ஆகிறதோ அப்பொழுது குழந்தைகளுக்கான அதிகாரம் குழந்தைகளுக்கு அவசியம் பிராப்தி ஆகிறது.

இன்று முரளி நடத்த வரவில்லை. யாரெல்லாம் வெகுதூரத்தில் இருந்து வந்திருக்கின்றனரோ, அவர்களுடன் சந்திப்பை கொண்டாடுவதற்கான வாக்குறுதி நிறைவேற்ற வந்திருக்கிறார் சிலர் அன்போடு சந்திக்கின்றனர், சிலர் ஞானத்தின் ஆதாரத்தில் சந்திக்கின்றனர், சிலர் சமமான சொரூபத்தில் சந்திக்கின்றனர் ஆனால் பாபாவிற்கோ அனைவரையும் சந்தித்தே ஆக வேண்டியுள்ளது. இன்று அனைத்து பக்கங்களிலிருந்தும் வந்துள்ள குழந்தைகளின் சிறப்பம்சங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒன்று டெல்லியின் சிறப்பம்சத்தை பார்த்துக் கொண்டிருந்தார். சேவை தொடங்கிய முதல் இடமாகும். மேலும் ஆதியிலும் கூட சேவாதாரிகளின் சேவைக்கான துவக்கத்திற்காக ஜமுனை நதிக்கரை தான் கிடைத்தது. ஜமுனா நதிக்கரை ஓரம் சென்று சேவை செய்தீர்கள் தானே! சேவையின் விதை கூட டெல்லியில் ஜமுனா நதிக்கரையில் ஆரம்பமாகியது. மற்றும் இராஜ்யத்தின் மாளிகை கூட ஜமுனா நதிக்கரையில் தான் இருக்கும், எனவே கோபி வல்லபர், கோடகோபியர்கள் கூடவே ஜமுனா நதிகரையும் பாடப்பட்டுள்ளது. பாப்தாதா ஸ்தாபனையின் அந்த சக்திசாலி குழந்தைகளின் டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்தார், எனவே டெல்லியைச் சேர்ந்தவர்களின் சிறப்பம்சம் தற்சமயத்திலும் உள்ளது. எதிர்காலத்திலும் உள்ளது. சேவையின் அஸ்திவார ஸ்தானமாக உள்ளது, இராஜ்யத்தின் அஸ்திவாரமாகவும் உள்ளது. அஸ்திவார இடத்தில் வசிக்கக் கூடியவர்கள் அவ்வளவு சக்திசாலியாக இருக்கின்றீர்கள் தானே! டெல்லியைச் சேர்ந்தவர்கள் மீது சதா சக்திசாலியாக இருப்பதற்கான பொறுப்பு உள்ளது. டெல்லியைச் சேர்ந்த நிமித்த ஆத்மாக்களுக்கு இந்த பொறுப்பு என்ற கீரிடம் இருக்கிறது தானே ஒருபொழுதும் கீரீடத்தை கீழேயோவைத்துவிடுவதில்லை தானே? டெல்லியில் வசிப்பவர்கள் என்றாலே சதா பொறுப்பு என்ற கீரீடம் அணிந்தவர்கள். புரிந்தா டெல்லியைச் - சேர்ந்தவர்களின் சிறப்பம்சம்! சதா இந்த சிறப்பம்சத்தை செயலில் கொண்டு வரவேண்டும். நல்லது.

இரண்டாவது தேடி கண்டெடுக்கப்பட்ட கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் பாவனை மற்றும் அன்பின் நாடகத்தை நல்ல முறையில் காட்டுகின்றனர். ஒரு பக்கம் மிகுந்த பாவனை மற்றும் மிக மிக அன்பான ஆத்மாக்களாக இருக்கின்றனர், மற்றொரு பக்கம் உலகின் கணக்குப்படி கல்வித் துறையில் புகழ் பெற்றவர்களும் கர்நாடகத்தில் இருக்கின்றனர், அதனால் பாவனை மற்றும் பதவிக்கான உரிமையுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அதனால் கர்நாடகத்தில் இருந்து பலத்த குரலை (சேவை) எழுப்ப முடியும். நல்ல பலன் தரக்கூடிய பூமியாகும். ஏனென்றால் வி.ஐ.பி களாக இருந்த போதிலும் கூட பாவனை மற்றும் சிரத்தையுடன் கூடிய பூமியாக இருக்கும் காரணத்தினால் பணிவுடன் இருக்கின்றனர். அது எளிய சாதனம் ஆகி விடுகிறது. கர்நாடக பூமியானது இந்த சிறந்த காரியத்திற்கு நிமித்தமாக இருக்கிறது. தனது இந்த சிறப்பு அம்சம், பாவனை மற்றும் பணிவு இரண்டும் சேவையில் சதா இணைந்து இருக்கட்டும் இந்த விசேஷத்தன்மையை எந்தவித சூழ்நிலையிலும் விட்டு விடக் கூடாது. கர்நாடகம் என்ற படகிற்கு இந்த இரண்டும் துடுப்புகளாகும். இவை இரண்டையும் சேர்த்தே வைத்திருக்கவும் முன்னே, பின்னே அல்ல. சேவை என்ற படகு, பூமியின் விசேஷத் தன்மையின் வெற்றியைக் காட்டும். இரண்டின் சமநிலை பெயரை புகழ் அடையச் செய்யும். நல்லது.

சதா தன்னை சார சொரூபமாக அதாவது பலன் சொரூபமாக ஆக்கக்கூடிய, சதா சார சொரூபத்தில் நிலைத்திருந்து பிறரையும் சார ஸ்திதியில் நிலைக்க வைக்கக்கூடிய, சதா சக்திசாஆத்மா, சக்திசாலி நினைவு சொரூப, சக்திசாலி சேவாதாரி, அப்படிப்பட்ட சமமான சொரூபத்தில் சந்திப்பைக் கொண்டாடக் கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.05.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பரமாத்மாவின் அனைத்திலும் உயர்ந்த முதல் படைப்பு- பிராமணர்கள்!

இன்று படைப்பவரான தந்தை தனது படைப்புகளை அதிலும் கூட முதல் படைப்பான பிராமண ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், அனைத்திலும் உயர்ந்த முதல் படைப்பு பிரமாணர்களாகிய நீங்கள் தான் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள் எனவே அனைத்து காட்டிலும் பிரம்மா மூலமாக உயர்ந்ததிலும் உயர்ந்த படைப்பு வாய் வம்சாவளி மகான் ஆத்மாக்கள், பிராமண தேவதைகளைக் காட்டிலும் சிறந்தவர்கள் பிராமண ஆத்மாக்கள் என்று பாடப்பட்டுள்ளது. பிராமணர்கள் தான் ஃபரிஸ்தாவிலிருந்து தேவதைகள் ஆனால் பிராமண வாழ்க்கை ஆதி பிதா மூலமாக சங்கமயுகத்தின் முதலாம் வாழ்க்கையாகும். ஆதி சங்கமவாசி ஞான சொரூப திரிகாலதரிசி, திரிநேத்திரி பிராமண ஆத்மாக்கள் ஆவார்கள். சாகார சொரூபத்தில் சாகார உலகில் ஆத்மா பரமாத்மாவின் சந்திப்பு மற்றும் அனைத்து சம்மந்தத்தின் அன்பை வெளிப்படுத்தும் அனுபவம், பரமாத்மாவின் அழிவற்ற கஜானாக்களின் உரிமை, சாகார சொரூபத்தில் பிராமணர்களுக்குத் தான் இந்த பாடல் உள்ளது - நாங்கள் பார்த்தோம், நாங்கள் அடைந்தோம், சிவதந்தையை பிரம்மாபாபா மூலமாக இது தேவதை வாழ்க்கையின் பாடல் அல்ல, சாகார உலகில் இந்த சாகார கண்கள் மூலமாக இரண்டு தந்தையரையும் பார்ப்பது, அவர்களுடன் உண்பது அருந்துவது, நடப்பது, பேசுவது, கேட்பது ஒவ்வொரு சரித்திரத்தையும் அனுபவம் செய்வது, விசித்திரத்தை (சிவபாபா) சித்திரத்தில் (பிரம்மா) பார்ப்பது என்ற இந்த சிறந்த பாக்கியம் பிராமண வாழ்க்கைக்குரியதாகும்.

பிராமணர்கள் தான் கூறுகின்றனர் -நாங்கள் கடவுளை தந்தையின் ரூபத்தில் பார்த்தோம். தாய், நண்பன், உறவுகள், நாயகன் என்ற சொரூபத்தில் பார்த்தோம். ரிஷிகள், முனிவர்கள், தபஸ்விகள், வித்வான்கள், ஆச்சாரியர்கள், சாஸ்திரிகள் போன்றோர் புகழை மட்டுமே

பாடிக் கொண்டேயிருந்து விட்டனர். தரிசனத்திற்கு ஏங்குபவர்களாக இருந்து விட்டனர். எப்பொழுது வருவாரோ? எப்பொழுது தான் சந்திப்போமோ?.... என்ற எதிர்பார்ப்பில் பிறவி பிறவிகளின் சக்கரத்தில் வந்து கொண்டேயிருந்தனர் ஆனால் பிராமண ஆத்மாக்கள் பெருமிதத்துடன், நம்பிக்கையுடன் சொல்கின்றனர், போதையுடன் சொல்கின்றனர். குதூகலத்துடன் சொல்கின்றனர், உளமார சொல்கின்றனர் எங்களுடைய பாபா இப்பொழுது கிடைத்துவிட்டார்! அவர்களோ ஆசைப்படுவர்கள், நீங்களோ சந்திப்பைக் கொண்டாட கூடியவர்கள். பிராமண வாழ்க்கை என்றாலே அனைத்து அழிவற்ற, மறையாத, துண்டிக்கப்படாத, அசையாத சர்வ பிராப்தி சொரூப வாழ்க்கை, பிராமண வாழ்க்கை இந்த கல்ப மரத்தின் அஸ்திவாரம், வேராகும். பிராமண வாழ்க்கையின் ஆதாரத்தில் தான் அந்த மரம் வளர்ச்சியடைகிறது. பிராமண வாழ்க்கை என்ற வேரிலிருந்து அனைத்து விதமான ஆத்மாக்களுக்கு விதை மூலமாக முக்தி ஜீவன்முக்தியின் பிராப்தி என்ற தண்ணீர் கிடைக்கிறது. பிராமண வாழ்க்கையின் ஆதாரத்தினால் இந்த கிளைகள் வளர்ச்சியடைகின்றன. எனவே பிராமண ஆத்மாக்கள் அனைத்து விதவிதமான வம்சாவளியினரின் முன்னோர்கள் ஆவார்கள். பிராமண ஆத்மாக்கள் உலகின் அனைத்து சிறந்த காரியத்திற்கும் வடிவமைப்பிற்கும் நல்ல நேரத்தை நிர்ணயிக்கக் கூடியவர்கள். பிராமண ஆத்மாக்கள் தான் அஸ்வமேத இராஜஸ்வ யக்ஞம், ஞான யக்ஞத்தை படைக்கக்கூடிய சிறந்த ஆத்மாக்கள் பிராமண ஆத்மாக்கள் ஒவ்வொரு ஆத்மாவின் 84-பிறவிகளின் ஜாதகத்தை தெரிந்துள்ளவர்கள். ஒவ்வொரு ஆத்மாவின் சிறந்த பாக்கியம் என்ற கோட்டை, விதியை உருவாக்கக் கூடியவர் மூலமாக சிறந்ததாக்கக் கூடியவர்கள் பிராமண ஆத்மாக்கள். மகான் யாத்திரை - முக்தி, ஜீவன்முக்தி என்ற யாத்திரையை செய்விப்பதற்கு நிமித்தமானவர்கள். பிராமண ஆத்மாக்கள் அனைத்து ஆத்மாக்களுக்கும் கூட்டாக நிச்சயதார்த்தத்தை பாபாவுடன் செய்விப்பவர்கள். பரமாத்மாவின் கையோடு கை சேர்ப்பிப்பவர்கள். பிராமண ஆத்மாக்கள் பிறவி பிறவிகளுக்காக சதா தூய்மை என்ற பிணைப்பில் கட்டக்கூடியவர்கள். அமர கதையைச் சொல்லி அமரர் (தேவதை) ஆக்க கூடியவர்கள், புரிந்ததா? எவ்வளவு மகான்கள் மற்றும் எவ்வளவு பொறுப்புள்ள ஆத்மாக்கள் நீங்கள்! முன்னோர்கள் நீங்கள்! எப்படி முன்னோர்களோ அப்படியே வம்சாவளி உருவாகிறது. சாதாரணமானவர்கள் அல்ல நீங்கள்!

குடும்பத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் ஏதோவொரு சேவை நிலையத்தின் பொறுப்பாளர் என்ற இந்த எல்லைக்குட்பட்ட பொறுப்பாளர் அல்ல நீங்கள். உலக ஆத்மாக்களின் ஆதார மூர்த்திகள், முன்னேற்றக்கூடிய மூர்த்திகள் நீங்கள். எல்லையற்ற பொறுப்பு ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் மீதும் உள்ளது. ஒருவேளை எல்லையற்ற பொறுப்பை நிர்வகிக்காமல், தனது லௌகீக குடும்பம் மற்றும் அலௌகீக குடும்பத்திலேயே சில நேரம் பறக்கும் கலை, சில நேரம் ஏறும் கலை, சில நேரம் நடக்கும் கலை, சில நேரம் நிற்கும் கலை, இந்த குட்டிகர்ண விளையாட்டிலேயே நேரத்தைப் போக்குபவர்கள் பிராமணர்கள் அல்ல ஆனால் சத்திரிய ஆத்மாக்கள் ஆவார்கள். முயற்சியின் அதிசயத்தில் இதை செய்வோம், அவ்வாறு செய்வோம் என்ற அம்பை எய்யாமல் அபிநயம் செய்து கொண்டிருக்கிறார்கள். தோராயமாக இலக்கை குறி வைப்பதற்கும் இலக்கை அடைவதற்கும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் இலக்கை மதிப்பீடு செய்தவாறே இருந்துவிடுகின்றனர். இப்பொழுது செய்வோம், அப்படி செய்வோம் என்று இலக்கை அளவிடு செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களைத் தான் சத்திரிய ஆத்மாக்கள் என்று சொல்வோம். பிராமண ஆத்மாக்கள் அளவீடு செய்வதில்லை, எப்பொழுதும் இலக்கின் மீதே நிலைத்திருக்கின்றனர். முழுமையான இலக்கு எப்பொழுதும் புத்தியில் இருக்கவே இருக்கிறது. ஒரு வினாடியின் எண்ணத்தினால் வெற்றியாளர் ஆகி விடுவார்கள். பாப்தாதா -பிராமண குழந்தைகள் மற்றும் சத்திரிய குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பிராமணர்களின் வெற்றிக்கான விளையாட்டு மற்றும் சத்திரியர்களுக்கு சதா வில் அம்பின் சுமை தூக்கும் விளையாட்டு, ஒவ்வொரு நேரமும் முயற்சிக்கான உழைப்பு என்ற வில் இருக்கவே இருக்கிறது. ஒரு பிரச்சனைக்கான தீர்வு காண்கின்றனர். உடனே அடுத்த பிரச்சனை நின்று கொண்டிருக்கிறது. பிராமணர்கள் என்றாலே தீர்வு சொரூபமானவர்கள். சத்திரியர்கள் அடிக்கடி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதிலேயே இருந்து கொண்டு இருக்கின்றனர். எப்படி சாகார ரூபத்தில் கேலியாக ஒரு கதை கூறியிருந்தார்கள் இல்லையா! சத்திரியர்கள் என்ன செய்தார்கள்? இதற்கு கதை இருக்கிறதல்லவா -எலியை விரட்டினார்கள், உடனே பூனை வந்து விட்டது. இன்று பணப் பிரச்சனை, நாளை மன பிரச்சனை, நாளை மறுநாளோ உடல் பிரச்சனை மற்றும் உறவுகள், தொடர்பில் வரக்கூடியவர்களின் பிரச்சனை. இவ்வாறாக உழைப்பிலேயே

மூழ்கியிருக்கின்றனர். எப்பொழுதும் ஏதேனும் ஒரு புகார் கண்டிப்பாக இருக்கும். தன்னைப் பற்றியோ அல்லது பிறரைப் பற்றியோ இருக்கும். பாப்தாதா அவ்வாறு நேரத்திற்குத் தகுந்தவாறு ஏதேனும் உழைப்பில் மூழ்கியிருக்கக் கூடிய குழந்தைகளைப் பார்த்து கருணை, இரக்கமுள்ளவர் என்ற ரூபத்தில் பார்த்து இரக்கப்படுகிறார்.

சங்கமயுகம், பிராமண வாழ்க்கை உள்ளத்தை கவர்ந்தவரின் உள்ளத்தில் ஓய்வு எடுப்பதற்கான நேரமாகும். உள்ளத்தில் ஓய்வாக இருங்கள். பிரம்மா போஜனம் உண்ணுங்கள், ஞான அமிர்தம் பருகுங்கள், சக்திசாலியான சேவை செய்யுங்கள் மற்றும் ஓய்வாக குதூகலத்துடன் உள்ள சிம்மாசனத்தில் இருங்கள். ஏன் தொல்லைக்குள்ளாகிறீர்கள். அய்யோ கடவுளே, என்று கூறவதில்லை, ஆனால் அய்யோ பாபா அல்லது அய்யோ தாதி, தீதி என்று கூறுகிறீர்கள் தானே! ஹே பாபா ஹே தாதி, தீதி கொஞ்சம் கேளுங்களேன், ஏதேனும் செய்யுங்களேன்... இது தான் தொல்லைக்கு ஆளாவது. இது ஓய்வாக இருப்பதற்கான யுகமாகும். ஆன்மீக குதூகலத்துடன் இருங்கள். ஆன்மீக குதூகலத்தில் இந்த சுகமான நாட்களைக் கழியுங்கள். அழியக்கூடிய குதூகலத்தில் இருக்க வேண்டாம். ஆடுங்கள், பாடுங்கள், வாடி விடாதீர்கள். பரமாத்மாவுடன் குதூகலத்தைக் கொண்டாடும் சமயம் இப்பொழுது கொண்டாடவில்லை என்றால், எப்பொழுது கொண்டாடுவீர்கள்? ஆன்மீக பெருமிதத்தில் அமருங்கள். ஏன் குழப்பம் அடைகிறீர்கள்? பாபாவிற்கு ஆச்சரியமாக உள்ளது சின்னஞ்சிறு எறும்பு புத்தி வரை சென்று விடுகிறது. புத்தியோகத்தை நிலை தடுமாறச் செய்கிறது. எப்படி ஸ்தூலமான உடலில் கூட எறும்பு கடித்து விட்டால், உடல் அசையும், சலனம் அடையும் இல்லையா, அதுபோல் புத்தியை சலனப்படுத்தி விடுகிறது. எறும்பு ஒருவேளை யானையின் காதுக்குள் சென்று விடுகிறது என்றால் மயக்கமுற செய்கிறது அல்லவா! அவ்வாறே பிராமண ஆத்மாக்களும் மயக்கமுற்று சத்திரியர் ஆகி விடுகின்றனர். புரிந்ததா, என்ன விளையாட்டு விளையாடுகிறீர்கள்; என்றும் சத்திரியர்கள் ஆகாதீர்கள். பிறகு இராஜ்யத்திலும் திரேதாயுகம்தான் கிடைக்கும். சத்யுக தேவதைகள் உண்டு, களித்து, என்ன மீதமிருக்குமோ அது சத்திரியர்களுக்கு திரேதாவில் கிடைக்கும். கர்மம் என்ற வயலின் முதல் விளைச்சல் பிராமணர்களிலிருந்து தேவதைகளுக்குக் கிடைக்கிறது மேலும் அடுத்த விளைச்சல் சத்திரியர்களுக்குக் கிடைக்கிறது. வயலின் முதலில்

விளைச்சலின் சுவைக்கும் இரண்டாவது விளைச்சலின் சுவைக்கும் என்ன வேறுபாடு உள்ளது என்பதைத் தெரிந்திருக்கிறீர்கள் தானே! நல்லது!

மஹாராஷ்ட்ரா மற்றும் உ.பி. மண்டலம் வந்திருக்கின்றன: மஹாராஷ்ட்ராவிற்கு சிறப்பு இருக்கிறது. எவ்வாறு மஹாராஷ்ட்ரா என்ற பெயர் உள்ளதோ, அவ்வாறே மகான் ஆத்மாக்கள் என்ற அழகிய பூச்செண்டை பாப்தாதாவிற்கு வெகுமதியாக அளிப்பார்கள். மஹாராஷ்ட்ராவின் ராஜ்யம் அழகாவும் முழுமையாகவும் இருக்கிறது. எனவே மஹாராஷ்டரா அப்படிப்பட்ட முழுமையான பெயர், புகழ் பெற்ற ஆத்மாக்களை தொடர்பில் கொண்டு வர வேண்டும். எனவே தான் மகான் ஆத்மாக்களை உருவாக்கி அழகிய பூச்செண்டை பாபாவிற்கு முன்னால் கொண்டு வரவேண்டும் என்று கூறினார். இப்பொழுது கடைசி நேரத்தில் இந்த செல்வந்தர்களின் நடிப்பும் இருக்கிறது, சம்மந்ததில் அல்ல, தொடர்பின் நடிப்பு இருக்கிறது. புரிந்தா! உபி.யில் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் புகழ் பெற்ற உலக அதிசயங்களின் ஒன்றான தாஜ்மகால் இருக்கிறது அல்லவா! எவ்வாறு உ.பி.யில் உலக அதிசயம் உள்ளதோ, அவ்வாறு உ.பி, சேர்ந்தவர்களுக்கு சேவையின் அதிசயமான வெளிப்படையான பலனைக் காட்ட வேண்டும். அது உள்நாடு மற்றும் வெளிநாட்டில், பிராமண உலகில் புகழ் பெற்றதாக இருக்க வேண்டும். அதாவது இவர்களோ மிகவும் அதிசயமான காரியம் செய்துள்ளார்கள் உலகின் அற்புதமானவர்கள் என்று அவ்வாறு அதிசயமான காரியம் செய்ய வேண்டும். கீதா பாடசாலைகள் உள்ளன, சென்டர்கள் உள்ளன, இது ஒன்றும் அதிசயம் அல்ல. யார் இதுவரை செய்யவில்லையோ, அதைச் செய்து காட்ட வேண்டும். அப்பொழுது தான் அற்புதம் என்று சொல்வோம். புரிந்ததா!

வெளிநாட்டினரும் இப்பொழுது ஒவ்வொரு சீசனிலும் வந்து விடுகின்றனர். வெளிநாட்டினர் வெளிநாட்டு பொருட்கள் மூலமாக உலகில் இரண்டு தந்தையரையும் வெளிப்படுத்துவார்கள். அருகில் இருப்பவர் என்றாலே இந்தக் கண்களால் பார்க்க முடியும், எனவே அப்பேற்பட்ட தந்தையை உலகிற்கு முன்னால் வெளிப்படுத்துவார்கள். புரிந்தா, வெளிநாட்டினர் என்ன செய்ய வேண்டுமென்று? நல்லது நாளையோ முழு கூட்டமும் சென்று விடும். எப்படி சத்யுகத்தில்

விமானங்கள் வரிசையாக நின்று கொண்டிருக்கிறது அல்லவா இப்பொழுது இங்கே ஜீப் மற்றும் பேருந்துகள் வரிசையாக நின்று கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் விமானங்களும் வரிசையாக நின்று கொண்டிருக்கும். அனைவரும் பயந்து ஓடிவிடுவார்கள், மேலும் அனைத்தையும் உங்களிடம் கொடுத்து விட்டுச் செல்வார்கள். அவர்கள் பயப்படுவார்கள், நீங்களோ பறப்பீர்கள். உங்களுக்கு மரண பயமோ இல்லை, முதலிலேயே இறந்துவிட்டீர்கள். பாகிஸ்தானில் மாதிரி (சாம்பிள்) பார்த்தீர்கள் தானே -அனைவரும் சாவிகளைக் கொடுத்து விட்டு சென்று விட்டனர். அதனால் அனைத்து சாவிகளும் உங்களுக்குக் கிடைக்கப் போகின்றன. பராமரிக்க மட்டும் செய்ய வேண்டும். நல்லது!

சதா பிராமண வாழ்க்கையின் அனைத்து சிறப்புகளையும் வாழ்வில் கொண்டு வரக்கூடிய, சதா உள்ளத்திற்கு ஓய்வு அளிக்கக்கூடிய பாபாவின் உள்ள சிம்மாசனத்தின் மீது ஆன்மீக குதூகலத்துடன், ஆன்மீக ஓய்வு எடுக்கக்கூடிய ஸ்தூலமான ஓய்வு எடுப்பதல்ல, எப்பொழுதும் சங்கமயுகத்தின் உயர்ந்த பெருமிதத்தில் இருக்கக்கூடிய, உழைப்பிலிருந்து விடுபட்டு நேசமான வாழ்க்கையில் மூழ்கியிருக்கக்கூடிய, உயர்ந்த பிராமண ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் சமஸ்காரம் உரித்தாகுக.

**வரதானம்: ஞானரத்தினங்களை தாரணை செய்து வீணானவைகளை அழிக்கக்கூடிய புனித அன்னப் பறவை ஆகுக!**

புனித அன்னப் பறவைக்கு இரண்டு சிறப்பம்சங்கள் இருக்கின்றன. ஒன்று ஞானரத்தினங்களைத் தேர்ந்தெடுப்பது. மற்றொன்று நிர்ணய சக்தி மூலமாக பாலையும் தண்ணீரையும் பிரித்தெடுப்பது. பால் மற்றும் தண்ணீர் என்பதன் பொருள் சக்திசாலியானது மற்றும் வீணானது. வீணானவற்றை நீருக்கு நிகரானது என்றும், சக்திசாலியானவற்றை பாலுக்கு நிகரானது என்றும் சொல்கின்றனர். எனவே வீணானவைகளை அழிப்பது என்றாலே புனித அன்னப் பறவை ஆவது. புத்தியில் ஞான ரத்தினங்கள் ஓடிக் கொண்டும் சிந்தனை நடந்து கொண்டும் இருந்ததென்றால், இரத்தினங்களால் நிரம்பி விடுவீர்கள்.

**சுலோகன்: எப்பொழுதும் தனது உயர்ந்த நிலையில் (பொசிஸிசன்) (ஆப்போஸிசன் அழிப்பவரே வெற்றி ஆத்மா ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 07.05.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமநிலை வைப்பதினால்தான் ஆசீர்வாதங்களின் பிராப்தி இருக்கும்!

இன்று அன்பு சொரூபமான, நினைவு சொரூபமான குழந்தைகளுக்கு அவர்களுடைய அன்பு மற்றும் நினைவுக்கான பிரதிபலனைக் கொடுப்பதற்காக அன்புக்கடல் தந்தை இந்த அன்பான சபையின் நடுவில் வந்திருக்கிறார். இது ஆன்மீக அன்பு நிறைந்த கூட்டம். ஆன்மீக சம்மந்தத்தினால் சந்திக்கும் கூட்டம், அதை முழுக் கல்பத்திலும் இப்பொழுது தான் அனுபவம் செய்கிறீர்கள். இந்த ஒரு ஜென்மத்தைத் தவிர வேறு ஒரு பொழுதும் ஆன்மீகத் தந்தையின் ஆன்மீக அன்பு கிடைக்க முடியாது. இந்த ஆன்மீக அன்பு ஆத்மாக்களுக்கு உண்மையான ஆறுதலைக் கொடுக்கிறது. உண்மையான வழி கூறுகிறது. உண்மையான அனைத்து பிராப்தி களையும் செய்விக்கிறது. இந்த சாகார உலகத்தில் இந்த ஜென்மத்தின் மேலும் இந்த மாதிரி சகஜ விதியுடன் இம்மாதிரி ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ஆன்மீக சந்திப்பு நம் எதிரிலேயே இருக்கும் என்று எப்பொழுதாவது உங்களுக்கு எண்ணத்தில் வந்துள்ளதா? எப்படி தந்தையைப் பற்றி கூறும்பொழுது உயர்ந்ததிலும் உயர்ந்தவர். மிகவும் தேஜோமயமானவர், மிகப் பெரியவர் என்று கேட்டிருக்கிறீர்கள். அது போன்றே சந்திப்பதற்கான விதியும் கடினமானதாக மேலும் மிகுந்த பயிற்சிக்குப் பிறகு கிடைக்கும் என்று யோசித்து யோசித்து நம்பிக்கை இழந்தவர்கள் ஆகி விட்டிருந்தீர்கள் ஆனால் தந்தை நம்பிக்கையற்ற குழந்தைகளையும் நம்பிக்கைக்குரியவர் களாக ஆக்கி விட்டார். மனமுடைந்து போன குழந்தைகளை சக்திசாலி ஆக்கி விட்டார். எப்பொழுது கிடைப் பார் என்ற அவர், இப்பொழுது சந்திப்பின் அனுபவம் செய்வித்து விட்டார். அனைத்து செல்வங்களின் அதிகாரி ஆக்கி விட்டார். இப்பொழுது அதிகாரி ஆத்மாக்கள் நீங்கள் உங்களுடைய அதிகாரத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? நல்ல முறையில் தெரிந்து விட்டீர்களா அல்லது தெரிய வேண்டுமா?

# 1984 அவ்யக்த முரளி

இன்று பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து அனைத்து குழந்தைகளுக்கும் எப்பொழுதும் நிச்சயமும் இருக்கிறது, அன்பும் இருக்கிறது, நினைவு செய்வதற்கான முழு ஈடுபாடு மற்றும் ஆர்வமும் இருக்கிறது, சேவைக்கான ஊக்கமும் இருக்கிறது, லட்சியமும் சிரேஷ்டமாக இருக்கிறது என்று எங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தோம். யாரிடமாவது என்ன ஆக வேண்டும் என்று கேட்டால், என்ன பதில் கூறுவார்கள்? அனைவருமே நாங்கள் இலட்சுமி நாராயணன் ஆகப்போகிறவர்கள் என்று கூறுவார்கள். இராம், சீதை ஆவோம் என்று யாரும் கூறுவதில்லை. 16,000 மணிகளின் மாலையையும் யாரும் மனமுவந்து விரும்பு வதில்லை. 108-மாலையின் மணியாகத் தான் ஆவோம். இந்த ஊக்கம் தான் அனைவரிடமும் இருக்கிறது. சேவையில், படிப்பில் ஒவ்வொருவரும் தன்னை மற்றவர்களிடமிருந்து குறைந்த தகுதியானவர் என்று நினைப்பதேயில்லை. இருந்தும் எப்பொழுதும் ஒரே சீரான நிலை, எப்பொழுதும் பறக்கும் கலையின் அனுபவம், எப்பொழுதும் ஒருவரின் நினைவில் மூழ்கியிருப்பது, உடல் மற்றும் உடலின் அற்பகால பிராப்திகளிலிருந்து விலகியிருப்பது. அழியும் உணர்வுகளை மறந்த நிலையில் இருப்பது என்ற நிலையை நிரந்தரமாக அனுபவம் செய்வதில் வரிசைக்கிரமமாக ஆகி விடுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? பாப்தாதா இதற்கான விசேஷ காரணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். காரணமாக என்ன பார்த்தார்? ஒரே ஒரு வார்த்தையின் காரணம் தான்!

அனைத்தையும் தெரிந்திருக்கிறார்கள், மேலும் அனைத்தும் அனைவருக்கும் பிராப்தியும் ஆகியிருக்கிறது, அதற்கான விதியின் ஞானமும் இருக்கிறது, வெற்றி அடைவதற்கான ஞானமும் இருக்கிறது. செய்யும் காரியம் மற்றும் அதன் பலன் இரண்டின் ஞானம் இருக்கிறது ஆனால் எப்பொழுதும் சமநிலையில் இருக்கத் தெரிவதில்லை இந்த சமநிலையின் ஈஸ்வரிய நியமத்தை தேவையான நேரத்தில் கடைபிடிக்கத் தெரியாது. எனவே ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் பாப்தாதா மற்றும் அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட ஆசீர்வாதம், வாழ்த்துக்கள் கிடைப்பதில்லை. கடும் உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. சுலபமான வெற்றி அனுபவம் ஆவதில்லை. எந்த விஷயத்தின் சமநிலை மறந்து விடுகிறது. ஒன்றோ நினைவு மற்றும் சேவை. நினைவிலிருந்து சேவை செய்வது என்பது தான் நினைவு மற்றும் சேவை யின் சமநிலை ஆனால் சேவையில்

இருந்து கொண்டே நேரத்திற்கு ஏற்றபடி நினைவு செய்வது, நேரம் கிடைத்தால் நினைவு செய்வேன், இல்லையென்றால் சேவையையே நினைவு என்று புரிந்து கொள்வது சமநிலையில்லாத நிலையாகும். சேவை தான் நினைவு மேலும் நினைவிலேயே சேவை இருக்கிறது. இந்த விதியின் சிறிதளவு வித்தியாசம் வெற்றியை மாற்றி விடுகிறது. பிறகு நினைவின் சதவிகிதம் எப்படி இருந்தது என்று முடிவைக் கேட்டோம் என்றால் என்ன கூறுகிறார்கள்? சேவையில் அந்த அளவு பிஸியாக இருந்தோம். எந்த விஷயமும் நினைவில் இருக்கவில்லை, நேரமே இருக்கவில்லை என்று கூறுவார்கள். அல்லது சேவையும் பாபாவினுடையது தானே, தந்தை என் நினைவில் இருந்தார் என்று கூறுவார்கள் ஆனால் சேவையில் எந்த அளவு நேரம் மற்றும் ஈடுபாடு இருந்ததோ அந்த அளவே நினைவின் சக்திசாலியான நிலை அனுபவம் ஆனதா? எந்த அளவு சேவையில் சுயமரியாதை இருந்ததோ அந்த அளவே பணிவுத் தன்மை இருந்ததா? இந்த சமநிலை இருந்ததா? மிகப் பெரிய, மிக நல்ல சேவை செய்தோம். இந்த சுயமரியாதை நல்லது தான்! ஆனால் எந்த அளவு சுயமரியாதை இருக்கிறதோ அந்த அளவே பணிவுத் தன்மை இருக்க வேண்டும். செய்விக்கும் தந்தை என்னை ஒரு கருவி ஆக்கி சேவை செய்வித்தார். இது தான் கருவி மற்றும் பணிவுத்தன்மை. கருவியாக ஆகியிருந்தேன். சேவை நன்றாக நடந்தது, வளர்ச்சி அடைந்தது, வெற்றி சொரூபம் ஆகியிருந்தேன். இந்த சுயமரியாதை நல்லது தான்! ஆனால் சுயமரியாதை மட்டுமின்றி பணிவுத் தன்மையின் சமநிலையும் இருக்க வேண்டும். இந்த சமநிலை எப்பொழுதுமே சகஜ வெற்றி சொரூபமாக ஆக்கி விடும். சுயமரியாதையும் அவசியம் வேண்டும். தேக உணர்வு இல்லை, சுயமரியாதை ஆனால் சுயமரியாதை மற்றும் பணிவு இரண்டின் சமநிலை இல்லாத காரணத்தினால் சுயமரியாதை தேக அபிமானத்தில் மாறி விடுகிறது. சேவை நடந்தது, வெற்றி கிடைத்தது, கூடவே இந்த குஷியும் இருக்க வேண்டும். ஆஹா! பாபா, என்னை உங்களுடைய கருவியாக ஆக்கியிருந்தீர்கள். நான் செய்யவில்லை. இந்த நான் என்ற தன்மை சுயமரியாதையின் தேக அபிமானத்தில் கொண்டு வந்து விடுகிறது. நினைவு மற்றும் சேவையின் சமநிலையில் இருப்பவர்கள், சுயமரியாதை மற்றும் பணிவில் சமநிலை யுடனிருப்பார்கள். எனவே சமநிலை எந்த விஷயத்தில் மேலே கீழே கொண்டு செல்கிறது என்று புரிந்து கொண்டீர்களா?

அது போலவே பொறுப்பின் கிரீடம் அணிந்திருப்பதின் காரணத்தினால் ஒவ்வொரு காரியத்திலும் பொறுப் பையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அது உலகியல் குடும்ப பொறுப்பானாலும் சரி அல்லது ஆன்மீக குடும்பத்தினுடையதாக இருந்தாலும் சரி அல்லது ஈஸ்வரிய சேவையின் பொறுப்பானாலும் சரி. இரண்டு குடும்பத்தின் அவரவர்களின் பொறுப்பை நிறைவேற்றுவதில் எந்தளவு விலகியிருப்பீர்களோ அந்தளவு அன்பானவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த சமநிலை இருக்க வேண்டும். ஒவ்வொரு பொறுப்பையும் செய்ய வேண்டும், இதுவும் அவசியம் ஆனால் எந்தளவு பெரிய பொறுப்போ அந்தளவு டபுள் லைட்டாக இருக்க வேண்டும். பொறுப்பை ஏற்று செய்து கொண்டே பொறுப்பின் சுமையிலிருந்து விலகியிருப் பவராக இருக்க வேண்டும், இதைத் தான் தந்தைக்குப் பிரியமானது என்று கூறுவது. மிகுந்த பொறுப் பிருக்கிறது, என்ன செய்வது என்று பயப்படாதீர்கள். இதை செய்யவா அல்லது வேண்டாமா, என்ன செய்வது, இதையும் செய்வது அதையும் செய்வது மிகக் கடினம் என்று உணர்வது என்றால் சுமை இருக்கிறது. டபுள் லைட்டாக இருக்கவில்லை தான் இல்லையா? டபுள் லைட் என்றால் விலகியிருப்பவர். மேலும் எந்தவொரு பொறுப்பின் காரியத்தின் சஞ்சலத்தின் சுமை இல்லாத நிலை. இதைத் தான் விலகி மற்றும் அன்பாக இருப்பதின் சமநிலை வைப்பவர் என்று கூறுவது.

இன்னொரு விஷயம் இந்த முயற்சி செய்யும் வாழ்க்கையில் காலப்போக்கில் முயற்சி செய்வதினால் என்னென்ன பிராப்தி ஆகிறதோ அதை அனுபவம் செய்து செய்து பிராப்தியின் மிகுந்த போதை மற்றும் குஷியில் வந்து விடுகிறார்கள். நான் அடைந்து விட்டேன், அனுபவம் செய்து விட்டேன் போதும். நான் மகாவீர், மகாரதி ஆகி விட்டேன், ஞானி ஆகி விட்டேன், யோகியாகவும் ஆகி விட்டேன், சேவாதாரியாகவும் ஆகி விட்டேன். இந்த பிராப்தி மிகவும் நல்லது ஆனால் இந்த பிராப்தியின் போதையில் அலட்சியமும் வந்து விடுகிறது. இதற்கான காரணம் என்ன? ஞானி ஆனீர்கள், யோகி ஆனீர்கள், சேவாதாரி ஆனீர்கள் ஆனால் ஒவ்வொரு அடியிலும் பறக்கும் கலையின் அனுபவம் செய்கிறீர்களா? எதுவரை உயிரோடு இருப்போமோ அதுவரை ஒவ்வொரு அடியிலும் பறக்கும் கலையில் பறக்க வேண்டும். இந்த இலட்சியத்தோடு இன்று என்ன செய்கிறீர்களோ அதில் மேலும் புதுமை வந்ததா அல்லது எதுவரை

வந்து சேர்ந்திருக்கிறீர்களோ அந்த எல்லையைத் தான் சம்பூர்ணத்தின் எல்லை என்று புரிந்து கொண்டீர்களா? முயற்சி செய்வதில் பிராப்தியின் போதை மற்றும் குஷியும் அவசியம் தான், ஆனால் ஒவ்வொரு அடியிலும் முன்னேற்றம் மற்றும் பறக்கும் கலையின் அனுபவமும் அவசியம். ஒருவேளை இந்த சமநிலை இருப்பதில்லை என்றால் அலட்சியம் இருக்கிறது, ஆசீர்வாதத்தை பிராப்தி செய்ய முடியாது. எனவே முயற்சி செய்யும் வாழ்க்கையில் எவ்வளவு அடைந்திருக்கிறீர்களோ அதன் போதையும் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு அடியிலும் முன்னேற்றத்தின் அனுபவமும் இருக்க வேண்டும். இதைத் தான் சமநிலை என்று கூறுவது. இந்த சமநிலை எப்பொழுதுமே இருக்க வேண்டும். நானோ அனைத்தையும் தெரிந்து கொண்டேன், அனுபவி ஆகி விட்டேன். நல்ல முறையில் சென்று கொண்டிருக்கிறேன் என்று அந்த மாதிரி நினைக்காதீர்கள். நல்லவராக ஆகியிருக்கிறீர்கள் இதுவோ மிகவும் நல்லது தான் ஆனால் இன்னும் வரும் நாட்களில் முன்னேற்றத்தை அடைய வேண்டும். அந்த மாதிரி விசேஷ காரியம் செய்து, அனைத்து ஆத்மாக்களின் எதிரில் ஒரு உதாரணமாக ஆக வேண்டும். இதை மறக்காதீர்கள். எந்தெந்த விஷயங்களில் சமநிலை வைக்க வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? இந்த சமநிலை மூலமாக இயல்பாகவே ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும். எனவே வரிசைக்கிரமமாக ஏன் ஆகிறோம் என்று புரிந்து கொண்டீர்களா? சிலர் சில விஷயத்தின் சமநிலையில், சிலர் வேறு சில விஷயத்தின் சமநிலையில் அலட்சியமானவராக ஆகி விடுகிறார்கள்.

மும்பையில் வசிப்பவர்களோ அலட்சியமானவர்களாக இல்லை தான் இல்லையா? நீங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் சமநிலை வைப்பவர்கள் தான் இல்லையா? சமநிலையின் கலையில் திறமைசாலிகள் தான் இல்லையா? சமநிலை கூட ஒரு கலை தான். இந்தக் கலையில் நீங்கள் நிரம்பியவர்கள் தான் இல்லையா? மும்பையை செல்வம் நிறைந்த தேசம் என்று கூறுவார்கள். அந்த மாதிரி சமநிலையின் செல்வத்தில், ஆசீர்வாதத் தின் செல்வத்திலும் நிரம்பியவர் தான் இல்லையா? மும்பையைச் சேர்ந்தவர்கள் என்ன விசேஷத்தை காண்பிப்பீர்கள்? மும்பையில் பல மடங்கு கோடீஸ்வரர்கள் அதிகம் இருக்கிறார்கள் தான் இல்லையா? எனவே மும்பையைச் சேர்ந்தவர்களுக்கு அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு ஆன்மீக அழியாத பல மடங்கு கோடீஸ்வரன், அனைத்து

பொக்கிஷங்களின் சுரங்கங்களின் அதிபதி என்றால் என்ன என்பதை அவர்களுக்கு அனுபவம் செய்வியுங்கள். இப்போதோ அழியும் செல்வத்தில் மட்டும் அதிபதிகளாக இருக்கிறார்கள். அந்த மாதிரி மனிதர்களுக்கு இந்த அழியாத பொக்கிஷத்தின் மகத்துவத்தைக் கூறி அழியாத செல்வம் நிறைந்தவராக ஆக்குங்கள். இந்த பொக்கிஷம் அழியாதது, சிரேஷ்ட பொக்கிஷம் என்று அவர்கள் உணர வேண்டும். அந்த மாதிரி சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? செல்வந்தவர்களின் பார்வையில் இந்த அழியாத செல்வந்த ஆத்மாக்கள் சிரேஷ்டமானவர்கள் என்று அனுபவம் செய்யட்டும். புரிந்ததா? இவர்களுக்கோ பங்கே இல்லை என்று அப்படி நினைக்காதீர்கள். இறுதியில் .இவர்களும் விழித்தெழ வேண்டும் என்ற பங்கும் இருக்கிறது. சம்மந்தத்தில் வர மாட்டார்கள், ஆனால் தொடர்பில் வருவார்கள். எனவே இப்பொழுது அந்த மாதிரி ஆத்மாக்களையும் எழுப்புவதற்கான நேரம் வந்து விட்டது. எனவே மிக நல்ல முறையில் அவர்களையும் எழுப்பி விடுங்கள். ஏனென்றால் செல்வத்தின் போதையின் தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். போதையில் இருப்பவர்களை அடிக்கடி எழுப்ப வேண்டியதாக இருக்கும். ஒரு தடவையில் எழுந்திருக்க மாட்டார்கள். எனவே இப்பொழுது அந்த மாதிரி போதையில் தூங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு அழியாத செல்வத்தின் அனுபவங்களைத் தெரிந்தவர்களாக ஆக்குங்கள். புரிந்ததா? மும்மையைச் சேர்ந்தவர்களோ மாயாவை வென்றவர்கள் தான் இல்லையா! மாயாவை கடலில் போட்டு விட்டீர்கள் இல்லையா! ஆழத்தில் போட்டீர்களா? அல்லது மேலேயே போட்டு விட்டீர்களா? ஒருவேளை ஏதாவது ஒரு பொருள் மேலே இருக்கிறது என்றால் அது அலைகளால் அடிக்கப்பட்டு கரைக்கு வந்து விடும், ஆழத்தில் போட்டு விட்டீர்கள் என்றால், அழிந்து விடும். எனவே மாயா மீண்டும் கரைக்கு வந்து விடுவது இல்லையே? மும்பையில் இருப்பவர்களுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் உதாரணமாக ஆக வேண்டும். ஒவ்வொரு விசேஷத்திலும் உதாரணமாக ஆக வேண்டும். எப்படி மும்பையின் அழகைப் பார்ப்பதற்காக அனைவரும் வெகு தூர இடங்களிலிருந்தும் வருகிறார்கள் தான் இல்லையா! அந்த மாதிரி பார்ப்பதற்காக தொலை தூரத்திலிருந்து வருகிறார்கள். ஒவ்வொரு குணத்தின் நடைமுறை சொரூபத்தில் உதாரணம் ஆகுங்கள். சரளத்தன்மையை வாழ்க்கையில் பார்க்க வேண்டும் என்றால், இந்த சென்டரில் சென்று இந்த பரிவாரத்தை பாருங்கள். சகித்துக் கொள்ளும்

தன்மையைப் பார்க்க வேண்டும் என்றால், இந்த சென்டரில் சென்று இந்த பரிவாரத்தை பாருங்கள். சமநிலையைப் பார்க்க வேண்டும் என்றால் இந்த விசேஷ ஆத்மாக்களை பாருங்கள். நீங்கள் அந்த மாதிரி அதிசயம் செய்பவர்கள் தான் இல்லையா? மும்பையைச் சேர்ந்தவர்களுக்கு இரட்டை பிரதிபலன் கொடுக்க வேண்டும். ஒன்று ஜகத்தம்பா தாயின் பாலனைக்கு, இன்னொன்று பிரம்மாபாபாவின் விசேஷ பாலனைக்கு. ஜகத்தம்பா தாயின் பாலனையும் மும்பையைச் சேர்ந்தவர் களுக்கு விசேஷமாக கிடைத்தது. அந்த அளவு மும்பைக்கு பிரதிபலனை அளிக்க வேண்டும் இல்லையா? ஒவ்வொரு ஸ்தானமும், ஒவ்வொரு விசேஷ ஆத்மா மூலமாக தந்தையின், தாயின் விசேஷ ஆத்மாக்களின் விசேஷம் தென்பட வேண்டும். இதைத் தான் பலன் கொடுப்பது என்று கூறுவது. நல்லது. வந்திருக்கிறீர்கள், அனைவரையும் வரவேற்கிறோம். தந்தையின் வீட்டில் அதாவது உங்களுடைய வீட்டில் வாருங்கள், வாருங்கள்!

தந்தையோ குழந்தைகளைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொரு குழந்தையும் உலகத்தின் தீபம். குலத்தின் தீபம் மட்டும் இல்லை, உலகத்தின் தீபம். ஒவ்வொருவரும் உலக நன்மை காரியத்திற்காகப் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள் என்றால் உலகத்தின் தீபம் ஆகி விட்டார் இல்லையா? பார்க்கப் போனால் முழு உலகமும் எல்லைக்கப்பாற்பட்ட குலம் தான். அந்த முறையில் எல்லைக்கப்பாற்பட்ட குலத்தின் தீபம் என்றும் கூற முடியும் ஆனால் எல்லைக்குட்பட்ட குலத்தின் தீபம் இல்லை, எல்லைக்கப்பாற்பட்ட குலத்தின் தீபம் அல்லது உலகின் தீபம் என்று கூறுங்கள். நீங்கள் அந்த மாதிரியானவர்கள் தான் இல்லையா? நீங்கள் எப்பொழுதும் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் தீபம் தான் இல்லையா. அணைந்து அணைந்து எரியும் தீபமாக இல்லையே? எப்பொழுது விளக்கு அணைந்து அணைந்து எரிகிறது என்றால், பார்ப்போரின் கண்களும் கெட்டு விடுகிறது. பார்க்க பிடிக்காது தான் இல்லையா? நீங்களோ எப்பொழுதும் பிரகாசமாக சுடர்விட்டுக் கொண்டிருக்கும் தீபம் தான் இல்லையா? அந்த மாதிரி தீபங்களைப் பார்த்து பாப்தாதாவும் எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். புரிந்தத!. நல்லது.

எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தில் சமநிலை வைக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையிடமிருந்து ஆசீர்வாதம் பெறக்கூடிய, ஒவ்வொரு

அடியிலும் பறக்கும் கலையை அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் அன்பின் கடலில் மூழ்கியிருக்கும், சமநிலையில் நிலைத்திருக்கக்கூடிய, பலகோடி மடங்கு பாக்கியவான் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் கிரீடம் அணிந்திருக்கும் இரத்தினங்கள் தான் இல்லையா? எவ்வளவு பெரிய கிரீடமோ அந்த அளவே எப்பொழுதுமே மிகவும் இலேசாக இருப்பவர்கள். அந்த மாதிரி கிரீடத்தை அணிந்திருக்கிறீர்கள், இந்த கிரீடத்தை அணிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்தை செய்து கொண்டும் கிரீடம் அணிந்திருப்பவராகவும் இருக்க முடியும். இரத்தினம் பதித்த கிரீடமாக இருப்பதை தேவையான நேரத்தில் அணிந்து கொள்வார்கள். பிறகு கழற்றி வைத்து விடுவார்கள் ஆனால் இந்த கிரீடம் அந்த மாதிரியானது அதை கழற்றி கீழே வைப்பதற்கு அவசியமே இல்லை. தூங்கிக் கொண்டிருந்தாலும் கிரீடம் அணிந்தவர் மேலும் எழுந்தாலும் கிரீடம் அணிந்தவர். அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? கிரீடம் சுமையற்று இலேசாக இருக்கிறது இல்லையா? ஏதாவது சுமையோ இல்லையே? பெயர் பெரியது, எடை மிகவும் லேசானது. சுகம் கொடுக்கும் கிரீடம், குஷி கொடுக்கக்கூடிய கிரீடம். உங்களை அந்த மாதிரி கிரீடம் அணிந்தவராக தந்தை ஆக்குகிறார். அதன் காரணமாக வரும் காலத்தில் பல ஜென்மங்கள் கிரீடம் கிடைத்துக் கொண்டே இருக்கும். அந்த மாதிரி கிரீடம் அணிந்த குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். பாப்தாதா இராஜ கிரீடம் அணிவிக்கும் நாளை (பட்டாபிஷேகம்) இப்பொழுதிலிருந்தே கொண்டாடி நிரந்தரமான பழக்கமாகவும் நியமமாகவும் ஆக்கி விட்டார். சத்யுகத்திலும் பட்டாபிஷேக தினம் கொண்டாடப் படும். யார் சங்கமயுகத்தில் பட்டாபிஷேக நாளை கொண்டாடினாரோ அதனுடைய நினைவுச்சின்னம் தான் அழியாததாக வந்து கொண்டே இருக்கும். அவ்யக்த வதனத்தில் சேவாதாரிகள் இருக்கிறார்கள் ஆனால் சாகார உலகத்திலிருந்து வானபிரஸ்தம் ஆகி விட்டார்கள் இல்லையா? சுயம் தந்தை சாகார உலகத்திலிருந்து வானப்பிரஸ்தம் ஆகி குழந்தைகளுக்கு கிரீடம் மற்றும் ஆசனத்தை வழங்கி விட்டு அவர் அவ்யக்த உலகத்திற்குச் செல்ல வேண்டும். அப்படி பட்டாபிஷேக நாள் ஆகி விட்டது இல்லையா? விசித்திரமான நாடகம் இல்லையா? ஒருவேளை தெரிந்து கொள்வதற்கு முன்பாகவே

கூறிவிட்டோம் என்றால், அதிசயம் நிறைந்த நாடகம் என்று இருக்காது. இது அந்த மாதிரி விசித்திர நாடகம் அதனுடைய சித்திரத்தை வரைய முடியாது. விசித்திர தந்தைக்கு விசித்திரமான பங்கு இருக்கிறது. அதன் சித்திரத்தை புத்தியில் எண்ணம் மூலமாகவும் வரைய முடியாது. இதைத் தான் விசித்திரம் என்று கூறுகிறோம். எனவே விசித்திரமான பட்டாபிஷேகம் ஆனது. பாப்தாதா எப்பொழுதுமே மகாவீர் குழந்தைகளை பட்டாபிஷேக நாளைக் கொண்டாடும் கிரீடம் அணிந்த சொரூபத்தில் பார்க்கிறார். பாப்தாதா துணையை கொடுப்பதிலிருந்து மறைந்து விடவில்லை ஆனால் சாகார உலகத்திலிருந்து மறைந்து அவ்யக்த உலகத்தில் உதயம் ஆகி விட்டார். உடன் இருப்போம், உடன் செல்வோம் என்ற இந்த உறுதிமொழியோ கண்டிப்பாக இருக்கிறது. இந்த உறுதிமொழி ஒருபொழுதும் அகல முடியாது. எனவே தான் பிரம்மாபாபா உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். இல்லையென்றால் கர்மாதீத் ஆகி விட்டார் என்றால் அவர் செல்ல முடியும். பந்தனமோ இல்லை தான் இல்லையா? ஆனால் அன்பின் பந்தனம் இருக்கிறது. அன்பின் பந்தனத்தின் காரணமாக உடன் செல்வதற்கான உறுதிமொழியை நிறைவேற்றும் காரணமாக தந்தைக்கு காத்திருக்க வேண்டியதாகத் தான் இருக்கிறது. துணையாக இருக்கிறார். மேலும் அவருடன் செல்ல வேண்டும். அந்த மாதிரி தான் அனுபவம் இருக்கிறது இல்லையா? நல்லது. ஒவ்வொருவரும் விசேஷமானவர்கள். ஒவ்வொருவரின் விசேஷத்தை வர்ணனை செய்தோம் என்றால் எத்தனை ஆகி விடும். மாலையாகி விடும். எனவே இதயத்தில் மட்டும் வைத்துக் கொள்கிறோம், வர்ணனை செய்வதில்லை. நல்லது.

**வரதானம்: வீணானது மற்றும் டிஸ்டர்ப் (தொந்தரவு) செய்யும் வார்த்தைகளிலிருந்து விடுபட்டு டபுள்லைட் அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுக!**

அவ்யக்த ஃபரிஷ்தா ஆக வேண்டும் என்றால் வீணான வார்த்தைகள் எவை யாருக்குமே பிடிப்ப தில்லையோ அவற்றை நிரந்தரமாக அகற்றி விடுங்கள். விஷயம் இரண்டு வார்த்தைகளுக்கானதாக இருக்கும் ஆனால் அதை நீளமாக்கி பேசிக் கொண்டே இருப்பது இதுவும் வீணானது. எது நான்கு வார்த்தைகளில் காரியம் முடிந்து விடுமோ அதை 12-15 வார்த்தைகளில் பேசாதீர்கள். குறைவாக பேசுங்கள் - மெதுவாக

பேசுங்கள்... இந்த சுலோகனை கழுத்தில் டாலராக மாட்டிக் கொள்ளுங்கள். வீணானவை மற்றும் டிஸ்டர்ப் செய்யும் வார்த்தைகளிலிருந்து விடுபட்டீர்கள் என்றால் ,அவ்யக்த ஃபரிஷ்தா ஆவதில் மிகுந்த உதவி கிடைக்கும்.

**சுலோகன்: யார் தன்னை பரமாத்மா அன்பிற்காக அர்ப்பணம் செய்கிறாரோ வெற்றி அவருடைய கழுத்தின் மாலையாகி விடுகிறது.**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 09.05.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் ஒரே சீராக பறக்கும் மற்றும் பறக்கக் வைக்கும் பாடலைப் பாடுங்கள்!

இன்று அமிர்த வேளையிலிருந்து திலாராம் (பரந்த மனமுடைய) தந்தை ஒவ்வொரு இதயத்தின் அன்பிற்குரிய குழந்தைகளின் இதயத்தின் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தோம். பாடலை அனைவரும் பாடுகிறார்கள். மேலும் பாடலின் வரிகளும் அனைவரினுடையதும் ஒன்றாகத் தான் உள்ளது. அது பாபா! அனைவரும் பாபா, பாபா என்ற பாடலைப் பாடுகிறார்கள். அனைவருக்கும் இந்தப் பாடலை பாடத் தெரியுமா? இரவு பகலாக பாடிக் கொண்டேயிருக்கிறார்களா? ஆனால் வார்த்தைகள் நன்றாக இருந்த போதிலும் ஒவ்வொருவரின் பாடும் முறை ராகம் மற்றும் இசை வேறு வேறாக இருந்தது. சிலருடையது குஷியின் இசையாக இருந்தது, சிலருடையது பறக்கும் மற்றும் பறக்க வைக்கும் இசையாக இருந்தது, மேலும் சில குழந்தை களுடையது பயிற்சி செய்யும் இசையாக இருந்தது. சில நேரம் மிக நன்றாக, மேலும் முழுமையான பயிற்சி இல்லாத காரணத்தினால் தட்டுத் தடுமாறியும் பாடுகிறார்கள். ஒரு இசையில் இன்னொரு இசை கலந்து விடுகிறது. எப்படி இங்கே பாடலுடன் எப்பொழுது இசையை கேட்கிறார்கள் என்றால், சில பாடல் மற்றும் இசை நடனமாட வைப்பதாக இருக்கும், சில அன்பில் மூழ்க வைப்பதாக இருக்கும்., சில கூப்பாடு போடுவதின் பாடலாக இருக்கும். சில பாடல் பிராப்தியின் பாடலாக இருக்கும். பாப்தாதாவிடமும் பலவிதமான இரகசியம் மற்றும் விஷயம் நிரம்பிய பாடல் வந்து சேர்கிறது. சிலர் இன்றைய அறிவியலின் கண்டுபிடிப்பிற்கு ஏற்றப்படி இயல்பாகவே நிரந்தரமாக பாடலைப் பாடுகிறார்கள். நினைவு என்ற பொத்தான் எப்பொழுதும் திறந்திருக்கிறது, எனவே இயல்பாகவே மற்றும் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. சில நேரம் எப்பொழுது ஸ்விட்சை ஆன் செய்கிறார்களோ, அப்பொழுது பாடல் ஒலிக்கிறது.

## 1984 அவ்யக்த முரளி

அனைவருமே உள்ளப் பூர்வமாக பாடுகிறார்கள், ஆனால் சிலருடையது எப்பொழுதும் இயல்பாக மற்றும் ஒரே சீராக இருக்கும், சிலருடையது ஒலிக்க வைத்தால் ஒலிக்கும் ஆனால் சில நேரம் ஒரு மாதிரியும், வேறு சில நேரம் வேறு விதமான இசையாகவும் இருக்கும். குழந்தைகளின் பாடலைக் கேட்டு பாப்தாதா அனைவரின் இதயத்தில் ஒரே ஒரு தந்தை தான் நிரம்பியிருக்கிறார் என்று மகிழ்ச்சி அடைகிறார். ஆர்வம் மற்றும் ஈடுபாடும் ஒருவருடன் இருக்கிறது. அனைத்தையும் செய்து கொண்டிருந்தாலும் அனைத்தையும் ஒரு தந்தைக்காகச் செய்கிறார்கள். அனைத்து சம்மந்தமும் ஒரு தந்தையுடன் இணைந்து விட்டது. நினைவில், பார்வையில், வாயில், ஒரு தந்தை தான் இருக்கிறார். தந்தையை தன்னுடைய உலகமாக ஆக்கி விட்டார்கள். ஒவ்வொரு அடியிலும் தந்தையின் நினைவு மூலம் பல கோடி மடங்கு வருமானத்தையும் சேமித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் சிரேஷ்ட பாக்கியத்தின் நட்சத்திரமும் மின்னிக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரியான சிரேஷ்ட விசேஷ ஆத்மாக்கள் உலகின் எதிரில் உதாரணமானவர்களாகவும் ஆகி விட்டார்கள். கீரிடம் அணிந்த, திலகம் இட்ட சிம்மாசனதாரியாகவும் ஆகி விட்டார்கள். அந்த மாதிரியான சிரேஷ்ட ஆத்மாக்கள், அவர்கள் குணங்கள் அடங்கிய பாடலை சுயம் தந்தை பாடுகிறார். தந்தை ஒவ்வொரு குழந்தையின் பெயரின் மாலையை நினைவு செய்கிறார். அந்த மாதிரியான சிரேஷ்ட பாக்கியம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது தான் இல்லையா! பிறகு பாடலைப் பாடிக் கொண்டிருக்கும் பொழுதே இசையை ஏன் மாற்றுகிறீர்கள்? சில நேரம் பிராப்தியின், சில நேரம் கதறி கடின உழைப்பின், சில நேரம் அழைப்பதின், சில நேரம் மனம் உடைந்து போவதின் இசையாக ஏன் மாற்றுகிறீர்கள்? எப்பொழுதும் ஒரே சீராக பறக்கும் மற்றும் பறக்க வைக்கும் பாடலை ஏன் பாடுவதில்லை? அந்த மாதிரி பாடலை பாடுங்கள். கேட்பவர்கள் சிறகு முளைத்து பறந்து விட வேண்டும். நொண்டியாக இருப்பவர் கால்கள் கிடைத்து நடனமாடி விடவேண்டும். துக்கம் என்ற படுகையில் இருந்து எழுந்து சுகத்தின் பாடலை பாடி விடவேண்டும். கவலை என்ற சிதையில் அமர்ந்திருக்கும் ஆத்மா சிதையிலிருந்து எழுந்து குஷியில் நடனமாடி விடவேண்டும். மனமுடைந்திருக்கும் ஆத்மாக்கள் ஊக்கம் உற்சாகம் நிறைந்தப் பாடலை பாடுவதிலேயே

ஈடுபட்டு விடவேண்டும். பிச்சைக்கார ஆத்மாக்கள் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவராகி கிடைத்து விட்டது, அடைந்து விட்டேன் என்ற பாடலை பாடத் தொடங்கி விடவேண்டும். இந்த பிராப்தியை அடைவது உலக சேவைக்கு அவசியமாக இருக்கிறது. அல்ப கால சித்தியுள்ளவர்களின் (சாமியார்களின்) பின்னால் எவ்வளவு அலைந்துக் கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு தனது நேரத்தை பணத்தை அதற்காக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தற்சமயம் அனைத்து ஆத்மாக்களும் கடுமையாக உழைத்து செய்து களைப்படைந்து விட்டார்கள், சித்தி (வெற்றி) விரும்புகிறார்கள், அற்ப காலத்தின் சித்தி மூலமாக திருப்தி ஆகி விடுகிறார்கள், ஆனால் ஒரு விஷயத்தில் திருப்தி அடைகிறார்கள் என்றால், மற்ற அனேக விஷயங்கள் உருவாகி விடுகின்றன. நொண்டியானவர் நடக்கத் தொடங்கி விடுகிறார், ஆனால் மற்ற இச்சைகள் உருவாகி விடுகின்றன. இதுவும் ஆகி விட வேண்டும், இதுவும் ஆகி விடவேண்டும் என்று இச்சை உருவாகி விடுகிறது, எனவே தற்சமயத்திற்கு ஏற்றபடி ஆத்மாக்களாகிய நீங்கள் செய்யும் விதி இந்த சித்தி சொரூபத்திற்கானதாக இருக்கவேண்டும். அழியாத ஆன்மீக சித்தி மற்றும் ஆன்மீக அதிசயத்தைக் காண்பியுங்கள். இந்த அதிசயம் குறைந்ததா என்ன? முழு உலகத்தின் 99% சதவீகித ஆத்மாக்கள் கவலையின் சிதையில் இறந்துக் கிடக்கிறார்கள். அந்த மாதிரி இறந்தவர்களை உயிர் பெற்று எழச் செய்யுங்கள். புது வாழ்க்கை கொடுங்கள். ஒரு பிராப்தியின் கால்கள் இருக்கிறது மற்ற அனேக பிராப்திகளினால் நொண்டியாக இருக்கிறார்கள். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு அழியாத அனைத்து பிராப்தியின் கால்களைக் கொடுங்கள். குருடர்களை மூன்று கண்கள் உள்ளவர்களாக ஆக்குங்கள். மூன்றாவது கண்ணைக் கொடுங்கள், தன்னுடைய வாழ்க்கையின் சிரேஷ்ட தற்சமயத்தையும் மேலும் எதிர்காலத்தையும் பார்ப்பதற்கான கண் கொடுங்கள். இந்த சித்தியை உங்களால் செய்ய முடியாதா, இந்த ஆன்மீக அதிசயத்தைக் காண்பிக்க முடியதா? பிச்சைக்காரனை மகாராஜாவாக ஆக்க முடியாதா? அந்த மாதிரி சித்தி சொரூபத்தின் சேவைக்கான சக்திகளை தந்தை மூலமாக பிராப்தி செய்ய வில்லையா என்ன? இப்பொழுது விதி சொரூபத்திலிருந்து சித்தி சொரூபம் ஆகுங்கள். சித்தி சொரூபத்தின் சேவைக்கு பொறுப்பாளர் ஆகுங்கள். விதி என்றால் முயற்சி செய்யும் நேரத்தில் முயற்சி

செய்தீர்கள். இப்பொழுது முயற்சி செய்ததின் பலனாக சித்தி சொருபம் ஆகி சித்தி சேவையில் உலகின் எதிரில் பிரத்யக்ஷம் ஆகுங்கள். இப்பொழுது உலகத்தில் அழியாத சித்தி கொடுப்பவர்கள், காண்பிப்பவர்கள் மட்டுமில்லை, கொடுப்பவர்கள். சித்தி சொரூபமாக ஆக்குபவர்கள், இந்த ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயம் ஒன்றே ஒன்று தான், ஒரே ஒரு ஸ்தானம் தான் என்ற செய்தி முழு உலகிலும் பரவ வேண்டும். நீங்களோ சித்தி சொரூபமாக ஆகியிருக்கிறீர்கள் தான் இல்லையா!

முதலில் மும்பையில் இந்தப் பெயரை புகழ் அடையச் செய்யுங்கள், அடிக்கடி கடின உழைப்பு செய்வதிலிருந்து விடுபட்டு விடட்டும். இன்று இந்த வீயத்தில் கடுமையாக முயற்சி செய்தேன் இன்று இந்த விஷயத்தில் கடுமையாக முயற்சி செய்தேன் என்ற இது தான் முயற்சி செய்வதில் கடின உழைப்பு செய்வது. இந்த கடின உழைப்பிலிருந்து விடுபட்டு, பிராப்தி சொரூப சக்திசாலி ஆவது என்பது தான் சித்தி சொரூபம். இப்பொழுது சித்தி சொரூப, ஞான சொரூப ஆத்மாக்களாக ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள். கடைசி வரை கடின உழைப்பை செய்து கொண்டேயிருப்பீர்களா என்ன? எதிர்காலத்தில் பிராப்தியை அடைவீர்களா? முயற்சி செய்வதன் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தையோ இப்பொழுது தான் புசிக்க வேண்டும். இப்பொழுது பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துங்கள், பிறகு எதிர்கால பலன் என்ற பழத்தை உண்ணுங்கள். எதிர்காலத்திற்காக காத்திருந்து பிரத்யக்ஷ பலனை இழந்து விடாதீர்கள், இறுதியில் பலன் கிடைக்கும் என்ற ஆறுதலிலேயே இருந்து விடாதீர்கள், ஒன்றை செய்யுங்கள். பலமடங்கை அடையுங்கள் என்பது இப்பொழுதைய விஷயம் தான். புரிந்ததா? மும்பையைச் சேர்ந்தவர்கள் என்ன ஆவீர்கள்? எதிர்ப்பார்ப்பிலேயே ஆறுதல் அடைந்து விடுபவராக ஆக மாட்டீர்கள் தான் இல்லையா! உலகத்தில் சித்து பாபா பிரபலமானவர்களாக இருப்பார்கள், இவர் சித்து பாபா, சித்து யோகி என்று கூறுகிறார்கள் இல்லையா! மும்பையைச் சேர்ந்தவர்களும் சித்து சகஜயோகி அதாவது சித்தியை பிராப்தி செய்திருப்பவர்கள் தான் இல்லையா, நல்லது.

எப்பொழுதும் இயல்பாக ஒரே சீராக பறக்க வைக்கும் பாடலைப் பாடக்கூடிய, எப்பொழுதும் சித்தி சொரூபம் ஆனவராகி, அழியாத ஆன்மீக

சித்தியை பிராப்தி செய்விக்கக் கூடிய, ஆன்மீக அதிசயத்தை கான்பிக்கக்கூடிய அதிசயம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பிராப்தியினை சித்தி அனுபவம் செய்விக்கக் கூடிய, சித்தி சொரூப சகஜயோகி, ஞான சொரூப குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**குமாரிகளின் வெவ்வேறு குரூப்புடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1.** நீங்கள் எப்பொழுதும் ஆன்மீக நினைவில் இருக்கக்கூடிய ஆன்மீக குமாரிகள் தான் இல்லையா? தேக அபிமானத்தில் உள்ள குமாரிகளோ அதிகம் இருக்கிறார்கள் ஆனால் நீங்களோ ஆன்மீக குமாரிகள். எப்பொழுதும் ஆத்மாவின் நினைவில் இருப்பவர்கள். ஆத்மாவாக ஆகி ஆத்மாவைப் பார்ப்பவர்கள். இவர்களைத் தான் ஆன்மீக குமாரிகள் என்று கூறுவது. அப்படியானால் நீங்கள் எந்தவிதமான குமாரிகள்? எப்பொழுதாவது தேக அபிமானத்தில் வருபவர்கள் இல்லை தானே! தேக அபிமானத்தில் வருவது என்றால் மாயாவின் பக்கம் விழுவது மேலும் ஆன்மீக நினைவில் இருப்பவர்கள் என்றால் தந்தையின் அருகில் வருவது. நீங்கள் விழுபவர்கள் இல்லை, தந்தையுடன் இருப்பவர்கள். தந்தையுடன் யார் இருப்பார்கள்? ஆன்மீக குமாரிகள் தான் தந்தையுடன் இருக்க முடியும். எப்படி தந்தை சுப்ரீமாக இருக்கிறார், ஒருபொழுதும் தேக அபிமானத்தில் வருவதில்லை, அதே போல் நீங்களும் தேக அபிமானத்தில் வருபவர்கள் இல்லை. யாருக்கு தந்தை மேல் அன்பு இருக்கிறதோ, அவர் தினசரி அன்போடு நினைவு செய்வார், அன்புடன் ஞானத்தின் படிப்பை படிப்பார். எந்தக் காரியம் அன்போடு செய்யப்படுகிறதோ, அதில் வெற்றி கிடைக்கும். சொன்ன காரணத்திற்காக செய்கிறார் என்றால், கொஞ்ச காலம் வெற்றி கிடைக்கும், அன்போடு தனது மன விருப்பத் தோடு நடந்துக் கொள்பவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். தந்தை என்னவாக இருக்கிறார், மாயை என்ன என்று எப்பொழுது ஒருமுறை அனுபவம் செய்துவிட்டார் என்றால், ஒருமுறையின் அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றத்தில் வரமுடியாது. மாயா பலவிதமான ரூபத்தில் வருகிறது. துணிமணிகளின் ரூபத்தில் வருகிறது, தாய் தந்தையின் பாசத்தின் ரூபத்தில் வருகிறது, சினிமா ரூபத்தில் வருகிறது, ஊர் சுற்றும் ரூபத்தில் வருகிறது. இந்த குமாரிகள் என்னுடையவர்கள் ஆகி விட வேண்டும் என்று மாயா கூறும், தந்தை இவர்கள் என்னுடையவர்கள் ஆகி

விடவேண்டும் என்று கூறுவார். அப்பப்டியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

மாயாவை விரட்டுவதில் திறமைசாலியாக இருக்கிறீர்களா? பயப்படக்கூடிய பலஹீனமானவராக இல்லையே? தோழிகளின் சேர்க்கையில் வந்து சினிமா பார்க்கச் சென்றுவிடுவீர்கள் என்று அப்படி இல்லையே? சேர்க்கையின் பிரபாவத்தில் ஒருபொழுதும் வராதீர்கள். எப்பொழுதும் வீரம் நிறைந்தவராக, சதா அமரராக, சதா அழிவில்லாதவராக இருங்கள். எப்பொழுதும் தன்னுடைய வாழ்க்கையை சிரேஷ்டமானதாக ஆக்குங்கள். சாக்காடையில் விழாதீர்கள். சாக்கடை என்ற வார்த்தையே எப்படி இருக்கிறது. தந்தை கடலாக இருக்கிறார், கடலில் எப்பொழுதும் நீந்திக் கொண்டேயிருங்கள். குமாரி வாழ்க்கையில் ஞானம் கிடைத்து விட்டது, வழி கிடைத்து விட்டது, இலட்சியம் கிடைத்து விட்டது என்ற இவைகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது, நீங்கள் மிகவும் பாக்கியம் நிறைந்தவர்கள். இன்றைய உலகத்தின் நிலைமையைப் பாருங்கள், துக்கம் வேதனையைத் தவிர வேறு எந்த விஷயமும் இல்லை. சாக்கடையில் விழுந்து காயத்தின் மேல் காயத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள், இது தான் இன்றைய உலகம். இன்று திருமணம் செய்தார், நாளை எரிந்து இறந்துவிட்டார் என்ற செய்தியை கேட்கிறீர்கள் தான் இல்லையா, இன்று திருமணம் செய்தார், நாளை பிறந்த வீட்டிற்கு வந்துவிட்டார். ஒன்றோ சாக்கடையில் விழுந்தார், மற்றொன்று காயத்தின் மேல் காயம் ஏற்பட்டு விட்டது. உங்களுக்கும் அந்த மாதிரி காயம் ஏற்பட வேண்டுமா என்ன? எனவே எப்பொழுதும் தன்னை பாக்கியவான் ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். உங்களை தந்தை காப்பாற்றி விட்டார். தப்பித்துக் கொண்டேன், தந்தையின் குழந்தை ஆகி விட்டேன் என்று அந்த மாதிரி குஷி ஏற்படுகிறது தான் இல்லையா? பாப்தாதாவிற்கும் குஷி ஏற்படுகிறது, ஏனென்றால், விழுவதிலிருந்து ஏமாற்றம் அடைவதிலிருந்து தப்பித்துக் கொண்டீர்கள். எனவே எப்பொழுதும் அந்த மாதிரி அழியாதவராக இருங்கள்.

2. நீங்கள் அனைவரும் சிரேஷ்ட குமாரிகள் தான் இல்லையா? சாதாரண குமாரியிலிருந்து சிரேஷ்ட குமாரியாக ஆகி விட்டீர்கள். சிரேஷ்ட குமாரி எப்பொழுதும் சிரேஷ்ட காரியம் செய்வதற்குப் பொறுப்பாளர். நான் சிரேஷ்ட காரியம் செய்வதற்கு பொறுப்பாளராக இருக்கிறேன் என்று

# 1984 அவ்யக்த முரளி

எப்பொழுதும் தன்னை அனுபவம் செய்கிறீர்களா? சிரேஷ்ட காரியம் எது? உலகிற்கு நன்மை செய்வது அப்படி நீங்களோ உலகிற்கு நன்மை செய்யக்கூடிய உலக நன்மை செய்யும் குமாரிகள். நீங்கள் வீட்டில் இருக்கக்கூடிய குமாரிகள், கூடையைத் தூக்கக் கூடிய குமாரிகள் இல்லை. உலகிற்கு நன்மை செய்யக்கூடியவர்கள். யார் குலத்திற்கு நன்மை செய்கிறார் களோ, அவரைத் தான் குமாரி என்று கூறுகிறார்கள். முழு உலகமும் உங்கள் குலம்., எல்லையற்ற குலம் ஆகி விட்டது, சாதாரண குமாரிகள் தனது எல்லைக்குட்பட்ட குலத்திற்கு நன்மை செய்கிறார்கள். மேலும் சிரேஷ் குமாரிகள் உலகின் குலத்திற்கு நன்மை செய்வார்கள். நீங்கள் அப்படிப்பட்டவர்கள் தான் இல்லையா? பலஹுன மானவரோ பயப்படுபவரோ இல்லை, எப்பொழுதும் தந்தை உடன் இருக்கிறார். எப்பொழுது தந்தையின் துணை இருக்கிறது என்றால், பயப்படுவதற்கான எந்த விஷயமும் இல்லை. மிகவும் நல்லது. குமாரி வாழ்க்கையில் தப்பித்துக் கொண்டீர்கள். இது மிக நல்ல மிகப் பெரிய பாக்கியம். தவறான பாதையில் சென்று பிறகு திரும்பி வருவது இதில் வீணாகிறது நேரம் அல்லவா? அப்படி நேரம் சக்தி மிச்சம் ஆகி விட்டன. அலைவதின் கஷ்டத்திலிருந்து விடுபட்டுவீட்டீர்கள், எவ்வளவு இலாபம் ஆகி விட்டது. ஆஹா! எனது சிரேஷ்ட பாக்கியமே ஆஹா! என்பதை பார்த்து எப்பொழும் மகிழ்ச்சியாக இருங்கள். எந்தவொரு பலஹுனத்தின் காரணமாக தனது சிரேஷ்ட சேவையிலிருந்து வஞ்சிக்கப் பட்டவர் ஆகி விடாதீர்கள்.

3.குமாரி என்றால் மகான். தூய்மையான ஆத்மாவை எப்பொழுதும் மகான் ஆத்மா என்று கூறப்படும். இன்றைய நாட்களில் மகாத்மாக்கள் கூட மகான் ஆத்மா எப்படி ஆனார்கள்? தூய்மையாக இருக்கிறார்கள். தூய்மையின் காரணமாகத் தான் மகான் ஆத்மா என்று அழைக்கப்படுகிறார்கள் ஆனால் மகான் ஆத்மாக்களாகிய உங்களின் எதிரில் அவர்கள் ஒன்றுமே இல்லை. உங்களுடைய மகான் தன்மை ஞானம் நிறைந்த அழியாத மகான் தன்மை. அவர்கள் ஒரு ஜென்மத்தில் மகானாக ஆவார்கள். பிறகு இன்னொரு ஜென்மத்தில் மீண்டும் ஆகவேண்டியதாக இருக்கும். நீங்கள் பல பிறவிகளுக்கு மகான் ஆத்மாக்கள். இப்பொழுதைய மகான் நிலை மூலமாக பல பிறவிகளுக்கு மகான் ஆகி விடுவீர்கள். 21-ஜென்மங்கள் மகானாக இருப்பீர்கள். எனவே என்னவானாலும் சரி, ஆனால் தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறேன்

என்றால், எப்பொழுதும் தந்தையின் குழந்தையாக இருப்பேன் என்று அந்த மாதிரி உறுதியானவர் தான் இல்லையா? உறுதியற்றவராக ஆனீர்கள் என்றால் மாயை சாப்பிட்டு விடும். மாயா உறுதியானவரை சாப்பிடுவதில்லை, உறுதியற்றவரை சாப்பிட்டு விடும். உறுதியானவர்களாக இருங்கள். பாருங்கள் உங்கள் அனைவருடைய புகைப்படம் எடுக்கப் பட்டுப் கொண்டிருக்கிறது. நீங்கள் பயப்படுபவர்களோ இல்லை தானே. எந்தளவு உறுதியானவராக இருக்கிறீர்களோ, அந்தளவு குஷியின் அனுபவம், அனைத்து பிராப்திகளின் அனுபவம் செய்வீர்கள். உறுதியானவர் இல்லையென்றால் எப்பொழுதுமே குஷியாக இருக்காது. எப்பொழுதும் தன்னை மகான் ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். மகான் ஆத்மா மூலமாக அந்த மாதிரி எந்தவொரு சாதாரண காரியமும் நடக்க முடியாது. மகான் ஆத்மா ஒருபொழுதும் யார் எதிரிலும் தலை வணங்க முடியாது. எனவே நீங்கள் மாயாவின் பக்கம் ஒருபொழுதும் தலை குனிபவர்கள் இல்லை. குமாரி என்றால் கரங்கள். குமாரிகள் சக்தியாவது என்றால், சேவையில் வளர்ச்சியாவது, இவர்கள் வருங்காலத்தின் உலக சேவாதாரி உலகிற்கு நன்மை செய்யக்கூடிய விசேஷ ஆத்மாக்கள் என்று தந்தைக்கு குஷி இருக்கிறது.

4. குமாரிகள் சிறியவர்களோ அல்லது பெரியவர்களோ, ஆனால் அனைவரும் 100-பிரமணர்களை விட உத்தம குமாரிகள். தன்னை அப்படி நினைக்கிறீர்களா? 100-பிராமணர்களை விட உத்தம கன்னியா என்று ஏன் வர்ணிக்கப்படுகிறது? ஒவ்வொரு கன்னியாவும் குறைந்ததிலும் குறைந்தது 100-பிராமணர்களை அவசியம் தயார் செய்வார்கள், எனவே 100-பிராமணர்களை விட உத்தம கன்னியா என்று கூறபடுகிறது. 100-என்பது ஒன்றுமே இல்லை, நீங்களோ உலகிற்கு சேவை செய்வீர்கள். நீங்கள் அனைவரும் 100-பிராமணர்களை விட உத்தம கன்னியாக்கள். நீங்கள் அனைத்து ஆத்மாக்களையும் சிரேஷ்டமாக்கக் கூடிய சிரேஷ்டமானவர்கள். அம்மாதிரி போதை இருக்கிறதா? நீங்கள் கல்லுரியின், பள்ளியின் குமாரி இல்லை. ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலத்தின் குமாரிகள், நீங்கள் எந்தக் குமாரி என்று யாராவது கேட்டால், நாங்கள் ஈஷ்வரிய விஸ்வ வித்தியாலத்தின் குமாரிகள் என்று கூறுங்கள். இந்த ஒவ்வொரு குமாரிகளும் சேவாதாரி குமாரிகளாக ஆகுபவர்கள். எத்தனை செண்டர்களை திறப்பீர்கள். குமாரிகளைப்

பார்த்து, இவர்கள் அனைவரும் எத்தனை சேவைக் கரங்களாக தயார் ஆகிக் கொண்டிருக்கிறார்கள் என்று தந்தைக்கு இந்த குஷி தான் இருக்கிறது. நீங்கள் வலது கரம் தான் இல்லையா? இடது கரம் இல்லை. இடது கரத்தால் என்ன காரியம் செய்கிறார்களோ அது கொஞ்சம் மேலே கீழே போக முடியும். வலது கரம் மூலம் வேலை துரிதமாகவும், நல்லதாகவும் நடக்கும். எனவே இத்தனை அனைத்து குமாரிகளும் தயார் ஆகி விட்டார்கள் என்றால், எத்தனை சென்டர்கள் திறக்கப் பட்டு விடும். எங்கே அனுப்பினாலும் அங்கே செல்வீர்கள் தான் இல்லையா? எங்கு அமர வைக்கிறோமோ, அங்கு அமர்வீர்கள் இல்லையா? குமாரிகள் அனைவரும் மகான் ஆவார்கள். எப்பொழுதுமே மகானாக இருங்கள். ஒருபொழுதும் தீய சேர்க்கையில் வராதீர்கள். ஒருவேளை யாராவது உங்கள் மேல் பிரபாவம் ஏற்படுத்த விரும்புகிறார் என்றால், நீங்கள் அவர் மீது பிரபாவம் ஏற்படுத்தி விடுங்கள். தாய் தந்தையர் பந்தனத்தை போட விரும்பினாலும் கூட நீங்கள் பந்தனத்தில் மாட்டிக் கொள்பவர்கள் இல்லை. எப்பொழுதும் பந்தனமற்றவர், எப்பொழும் பாக்கியவான். குமாரி வாழ்க்கை பூஜைக்குரிய வாழ்க்கை. பூஜைக்குரியவர் ஒருபொழுதும் பூஜையாரியாக ஆக முடியாது. நீங்கள் எப்பொழுதுமே இதே போதையில் இருப்பவர்கள். நல்லது.

5. நீங்கள் அனைவரும் தேவிகள் தான் இல்லையா? குமாரி என்றால் அவர் தேவி. யார் தவறான மார்க்கத்தில் செல்கிறாரோ, அவர் தாசியாகி விடுகிறார். மேலும் யார் மகான் ஆத்மா ஆகிறாரோ, அவர்கள் தான் தேவிகள். தாசி தலை வணங்குவார், நீங்கள் அனைவருமே தாசிகள் ஆகுபவர்கள் இல்லை, தேவிகள். தேவிகளுக்கு எந்தளவு பூஜை நடக்கிறது. இந்த பூஜை உங்களுடையது தான் இல்லையா? சிறியவர்களோ அல்லது பெரியவர்களோ நீங்கள் அனைவரும் தேவிகள். எனவே நான் மகான் ஆத்மா தூய்மையான ஆத்மா என்ற இதே நினைவை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள், அது போதும். தந்தையின் குழந்தையாவது ஒன்றும் குறைந்த விஷயம் இல்லை ஆனால் சொல்வதில் சகஜமான விஷயமாக ஆகி விட்டது ஆனால் யாருடையவராக ஆகியிருக்கிறீர்கள்? எவ்வளவு உயர்ந்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள்? எந்தளவு விசேஷ ஆத்மாவாக ஆகியிருக்கிறீர்கள்? நான் எந்தளவு மகான், எந்தளவு உயர்ந்த ஆத்மா என்று நடைமுறை காரியங்களை செய்து கொண்டே நினைவு இருக்கிறதா?. பாக்கியவான்

ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் தன்னுடைய பாக்கியம் நினைவு இருக்க வேண்டும். நீங்கள் யார்? தேவி. தேவி எப்பொழுதும் புன்முறுவலுடன் இருப்பார். தேவி ஒருபொழுதும் அழுவதில்லை. தேவிகளின் படங்களின் எதிரில் சென்றீர்கள் என்றால் என்ன பார்க்க முடிகிறது? எப்பொழுதும் புன்முறுவலுடன் சிரித்துக் கொண்டேயிருக்கிறார். திருஷ்டி மூலம், கைகள் மூலம் எப்பொழுதும் கொடுக்கக் கூடிய தேவி. தேவதா அல்லது தேவி என்பதின் அர்த்தமே கொடுப்பவர். நீங்கள் என்ன கொடுப்பவர்கள்? அனைவருக்கும் சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பு அனைத்து பொக்கி'ங்களை கொடுக்கக் கூடிய தேவிகள் நீங்கள். நீங்கள் வலது கரங்கள். வலது கரம் என்றால் சிரேஷ்ட காரியம் செய்பவர்.

**வரதானம்: வீணான எண்ணங்களின் காரணத்தைத் தெரிந்து அதை அகற்றக்கூடிய சமாதான சொரூபம் ஆகுக!**

வீணான எண்ணம் உருவாவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அபிமானம் மற்றும் இரண்டாவது அவமானம். எனக்கு ஏன் குறைவாக இருக்கிறது, எனக்கும் இந்த பதவி இருக்க வேண்டும், என்னையும் முன்னுக்கு வைக்க வேண்டும். இது தன்னுடைய அவமானம் என்று நினைக்கிறீர்கள் அல்லது பிறகு அபிமானத்தில் வருகிறீர்கள். பெயரில், மரியாதையில், முன்னுக்கு வருவதில், சேவையில். அபிமானம் அல்லது அவமானத்தை உணர்வது என்ற இது தான் வீணான எண்ணங்களுக்கான காரணம். இந்த காரணத்தை தெரிந்து நிவாரணம் செய்வது தான் சமாதான சொரூபம் ஆவது.

**சுலோகன்: அமைதியின் சக்தி மூலமாக இனிமையான இல்லத்திற்கு யாத்திரை செய்வது மிக சுலபம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.05.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணர்களின் ஒவ்வொரு காலடி, எண்ணம், செயலின் மூலம் சட்டத்தின் படைப்பு!

உலகை படைப்பவர் தன்னுடைய புது உலகைப் படைக்கக்கூடிய புது உலகின் எதிர்கால குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகள் உங்களுடைய எதிர்காலம் உலகின் எதிர்காலம். நீங்கள் புது உலகின் ஆதார சொரூப சிரேஷ்ட குழந்தைகள். புது உலகின் இராஜ்ய பாக்கியத்திற்கு உரிய விசேஷ ஆத்மாக்கள். உங்களுடைய புது வாழ்க்கை உலகின் புது படைப்பை செய்கிறது. உலகை சிரேஷ்டாச்சாரி, சுகம், சாந்தி நிரம்பியதாக ஆக்கத் தான் வேண்டும். உங்கள் அனைவருடைய இந்த சிரேஷ்ட திட எண்ணத்தின் விரல் மூலம் கலியுகத்து துக்கமான உலகம் மாறி சுகமான உலகம் ஆகி விடுகிறது. ஏனென்றால், சர்வ சக்தி வான் தந்தையின் ஸ்ரீமத்படி நீங்கள் சகயோகி ஆகியிருக்கிறீர்கள். எனவே தந்தையுடன் சேர்த்து உங்கள் அனைவரின் சகயோகம், சிரேஷ்ட யோகம் உலக மாற்றத்தை செய்து விடுகிறது. சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுடைய இந்த நேரத்து சகஜயோகி, இராஜயோகி வாழ்க்கையின் ஒவ்வொரு அடி, ஒவ்வொரு காரியமும் புது உலகின் சட்டம் ஆகி விடுகிறது. பிராமணர்களின் விதி நிரந்தரமாக விதான் அதாவது சட்டம் ஆகி விடுகிறது. எனவே வள்ளலின் குழந்தைகள் வள்ளலாக உருவாக்குபவராக மேலும் விதியைப் படைப்ப வராக ஆகி விடுகிறார்கள். இந்தக் கடைசி ஜென்மம் வரையிலும் வள்ளலின் குழந்தைகள் உங்களுடைய படங் களிடம் பக்தர்கள் வேண்டுதல் செய்து கொண்டே இருக்கிறார்கள். அந்த மாதிரி விதியை உருவாக்குபவர்கள் ஆகி விடு கிறீர்கள். இன்று வரையிலும் தலைமை நீதிபதியும் சத்திய பிரமாணம் செய்விக்கும் நேரம் ஈஸ்வரனின், இஷ்ட தேவதையின் நினைவு சொரூபமானவராக ஆக்கி, சத்திய பிரமாணத்தை எடுக்க வைக்கிறார்கள். கடைசி ஜென்மத்திலும் சட்டத்தில் விதியை

உருவாக்கும் குழந்தைகள் உங்களின் சக்தி நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. தன்னுடைய உறுதிமொழி எடுப்பதில்லை, தந்தையின், உங்களின் மகத்துவம் வைப்பார்கள். நீங்கள் எப்பொழுதும் வரம் அளிக்கும் சொரூபமானவராகவும் இருக்கிறீர்கள். பல விதமான வரதானம், பல விதமான தேவதைகள் மற்றும் தேவிகளிடமிருந்து உங்களுடைய படங்கள் மூலமாகத் தான் வேண்டுதல் செய்கிறார்கள். சிலர் சக்தியின் தேவதையாக, சிலர் கல்வியின் தேவியாக இருக்கிறார். நீங்கள் வரமளிக்கும் சொரூபமாக ஆகியிருக்கிறீர்கள். அதனால் தான் இன்று வரையிலும் பரம்பரை பக்தியின் தொடக்கத்திலிருந்து இருந்து வந்திருக்கிறது. எப்பொழுதும் பாப்தாதா மூலமாக அனைத்து பிராப்தி சொரூப பிரசன்னம் (மலர்ச்சி) நிரம்பியவராக பாராட்டுக்குரிய சொரூபம் நிரம்பியவராக ஆகியிருக்கிறீர்கள். எனவே தான் தன்னை பிரசன்னம் ஆக்குவதற்கு தேவி தேவதைகளை பிரசன்னம் ஆக்குகிறார்கள். ஏனென்றால் இவர்கள் தான் நம்மை சதா காலத்திற்கும் பிரசன்னமாக ஆக்குவார்கள். அனைத்தையும் விட மிக உயர்ந்த பொக்கிஷம் திருப்தி. இதை நீங்கள் அனைவரும் தந்தையிடமிருந்து பெற்றிருக்கிறீர்கள். எனவே திருப்தியை பெறுவதற்காக சந்தோஷி தேவியை பூஜை செய்து கொண்டே இருக்கிறார்கள். திருப்தியான ஆத்மாக்கள் நீங்கள் அனைவரும் சந்தோஷிமா தான் இல்லையா? நீங்கள் அனைவருமே சந்தோஷிகள் தான் இல்லையா? நீங்கள் அனைவரும் திருப்தியான ஆத்மாக்கள், திருப்தி மூர்த்திகள். பாப்தாதா மூலமாக வெற்றியை பிறப்புரிமை ரூபத்தில் பிராப்தி செய்திருக்கிறீர்கள். எனவே வெற்றியின் தானத்தை, வரதானத்தை உங்களுடைய படங்கள், விக்கிரகங் களிலிருந்து வேண்டுகிறார்கள். அல்ப புத்தியாக மட்டும் இருக்கும் காரணத்தினால், பலமற்ற ஆத்மாக்களாக இருக்கும் காரணத்தினால், பிச்சைக்கார ஆத்மாக்களாக இருக்கும் காரணத்தினால் அற்ப காலத்தின் வெற்றியைத் தான் கேட்கிறார்கள். எப்படி பிச்சைக்காரன் ஒருபொழுதும் ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று கேட்க மாட்டான். கொஞ்சம் பைசா கொடுத்து விடுங்கள், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கொடுத்து விடுங்கள் என்று தான் கேட்பான். அதே போல் இந்த ஆத்மாக்களும் சுகம், சாந்தி தூய்மையின் பிச்சைக்காரர்கள். அற்ப காலத்திற்கான வெற்றியைக் கேட்பார்கள். என்னுடைய இந்த காரியம் நடந்து விட வேண்டும், இதில் வெற்றி கிடைத்து விட வேண்டும் என்று தான் கேட்பார்கள் ஆனால் வெற்றி சொரூப ஆத்மாக்கள் உங்களிடமிருந்து தான் கேட்பார்கள்.

# 1984 அவ்யக்த முரளி

திலாராம் தந்தையின் குழந்தைகள் நீங்கள் பரந்த இதயமுடைய தந்தைக்கு உங்களுடைய இதயத்தின் அனைத்து விஷயத்தையும் கூறுகிறீர்கள். வேறு எந்த ஆத்மாக்களுடனும் பேச முடியாத விஷயங் களை பாப்தாதாவிடம் கூறுகிறீர்கள். உண்மையான தந்தையின் உண்மையான குழந்தைகள் ஆகிறீர்கள். இப்பொழுதும் உங்களுடைய படங்கள் விக்கிரகங்களின் எதிரில் அனைவரும் தனது இதயத்தின் விஷயங்களைக் கூறிக் கொண்டே இருப்பார்கள். ஏதாவது மறைக்க வேண்டிய விஷயமாக இருந்தால் தன்னுடைய நண்பர்கள், உறவினர்களிடமிருந்து மறைத்து விடுவார்கள் ஆனால் தேவி தேவதைகளிடம் மறைக்க மாட்டார்கள். உலகத்தின் எதிரில் நான் இருப்போம், உண்மையானவன், மகான் என்றெல்லாம் கூறுவார்கள் ஆனால் தேவதைகளின் எதிரில் என்ன கூறுவார்கள்? நான் என்னவாக இருக்கிறேனோ அது இப்படி தான்! காமியாகவும் இருக்கிறேன் மற்றும் கபடனாகவும் இருக்கிறேன். ஆக, நீங்கள் புது உலகத்தின் எதிர்காலம். ஒவ்வொருவரின் எதிர்காலத்தில் தூய்மையான புது உலக இராஜ்யத்தின் பாக்கியம் இருக்கிறது.

நீங்கள் அந்த மாதிரியான உருவாக்குபவர், வரமளிப்பவர், விதியை உருவாக்கக்கூடிய மிக சிரேஷ்ட ஆத்மாக்கள். ஒவ்வொருவரின் சிரேஷ்ட வழி என்ற கைகளில் சொர்க்கத்தின் சுயராஜ்யத்தின் பூமி உருண்டை இருக்கிறது. இது தான் வெண்ணெய், இராஜ்ய பாக்கியத்தின் வெண்ணெய். ஒவ்வொருவரின் தலை மேல் தூய்மையின் மகான் தன்மையின், ஒளியின் கிரீடம் இருக்கிறது. நீங்கள் இதயசிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள். சுயராஜ்யத்தின் திலகம் இடப்பட்டவர்கள். எனவே நான் யார் என்பதைப் புரிந்து கொண்டீர்களா? நான் யார் என்ற கேள்விக்கு விடை பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா? முதல் நாள் பாடத்தில் இதை படித்தீர்கள் இல்லையா? நான் யார்? நான் இது இல்லை மேலும் நான் இதுவாகும். இதிலேயே தான் முழு ஞானக்கடலின் ஞானம் நிரம்பியிருக்கிறது. அனைத்தையும் தெரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா? எப்பொழுதுமே இந்த ஆன்மீக போதை உங்களுடனேயே இருக்கட்டும். நீங்கள் அந்த அளவு சிரேஷ்ட ஆத்மாக்கள், மகான்கள். ஒவ்வொரு அடி, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு செயலும் நினைவுச்சின்னம் ஆகிக் கொண்டிருக்கிறது. சட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதே உயர்ந்த நினைவில் எழுப்பி விடுங்கள்.

புரிந்ததா? முழு உலகத்தின் பார்வை ஆத்மாக்கள் உங்கள் பக்கம் இருக்கிறது. நான் என்ன செய்வேனோ அது உலகிற்காக சட்டமாகவும் மற்றும் நினைவுச்சின்னமாகவும் ஆகி விடும். நான் குழப்பத்தில் வந்தேன் என்றால் உலகம் குழப்பத்தில் வந்து விடும். நான் திருப்தியாக, மகிழ்ச்சியில் இருந்தேன் என்றால் உலகம் திருப்தியாக மற்றும் மகிழ்ச்சி நிறைந்ததாக உருவாகும். அந்த அளவு பொறுப்பு ஒவ்வொரு புது உலக படைப்பின் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களிடம் இருக்கிறது ஆனால் எவ்வளவு பெரியதோ அந்த அளவு லேசானது. ஏனென்றால், சர்வ சக்திவான் தந்தை உடன் இருக்கிறார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மாஸ்டர் படைப்பவர், வரமளிக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் அனைத்து பிராப்தி சொரூப திருப்தியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் நினைவு மூலமாக ஒவ்வொரு காரியத்தையும் நினைவுச் சின்னமாக ஆக்கக்கூடிய பூஜைக்குரிய மகான் ஆத்மாக்களுக்கு உருவாக்குபவர், வரமளிக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**குமாரர்களின் தனித்தனி குரூப்புடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1)** நீங்கள் அனைவரும் சிரேஷ்ட குமார் தான் இல்லையா? நீங்கள் சாதாரண குமார் இல்லை, சிரேஷ்ட குமார். உடலின் சக்தி, மனதின் சக்தி அனைத்தையும் சிரேஷ்ட காரியத்தில் ஈடுபடுத்துபவர்கள். எந்தவொரு சக்தியையும் விநாஷ காரியத்தில் ஈடுபடுத்துபவர்கள் இல்லை. விகார காரியம் தான் விநாஷ காரியம். சிரேஷ்ட காரியம் ஈஸ்வரிய காரியம். அந்த மாதிரி நீங்கள் அனைத்து சக்திகளையும் ஈஸ்வரிய காரியத்தில் ஈடுபடுத்தும் சிரேஷ்ட குமாரர்கள். எங்காவது வீணான கணக்கிலோ ஏதாவது சக்தியை ஈடுபடுத்தவில்லையே? இப்பொழுது தன்னுடைய சக்தியை எங்கு ஈடுபடுத்த வேண்டும் என்ற விவேகம் கிடைத்து விட்டது. இதே விவேகம் மூலமாக எப்பொழுதும் சிரேஷ்ட காரியம் செய்யுங்கள். அந்த மாதிரி எப்பொழுதும் சிரேஷ்ட காரியத்தில் இருப்பவர்கள் சிரேஷ்ட பிராப்தியின் அதிகாரி ஆகி விடுகிறார்கள். நீங்கள் அந்த மாதிரியான அதிகாரியா? சிரேஷ்ட பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்களா? அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு

வருமானம் சேமிப்பாகிக் கொண்டிருக்கிறது என்ற இந்த அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? யாருக்கு ஒரு அடியில் பல மடங்கு வருமானம் சேமிப்பு ஆகிறது என்றால் அவர் எவ்வளவு சிரேஷ்டமானவராக இருப்பார். யாருக்கு இந்த அளவு செல்வம் சேமிப்பாகிறதோ, அவர் எவ்வளவு குஷியாக இருப்பார். இன்றைய நாட்களின் இலட்சாதிபதி, கோடீஸ்வரர்களுக்கும் அழியும் குஷி இருக்கிறது. உங்களுடையதோ அழியாத சொத்து. சிரேஷ்ட குமாரின் விளக்கத்தை புரிந்திருக்கிறீர்களா? எப்பொழுதுமே ஒவ்வொரு சக்தியையும் சிரேஷ்ட காரியத்தில் ஈடுபடுத்துபவர். வீணான கணக்கு நிரந்தரமாக முடிந்து விட்டதா, சிரேஷ்ட கணக்கின் சேமிப்பு ஆனதா அல்லது இரண்டுமே இருக்கிறதா? ஒன்று முடிவடைந்து விட்டது இரண்டாவது இப்பொழுது செல்வதற்கான காலம் இல்லை. இப்பொழுது அது (வீணானது) சதா காலத்திற்காக முடிந்து விட்டது. இரண்டுமே இருக்கிறது என்றால் எவ்வளவு சேமிப்பு ஆக வேண்டுமோ அவ்வளவு ஆகாது. இழக்கவில்லை, சேமிப்பு ஆனது என்றால் எவ்வளவு சேமிப்பு ஆனது. எனவே வீணான கணக்கு முடிவடைந்தது, பயனுள்ள கணக்கு சேமிப்பானது.

2) குமார வாழ்க்கை சக்திசாலியான வாழ்க்கை. குமார வாழ்க்கையில் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். தன்னை சிரேஷ்டமாக ஆக்க விரும்பினாலும் சரி, அல்லது தன்னை கீழே விழ வைத்தாலும் சரி, அப்படி இந்த குமார வாழ்க்கை தான், உயர்வானதாக அல்லது தாழ்ந்ததாக ஆக்கக்கூடியது. அந்த மாதிரியான வாழ்க்கையில் நீங்கள் தந்தையின் குழந்தை ஆகி விட்டீர்கள். அழியும் வாழ்க்கை துணைவியின் கர்ம பந்தனத்தில் மாட்டிக் கொள்வதற்கு பதிலாக உண்மையான வாழ்க்கை துணைவனை அடைந்து விட்டீர்கள். நீங்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள். இப்பொழுது வந்திருக்கிறீர்கள் என்றால் தனியாக வந்தீர்களா அல்லது இணைந்தவராகி வந்தீர்களா? (இணைந்து) டிக்கெட் வாங்குவதற்காகவோ செலவு செய்யவில்லை தான் இல்லையா? அப்படி இதுவும் மிச்சமாகி விட்டது. ஒருவேளை சரீர ரீதியான துணைவர்களை அழைத்து வந்தீர்கள் என்றால் டிக்கெட்டிற்காக செலவு செய்ய வேண்டும், அவர்களுடைய சாமான்களையும் தூக்க வேண்டும். மேலும் சம்பாதித்து தினசரி உணவளிக்கவும் வேண்டும். இந்த துணைவனோ உணவருந்துவதும் இல்லை, வாசனையை மட்டும் எடுத்துக் கொள்கிறார்.

உணவு குறைந்து விடுவதில்லை, இன்னும் அதிக சக்தி நிறைந்து விடுகிறது. அந்த மாதிரி எந்த செலவில்லாமல் மேலும் எந்தக் கடினமும் இல்லாமல் மேலும் துணைவனும் அழியாதவர், சகயோகமும் முழுமையாக கிடைக்கிறது. கஷ்டப்பட வைப்பதில்லை மேலும் சகயோகம் கொடுக்கிறார். ஏதாவது கடினமான காரியம் வந்தது, நினைவு செய்தீர்கள் மேலும் சகயோகம் கிடைத்தது. நீங்கள் அந்த மாதிரி அனுபவிகள் தான் இல்லையா. எப்பொழுது பக்தர்களுக்கும் பக்தியின் பலன் கொடுப்பவராக இருக்கிறார் என்றால் யார் வாழ்க்கை துணையாக ஆகுபவர்களோ அவர்களுக்கு துணை கொடுக்க மாட்டாரா? குமாரர்கள் இணைந்தவர்களாகவோ ஆகியிருக்கிறார்கள் ஆனால் இவ்வாறு இணைந்ததில் எந்தக் கவலையும் இல்லாதவர்களாக ஆகி விட்டார்கள். எந்தப் பிரச்சனையும் இல்லை, கவலையற்றவர். இன்று குழந்தை நோயுற்றது, இன்று குழந்தை பள்ளி செல்லவில்லை. . . இம்மாதிரி எந்தச் சுமையும் இல்லை. எப்பொழுதும் பந்தனமற்றவர். ஒருவரின் பந்தனத்தில் கட்டப்படுவதினால் அனேக பந்தனங்களிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். உலகின் கணக்குப்படியும் நல்லவர்களாகவே இருக்கிறீர்கள். இந்த உலகத்தின் பிரச்சனைகளிலிருந்து தப்பித்துக் கொண்டேன் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா! ஆத்மாவின் விஷயத்தை விடுங்கள், உடலின் கர்ம பந்தனத்தின் கணக்கிலிருந்தும் தப்பித்துக் கொண்டீர்கள். அந்த மாதிரி பாதுகாப்பாக இருக்கிறீர்கள். எப்பொழுதாவது ஏதாவது ஒரு ஞானியை துணைவியாக ஆக்கிக் கொள்ளலாம் என்று மனம் விரும்புகிறதா? ஏதாவது குமாரிக்கு நன்மை செய்து விட வேண்டும் என்று மனம் விரும்புகிறதா? இது நன்மை செய்வதில்லை, ஆனால் தீமை செய்வது. ஏன்? ஒரு பந்தனத்தில் கட்டிப்போட்டீர்கள் மேலும் அனேக பந்தனம் தொடங்கியது. இந்த பந்தனம் அனேக பந்தனங்களை உருவாக்குகிறது, எனவே உதவி கிடைப்பதில்லை. சுமை ஆகி விடும். பார்ப்பதற்கு உதவி செய்வது போல் இருக்கும், ஆனால் இருப்பது அனேக விஷயங்களின் சுமை. எந்தளவு சுமை என்று கூற முடியுமோ அந்த அளவு சுமை. அப்படி அனேக சுமைகளிலிருந்து பாதுகாப்பாகி விட்டீர்கள். ஒருபொழுதும் கனவில் கூட நினைக்காதீர்கள், இல்லையென்றால் அந்த மாதிரி சுமை அனுபவம் ஆகும். அதை தூக்குவதே மிகக் கடினமாக இருக்கும். சுதந்திரமாக இருந்து விட்டு பந்தனத்தில் மாட்டிக் கொண்டீர்கள் என்றால் பல மடங்கு சுமை இருக்கும். அவர்கள் பாவம் அறியாமையில் கட்டப்பட்டார்கள், ஆனால் நீங்கள் தெரிந்தும்

வேண்டுமென்றே கட்டப்பட்டீர்கள் என்றால், இன்னும் வேதனைப்படுவதின் சுமை இருக்கும். நீங்களோ ஒன்றும் அறியாத முதிர்ச்சியற்ற குழந்தைகளோ இல்லை. முதிர்ச்சியற்றவர்களுக்கு பிராப்தி ஒன்றும் இருப்பதில்லை. அங்கேயும் இல்லை, இங்கேயும் இல்லை என்றாகி விடுவார். உங்களுக்கோ சத்கதி ஆகி விட்டது தான் இல்லையா. சத்கதி என்றால் சிரேஷ்ட கதி. சிறிதளவு எண்ணம் வருகிறதா? உங்களுடைய புகைப்படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருவேளை கொஞ்சம் மேலே கீழே செய்தீர்கள் என்றால், புகைப்படத்தில் வந்து விடும். எந்தளவு உறுதியானவராக ஆவீர்களோ அந்தளவு நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் சிரேஷ்டமாக இருக்கும்.

3) நீங்கள் அனைவரும் சக்திசாலியான குமார்கள் தான் இல்லையா? சக்திசாலியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கும் ஆத்மாக்கள், என்னென்ன எண்ணம் வைக்கிறார்கள், என்ன வார்த்தை பேசுகிறார்கள் மேலும் என்ன காரியம் செய்வார்களோ அது சக்திசாலியாக இருக்கும். சக்தி நிறைந்ததின் அர்த்தமே வீணானதை முடித்து விடுவது. வீணான கணக்கை முடித்து சக்திசாலியான கணக்கை எப்பொழுதும் சேமிப்பவர்கள். வீணானவை எப்பொழுதாவது இருக்கிறதா? வீணான எண்ணம் அல்லது வீணான பேச்சு அல்லது நேரம் வீணாவது. ஒருவேளை ஒரு விநாடிக் கூட வீணாக சென்று விட்டது என்றால் எவ்வளவு சென்று விட்டது. சங்கமயுகத்தில் ஒரு விநாடி கூட எவ்வளவு பெரியது. ஒரு விநாடி இல்லை ஆனால், ஒரு விநாடி ஒரு ஜென்மத்திற்குச் சமமானது. அப்படி ஒரு விநாடி இல்லை, ஒரு ஜென்மம் வீணாகச் சென்று விட்டது. நீங்கள் அந்த மாதிரி மகத்துவத்தைத் தெரிந்திருக்கும் சக்தி நிறைந்த ஆத்மாக்கள் தான் இல்லையா? நான் சர்வ சக்திவான் தந்தையின் குழந்தை, சக்திசாலியான ஆத்மா, சக்திசாலியான காரியங்கள் செய்வதற்கு பொறுப்பாளன் என்ற நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். பிறகு எப்பொழுதுமே பறக்கும் கலையை அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். பலஹீனமானவர் பறக்க முடியாது. சக்திசாலியானவர் எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பார். நீங்கள் எந்தக் கலையைச் சேர்ந்தவர்கள், பறக்கும் கலையா அல்லது ஏறும் கலையா? ஏறுவதில் மூச்சு வாங்கும், களைப்படைந்தும் விடுவார்கள். மேலும் பறக்கும் கலை உள்ளவர்கள் ஒரு விநாடியில் லட்சியத்தை அடைந்து வெற்றி சொரூபம் ஆக வேண்டும். ஏறும்

கலையிருக்கிறது என்றால் களைப்படைந்தும் விடுவார்கள். என்ன செய்வது, எப்படி செய்வது என்று பெருமூச்சு வாங்கும். பறக்கும் கலையில் அனைத்தையும் கடந்து சென்று விடுவர். இதைச் செய்ய வேண்டும் என்று புத்தியில் உணர்த்துதல் வரும், இது கண்டிப்பாக நடக்கும். அப்படி ஒரு நொடியில் வெற்றியின் இலக்கை அடைபவரைத் தான் சக்திசாலியான ஆத்மா என்று கூறுவது. அனைவரும் பறக்கும் கலை உள்ள குழந்தைகள் என்று தந்தைக்கும் குஷி இருக்கிறது. ஏன் கடுமையாக உழைக்க வேண்டும். குழந்தைகள் கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும் என்று தான் தந்தை கூறுவார். தந்தை வழியைக் காண்பிக்கிறார், டபுள் லைட்டாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்றால் ஏன் கீழே வருகிறீர்கள்? என்ன ஆகும், எப்படி ஆகும் என்ற இது சுமை. எப்பொழுதும் நன்மை ஏற்படும், எப்பொழுதும் உயர்ந்ததாக இருக்கும், எப்பொழுதும் வெற்றி எனது பிறப்புரிமை என்ற நினைவை வைத்து நடந்து கொள்ளுங்கள்.

4) குமாரர்களுக்கு பரீட்சை எழுதுவதில் யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. தூய்மை ஆக வேண்டும் என்ற எண்ணத்தை வைத்தீர்கள் என்றால், மாயா யுத்தம் செய்ய தொடங்கி விடுகிறது. குமாரர் வாழ்க்கை சிரேஷ்ட வாழ்க்கை, மகான் ஆத்மாக்கள். இப்பொழுது குமாரர்களுக்கு அதிசயக் காரியம் செய்து காண்பிக்க வேண்டும். அனைத்தையும் விட உயர்ந்த அதிசயக் காரியம் தந்தைக்குச் சமமானவராகி, தந்தையை துணைவனாக ஆக்குவது. எப்படி நீங்கள் தந்தையின் துணைவனாக ஆகியிருக்கிறீர்கள். அதே போல் மற்றவர்களையும் துணைவர்களாக ஆக்க வேண்டும். மாயாவின் துணைவர்களை தந்தையின் துணைவர்களாக ஆக்க வேண்டும். நீங்கள் அம்மாதிரியான சேவாதாரிகள். தன்னுடைய வரமளிக்கும் சொரூபத்தின் மூலம் சுபபாவனை மற்றும் சுப விருப்பங்கள் மூலம் தந்தையின் குழந்தையாக ஆக்க வேண்டும். இதே விதி மூலமாக எப்பொழுதும் சித்தியை பிராப்தி செய்ய வேண்டும். எங்கு சிரேஷ்ட விதி இருக்குமோ அங்கு சித்தி அவசியம் இருக்கும். குமார் என்றால் எப்பொழுதும் ஆடாத அசையாதவர். மேலே கீழே ஆடுபவர் இல்லை. ஆடாத ஆத்மாக்கள் மற்றவர்களையும் ஆடாத உறுதியானவர்களாக ஆக்குவார்கள்.

5) நீங்கள் அனைவரும் வெற்றி அடையும் குமாரர்கள் தான் இல்லையா/ எங்கு தந்தை உடன் இருக்கிறாரோ அங்கு எப்பொழுதும் வெற்றி இருக்கிறது. எப்பொழுதும் தந்தையின் துணையின் ஆதாரத்தினால் என்ன காரியம் செய்தாலும் அதில் உழைப்பு குறைவு பிராப்தி அதிகமாக இருப்பதாக அனுபவம் ஆகும். தந்தையிடமிருந்து கொஞ்சம் விலகி விட்டாலும் உழைப்பு அதிகம், பிராப்தி குறைவாக இருக்கும். எனவே உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான வழி ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு எண்ணத்திலும் தந்தையின் துணை இருக்க வேண்டும். இந்த துணை மூலம் வெற்றி நிச்சயமாக ஏற்படும். நீங்கள் அந்த மாதிரியான தந்தையின் துணைவர்கள் தான் இல்லையா? தந்தையின் கட்டளை என்னவாக இருக்கிறதோ அந்தக் கட்டளையின் பிரகாரம் வாழ்க்கையில் உங்களுடைய ஒவ்வொரு அடியும் இருக்க வேண்டும். தந்தையின் அடி மேல் அடி எடுத்து வைத்து நடக்க வேண்டும். இங்கு அடி எடுத்து வைக்கலாமா அல்லது வைக்க வேண்டாமா, சரியா அல்லது தவறா என்று யோசிப்பதற்கும் அவசியம் இல்லை. புதியதாக ஏதாவது வழி இருக்கிறது என்றால் யோசிக்க வேண்டும் ஆனால் எப்பொழுது அடி மேல் அடி எடுத்து வைக்க வேண்டும் என்றால் யோசிப்பதற்கு என்ன விஷயம் இருக்கிறது? எப்பொழுதும் தந்தையின் அடி மேல் அடி எடுத்து வைத்து சென்று கொண்டே இருந்தீர்கள் என்றால் லட்சியம் கண்டிப்பாக அருகாமையில் இருக்கும். தந்தை எவ்வளவு சுலபமாக்கிக் கொடுக்கிறார். ஸ்ரீமத் தான் எடுத்து வைக்க வேண்டிய அடி. ஸ்ரீமத் என்ற அடி மேல் அடி எடுத்து வைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் கடின உழைப்பிலிருந்து விடுபட்டே இருப்பீர்கள். அனைத்து வெற்றிகளும் அதிகாரத்தின் ரூபத்தில் இருக்கும். சிறிய குமாரரும் மிகுந்த சேவை செய்ய முடியும். ஒருபொழுதும் ஓடுதல் ஆடுதல் செய்யாதீர்கள். உங்களுடைய நடத்தை, பேச்சு அந்த மாதிரி இருக்க வேண்டும். அதைப் பார்த்து இவர் எந்தப் பள்ளியில் படிக்கிறார் என்று அனைவரும் கேட்க வேண்டும். அது சேவையாகி விடும் இல்லையா! நல்லது.

**வரதானம்: ஸ்ரீமத் என்ற கடிவாளத்தை இறுக்கமாக பிடித்து மனதை வசப்படுத்தக்கூடிய குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகுக!**

உலகத்தினர் மனம் ஒரு குதிரை அது மிகவும் வேகமாக அங்கு இங்கு ஓடுகிறது என்று கூறுகிறார்கள் ஆனால் உங்களுடைய மனம் இங்கு அங்கு ஓட முடியாது. ஏனென்றால் ஸ்ரீமத் என்ற கடிவாளம் மிக உறுதியாக இருக்கிறது. எப்பொழுது மனம், புத்தி பக்கத்து காட்சிகளை பார்ப்பதில் ஈடுபட்டு விடுகிறது, என்றால் கடிவாளம் தொய்வான காரணத்தினால் மனம் சஞ்சலம் ஆகிறது. எனவே எப்பொழுதெல்லாம் ஏதாவது விஷயம் வருகிறது, மனம் சஞ்சலம் ஆகிறது என்றால் ஸ்ரீமத் என்ற கடிவாளத்தை இறுக்கமாக பிடித்துக் கொண்டீர்கள் என்றால், இலட்சியம் வரை சென்றடைந்து விடுவீர்கள். குழந்தையாக இருப்பதிலிருந்து நான் எஜமானன் ஆகுபவன் என்ற இந்த நினைவு மூலம் அதிகாரி ஆகி, மனதை தன் வசத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

**சுலோகன்: என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதுவும் நல்லது மேலும் என்ன நடக்கப்போகிறதோ அது இன்னும் நல்லது என்று எப்பொழுதும் நிச்சயம் இருக்கிறது என்றால், ஆடாத அசையாதவர்களாக இருப்பீர்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 26.08.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இலட்சியத்திற்கு ஏற்றபடி வெற்றியை அடைவதற்காக சுயநலத்திற்குப் பதிலாக சேவைக்காக காரியம் செய்யுங்கள்!

இன்று திரிமூர்த்தி சந்திப்பை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஞான சூரியன், ஞான சந்திரன் மற்றும் ஞான நட்சத்திரங்களின் சந்திப்பு நடந்து கொண்டிருக்கிறது. இந்த திரிமூர்த்தி சந்திப்பு, இந்த பிராமண உலகத்தில் விசேஷமாக மதுபன் மண்டலத்தில் நடக்கிறது. ஆகாய மண்டலத்தில் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் சந்திப்பு நடக்கிறது. இந்த எல்லைக்கப்பாற்பட்ட மதுபன் மண்டலத்தில் சூரியன் மற்றும் சந்திரன் இருவர்களின் சந்திப்பு நடக்கிறது. இந்த இருவர்களின் சந்திப்பின் மூலம் நட்சத்திரங்களுக்கு ஞான சூரியனிடமிருந்து சக்தியின் விசேஷ வரதானம் கிடைக்கிறது. மேலும் சந்திரனிடமிருந்து அன்பின் விசேஷ வரதானம் கிடைக்கிறது. அதன் மூலம் அன்பானவர்களாகவும் மேலும் வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் (லைட் ஹவுஸாகவும்) ஆகி விடுகிறீர்கள். இந்த இரண்டு சக்திகளும் எப்பொழுதுமே சேர்ந்தே கூடவே இருக்கட்டும். தாயின் வரதானம் மற்றும் தந்தையின் வரதானம் இரண்டும் எப்பொழுதும் வெற்றி சொரூபம் ஆக்குகிறது. நீங்கள் அனைவரும் அம்மாதிரி வெற்றியின் சிரேஷ்ட நட்சத்திரங்கள், வெற்றி நட்சத்திரங்கள் அனைவரையும் வெற்றி சொரூபம் ஆக்குவதற்காக செய்தி கொடுப்பதற்காக செல்கிறீர்கள். எந்த துறையைச் சேர்ந்த ஆத்மாவாக இருந்தாலும், எந்தக் காரியம் செய்து கொண்டிருந்தாலும் அனைவரின் முக்கிய இலட்சியமாக நான் என்னுடைய காரியத்தில் வெற்றி அடைந்து விட வேண்டும் என்பது தான் இருக்கும். மேலும் வெற்றியை ஏன் விரும்புகிறார்கள்? ஏனென்றால் நம் மூலமாக அனைவருக்கும் சுகம், சாந்தியின் பிராப்தி ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

தன்னுடைய பெயரின் சுயநலத்தில் செய்தாலும், அற்பகால சாதனங்களின் மூலம் செய்தாலும், இலட்சியம் தனக்காகவும் மற்றும் அனைவருக்காகவும் சுகம், சாந்திக்கானதாகத் தான் இருக்கும். அனைவரின் இலட்சியமும் சரி தான்! ஆனால் இலட்சியத்திற்கு ஏற்றபடி தன்னுடைய சுயநலத்தின் காரணமாக தாரணை செய்ய முடிவதில்லை. எனவே இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் வித்தியாசம் இருக்கும் காரணத்தினால் வெற்றியை அடைய முடிவதில்லை. அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு தன்னுடைய முக்கிய இலட்சியத்தை அடைவதற்காக சகஜ சாதனமாக ஒரு வார்த்தையின் மாற்றம் செய்வதினால் வெற்றி அடைவதற்கான மந்திரம் கிடைத்து விடும். அது சுயநலத்திற்குப் பதிலாக அனைவரின் சேவைக்காக என்பது! சுயநலம் இலட்சியத்திலிருந்து தூரமாக்கி விடும். சேவைக்காக என்ற இந்த எண்ணம் இலட்சியத்தை அடைவதில் சுலபமாக வெற்றியை பிராப்தி செய்விக்கிறது. எந்த உலகியல் காரியமாக இருந்தாலும் அல்லது ஆன்மீக காரியத்திற்கு பொறுப்பாளராக இருந்தாலும் (சேவைக்காக என்பது நினைவிலிருந்தால்) அவரவருடைய காரியத்தில் திருப்தி மற்றும் வெற்றியை சுலபமாக அடைந்து விடுவார்கள். இந்த ஒரு வார்த்தையின் மாற்றத்தின் மந்திரத்தை ஒவ்வொரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கூறுங்கள்.

அனைத்து பிரச்சனைகள், குழப்பம், அனேக விதமான உலகின் நாலாபுறங்களிலும் குழப்பம் ஏற்படுத்து வதற்கான காரணம் ஒரே வார்த்தை சுயநலம். எனவே சேவை உணர்வு இல்லாது போய் விடுகிறது. நீங்கள் யாரெல்லாம் எந்தெந்த பதவியில் இருக்கிறீர்களோ, உங்களுடைய காரியத்தை தொடங்குகிறீர்கள் என்றால், என்ன எண்ணம் வைக்கிறீர்கள்? சுயநலமற்ற சேவையின் எண்ணம் வைக்கிறீர்கள் ஆனால் இலட்சியம் மற்றும் இலட்சணம் காலப்போக்கில் மாறிவிடுகிறது. எனவே மூல காரணமாக ஏதாவது விகாரம் வருகிறது என்றாலும் அதன் விதை சுயநலம். எனவே அனைவருக்கும் அவர்களுடைய இலட்சியத்தை அடைவதற்காக வெற்றியின் சாவியை கொடுத்து வாருங்கள். பொதுவாக மனிதர்கள் முக்கியமாக சாவியைத் தான் கொடுக்கிறார்கள். எனவே நீங்கள் அனைவரும் வெற்றியின் சாவியை கொடுப்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். மற்ற வர்கள் பிறருக்கு அனைத்தையும் கொடுப்பார்கள், ஆனால் பொக்கிஷங்களின் சாவியை யாரும்

கொடுப்பதில்லை. எதை வேறு யாருமே கொடுப்பதில்லையோ அதை நீங்கள் கொடுக்க வேண்டும். எப்பொழுது அனைத்து பொக்கிஷங்களின் சாவி அவர்களிடம் வந்து விட்டது என்றால், பிறகு வெற்றியே வெற்றி தான். நல்லது - இன்றோ சந்திப்பதற்காக வந்திருக்கிறோம்.

இராஜதிலகமோ 21-ஜென்மங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். மேலும் நினைவுத் திலகமும் சங்கம யுகத்தில் பெயர் சூட்டும் நாளன்று பாப்தாதாவிடமிருந்து உங்களுக்கு கிடைத்தே விட்டது. பிராமணர்கள் என்றாலே நினைவின் திலகமிட்டவர்கள், மேலும் தேவதைகள் இராஜதிலகம் இட்டவர்கள். மற்றபடி இடையில் உள்ள ஃபரிஷ்தா சொரூபத்தின் திலகம் -சம்பன்ன சொரூபத்தின் திலகம், சமமான சொரூபத்தின் திலகம். பாப்தாதா எந்த திலகத்தை இடுவார்? சம்பன்னம் மற்றும் சமமான சொரூபத்தின் திலகம் மற்றும் அனைத்து விசேஷங்கள் என்ற மணிகளால் அலங்கரிக்கப்பட்ட கிரீடம். நீங்கள் அந்த மாதிரியான திலகமிட்ட, கிரீடமணிந்த ஃபரிஷ்தா சொரூபமானவர்கள். எப்பொழுதும் டபுள் லைட்டின் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள். பாப்தாதா இதே ஆன்மீக அலங்காரத்தின் மூலம் விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார். நீங்கள் கிரீடம் அணிந்தவர்கள் ஆகி விட்டீர்கள். கிரீடம், திலகம் மற்றும் ஆசனம் இது தான் விசேஷமான விழா. நீங்கள் அனைவரும் விழா கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா. நல்லது.

அனைத்து பாரதம் மற்றும் வெளிநாட்டின் வெற்றி நட்சத்திரங்களுக்கு பாப்தாதா வெற்றி மாலையை கழுத்தில் போடுகிறார். நீங்கள் ஒவ்வொரு கல்பத்தின் வெற்றியின் அதிகாரி விசேஷ ஆத்மாக்கள். எனவே ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி உங்களுடைய பிறப்புரிமை. இதே நிச்சயம், போதையில் எப்பொழுதும் பறந்து கொண்டே இருங்கள். அனைத்து குழந்தைகளும் நினைவு மற்றும் அன்பின் மாலைகளை ஒவ்வொரு நாளும் மிக அன்புடன் விதிப்பூர்வமாக தந்தைக்கு அனுப்பி வைக்கிறார்கள். இதை காப்பி செய்து (அதே மாதிரி செய்து) பக்தர்களும் தினசரி மாலை அணிவிக்கிறார்கள். யார் உண்மையான அன்பில் மூழ்கியிருக்கக்கூடிய குழந்தைகளோ அவர்கள் அமிர்தவேளையில் அன்பின் சிரேஷ்ட எண்ணங்கள் என்ற இரத்தினங்களின் நல்ல மாலைகளை, ஆன்மீக ரோஜா மாலைகளை பாப்தாதாவிற்கு தினசரி

அவசியம் அணிவிக்கிறார்கள். அப்படி அனைத்து குழந்தைகளின் மாலை களினால் பாப்தாதா அலங்கரிக்கப்பட்டு விடுகிறார். எப்படி பக்தர்களும் முதல் காரியமாக தன்னுடைய இஷ்ட தேவி தேவதைகளை மலர்களால் அலங்கரிப்பார்கள். புஷ்பத்தை அர்ப்பணம் செய்வார்கள். அதே போல் ஞானி ஆத்மாக்களும் மற்றும் அன்பு நிறைந்த குழந்தைகளும் பாப்தாதாவிற்கு தன்னுடைய ஊக்கம் உற்சாகத்தின் புஷ்பத்தை அர்ப்பணம் செய்கிறார்கள். அந்த மாதிரி அன்பு நிறைந்த குழந்தைகளின் அன்பிற்கு பிரதிபலனாக பாப்தாதா பல மடங்கு அன்பின், வரதானங்களின், சக்திகளின் மாலைகளை அணிவிக்கிறார். அனைவரின் குஷியின் நடனத்தையும் பாப்தாதா பார்க்கிறார். டபுள் லைட்டாகி பறந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் பறக்க வைப்பதற்கான திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து குழந்தைகளும் விசேஷமாக முதல் நம்பரில் தன்னுடைய பெயர் இருக்கிறது என்று புரிந்து முதல் நம்பரில் என்னுடைய நினைவு பாபாவிடமிருந்து வந்தது என்று அப்படி சுவீகாரம் செய்யுங்கள். பெயரோ அனேகம் இருக்கிறது, ஆனால் அனைவரும் வரிசைக்கிரமமாக நினைவு செய்வதற்கு பாத்திரமானவர்கள். நல்லது.

மதுபனைச் சேர்ந்த அனைவரும் சக்திசாலியான ஆத்மாக்கள் தான் இல்லையா? களைப்பற்ற சேவையின் பங்கையும் செய்தீர்கள். மேலும் சுய பயிற்சிக்கான பங்கையும் செய்தீர்கள். சேவையில் சக்திசாலியாகி அனேக ஜென்மங்களின் எதிர்காலத்தை மற்றும் நிகழ்காலத்தையும் உருவாக்கியிருக்கிறீர்கள். எதிர்காலம் மட்டும் இல்லை, ஆனால் நிகழ்காலத்திலும் மதுபனைச் சேர்ந்தவர்களுக்கு பெயர் புகழடைந்திருக்கிறது. எனவே நிகழ்காலத்தையும் உருவாக்கியிருக்கிறீர்கள், எதிர்காலத்தையும் சேமித்தீர்கள். அனைவரும் உடல் ஓய்வையும் எடுத்துக் கொண்டீர்கள். இப்பொழுது மீண்டும் சீசனுக்காகத் தயாராகி விட்டீர்கள். சீசனில் நோயுற்றவர் ஆகக் கூடாது. எனவே அந்தக் கணக்கையும் முடித்து விட்டீர்கள். நல்லது.

யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அனைவருக்கும் லாட்டரியோ கிடைத்தே விட்டது. இங்கே வருவது என்றால் பல கோடி மடங்கு சேமிப்பு செய்வது. மதுபனில் ஆத்மா மற்றும் உடல் இரண்டிற்கும் புத்துணர்வு கிடைக்கிறது. நல்லது.

**சகோதரர் ஜகதீஷ் அவர்களுடன் சந்திப்பு:** சேவையில் சக்திகளுடன் தனது பங்கை செய்வதற்கு பொறுப்பாளர் ஆவது, இதுவும் விசேஷ பங்கு தான். சேவை மூலம் ஜென்மம் கிடைத்தது, சேவை மூலம் வளர்க்கப்பட்டீர்கள். மேலும் எப்பொழுதும் சேவையில் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். சேவையின் தொடக்ககாலத்தில் நாடகத்தின் அனுசாரம் நீங்கள் முதல் பாண்டவன் பொறுப்பாளர் ஆனீர்கள். எனவே இதுவும் விசேஷமாக சகயோகத்தின் பிரதிபலன். எப்பொழுதுமே சகயோகம் பிராப்தி ஆகிறது. மேலும் வரும் காலத்திலும் இருக்கும். ஒவ்வொரு விசேஷ ஆத்மாவிற்கும் விசேஷம் இருக்கிறது. அதே விசேஷத்தை எப்பொழுதும் காரியத்தில் ஈடுபடுத்தி விசேஷத்தின் மூலம் நீங்கள் விசேஷ ஆத்மாவாக இருக்கிறீர்கள். சேவையின் களஞ்சியத்தில் சென்று கொண்டிருக்கிறீர்கள். வெளிநாடு செல்வது என்றால் சேவையின் களஞ்சியத்தில் செல்வது. சக்திகளுடன் சேர்த்து பாண்டவர்களுக்கும் விசேஷ பங்கு இருக்கிறது. உங்களுக்கு எப்பொழுதும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டே இருந்தது. மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். அதே போலவே அனைவரிலும் விசேஷத்தை நிரப்ப வேண்டும். நல்லது.

**சகோதரி மோகினி அவர்களுடன் சந்திப்பு:** விசேஷமாக உடன் (தாதியுடன்) இருப்பதற்கான பங்கு. உள்ளத்தினாலும் எப்பொழுதும் உடன் இருக்கிறீர்கள். மேலும் சாகார ரூபத்தில் சிரேஷ்ட துணையின் வரம் பெற்றிருக்கிறீர்கள். அனைவருக்கும் இதே வரதானம் மூலமாக துணையின் அனுபவம் செய்வியுங்கள். தன்னுடைய வரதானம் மூலம் மற்றவர்களையும் வரம் பெறுபவர் களாக ஆக்க வேண்டும். கடும் உழைப்பு மாறி அன்பு என்பது என்ன, கடும் உழைப்பிலிருந்து விடுபடுவது! மேலும் அன்பில் இருப்பது என்ற இந்த விசேஷ அனுபவம் அனைவருக்கும் ஏற்படட்டும். அதற்காகத் தான் நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள். வெளிநாட்டில் இருக்கும் ஆத்மாக்கள் கடும் உழைப்பு செய்ய விரும்புவதில்லை, களைப்படைந்து விட்டார்கள். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு நிரந்தரமாக துணை அதாவது அன்பில் மூழ்கியிருப்பதற்கான சகஜ அனுபவம் செய்வியுங்கள். சேவைக்காக வாய்ப்பு கிடைத் திருப்பது என்ற இதுவும் ஒரு பொன்னான லாட்டரி. எப்பொழுதுமே லாட்டரியை அடையக்கூடிய சுலபமாக முயற்சி செய்பவர்

நீங்கள். கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு அன்பின் அனுபவம் என்ன என்ற விசேˆத்தை அனைவருக்கும் கூறி, அவர்களை சொரூமாக்கி விடுங்கள். நீங்கள் என்ன திட எண்ணம் எடுத்திருக்கிறீர்களோ அதை மிக நன்றாகச் செய்தீர்கள். எப்பொழுதும் அமிர்தவேளையில் இந்த திட எண்ணத்தை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** எப்பொழுதும் தன்னுடைய விசேஷ பங்கைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன் சேர்ந்து தனது வாழ்க்கை பங்கைச் செய்யக்கூடிய விசேஷ பாத்திரம் ஏற்று செய்பவர்கள். எப்படி நினைவோ அப்படி நிலை இயல்பாகவே உருவாகி விடும். உங்களுடைய ஒவ்வொரு காரியம் ஒவ்வொரு வார்த்தையும் விசேஷமானது, சாதாரணத்தன்மை முடிவடைந்து விட்டது. விசேஷ பாத்திரம் ஏற்று செய்பவர் இயல்பாகவே அனைவரையும் கவர்ந்திழுப்பார். என்னுடைய இந்த விசேஷ பங்கு மூலமாக அனேக ஆத்மாக்கள் அவர்களுடைய விசேஷத்தைத் தெரிந்து கொள்வார்கள் என்ற இந்த நினைவில் எப்பொழுதும் இருங்கள். எந்தவொரு விசேஷ ஆத்மாவைப் பார்க்கும்போது தானும் விசேஷம் ஆக வேண்டும் என்ற ஊக்கம் வரும். எங்கே இருந்தாலும், எவ்வளவு மாயாவி சூழ்நிலையில் இருந்தாலும், விசேஷ ஆத்மா ஒவ்வொரு ஸ்தானத்திலும் விசேஷமாகத் தென்படும். எப்படி வைரம் மண்ணுக்குள்ளும் மின்னிக் கொண்டிருப்பதாக தென்படும். வைரம் வைரமாகவே தான் இருக்கும். அதே போல் எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், விசேஷ ஆத்மா எப்பொழுதுமே தன்னுடைய விசேஷம் மூலம் அனைவரையும் கவர்ந்திழுப்பார். நான் விசேஷ யுகத்தின் விசேஷ ஆத்மா என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

**மும்பையைச் சேர்ந்தவர்களுக்காக அன்பு நினைவுகள்:** மும்பையில் முதலில் செய்தி கொடுக்க வேண்டும். மும்பையில் இருப்பவர்கள் மிகவும் பிஸியாகவும் இருப்பார்கள். பிஸியாக இருப்பவர்களுக்கு நீண்ட நேரத்திற்கு முன்பாகவே செய்தி கொடுக்க வேண்டும். இல்லையென்றால் நானோ பிஸியாக இருந்தேன், நீங்கள் என்னிடம் கூறவில்லை என்று புகார் கூறுவார்கள். எனவே அவர்களை இப்பொழுதிலிருந்தே நல்ல முறையில் எழுப்பி விட வேண்டும்.

மும்பையைச் சேர்ந்தவர் களுக்கு தன்னுடைய ஜென்மத்தின் விசேஷத்தை சேவையில் விசேஷமாக ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள் என்று கூற வேண்டும். இதன் மூலம் தான் வெற்றியை சுலபமாக அனுபவம் செய்வார்கள். ஒவ்வொரு ஜென்மத்தின் விசேஷம் இருக்கிறது, அதே விசேஷத்தை ஒவ்வொரு நேரமும் காரியத்தில் மட்டும் ஈடுபடுத்துங்கள். தன்னுடைய விசேஷத்தை மேடையில் கொண்டு வாருங்கள். உள்ளுக்குள்ளே மட்டும் வைக்காதீர்கள். மேடையில் கொண்டு வாருங்கள். நல்லது.

**அவ்யக்த முரளியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட கேள்வி-பதில்கள்:**

**கேள்வி: ஒருமித்த நிலையின் சக்தி என்னென்ன அனுபவங்களை செய்விக்கிறது?**

பதில்: ஒருமித்த நிலையின் சக்தி மூலம் எஜமானத்தன்மையின் சக்தி வருகிறது, அதன் மூலம் 1) சகஜமாக தடையற்ற நிலையின் அனுபவம் ஆகிறது. யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்காது. 2) இயல்பாகவே ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த அனுபவம் ஆகிறது. 3) ஒரே சீரான ஃபரிஷ்தா சொரூபத்தின் அனுபவம் இயல்பாக இருக்கும். 4) அனைவருக்காகவும் அன்பு, நன்மை பயப்பது, மரியாதை கொடுப்பதின் உள்உணர்வு இயல்பாக இருக்கும்.

**கேள்வி: பிரம்மாபாபாவிற்குச் சமமாக எப்படி சம்பன்னநிலையின் நேரம் அருகில் வருமோ அப்படி எந்த சுயமரியாதை இருக்கும்?**

பதில்: ஃபரிஷ்தா நிலையின் சுயமரியாதை இருக்கும். நடைமுறை காரியங்கள் செய்து கொண்டே தேக உணர்வற்ற ஃபரிஷ்தா ரூபம் இருக்கும். எப்படி பிரம்மாபாபா மூலமாக காரியங்கள் செய்து கொண்டும், பேசிக் கொண்டும், டைரக்ஷன் கொடுத்துக் கொண்டும், ஊக்கம் உற்சாகத்தை அதிகரித்துக் கொண்டும், உடலிலிருந்து விலகிய, சூட்சும பிரகாச ரூபத்தின் அனுபவம் செய்தீர்கள். பேசிக் கொண்டும் இருக்கிறார், ஆனால் இங்கு இல்லை என்று அனுபவம் ஆனது, பார்த்துக் கொண்டிருக்கிறார் ஆனால் பார்வை ஆன்மீகமாக இருந்தது. தேக உணர்விலிருந்து விடுபட்ட, மற்றவர்களுக்கும் தேகத்தின் உணர்வு வராத, விலகிய ரூபம் தென்பட வேண்டும். இதைத் தான் தேகத்தில் இருந்தும் ஃபரிஷ்தா சொரூபம் என்று கூறுவது.

**கேள்வி: ஃபரிஷ்தா ரூபத்தின் கூடவே ஃபரிஷ்தாவாக ஆகி வதனத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் எந்த விஷயத்தின் மீது கவனம் கொடுக்க வேண்டும்?**

பதில்: மனதின் ஒருமித்த நிலையின் மேல் கவனம் கொடுக்க வேண்டும். தன்னுடைய கட்டளைப்படி மனதை நடத்துங்கள். எப்படி நம்பர் ஒன் பிரம்மாவின் ஆத்மா சாகார ரூபத்தில் ஃபரிஷ்தா வாழ்க்கையின் அனுபவத்தை பிறருக்கு செய்வித்தார், மேலும் அவர் ஃபரிஷ்தா ஆகி விட்டார். அந்த மாதிரி ஃபரிஷ்தா தன்மையின் அனுபவத்தை நீங்களும் செய்யுங்கள், மற்றவர்களுக்கும் செய்வியுங்கள், ஏனென்றால் ஃபரிஷ்தா ஆகாமல் தேவதை ஆக முடியாது.

**கேள்வி: எந்த நிலை வசப்பட்ட நிலை அது யாருக்கும் பிடிப்பதில்லை?**

பதில்: சில குழந்தைகள் விரும்பவில்லை, நினைக்கவில்லை ஆனால் ஆகி விட்டது, செய்யக்கூடாது ஆனால் நடந்து விடுகிறது என்ற இது தான் மனதின் வசப்பட்ட நிலை. அந்த மாதிரியான நிலை நன்றாக இருக்காது, பிடிக்காது. செய்ய வேண்டும் என்றால் மனம் கூறி காரியம் நடக்கட்டும். செய்யக் கூடாது ஆனால் மனம் செய் என்று கூறுகிறது என்றால் இது எஜமானத்தன்மை இல்லை.

**கேள்வி: எந்த விஷயத்தில் பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடக்க வேண்டும்?**

பதில்- எப்படி பிரம்மாபாபாவிடம் எதிரில் ஃபரிஷ்தா நின்று கொண்டிருக்கிறார். ஃபரிஷ்தா திருஷ்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று அனுபவம் செய்தீர்கள். அதே போல் பிரம்மாபாபாவை பின்பற்றிச் செய்யுங்கள். மனதின் ஒருமித்த நிலையின் சக்தி சகஜமாக அந்த மாதிரி ஃபரிஷ்தா ஆக்கி விடும்.

**வரதானம்: வீணானவை மற்றும் மாயாவைப் பற்றி ஒன்றும் தெரியாதவராகி தெய்வீகத்தன்மையின் அனுபவம் செய்யக்கூடிய மகான் ஆத்மா ஆகுக!**

மகான் ஆத்மா என்றால் செண்ட் (முழுமையானவர்) என்று கூறுவோம். யார் வீணானவை மற்றும் மாயாவிடமிருந்து இன்னொசெண்ட்

(கபடமில்லா) ஆக இருப்பவர். எப்படி தேவதைகள் இந்த விஷயத்தில் இன்னொசென்ட்டாக இருந்தார்கள். அந்த மாதிரி தன்னுடைய அந்த சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள், வீணானவைகளை அறியாத சொரூபமாக ஆகுங்கள். ஏனென்றால் இந்த வீணானவையின் பாதிப்பு அனேக தடவைகள் சத்தியத்தின், யதார்த்தத்தின் உணர்வை அகற்றி விடுகிறது. எனவே நேரம், மூச்சு, வார்த்தைகள், காரியம், அனைத்திலும் வீணானவற்றை அறியாதவர் ஆகுங்கள். எப்பொழுது வீணானவைகளை ஒன்றும் அறியாத நிலை இருக்குமோ அப்பொழுது தெய்வீகத் தன்மை இயல்பாக அனுபவம் ஆகும். மேலும் அனுபவம் செய்விக்கும்.

**சுலோகன்: முதல்ட டிவிஷனில் வர வேண்டும் என்றால் பிரம்மாபாபாவின் அடிமேல் அடி எடுத்து வையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.11.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லைக்கப்பாற்ப்பட்ட வைராக்கிய உணர்வின் மூலம் ஸித்திகளின் பிராப்தி!

இன்று உலகைப் படைப்பவர் தன்னுடைய சிரேஷ்ட படைப்பை மற்றும் படைப்பின் பூர்வஜ் ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலாபுறங்களின் பூர்வஜ் மற்றும் பூஜைக்குரிய ஆத்மாக்கள் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். பூர்வஜ் ஆத்மாக்களின் ஆதாரத்தினால் உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்தி மற்றும் சாந்தி பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறது. மேலும் ஆகவும் செய்யும். அனேக ஆத்மாக்கள், பூர்வஜ் பூஜைக்குரிய ஆத்மாக்களை சாந்தி தேவா, (வழங்கும்) சக்தி தேவா என்று கூறி நினைவு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான நேரத்தில் சாந்தி தேவா ஆத்மாக்கள் மாஸ்டர் சாந்தியின் கடல், மாஸ்டர் சாந்தியின் சூரியன் தன்னுடைய சாந்தியின் கிரணங்கள், சாந்தியின் அலைகளை வள்ளலின் குழந்தைகள் தேவா அதாவது வழங்குபவர்களாகி, அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த விசேˆ சேவை செய்வதற்கு பயிற்சி உடையவர்கள் ஆகியிருக்கிறீர்களா அல்லது மற்ற பல விதமான சேவைகளில் அந்த அளவு பிஸியாக இருக்கிறீர்கள், அதனால் இந்த விசேˆ சேவை செய்வதற்கு நேரமும் பயிற்சியும் குறைவாக உள்ளதா? எப்படி நேரமோ அப்படி சேவையின் சொரூபத்தைக் கடைபிடிக்க முடியுமா? ஒருவேளை யாருக்காவது தண்ணீர் தாகம் எடுக்கிறது, ஆனால் நீங்கள் மிக நல்ல வகைவகையாய் உணவை அவருக்கு கொடுக்கிறீர்கள் என்றால் அவர் திருப்தி அடைவாரா? அந்த மாதிரி தற்சமயம் சாந்தி மற்றும் சக்தியின் அவசியம் உள்ளது. மனதின் அமைதி சக்தி மூலமாக ஆத்மாக்களுக்கு மனஅமைதியை அனுபவம் செய்விக்க முடியுமா? வாய்மொழி மூலம் காதுகள் வரை நீங்கள் கூறுவதை சென்றடையச் செய்ய முடியும் ஆனால் வார்த்தைகளின் கூடவே மனசக்தி மூலமாக மனம்

வரை சென்றடையச் செய்ய முடியும். மனதின் ஓசை மனம் வரை சென்றடையும். வாய்களின் வார்த்தைகள் காது மற்றும் வாய் வரை மட்டுமே செல்லும். வாய்மொழி மூலம் வர்ணனை சக்தியும், மனம் மூலம் சிந்தனை சக்தி மற்றும் மூழ்கியிருக்கும் சொரூபத்தின் சக்தி ஆகிய இரண்டும் பிராப்தி ஆகிறது. அவர் கூறுபவராக மேலும் இவர் ஆகுபவராக ஆகி விடுகிறார். இருவரிலும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எனவே எப்பொழுதும் வாய்மொழி மற்றும் மனசக்தி இரண்டின் மூலமாக சேவையில் இருங்கள்.

தற்சமயம் விசேஷமாக பாரதவாசிகளின் என்ன நிலைமையை பார்த்தோம்? அனைவரும் சுடுகாட்டு வைராக்கிய உணர்வில் இருக்கிறார்கள். அந்த மாதிரி சுடுகாட்டு வைராக்கிய உணர்வு உள்ளவர்களிடம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வைக் கொண்டு வருவதற்காக நீங்கள் சுயம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு உள்ளவர்களாக ஆகுங்கள். சில நேரம் பற்றுதல் சில நேரம் வைராக்கியம் என்று இரண்டும் இருக்கிறதா? அல்லது எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவராக ஆகியிருக்கிறீர்களா? என்று உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் என்றால் உடல் என்ற வீட்டிலிருந்தும் அப்பால் சென்று விட்டவர். இந்த உடலும் தந்தையினுடையதேயன்றி என்னுடையது அல்ல என்று அந்த அளவு உடல் உணர்விலிருந்து விலகியிருப்பவர். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஒருபொழுதும் சம்ஸ்காரம், சுபாவம், சாதனம் என்று எதனுடைய வசமானவராகவும் இருக்க மாட்டார். விலகியிருப்பவராகி, எஜமானன் ஆகி சாதனங்கள் மூலமாக வெற்றி சொரூபமானவராக ஆவார். சாதனத்தை உபயோகிப்பதற்கு விதியை உருவாக்குவார்கள். விதி மூலமாக சுயமுன்னேற்றத்தின் வளர்ச்சியின் வெற்றி அடைவார்கள். சேவை மூலம் வளர்ச்சியின் வெற்றியை அடைவார்கள். ஏதோவொரு காரணத்திற்காக அவை ஆதாரமாக இருக்கும், ஆனால் அடிமை ஆக மாட்டார்கள். ஆதாரத்தின் அடிமை ஆவது என்றால் வசமாகி விடுவது. வசிபூத் அதாவது வசம் ஆகி விடுவது என்ற வார்த்தையின் அர்த்தமே, எப்படி பூத ஆத்மா மற்றவர்களை வசப்படுத்தி மிகவும் தொந்தரவு செய்கிறதோ அதே போல் எந்தவொரு சாதனம், சம்ஸ்காரம், சுபாவம் மற்றும் தொடர்பின் வசமாகி விடுகிறார்கள் என்றால் பூதத்திற்குச் சமமாக

தொந்தரவு அடைபவர்களாகவும் மேலும் மற்றதின் / மற்றவர்களின் வசமாகியும் ஆகி விடுகிறார்கள். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர், எப்பொழுதும் செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்ற நினைவின் மகிழ்ச்சியில் சுற்றி வரும் யோகியிலிருந்தும் மேலே பறக்கும் யோகியாக இருப்பார். எப்படி எல்லைக்குட்பட்ட வைராக்கியம் உடையவர் ஹடயோக விதி மூலம் நிலம், நெருப்பு, தண்ணீர் ஆகியவற்றிலிருந்து மேலே உயரே அமர்ந்திருப்பதாக காண்பிக்கிறார்கள். அந்த நிலையை யோகாவின் சித்தி சொரூப நிலை என்று நம்புகிறார்கள். அது அற்ப காலத்தின் ஹடயோகத்தின் விதியின் சித்தி. அதே போல் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு உள்ளவர் இந்த விதி மூலமாக தேக உணர்வு என்ற பூமியின் மேலே மாயாவின் பலவிதமான விகாரங்கள் என்ற அக்னியின் மேலே, பல விதமான சாதனங்கள் மூலமாக தொடர்பின் வெள்ளப் பெருக்கில் வருவதிலிருந்து விலகியிருப் பவராக ஆகி விடுகிறார். எப்படி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் போது தன் பக்கம் இழுத்து விடுகிறது, தன்னுடையவராக்கி விடுகிறது. அதே போல் எந்த விதமான அற்ப காலத்தின் வெள்ளப்பெருக்கு தன் பக்கம் ஈர்த்து விட வேண்டாம். அந்த மாதிரி நீரின் வெள்ளப்பெருக்கிலிருந்தும் மேலே என்ற நிலையை பறக்கும் யோகி என்று கூறுவோம். இந்த அனைத்து சித்திகளும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் விதி மூலம் பிராப்தி ஆகிறது.

எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் என்றால் ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் சேவையில் எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு, நினைவின் பாவனை மற்றும் விருப்பம் இருக்கட்டும். ஒவ்வொரு எண்ணமும் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் சமர்ப்பணம் ஆகியிருக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தை யிலும் சுயநலமற்ற பாவனை இருக்க வேண்டும். ஒவ்வொரு காரியத்திலும் செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்ற இந்த எண்ண அலைகள் அனைவருக்கும் அனுபவம் ஆக வேண்டும். இதைத் தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர் என்று கூறுவோம். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர் என்றால், தன்னுடையது என்பது முற்றிலும் அகன்று விட வேண்டும். பாபாவினுடையது என்பது வந்து விட வேண்டும். எப்படி இடைவிடாது மந்திரத்தை ஜபிக்கிறார்கள், அதே போன்று இடைவிடாத நினைவு சொரூபம் இருக்க வேண்டும்.

# 1984 அவ்யக்த முரளி

ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு மூச்சிலும் எல்லைக்கப்பாற்பட்ட நிலை மற்றும் பாபா நிரம்பியிருக்க வேண்டும். எனவே எல்லைக்குட்பட்ட வைராக்கியம் உள்ளவர்களுக்கு, சுடுகாட்டு வைராக்கியம் உள்ள ஆத்மாக்களுக்கு நீங்கள் தற்சமயம் சாந்தி மற்றும் சக்தி கொடுக்கும் தேவதை ஆகி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகுங்கள்.

தற்சமயத்திற்கு ஏற்றபடி குழந்தைகள் ரிசல்ட் என்னவாக இருந்தது என்ற இந்த தொலைக்காட்சியை பாப்தாதா பார்த்தார். மேலும் குழந்தைகள் இந்திரா காந்தியின் டி.வி-யை பார்த்தீர்கள். அந்த நேரம் பார்த்தீர்கள், தெரிந்து கொள்வதற்காக பார்த்தீர்கள், செய்திக்காக பார்த்தீர்கள். இதில் ஒன்றும் பாதகமில்லை ஆனால் என்ன ஆனது! என்ன ஆகும்! என்ற அந்த விதத்தில் பார்க்காதீர்கள். ஞானம் நிறைந்தவராகி ஒவ்வொரு காட்சியையும் சென்ற கல்பத்தின் நினைவோடு பாருங்கள். அப்படி பாப்தாதா குழந்தைகளினுடைய எதைப் பார்த்தார். குழந்தைகளின் காட்சியும் ரமணீகரமாக இருந்தது. மூன்று விதமான ரிசல்ட் பார்த்தோம்.

1) முதல் விதமானவர்கள் -இந்த வாழ்க்கையில் காலப்போக்கில் அலட்சியம் என்ற தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள். எப்படி ஏதாவது மிகுந்த சப்தம் எழுகிறது அல்லது யாராவது அசைக்கிறார் என்றால் தூங்கிக் கொண்டிருந்தவர் எழுந்து விடுவார் ஆனால் என்ன ஆனது என்ற இந்த எண்ணத்தோடு கொஞ்ச நேரம் விழித்தார், பிறகு மெதுமெதுவாக அதே அலட்சியத்தின் தூக்கம். இதெல்லாம் நடக்கத் தான் செய்யும் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு மீண்டும் தூங்கி விடுவார். இப்பொழுதோ ஒத்திகை தான் நடக்கிறது. இறுதி பின்னால் நடக்கும் என்று இந்த எண்ணத்தோடு முகத்தையும் போர்வையால் மூடிக் கொண்டு தூங்கி விடுவார்.

2) இரண்டாவது விதமானவர்கள் -அலட்சியத்தின் தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இவை அனைத்துமே நடக்கத் தான் செய்யும். அதனால் அது நடந்தது. முயற்சியோ செய்து கொண்டு தான் இருக்கிறோம், மேலும் வரும் காலங்களிலும் செய்தே விடுவோம். சங்கமயுகத்திலோ முயற்சியோ செய்யத் தான் வேண்டும். கொஞ்சம் செய்திருக்கிறோம், இன்னும் கொஞ்சத்தை வரும் நாட்களில் செய்து விடுவோம். மற்றவர்களை எழுப்பி விட்டு விட்டு பார்த்துக் கொண்டே

இருப்பார்கள். எப்படி போர்வையிலிருந்து முகத்தை விடுவித்து தூங்கிக் கொண்டிருக்கும் மற்றவர்களைப் பார்ப்பார்கள் இல்லையா? பெயர் பெற்றவர்களோ இந்த அளவு வேகத்தில் தான் சென்று கொண்டிருக்கிறார்கள். நானும் அந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறேன். அந்த மாதிரி மற்றவர்களின் பலஹீனங்களைப் பார்த்து தந்தையைப் பின்பற்ற வேண்டும் என்பதற்குப் பதிலாக சகோதரிகள் மற்றும் சகோதரர்களைப் பின்பற்றி விடுகிறார்கள். மேலும் அவர்களின் பலஹீனங்களையும் பின் தொடர்ந்து பார்க்கிறார்கள். அந்த மாதிரி எண்ணம் செய்பவர்கள் அலட்சியத்தின் தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருப்பவர்களும் அவசியம் விழித்தெழுவார்கள். ஊக்கம் மற்றும் உற்சாகத்தின் ஆதாரத்தினால் சோம்பலின் தூக்கத்தை அனேகர்கள் தியாகமும் செய்திருக்கிறார்கள்.சுய முன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றத்தில் முன்னுக்கு அடியெடுத்தும் வைத்திருக்கிறார்கள். குழப்பங்கள் அவர்களை ஆட்டியது, இருப்பினும் அவர்கள் முன்னேறி சென்றும் இருக்கிறார்கள் ஆனால் சோம்பலின் சம்ஸ்காரம் இடையிடையே தன் பக்கம் இழுத்துக் கொண்டே இருக்கிறது. இருந்த போதிலும், குழப்பம் அவரை அசைத்தாலும் அவர் முன்னேறிச் சென்று கொண்டுமிருக்கிறார்.

3) மூன்றாவது விதமானவர்கள் -குழப்பத்தைப் பார்த்து ஆடாமல் அசையாமல் இருப்பவர்கள், சேவை செய்ய வேண்டும் என்ற சிரேஷ்ட எண்ணத்தில் சேவைக்கான பல விதமான திட்டங்களை யோசிப்பது மற்றும் செய்வது. இவர்கள் முழு உலகிற்கும் அமைதி மற்றும் சக்தியின் உதவி செய்பவர்கள், துணிச்சலாக இருப்பவர்கள். மற்றவர்களுக்கும் தைரியம் கொடுப்பவர்கள். அந்த மாதிரி குழந்தைகளையும் பார்த்தோம் ஆனால் சுடுகாட்டு ஊக்கம், உற்சாகம் மற்றும் சுடுகாட்டு தீவிர முயற்சி செய்வது மற்றும் பலஹீனங்களின் மேல் வைராக்கிய உணர்வு என்ற இந்த நிலையிலேயே இருக்காதீர்கள். எப்பொழுதும் சூழ்நிலையை, சுயநிலையின் சக்தி மூலம் பரிவர்த்தனை (மாற்றம்) செய்யும் உலகை மாற்றம் செய்பவன் என்ற நினைவில் இருங்கள். சூழ்நிலை சுயநிலையை முன்னேற வைப்பது மற்றும் வாயுமண்டலம் மாஸ்டர் சர்வ சக்திவானை நடத்திவிப்பது, மனித ஆத்மாக்களை சுடுகாட்டு வைராக்கியம், அற்பகாலத்திற்காக எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவராக ஆக்குவது பூர்வஜ் ஆத்மாக்கள் செய்யும் காரியம் இல்லை.

நேரம் படைப்பு அது மாஸ்டர் படைப்பவரை முன்னேற்ற வேண்டும் என்பது மாஸ்டர் படைப்பவரின் பலஹீனம். உங்களுடைய சிரேஷ்ட எண்ணம் தான் நேரத்தை பரிவர்த்தனை செய்யக்கூடியது. நேரம் உலகத்தை மாற்றும் ஆத்மாக்கயாகிய உங்களுடைய சகயோகி. புரிந்ததா? நேரத்தைப் பார்த்து, நேரம் தள்ளிவிடுவதினால் முன்னேறிச் செல்பவர்கள் இல்லை ஆனால் தானே முன்னேறிச் சென்று நேரத்தை அருகில் கொண்டு வாருங்கள். இப்பொழுது என்ன ஆகும் என்ற கேள்வியும் அனைவர் மனதிலும் எழுந்தது ஆனால் கேள்விக்குறியை முற்றுப்புள்ளியின் ரூபத்தில் பரிவர்த்தனை செய்யுங்கள் அதாவது தன்னை அனைத்து பாடங்களிலும் முழுமையானவர் ஆக்குங்கள். இது தான் முற்றுப்புள்ளி. அந்த மாதிரி நேரத்தில் என்ன ஆகும் என்ற இந்தக் கேள்வி எழாது ஆனால் என்ன செய்ய வேண்டும், அந்த மாதிரியான நேரத்தில் என்னுடைய கடமை என்ன என்பதை உணர்ந்து அந்த சேவையில் ஈடுபட்டு விடுங்கள். எப்படி தீயை அணைப்பவர்கள் தீயை அணைப்பதிலேயே ஈடுபட்டு விடுவார்கள். இது என்ன இப்படி ஆயிற்று என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். தன்னுடைய சேவையில் ஈடுபட்டு விடுவார்கள் இல்லையா? அந்த மாதிரி ஆன்மீக சேவாதாரியின் கடமை தன்னுடைய ஆன்மீக சேவையில் ஈடுபட்டு விடுவது. உலகத்தினருக்கும் வித்தியாசமானவர் என்ற அனுபவம் ஏற்படட்டும். புரிந்ததா? இருந்தும் நேரத்திற்கு ஏற்றபடி வந்தோ சேர்ந்து விட்டீர்கள் இல்லையா? என்னுடைய பாக்கியம் இங்கே வந்து சேர்ந்து விட்டேன் என்ற குஷி இருக்கிறது தான் இல்லையா. நன்றாக வாருங்கள், வாருங்கள். குழந்தைகள் நீங்கள் அனைவரும் தான் மதுபனின் கலகலப்பு. மதுபனின் அலங்காரம் மதுபனில் வந்து சேர்ந்து விட்டது. மதுபனைச் சேர்ந்த பாபா மட்டுமில்லை, மதுபனைச் சேர்ந்த குழந்தைகளும் இருக்கிறார்கள். நல்லது.

நாலாபுறங்களிலும் எண்ணம் மூலம், அன்பு மூலம், ஒளி வடிவமான உடல் மூலம் வந்து சேர்ந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா எப்பொழுதும் உறுதியாக இருங்கள், எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர்களுக்கு, எப்பொழுதும் பறந்து கொண்டிருக்கும் யோகி ஆகுக! என்ற ஆஸ்தியையும் வரதானத்தையும் கொடுக்கிறார். எப்பொழுதும் இடைவிடாத நினைவு சொரூப, அலட்சியம் மற்றும் சோம்பலின் தூக்கத்தை வென்ற, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட நினைவு

சொரூப பூர்வஜ் மற்றும் பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதி அவர்கள் மற்றும் ஜகதீஷ் சகோதரர் வெளிநாட்டு யாத்திரையின் செய்தியைக் கூறினார்கள் மற்றும் அன்பு நினைவுகளைக் கொடுத்தார்கள்:** அனைவருக்கும் செய்தி கொடுத்து அனுபவம் செய்வித்தீர்கள். அன்பு மற்றும் சம்மந்தத்தை அதிகரித்தீர்கள். இப்பொழுது அதிகாரத்தைப் பெறுவதற்காக வரும் நாட்களில் வருவார்கள். ஒவ்வொரு அடியிலும் அனேக ஆத்மாக்களின் நன்மைக்கான பங்கு நிரம்பியிருக்கிறது. இந்த நிரம்பியிருத்தலின் மூலம் அனைவரின் இதயத்தை ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்தீர்கள். மிக நல்ல சேவை மற்றும் அன்பின் பங்கை செய்தீர்கள். பாப்தாதா செய்விப்பவராகவும் இருக்கிறார் மேலும் சாட்சியாகி பார்ப்பவராகவும் இருக்கிறார். செய்விக்கவும் செய்தார் மற்றும் பார்க்கவும் செய்தார். குழந்தைகளின் ஊக்கம் உற்சாகம் மற்றும் தைரியத்தின் மேல் பாப்தாதா விற்கு பெருமிதம் இருக்கிறது. இன்னும் வரும் நாட்களிலும் செய்தி வலுவாக பரவும். நிலத்தை உருவாக்கி வந்திருக்கிறீர்கள், விதை போட்டு விட்டு வந்திருக்கிறீர்கள். இப்பொழுது விரைவில் விதையின் பழம் அதாவது பலனும் கிடைக்கும். பிரத்யக்ஷ பலன் வெளியாகப் போகிறது, நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதோ நீங்கள் சென்றிருந்தீர்கள், ஆனால் என்ன சேவை செய்து வந்திருக்கிறீர்களோ அந்த சேவையின் பலன் சொரூபமாக அவர்களே ஓடி ஓடி வருவார்கள். காந்தம் தூரத்திலிருந்து இழுப்பதாக அனுபவம் செய்வார்கள். யாரோ என்னை இழுக்கிறார் என்று அனுபவம் செய்வார்கள். எப்படி தொடக்க காலத்தில் அனேக ஆத்மாக்களுக்கு என்னை யாரோ இழுக்கிறார் என்று ஆன்மீக ஈர்ப்பு ஏற்பட்டது. அதே போல் இவர்களும் இழுக்கப்பட்டு வருவார்கள். இந்த ஆன்மீக ஈர்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்வீர்கள் இல்லையா? அதிகரித்து அதிகரித்து ஈர்க்கப்பட்டவர்கள் பறந்து வந்து சேர்ந்து விடுவார்கள் அந்தக் காட்சியும் இப்பொழுது நடக்கப் போகிறது. இப்பொழுது இது தான் இன்னும் பாக்கி (நடக்க) உள்ளது. செய்தியை கொடுப்பவர்கள் செல்கிறீர்கள் ஆனால் அவர்கள் சுயம் சத்திய தீர்த்த ஸ்தலத்திற்கு வந்து சேருவார்கள் என்ற இது இறுதி நிலை ஆகும். இப்பொழுது இது தான் இன்னும் நடக்க வேண்டியதாக இருக்கிறது. இதற்காக இப்பொழுது நிலம் தயாராகி

விட்டது, விதையும் போடப்பட்டு விட்டது. இப்பொழுது விரைவிலேயே பழமும் வெளியாகி விடும். நல்லது. இரண்டு பக்கங்களுக்கும் சென்றிருந்தீர்கள். பாப்தாதாவிடம் அனைவரின் தைரியம் ஊக்கம் உற்சாகத்தின் செய்தி வந்து சேருகிறது. பெரும்பான்மையோரிடம் சேவையின் ஊக்கம் உற்சாகம் இருக்கும் காரணத்தினால் மாயாவை வென்றவர் ஆவதிலும் சுலபமாகவே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஓய்வாக இருக்கிறார் என்றால் மாயாவின் தாக்குதலும் இருக்கும் ஆனால் உள்ளப்பூர்வமாக பிஸியாக இருக்கிறீர்கள், செய்யும் வேலையினால் இல்லை. யார் உள்ளப்பூர்வமாக சேவையில் பிஸியாக இருக்கிறார் களோ அவர்கள் சுலபமாகவே மாயாவை வென்றவர் ஆகி விடுகிறார். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து குஷி அடைகிறார். அங்கு சாதனமும் சுலபமாக கிடைத்து விடுகிறது. இவர்களுக்கு பிராப்தியும் ஆகி விடுகிறது. லட்சியம் இருக்கிறது, உழைப்பும் இருக்கிறது மேலும் சாதனமும் சகஜமாக பிராப்தி ஆகிறது. இந்த மூன்று விஷயங்களின் காரணமாக பந்தயத்தில் நன்றாக முன் வரிசை எண்ணை பெற்றுக் கொள்கிறார்கள். நல்லது ஆனால் பாரதத்திலும் யாரும் குறைந்தவர்கள் இல்லை. அனைவரும் அவரவர்களின் ஊக்கம் உற்சாகத்தின் ஆதாரத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதத்திலிருந்து தான் பெயர் வெளியாகும். வெளிநாட்டினரின் வெற்றியும் பாரதத்திலிருந்து தான் உருவாகும். இது அவர்களுக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. மேலும் நான் பெயரை புகழடையச் செய்ய வேண்டும் இது என்னுடைய கடமை என்று நினைக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வரும் செய்தி மூலம் பாரதம் விழித்தெழ வேண்டும். இந்த லட்சியம் உறுதியாக இருக்கிறது. மேலும் அதை செய்து கொண்டும் இருக்கிறார்கள். தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது வெளிநாடு வரை செய்தி சென்றிருக்கிறது. வெளிநாட்டினுடையது பாரதம் வரை வந்தடைய வேண்டும். மேலும் அவர்கள் பறந்து பறந்து வந்து கொண்டிருக்கிறார்கள். செய்தி அவர்களை பயணம் செய்ய வைக்கிறது. பறந்து வருகிறார்கள். இங்கே வந்து சேர்ந்து விடுவார்கள். இப்பொழுது வெளிநாட்டில் நன்றாக பரவிக் கொண்டிருக்கிறது ஆனால் வெளிநாட்டின் செய்தி பாரதம் வரை வந்து சேர்வது என்பதும் நடக்கும். நீங்கள் என்னென்ன தனது பங்கை செய்தீர்களோ அதை மிக நன்றாகச் செய்தீர்கள். இப்பொழுதும் முன்னேறிச் செல்வதற்கான சகயோகம்

மற்றும் வரதானம் இருக்கிறது. ஒவ்வொரு ஆத்மா விற்கும் அவரவர்களுக்கென்ற பங்கு இருக்கிறது. எந்த அளவு அனுபவியாக ஆகிக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு இன்னும் அனுபவங்களின் ஆதாரத்தினால் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்கள். செய்விப்பவர் யார் மூலமாக செய்வித்தாரோ அது நாடகத்தின் அனுசாரம் மிக நன்றாக செய்வித்தார். கருவி என்ற உணர்வு சேவையை செய்வித்தே விடுகிறது. அந்த மாதிரி சேவையை செய்வித்தார், நீங்கள் கருவியாக ஆனீர்கள், சேமிப்பும் ஆனது. மேலும் எதிர்காலத்திலும் சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** எப்பொழுதும் சந்திப்பு என்கிற மேளாவில் இருப்பவர்கள் தான் இல்லையா? இந்த சந்திப்பின் மேளா அழியாத சந்திப்பு மேளாவின் அனுபவத்தை செய்வித்து விடுகிறது. நீங்கள் எங்கிருந்தாலும் ஆனால் மேளாவில் இருக்கிறீர்கள். மேளாவில் இருந்து தூரமாக இருப்பதில்லை. மேளா என்றால் சந்திப்பு. அந்த மாதிரி நீங்கள் எப்பொழுதுமே சந்திப்பிலேயே இருக்கிறீர்கள். யார் எப்பொழுதுமே சந்திப்பில் இருக்கிறார்களோ அவர் மாதிரி பாக்கியவான் வேறு யாராவது இருக்க முடியுமா? பொதுவாக உலகத்தில் மேளா இருக்கும் பிறகு முடிவடைந்து விடும் ஆனால் யாருமே நிரந்தரமாக மேளாவில் இருப்பதில்லை. நீங்கள் பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் எப்பொழுதும் மேளாவிலேயே இருக்கிறீர்கள். உங்களுக்காக எப்பொழுதும் சந்திப்பு மேளா தான். மேளாவில் என்ன நடக்கும்? சந்திப்பது மற்றும் ஊஞ்சலில் ஆடுவது. ஊஞ்சலில் ஆடுவதும் இருக்கிறது தான் இல்லையா? நீங்கள் எப்பொழுதும் பிராப்திகளின் ஊஞ்சலில் ஆடுபவர்கள். அது அந்த மாதிரியான ஊஞ்சல், அதில் எப்பொழுதுமே சுகம் மற்றும் அனைத்து பிராப்திகளின் அனுபவத்தை செய்விக்கக்கூடியது. நீங்கள் அந்த மாதிரி கோடியில் சிலரான பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள். முன்பு மகிமையை கேட்டுக் கொண்டிருந்தோம் இப்பொழுது மகான் ஆகி விட்டோம். நல்லது.

**வரதானம்: சாந்தியின் சக்தியின் மூலமாக அசம்பவத்தை சம்பவம ஆக்கக்கூடிய சகஜயோகி ஆகுக!**

சாந்தியின் சக்தி அனைத்தையும் விட சிரேஷ்ட சக்தி. சாந்தியின் சக்தியின் மூலமாகத் தான் மற்ற அனைத்து சக்திகளும் உருவாகிறது.

அறிவியல் சக்தியின் பிரபாவம் இன்று உலகத்தில் அந்த அளவு இருக்கிறது, அந்த அறிவியலும் அமைதியில் இருந்து தான் உருவானது. எனவே சாந்தியின் சக்தி மூலம் நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். அசம்பவத்தையும் சம்பவமாக ஆக்க முடியும். எதை உலகத்தினர் அசம்பவம் என்று கூறுகிறார்களோ அது உங்களைப் பொறுத்தவரை சம்பவமானது. மேலும் சம்பவமாக இருக்கும் காரணத்தினால் சகஜமாகவும் இருக்கிறது. சாந்தியின் சக்தியை தாரணை செய்து சகஜயோகி ஆகுங்கள்.

**சுலோகன்: வாய்மொழி மூலம் அனைவருக்கும் சுகம் மற்றும் சாந்தி கொடுத்தீர்கள் என்றால் மகிமைக்குத் தகுதியானவராகி விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.11.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திவ்ய தரிசன மூர்த்தி!

இன்று பாப்தாதா தன்னுடைய உலக பிரசித்தி பெற்ற சுய தரிசன சக்ரதாரி, திவ்ய தரிசனத்தில் வெற்றி சொரூபத்திலுள்ள குழந்தைகளைக் காண்கிறர். சுயதரிசனதாரிதான் உலகில் திவ்ய தரிசனத்தை காட்டுபவர். சுயதரிசனதாரி இல்லையேல் திவ்ய தரிசனம் தரும் மூர்த்தியும் இல்லை. ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு சங்கல்பத்திலும் சுய தரிசனம் இருந்தால்தான் திவ்ய தரிசனம் அளிக்க முடியும். சுயதரிசனம் இல்லையேல் திவ்ய தரிசனமும் இல்லை. சுய தரிசன ஸ்திதியில் ஸ்திரமாக இருப்பவர்கள் நடக்கும்போதும், இருக்கும்போதும், இயற்கையான உருவில் நம்முடைய திவ்ய சங்கல்பம், திவ்ய திருஷ்டி, திவ்ய வாக்கு, திவ்ய செயல் ஆகியவற்றின் வாயிலாக அன்னிய ஆத்மாக்களுக்கும் திவ்ய மூர்த்தியின் அனுபவம் ஏற்படுத்துவர். ஸ்வரூபத்தை எடுத்துக்காட்டுவதல்ல, திவ்ய ஸ்வரூபத்தைக் காட்டுவது. ஆகவே, இப்பொழுது பிராமண ஆத்மாக்கள் திவ்யத்தை அனுபவம் செய்விக்க வேண்டும். வருங்காலத்தில் தேவதை ஆவீர்கள், இப்பொழுது திவ்ய சொருபம் ஏற்படவேண்டும். திவ்ய சொரூபத்திற்கு பிறகு தேவதை சொருபம். ஃபரிஸ்தா என்றால் திவ்ய சொருபம். திவ்யத்தின் சக்தி சாதாரணத்தை சமாப்தி செய்துவிடுகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு திவ்யத்தின் சக்தியை செயலில் கொண்டு வருகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு இவர் திவ்ய தரிசன மூர்த்தி என்று மனதின் மூலமும், வார்த்தைகளினாலும் மகிமைபடுத்துவார்கள்.

அநேக பக்தர்களுக்கு தரிசனம் செய்ய அபிலாஷை இருக்கிறது. அவ்வாறு தரிசனம் செய்ய அபிலாஷைகள் உள்ள ஆத்மாக்களுக்கு முன் நீங்களே திவ்ய தரிசன மூர்த்தி பிரத்யட்சமாகும்போது, சர்வ தரிசனம் பெற்று மகிழ்ச்சியடைவார்கள். அந்த சந்தோஷத்தில் திவ்ய தரிசன மூர்த்தியாகிய உங்கள் மீது ஆனந்த புஷ்பமாரி பொழிவார்கள். ஒரு முறை தரிசனம் செய்தால் முக்தி அடைந்து விடலாம் என்று ஆத்மாக்கள் பல

பிறவிகளாக ஆசை கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆத்மாவும் நீங்கள் பிரசன்னமாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றன. அநேக ஜென்மங்களாக முக்தி அல்லது மோட்சம் வேண்டுமென்கிற சங்கல்பம் இப்பொழுது பூர்த்தியடைகிறது. மேலும் பெறும் தரிசனத்திற்குப் பதிலாக தரிசன மூர்த்தியே கிடைத்துவிட்டது என்ற பிராப்தியின் குஷியினால், சந்தோஷத்தினால், பல ஜென்மங்களாக இருந்து வந்த துக்கம், அசாந்தி மறந்துவிடுகிறது. இது சிறிய பிராப்திரேயாயினும் அந்த பிராப்தியின் சமர்த்த ஸ்திதியின் பலனானது சிறிது பாவத்தையாவது போக்க வல்லதாகிறது. ஆதலால் ஆத்மிக்கள் தங்களுடைய சக்திக்கேற்றவாறு பாரமற்ற அனுபவம் செய்கின்றன. ஆகவே தேவனே என்னுடைய பாவத்தை அகற்று: தேவியே! சக்தியே! அம்மையே! எனது பாவத்தை, துடைத்துவிடு என்று நம்பிக்கையோடு வேண்டுகின்றனர். யாராவது தேவி, தேவதையை வழிபடச் செல்லும்போது நமது பாவம் நிச்சயமாகத் தீரும் என்ற நம்பிக்கையுடன் செல்கின்றனர். இறுதியில் நான் உங்களது பாவங்களைப் போக்கி விடுவேன் என்று குருமார்களும் ஆசை காட்டுகின்றனர். பக்தர்களும் இந்தப் பலனை எதிர்பார்த்து குருமார்களை நியமிக்கின்றனர்.ஆனால் திவ்ய தரிசன ஆத்மாக்களின் உங்களுடைய பிரத்யட்ச உருவின் சின்னமாக அந்த ஏற்பாடு நடைபெறுகிறது.

அவ்வாறு திவ்ப தரிசனம் உலகின் முன் வெகு சீக்கிரத்தில் நிச்சயமாகத் தோன்றும். திவ்ய தரிசன மூர்த்தியாகிய நீங்கள் தரிசனம் அளிக்க தகுதிபெற்று இருக்கிறீர்களா? சர்வ அலங்காரங்களும் பூர்த்தியாகி விட்டதா? என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். பாபாவுக்குச் சமமாக பாவத்தை அழிக்கும் சொரூபத்தில் நிலைத்திருக்கிறீர்களா? பாவத்தை நீக்குபவராக மாறுகிறீர்களா? அப்பொழுது நினைவில் ஜ்வாலை சொரூபமாக மாறுவீர்கள். அப்படி மாறுவீர்களா? தரிசனத்துக்காக திரையை விலக்குவார்கள். விலகியவுடன் தரிசனம் ஏற்படும். அவ்வாறு சம்பன்ன (முழுமையான) தரிசன சொரூபமாக மாறும்போது, காலம் என்கிற திரை விலகும்; மேலும் நீங்கள் திவ்ய தரிசனமளிக்கும் மூர்த்தியாக நடைமுறையில் பிரத்யட்சம் ஆகும். தரிசன மூர்த்தி சம்பன்னம் ஆவதற்கான அலங்காரத்தை இன்னுமா செய்து கொண்டிருக்கிறது; சதா சம்பன்னமாக இருக்கும் சொரூபத்தினால் தான் தரிசனம் ஏற்படும், அவ்வாறு தயாராகி விட்டீர்களா? இல்லை

இனிமேல்தான் தயாராகவேண்டுமா? இல்லை சமயம் வரும்போது தயாராகி விடலாம் என்று எண்ணுகிறீர்களா? அந்த இறுதி நேரத்தில் நீங்களே தயாராகிக் கொண்டிருந்தால், எவ்வாறு தரிசன மூர்த்தியாக முடியும்? அவ்வாறானால் அது தன்னுடைய பரிவர்த்தனைக்காக இருக்குமேயல்லாது, விஸ்வத்திற்காக இருக்கமுடியாது. இறுதியில் உங்கள் புகழ் விஸ்வ கல்யாணகாரியா? இல்லை வெறும் சுய கல்யாணகாரியா? சுய கல்யாணகாரியுடன், விஸ்வ கல்யாணகாரியாகவும் இரட்டை காரியம் செய்தால்தான் இரட்டை மகுடதாரியாக முடியும். வெறும் சுய கல்யாணகாரி இரட்டை மகுடதாரியாக முடியாது. ராஜ்யத்தில் வர இயலும் ஆனால் ராஜ்ய அதிகாரியாக வர முடியாது. காலத்திற்கேற்ப இப்பொழுது உங்களுடைய முயற்சி தீவிர கதியில் முன்னேறட்டும், காலமும் வேகமாகச் செல்கிறது. இப்பொழுது நினைவு சக்தி, தீவிர கதியில் செல்லட்டும். இப்பொழுது சாதாரண சொரூபத்தில் இருப்பதால் எப்பொழுதாவது, எங்காவது குழப்பத்தினால் துன்புறுகிறீர்கள். சக்திசாலியான நினைவு என்னும் பட்டியில் இருந்து கொண்டிருந்தால் பாதுகாப்புடன் இருப்பீர்கள். சேவையிலும் குழப்பங்களுக்கு அப்பால் இருங்கள். சேவையிலும் கூட என்ன? ஏது? உன்னுடையது, என்னுடையது என்பவை வந்தால் குழப்பங்கள் ஏற்படும். ஆகவே குழப்பங்களுக்கு அப்பால் இருங்கள். சேவையிலும் சுய கௌரவத்தை இழக்காதே. சேவையிலும் சக்திசாலியான நினைவு இல்லாவிட்டால், அந்த சேவையிலும் வெற்றி குறையும். அத்துடன் தனக்கும், மற்றவர்களுக்கும் குழப்பம் அதிகம் ஏற்படும். பெயருக்காக சேவை செய்யாமல், செயலுக்காக சேவை செய். சக்தி சம்பன்ன சேவை என்பது இதுதான். நெருக்கடியான சமயம் போகிறது; ஸ்தூல ரூபத்தில் பாதுகாப்பு அளிக்கும் சாதனமாக ராணுவம் விளங்குவதுபோல், சூட்சமத்தில் நினைவின் சக்திதான் பாதுகாப்பு அளிக்கும் சாதனமாகும். நினைவு சக்தியே சர்வ அஸ்திரங்களும் (ஆயுதங்களும்) சுற்றிலும் இருப்பதைப் போன்ற பாதுகாப்பு சாதனமாகும். அதனால் சதா தனக்காகவும் சேவை ஸ்தானத்திற்காகவும், பிரவிர்த்திக்காகவும், பாடசாலைக்கு வருகின்ற மாணவருக்காகவும், நினைவு என்னும் சக்தி ஸ்வரூப விருத்தியை வாயுமண்டலத்தில் ஏற்படுத்துங்கள். இச்சமயத்தில் சாதாரண நினைவு பாதுகாப்பு அளிக்கும் சாதனமாக இருக்க முடியாது. மாயையின் பல உருவங்கள், வாயுமண்டலத்தில் ஏற்படுத்தும் குழப்பங்களால் சாதாரண நினைவில்

இருப்பவர்கள் மிகவும் துன்புறுவர். அதனால் தான் இப்பொழுதே எல்லா குழந்தைகளுக்கும் பாப்தாதா எச்சரிக்கை அளிக்கின்றார். சக்திசாலி நிலையில் வாயுமண்டலத்தை அமையுங்கள். அதனால் தானும் பாதுகாப்புடன் இருந்து பிராமண ஆத்மாக்களுக்கும் சக யோகம் அளிக்க இயலும். மேலும் அன்னிய ஆத்மாக்களுக்கும், உங்களுடைய சாந்தி சக்தி, சக யோகம் ஆகியவற்றை அளிக்க இயலும். புரிந்ததா?

அச்சா! அவ்வாறு சர்வ சுய தரிசனதாரி, விஸ்வ தரிசனதாரி, திவ்ய மூர்த்தி எல்லோருடைய பாவனைகளையும் சம்பன்னமாக்கும்; எல்லோருடைய பாவங்களையும் நீக்கும் மாஸ்டர் பாப கடேஷ்வரராகி, பாவங்களை நீக்கும்; சாந்தி, சக்தி, அளிக்கும்; அத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சக்தி மிக்க நினைவு, அன்பு, நமஸ்தே.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.11.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான சகயோகி தான் உண்மையான யோகி!

இன்று குழந்தைகளின் சந்திக்கும் அன்பை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பலம் ஒரே ஒருவர் மீதான நம்பிக்கை என்ற இதே குடை நிழலின் கீழ் சந்திப்பதற்கான ஊக்கம் உற்சாகத்தை சிறிதளவு குழப்பம் கூட ஆர்வத்தை அசைக்க முடியவில்லை. தடை, களைப்பு அனைத்தும் மாறி அன்பின் சகஜமான பாதை என்று அனுபவம் செய்து வந்து சேர்ந்து விட்டீர்கள். இதைத் தான் தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது என்று கூறுவது. எங்கு தைரியம் இருக்கிறதோ அங்கு உற்சாகமும் இருக்கும். தைரியம் இல்லை என்றால் உற்சாகமும் இருப்பதில்லை. அந்த மாதிரி எப்பொழுதும் தைரியம் உற்சாகத்தில் இருக்கும் குழந்தைகள் ஒரே சீரான நிலை மூலமாக நம்பர் ஒன்-னை பெற்று விடுகிறார்கள். எப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலையாக இருந்தாலும், தைரியம் மற்றும் உற்சாகத்தின் இறக்கைகள் மூலமாக ஒரு நொடியில் பறக்கும் கலையின் உயர்ந்த நிலை மூலம் ஒவ்வொரு பெரிய மற்றும் கடுமையான சூழ்நிலையும் சிறியதாக மற்றும் சகஜமாக அனுபவம் ஆகும். ஏனென்றால் பறக்கும் கலையின் எதிரில் அனைத்தும் சின்னஞ்சிறு விளையாட்டு பொம்மைகள் என்று அனுபவம் ஆகும். எவ்வளவு தான் பயங்கரமான விஷயமாக இருந்தாலும் பயங்கரமானதிற்குப் பதிலாக இயல்பானதாக அனுபவம் ஆகும். வேதனையளிக்கும் விஷயங்கள் திடத்தன்மையை கொடுப்பவை என்று அனுபவம் ஆகும். எவ்வளவு தான் துக்கம் நிறைந்த காட்சிகள் வந்தாலும், குஷியின் முரசு துக்கத்தின் காட்சிகளின் பிரபாவத்தை ஏற்படுத்தாது, மேலும் இன்னும் அமைதி மற்றும் சக்தி மூலம் மற்றவர்களின் துக்கம், வேதனையின் அக்னியை குளுமையான நீருக்குச் சமமாக அனைவருக்கும் சகயோகியாக ஆவார்கள். அந்த மாதிரியான நேரத்தில் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சகயோகத்தின் அவசியம் இருக்கும். இதே சகயோகம்

மூலம் தான் சிரேஷ்ட யோகாவை அனுபவம் செய்வார்கள். அனைவரும் உங்களுடைய இந்த உண்மையான சகயோகத்தைத் தான் உண்மையான யோகி என்று ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அந்த மாதிரியே இறுதியில் ஐயோ ஐயோ! என்று அலறும் நேரத்தில் 'உண்மையான சகயோகியாக இருப்பவரிலிருந்து உண்மையான யோகி' என்ற இந்த வெளிப்படையான பலனை அடைவதன் மூலமாகத் தான் வெற்றி முழக்கம் ஏற்படும். உங்களுடைய ஒரு துளிக்கான தாகத்தில் இருக்கிறோம் என்பது இந்த நேரத்தின் மகிமை தான் . . . இது அமைதியின் சக்தியின், ஒரு நொடியின் அனுபவம் என்ற துளி துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு திருப்தியின் அனுபவம் செய்விக்கும். அந்த மாதிரி நேரத்தில் ஒரு நொடியின் பிராப்தி அவர்களுக்கு, - ஒரு நொடியில் அனேக ஜென்மங்களின் பிராப்தி மற்றும் திருப்தியின் அனுபவம் செய்விக்கும் ஆனால் அந்த ஒரு நொடியின் சக்திசாலி நிலையின் நீண்ட காலத்து பயிற்சி உள்ள ஆத்மாவே தாகத்தில் இருப்பவரின் தாகத்தைத் தீர்க்க முடியும். அந்த மாதிரி துக்கம், வேதனை நிறைந்த பயங்கரமான வாயுமண்டலத்தின் மத்தியில் ஒரு நொடியில் மாஸ்டர் உருவாக்குபவர், மாஸ்டர் வரமளிக்கும் வள்ளல், மாஸ்டர் கடல் ஆகி அந்த மாதிரி சக்திசாலி நிலையின் அனுபவத்தை செய்விக்க முடியுமா? அந்த மாதிரி நேரத்தில் இது என்ன நடந்து கொண்டிருக்கிறது (எதிர்மறை விசயங்கள்) என்று அதைப் பார்ப்பதிலும் மற்றும் கேட்பதிலும் ஈடுபட்டு விட்டீர்கள் என்றாலும் கூட சகயோகி ஆக முடியாது. எனவே எப்பொழுதும் தன்னை அற்ப காலத்து இச்சை என்றால் என்னவென்று தெரியாத சக்திசாலி நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சியினை இப்பொழுதிலிருந்தே செய்யுங்கள். ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு மூச்சு மூலம் இடைவிடாத சேவாதாரி, இடைவிடாத சகயோகியாக இருப்பவரிலிருந்து யோகியாகுங்கள். எப்படி உடைந்த சிலைக்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. பூஜைக்குரியதாக ஆவதற்கான தகுதி கிடைக்க முடியாது. அவ்வாறு துண்டுப்பட்ட சேவாதாரி, துண்டுபட்ட யோகி அந்த மாதிரியான நேரத்தில் உரிமையை (தகுதி) அடையச் செய்யும் அதிகாரியாக ஆக முடியாது. எனவே அந்த மாதிரி சக்திசாலியான சேவை செய்வதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. நேரம் மணி அடித்துக் கொண்டிருக்கிறது. எப்படி பக்தர்கள் தன்னுடைய இஷ்ட தேவதை மற்றும் தேவிகளை மணி அடித்து எழுப்புகிறார்கள், தூங்க வைக்கிறார்கள் மற்றும் பிரசாதம் படைக்கிறார்கள். அதேபோன்று

இப்பொழுது நேரம் மணி அடித்து இஷ்ட தேவதை மற்றும் தேவிகளை உஷார் படுத்துகிறது. விழித்தெழுந்தவர் களாக ஆகியிருக்கிறீர்கள் ஆனால் தூய்மையான இல்லறத்தில் அதிகம் பிஸியாகி விட்டீர்கள். தாகத்தில் இருக்கும் ஆத்மாக்களின் தாகத்தை தணிப்பதற்கு, ஒரு நொடியில் அனேக பிறவிகளின் பிராப்தியை செய்விக்கும் சக்திசாலி நிலையின் பயிற்சிக்காக தயார் ஆக்கும் நேரத்தின் மணி அடித்துக் கொண்டிருக்கிறது. பிரத்யக்ஷத்தின் திரைச்சீலையை அகற்றுவதற்கான நேரம் சம்பன்ன இஷ்ட ஆத்மாக்கள் உங்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறது. புரிந்ததா? நேரத்தின் மணியோசையையோ நீங்கள் அனைவரும் கேட்டீர்கள் இல்லையா. நல்லது.

அந்த மாதிரி ஒவ்வொரு சூழ்நிலையையும் பறக்கும் கலை மூலமாக எளிதாகக் கடந்து செல்லக்கூடிய நீண்ட காலத்தின் ஒரு நொடியின் பிராப்தி மூலமாக திருப்தி படுத்தக்கூடிய இடைவிடாத சேவாதாரி, இடைவிடாத யோகி, எப்பொழுதும் மாஸ்டர் வள்ளல், வரமளிக்கும் வள்ளல் சொரூபத்தில் இருக்கும், எப்பொழுதும் ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை மூலம் அனைவரது ஆசைகளை நிறைவேற்றக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் சக்திசாலி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**கான்பூரின் செய்தியை கங்கை சகோதரி பாப்தாதாவிடம் கூறினார்**: நீங்கள் எப்பொழுதும் ஆடாத அசையாத ஆத்மா. ஒவ்வொரு சூழ்நிலையிலும் பாப்தாதாவின் பாதுகாப்பு குடைநிழலின் அனுபவம் நிறைந்தவர் தான் இல்லையா? பாப்தாதா குழந்தைகளை எப்பொழுதும் பாதுகாப்பாக வைக்கிறார். எப்பொழுதுமே பாதுகாப்பிற்கான சாதனம் தந்தை மூலமாக கிடைத்திருக்கிறது. எனவே எப்பொழுதுமே தந்தையின் அன்பின் கரம் மற்றும் துணை இருக்கிறது. 'ஒன்றும் புதிதல்ல' என்ற இந்த பயிற்சி உடையவர் ஆகி விட்டீர்கள் தான் இல்லையா? என்ன நடந்து முடிந்ததோ அது ஒன்றும் புதிதல்ல. என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதுவும் புதிதல்ல! இயல்பாகவே புத்தியில் டச்சிங் (உணர்த்துதல்) ஆகிக் கொண்டே இருக்கிறது. ஒத்திகை இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரியான நேரத்தில் பாதுகாப்பிற்கான, சேவைக்கான என்ன சாதனம் இருக்க வேண்டும்? என்ன சொரூபம் இருக்க வேண்டும்? இதனுடைய ஒத்திகை நடக்கிறது. இறுதியில் ஐயோ, ஐயோ என்ற

# 1984 அவ்யக்த முரளி

அலறலின் நடுவே வெற்றி முழக்கம் ஏற்படும். அளவற்றதற்கு பிறகு முடிவு. மேலும் புது யுகத்தின் ஆரம்பம் ஆகி விடும். அந்த மாதிரியான நேரத்தில் விரும்பாவிட்டாலும் அனைவரின் மனதில் இந்த பிரத்யக்ஷதாவின் (வெளிப்பாடு) முரசு கொட்டும். காட்சிகள் மிக மென்மையானதாக இருக்கும் ஆனால் பிரத்யக்ஷதாவின் முரசு தான் ஒலிக்கும். அப்படி ஒத்திகையை கடந்து வந்து விட்டீர்கள். எல்லைக்கப்பாற்பட்ட கவலையில்லா இராஜா ஆகி தனது பங்கை செய்தீர்கள். மிக நன்றாக செய்தீர்கள். இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள், இது தான் அன்பின் சொரூபம். நல்லதை யோசிப்பதற்குப் பதிலாக, யோசிக்காமல் இருப்பதும் இருக்கிறது. என்ன நடந்ததோ அதுவும் ஆஹா, ஆஹா. இதில் கூட அனேகர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும். எனவே எரிந்து போவதிலும் நன்மை இருக்கிறது என்றால் தப்பித்துக் கொள்வதிலும் நன்மை இருக்கிறது. ஐயோ என்று கூற மாட்டீர்கள். அய்யோ எரிந்து விட்டது என்று அப்படியும் வேண்டாம். இதிலும் நன்மை இருக்கிறது. எப்படி தப்பித்துக் கொள்ளும் நேரத்தில் ஆஹா, ஆஹா என்று பாராட்டுதல் செய்கிறார்கள். ஆஹா தப்பித்துக் கொண்டார், அதே போலவே எரியும் நேரத்திலும் ஆஹா! ஆஹா! என்றிருக்க வேண்டும். இதைத் தான் ஒரே சீரான நிலை என்று கூறுவது. காப்பாற்றுவது நம்முடைய கடமை, ஆனால் எரியக்கூடிய பொருள் எரியத் தான் செய்யும். இதிலேயும் பல கணக்கு வழக்குகள் இருக்கலாம். நீங்களோ கவலையில்லா இராஜா ஒன்றை இழந்தோம், லட்சத்தை அடைந்தோம் என்ற இது தான் பிராமணர்களின் சுலோகன். இழக்க வில்லை ஆனால் அடைந்திருக்கிறீர்கள். எனவே கவலையில்லாதவர். மேலும் நல்லது ஏதோ கிடைக்கப்போகிறது, எனவே எரிவதும் நாடகம். காப்பாற்றப்படுவதும் நாடகம். இரண்டுமே நாடகம் தான். இவர் எந்த அளவு கவலையற்ற இராஜாவாக இருக்கிறார் என்ற இதைத் தானே பார்ப்போம். எரிந்து கொண்டி ருக்கிறது, ஆனால் இவர் இராஜா ஏனென்றால் பாதுகாப்பு குடைநிழலின் கீழ் இருக்கிறார். அவர்கள் என்னவாகும், எப்படி ஆகும் என்ற கவலையில் வந்து விடுவார்கள். எப்படி சாப்பிடுவோம், எப்படி வாழ்க்கையை நடத்துவோம் என்ற கவலை இருக்கும் ஆனால் குழந்தைகளுக்கு கவலையே இல்லை. நல்லது.

இப்பொழுது ஏற்பாடுகளையோ செய்யத் தான் வேண்டும் இல்லையா? செல்வேன் என்று இதை இப்படி நினைக்காதீர்கள் ஆனால்

அனைவரையும் அழைத்துச் செல்வேன் என்று நினையுங்கள். அனைவருக்கும் சாட்சாத்காரம் செய்வித்து திருப்தி படுத்தி பிரத்யக்ஷதாவின் முரசை அடித்துக் கொண்டே பிறகு செல்வோம். முதலில் ஏன் செல்ல வேண்டும். நீங்களோ தந்தையுடன் சேர்ந்தே செல்வீர்கள். பிரத்யக்ஷதாவின் அதிசயமான காட்சிகளை அனுபவம் செய்து செல்வீர்கள் இல்லையா? இவர்களும் ஏன் இறந்து விட வேண்டும், இந்த மனமுவந்த பக்தி, மனமுவந்த பூஜை அன்பின் புஷ்பங்கள் என்ற இந்த இறுதி காட்சிகள் மிகவும் அதிசயமாக இருந்தது. அட்வான்ஸ் பார்ட்டியில் யாருக்கு பங்கு இருக்கிறது என்பது வேறு விஷயம். மற்றபடி இந்தக் காட்சியை பார்ப்பதோ மிகவும் அவசியம். யார் இறுதியில் செய்தார்களோ அவர்கள் அனைத்தையும் செய்தார்கள். எனவே தந்தை இறுதியில் வருகிறார் என்றால் அனைத்தையும் செய்து விட்டார் இல்லையா? எனவே தந்தையுடன் சேர்ந்து இந்த அதிசய காட்சிகளைப் பார்த்துக் கொண்டே ஏன் உடன் செல்லக்கூடாது. இதுவும் சிலருடைய பங்காக இருக்கிறது. எனவே செல்ல வேண்டும் என்ற எண்ணம் வைக்காதீர்கள். சென்று விட்டார்கள் என்றாலும் நல்லது. இருந்து விட்டார்கள் என்பதும் மிகவும் நல்லது. தனியாக சென்றீர்கள் என்றால் அட்வான்ஸ் பார்ட்டியில் சேவை செய்ய வேண்டும் என்பதிருக்கும். எனவே செல்ல வேண்டும் என்ற இதை மட்டும் யோசிக்காதீர்கள். அனைவரையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற இதையும் யோசியுங்கள். நல்லது. இதுவும் ஒரு நல்ல அனுபவத்தை அதிகரித்தது. என்ன நடக்கிறதோ அதன் மூலம் அனுபவத்தின் அளவு அதிகரித்து விடுகிறது. எப்படி மற்றவர்களுக்கு படிப்பில் பட்டம் கிடைக்கிறது. அதே போல் நீங்கள் அனுபவம் செய்தீர்கள் என்றால் டிகிரி அதாவது பட்டம் கிடைத்தது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** அனைவரும் தன்னை சுய ராஜ்ய அதிகாரி என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது சங்கமயுகத்தில் சுய ராஜ்யம், உலகின் இராஜ்யம் எதிர்காலத்திற்கான விஷயம். சுயராஜ்ய அதிகாரி தான் உலக இராஜ்ய அதிகாரி ஆகிறார். எப்பொழுதும் தன்னை சுயராஜ்ய அதிகாரி என்று புரிந்து இந்த கர்ம இந்திரியங்களை வேலைக்காரர்கள் என்று புரிந்து தன்னுடைய அதிகாரத்தினால் நடத்துவிக்கிறீர்களா அல்லது சில நேரம் ஏதாவது கர்ம இந்திரியம் (உங்களை மீறி) இராஜா ஆகி விடுகிறதா? சுயம் நீங்களே இராஜாவா அல்லது எப்பொழுதாவது, ஏதாவது ஒரு கர்ம இந்திரியம் இராஜா ஆகி விடுகிறதா? எப்பொழுதாவது

ஏதாவது ஒரு கர்ம இந்திரியம் ஏமாற்றத்தையோ கொடுப்பதில்லையே? ஒருவேளை எதன் மூலமாவது ஏமாற்றம் அடைந்தீர்கள் என்றால் துக்கத்தை அடைந்தீர்கள். ஏமாற்றம் துக்கத்தை பிராப்தி செய்விக்கிறது. ஏமாற்றம் இல்லை என்றால், துக்கம் இல்லை. அப்படி நீங்கள் சுயராஜ்யத்தின் குஷியில், போதையில், சக்தியில் இருப்பவர்கள். சுயராஜ்யத்தின் போதை பறக்கும் கலையில் எடுத்துச் செல்லக்கூடிய போதை எல்லைக்குட்பட்ட போதை நஷ்டத்தை பிராப்தி செய்விக்கிறது. இந்த எல்லைக்கப்பாற்பட்ட போதை ஆன்மீக போதை சுகத்தின் பிராப்தி செய்விப்பது. அப்படி யதார்த்த இராஜ்யம் என்றால் இராஜாவின் இராஜ்யம், பிரஜைகளின் இராஜ்யம் குழப்பங்களை ஏற்படுத்தும் இராஜ்யம். தொடக்கத்திலிருந்து இராஜாக்களின் இராஜ்யம் தான் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது கடைசி பிறவியில் பிரஜைகளின் இராஜ்யம் வந்தது.இப்பொழுது நீங்கள் அனைவரும் இராஜ்ய அதிகாரியாக ஆகி விட்டீர்கள். அனேக பிறவிகள் யாசிப்பவர்களாக இருந்தீர்கள், இப்பொழுது யாசிப்பவரிலிருந்து அதிகாரி ஆகி விட்டீர்கள். குழந்தைகளே குஷியாக இருங்கள், சந்தோஷமாக இருங்கள் என்று பாப்தாதா எப்பொழுதும் கூறுகிறார். எந்த அளவு தன்னை சிரேஷ்ட ஆத்மா என்று புரிந்து சிரேஷ்ட காரியம், சிரேஷ்ட பேச்சு, சிரேஷ்ட எண்ணம் வைப்பீர்களோ அந்த அளவு இந்த சிரேஷ்ட எண்ணத்தின் மூலம் சிரேஷ்ட உலகத்தின் அதிகாரி ஆகி விடுவீர்கள். இந்த சுயராஜ்யம் உங்களுடைய பிறப்புரிமை, இது தான் உங்களை பல பிறவிகளுக்கு அதிகாரியாக ஆக்கக்கூடியது. நல்லது.

**வரதானம்: மனம், புத்தியின் ஒருமித்த நிலை மூலமாக அனைத்து ஸித்திகளை (வெற்றிகளை), பிராப்திகளை பிராப்தி செய்யக்கூடிய எப்பொழுதும் சக்தி நிறைந்த ஆத்மா ஆகுக!**

அனைத்து சித்திகளை பிராப்தி செய்வதற்காக ஒருமித்த நிலையின் சக்தியை அதிகரியுங்கள். இந்த ஒருமித்த நிலையின் சக்தி சுலபமாக தடையற்றவர் ஆக்கி விடும். கடின உழைப்பு செய்வதற்கு அவசியம் இருக்காது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது சுலபமாக அனுபவம் ஆகும். பிறகு சுலபமாக ஒரே சீரான நிலை உருவாகி விடும். அனைவருக்காகவும் நன்மை பயக்கும் உள்உணர்வு, சகோதரன் சகோதரன் என்ற பார்வை இருக்கும் ஆனால் ஒருமித்த நிலை

உடையவராக ஆவதற்காக உங்களுடைய மனம் மற்றும் புத்தி எப்பொழுதும் உங்களுடைய கட்டளைக்கேற்றபடி நடக்க வேண்டும். கனவில் கூட ஒரு விநாடி கூட குழப்பம் இருக்கக் கூடாது.

**சுலோகன்: தாமரை மலருக்குச் சமமாக விலகி இருந்தீர்கள் என்றால், பிரபுவின் அன்பிற்குப் பாத்திரமானவர் ஆகி விடுவீர்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 28.11.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ணத்தை வெற்றிகரமாக ஆக்குவதற்கான சுலபமான வழி!

இன்று உலகைப் படைத்தவர், உலகிற்கு நன்மை செய்யும் தந்தை உலகை சுற்றி வலம் வருவதற்காக, விசேஷமாக அனைத்து குழந்தைகளையும் கண்காணிக்கப்பதற்காக நாலாபுறங்களிலும் சென்றார். ஞான சொரூப ஆத்மாமான குழந்தைகளையும் பார்த்தோம். அன்பான சகயோகி குழந்தைகளையும் பார்த்தோம். பக்த குழந்தைகளையும் பார்த்தோம். அஞ்ஞான குழந்தைகளையும் பார்த்தோம். பல விதமான ஆத்மாக்கள் அவரவர்களுடைய காரியத்தில் முழ்கியிருப்பதை பார்த்தோம். ஒரு சிலர் சில காரியங்களைச் செய்யும் ஈடுபாட்டில் முழ்கியிருந்தார்கள், சிலர் உடைக்கும் காரியத்தில் முழ்கியிருந்தார்கள், சிலர் இணைக்கும் காரியத்தில் முழ்கியிருந்தார்கள் ஆனால் அனைவரும் அவசியம் முழ்கியிருந்தார்கள். அனைவரின் மனதில் ஏதாவது கிடைக்க வேண்டும், ஏதாவது எடுக்க வேண்டும், ஏதாவது அடைய வேண்டும் என்ற இந்த எண்ணம் தான் இருந்தது. மேலும் இதே இலட்சியத்தோடு ஒவ்வொருவரும் அவரவர்களின் காரியத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். எல்லைக்குட்பட்ட பிராப்தியாக இருந்தாலும், ஏதாவது கிடைத்து விட வேண்டும் அல்லது ஏதாவது ஆகி விட வேண்டும் என்ற இந்த முழு ஆர்வத்தில் தான் அனைத்து பக்கமும் பார்த்தோம். இவர்களின் மத்தியில் விசேஷமாக பிராமண குழந்தைகளையும் பார்த்தோம். பாரதம் மற்றும் வெளிநாட்டு அனைத்து குழந்தைகளிடமும் இப்பொழுது ஏதாவது செய்து விடவேண்டும் என்ற ஒரு எண்ணம் இருப்பதை பார்த்தோம். எல்லைக்கு அப்பாற்பட்ட காரியத்தில் ஏதாவது விசேஷம் செய்து காண்பிக்க வேண்டும், மேலும் தனக்குள்ளும் ஏதாவது விசேஷத்தை தாரணை செய்து விசேஷ ஆத்மா ஆகி விடவேண்டும் என்ற ஊக்கத்தைப் பெறுமான்மையான குழந்தைகளிடம் பார்த்தோம். ஊக்கம் உற்சாகத்தின் விதையை தன்னுடைய முயற்சி செய்வது, கூடவே நேரத்தின் சூழ்நிலையில் அனைவரின் மனதில் வெளிப்படையாகவே பார்த்தோம்.

இதே ஊக்கத்தின் விதையை நிரந்தரமாக ஆக்குவதற்காக அடிக்கடி கவனம் கொடுக்கும் தண்ணீர் மற்றும் சோதனை அதாவது எப்பொழுதும் வளர்ச்சியடைவதற்கான விதி என்ற சூரிய ஒளி கிடைத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். விதை விதைக்க அனைவருக்கும் தெரிகிறது, ஆனால் பாலனை செய்து பழம் கொடுக்கும் சொரூபமாக ஆக்குவதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது..

பாப்தாதா அமிர்தவேளையிலிருந்து நாள் முழுவதும் குழந்தைகளின் இந்த விளையாட்டு என்று கூறினாலும் அல்லது முழு ஈடுபாட்டின் வளர்ச்சி என்று கூறினாலும், அதை தினசரி பார்க்கிறோம். ஒவ்வொருவரும் தனக்காக மற்றும் சேவைக்காக மிக நல்ல நல்ல ஊக்கம் நிறைந்த, இப்பொழுதிலிருந்து இதை செய்தேன், அப்படி செய்தேன், அவசியம் செய்வேன் என்ற எண்ணத்தை சிந்திக்கிறார்கள். கண்டிப்பாக செய்து காண்பிப்பேன் என்ற சிரேஷ்ட எண்ணத்தின் விதை விதைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். பாப்தாதாவுடன் ஆன்மீக உரையாடல் செய்யும் பொழுதும், மிகவும் இனிமையான விஷயங்களைக் கூறுகிறார்கள் ஆனால் எப்பொழுது அந்த எண்ணத்தை அதாவது விதையை நடைமுறையில் கொண்டு வருவதற்கான பாலணை செய்கிறார்கள் என்றால் என்ன ஆகிறது? ஏதாவதொரு விஷயத்தில் வளர்பதின் விதியில் மற்றும் பழ (பலன்) சொரூபமாக ஆக்கும் விசேஷத்தில் வரிசைக்கிரமமாக சக்திக்கு ஏற்றபடி செய்தவர்களாக ஆகி விடுகிறார்கள். எந்தவொரு என்ணம் என்ற விதையை நன்றாக வளரச் செய்து பழம் கொடுக்க வைப்தற்கான சுலபமான வழி ஒன்றே ஒன்று தான். அது - எப்பொழுதும் விதை ரூப தந்தையிடம் ஒவ்வொரு நேரமும் அனைத்து சக்திகளின் பலத்தை அந்த விதையில் நிரப்பிக் கொண்டு இருக்க வேண்டும். விதை ரூபமாக உங்களுடைய எண்ணம் என்ற விதை இயல்பாக மற்றும் சுலபமாக வளர்ந்து பழம் கொடுப்பதாக மாறிவிடும் ஆனால் விதை ரூபத்தோடு நிரந்தர தொடர்பு இல்லாத காரணத்தினால் மற்ற ஆத்மாக்களை மற்றும் சாதனங்களை வளர்ப்பதற்கான விதியாக ஆக்கி விடுகிறார்கள். இந்த காரணத்தினால் அப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யலாம், இவர் மாதிரி செய்யலாம் என்ற விஸ்தாரத்தில் நேரம் மற்றும் உழைப்பை அதிகம் ஈடுபடுத்துகிறார்கள். ஏனென்றால் ஏதாவது ஆத்மாவை அல்லது சாதனத்தை ஆதாரமாக ஆக்கி

விடுகிறார்கள். கடல் மற்றும் சூரியனிடமிருந்து தண்ணீர் மற்றும் சூரிய ஒளி கிடைப்பதற்குப் பதிலாக எவ்வளவு தான் சாதனங்களின் தண்ணீர் மூலம் ஆத்மாக்களை ஆதாரம் என்று நினைத்து, சக்தி கொடுப்பதினால் விதை பழம் கொடுப்பதாக ஆக முடியாது. எனவே கடுமையாக உழைத்த பிறகு, அதிக நேரத்தை ஈடுபடுத்திய பிறகும் எப்பொழுது வெளிப்படையான பலன் ஆவதில்லையோ, அப்பொழுது நடைமுறையில் உற்சாகம் குறைந்து விடுகிறது. பிறகு தன் மீதும் தன்னுடன் இருப்பவர்கள் மீதும் சேவையின் மீதும் சோர்வுடைவர்களாக மாறிவிடுகிறார்கள். சில நேரம் குஷி, சில சோர்வு என்ற இரண்டு அலைகளும் பிராமண வாழ்க்கைப் படகை சில நேரம் ஆட்டுகிறது, சில நேரம் ஓட்டுகிறது. இன்றைய நாட்களில் அனேக குழந்தைகளின் வாழ்க்கை முறை இப்படியாகத் தென்பட்டது. அதாவது இந்த வாழ்க்கையில் இருக்கிறோம், காரியமும் செய்து கொண்டு இருக்கிறோம், ஆனால் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி அனுபவம் செய்வதில்லை, எனவே குஷி இருக்கிறது, ஆனால் குஷியில் நடனமாடிக் கொண்டேயிருக்க வேண்டும் என்பது இல்லை. போய் கொண்டிருக்கிறோம், ஆனால் அதி வேகத்தில் இல்லை. உயர்ந்த வாழ்க்கை உள்ளவர்களாக ஆகி விட்டோம், தந்தையின் குழந்தை விட்டோம், சேவாதாரியாக ஆகி விட்டோம், துக்கம், வேதனை நிறைந்த உலகத்தி-ருந்தும் விலகி வந்துவிட்டோம் என்ற அதிர்ப்த்தியும் இருக்கிறது ஆனால் திருப்தியின் இடையே அதிருப்தியின் அலை விரும்பாவிட்டாலும், புரிந்து கொண்ட போதிலும் வந்து விடுகிறது, ஏனென்றால், ஞானம் சுலபமானது, நினைவு செய்வதும் சுலபம் தான்! சம்மந்தம் மற்றும் தொடர்பில் விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர் ஆகி, அன்பை திருப்பிச் செய்வதில் சில நேரம் சுலபமாகவும், சில நேரம் கடினமாகவும் அனுபவம் ஆகிறது.

பிராமண குடும்பம் மற்றும் சேவையின் குடும்பம் இதைத் தான் சம்மந்தம் சம்பர்க்கம் (தொடர்பு) என்று கூறுவது. இதில் ஏதாவதொரு விஷயத்தில் எப்படி அனுபவம் ஆக வேண்டுமோ, அப்படி செய்வதில்லை. இந்த காரணத்தினால் இரண்டு அலைகளும் இருக்கிறது. இப்பொழுது நேரத்தின் அருகாமையின் காரணமாக, முயற்சியின் இந்த வேகம், நேரத்திற்கு ஏற்றாற்போல் சம்பூர்ண இலட்சியத்தை சென்றடைய விடாது. இப்பொழுதைய நேரமே தடைகளை அழிப்பவராகி, உலகின்

தடைகளுக்கு நடுவில் துக்கமான ஆத்மாக்களுக்கு சுகம் நிம்மதியின் அனுபவத்தை செய்விப்பது. நீண்ட காலத்து தடையற்ற நிலையில் இருப்பது தான் தடைகளை அகற்றும் காரியத்தை செய்ய முடியும். இதுவரையிலும் தன்னுடைய வாழ்க்கையில் வரும் தடைகளை அகற்றுவதிலேயே பிஸியாக இருக்கிறீர்கள், மேலும் அதிலேயே சக்தியை ஈடுபடுத்திக் கொண்டேயிருந்தீர்கள் என்றால், மற்றவர்களுக்கு சக்தி கொடுப்பதற்காக பொறுப்பாளர் எப்படி ஆக முடியும்.? தடையற்றவராகி சக்திகளின் கையிருப்பை சேமிப்பு செய்யுங்கள். அப்பொழுது தான் சக்தி ரூபம் ஆகி, தடைகளை அழிக்கும் காரியத்தைச் செய்ய முடியும். புரிந்ததா!

விசேஷமாக இரண்டு விஷயங்கள் பார்த்தோம். அஞ்ஞானி குழந்தைகள் பாரதத்தில் பதவியை அடைவதிலும் மற்றும் பதவியை அடைய வைப்பதிலுமே ஈடுபட்டு இருக்கிறார்கள். இரவு பகலாக கனவில் கூட பதவி தான் தென்படுகிறது. மேலும் பிராமண குழந்தைகள் தன்னை நிலையாக வைத்துக் கொள்ளவதில்லேயே ஈடுபட்டு இருந்தார்கள். பதவி கிடைத்துவிட்டது, ஆனால் அதில் தன்னை நிலைக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளி நாட்டில் தங்களாலேயே உருவாக்கபட்ட அழிக்கும் சக்தியிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான வழியைத் தேடுவதி லேயே ஈடுபட்டிருக்கிறார்கள். பெரும்பான்மையோரின் வாழ்க்கை, வாழ்க்கையாக இல்லை ஆனால் கேள்வி குறி ஆகி விட்டது. அஞ்ஞானிகள் தங்களை காப்பாற்றுவதிலேயே ஈடுபட்டு இருக்கிறார்கள். மேலும் ஞானிகள் பிரத்யக்த்சதின் (வெளிப்படுத்தும்) கொடியைப் பறக்க விடுவதில்லேயே ஈடுபட்டிருக்கிறார்கள். இது தான் உலகின் நிலைமை. இப்பொழுது பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றுங்கள். பலவிதமான பிரச்சனைகளில் அலைந்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு அமைதியின் புகலிடம் கொடுங்கள். நல்லது.

எப்பொழுதும் சம்பன்ன நிலை என்ற இருக்கையில் தன்னை நிலைத்திருக்க வைக்கும், தன்னுடைய மற்றும் உலகின் தடைகளை அழிப்பவருக்கு, விதை ரூப தந்தையின் சம்மந்ததினால், ஒவ்வொரு சிரேஷ்ட எண்ணம் என்ற விதையை பலன் அளிப்பதாக ஆக்கி பிரத்யக்ச பலன் என்ற பழத்தை அருந்தக்கூடிய, எப்பொழுதும் திருப்தியாக இருக்கும் திருப்தி மணி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் வணக்கம்..

**அகமதாபாத் நாராயண்புரா விடுதியில் இருக்கும் குமாரிகளோடு பாப்தாதாவின் சந்திப்பு:**

**1) தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் இல்லையா?** தவறான மார்க்கத்தில் செல்வ திலிருந்து தப்பித்துக் கொண்டீர்கள். இழப்பதற்குப் பதிலாக வருமானம் செய்யும் வாழ்க்கையை உருவாக்கி விட்டீர்கள். உலகிய வாழ்க்கையில் ஞானமின்றி இழப்பே இழப்பு தான், மேலும் ஞானி வாழ்க்கையில் ஒவ்வொரு வினாடியும் வருமானமே வருமானம் தான். பார்க்கப்போனால் அனைத்து பிராமணர்களும் அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் தான், ஆனால் இருந்தாலும் குமாரிகள் இரட்டை அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். மேலும் குமாரி வாழ்க்கையில் பிரம்மா குமாரி ஆவது, பிராமணன் ஆவது என்பது மிகவும் மகான் நிலை. இது சாதாரண விஷயம் இல்லை, மிகப் பெரிய விஷயம். நான் எப்படி அகியுள்ளேன் என்ற போதை இருக்கிறதா? சாதாரண குமாரி யிலிருந்து, சக்தி ரூபம் ஆகி விட்டேன். மாயாவை சம்ஹாரம் செய்யும் சக்திகள் தான் இல்லையா! நீங்கள் மாயாவைக் கண்டு பயப்படுவர்கள் இல்லை, ஆனால் சம்ஹாரம் செய்பவர்கள். பலஹீனமானவர்கள் இல்லை, ஆனால் மிகுந்த பலம் பொருந்தியவர்கள். எப்போதாவது சின்ன சின்ன விஷயங்களில் பயப்படுவது இல்லையே? எப்பொழுதும் சிரேஷ்ட பிராப்தியை நினைவு வைத்துக் கொண்டீர்கள் என்றால், சின்ன சின்ன விஷயங்கள் ஒன்றுமே இல்லை என்று அனுபவம் ஆகும். இப்பொழுது முழு வாழ்க்கையின் முடிவை எடுத்து விட்டீர்களா? அல்லது எதுவரை ஹாஸ்டலில் இருக்கிறீர்களோ, அதுவரையிலும் தான் இந்த முடிவா? யாரும் புரிந்து கொண்ட பிறகு ஒருபொழுதும் சிரேஷ்ட வாழ்க்கையில் இருந்து சாதரண வாழ்க்கையில் செல்ல முடியாது. ஒருவேளை யாராவது ஒரு இலட்சாதிபதியிடம் நீங்கள் ஏழை ஆகி விடுங்கள் என்று கூறினால் ஆவாரா? சூழ்நிலை காரணமாக யாராவது ஏழையாக ஆகி விட்டால் கூட நல்லதாக இருக்காது. இந்த வாழ்க்கையோ சுய இராஜ்ய வாழ்க்கை, அதிலிருந்து சாதாரண வாழ்க்கைக்குச் செல்ல முடியாது. இப்பொழுது நன்றாகப் புரிந்து கொண்டவராகி, அனுபவம் செய்துக் கொண்டீர்களா அல்லது மற்றவர்களின் தொடர்பின் காரணமாக இந்த வாழ்க்கையில் இருக்கிறீர்களா? தன்னுடைய புத்தியால் முடிவு எடுத்திருக்கிறீர்களா? தன்னுடைய விவேகத்தின் முடிவினால் தான் இந்த

வாழ்க்கையை உருவாக்கியிருக்கிறீர்களா? அல்லது தாய் தந்தையர் கூறினார்கள் என்பதால் வந்திருக்கிறீர்களா? நல்லது.

**2) குமாரிகள் உங்களை நீங்களே அனைத்து சேவைக்கும் அர்ப்பணம் செய்திருக்கிறீர்களா?** எங்காவது சேவைக்காக அனுப்பினால் செல்வீர்களா? உறுதியான முடிவு எடுத்திருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் பலஹீனமானதா? உறுதியான முடிவு எடுத்திருக்கிறீர்கள் என்றால், எங்கே அமர வைக்கிறாரோ, என்ன செய்விக்கிறாரோ. அந்த மாதிரி தயாராக இருக்கிறீர்களா? ஒருவேளை ஏதாவது பந்தனம் இருக்கிறது என்றால், உறுதியான முடிவு இல்லை! ஒருவேளை நீங்களே தயாராக இருக்கிறீர்கள் என்றால், யாரும் நிறுத்த முடியாது. வெள்ளாட்டை கட்டி வைத்திருப்பார்கள், சிங்கத்தை யாரும் கட்ட முடியாது. எனவே சிங்கம் யாருடைய பந்தனத்திலும் எப்படி வரமுடியும்? அது காட்டில் இருந்தாலும், சுதந்திரமாக இருக்கிறது. அப்படியானால் நீங்கள் யார்? சிங்கம் என்றால் மைதானத்தில் வருபவர். எதுவரை ஒரே பலம், ஒருவர் மீதே நம்பிக்கை இருக்கிறது என்றால், தைரியம் குழந்தைகளுடையது, உதவி தந்தையினுடையது. எப்படிப்பட்ட கடுமையான பந்தனமாக இருந்தாலும், தைரியத்தின் ஆதாரத்தில் அந்த பந்தனமும் சுலபமாக விலகி விடும். எப்படி (மகாபாரதத்தில்) ஜெயிலின் பூட்டும் தானாகவே திறந்து விட்டது என்று காண்பிக்கிறார்கள். அதேபோல் உங்களுடைய பந்தனமும் அகன்றுவிடும். எனவே அந்த மாதிரி ஆகுங்கள். ஒருவேளை சிறிதளவு பந்தனம் இருக்கிறது என்றால், அதை யோக அக்னியால் பஸ்மம் செய்துவிடுங்கள். பஸ்மம் ஆகி விட்டது என்றால், பெயர் அடையாளம் மறைந்துவிடும். துண்டிப்பதினால் வடு ஏற்பட முடியும். எனவே துண்டிக்காதீர்கள் ஆனால் பஸ்மம் செய்தீர்கள் என்றால், நிரந்தரமாக விடுபட்டு விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: எந்தவொரு சூழ்நிலையிலும் முற்றுப் புள்ளி வைத்து தன்னை பரிவர்த்தனை (மாற்றம்) செய்யக் கூடிய அனைவரின் ஆசீர்வாதங்களுக்கும் பாத்திரமானவர் ஆகுக!**

எப்பொழுது புள்ளி சொரூப தந்தை மற்றும் புள்ளி சொரூப ஆத்மா இரண்டின் நினைவு இருக்கிறதோ, அப்பொழுது தான் எந்தவொரு சூழ்நிலையிலும் முற்றுப் புள்ளி இட முடியும். கட்டுப்படுத்தும் சக்தி இருக்க

வேண்டும். எந்த குழந்தை எந்தவொரு சூழ்நிலையிலும் தன்னை பரிவர்த்தனை செய்து முற்றுப் புள்ளி இடுவதில் தன்னை முதலில் முன்னுக்கு வைக்கிறாரோ, அவர் ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரமானவர் ஆகி விடுகிறார். அவருக்கு அனைவரிடமிருந்தும் ஆசீர்வாதங்கள் அதாவது குஷி கிடைக்கிறது, தந்தை மற்றும் பிராமண பரிவாரத்தின் மூலமாகவும் ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது.

**சுலோகன்: எந்த எண்ணத்தை வைக்கிறீர்களோ, அதன் மீது இடையிடையே திடத்தன்மையின் முத்திரை இட்டுக் கொண்டேயிருந்தீர்கள் என்றால் வெற்றியடைபவர் ஆகி விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சர்வசக்தி வாய்ந்த ஆசிரியரின் மேன்மையான மாணவர்கள் ஆகுங்கள்!

இன்று சர்வசக்திவான் பாபா தனது நாலா புறமுள்ள சக்தி சேனைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் யார் எப்பொழுதும் சர்வ சக்திகள் என்ற ஆயுதங்கள் தரித்த, மகாவீர, வெற்றியாள, சிறந்த ஆத்மாக்கள்? யார் யார் எப்போதும் இல்லை, ஆனால் நேரத்தில், நேரத்திற்குத் தகுந்தவாறு ஆயுதங்கள் தரித்தவர்களாக ஆகியிருக்கின்றனர்? யார் யார் நேரத்தில் ஆயுதம் தரித்தவர் ஆவதற்கு பிரயத்தனம் செய்கின்றனர், அதனால் சில நேரம் போரிடுகின்றனர் (வார்) சில நேரம் தோல்வியடைகின்றனர் (ஹார்), சில நேரம் போர், சில நேரம் தோல்வி என்ற சுழற்சியில் நடந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மூன்று விதமான சேனைகளின் அதிகாரிகளைப் பார்த்தார் ஆனால் வெற்றியாள சிறந்த ஆத்மாக்கள் எப்போதும் ஆரம்பத்திலிருந்தே எவரெடியாக இருக்கின்றனர். நேரத்திற்குத் தகுந்தவாறு ஆயுதம் தரித்தவர் ஆவதில், நேரம் ஆசிரியராகி விடுகிறது. நேரம் என்ற ஆசிரியரின் ஆதாரத்தில் நடக்கக் கூடியவர்கள், சர்வசக்திவான் ஆசிரியரின் படிப்பினைகளின் மூலம் எவரெடி ஆகாத காரணத்தினால் சில நேரம், சமயத்தில் ஏமாற்றமும் அடைந்து விடுகின்றனர். ஏமாற்றம் அடைந்தவுடன் தான் நினைவிற்கு வருகிறது. எனவே சர்வசக்திவான் ஆசிரியரின் மேன்மையான மாணவர்கள் ஆகுங்கள். நேரம் என்ற ஆசிரியரின் மாணவராக அல்ல!

சில குழந்தைகள் பாப்தாதாவிடம் ஆன்மீக உரையாடலின் போதும் மற்றும் தங்களுக்குள் ஆன்மீக உரையாடலின் போதும், நேரம் வரும் போது எல்லாம் சரி ஆகி விடும், நேரம் வரும் போது காட்டுவோம், நேரத்தில் செய்து விடுவோம் என்று கூறுகின்றனர் ஆனால் உலகை மாற்றும் குழந்தைகளாகிய உங்களுக்கு நிறைந்த (சம்பன்ன), சிறந்த நேரத்தை வரவழைப்பதற்கான காரியம் கிடைத்துள்ளது. பொன்னான காலைப்

பொழுதைக் கொண்டு வருவதற்கு நீங்கள் நிமித்தமானவர்கள். நீங்கள் நேரம் என்ற படைப்பின் படைப்பாளர் குழந்தைகள், நேரத்தை அதாவது யுகத்தை மாற்றுபவர்கள்! இரண்டு கால் (நேரம், மரணம்) மீது வெற்றியாளர்கள்! (இந்தியில்) ஒரு கால் என்றால் நேரம். மற்றொன்று கால் (காலன்) அதாவது மரணத்திற்கு வசமானவர் அல்ல, வெற்றியாளர்கள்! அமர் பவ (அழியாதவர் ஆகுக) என்ற வரதான சொரூபம் நீங்கள்! எனவே நேரத்தின் படி செய்பவர்கள் அல்ல, ஆனால் பாபாவின் கட்டளைப்படி நடக்கக் கூடியவர்கள்! நேரமோ அஞ்ஞானி ஆத்மாக்களுக்குக் கூட ஆசிரியர் ஆகிறது. உங்களது ஆசிரியரோ சக்திவாய்ந்த தந்தை! எந்தவொரு ஏற்பாடும் நேரத்திற்கு முன்பாகத் தான் செய்யப்படுகிறதே தவிர, அந்த நேரத்தில் அல்ல. எவரெடி அனைத்து ஆயுதங்கள் (சக்திசாலி) தரித்த சேனையினர் நீங்கள்! எனவே, சர்வசக்திகள் என்ற ஆயுதங்களைத் தரித்திருக்கின்றோமா? என்று எப்போதும் தன்னை சோதியுங்கள். ஏதேனும் சக்தி அதாவது ஆயுதத்தின் குறைவு இருந்தால் மாயை அந்த பலஹீனம் என்ற விதி மூலமாகவே போர் புரியும். எனவே எதிலும் சோம்பல் உள்ளவர் ஆகக் கூடாது. மற்ற அனைத்தும் சரியாக உள்ளது, சிறிய ஒரு விஷயத்தில் பலஹீனம் உள்ளது, ஆனால் ஒரு பலஹீனம் தான் மாயைக்கு போர் புரிவதற்கான வழியை உருவாக்கி விடும். எப்படி, எங்கு பாபாவின் நினைவு இருக்கிறதோ, அங்கு நான் எப்பொழுதும் உடன் இருப்பேன் என்ற உறுதிமொழியை கொடுத்துள்ளாரோ, அது போல மாயையும், எங்கு பலஹீனம் உள்ளதோ அங்கு நான் இடம் பிடிக்கிறேன் என்று சவால் விடுகிறது. எனவே துளி அளவு பலஹீனம் கூட மாயையின் வம்சத்தையே வரவழைத்து விடும். சர்வ சக்திவானின் குழந்தைகளோ, அனைத்திலும் நிறைந்தவராக வேண்டும். பாபா குழந்தைகளுக்கு ஆஸ்தியின் அதிகாரம் என்னவெல்லாம் கொடுத்துள்ளாரோ, அல்லது ஆசிரியர் வடிவில் இறை படிப்பின் பிராலப்தம் (பலன்) அல்லது டிகிரி கொடுத்துள்ளரோ, அவைகளை என்னவென்று வர்ணனை செய்கிறீர்கள்? அனைத்து குணங்கள் நிறைந்த என்று கூறுகிறீர்களா? அல்லது குணம் நிறைந்தவர் என்று கூறுகிறீர்களா? முழுமையான நிர்விகாரி, 16-கலைகள் நிறைந்தவர் என்று கூறுகிறீர்களே தவிர, 14 கலைகள் என்று கூறுவதில்லை. 100-சதவீதம் முழுமையான சுகம், சாந்தியின் ஆஸ்தி என்று கூறுகிறீர்கள் என்றால் ஆவதும் அவ்வாறு தானே ஆகவேண்டியிருக்கும்? அல்லது ஒன்றும் பாதியாக பலஹீனங்கள்

இருந்து கொண்டேயிருக்கும் என்று நினைக்கிறீர்களா? கணக்கு வழக்கும் ஆழமானது. கள்ளம் கபடமற்றவராகவும் (போலநாத்) இருக்கிறார், ஆனாலும் கர்மத்தின் நிலையை அறிந்தவராகவும் இருக்கிறார். கொடுப்பதும் ஒன்றுக்கு பலமடங்காக கொடுக்கப் படுகிறது மற்றும் ஒவ்வொரு துளியளவிற்கும் கணக்கு பார்க்கப்படுகிறது. ஒருவேளை ஒன்றும் பாதியாக பலஹீனங்கள் இருந்துவிட்டது என்றால், பிராப்தியிலும், அரை ஜென்மம், ஒரு ஜென்மம் பின்னால் வர வேண்டியிருக்கும். ஸ்ரீகிருஷ்ணருடனோ, விஷ்வ மகாராஜன் முதல் இலட்சுமி நாராயணின் இராயல் ஃபேமிலியிலோ (அரச குடும்பம்), அல்லது நெருங்கிய உறவினராகவோ வரமுடியாது. எவ்வாறு சகாப்தம் என்பது 1/1/1 லிருந்து தொடங்குகிறதோ, அவ்வாறே புதிய உறவுகள், சதோபிரதான புதிய ஆத்மாக்கள், புதிய இயற்கை, புதிய என்றால் மேலிருந்து இறங்கியுள்ள புதிய ஆத்மாக்கள்,. புதிய இராஜ்யம் என்ற இந்த புதுமையான நேரத்தின் சுகத்தை, சதோ பிரதான நம்பர் ஒன் இயற்கையின் சுகத்தை, நம்பர் ஒன் ஆத்மாக்கள் தான் அடைய முடியும்.

நம்பர் ஒன் என்றாலே மாயையின் மீது வெற்றி (வின்) அடைந்தவர்கள். எனவே கணக்கு முற்று பெறும். பாபாவிடமிருந்து வரதானத்தை அல்லது ஆஸ்தியை அடைவதற்காக கூடவே இருப்போம், கூடவே செல்வோம் மற்றும் திரும்ப பிரம்மாபாபாவுடன் இராஜ்யத்தில் வருவோம் என்ற இந்த உறுதிமொழியைத் தான் எடுத்துள்ளீர்கள்! பின்னால் வருவோம் என்று உறுதிமொழி எடுக்கவில்லை. சமம் ஆகியே தீர வேண்டும், உடன் இருக்க வேண்டும். நிறைந்த தன்மை, சமமான தன்மையானது எப்போதும் உடன் இருப்பதற்கான ப்ராலப்தத்திற்கு (பலன்) உரிமையாளர் ஆக்கி விடுகிறது, எனவே முழுமையாகவும், சமமானவராகவும் ஆகும் தருணத்தை சோம்பல் தன்மையால் இழந்து, கடைசியில் மயக்கம் தெளிந்து வந்தால் என்ன அடைவீர்கள்!

அதனால் இன்று அனைவரது சர்வசக்திகள் என்ற ஆயுதங்களை சோதனை செய்து கொண்டிருந்தோம். மூன்று வித குழந்தைகளைப் பார்த்ததாக முடிவுகளைக் (ரிசல்ட்) கூறினோம். கடைசி வரை இந்த சோம்பலின் குறும்புத்தனம் மிகக் குறைந்த அளவேனும் இருக்கத்தான் செய்யும், இவ்வளவேனும் பாபா உதவி செய்தே தீருவார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் இந்த குறும்புத்தனம் கடைசி நேரத்தில்

ஏமாற்றத்தைக் கொடுத்து விடக்கூடாது. மேலும் நான் இப்படி நினைக்கவே இல்லை என்று குழந்தைகள் குறும்பாக புகார் சொல்லக்கூடாது. எனவே கடைசி நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வித விதமான குழப்பங்கள் அதிகரித்தே தீரும். இவைகள் அந்த நேரம் வருவதற்கான அறிகுறிகள் ஆகும். இவை அதிக வேகத்துடன் நிறைந்தவர் ஆவதற்கான சமிஞ்ஞைகளாகும். புரிந்ததா!

தற்சமயம் மதுபனில் மூன்று புறமுள்ள நதிகளின் திருவிழா (மேளா) நடக்கிறது. திருவேணி (மூன்று நதிகளின்) மேளா இருக்கிறது அல்லவா! மூன்று புறங்களிலிருந்து வந்துள்ள, ஈடுபாட்டுடன் வந்தடைந்துள்ள குழந்தைகளின் சிறப்புகளைப் பார்த்து, குழந்தைகளின் அன்பைக் கண்டு பாப்தாதா புன்சிரிக்கிறார். வாயால் பேசும் மொழி தெரியவில்லை என்றாலும் அன்பின் மொழியைத் தெரிந்துள்ளனர். கர்நாடகத்தை சேர்ந்தவர்கள் அன்பின் மொழியைத் தெரிந்துள்ளவர்கள். மற்றும் பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் என்ன தெரிந்துள்ளீர்கள்? பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் சவால் விடுவதில் புத்திசாலிகள். எனவே தெய்வீக இராஜஸ்தானின் சவாலானது, கதறிக் கொண்டிருக்கும் இடங்களில் வெற்றி முழக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. குஜராத்தை சேர்ந்தவர்கள் என்ன செய்கின்றனர்? குஜராத்தினர் எப்பொழுதும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கின்றனர். தனது சங்கமயுக நெருங்கிய இடத்தின் (மதுபன்) பாக்கியம் என்ற ஊஞ்சலில் ஊஞ்சல் ஆடுகின்றனர். நாமோ அனைவரையும் விட மிகவும் அருகில் இருக்கின்றோம் என்று குஷியில் ஊஞ்சல் ஆடுகின்றனர். எனவே குஜராத்தை சேர்ந்தவர்கள் வித விதமான ஊஞ்சலில் ஆடுகின்றனர். விதவிதமான குரூப் இருக்கிறது. பலவிதம் இருப்பது அனைவருக்கும் பிடிக்கிறது. பூச்செண்டிலும் கூட விதவிதமான வண்ணங்கள், வடிவங்கள், நறுமணங்கள் உள்ள மலர்கள் தான் பிடிக்கிறது. நல்லது!

அனைத்து பக்கங்களிலிருந்து வந்துள்ள அனைத்து சக்திசாலி, சதா விழிப்புணர்வுடன் (அலர்ட்) இருக்கக்கூடிய, சதா சர்வசக்திகள் என்ற ஆயுதம் தரித்த, அனைத்து ஆத்மாக்களையும் முழுமையாக நிறைந்தவர் ஆக்குவதற்காக சக்திகளை உதவியாக அளிக்கக்கூடிய, சிறந்த நேரத்தை, சிறந்த யுகத்தைக் கொண்டுவரக்கூடிய, யுகத்தை மாற்றக்கூடியவர் மற்றும் நம்பர் ஒன் ஆகி, நம்பர் ஒன் நிறைந்த இராஜ்ய பாக்கியத்தின்

அதிகாரி -அப்படிப்பட்ட அனைத்திலும் சிறந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பஞ்சாப் பார்ட்டிகளுடன்: 1. எப்போதும் ஒவ்வொரு அடியிலும் நினைவின் சக்தி மூலமாக கோடிமடங்கு சேமித்துக் கொண்டே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள்தானே!** ஒவ்வொரு அடியிலும் கோடி நிரம்பியுள்ளது -இதை சோதனை செய்கிறீர்கள் தானே? நினைவினுடைய அடி (நற்ங்ல்) நிறைந்துள்ளது. நினைவின்றி, அடி நிறைவதில்லை, வருமானமும் இல்லை, எனவே ஒவ்வொரு அடியிலும் சேமிக்கக் கூடியவர்கள், சுறுசுறுப்பான குழந்தைகள் தானே! சம்பாதிக்கக் கூடியவர்கள் சுறுசுறுப்பான குழந்தைகள் ஆகின்றனர். ஒருவகையினர் கண்டோம், அருந்தினோம் மற்றும் இழந்தோம் என்று மட்டும் இருப்பவர்கள். அடுத்த வகையினர் வருமானத்தை சேமிக்கக் கூடியவர்கள். நீங்கள் எந்த வகைக் குழந்தைகள்? வெளியுலகில் குழந்தைகள் தனக்காகவும், தந்தைக்காகவும் சம்பாதிக்கின்றனர். இங்கு பாபாவுக்காக எதுவும் வேண்டாம். தனக்காகவே சம்பாதிக்கிறீர்கள். எப்போதும் ஒவ்வொரு அடியிலும் சேமிக்கக் கூடிய, சம்பாதிக்கும் குழந்தைகள், இதை சோதனை செய்யுங்கள். ஏனெனில் நேரம் நெருங்கின்றது. அதனால் எவ்வளவு வருமானம் சேமிப்பாகுமோ, அவ்வளவு ஓய்வாக சிறந்த பலனை அனுபவித்துக் கொண்டே இருப்பீர்கள். எதிர்காலத்தின் பிராப்தியோ இருக்கவே இருக்கிறது. அதனால் இந்த வருமானத்தின் பிராப்தி இப்போது இந்த சங்கமயுகத்திலும் இருக்கும், எதிர்காலத்திலும் இருக்கும். எனவே அனைவரும் சம்பாதிக்கக் கூடியவர்களா அல்லது சம்பாதித்தோம், சாப்பிட்டோம் என்பவர்களா?

எவ்வாறு தந்தையோ அவ்வாறே குழந்தைகள், எவ்வாறு தந்தை நிறைந்தவரோ, முழுமையானவரோ, அவ்வாறே குழந்தைகளும் எப்போதும் நிறைந்து இருக்கக் கூடியவர்கள், அனைவரும் தைரியசாலிகள் தானே? பயப்படுபவர்கள் இல்லை தானே? பயப்படுவதில்லையா? சிறிதளவேனும் பயம் எண்ணத்தளவிலும் வருகிறதா, இல்லையா? இது எதுவும் புதிதல்ல (நத்திங் நியூ) அல்லவா! எத்தனை தடவை இது நடந்துள்ளது? நிறைய தடவை ரிப்பீட் ஆகியுள்ளது. இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே பயப்பட வேண்டிய

விஷயம் இல்லை. சக்திகளும் பயமற்றவர்கள் தானே! சக்திகள் எப்போதும் வெற்றியாளர்கள்! எப்போதும் பயமற்றவர்கள்! எப்போது பாபாவின் குடை நிழலின் கீழ் இருக்கிறார்களோ, அப்போது பயமற்றவர்களாகத் தான் இருப்பார்கள்! எப்போது தன்னை தனியானவர் என உணர்கிறீர்களோ, அப்போது தான் பயம் உண்டாகிறது. குடைநிழலுக்குள் பயம் ஏற்படாது. எப்போதும் பயமற்றவர்கள்!. சக்திகளின் வெற்றியானது எப்போதும் புகழ் பாடப் பட்டுள்ளது. அனைவரும் வெற்றியாள சிங்கங்கள் அல்லவா! சிவசக்திகளுக்கு, பாண்டவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை என்றால் யாருக்குக் கிட்டும்? பாண்டவர்களுக்கும், சக்திகளும் கல்ப கல்பத்தின் வெற்றியாளர்கள். குழந்தைகளிடம் பாபாவுக்கு அன்புள்ளது அல்லவா! பாபாவின் அன்பான குழந்தைகளுக்கு, நினைவில் இருக்கக் கூடிய குழந்தைகளுக்கு எதுவும் நேர முடியாது! நினைவின் பலஹீனம் இருக்கும் என்றால், சிறிதளவு அசைவு ஏற்படலாம். நினைவின் குடைநிழல் இருக்கிறதென்றால், எதுவுமே (தீங்கு) நேர முடியாது. பாப்தாதா ஏதேனும் சாதனம் மூலம் காப்பாற்றி விடுகிறார். எப்பொழுது பக்த ஆத்மாக்களுக்கே உதவி இருக்கும் போது, குழந்தைகளுக்கு உதவி எப்போதுமே இருக்கிறது.

**2. எப்போதும் தைரியம் மற்றும் உற்சாகம் என்ற இறக்கைகள் மூலம் பறக்கக் கூடியவர்கள் அல்லவா!** ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகள் எப்போதும் தன்னையும் பறக்க வைக்கின்றன, மேலும் பிறரையும் பறக்க வைப்பதற்கான வழியைக் கூறுகின்றன. இந்த இரு இறக்கைகளும் எப்போதும் உடன் இருக்கட்டும். ஒரு இறக்கை தளர்வாக இருந்தாலும் உயரே பறக்க முடியாது. எனவே இந்த இரண்டும் தேவைப் படுகின்றன - தைரியமும், ஊக்கம், உற்சாகமும். தைரியம் என்பது நடக்காததை நடத்திக் காட்டக் கூடியது, தைரியம் கடினமானதை எளிதாக்கக் கூடியது ஆகும், கீழிருந்து உயரே பறக்க வைக்ககூடியது. அதனால் எப்போதும் அது போல் பறக்கக் கூடிய அனுபவமுள்ள ஆத்மாக்கள் தானே! கீழே வருவதனால் என்ன பிராப்தி ஆகியது என்பதையோ பார்த்து விட்டீர்கள்! கீழே விழுந்து கொண்டிருக்கும் நேரம் அல்ல. இப்பொழுது பறக்கும் கலைக்கான நேரம் ஆகும், (ஹைஜம்ப்) உயரம் தாண்டுவதற்கான நேரமும் அல்ல. வினாடியில் எண்ணினோம்! உடனே பறந்தாயிற்று! அப்படிப்பட்ட சக்தி பாபா மூலம் எப்போதும் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

**3. தன்னை எப்போதும் மாஸ்டர் ஞானசூரியன் என்று நினைக்கிறீர்களா?** ஞான சூரியனின் செயல் அனைவரிடமிருந்தும் அஞ்ஞான இருளை அழிப்பதாகும். சூரியன் தனது ஒளியினால் இரவை, பகலாக்கி விடுகிறது. அதுபோல மாஸ்டர் ஞான சூரியன் உலகிலிருந்து இருளை விலக்கக் கூடியவர், அலைந்து கொண்டிருக்கக் கூடிய ஆத்மாக்களுக்கு வழியைக் காட்டக் கூடியவர்கள் தானே! தங்களது இந்த செயல் எப்போதும் நினைவில் இருக்கிறதா? எவ்வாறு லௌகீக தொழிலை மறக்க நினைத்தாலும் மறக்க முடிவதில்லை. அதுவோ ஒரு பிறவின் அழியக் கூடிய காரியம், அழியக் கூடிய தொழில், நாம் மாஸ்டர் ஞான சூரியன் என்பதோ எப்போதைக்குமான தொழில்! அதனால் எப்போதும் தனது இதைத அழிவற்ற தொழில் அல்லது கடமை என்று உணர்ந்து இருளைப் போக்கி வெளிச்சத்தை கொண்டு வரவேண்டும். இதன் மூலம் தன்னிடமிருந்தும் இருள் நீங்கி வெளிச்சம் உண்டாக்கும், ஏனெனில் வெளிச்சத்தைக் கொடுக்கக் கூடியது தானும் பிரகாசமயமாகத்தான் இருக்கும். அதனால் இந்த காரியத்தை எப்போதும் நினைவில் வையுங்கள். நான் மாஸ்டர் ஞான சூரியன் பிரகாசமயமாக இருக்கிறேனா! என்று தினமும் தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். எவ்வாறு தீயை அணைப்பவர்கள், தான் நெருப்பின் தாக்கத்திற்கு ஆளாவதில்லையோ, அதுபோல எப்போதும் இருளை விலக்கக் கூடியவர்கள், தானே இருளில் மூழ்குவதில்லை, அதனால் நான் மாஸ்டர் ஞான சூரியன் என்ற போதை அல்லது குஷி எப்போதும் இருக்கட்டும்.

**குமார்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:**

**1. குமார்களின் வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாகும்.** குமார வாழ்க்கையில் பாபாவுடையவர் ஆகி விட்டீர்கள். அப்படிப்பட்ட தனது சிறந்த அதிர்ஷ்டத்தைக் கண்டு புன்சிரிப்புடன் இருங்கள். மேலும் பிறருக்கும் கூட புன்சிரிப்புடன் இருப்பதற்கான விதியை சொல்லிக் கொண்டே இருங்கள். அனைவரைக் காட்டிலும் பந்தனமற்றவர்கள் குமாரர்களும், குமாரிகளும் ஆவர். குமாரர்கள் என்ன விரும்புகிறார்களோ, அதை தனது பாக்கியமாக்கிக் கொள்ள முடியும். தைரியம் உள்ள குமாரர்கள் தானே! பலஹீனமான குமாரர்கள் இல்லையே! எவ்வளவு தான் யாரேனும் தன் பக்கம் கவர்ந்திழுக்க முற்படலாம், ஆனால் மகாவீர் ஆத்மாக்கள் ஒரு பாபாவைத் தவிர எங்குமே

கவரப்பட மாட்டார்கள். அவ்வாறு துணிவு உள்ளவர்களை நிறைய வடிவத்தில் மாயா தனதாக்கிக் கொள்ள முயற்சிக்கும், ஆனால் நம்பிக்கை புத்தியுள்ளவர்களுக்கு வெற்றி. பயப்படுபவர்கள் அல்ல! நல்லது. ஆஹா எனது சிறந்த அதிர்ஷ்டமே! அவ்வளவு தான், இதையே எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். என்னைப் போல் யாரும் இருக்க முடியாது என்ற போதை இருக்கட்டும். எங்கு ஈஸ்வரிய போதை இருக்குமோ, அங்கு மாயாவிடமிருந்து விலகியிருப்பீர்கள். சேவையிலோ எப்போதும் பிஸியாக இருக்கிறீர்கள் தானே! இதுவும் அவசியமாகும். எவ்வளவு சேவையில் பிஸியாக இருப்பீர்களோ, அவ்வளவு சகஜயோகியாக இருப்பீர்கள், ஆனால் நினைவுடன் சேர்ந்த சேவையாக இருந்தால் தான் பாதுகாப்பு, நினைவில்லையெனில் பாதுகாப்பு இல்லை.

**2. குமாரர்கள் எப்போதும் தடைகளற்றவர்கள் தானே?** மாயா கவர்ச்சி செய்வதில்லை தானே? குமாரர்களை மாயை தனதாக்கிக் கொள்ள நிறைய முயற்சி செய்கிறது. மாயைக்கு குமாரர்களை மிகவும் பிடிக்கிறது. என்னுடையவர் ஆகி விட வேண்டும் என்று அது நினைக்கிறது, ஆனால் நீங்கள் அனைவரும் துணிவுள்ளவர்கள் தானே! மாயையின் சீடர்கள் அல்ல, மாயைக்கு சவால் விடுபவர்கள்! அரை கல்பம் மாயையின் சீடர்களாக இருந்து என்ன கிடைத்தது? அனைத்தையும் இழந்தாயிற்று! எனவே இப்போது பிரபுவின் உடைவர்கள் ஆகி விட்டீர்கள். பிரபுவின் உடைவர் ஆவதென்றாலே சொர்க்கத்தின் உரிமையை அடைவது! அதனால் அனைத்து குமாரர்களும் வெற்றியாளர்கள். பார்க்கலாம்! பக்குவம் அடையாதவராக இருக்கக் கூடாது, மாயைக்கு குமாரர்களிடம் அதிகபட்ச அன்புள்ளது. அதனால் என்னுடையவர் ஆகி விடவேண்டும் என்று நாலா பக்கமிருந்தும் முயற்சிக்கிறது ஆனால் நீங்கள் அனைவரும் சங்கல்பம் செய்துவிட்டீர்கள். எப்போது பாபாவினுடையவர் ஆகி விட்டீர்களோ, அப்போதே கவலையற்றவர்கள் ஆகி விட்டீர்கள். எப்போதும் தடைகளற்றவர்கள் ஆகுக, பறக்கும் கலையுடையவர்கள் ஆகுக.

**3. குமாரர்கள் -எப்போதும் சக்தியுள்ளவர்கள்.** எங்கு சக்தியுள்ளதோ, அங்கு பிராப்தியுள்ளது. எப்போதும் அனைத்து பிராப்தி சொரூபம், ஞானம் நிறைந்தவராக இருக்கும் காரணத்தால், மாயாவின் விதவிதமன வடிவங்களைத் தெரிந்து கொண்டிருப்பவர்கள். ஆகையால் தனது பாக்கியத்தை அதிகரித்துக் கொண்டேயிருங்கள். எப்போதும் ஒரே ஒரு

விஷயத்தை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள் - குமாரர்களின் வாழ்க்கை என்றாலே, விடுபட்ட வாழ்க்கை. யார் ஜீவன் முக்தர்களாக இருப்பார்களோ, அவர்கள் சங்கமயுகத்தின் பிராப்தி நிறைந்தவராக இருப்பார். எப்போதும் முன்னேறிக் கொண்டேயிருங்கள் மற்றும் முன்னேற்றிக் கொண்டேயிருங்கள். குமாரர்கள் எப்போதுமே குஷியில் நடனமாட வேண்டும். ஆஹா குமார்களின் வாழ்க்கை! ஆஹா பாக்கியம்! ஆஹா டிராமா! ஆஹா பாபா!.....இந்தப் பாடலையை பாடிக் கொண்டேயிருங்கள். குஷியில் இருந்தீர்கள் எனில் பலஹீனம் வரமுடியாது. சேவை மற்றும் நினைவினால் சக்தியை நிரப்பிக் கொண்டேயிருங்கள். குமார வாழ்க்கை இலகுவான வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் தனது அதிர்ஷ்டத்தை உருவாக்குவது என்பது அனைத்திலும் பெரிய பாக்கியமாகும். எவ்வளவு பந்தனங்களில் கட்டப்படுவதிலிருந்து தப்பித்து விட்டீர்கள்! எப்போதும் தன்னை அவ்வாறு டபுள் லைட் எனப் புரிந்து கொண்டு பறக்கும் கலையில் சென்று கொண்டேயிருங்கள், அப்போது முதல் நம்பரைப் பெற்று விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: கோபமான ஆத்மாக்களுக்கு இரக்கம் என்ற குளிர்ச்சியான நீர் மூலம் குண தானத்தைக் கொடுக்கக் கூடிய வரதானி ஆத்மா ஆகுக!**

உங்கள் முன்பு யாரேனும் கோப நெருப்பில் எரிந்து கொண்டிருக்கக் கூடியவர் வரலாம், உங்களை திட்டலாம், நிந்திக்கலாம், என்றாலும் அப்படிப் பட்ட ஆத்மாக்களுக்கு தனது நல்ல பாவனை, நல்லாசை மூலமாக, உள்ளுணர்வு மூலமாக, மன நிலை மூலமாக, குண தானம் அல்லது சகிப்புத் தன்மையின் சக்தியை வரதானமாகக் கொடுங்கள். கோபமான ஆத்மா பிற வசத்தில் (மாயை) இருக்கிறது. அப்படிப்பட்ட பிற வசத்தில் உள்ள ஆத்மாக்களை இரக்கம் என்ற குளிர்ந்த நீரின் மூலமாக அமைதியாக்கி விடுங்கள். இது வரதானி ஆத்மாக்களாகிய உங்களது கடமையாகும், சைதன்யத்தில் எப்போது உங்களுக்குள் அப்படிப்பட்ட சன்ஸ்காரம் நிரம்புகிறதோ, அப்போதே ஜட சித்திரங்கள் மூலமாக பக்தர்களுக்கு வரதானங்கள் கிடைக்கின்றன.

**சுலோகன்: நினைவின் மூலமாக அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தை அனுபவம் செய்யக் கூடியவரே சக்தி நிறைந்தவர் ஆகின்றார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 05.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண காமத்தை வென்றவர் என்றால் எல்லைக்குட்பட்டமன விருப்பங்களிலிருந்து விடுபட்டவர்!

இன்று பாப்தாதா தன்னுடைய மிக உயர்ந்த புஜங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து புஜங்களும் அன்பு மற்றும் சக்தி மூலமாக உலகை மாற்றம் செய்யும் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அனைவரும் ஒருவரின் புஜங்கள். எனவே அனைவரின் மனதில் தன்னுடைய ஈஸ்வரிய குடும்பத்தின் நம்முடைய சகோதர சகோதரிகளே யார் தந்தையை மற்றும் தன்னுடைய உண்மையான பரிவாரத்தை தெரியாத காரணத்தினால் குழந்தையாக இருந்த போதிலும் பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக தந்தை மற்றும் பாக்கியத்தை பிராப்தி செய்வதிலிருந்து வஞ்சிக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி பாக்கியத்திலிருந்து வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களை எழுப்பி விட வேண்டுமென்ற ஒரே ஒரு மனதின் ஈடுபாடு இருக்கிறது. ஏதாவது அதிகாரத்தின் அஞ்சலி மூலமாக அவர்களையும் தந்தையின் அறிமுகத்தை தெரிந்தவர்களாக ஆக்க வேண்டும், ஏனென்றால் நீங்கள் அனைவரும் முழு வம்சா வழியின் பெரியவர்கள். பெரிய குழந்தைகள் தந்தைக்கு சமமானவர்கள் என்று கூறுவார்கள். எனவே பெரியவர்களுக்கு, ஒன்றும் அறியாத சிறிய சகோதர சகோதரிகள் மேல் இரக்கம் மற்றும் அன்பு இயல்பாகவே வரும். எப்படி எல்லைக்குட்பட்ட குடும்பத்தின் பெரியவர்களுக்கு குடும்பத்தின் மேல் எப்பொழுதும் கவனம் இருக்கிறது, அதே போல் நீங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட குடும்பத்தின் பெரியவர்களுக்கு உங்கள் மேல் கவனம் இருக்கிறது தான் இல்லையா. எவ்வளவு பெரிய குடும்பம். முழு எல்லைக்கு அப்பாற்பட்ட குடும்பமும் எதிரில் இருக்கிறதா? நீங்கள் அனைவருக்காக இரக்கத்தின் கிரணங்கள், ஆன்மீக ஆசீர்வாதத்தின் கிரணங்கள், வரதானத்தின் கிரணங்களை பரப்பும், மாஸ்டர் சூரியன் தான் இல்லையா. எப்படி

சூரியன் எவ்வளவு உயர்ந்த இடத்தில் இருக்குமோ, அந்தளவு நாலா புறங்களிலும் கிரணங்களை பரப்பும். கீழே இருப்பதினால் நாலா புறங்களிலும் கிரணத்தை பரப்ப முடியாது. அதே போல் நீங்கள் எப்பொழுதாவது உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தைக்கு சமமான உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கிறீர்களோ, அப்பொழுது தான் எல்லைக்கு அப்பாற்பட்ட கிரணங்களை உங்களால் பரப்ப முடியும். அதாவது எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரியாக ஆக முடியும். நீங்கள் அனைவரும் அந்த மாதிரியான எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரிகள் தான் இல்லையா. நீங்கள் அனைத்து ஆத்மாக்களின் மனவிருப்பங்களை நிறைவேற்றும் காமதேனு தான் இல்லையா. அனைவரின் மன விருப்பங்களை நிறைவேற்றுபவர் இதுவரையிலும் தன்னுடைய மனதின் விருப்பங்களை நிறைவேற்று வதிலேயே பிஸியாக இருக்கவில்லையே? தன்னுடைய மனதின் விருப்பங்கள் நிறைவேறவில்லையென்றால், மற்றவரின் மனவிருப்பங்களை எப்படி நிறைவேற்றுவீர்கள்? மிகப் பெரிய மனவிருப்பமாக தந்தையை அடைய வேண்டு மென்பது தான் இருந்தது. எப்பொழுது அந்த உயர்ந்த மனவிருப்பம் நிறைவேறி விட்டதென்றால், அந்த உயர்ந்த மனவிருப்பத்தில் அனைத்து சின்ன சின்ன எல்லைக்குட்பட்ட மனவிருப்பங்கள் அடங்கியிருக்கிறது. சிரேஷ்ட எல்லைக்கு அப்பாற்பட்ட மனவிருப்பத்தின் எதிரில் மற்ற ஏதாவது எல்லைக்குட்பட்ட மனவிருப்பங்கள் நிறைவேறாமல் இருந்துவிடுமா என்ன? இந்த எல்லைக்குட்பட்ட மனவிருப்பங்களும் மாயாவை எதிர்நோக்க விடாது. இந்த எல்லைக்குட்பட்ட மனவிருப்பங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட நிலை மூலமாக எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையை செய்விக்க முடியாது. நீங்கள் உங்களை சூட்சம ரூபத்தில் சோதனை செய்யுங்கள், எல்லைக்குட்பட்ட மனவிருப்பங்களும் முக்கிய காம விகாரத்தின் வம்சம் மற்றும் அம்சம் தான், எனவே மனவிருப்பத்தின் வசமானவர் எதிர்கொள்ள முடியாது. எல்லைக்கு அப்பாற்பட்ட மனவிருப்பங்களை நிறைவேற்றுபவராக ஆக முடியாது. காமத்தை வென்றவர் என்றால், எல்லைக்குட்பட்ட மனவிருப்பங்களின் மேல் வென்றவர். நீங்கள் அந்த மாதிரி மனவிருப்பங்களை நிறைவேற்றும் விசேˆ ஆத்மாக்கள், மன்மனாபவ என்ற நிலை மூலமாக மனதின் எல்லைக்குட்பட்ட விருப்பங்களை நிறைவேற்றி விட்டு அதாவது முடித்து விட்டு, மற்றவர்களின் மனவிருப்பங்களை நிறைவேற்ற முடியும். இப்பொழுது சப்தத்திலிருந்து விலகிய நிலையில்

நிலைத்திருப்பதற்கான வானபிரஸ்த நிலையில் மனவிருப்பத்தை வென்ற அதாவது சம்பூரண காமத்தை வென்றவரின் உதாரணமாக உலகின் எதிரில் ஆகுங்கள். உங்களுடைய சின்னஞ்சிறு சகோதர சகோதரிகள் இந்த விருப்பங்களை வைத்துக் கொண்டு தான் பெரியவர்கள் உங்கள் பக்கம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், எங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுங்கள், எங்களுடைய சுகம், சாந்தியின் ஆசைகளை நிறைவேற்றுங்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், நீங்கள் உங்களுடைய மனவிருப்பங்களை நிறைவேற்று வீர்களா அவர்களுடைய மனவிருப்பங்களை நிறைவேற்றுவீர்களா? உங்கள் அனைவரின் உள்ளத்திலிருந்து மற்றவர்கள் சொல்வதினால் அல்ல, அல்லது வாயுமண்டலத்தின் குழுவின் மரியாதைக்காக அல்ல, உள்ளத்திலிருந்து இந்த சிரேஷ்ட கோˆம் தான் ஆசை என்றால் என்னவென்று தெரியாதவர்கள் என்பது வெளியாக வேண்டும்.

சில குழந்தைகள் மிகவும் சாதுரியமானவர்கள், சாதுரியத்திலும் சாதுரியமானவரிடம் தன்னுடைய சாதுரியத்தைக் காண்பிக்கிறார்கள், அது எல்லைக்குட்பட்ட இச்சையாக இருக்கும், மேலும் அவர்கள் இது சுப இச்சை, சேவைக்காக வைத்திருக்கும் இச்சை அந்த மாதிரி அந்த மாதிரி என்று கூறுவார்கள். அது தன்னுடைய இச்சையாக இருக்கும், ஆனால் வெளிப்படையான ரூபத்தில் சேவைக்கானதாக ஆக்கி விடுவார்கள். எனவே பாப்தாதா புன்முறுவலுடன், தெரிந்து கொண்டும், பார்த்துக் கொண்டும், சாதுர்யத்தைப் புரிந்து கொண்ட போதிலும் அனேக குழந்தைகளுக்கு வெளிபடையாக சமிஞ்சை கொடுப்பதில்லை, ஆனால் நாடகத்தின் அனுசாரம் அவசியம் சமிஞ்சை கிடைக்கிறது. அது எப்படி? எல்லைக்குட்பட்ட இச்சைகள் நிறைவேறினாலும் ரூபம் பிராப்திக்கானதாக இருக்கும், ஆனால் மனதிற்குள் ஒரு இச்சை மற்ற இச்சைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கும். எனவே மனதின் உளைச்சல் ரூபத்தில் சமிஞ்சை கிடைத்துக் கொண்டேயிருக்கும். வெளிப்படையாக ஒருவர் எவ்வளவு தான் எல்லைக்குட்பட்ட பிராப்தியில் சாப்பிடுவது, குடிப்பது, ஆடுவதாக இருந்தாலும், ஆனால் மனதின் உளைச்சலை மறைப்பதற்காக இந்த வழியை கடைப்பிடிக்கிறார்கள். உள்ளே மனம் திருப்தியாக இருக்காது. அற்ப காலத்திற்காக இருக்கும், ஆனால் சதா காலத்தின் திருப்தியின் நிலை மற்றும் தந்தை கிடைத்தார்,

உலகம் கிடைத்தது என்ற இந்த உள்ளத்தின் பாடலை அவர் பாட முடியாது. அவர்கள் தந்தையிடமும் நீங்களோ கிடைத்திருக்கீறீர்கள் இதுவும் அவசியம் வேண்டும் என்று கூறுவார்கள். இந்த வேண்டும், வேண்டும் என்ற விருப்பத்தின் திருப்தி இருக்காது. நேரத்திற்கு ஏற்றபடி இப்பொழுது உங்கள் அனைவரின் மனதிலிருந்து ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை என்ற சப்தம் தான் வலுவாக வெளியாக வேண்டும், அப்பொழுது தான் மற்றவர்களின் ஆசைகளை நிறைவேற்ற முடியும். இப்பொழுது கொஞ்ச நேரத்தில் ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களை உலகத்தினர் சைத்தன்ய களஞ்சியம் என்று அனுபவம் செய்வார்கள், யாசிப்பவராகி வருவார்கள். நீங்கள் தான் நிரம்பிய களஞ்சியம் என்று கூறுவார்கள். இதுவரையிலும் யாரோ இருக்கிறார் ஆனால் அவர் எங்கு இருக்கிறார், யார் என்ற தெளிவாக தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது நேரத்தின் அம்புக் குறி போடப்படும். எப்படி வழியை காண்ப்பிதற்காக இங்கே செல்லுங்கள் என்று அம்புக் குறி போட்டு காண்பிக்கிறார்கள். அதேபோல் இங்கே செல்லுங்கள் என்று அனைவருக்கும் அனுபவம் ஆகும். அந்த மாதிரி நிரம்பிய களஞ்சியமாக ஆகியிருக்கிறீர்களா? நேரமும் உங்களுடைய சகயோகியாக மாறும். ஆசிரியராக அல்ல, சகயோகியாக ஆகும். நேரத்திற்கு முன்பாகவே பாப்தாதா அனைத்து குழந்தைகளை சம்பன்ன சொரூபத்தில், நிரம்பிய களஞ்சிய ரூபத்தில், ஆசை என்றால் என்னவென்று தெரியாத திருப்தியான சொரூபத்தில் பார்க்க விரும்புகிறார், ஏனென்றால் இப்பொழுதிலிருந்தே சம்ஸ்காரத்தை நிரப்பவில்லை யென்றால், இறுதியில் சம்ஸ்காரத்தை நிரப்புபவர்கள் நீண்ட காலத்தின் பிராப்தியின் ஆதிகாரியாக ஆக முடியாது. எனவே நீங்கள் உலகத்திற்காக உலகின் ஆதார மூர்த்தி. உலகின் எதிரில் உலகின் கண்கள். உலகின் குல தீபங்கள். என்னென்ன சிரேஷ்ட மகிமைகளின் இருக்கின்றனவோ, அனைத்து சிரேஷ்ட மகிமைகள் அதிகாரி ஆத்மாக்கள் இப்பொழுது உலகின் எதிரில் தன்னுடைய சம்பன்ன ரூபத்தில் பிரத்யட்சமாகி காண்பியுங்கள். புரிந்தா.

வந்திருக்கும் அனைத்து விசேஷ சேவாதாரி குழந்தைகளுக்கு விசேˆமாக அன்பு சொரூபத்தில் பாப்தாதா அன்பு நிறைந்த வரவேற்பு செய்கிறார். வலது கரமான குழந்தைகளுக்கு சம நிலையின் கை குலுக்கல் செய்கிறார். வாருங்கள், நன்றாக வாருங்கள். நல்லது.

அனைத்து உலகின் மனவிருப்பங்களை நிறைவேற்றக்கூடிய, எப்பொழுதும் சம்பன்ன திருப்தியான ஆத்மாக்களுக்கு, உலகின் ஆதார மூர்த்திகளுக்கு, ஒவ்வொரு நேரமும் உலக நன்மைக்கான சிரேஷ்ட விருப்பத்தில் நிலைத்திருக்கக் கூடிய, உலகின் எதிரில் மாஸ்டர் உலகை பாதுகாப்பவர் ஆகி, அனைவரையும் பாதுகாக்க கூடிய மிக உயர்ந்த மகான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் சம்ஸ்காரம்.

**மீட்டிங்கில் வந்திருக்கும் சகோதர, சகோதரிகளுடன் சந்திப்பு:** சேவாதாரி குழந்தைகள் சேவையின் திட்டங்களை மனதிலோ உருவாக்கியிருப்பார்கள். மற்றபடி மீட்டிங்கின் சபையில் நடைமுறையில் கொண்டு வருவதற்காக வர்ணனை செய்வார்கள். என்னென்ன சேவை நடந்து கொண்டிருக்கிறதோ, அந்த ஒவ்வொரு சேவையும் மிக நன்றாக தான் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறுவோம். எப்படி நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, நேரம் அனைவரின் புத்தியை குழப்பதில் கொண்டு வருகிறது, அந்த மாதிரி நேரத்திற்கு ஏற்றாற்போல் சக்திசாலி திட்டங்களை உருவாக்குங்கள், அது நிலங்கள் மேல் உழுது விட வேண்டும், எப்பொழுதுமே விதை விதைக்கும் முன்பு நிலத்தை உழுவார்கள் இல்லையா. நிலத்தை உழும் பொழுது என்ன நடக்கும். மேலே கீழே தான் போகும் தான் இல்லையா. அதற்கு பிறகு விதை விதைக்கிறார்கள் என்றால், விளைந்து பலன் கொடுக்கும். அதே போல் இப்பொழுது குழப்பம் ஏற்படுத்தும் ஏர் உழுங்கள். எந்த குழப்பத்தின்? எப்படி இன்று கூறினோம் - யாரோ இருக்கிறார் இதையோ அனைவரும் புரிந்து கொண்டார்கள், ஆனால் இதுவே தான் மேலும் இது ஒன்று தான் என்ற குழப்பம் செய்யும் ஏற் உழவில்லை. இப்பொழுது இன்னும் இருக்கிறது, இதுவும் இருக்கிறது என்பது வரை வந்து சேர்ந்து இருக்கிரார்கள் ஆனால் இது ஒன்று தான் என்ற அம்பை எய்யுக்கள். இந்த உணர்தலுடன் அந்த மாதிரியான ஆத்மாக்கள் உங்கள் எதிரில் வருவார்கள். எப்பொழுது அந்த மாதிரியாக குழப்பம் ஏற்படுமோ, அப்பொழுது தான் பிரத்யசம் ஆகும். இதற்கான விதி என்ன? எப்படி அனைத்து விதிகளும் நடைமுறையில் இருக்கிறது, பல விதமான நிகழ்ச்சிகள் செய்து கொண்டேயிருக்கிறீர்கள், மகாநாடுகளும் செய்கிறீர்கள் என்றால் மற்றவர்களின் மேடையிலும் செல்கிறீர்கள்,

தன்னுடைய மேடையையும் உருவாக்குகிறீர்கள். யோகா பயிற்சி முகாமும் நடத்துகிறீர்கள். இந்த அனைத்து சேவைகளும் அருகிலோ கொண்டு வந்திருக்கிறது, மேலும் என்ன எண்ணிக்கை இருந்ததோ, அந்த எண்ணிக்கையின் வளர்ச்சியும் இருந்தது. அருகிலும் வந்து விட்டார்கள் ஆனால் இப்பொழுது ஆஸ்தியின் அதிகாரத்தின் அருகில் வரவேண்டும். ஆஹா! ஆஹா! என்று கூறுபவர் களாகவோ ஆகியிருக்கிறார்கள், இப்பொழுது வாரிசு உருவாக்குங்கள். இப்பொழுது இவர்கள் தான் உண்மையான வழி காண்ப்பிபவர்கள், தந்தையோடு சந்திக்க வைப்பவர்கள், காப்பாற்றுபவர்கள் என்ற செய்தி நாலாபுறங்களிலும் வலுவாக ஒலிக்க வேண்டும். எனவே இப்பொழுது அதற்கான விதி, சூழ்நிலையும் அந்த மாதிரி இருக்க வேண்டும். மேடையின் வடிவமைப்பும் அப்படி இருக்கவேண்டும். மேலும் அனைவரின் எண்ணமும் ஒன்றாகவே இருக்க வேண்டும். சூழ்நிலையின் பிரபாவம் சக்திசாலியாக இருக்க வேண்டும். சூழ்நிலை அன்பானதாகவோ இருக்கிறது, ஆனால் அதில் சாந்தி மற்றும் சக்தியை கூடுதலாக சேர்த்துக் கொள்ளுங்கள். உலகின் கணக்குப் படியோ அமைதியையோ அனுபவம் செய்கிறார்கள்., ஆனால் அந்த மாதிரி அமைதியின் அம்பு பாய வேண்டும். அதன் விளைவாக அவர் சாந்திக் கடல் இல்லாமல் இருக்க முடியாத அளவிற்கு. உங்களுடைய தொடர்பின் பாதிப்போ, அந்த நேரம் வரை நன்றாக இருக்கிறது ஆனால் நரம்போடு நரம்பில் ஏறிவிட வேண்டும், அது அவரை ஈர்க்க வேண்டும், அருகில் கொண்டு வரவேண்டும், சம்மந்தத்தில் கொண்டு வரவேண்டும், எனவே இந்த உறுதியான பிரபாவத்தை ஏற்படுத்துங்கள். இதுவரை என்ன செய்திருக்கிறீர்களோ, அதை மிக நன்றாக செய்திருக்கிறீர்கள் என்று கூறியிருந்தோம் அல்லவா ஆனால் இப்பொழுது தங்கத்தை (நகையை) செய்திருக்கிறீர்கள், அதில் கல் பதிக்க வேண்டும். இன்றைய உலகத்தில் எடுத்துக் காட்டு தேவையாக இருக்கிறது, எனவே நடைமுறையில் சாந்தி மற்றும் சக்தியின் அனுபவம் ஆகவேண்டும். அது சில வினாடிகளுக்கு இருந்தாலும் கூட ஆனால் அனுபவம் அந்த மாதிரியான ஒன்று, அந்த அனுபவத்தின் சக்தி நெருக்கத்தில், சம்மந்ததில் அவசியம் கொண்டு வரும். திட்டத்தையோ உருவாக்குவீர்கள். மற்றபடி குழந்தைகளின் தைரியம், ஊக்கம், உற்சாகத்தின் மேல் பாப்தாதா குஷியாக இருக்கிறார். சேவையின் ஆர்வத்தில் இருக்கும் குழந்தைகள், சேவை செய்ய வேண்டுமென்ற ஈடுபாடு மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது ஏதாவது புதுமை ஏற்பட வேண்டும் என்று

## 1984 அவ்யக்த முரளி

அனைவரின் எண்ணமும் ஓடுகிறது, முதலில் புதுமையை கொண்டு வருவதற்காக அனைவரிடமும் ஒரு எண்ணம் இருக்க வேண்டும், ஒருவர் கூறினார் மற்ற அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு எண்ணத்தில் எப்பொழுதும் திடமாக இருக்க வேண்டும். ஒருவேளை ஒரு செங்கலாவது அசைகிறது என்றால், முழு சுவரையும் அசைத்து விடும். ஒருவருடைய எண்ணமாவது இதில் கொஞ்சமாவது ஏதாவது காரணத்தினால் சூழ்நிலை காரணமாக வலுவற்றதாக இருக்கிறது என்றால் முழு நிகழ்ச்சியும் வலுவற்றதாகி விடும். அந்த மாதிரி கண்டிப்பாக செய்ய வேண்டும், அனைவரின் சகயோகம் கிடைக்கும் என்ற திடமான எண்ணத்தில் தன்னை கொண்டு வந்து கொண்டு, பிறகு முயற்சி செய்யுங்கள். பாப்தாதா சேவையின் வி'யத்தில் குஷியாக இருக்கிறார். அந்த மாதிரி வேறு எந்த விˆயமும் இல்லை, ஆனால் இப்பொழுது தங்கத்தில் கல் பதித்து விட்டீர்கள் என்றால் கவர்ந்து இழுப்பீர்கள்.

வெளிநாட்டிலும் குழந்தைகள் நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். அவர்களும் நம்முடைய மைக் வந்து மைக் மூலமாக சென்றடைந்தது வலுவான செய்தியும் சொல்லப் பட்டது, ஆனால் இலேசான சப்தம் செய்பவர் வந்தார், பெரிய சப்தம் செய்பவர் வரவில்லை. இருந்தும், இந்தளவோ சேர்ந்து விட்டார்கள். நல்ல தைரியம் வைக்கிறார்கள். நல்லது.

இப்பொழுது உங்களுடைய பூஜைக்குரிய சொரூபம் பிரத்யக்ஷம் ஆக வேண்டும். பூஜைக்குரியவர் தான், பூஜையை செய்விப்பவர் இல்லை. இவர் தான் என்னுடைய தேவதை, பூர்வஜமானவர், பூஜைக்குரியவர், இங்கிருந்து தான் அனைத்து மன விருப்பங்களும் நிறைவேறும். இப்பொழுது இந்த அனுபவம் இருக்க வேண்டும். இப்பொழுது தன்னுடைய எல்லைக்குட்பட்ட எண்ணம் மற்றும் மன விருப்பங்கள் முடிவடைந்து விட வேண்டும். அப்பொழுது தான் இந்த அலை பரவும். இப்பொழுது கூட கொஞ்சம் என்னுடையது என்னுடையது என்பது இருக்கிறது. என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய சுபாவம் என்ற இதுவும் முடிவடைந்து விட வேண்டும். தந்தையின் சம்ஸ்காரம் எதுவோ, அது தான் என்னுடைய சம்ஸ்காரம். உண்மையான சம்ஸ்காரமும் அது தான் இல்லையா. பிரமாணர்களின் பரிவர்த்தனை தான் விஷ்வ பரிவர்த்தனைக்கான ஆதாரம். எனவே இப்பொழுது என்ன செய்வீர்கள்.

கண்டிப்பாக சொற்பொழிவு நிகழ்த்துங்கள், ஆனால் நீங்கள் சப்ததில் வாருங்கள், மேலும் அவர்கள் பாப்ˆயிலிருந்து விலகி சென்று விடட்டும், அந்த மாதிரியான சொற்பொழிவு இருக்க வேண்டும், பேசவோ வேண்டும் தான் இல்லையா. நீங்கல் சப்த்தில் வாருங்கள், அவர்கள் சப்ததிலிருந்து விலகி சென்றுவிடட்டும். நீங்கள் பேசிக் கொண்டு மட்டும் இருக்க வில்லை, ஆனால் அனுபவம் பேச்சாக இருக்க வேண்டும். அனைவர் மனதிலும் இந்த அலை அடிக்க வேண்டும். எப்படி யாராவது அந்த மாதிரியான விˆயத்தை கூறுகிறார் என்றால் சில நேரம் சிரிப்பதற்கான, சில நேரம் அழுவதற்கான, சில நேரம் வைராக்கியத்தின் அலை பரவி விடுகிறது. அது தற்காலிகமானதாக இருக்கும், ஆனால் இருந்தும் பரவுகிறது தான் இல்லையா. அந்த மாதிரி அனுபவம் ஆனதின் அலை பரவி விடவேண்டும். இது தான் நடக்க வேண்டும். எப்படி ஸ்தாபனை காரிய தொடக்கத்தில் ஓம் என்ற த்வணி தொடங்குவார்கள், மேலும் எத்தனை பேர்கள் சாட்சாத்காரம் பார்ப்பதில் சென்று விட்டார்கள், அலை பரவி விட்டிருந்தது. அந்த மாதிரி சபையில் அனுபவங்களின் அலை பரவ வேண்டும். ஒருவருக்கு அமைதியும், இன்னொருவருக்கு சக்தியும் அனுபவம் ஆக வேண்டும். இந்த அலை பரவட்டும். கேட்பவர்களாக மட்டும் இருக்க வேண்டாம், ஆனால் அனுபவத்தின் அலை இருக்க வேண்டும். எப்படி நீரூற்று பெருகெடுத்து ஒடுகிறதென்றால், அந்த யார் நீரூற்றின் கீழ் யார் வருகிறார்கரோ, அவருக்கு குளுமையின் புத்துணர்வு ஆவதற்கான அனுபவம் இருக்கும் இல்லையா. அதே போல் அவர்களும் அமைதி, சக்தி, அன்பு, ஆனந்தம், அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தை செய்து கொண்டே இருக்கட்டும். இன்று கூட அறிவியலின் சாதனங்கள் வெப்பம் - குளுமையின் அனுபவம் செய்விக்கிறது தான் இல்லையா. முழு அறையிலும் அந்த அலை பரவி விடுகிறது. எனவே இத்தனை சிவ சக்திகள், பாண்டவர்கள், மாஸ்டர் சாந்தி, சக்தி அனைத்தின் கடலாக இருப்பவர்கள், இந்த அலையை பரப்ப முடியாத என்ன? நல்லது.

எத்தனை விசால புத்தியுள்ளவர்கள் ஒன்றாகக் கூடியிருக்கிறார்கள். சக்தி சேனையும் அதிகமாக இருக்கிறார்கள். மதுபனில் ஒரே நேரத்தில் இத்தனை சிரேஷ்ட ஆத்மாக்கள் வந்து விடுவது என்பது ஒன்றும் குறைந்த விˆயமில்லை. இப்பொழுதோ உங்களுக்குளே சாதாரணமாக இருக்கிறீர்கள், எனவே சாதாரண வி'யமாக அனுபவமாகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு மகான் ஆத்மாக்கள். இத்தனை மகான்

ஆத்மாக்களின் கூட்டம் முழுக் கல்பத்திலும் இந்த மாதிரி இருக்கவே முடியாது. ஒவ்வொருவரின் மகத்துவம் குறைந்தது அல்ல. இப்பொழுதோ உங்களுக்குள் ஒவ்வொருவரையும் சாதாரணமானவர் என்று நினைக்கிறீர்கள், நீங்களோ மஹாவீர் ஆத்மாக்கள். இன்னும் வரும் நாட்களில் ஒவ்வொருவரின் விசேˆத்தின் பிரகாரம் விசேˆ ஆத்மாக்கள் என்று புரிந்து கொள்வீர்கள். இப்பொழுது மிக சாதாரண விˆயங்கள் அதிகமாக கவனிக்கப் படுகிறது, விசேˆங்கள் குறைவாக கவனிக்கப் படுகிறது. அமர்ந்து சிந்தனை செய்தீர்கள் என்றால், ஒவ்வொருவரும் எத்தனை பக்தர்களின் பூர்வஜமாக இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இஷ்ட தேவதைகள் மற்றும் தேவிகள் தான் இல்லையா. ஒவ்வொரு இஷ்ட தேவதைக்கும் எத்தனை பக்தர்கள் இருப்பார்கள்? நீங்கள் ஒன்றும் சாதாரணமானவர்கள் இல்லை. ஒரு மூர்த்திக்கே இவ்வளவு மகத்துவம் இருக்கிறது என்றால், இத்தனை இஷ்ட தேவதைகள் ஒன்றாக கூடிவிட்டார்கள் என்றால், என்ன ஆகி விடும். நீங்கள் சக்திசாலியானவர்கள் ஆனால் அதை உங்களுக்குள் மறைத்து விட்டீர்கள் என்றால் உலகத்தினரிடமிருந்தும் மறைத்து விட்டீர்கள். பார்கக போனால் ஒவ்வொருவரின் மதிப்பு எண்ணில் அடங்காதது. பாப்தாதாவோ குழந்தைகளின் மகத்துவத்தை எப்பொழுது பார்க்கிறார் என்றால், ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு மகான் என்று பெருமிதம் ஏற்படுகிறது. தன்னையும் சில நேரம் புரிந்து கொள்கிறீர்கள், சில நேரம் புரிந்து கொள்வதில்லை. நீங்களோ மிகுந்த மகான், சாதாரண மனிதன் இல்லை. கொஞ்சம் பிரயத்யக்தா ஏற்பட்ட பிறகு, நான் யார் என்பது உங்களுக்கும் தெரிய வரும். தந்தையோ அதே மகான் தன்மையோடு பார்க்கிறார். தந்தையின் எதிரிலோ அனைத்தும் பிரத்யக்ஷ்மாக இருக்கிறது இல்லையா. நல்லது. - ஒவ்வொருவரின் மகான் தன்மை என்ன என்ற இந்த வகுப்பையும் செய்யுங்கள். நல்லது.

**வரதானம்: அழியாத போதையில் இருந்து ஆன்மீக மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தை அனுபவம் செய்யக்கூடிய பிரமாணனாக இருப்பவரிலிருந்து ஃபரிஸ்தா ஆகுக!**

நீங்கள் பிராமணனிலிருந்து ஃபரிஸ்தா ஆகுபவர்கள். தேவதைகளையும் விட உயர்ந்தவர்கள். தேவதை வாழ்க்கையில் தந்தையின் ஞானம் வெளிப்படாது. பரமாத்மாவின் சந்திப்பின் அனுபவமும் இருக்காது.

எனவே இப்பொழுது நான் தேவதையையும் விட உயர்ந்த பிராமணனிலிருந்து ஃபரிஸ்தா ஆகுபவன் என்ற இந்த போதை எப்பொழுதும் இருக்கட்டும். இந்த அழியாத போதை தான் ஆன்மீக மகிழ்ச்சி சந்தோˆத்தை அனுபவம் செய்விப்பது. ஒருவேளை போதை எப்பொழுதும் இருக்க வில்லையென்றால், சில நேரம் மகிழ்ச்சியில் இருப்பீர்கள், சில நேரம் குழப்பதில் இருப்பீர்கள்.

**சுலோகன்: தன்னுடைய சேவையையும் தந்தையின் எதிரில் அர்ப்பணம் செய்து விடுங்கள். அப்பொழுது தான் சமர்பணமான ஆத்மா என்று கூறுவோம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பழைய கணக்கு முடிந்ததின் அடையாளம்!

இன்று பாப்தாதா பௌதீக உடலின் ஆதாரம் எடுத்து பௌதீக உலகத்தில், பௌதீக உடலிலிருக்கும் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். தற்சமயத்தின் குழப்பமான உலகம் அதாவது துக்கம் சூழ்ந்த உலகத்தில் பாப்தாதா தன்னுடைய ஆடாத அசையாத குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். குழப்பத்தில் இருந்தபொதிலும் அதிலிருந்து விலகி, மேலும் தந்தையின் பிரியமான தாமரை மலர்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். பயமிகுந்த சூழ்நிலையிலிருந்து கொண்டு பயமற்ற, சக்தி சொரூப நிலையிலிருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த உலகத்தை பரிவர்த்தனை செய்யும் கவலையில்லா இராஜாக்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அந்த மாதிரியான கவலையில்லா இராஜாக்கள், உங்கள் மேல் நாலாபுறங்களிலும் உள்ள கவலை நிறைந்த சூழ்நிலையின் பாதிப்பு அம்சம் மாத்திரம் கூட ஏற்பட முடியாது. தற்சமயம் உலகத்தில் பெரும்பான்மையான ஆத்மாக்களில் பயம் மற்றும் கவலை இந்த இரண்டுமே அனைவரிடமும் விசேˆமாக இருக்கிறது ஆனால் அவர்கள் எவ்வளவு தான் கவலையில் இருக்கிறார்களோ, அந்தளவே நீங்களும் நற்சிந்தனை யுள்ளவர்களாக இருக்கிறீர்கள். கவலை மாறி நல்ல எண்ணங்களின் பாவனை சொரூபமாக ஆகி விட்டீர்கள். பய பீதி அடைவதற்குப் பதிலாக சுகத்தின் பாடலைப் பாடுகிறீர்கள். அந்தளவு மாற்றத்தை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதும் நல்ல சிந்தனையுள்ளவராகி, சுபபாவனை, சுப விருப்பங்களினால் மனதால் செய்யும் சேவை மூலமாக அனைவருக்கும் சுகம் சாந்தியின் பிராப்தி கொடுப்பவர்கள் தான் இல்லையா? அகால மரணமடையும் ஆத்மாக்களுக்கு அழியாத மூர்த்தியாகி சாந்தி மற்றும் சக்தியின் சகயோகம் கொடுப்பவர்கள் தான் இல்லையா. ஏனென்றால், தற்சமயத்தில் அகால மரணத்தின் சீசன் நடக்கிறது. எப்படி காற்றின்

# 1984 அவ்யக்த முரளி

சமுத்திரத்தின் புயல் தீடீரென்று அடிக்கிறது. அதே போல் இந்த அகால மரணத்தின் புயலும் தீடீரென்று மேலும் மிக வேகமாக அநேகர்களை ஒன்றாக அழைத்துச் செல்கிறது. அகால மரணத்தின் புயல் இப்பொழுது தான் தொடங்கியிருக்கிறது. விசேˆமாக பாரதத்தில் உள்நாட்டு கலவரம் மற்றும் இயற்கையின் ஆபத்துக்கள் தான் ஒவ்வொரு கல்பத்திலும் பரிவர்த்தனைக்கான காரணமாக ஆகின்றன. வெளிநாட்டின் ரூபம் மற்றும் வடிவம் (விநாசத்தின்) வேறு விதமானது ஆனால் பாரதத்தில் இதே இரண்டு விˆயங்கள் தான் விசேˆமாக காரண மாகின்றன. மேலும் இந்த இரண்டின் ஒத்திகையையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இரண்டுமே சேர்ந்தே தங்களுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரே நேரத்தில் மொத்தமாக அநேகர்களின் மரணம் ஏன் மற்றும் எப்படி ஏற்படுகிறதென்று குழந்தைகள் கேட்கிறார்கள், இதற்கான காரணம் என்ன? இப்பொழுது சம்பன்னம் ஆவதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, இதையோ தெரிந்திருக்கிறீர்கள் மற்றும் அனுபவம் செய்கிறீர்கள். அனைத்து ஆத்மாக்களும் துவாபர் யுகம் மற்றும் கலியுகத்திலிருந்து செய்திருக்கும் பாவங்களின் கணக்கு என்னென்ன மிச்சம் இருக்கின்றனவோ, அவை இப்பொழுது முழுமையாகவே அழிக்கப்பட வேண்டும். ஏனென்றால் இப்பொழுது அனைவரும் திரும்பி வீடு செல்ல வேண்டும். துவாபர் யுகத்திலிருந்து செய்த காரியங்கள் மற்றும் பாவங்களின் பலனை ஒரு பிறவியில் முடிக்கவில்லையென்றால், அடுத்த பிறவியில் முடிப்பதற்கும், பிராப்தி அடைவதற்கும் கணக்கு தொடர்ந்து வருகிறது ஆனால் இப்பொழுது கடைசி நேரம், மேலும் பாவங்களின் கணக்கு அதிகமாக இருக்கிறது, எனவே இப்பொழுது விரைவில் பிறவி, விரைவில் மரணம் என்ற இந்த தண்டனை மூலமாக அநேக ஆத்மாக்களின் பழைய கணக்கு முடிவடைந்து கொண்டிருக்கின்றது. எனவே தற்சமயம் மரணமும் வேதனை நிறைந்ததாக மேலும் பெரும்பான்மையினரின் பிறவியும் மிகுந்த துக்கம் நிறைந்ததாக இருக்கிறது, சகஜமான மரணமும் இல்லை, சகஜமான ஜென்மமும் இல்லை. எனவே வேதனை நிறைந்த மரணம் மற்றும் துக்கம் நிறைந்த பிறவி என்று இது கணக்கு வழக்கு முடிப்பதற்கான சாதனம். எப்படி இந்த பழைய உலகத்தில் எறும்புகள், ஈக்கள், கொசுக்கள் ஆகியவற்றைக் கொள்வதற்கான வழிமுறைகளைக்

கடைப்பிடிக்கிறார்கள். அந்த வழிகள் மூலமாக ஒரே நேரத்தில் ஈக்கள், எறும்புகள், கொசுக்கள் மற்றும் அநேகவிதமான கிரிமிகள் ஒன்றாக அழிந்து விடுகின்றன இல்லையா? அதே போல் இன்றைய நாளில் மனிதர்களும் கொசுக்கள் ஈக்கள் மாதிரி அகால மரணத்தின் வசமாகிக் கொண்டிருக்கிறார்கள். மனிதனுக்கும் எறும்புகளுக்கும் வித்தியாசமே இல்லை, இந்த அனைத்து கணக்கு வழக்குகளும் நிரந்தரமாக முடிவடையும் காரணத்தினால், மொத்தமாக அகால மரணத்தின் புயல் அவ்வப்பொழுது வந்து கொண்டிருகிறது.

எப்படி தர்மராஜபுரியில் தண்டனைகள் கிடைக்கும் என்ற பங்கு இறுதியில் அடங்கியிருக்கிறது ஆனால் அந்த தண்டனைகளை, ஆத்மா மட்டும் தனக்குத் தானாகவே அனுபவிக்கிறது மற்றும் கணக்கு வழக்குகளை முடிக்கிறது ஆனால் கர்மங்களின் விளைவுகளின் கணக்கு அநேக விதமாக இருந்தபோதும், அதில் விசேஷமாக மூன்று விதங்கள் இருக்கின்றன. ஒன்று, ஆத்மா தனக்கு தானே அனுபவிக்கும் கணக்கு, நோய்கள் ஆகியவை. ஆத்மா உடல் நோய் மூலமாக தனக்கு தானாகவே கணக்கை முடிக்கிறது. அதே போலவே இன்னும் மூளை பலஹீனமாவது மற்றும் எந்த விதமான பூதம் பிரவேசம் ஆவது. அந்த மாதிரி வித விதமான தண்டனைகள் மூலமாக ஆத்மா தன்னுடைய கணக்கு வழக்கைத் தானே அனுபவிக்கிறது. இரண்டாவது, கணக்கு, சம்மந்தம் மற்றும் தொடர்பு மூலமாக துக்கத்தின் பிராப்தி ஆவது. இது எப்படியென்று நீங்களோ புரிந்து கொள்ள முடியும் இல்லையா? மேலும் மூன்றாவது இயற்கையின் ஆபத்துக்கள் மூலமாக கணக்கு வழக்குகள் முடிவடைவது. இந்த மூன்று விதங்களின் ஆதாரத்தினால் கணக்கு வழக்கு முடிவடைந்து கொண்டிருக்கிறது. எனவே தர்மராஜபுரியில் சம்மந்தம் மற்றும் தொடர்பு மூலமாக, மேலும் இயற்கையின் ஆபத்துக்கள் மூலமாக உள்ள கணக்கு வழக்கு முடிவடையாது. அது இந்த பௌதீக உலகத்தில் இருக்கும். முழுமையான பழைய கணக்கு அனைவரி னுடையதும் இப்பொழுது முடிவடைய வேண்டும். எனவே இந்த கணக்கு வழக்கை முடிக்கும் இயந்திரம் இப்பொழுது அதிவேகமாக இயங்கத் தான் செய்யும். உலகத்தில் இவை அனைத்துமே நடக்கும். புரிந்ததா? இது கர்மங்களின் விளைவுகளின் கணக்கு வழக்கு. இப்பொழுது பிராமண ஆத்மாவாகிய நான், மிக அதி வேகமாக முயற்சி செய்வதின் மூலம், என்னுடைய அனைத்து பழைய கணக்கு வழக்கு முடிந்து விட்டதா?

அல்லது இப்பொழுது கூட ஏதாவது சுமை இன்னும் இருகிறதா? என்று உங்களை நீங்களே, சோதனை செய்யுங்கள். பழைய கணக்கு இப்பொழுது இன்னும் இருக்கிறதா அல்லது முடிவடைந்து விட்டதா? என்பதின் விசேˆ அடையாளம் என்ன என்று தெரிந்திருக்கிறீர்களா? சிரேஷ்ட பரிவர்த்தனையில் (மாற்றம்) மற்றும் சிரேஷ்ட காரியம் செய்வதில் யாராவது அவருடைய சுபாவம், சம்ஸ்காரத்தினால் தடை போடுகிறார் மற்றும் எவ்வளவு விரும்புகிறீர்களோ, எந்தளவு நினைக்கிறீர்களோ, அந்தளவு செய்ய முடிவதில்லை, மேலும் விரும்பாவிட்டாலும் தெரியவில்லை ஏன் இப்படி ஆகி விடுகிறது என்ற வார்த்தைகள் வெளியாகின்றன. மற்றும் மனதில் எண்ணம் எழுகிறது. என்ன ஆகி விடுகிறது என்று தெரியவில்லை, மேலும் தன்னுடைய விருப்பம் சிரேஷ்டமாக இருந்தபோதிலும், தைரியம் மற்றும் உற்சாகம் இருந்தபோதிலும் மற்றதின் மற்றவர்களின் வசமானதாக அனுபவம் செய்கிறார்கள். அந்த மாதிரி செய்யவோ கூடாது, நினைக்கவில்லை, ஆனால் நடந்து விட்டது என்று கூறுகிறார்கள். இதைத் தான் தன்னுடைய பழைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தின் வசமாவது அல்லது யாருடைய தீய சேர்க்கையின் வசமாவது மற்றும் ஏதாவது வாயுமண்டலம் வைப்ரேˆனின் (எண்ண அலைகளின்) வசமாவது. இந்த மூன்று விதமான வசம் ஆவதின் நிலை இருக்கிறது என்றால், விரும்பாவிட்டாலும் நடந்துவிடுகிறது, நினைத்தபோதிலும் நடப்பதில்லை மற்றும் மற்றதின் வசமாகி வெற்றியை அடைய முடிவதில்லை. என்ற இவைகள் தான் கடந்த காலத்தின் பழைய கணக்கின் சுமையின் அடையாளம், என்னை ஏதாவது விதமான சுமை பறக்கும் கலையின் அனுபவத்திலிருந்து கீழே கொண்டு வரவில்லையே என்று . இந்த அடையாளங்கள் மூலமாக தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். கணக்கு முடிந்தது என்றால், ஒவ்வொரு பிராப்தியின் அனுபவங்களில் பறக்கும் கலை. எப்போதாவது பிராப்தி இருக்கிறது, எப்போதாவது இருக்கிறதென்றால், இப்பொழுது இன்னும் மிச்சம் இருக்கிறது. எனவே இந்த விதியின் மூலம் தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். துக்கமான உலகத்திலோ, துக்கத்தின் சம்பவங்களின் மலை கண்டிப்பாக வெடிக்கும். அந்த மாதிரியான நேரத்தில் பாதுகாப்பிற்கான ஒரே வழி தந்தையின் (பாதுகாப்பு) குடை நிழல் . உங்களிடம் குடை நிழல் இருக்கிறது தான் இல்லையா. நல்லது.

# 1984 அவ்யக்த முரளி

சந்திப்பின் விழாவைக் கொண்டாடுவதற்கு அனைவரும் வந்திருக்கிறீர்கள். இந்த சந்திப்பு விழா தான் எவ்வளவு வேதனை நிறைந்த காட்சியாக இருந்த போதிலும், ஆனால் விழா என்பதினால். அது ஒரு விளையாட்டாக அனுபவமாகும். பயந்து பீதி அடைவது இருக்காது. சந்திப்பின் பாடலைப் பாடிக் கொண்டேயிருப்பீர்கள். குஷியின் நடனம் ஆடுவீர்கள். மற்றவர்களுக்கும் தைரியத்தின் சகயோகம் கொடுப்பீர்கள். ஸ்தூலமாக ஆடுவதில்லை, இது குஷியின் நடனமாகும். நீங்கள் எப்பொழுதுமே சந்திப்பு விழாவைக் கொண்டாடிக் கொண்டேயிருக்கிறீர்கள் இல்லையா? இருப்பதே சந்திப்பின் விழாவில் தான். இருந்தும் மதுபனில் சந்திப்பதற்காக வந்திருக்கிறீர்கள், பாப்தாதாவும் அந்த மாதிரி சந்திப்பு விழாவைக் கொண்டாடும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். மதுபனின் அலங்காரம் மதுபன்னிற்கு வந்து சேர்ந்து விட்டது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தன்னுடைய அனைத்து கணக்கு வழக்கையும் முடித்து விட்டு, மற்றவர் களுடைய கணக்கு வழக்கையும் முடித்து வைக்கும் சக்தி சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் துக்கம் வேதனை நிறைந்த சூழ்நிலையில் இருந்தபோதிலும், விலகியிருந்து மற்றும் தந்தையின் பிரியமானவர்களாக இருக்கக் கூடிய, ஆன்மீக தாமரை மலர்களுக்கு, அனைத்து ஆத்மாக்களுக்காகவும் நல்ல எண்ணங்கள் வைத்திருக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் சமஸ்காரம்.

**டீச்சர் சகோதரிகளுடன் சந்திப்பு: 1**. நீங்கள் டீச்சர்கள் இல்லை, சேவாதாரிகள். சேவையில் தியாகம், தபஸ்யா நிரம்பி இருக்கிறது. சேவாதாரி ஆவது என்றால், சுரங்கத்தின் அதிகாரியாக ஆவது. சேவை என்பது அந்த மாதிரியான ஒன்று அதன் மூலம் ஒவ்வொரு வினாடியிலும் நிரம்பிய நிலை தான். அந்தளவு நிரம்பியவர் ஆகி விடுகிறீர்கள் அதை அரைக் கல்பம் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டேயிருப்பீர்கள். உழைப்பதற்கு அவசியம் இருக்காது. நீங்கள் அந்த மாதிரியான சேவாதாரிகள். அதுவும் ஆன்மீக சேவாதாரி, அதாவது ஆத்ம நிலையில் நிலைத்திருந்து ஆத்மாக்களுக்கு சேவை செய்பவர்கள். இவரைத் தான் ஆன்மீக சேவாதாரி என்று கூறுவது. அந்த மாதிரியான சேவாதாரிகளுக்கு எப்பொழுதும் பாப்தாதா ஆன்மீக ரோஜா மலர் என்ற

பட்டத்தைக் கொடுக்கிறார். அந்த மாதிரி நீங்கள் அனைவரும் ஆன்மீக ரோஜா மலர்கள், மேலும் ஒருபொழுதும் வாடிப்போவதில்லை. எப்பொழுதும் தன்னுடைய ஆன்மீகத் தன்மையின் நறுமணம் மூலம் அனைவரையும் புத்துணர்வு அடையச் செய்பவர்கள்.

2. சேவாதாரியாக ஆவது கூட மிகுந்த சிரேஷ்ட பாக்கியம். சேவாதாரி என்றால், தந்தைக்குச் சமமானவர். எப்படி தந்தை சேவாதாரியாக இருக்கிறாரோ, அதே போன்று நீங்களும் பொறுப்பில் இருக்கும் சேவாதாரி. தந்தை எல்லைக்கு அப்பாற்பட்ட ஆசிரியர், நீங்களும் பொறுப்பில் இருக்கும் ஆசிரியர்கள். அந்த மாதிரி தந்தைக்குச் சமமாகும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. எப்பொழுதும் இதே சிரேஷ்ட பாக்கியம் மூலமாக மற்றவர்களுக்கும் அழியாத பாக்கியத்தின் வரதானத்தை கொடுத்துக் கொண்டேயிருங்கள். முழு உலகத்திலும் அந்த மாதிரியான சிரேஷ்ட பாக்கியம் மிகக் குறைந்த ஆத்மாக்களுக்குத் தான் இருக்கிறது. இந்த விசேˆ பாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டு சக்திசாலியானவர் ஆகி, மற்றவர்களையும் சக்திசாலியானவர்களாக ஆக்கிக் கொண்டே யிருங்கள்.. பறக்கவைத்துக் கொண்டேயிருங்கள். எப்பொழுதும் தன்னை முன்னேற்றிக் கொண்டு மற்றவர்களையும் முன்னேற வையுங்கள். நல்லது.

**தேர்ந்தேடுக்கப்பட்ட மகாவாக்கியம்: மாயாவை வென்றவரின் கூடவே இயற்கையை வென்றவராகவும் ஆகுங்கள்!**

குழந்தைகளாகிய நீங்கள் மாயாவை வென்றவராகவோ ஆகிக் கொண்டே தான் இருக்கிறீர்கள், ஆனால் இயற்கையை வென்றவராகவும் ஆகுங்கள். ஏனென்றால், இப்பொழுது இயற்கையின் சீற்றங்கள் அதிகமாக நடக்கப் போகிறது. சில நேரம் கடலின் நீர் தன்னுடைய பிரபாவத்தைக் காண்பிக்கும், சில நேரம் நிலம் தன்னுடைய பிரபாவத்தைக் காண்பிக்கும். ஒருவேளை இயற்கையை வென்றவராக இருக்கிறீர்கள் என்றால், இயற்கையின் எந்தவொரு சீற்றமும் உள்ளவர்களை அசைக்க முடியாது. எப்பொழுதும் பார்வையாளர் ஆகி அனைத்து காட்சிகளையும் பார்த்துக் கொண்டேயிருப்பீர்கள், எந்தளவு நீங்கள் உங்களுடைய ஃபரிஸ்தா சொரூபத்தில் அதாவது உயர்ந்த நிலையில் இருக்கிறீர்களோ, அந்தளவு இந்த சீற்றங்களில் இருந்து, இயல்பாகவே விலகியிருப்பீர்கள். இயற்கையை வென்றவராக ஆவதற்கு முன்பு கர்மமேந்திரியங்களை

வென்றவர் ஆகுங்கள். அப்பொழுது தான், இயற்கையை வென்றவரிலிருந்து கர்மாதீத் நிலையில் இருப்பவராகி, உலக இராஜ்ய அதிகாரி ஆக முடியும். எனவே ஒவ்வொரு கர்மேந்திரியமும் கூறுங்கள் ஐயா, சரி ஐயா, என்று கூறி நடந்து கொள்கிறதா? உங்களுடைய மந்திரி, துணை மந்திரி எங்காவது ஏமாற்றமோ கொடுப்பதில்லையே?

குழந்தைகள் உங்களிடம் தூய்மையின் மகான் சக்தி இருக்கிறது, அதன் மூலம் தன்னுடைய தூய்மையான மனசக்தி, அதாவது சுத்தமான உள்ளுணர்வு மூலமாக இயற்கையையும் பரிவர்த்தனை செய்ய முடியும். மனதின் தூயமையின் சக்தியின் வெளிப்படையான எடுத்துக்காட்டு, இயற்கையின் பரிவர்த்தனை. அந்த மாதிரி சுய பரிவர்த்தனை மூலம் இயற்கை மற்றும் நபரின் பரிவர்த்தனையும் செய்ய முடியும். அதாவது மிக தாழ்ந்த மனித ஆத்மாக்கள், மேலும் தீய வாயுமண்டலம் மற்றும் எண்ண அலைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான, சுலபமான வழி இந்த ஈஸ்வரிய மரியாதைகள். மரியாதைகளுக்கு உள்ளே இருந்தீர்கள் என்றால், கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். எப்பொழுது எண்ணம், சொல் மற்றும் செயலால் மரியாதை கோட்டிற்கு வெளியே சென்று விடுகிறீர்கள் என்றால், கடின உழைப்பு செய்ய வேண்டியது இருக்கிறது.

நீங்கள் எப்பொழுதும் தன்னுடைய மூதாதையர் என்ற நிலையில் இருந்து, எண்ணத்தின் மூலமாக 5-விகாரங்களுக்கு நீங்கள் அரை கல்பத்திற்காக, விடைபெற்று சென்று விடுங்கள் என்று கட்டளை இட்டீர்கள் என்றால், இயற்கை மிக தூய்மையான சுகம் கொடுப்பதாக ஆகி, அனைவருக்கும் சுகத்தை கொடுக்கும். அது உங்களுடைய கட்டளைப் படி காரியம் செய்யும். பிறகு இந்த இயற்கை ஏமாற்றம் கொடுக்க முடியாது ஆனால் முதலில் தனக்கு அதிகாரி ஆகுங்கள், சுபாவம் சம்ஸ்காரத்திற்கு கூட அடிமைத்தனம் வேண்டாம். எப்பொழுது அதிகாரியாக இருப்பீர்களோ, அப்பொழுது அனைத்தும் கட்டளைப் படி காரியம் செய்யும். அறிவியலின் சக்தி மூலமாக, மனிதர்கள் இயற்கை அதாவது தத்துவங்களை இன்று கூட தங்களுடைய கட்டுப்பாட்டில் வைக்கிறார்கள் என்றால், நீங்கள் ஈஸ்வரிய குழந்தைகள், மாஸ்டர் படைப்பவர், மாஸ்டர் சர்வசக்திவானின் எதிரில், இந்த இயற்கை மற்றும் சூழ்நிலை தாசியாக ஆக முடியாத என்ன? எப்பொழுது அறிவியலின் அணு சக்தி மகான் காரியம் செய்ய முடியும்

என்றால், ஆத்மீக சக்தி, பரமாத்ம சக்தி என்ன தான் செய்ய முடியாது. சுலபமாகவே இயற்கை மற்றும் சூழ்நிலையின் ரூபம் மற்றும் குணத்தை மாற்றம் செய்ய முடியும். அனைத்து தடைகளிலிருந்தும், அனைத்து விதமான சூழ்நிலைகளிலிருந்தும் அல்லது மிக மோசமான இயற்கையின் ஆபத்துக்களிலிருந்து ஒரு நொடியில் வெற்றி அடைபவராக ஆவதற்காக, . ஆஹா நான்! என்ற ஒரு வி ̂யத்தில் மட்டும் நிச்சயம் மற்றும் போதையில் இருங்கள். நான் சிரேஷ்ட பிராமண ஆத்மா என்ற நினைவில் இருந்தீர்கள் என்றால் சக்திசாலியான சொரூபம் ஆகி விடுவீர்கள்.

எப்பொழுதெல்லாம் இயற்கையின் மூலமாக ஏதாவது சோதனை வருகிறதென்றால், இது என்ன, இது ஏன் என்று குழப்பத்தில் வராதீர்கள். குழப்பத்தில் வருவது என்றால், தோல்வி அடைவது. என்ன நடந்தாலும், மனதிலிருந்து எப்பொழுதும் ஆஹா, இனிமையான நாடகமே! என்ற எண்ணம் தான் உருவாக வேண்டும். ஐயோ! இது என்ன இப்படி ஆயிற்று! என்ற எண்ணத்தில் கூட வரவேண்டாம், நாடகத்தின் ஞானத்தினால் தன்னை உறுதியானவராக ஆக்குங்கள். மாயாவை வென்றவர், இயற்கையை வென்றவர் ஆவதற்காக, சாரத்தில் கொண்டு வரும் சக்தியை தாரணை செய்யுங்கள். இதற்காக பார்த்தும் பார்க்காமல், கேட்டும் கேட்காதவர்களாக ஆகுங்கள். இந்த நேரம் பௌதீக உடலில் இருக்கிறேன், அடுத்த நேரம் ஒளி வடிவமான உடலில் இருக்கிறேன், மேலும் இன்னொரு நேரத்தில் உடலற்றவனாக இருக்கிறேன் என்று பயிற்சி செய்யுங்கள். இயற்கையின் சீற்றங்களைப் பார்த்து, இயற்கையின் தலைவனாகி, தன்னுடைய முற்றுப்புள்ளி வைக்கும் நிலை மூலம் இயற்கையின் சீற்றத்தை நிறுத்துங்கள். தரமற்ற நிலையில் இருப்பதிலிருந்து, உயர்ந்த தரமுள்ள நிலையில் பரிவர்த்தனை செய்யுங்கள். இந்தப் பயிற்சியை அதிகரியுங்கள்.

சங்கமயுகத்தில் தான் இயற்கை சகயோகி ஆவதற்கான தன்னுடைய பங்கை ஆரம்பம் செய்து விடும். அனைத்து பக்கங்களிலிருந்தும் இயற்கையின் தலைவனுக்கு, மேலும் மாஸ்டர் இயற்கையின் தலைவனுக்கு வரவேற்பு அளிக்கும். அனைத்து பக்கங்களிலிருந்தும் பாராட்டுக்கள் வழங்கும் மற்றும் நான் என்ன செய்ய வேண்டுமென்று அவைகளே முன்னுக்கு வரும். எனவே இயற்கையின் ஒவ்வொரு

தத்துவத்தையும், தேவதையின் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். தேவதை என்றால், கொடுப்பவர். எனவே இறுதியில் இந்த அனைத்து இயற்கையின் தத்துவங்கள் உங்கள் அனைவருக்கும் சகயோகம் கொடுக்கும். வள்ளலாகி விடுவார்கள். உலகில் நாலா புறங்களிலும் எந்த தத்துவத்தின் மூலமாக எவ்வளவு தான் குழப்பம் இருந்தாலும், ஆனால் எங்கு இயற்கையின் தலைவர்கள் நீங்கள் இருப்பீர்களோ, அங்கு இயற்கை தாசியாகி (வேலையாள்) சேவை செய்யும். நீங்கள் இயற்கையை வென்றவராக மட்டும் ஆகி விடுங்கள். பிறகு இந்த இயற்கை தன்னுடைய தலைவர்களுக்கு சகயோகத்தின் மாலை அணிவிக்கும். எங்கு இயற்கையை வென்ற பிராமணர்கள் உங்களுடைய கால் இருக்குமோ, ஸ்தானம் இருக்குமோ, அங்கு எந்தவொரு நஷ்டமும் ஏற்பட முடியாது. பிறகு அனைவரும் ஸ்தூல மற்றும் சூட்சம ஆதாரத்தைப் பெறுவதற்காக உங்களை நோக்கி ஒடி வருவார்கள். உங்களுடைய ஸ்தானம் அகதிகளின் முகாம் ஆகி விடும். மேலும் அனைவரின் வாயிலிருந்தும் ஆஹோ பிரபு! உங்களுடைய லீலை அளவற்றது என்ற வார்த்தை வெளியாகும்.

பாக்கியசாலிகளே.. பாக்கியசாலிகளே.. நீங்கள் அடைந்தீர்கள், நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை, இழந்துவிட்டோம். இந்த வார்த்தை நாலாபுறங்களிலிருந்தும் வரும். நல்லது.

**வரதானம்: ஒரு தந்தையை தன்னுடைய உலகமாக்கி எப்பொழுதும் ஒருவரின் கவர்ச்சியில் இருக்கக் கூடிய கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

எப்பொழுதும் எனக்கு இருப்பது ஒரு தந்தையைத் தவிர, வேறு யாரும் இல்லை என்ற இதே அனுபவத்தில் இருங்கள். ஒரு பாபா தான் என்னுடைய உலகம், மேலும் வேறு எந்தக் கவர்ச்சியும் இல்லை, எந்த கர்மபந்தனமும் இல்லை. தன்னுடைய ஏதாவது பலஹீனமான சம்ஸ்காரத்தின் பந்தனமும் இருக்க வேண்டாம். யார், யார் மீதாவது என்னுடையவர் என்ற அதிகாரம் வைக்கிறாரோ, அவருக்கு கோபம் அல்லது அபிமானம் வருகிறது, இதுவும் கர்மபந்தனம் ஆனால் எப்பொழுது பாபா தான் என்னுடைய உலகம் என்ற நினைவு இருக்கிறதென்றால், அனைத்து என்னுடையது என்னுடையது என்பவை

ஒரு என்னுடைய பாபாவில் அடங்கி விடுகின்றன, மேலும் கர்மபந்தனத்திலிருந்து சுலபமாக விடுபட்டு விடுகிறீர்கள்.

**சுலோகன்: யாருடைய பார்வை மற்றும் உள்ளுணர்வு எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறதோ, அவர் தான் மகான் ஆத்மா!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசேஷ ஆத்மாக்களின் கடமை!

இன்று திலாராம் (உள்ளத்திற்கு ஒய்வளிக்கும்) தந்தை தன்னுடைய இதயத்தால் குஷி நிறைந்த குழந்தைகளை, சந்திக்க வந்திருக்கிறார். முழு உலகத்தில், எப்பொழுதும் இதயப் பூர்வமாக குஷியில் குழந்தைகளாகிய நீங்கள் மட்டும் தான் இருக்கிறீர்கள். மற்ற அனைவரும் எப்பொழுதாவது ஏதாவது இதயத்தின் வேதனையில் துக்கமாக இருக்கிறார்கள். அந்த மாதிரி இதயத்தின் வேதனையை அழிக்கக் கூடிய துக்கத்தை அழித்து, சுகம் கொடுக்கும் தந்தையின் சுக சொரூப குழந்தைகள் நீங்கள்! மற்ற அனைவரின் இதயத்தின் வேதனையின் கூக்குரலாக ஐயோ.. ஐயோ! என்ற சப்தம் தான் வெளியாகிறது. மேலும் இதயத்தால் குஷியாக இருக்கும் குழந்தைகள் உங்களுடைய இதயத்திலிருந்து ஆஹா.. ஆஹா! என்ற ஒசை வெளியாகிறது. எப்படி ஸ்தூல உடலின் வலி விதவிதமானதாக இருக்கும். அதே போல் இன்றைய மனித ஆத்மாக்களின் இதயத்தின் வலியும் அநேக விதமாக இருக்கின்றன. சில நேரம் கர்மத்தின் விளைவுகளை அனுபவிக்கும் உடலின் வலி, சில நேரம் சம்மந்தம். தொடர்பு மூலம் துக்கம் அடையும் ஆவதின் வலி, சிலநேரம் பணம் அதிகம் வந்தது ஆனால் குறைந்து விட்டது என்ற கவலையின் வலி, மேலும் சில நேரம் இயற்கையின் ஆபத்துக்களின் மூலம் பிராப்தியான துக்கத்தின் வலி. அந்த மாதிரி ஒரு வலியிலிருந்து அநேக வலிகள் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. முழு உலகமுமே துக்கத்தின் வலியின் கூக்குரல் இடுபவர்களாக ஆகி விட்டது. அந்த மாதிரியான நேரத்தில் சுகம் கொடுக்கும். சுக சொரூப குழந்தைகள் உங்களுடைய கடமை என்ன? பல ஜென்மங்களின் துக்கம் மற்றும் வலியின் கடனிலிருந்து அனைவரையும் விடுவியுங்கள். இந்த பழைய கடன் துக்கம் வலியின் சுமையாகி விட்டது. அந்த மாதிரியான நேரத்தில் உங்கள் அனைவரின் கடமை வள்ளல் ஆகி எந்த ஆத்மாவிற்கு, ஏதாவது விதமான கடனின் சுமை இருக்கிறதோ, அவர்களுக்கு அந்த பிராப்தியால் நிரம்பியவராக ஆக்குங்கள். எப்படி உடலின் கர்மத்தின்

விளைவுகளை அனுபவிக்கும் துக்கம், வேதனையுள்ள ஆத்மா, கர்மயோகி ஆகி, கர்மயோகத்தின் மூலம் கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதை முடித்து விடும். அந்த மாதிரி கர்மயோகி ஆவதற்கான சக்தியின் பிராப்தியை மகா தானத்தின் ரூபத்தில் கொடுங்கள். வரதானத்தின் ரூபத்தில் கொடுங்கள். அவர்களோ கடன்காரர்கள் அதாவது சக்தியில்லாதவர்கள், காலியாக இருக்கிறார்கள். அந்த மாதிரியானவர்களுக்கு தன்னுடைய கர்மயோகாவின் சக்தியின் பங்கை கொடுங்கள். ஏதாவது தன்னுடைய கணக்கிலிருந்து அவர்களுடைய கணக்கில் சேமிப்பு செய்யுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் கடனின் சுமையிலிருந்து விடுபட முடியும். இத்தனை காலம் நேரடியாக தந்தையின் வாரிசாகி என்னென்ன அனைத்து சக்திகளின் ஆஸ்தியை சேமித்திருக்கிறீர்களோ, அந்த சேமித்த கணக்கிலிருந்து பறந்த மனமுடன் தானம் செய்யுங்கள். அப்பொழுது இதயத்தின் வலியை போக்க முடியும். எப்படி இறுதி நேரம் அருகில் வந்துக் கொண்டிருக்கிறது, அதே போல் அனைத்து ஆத்மாக்களின் பக்தியின் சக்தியும் முடிவடைந்து கொண்டிருக்கிறது. துவாபர் யுகத்திலிருந்து இரஜோ குண ஆத்மாக்களில் இருந்தும் தானம், புண்ணியம், பக்தியின் சக்தி, அவர்களுடைய கணக்கில் சேமிப்பாக இருந்தது. எனவே, தன்னுடைய ஆத்மாவை நிர்வகிப்பதற்காக ஏதாவது, சாந்திக்கான வழி பிராப்தி ஆகியிருந்தது ஆனால் இப்பொழுது தமோகுண ஆத்மாக்கள், இந்த குறைந்த நேரத்தின் சுகத்தின் ஆத்மாவை நிர்வகிப்பதற்கான, வழிகளிலிருந்தும் காலியாகி விட்டன. அதாவது பக்தியின் பலனையும் அருந்தி காலியாகி விட்டது. இப்பொழுது பெயருக்கு பக்தி, பலன் சொரூபமான பக்தி இல்லை. பக்தியின் மரம் விஸ்தாரமாக வளர்ந்துவிட்டது. மரத்தின் பல விதமான வண்ணத்தின் ஜொலிப்பு அவசியம் இருக்கிறது ஆனால் சக்தியில்லாத காரணத்தினால், பலன் கிடைக்க முடியாது. எப்படி ஸ்துல மரம் கூட முழுமையாக வளர்ந்து, இத்துப்போன நிலையை அடைந்து விடுகிறதென்றால், பலன் கொடுப்பதாக இருக்காது ஆனால் நிழல் கொடுக்கும் மரமாக ஆகி விடும். அதே போல் பக்தியின் மரமும் மனதை குஷிப் படுத்துவதற்கான நிழலை அவசியம் கொடுக்கிறது. குரு வைத்து விட்டோம், முக்தி கிடைத்துவிடும். தீர்த்த யாத்திரை, தானம், புண்ணியம் செய்தோம், பிராப்தி ஆகி விடும்.

அப்படி மனதை குஷிப்படுத்துவதற்கான ஆறுதல் கொடுக்கும் நிழல் இன்னும் பாக்கியிருக்கிறது. இப்பொழுது இல்லை யென்றால், எப்போதாவது கிடைத்துவிடும் என்ற இதே நிழலில் பாவம், வெகுளியான பக்தர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பழம் கொடுப்பதில்லை, எனவே அனைவரில் ஆத்மாவை நிர்வகிக்கும் கணக்கு, காலியாக இருக்கிறது. அந்த மாதிரியான நேரத்தில் நிரம்பிய ஆத்மாக்களாகிய உங்களுடைய கடமை தன்னுடைய சேமிப்பாகி இருப்பதிலிருந்து, அந்த ஆத்மாக்களுக்கு ஒரு பங்கை ஏதாவது, அந்த ஆத்மாக்களுக்கு தைரியம் மற்றும் உற்சாகத்தை கொடுக்க வேண்டும். சேமிப்பு ஆகியிருக்கிறதா? அல்லது தனக்காக சம்பாதித்தீர்கள் மற்றும் சாப்பிட்டு விட்டீர்களா? சம்பாதித்தார் மற்றும் சாப்பிட்டு விட்டார் என்பவரை இராஜயோகி என்று கூறமாட்டோம். சுயராஜ்ய அதிகாரி என்று கூறமாட்டோம். இராஜாவின் களஞ்சியம் எப்பொழுதும் நிரம்பி யிருக்கும். பிரஜைகளின் பாலனையின் பொறுப்பு இராஜாவிற்கு இருக்கிறது. சுயராஜ்ய அதிகாரி என்றால், அனைத்து பொக்கிஷங்களும் நிரம்பியவர். ஒருவேளை பொக்கிஷம் நிரம்பியிருக்க வில்லையென்றால், இப்பொழுதும் அவர் இராஜயோகி இல்லை, பிரஜா யோகி ஆவார். பிரஜை சம்பாதிப்பார் மற்றும் சாப்பிட்டு விடுவார். செல்வந்தர் பிரஜைகள் கொஞ்சம் சேமிப்பு வைத்துக் கொள்வார்கள் ஆனால் இராஜா கஜானாவின் அதிகாரியாக இருக்கிறார். அந்த மாதிரி இராஜயோகி என்றால், சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள். எந்தவொரு பொக்கிஷத்தின் சேமிப்பு கணக்கு காலியாக இருக்க முடியாது. எனவே பொக்கிஷம் நிரம்பியிருக்கிறதா? என்று தன்னை பாருங்கள். வள்ளலின் குழந்தைகளாகிய உங்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற பாவனை இருக்கிறதா? அல்லது தனக்கு பயன்படுத்துவதிலேயே முழ்கியிருக்கிறீர்களா? தன்னுடைய பாலனையிலேயே காலம் கடந்து சென்று விடுகிறதா அல்லது மற்றவர்களின் பாலனைக்காக நேரமும் பொக்கிஷமும் நிரம்பியிருக்கிறதா? இங்கு சங்கமயுகத்திலிருந்து தான் ஆன்மீக பாலனையின் சம்ஸ்காரம் உள்ளவர்கள், எதிர்காலத்தில் பிரஜையை பாலனை செய்யும் விஷ்வராஜன் ஆக முடியும். இராஜா மற்றும் பிரஜையின் முத்திரை இங்கே இடப்படுகிறது. பதவி அங்கு கிடைக்கும். ஒருவேளை இங்கேயே முத்திரை இல்லையென்றால், பதவி கிடைக்காது. சங்கமயுகம் முத்திரை இடப்படும் அலுவலகம், தந்தை மூலமாக பிராமண குடும்பத்தின் மூலமாக முத்திரை இடப்படுகிறது.

எனவே தன்னைத் தானே நல்ல முறையில் பாருங்கள். கையிருப்பை சோதனை செய்யுங்கள். தேவையான நேரத்தில் ஏதோவொரு பிராப்தியின்மை (அடைவதில் குறை) கூட சம்பன்னம் (முழுமை) அடைவதில் ஏமாற்றிவிட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். எப்படி ஸ்தூலமான பொருட்களை சேமிக்கிறீர்கள், ஒருவேளை அனைத்து மளிகை பொருட்களையும் சேர்த்து விட்டீர்கள், ஆனால் சின்னஞ்சிறு தீப்பெட்டி வாங்கவில்லையென்றால், மளிகை மற்றும் தானியங்களை வைத்து என்ன செய்வீர்கள்? அநேக பிராப்திகள் இருந்த போதிலும், ஒரு பிராப்தியின்மை ஏமாற்றத்தை அளித்து விட முடியும். அந்த மாதிரி ஒரு பிராப்தியின்மை கூட நிரம்பியவர் என்ற முத்திரை இடப்படுவதற்கான உரிமையை அடைவதில் ஏமாற்றம் அளித்து விட முடியும். என்னிடமோ நினைவின் சக்தி இருக்கிறது, ஏதாவது குணத்தின் குறையிருக்கிறது என்றால், ஒன்றும் பாதகம் இல்லை என்று அப்படி நினைக்காதீர்கள். நினைவின் சக்தி மகான், நம்பர் ஒன் அது சரி தான் ஆனால் ஏதாவது ஒரு குணத்தின் குறை கூட அந்த நேரத்தில் முழுமையாக தேர்ச்சியடைவதில் தோல்வியடையச் செய்து விடும். இதை சின்ன விஷயம் என்று நினைக்காதீர்கள். ஒவ்வொரு குணத்தின் மகத்துவம் மற்றும் சம்மந்தம் என்ன என்ற இதன் ஆழமான கணக்கு இருக்கிறது, அதை பின்பு எப்போதாவது கூறுவோம்.

விசேஷ ஆத்மாக்களின் கடமை மற்றும் பொறுப்பு என்ன? அதை இன்று விசேஷமாக நினைவூட்டினோம். புரிந்ததா? இந்த நேரம் டெல்லி தலைநகரைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறீர்கள் அல்லவா. எனவே இராஜ்ய அதிகாரியின் விஷயத்தைக் கூறினோம். அப்படியே தலை நகரத்தில் மாளிகை கிடைத்துவிடாது. பாலனை செய்து பிரஜைகளை உருவாக்க வேண்டும். டெல்லியைச் சேர்ந்தவர்கள் அதிவேகமாக தயார் செய்து கொண்டு இருக்கிறீர்கள் தான் இல்லையா? தலைநகரத்தில் இருக்க வேண்டும் இல்லையா, தூரமாகச் செல்ல வேண்டாம் இல்லையா?

குஜராத்தைச் சேர்ந்தவர்களும் இப்பொழுது உடன் இருக்கிறார்கள். சங்கமயுகத்தில் மதுபன்னில் உடன் இருக்கிறார்கள் என்றால், இராஜ்யத்திலும் உடன் இருப்பார்கள் இல்லையா? உடன் இருப்பதற்கான திடமான எண்ணம் வைப்பீர்கள் இல்லையா? மூன்றாவது இந்தூர். இன் - டோர் என்றால் வீட்டில் இருப்பவர்கள். அப்படி இந்தூர் ஜோனைச்

சேர்ந்தவர்கள் இராஜ்யத்தின் வீட்டில் இருப்பீர்கள் இல்லையா? இப்பொழுதும் தந்தையின் இதயம் என்ற வீட்டில் இருப்பவர்கள். அப்படி மூவர்களின் அருகாமையின் ராசி ஒத்துப் போகிறது. எப்பொழுதும் அந்த மாதிரியே இந்த பாக்கியத்தின் ரேகையை தெளிவாகவும், விஸ்தாரமாகவும் ஆக்கிக் கொண்டேயிருங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சம்பன்ன நிலையின் கடமையை நிறவேற்றக் கூடிய, தன்னுடைய வள்ளல் தன்மையின் சிரேஷ்ட சம்ஸ்காரங்களினால் அனைவரின் வேதனையை அகற்றக் கூடிய, எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி ஆகி ஆன்மீக பாலனை செய்யக் கூடிய, அனைத்து பொக்கிஷங்களால் நிரம்பிய களஞ்சியமாக ஆக்கக் கூடிய, மாஸ்டர் வள்ளல், வரம் அளிக்கும் வள்ளல், அந்த மாதிரி இராஜயோகி, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** **1**. எப்பொழுதும் தன்னை பார்வையாளர் என்ற இருக்கையில் அமர்ந்திருக்கும் ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? இந்த பார்வையாளரின் நிலை அனைத்தையும் விட மிக நல்ல, சிரேஷ்ட இருக்கையாகும். இந்த இருக்கையில் அமர்ந்து காரியம் செய்வதிலும் அல்லது பார்ப்பதிலும் மிகுந்த மகிழ்ச்சி வரும். எப்படி இருக்கை நன்றாக இருக்கிறதென்றால், அமருவதில் மகிழ்ச்சி வரும் இல்லையா? இருக்கை நன்றாக இல்லையென்றால், அமருவதில் மகிழ்ச்சி இருக்காது. இந்த பார்வையாளர் என்ற இருக்கை அனைத்தையும் விட சிரேஷ்ட இருக்கை! இதே இருக்கையில் எப்பொழுதுமே அமர்ந்து இருக்கிறீர்களா? உலகத்தில் கூட இன்றைய நாட்களில் இருக்கையை பிடிப்பதற்குத் தான் அங்கும் இங்கும் ஒடுகிறார்கள். உங்களுக்கு எவ்வளவு நல்ல இருக்கை கிடைத்திருக்கிறது. அந்த இருக்கையில் இருந்து உங்களை யாரும் கீழே இறக்க முடியாது. அவர்களுக்கோ எவ்வளவு பயம் இருக்கிறது. இன்று இருக்கை இருக்கிறது. நாளை இல்லாமல் போய்விடலாம். உங்களுடையது அழியாதது, பயமில்லாமல் நீங்கள் அமர முடியும். அந்த மாதிரி பார்வையாளர் நிலை என்ற இருக்கையில் எப்பொழுதும் அமர்ந்து இருக்கிறீர்களா? நிலைகுலைந்து இருப்பவர் இருக்கையில் ஒரே சீராக அமர முடியாது. எப்பொழுதுமே இந்த இருக்கையில் நன்றாக அமர்ந்திருங்கள். இது அந்த மாதிரி மிகவும் சௌகரியமான இருக்கை.

அதில் அமர்ந்து கொண்டு நீங்கள் என்ன பார்க்க விரும்பு கிறீர்களோ, என்ன அனுபவம் செய்ய விரும்புகிறீர்களோ, அதைச் செய்ய முடியும்.

2. தன்னை இந்த உலகத்தில் கோடியில் சிலர் மற்றும் சிலரிலும் சிலரான விசேஷ ஆத்மா என்று நினைக் கிறீர்களா? கோடியில் சிலர் தான் தந்தையின் குழந்தை ஆகிறார்கள் என்று வர்ணனை இருக்கிறது தானே, அது நான் தான்! இந்தக் குஷி எப்பொழுதும் இருக்கிறதா, உலகத்தில் அநேக ஆத்மாக்கள் தந்தையை அடைவதற்காக, முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் நான் அடைந்துவிட்டேன். தந்தையின் குழந்தை ஆவது என்றால், தந்தையை அடைவது. உலகத்தினர் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நான் அவருடைய குழந்தை ஆகி விட்டேன். பக்தி மார்க்கம் மற்றும் ஞான மார்க்கத்தின் பிராப்தியில் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. ஞானம் என்பது படிப்பு, பக்தி என்பது படிப்பு அல்ல. அது குறைந்த நேரத்திற்கான ஆன்மீக பொழுதுபோக்கு ஆனால் சதா காலத்திற்கான பிராப்திக்கான சாதனம் ஞானம். எனவே எப்பொழுதும் இதே நினைவில் இருந்து மற்றவர்களையும் சக்திசாலி ஆக்குங்கள். எது நினைவிலும் கனவிலும் இல்லாமல் இருந்ததோ, அதை நடை முறையில் அடைந்துவிட்டேன். தந்தை ஒவ்வொரு மூலையிலிருந்தும் குழந்தைகளைக் கண்டுபிடித்து தன்னுடையவராக ஆக்கி விட்டார். எனவே இதே குஷியில் இருங்கள்.

3. அனைவரும் தன்னை ஒரே ஒரு தந்தையின் வழியில் நடக்கும், ஒரே சீரான நிலையில் நிலைத்திருப் பவர்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமே இல்லையென்றால், சுலபமாகவே ஒரே சீரான நிலை வந்து விடுகிறது. அந்த மாதிரி அனுபவம் இருக்கிறதா?

எப்பொழுது இன்னொருவர் யாருமே இல்லையென்றால், புத்தி எங்கு செல்லும், மேலும் வேறு எங்கு செல்வதற்கும் வாய்ப்பும் இல்லை. இருப்பதே ஒரே ஒருவர். எங்கு இரண்டு மூன்று விஷயங்கள் இருக்கிறது என்றால், யோசிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். எப்பொழுதும் ஒரே ஒரு வழி தான் என்றால், எங்கு செல்ல முடியும். அந்த மாதிரி இங்கு மார்க்கத்தை கூறுவதற்கான சகஜவிதி - ஒரு தந்தை, ஒரு வழி, ஒரே சீரான ஒரே ஒரு பரிவாரம். இந்த ஒரே ஒரு விஷயத்தை நினைவு வைத்துக் கொண்டீர்கள்

என்றால், முதல் நம்பர் ஆகி விடும். ஒன்றின் கணக்கை தெரிந்து கொள்ள வேண்டும் அவ்வளவு தான். எங்கே இருந்தாலும் ஆனால் ஒருவரின் நினைவு இருக்கிறது என்றால் எப்பொழுதுமே உடன் இருப்பீர்கள், தூரமாக இல்லை. எங்கு தந்தையின் தூணை இருக்கிறதோ, அங்கு மாயாவின் துணை இருக்க முடியாது. தந்தையிடமிருந்து பிரித்து விட்டு, பிறகு மாயா வருகிறது. அப்படியே வருவதில்லை. எனவே நீங்கள் பிரியவும் செய்யாதீர்கள், மாயாவும் வரவேண்டாம். அந்த ஒருவருக்குத் தான் மகத்துவம்.

**அதர்குமாரர்களுடன் (இல்லறத்தில் இருக்கும் சகோதரர்களுடன்) பாப்தாதாவின் சந்திப்பு:** எப்பொழுதும் இல்லறத்தில் இருந்து கொண்டும், ஆன்மீக உணர்வில் இருக்கிறீர்களா? நீங்கள் இல்லற வாழ்க்கையில் இருந்து விலகியிருப்பவர்கள், எப்பொழுதும் டிரஸ்டி ரூபத்தில் இருப்பவர்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? டிரஸ்டி என்றால், எப்பொழுதும் சுகமானவர், மேலும் குடும்பஸ்தன் என்றால் எப்பொழுதும் துக்கமானவர். அப்படியானால் நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? எப்பொழுதும் சுகமானவர்கள். இப்பொழுது துக்கமான உலகத்தை விட்டு விட்டீர்கள், அதிலிருந்து வெளியேறி வந்துவிட்டீர்கள். இப்பொழுது சங்கமயுகத்தில் சுகங்களின் யுகத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது ஆன்மீக இல்லறத்தில் இருக்கிறீர்களே அன்றி, உலகத்தின் இல்லறத்தில் இருக்கவில்லை. உங்களுக்குள்ளும் ஆன்மீக உள்ளுணர்வு, ஆன்மீக பார்வை இருக்க வேண்டும்.

டிரஸ்டி நிலையின் அடையாளம் எப்பொழுதும் விலகியிருப்பவர் மற்றும் தந்தையின் பிரியமானவர். ஒருவேளை விலகியிருந்து, அன்பானவராக இருக்க வில்லையென்றால், டிரஸ்டியாகவும் இல்லை. குடும்ப வாழ்க்கை என்றால், பந்தனம் நிறைந்த வாழ்க்கை. டிரஸ்டி வாழ்க்கை என்றால் பந்தனமற்ற வாழ்க்கை. டிரஸ்டி ஆவதினால், அனைத்து பந்தனங்களும் சுலபமாகவே முடிவடைந்து விடுகிறது. பந்தனமற்றவர் என்றால், எப்பொழுதும் சுகமானவர். அவரிடம் துக்கத்தின் அலைகள் வரமுடியாது. ஒருவேளை எண்ணத்தில் கூட என்னுடைய வீடு, என்னுடைய குடும்பம், என்னுடைய இந்த வேலை என்று வருகிறது என்றால், இந்த நினைவு கூட மாயாவை அழைக்கிறது. எனவே என்னுடையதை உன்னுடையதாக ஆக்கி விடுங்கள். எங்கு உன்னுடையது இருக்கிறதோ, அங்கு துக்கம்

அகன்று விடுகிறது. என்னுடையது என்று கூறினால், குழப்பத்தில் வருவது, உன்னுடையது என்று கூறினால், மகிழ்ச்சியோடு இருப்பது. இப்பொழுது மகிழ்ச்சியாக இருக்க வில்லையென்றால், எப்பொழுது இருப்பீர்கள். சங்கமயுகமே மகிழ்ச்சியில் இருப்பதற்கான யுகம், எனவே எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருங்கள். கனவிலும் மற்றும் நினைவிலும் கூட வீணானவை இருக்க வேண்டாம். அரைக் கல்பம் அனைத்தையும் வீணாக இழந்தீர்கள், இப்பொழுது இழப்பதற்கான நேரம் முடிவடைந்து விட்டது. இப்பொழுது சம்பாதிக்கும் நேரம். எவ்வளவு சக்திசாலியாக இருப்பீர்களோ, அந்தளவு சம்பாத்தியம் செய்து சேமிப்பு செய்ய முடியும். 21-ஜென்மங்களும் மிக சௌகரியமாக இருந்து, சாப்பிடும் அளவிற்கு சேமிப்பு செய்யுங்கள். மற்றவர்களுக்கும் கொடுக்க முடியும் அளவிற்கு. கையிருப்பு இருக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் வள்ளலின் குழந்தைகள். எந்தளவு சேமிப்பு இருக்குமோ, அந்தளவு அவசியம் குஷி இருக்கும்.

எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறுயாரும் இல்லையென்ற, இதே ஈடுபாட்டில் மூழ்கியிருங்கள். எங்கு முழு ஈடுபாடு இருக்கிறதோ, அங்கு தடை வரமுடியாது. பகல் இருக்கிறது என்றால், இரவு இல்லை. இரவு இருக்கும் நேரத்தில் பகல் இருக்காது. அதேபோல் தான் இந்த முழு ஈடுபாடும் தடையும். உங்களுடைய ஈடுபாடு அந்தளவு சக்திசாலியாக இருக்க வேண்டும். அது தடையை பஸ்மம் செய்துவிடும். நீங்கள் அந்த மாதிரியான தடையற்ற ஆத்மாவாக இருக்கிறீர்களா? எவ்வளவு தான் பெரிய தடையாக இருந்தாலும், மாயா தடை ரூபமாக மாறி வந்தாலும், ஆனால் முழு ஈடுபாடு உள்ளவர்கள், எப்படி வெண்ணெயில் இருந்து முடி எடுக்கப்படுகிறது. அதேபோல் அதை கடந்து விடுவார்கள். முழு ஈடுபாடு தான் அனைத்து பிராப்திகளையும் அனுபவம் செய்விக்கும். எங்கு தந்தை இருக்கிறாரோ, அங்கு பிராப்தி அவசியம் இருக்கிறது. எது தந்தையின் பொக்கிஷமோ, அது குழந்தைகளுடையது.

**மாதர்களுடன் சந்திப்பு**: நீங்கள் சக்தி தளம் தான் இல்லையா? தாய்மார்கள் ஜெகத்மாதாக்கள் ஆகி விட்டார்கள். இப்பொழுது எல்லைக்குட்பட்ட மாதாக்கள் இல்லை. எப்பொழுதும் தன்னை ஜெகத்மாதா என்று புரிந்து கொள்ளுங்கள். எல்லைக்குட்பட்ட குடும்ப வாழ்க்கையில் மாட்டிக் கொள்பவர்கள் இல்லை. எல்லைக்கு அப்பாற்பட்ட

சேவையில் எப்பொழுதும் குஷியாக இருப்பவர்கள். தந்தை எவ்வளவு உயர்ந்த பதவியை கொடுத்து விட்டார். தாசியாக இருந்தவரிலிருந்து, தலையின் கீரிடமாக ஆக்கி விட்டார். ஆஹா எனது உயர்ந்த பாக்கியமே! என்ற இதே பாடலை, பாடிக் கொண்டு மட்டும் இருங்கள். இந்த ஒரு வேலையை மட்டும் தான் தந்தை தாய்மார்களுக்கு கொடுத்திருக்கிறார். ஏனென்றால் மிகவும் அலைந்து, அலைந்து களைப்பு அடைந்து விட்டார்கள். எனவே தந்தை தாய்மார்களின் களைப்பைப் பார்த்து அவர்களை களைப்பிலிருந்து விடுவிப்பதற்காக வந்திருக்கிறார். 63-ஜென்மங்களின் களைப்பை ஒரு ஜென்மத்தில் அகற்றிவிட்டார். ஒரு வினாடியில் அகற்றிவிட்டார், தந்தையின் குழந்தை ஆனீர்கள், களைப்பு அகன்றது. மாதாக்களுக்கு ஊஞ்சலில் ஆடுவதும் மற்றும் ஆட்டுவதும் மிகவும் பிடிக்கும். எனவே தந்தை மாதாக்களை குஷியின் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆட்டு வித்தார். அதே ஊஞ்சலில் ஆடிக் கொண்டேயிருங்கள். நிரந்தர சுகமானவராக, நிரந்தர சுமங்கலியாக ஆகி விட்டீர்கள். அமர தந்தையின் அமர குழந்தைகள் ஆகி விட்டீர்கள். பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து குஷியடைகிறார்கள். நல்லது.

**வரதானம்: நிரம்பிய நிலை மூலமாக எப்பொழுதும் திருப்தியை அனுபவம் செய்யக் கூடிய செல்வந்தர் ஆகுக!**

சுயராஜ்யத்தின் செல்வம். ஞானம், குணம் மற்றும் சக்திகள். யார் இந்த அனைத்து செல்வங்களினால், நிரம்பிய சுயராஜ்ய அதிகாரியாக இருக்கிறாரோ, அவர் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார். அவரிடம் பிராப்தியின்மையின் பெயர் அடையாளம் கூட இருக்காது. எல்லைக்குட்பட்ட ஆசைகள் என்றால் என்னவென்று தெரியாதவர். இவரைத் தான் செல்வந்தர் என்று கூறுவது. அவர் எப்பொழுதும் வள்ளலாக இருப்பார். யாசிப்பவராக இருக்கமாட்டார். அவர் இடைவிடாத சுகம் சாந்தி நிரம்பிய சுயராஜ்யத்தின் அதிகாரியாக இருப்பார். எந்தவிதமான சூழ்நிலையும் அவருடைய இடைவிடாத அமைதியை துண்டிக்க முடியாது.

**சுலோகன்: ஞானக் கண் மூலம் மூன்று காலங்களையும், மூன்று உலகங்களையும் தெரிந்து கொள்பவர் தான் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 17.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீணானதை அழிப்பதற்கான சாதனம் -சக்திசாலியான எண்ணங்களின் பொக்கிஷம் -ஞான முரளி!

இன்று பாப்தாதா சங்கமயுகத்தின் ஆன்மீக சபையில் சந்திப்பை செய்வதற்காக வந்திருக்கிறார். இந்த ஆன்மீக சபை, ஆன்மீக சந்திப்பு முழுக் கல்பத்திலும் இப்பொழுது தான் செய்ய முடியும். ஆத்மாக்களுடன் பரமாத்மாவின் சந்திப்பு என்ற இந்த உயர்ந்த சந்திப்பு சத்யுகத்தில் கூட இருக்காது. எனவே இந்த யுகத்தை மகான் யுகம், மகா சந்திப்பதற்கான யுகம், அனைத்து பிராப்திகளின் யுகம், அசம்பவத்திலிருந்து சம்பவம் ஆக்கும் யுகம், சகஜ மற்றும் உயர்ந்த அனுபவங்களுக்கான யுகம், விசேஷ மாற்றத்திற்கான யுகம், உலக நன்மைக்கான யுகம், சகஜ வரதானங்களின் யுகம் என்று கூறப்படுகிறது. அந்த மாதிரியான யுகத்தில் பங்கேற்று செய்யும் மகான் ஆத்மாக்கள் நீங்கள்! இந்தமாதிரி மகான் போதை, எப்பொழுதும் இருக்கிறதா? முழு உலகத்திலும் எந்த தந்தையின் ஒரு நொடிக்கான காட்சியைப் பார்ப்பதற்கான சாதக பறவைகள் போல் இருக்கிறார்கள், அந்த தந்தையின் ஒரு நொடியில் அதிகாரி ஆகக் கூடிய சிரேஷ்ட ஆத்மா நான் என்ற இந்த நினைவு இருக்கிறதா? இந்த நினைவு இயல்பாகவே சக்திசாலியாக ஆக்கி விடும். நீங்கள் அந்த மாதிரி சக்திசாலியான ஆத்மாவாக ஆகியிருக்கிறீர்களா? சக்திசாலியானவர் என்றால், வீணானதை அழிப்பவர். வீணானது இருக்கிறது என்றால், சக்திசாலியாக இல்லை. ஒருவேளை மனதில் வீணான எண்ணம் இருக்கிறது என்றால், சக்திசாலியான எண்ணம் நிலைத்திருக்க முடியாது. வீணானது அடிக்கடி கீழே கொண்டு வருகிறது. சக்திசாலியான எண்ணம், சக்திசாலியான தந்தையின் சந்திப்பையும் அனுபவம் செய்விக்கிறது. மாயாவை வென்றவராகவும் ஆக்குகிறது. வெற்றி சொரூப சேவாதாரி

யாகவும் ஆக்குகிறது. வீணான எண்ணம், ஊக்கம் மற்றும் உற்சாகத்தை அழித்துவிடுகிறது. அவர் எப்பொழுதும் ஏன், என்ன, என்ற குழப்பத்தில் இருப்பார், எனவே சின்ன சின்ன விஷயங்களில் தன் மீதே மனமுடைந்தவராக இருப்பார், வீணான எண்ணம் எப்பொழுதும் அனைத்து பிராப்திகளின் பொக்கிஷத்தை அனுபவம் செய்வதி லிருந்து, வஞ்சித்து விடுகிறது. வீணாண எண்ணம் உள்ளவர்களின் விருப்பம் மற்றும் மனதின் இச்சைகள் மிக உயர்ந்ததாக இருக்கும். நான் இதைச் செய்தேன், இதையும் செய்வேன் என்று அதிவேகத்தில் திட்டங்களை உருவாக்குவார்கள். ஏனென்றால், வீணான எண்ணங்களின் ஒட்டம் மிக வேகமாக இருக்கும். எனவே மிக உயர்ந்த திட்டம் மற்றும் நடைமுறை செயலில் பெரிய வித்தியாசம் வந்துவிடுகிறது, எனவே மனமுடைந்தவர்கள் ஆகி விடுவார்கள். சக்திசாலியான எண்ணம் உள்ளவர்கள், எப்பொழுதும் என்ன நினைப்பாரோ, அதைச் செய்வார். நினைப்பது மற்றும் செய்வது இரண்டும் சமமாக இருக்கும். எண்ணம் மற்றும் காரியத்தில் எப்பொழுதும் தைரியம் நிறைந்த வேகத்தோடு, வெற்றியடைவார். வீணான எண்ணம் மிக வேகமாக சூறாவளி மாதிரி குழப்பத்தில் கொண்டு வரும். சக்திசாலியான எண்ணம் எப்பொழுதும் வசந்த காலத்திற்குச் சமமாக பசுமையாக ஆக்கி விடும். வீணான எண்ணம் ஆத்மீக சக்தி மற்றும் நேரத்தை இழப்பதற்கான காரணமாக ஆகி விடும். சக்திசாலியான எண்ணம் எப்பொழுதும் ஆத்மீக சக்தியை சேமிப்பு செய்யும். நேரத்தை பயனுள்ளதாக ஆக்கும். வீணான எண்ணம் வீணான எண்ணத்தை உருவாக்கும் ஆத்மாவையும் மிகவும் தொந்தரவு செய்யும். அதாவது மாஸ்டர் சர்வசக்திவான் சக்திசாலியான ஆத்மாவின் மதிப்பிலிருந்து இறக்கி விடும். சக்திசாலியான எண்ணம் மூலம் எப்பொழுதும் உயர்ந்த மதிப்பின் நினைவு சொரூபத்தில் இருப்பார். இந்த வித்தியாசத்தை நீங்கள் புரிந்தும் கொள்கிறீர்கள். இருந்தும் அநேக குழந்தைகள் இப்பொழுது கூட வீணான எண்ணங்கள் வருகிறது என்று புகார் செய்கிறார்கள். இதுவரையிலும் வீணான எண்ணம் ஏன் வருகிறது, இதற்கான காரணம் என்ன? பாப்தாதா சக்திசாலியான எண்ணங்களின் பொக்கிஷமாக என்ன கொடுத்திருக்கிறார் - அது தான் ஞானத்தின் முரளி. முரளியின் ஒவ்வொரு மகா வாக்கியமும் சக்திசாலியான பொக்கிஷம். இந்த சக்திசாலியான எண்ணத்தின் பொக்கிஷத்தின் மகத்துவம் குறைவாக இருக்கும் காரணத்தினால், சக்திசாலியான எண்ணம் தாரணை ஆகவில்லையென்றால், வீணான வற்றிற்கு வாய்ப்பு

கிடைத்துவிடுகிறது. ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு மகாவாக்கியத்தை சிந்தித்துக் கொண்டேயிருந்தீர்கள் என்றால், சக்திசாலியான புத்தியில் வீணானவை வரமுடியாது. புத்தி காலியாக இருந்துவிடுகிறது. எனவே காலியாக இருக்கும் காரணத்தினால் வீணானவை புகுந்துவிடுகிறது. எப்பொழுது வாய்ப்பே இல்லையென்றால், வீணானவை எப்படி வரமுடியும். சக்திசாலியான எண்ணங்களினால் புத்தியை பிஸியாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லையென்றால், வீணான எண்ணங்களை வரவழைப்பது என்றாகி விடும்.

பிஸியாக வைத்துக் கொள்ளும் பிஸினஸ் மேன் ஆகுங்கள். இரவு பகலாக இந்த ஞானரத்தினங்களின் பிஸினஸ் மேன் ஆகுங்கள். உங்களுக்கு நேரமும் இருக்காது. வீணான எண்ணங்களுக்கும் வாய்ப்பும் இருக்காது. எனவே முக்கியமான விஷயம் புத்தியை சக்திசாலியான எண்ணங்களினால் எப்பொழுதும் நிரப்பி வையுங்கள். அதற்கான ஆதாரம் தினசரி முரளி கேட்பது, புரிந்து உள்ளே நிரப்புவது. மேலும் சொரூபம் ஆவது. இந்த மூன்று நிலைகள் இருக்கின்றன. கேட்பது மிக நன்றாக இருக்கும். கேட்காமல் இருக்கவே முடியாது. இதுவும் ஒரு நிலை. அந்த நிலையில் உள்ளவர்கள், கேட்கும் நேரம் வரை, கேட்பதற்கான இச்சை, கேட்பதற்கான ஆர்வம் இருக்கும் காரணத்தினால் அந்த நேரம் வரையிலும் அந்த இரசனையின் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். கேட்பதில் மிகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பார்கள். மிகவும் நன்றாக இருக்கிறது . என்ற இந்தப் பாடலையும் குஷியோடு பாடுவார்கள் ஆனால் கேட்பது முடிவடைந்து விட்டது என்றால், அந்த இரசனையும் முடிவடைந்து விடுகிறது. ஏனென்றால், புரிந்து உள்ளே நிரப்ப வில்லை. உள்ளடக்கும் சக்தியின் மூலமாக, புத்தியை சக்திசாலியான எண்ணங்களினால், நிரம்பியதாக ஆகவில்லையென்றால், வீணானது வந்து கொண்டேயிருக்கும். உள்ளடக்கு பவர், நிரப்புபவர் எப்பொழுதும் நிரம்பியவராக இருப்பார். எனவே வீணான எண்ணங்களிலிருந்து விலகியிருப்பார் ஆனால் சொரூபம் ஆகுபவர் சக்திசாலியாகி, மற்றவர்களையும் சக்திசாலியாக ஆக்குவார். எனவே அந்தக் குறை இருந்துவிடுகிறது.

வெறும் கேட்பவர் வீணானவற்றிலிருந்து, பாதுகாப்பாக இருக்கிறார், சுத்த எண்ணங்களில் இருக்கிறார், ஆனால் சக்தி சொரூபமாக ஆக

முடியாது. சொரூபம் ஆகுபவர் எப்பொழுதும் சம்பன்னமாக எப்பொழுதும் சக்திசாலியான, கிரணங்கள் மூலமாக மற்றவர்களுடைய வீணானவற்றையும் அழிப்பவர்களாக இருப்பார்கள். எனவே நான் யார் என்று உங்களை நீங்களே கேளுங்கள். நான் கேட்பவனா, புரிந்து உள்ளடக்குபவனா, சொரூபம் ஆகுபவனா? சக்திசாலியான ஆத்மா ஒரு வினாடியில் வீணானதை சக்திசாலியாக பரிவர்த்தனை (மாற்றம்) செய்துவிடுவார். நீங்கள் சக்திசாலியான ஆத்மாக்கள் தான் இல்லையா? எனவே வீணானதை பரிவர்த்தனை செய்யுங்கள். இதுவரையிலும் வீணானதில் சக்தியையும். நேரத்தையும் இழந்து கொண்டே யிருந்தீர்கள் என்றால், எப்பொழுது சக்தி நிறைந்தவராக ஆவீர்கள்? நீண்ட காலமாக சக்திசாலியானவர் தான், நீண்ட காலத்தின் சம்பன்ன இராஜ்யம் செய்ய முடியும். புரிந்ததா?

இப்பொழுது தன்னுடைய சக்திசாலியான சொரூபம் மூலமாக மற்றவர்களையும் சக்திசாலியாக ஆக்குவதற்கான நேரமாகும். தன்னுடைய வீணானதை முடித்து விடுங்கள். தைரியம் இருக்கிறது தான் இல்லையா? எப்படி மகாராஷ்ட்ரா இருக்கிறது, அதே போல் நீங்களும் மகான் இல்லையா, மகான் எண்ணம் இருக்கிறது தான் இல்லையா, பலஹீனமான எண்ணம் வைப்பவர் இல்லை. எண்ணத்தை வைத்தீர்கள், உடன் நடந்தும்விட்டது. இதைத் தான் மகான் எண்ணம் என்று கூறுவது. நீங்கள் அந்த மாதிரி மகான் ஆத்மாக்கள் தான் இல்லையா? பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் என்ன யோசிக்கிறீர்கள்? பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் வீரம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? மாயாவின் சக்தியுள்ளவர்கள் அராசாங்கத்திற்கு சவால் விடுகிறார்கள். ஈஸ்வரிய சக்தியுள்ளவர்கள் மாயாவிற்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மாயாவிற்கு சவால் விடுபவர்கள் தான் இல்லையா? பயப்படுபவர்களோ இல்லை தான் இல்லையா. எப்படி எங்களுடைய இராஜ்யம் இருக்க வேண்டுமென்று அவர்கள் கூறுகிறார்கள். நீங்களும் மாயாவிற்கு சவால் விடுகிறீர்கள், இப்பொழுது எங்களுடைய இராஜ்யம் வரப்போகிறது என்று கர்ஜனை செய்து கொண்டே கூறுகிறீர்கள், அந்த மாதிரி வீரம் நிறைந்தவர் தான் இல்லையா. பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் வீரம் நிறைந்தவர்கள். மகாராஷ்ட்ராவை சேர்ந்தவர்கள் மகான் ஆத்மாக்கள். கர்நாடகாவைஙச சேர்ந்தவர்களின் விசேஷம் மகான் பாவனை உள்ளவர்கள். பாவனையின் காரணமாக, பாவனைக்கான பலன் சுலபமாக கிடைத்துக்

கொண்டேயிருக்கிறது. கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள், பாவனை மூலமாக மகான் பழத்தை உண்பவர்கள், எனவே எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டேயிருக்கிறார்கள். அந்த மாதிரி குஷியின் பழத்தை அருந்தக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்கள். அந்த மாதிரி மகாராஷ்ட்ரா மகான் எண்ணம் வைப்பவர்கள். மேலும் பஞ்சாப் மகான் சவால் விடும், மகான் இராஜ்ய அதிகாரி, மேலும் கர்நாடகா மகான் பழத்தை அருந்துபவர்கள். மூவருமே மகான் ஆகி விட்டார்கள் இல்லையா?

மகாராஷ்ட்ரா என்றால் அனைத்திலும் மகான். ஒவ்வொரு எண்ணமும் மகான், சொரூபம் மகான், காரியம் மகான், சேவை மகான். அனைத்திலும் மகான். அப்படி இன்று மூன்று மகான் நதிகள் சந்திக்கின்றன. மகான் நதிகள் சேர்ந்துவிட்டன இல்லையா. மகான் நதிகளின் சந்திப்பு மகான் கடலோடு நடக்கிறது. எனவே இந்த சந்திப்பு சபையில் வந்திருக்கிறோம். இன்று சபையிலும் கொண்டாட்டம் இருக்கிறது இல்லையா. நல்லது. அந்த மாதிரி எப்பொழுதும் சக்திசாலியான நிலை மூலம் எப்பொழுதும் ஒவ்வொரு மகா வாக்கியத்தின் சொரூபமாகக் கூடிய, நீண்ட காலத்தின் சக்திசாலியான நிலை மூலம் ஆத்மாக்களை, சக்திசாலியாக ஆக்கக் கூடியவர்களுக்கு பாப்தாதாவின் அனைத்து சக்திகள் நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன் சந்திப்பு:** மகா மண்டலி இவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். தொடக்கத்தில் ஓம் மண்டலி இருந்தது. மேலும் இறுதியில் மகா மண்டலி ஆகி விட்டது. அனைத்து மகான் ஆத்மாகளின் மண்டலி தான் இல்லையா? அவர்கள் தன்னை மகா மண்டலேஷ்வர் என்று கூறுகிறார்கள். மேலும் நீங்கள் உங்களை மகா சேவாதாரி என்று கூறுகிறீர்கள். மகா மண்டலேஷ்வர் மற்றும் மகா மண்டலேஷ்வரி என்று கூறுவதில்லை, ஆனால் மகா சேவாதாரி. அப்படி இது மகான் சேவாதாரிகளின் மகான் மண்டலி. மகா சேவாதாரி என்றால், ஒவ்வொரு எண்ணத்தினாலும், இயல்பாகவே சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறார். ஒவ்வொரு எண்ணம் மூலம் சேவை நடந்து கொண்டேயிருக்கிறது. யார் இயல்பான யோகியோ அவர் இயல்பான சேவாதாரி. எனவே இயல்பாகவே சேவை நடந்து கொண்டிருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள்? பிறகு சேவையின்றி ஒரு வினாடியும் ஒரு எண்ணமும், இருக்க முடியாது என்று அனுபவம் செய்வீர்கள். ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே

நடைமுறையில் சென்றாலும், வந்தாலும் சேவை மூச்சுக்கு மூச்சு ஒவ்வொரு வினாடியில் நிரம்பியிருக்கிறது.. இதைத் தான் இயல்பான சேவாதாரி என்று கூறுவது. நீங்கள் அந்த மாதிரி தான் இல்லையா. இப்பொழுது விசேˆ நிகழ்ச்சி மூலம் சேவை செய்யும் நிலை முடிவடந்து விட்டது. இயல்பாகவே சேவைக்கு பொறுப்பாளர் ஆகி விட்டீர்கள். இப்பொழுது மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். அவர்கள் நிகழ்ச்சியை உருவாக்கவும் செய்வார்கள், நடைமுறையிலும் செய்வார்கள், ஆனால் உங்களுடைய சேவை இப்பொழுது இயல்பான சேவாதாரியினுடையது. நிகழ்ச்சியின் நேரம் வரையில் இல்லை, ஆனால் நிரந்தரமாகவே நிகழ்ச்சி யிருக்கிறது. எப்பொழுதுமே சேவையின் மேடையில் இருக்கிறீர்கள். அந்த மாதிரியான மண்டலி தான் இல்லையா? எப்படி உடல் மூச்சின்றி இயங்க முடியாதோ, அதே போல் ஆத்மா சேவையின்றி இருக்க முடியாது. இந்த மூச்சு தானாகவே சென்று கொண்டேயிருக்கிறது தான் இல்லையா? அந்த மாதிரி சேவையும் இயல்பாகவே இருந்து கொண்டேயிருக்கும். சேவை தான் ஆத்மாவின் மூச்சை போன்றது. அப்படித் தான் இல்லையா? எத்தனை மணி நேரம் சேவை செய்தீர்கள் என்ற இந்தக் கணக்கை எடுக்க முடியுமா? தர்மம், கர்மம் செய்வதே சேவை தான்! நடப்பதும் சேவை, பேசுவதும் சேவை, செய்வதும் சேவை என்றால், இயல்பான சேவாதாரி, நிரந்தர சேவாதாரி. என்னென்ன எண்ணம் எழுகிறதோ, அதில் சேவை நிரம்பியிருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையிலும், சேவை நிரம்பியிருக்கிறது. எனென்றால், வீணானதோ முடிவடைந்து விட்டது. எனவே சக்திசாலி யானவர் என்றால் சேவை. அந்த மாதிரியானவர்களை மகா மண்டலியைச் சேர்ந்த, மகான் ஆத்மாக்கள் என்று கூறுவது. நல்லது.

உங்களுடைய அனைத்து உடன் இருப்பவர்களும் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். ஓம் மண்டலியைச் சேர்ந்த அனைத்து மகா மண்டலியை சேர்ந்தவர்கள், தொடக்க காலத்தின் சேவாதாரிகள், நிரந்தர சேவாதாரிகள். பாப்தாதாவின் எதிரில் மகா மண்டலியின் அனைத்து மகான் ஆத்மாக்களும் இருக்கிறார்கள். சவாலை எடுத்து செய்பவர்கள், மகான் மண்டலியைச் சேர்ந்தவர்கள் தான் இல்லையா? எதையும் யோசிக்காமல், நினைக்காமல் உறுதியான எண்ணத்தை வைத்தார்கள், மேலும் பொறுப்பாளர் ஆகி விட்டார்கள். இவர்களைத் தான் மகான் ஆத்மாக்கள் என்று கூறுவது. மகான் காரியத்திற்கு பொறுப்பாளர்

ஆகியிருக்கிறார்கள். உதாரணமாகவோ ஆகியிருக்கிறார்கள், எந்த உதாரணத்தையும் பார்க்காமல் உலகத்திற்கே உதாரணமானவர்கள் ஆகி விட்டார்கள். உடனடி தானம் மகான் புண்ணியம். நீங்கள் அந்த மாதிரியான மகான் ஆத்மாக்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: மகாராஷ்ட்ரா மற்றும் பஞ்சாப் குரூப்:**

**1.** அனைத்து குழந்தைகள் நீங்கள் பயமற்றவர்கள் தான் இல்லையா, ஏன் என்றால் நீங்கள் எப்பொழுதுமே நிர்வேராக (வெறுப்பற்றவராக) இருக்கிறீர்கள். உங்களுக்கு யார் மீதும் வெறுப்பு இல்லை. அனைத்து ஆத்மாக்களின் மீதும் சகோதரன் மற்றும் சகோதரன் என்ற சுபபாவனை மற்றும் நல்ல விருப்பங்கள் இருக்கிறது. அந்த மாதிரி சுபபாவனை மற்றும் விருப்பம் வைத்திருக்கும் ஆத்மாக்கள், எப்பொழுதும் பயமற்றவர்களாக இருப்பார்கள். பயம், பீதி அடைபவராக இருக்க மாட்டார். அவரே யோக யுக்த நிலையில் நிலைத்திருக்கிறார் என்றால், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவசியம் பாதுகாப்பாக இருப்பார். நீங்கள் எப்பொழுதுமே பாதுகாப்பாக இருப்பவர்கள் தான் இல்லையா? தந்தையின் குடைநிழலின் கீழ் இருப்பவர், எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பார். குடைநிழலில் இருந்து வெளியில் வந்துவிட்டார் என்றால், பிறகு பயமிருக்கும், குடை நிழலில் இருக்கிறார் என்றால் பயமற்றவராக இருப்பார். ஒருவர் எவ்வளவு தான் ஏதாவது செய்தாலும், ஆனால் தந்தையின் நினைவு ஒரு கோட்டை ஆகும். எப்படி கோட்டைக்குள் யாரும் வரமுடியாதோ. அதே போல் நினைவு என்ற கோட்டைக்குள் எப்பொழுதும் பாதுகாப்பு இருக்கும். குழப்பத்திலும் ஆடாதவர், பயப்படுபவர் அல்ல. இதுவோ ஒன்றுமே இல்லை. இது ஒத்திகை. உண்மையானதோ, இன்னும் வேறு இருக்கிறது. உறுதியாக்குவதற்காக ஒத்திகை பார்க்கப்படும். அந்த மாதிரி நீங்கள் உறுதியானவர் ஆகி விட்டீர்களா? வீரமடைந்தவர் ஆகி விட்டீர்களா? தந்தை மேல் ஈடுபாடு இருக்கிறது என்றால், எப்படிப்பட்ட பிரச்சனையாக இருந்தாலும் வந்து சேர்ந்துவிட்டீர்கள். பிரச்சனையை வென்றவர் ஆகி விட்டீர்கள். ஈடுபாடு, தடையற்றவர் ஆவதற்கான சக்தி கொடுக்கிறது. என்னுடைய பாபா என்ற இந்த மகா மந்திரம் மட்டும் நினைவில் இருக்கட்டும். இதை மறந்தீர்கள் என்றால், அவ்வளவுதான். எல்லாமே முடிந்தது. இதே நினைவு இருக்கிறது என்றால் எப்பொழுதுமே பாதுகாப்பாக இருப்பீர்கள்.

2. எப்பொழுதும் தன்னை ஆடாத அசையாத ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? எந்தவிதமான குழப்பமும் ஆடாத அசையாத நிலையில் தடை போட வேண்டாம். அந்த மாதிரியான தடைகளை அழிக்கும், ஆடாத அசையாத ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? தடைகளை அழிக்கும் ஆத்மாக்கள், ஒவ்வொரு தடையையும் அது தடையில்லை, ஒரு விளையாட்டு என்பது போல் கடந்து சென்று விடுவார்கள். விளையாடுவதில் எப்பொழுதும் மகிழ்ச்சி வருமல்லாவா! ஏதாவது சூழ்நிலையை கடந்து செல்வது, விளையாடுவது என்ற இரண்டிலும் வித்தியாசம் இருக்கும் இல்லையா? ஒருவேளை தடைகளை அழிக்கும் ஆத்மாக்களாக இருந்தால், சூழ்நிலை ஒரு விளையாட்டு போல் அனுபவமாகும். மலை கடுகுக்கு சமமாக அனுபவமாகும். நீங்கள் அந்த மாதிரி தடைகளை அழிப்பவர் தானே? பயப்படுபவரோ இல்லையே! ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு இவை அனைத்தும், நடக்கும் என்று முன்பாகவே தெரிந்திருக்கும். எப்பொழுது முன்பாகவே தெரிந்து விட்டது என்றால், ஒரு பெரிய விசயமாக அனுபவம் ஆகாது, திடீரென்று ஏதாவது விசயம் நடக்கிறதென்றால், சிறிய விஷயம் பெரியதாக அனுபவமாகும், முன்பாகவே தெரிந்திருந்தது என்றால், பெரிய விஷயமும் சிறியதாக அனுபவமாகும். நீங்கள் அனைவரும் ஞானம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? பொதுவாக ஞானம் நிறைந்தவர்கள் தான், ஆனால் எப்பொழுது பிரச்சனை நேரமாக இருக்கும் பொழுது, அந்த நேரம் ஞானம் நிறைந்ததின் நிலை மறக்கக் கூடாது. அநேக தடவை செய்ததை இப்பொழுது மீண்டும் அதேபோல் செய்து கொண்டிருக்கிறேன். எப்பொழுது ஒன்றும் புதிதல்ல என்றால், அனைத்தும் எளிதானது. நீங்கள் அனைவரும் கோட்டையின் உறுதியான செங்கல்கள். ஒவ்வொரு செங்கலுக்கும் மிகுந்த மகத்துவம் இருக்கிறது. ஒரு செங்கல் ஆடுகிறது என்றால், முழு சுவரையும் ஆட்டிவிடும். நீங்கள் செங்கல்கள் உறுதியானவர்கள், யாராவது எவ்வளவு தான் அசைப்பதற்கு முயற்சி செய்தாலும், அசைப்பவர் ஆடிப்போவார், ஆனால் நீங்களோ ஆடுபவர் இல்லை. அந்த மாதிரியான உறுதியான ஆத்மாக்களுக்கு, தடைகளை அழிக்கும் ஆத்மாக்களுக்கு, பாப்தாதா தினசரி வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார், அந்த மாதிரி குழந்தைகள் தான், தந்தையின் வாழ்த்துக்கு உரியவர்கள். அந்த மாதிரி ஆடாத அசையாத குழந்தைகளை, தந்தை மற்றும் முழு குடும்பமும் பார்த்து மகிழ்ச்சியடைகிறது. நல்லது.

**வரதானம்: சக்திசாலியான நிலையின் பொத்தானை அழுத்தி (சுவீட்ச் ஆன் செய்து) வீணானவையின் இருளை அகற்றக்கூடிய அவ்யக்த ஃபரிஸ்தா ஆகுக!**

எப்படி ஸ்தூல லைட்டின் சுவீட்ச் ஆன் செய்வதினால், இருள் அகன்றுவிடுகிறது. அந்த மாதிரி சக்திசாலியான நிலை தான் சுவீட்ச். இந்த சுவீட்சை ஆன் செய்தீர்கள் என்றால், வீணானவற்றின் இருள் அகன்று விடும். ஒவ்வொரு வீணான எண்ணத்தையும், அகற்றும் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். எப்பொழுது நிலை சக்திசாலியாக இருக்குமோ, அப்பொழுது மகா தானி, வரதானி ஆகி விடுவீர்கள். ஏனென்றால், வள்ளலின் அர்த்தமே நிறைந்தவர் அதாவது சக்திசாலியானவர். நிறைந்தவர் தான் கொடுக்க முடியும். மேலும் எங்கு நிறைவு இருக்கிறதோ, அங்கு வீணானவை அகன்றுவிடும். இது தான் அவ்யக்த ஃபரிஸ்தாக்களின் சிரேஷ்ட காரியம்.

**சுலோகன்: சத்தியத்தின் ஆதாரத்தினால் அனைத்து ஆத்மாக்களின் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதங்களை பிராப்தி செய்பவர் தான் பாக்கியவான் ஆத்மா!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மிக உயர்ந்த, சகஜ மற்றும் தெளிவான மார்க்கம்!

இன்று பாப்தாதா விசேஷமாக தன்னுடைய அன்பிற்குரிய, எப்பொழுதும் துணையை வைத்து நடந்து கொள்ளும், துணைவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். துணைவர் என்றால், எப்பொழுதும் உடன் இருப்பவர். ஒவ்வொரு காரியத்திலும், எண்ணத்திலும் துணையை வைத்து நடந்து கொள்பவர்கள். ஒவ்வொரு அடிமீது அடி வைத்து முன்னேறிச் செல்பவர். ஒரு அடி கூட தன்னுடைய மனதின் வழிப்படியோ, மற்றவர்கள் சொல்லும் வழிப்படியோ எடுத்து வைக்காதவர். அந்த மாதிரி எப்பொழுதும் துணைவரின் துணையை வைத்து நடந்து கொள்பவர்கள், எப்பொழுதுமே சகஜ மார்க்கத்தின் அனுபவம் செய்கிறார்கள். ஏனென்றால் தந்தை மற்றும் உயர்ந்த துணைவர் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் பொழுதும், பாதையை தெளிவானதாகவும், தடையற்றதாகவும் ஆக்கி விடுகிறார். நீங்கள் அனைவரும் அடி மீது அடி எடுத்து வைத்து மட்டும் செல்ல வேண்டும். பாதை சரியானதா, சகஜமானதா, தெளிவானதா என்று யோசிப்பதற்கும் அவசியமில்லை. எங்கு தந்தையின் அடி வைக்கப்படுகிறதோ, அது உயர்ந்த பாதையாகும் அடியை மட்டும் எடுத்து வையுங்கள். ஒவ்வொரு அடியிலும் பலமடங்கை பெறுங்கள். எவ்வளவு சுலபமானது. தந்தை துனைவராகி துணையை வைத்து நடந்து கொள்வதற்காக மனித உடலின் மூலமாக, ஒவ்வொரு அடியும் எடுத்து வைப்பதை செய்து காண்பிப்பதற்காக, இந்த பௌதீக உலகில் அவதரித்திருக்கிறார். சுலபமாக ஆக்குவதற்காக, மனித உடலை கருவியாக ஆக்கியிருக்கிறார். மனிதனை பின்பற்றுவது அடிமேல் அடி எடுத்து வைப்பது சுலபம் தான் இல்லையா? உயர்ந்த துணைவன் தன்னுடைய துணைவர்களுக்காக இந்தளவு எளிய மார்க்கத்தை கூறியிருக்கிறார், ஏனென்றால் எந்த துணைவர்களை, (நம்மை) துணைவர்களாக ஆக்கினாரோ, அவர்கள் மிகவும் அலைந்து திரிந்த காரணத்தினால், களைப்பு அடைந்திருக்கிறார்கள் என்று துணைவராகிய

தந்தை அறிவார். நம்பிக்கை இழந்தவர்கள், பலமற்றவர்கள். கடினம் என்று புரிந்து கொண்டு மனமுடைந்து போய்விட்டார்கள். எனவே மிகவும் சுலபமாக அடி மீது அடி மட்டும் எடுத்து வையுங்கள் என்ற எளிய வழியைத் தான் கூறுகிறார். அடி எடுத்து வைப்பது மட்டும் நீங்கள் செய்யும் வேலை, நடத்துவிப்பது, அக்கரைக்கு கொண்டு சேர்ப்பது, ஒவ்வொரு அடியிலும் பலத்தை நிரப்புவது, களைப்பை அகற்றுவது, இவை அனைத்தும் துணைவருடைய வேலையாகும். நீங்கள் அடியை மட்டும் அகற்றி விடாதீர்கள். அடி எடுத்து மட்டும் வைப்பது, கடினம் இல்லை தான் இல்லையா? அடி எடுத்து வைப்பது என்றால், எண்ணத்தை வைப்பது. துணைவன் என்ன கூறுகிறாரோ, எப்படி நடத்துவிக்கிறாரோ, அப்படி நடந்து கொள்வது. தன் விருப்பப்படி நடப்பதில்லை. தன் விருப்படி நடப்பது என்றால், கதறுவது. அப்படியானால், அந்த மாதிரி அடி எடுத்து வைக்கத் தெரியும் தானே! இது கடினமா என்ன? பொறுப்பை ஏற்றுக் கொள்பவர் பொறுப்பை எடுத்துக் கொள்கிறார் என்றால், அவர் மீது பொறுப்பை சுமத்த தெரியாதா? சாகார கருவிôயன பிரம்மாபாபாவை வழி காட்டுபவராக ஆக்கியிருக்கிறோம், முன்னுதாரண மாக வைத்திருக்கிறோம், பிறகு மார்க்கத்தில் செல்வது, ஏன் கடினமாக இருக்கிறது? சகஜமான வழி ஒரு நொடிக்கான வழி. சாகார ரூபத்தில் பிரம்மாபாபா எப்படி செய்தாரோ, என்ன செய்தாரோ, அதைத் தான் செய்ய வேண்டும். தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

ஒவ்வொரு எண்ணத்தையும் சரி பார்த்துக் கொள்ளுங்கள். தந்தையின் எண்ணமாக என்ன இருக்கிறதோ, அது என்னுடைய எண்ணமா? காப்பி செய்வது கூட தெரியாதா.? உலகத்தினரோ, காப்பி அடிப்பதைத் தடுப்பார்கள் ஆனால் இங்கு செய்வதோ அவரை காப்பி செய்வது தான்! அப்படியானால் சுலபமானதா அல்லது கடினமானாதா? எப்பொழுது சகஜ, சரள, தெளிவான பாதை கிடைத்துவிட்டதோ அதைப் பின்பற்றி நடங்கள். வேறு பாதையில் ஏன் செல்கிறீர்கள்? வேறு பாதை என்றால், வீணான எண்ணம் என்ற பாதை. பலஹீனமான எண்ணம் என்ற பாதை. கலியுகத்தின் கவர்ச்சிக்கும் பலவிதமான எண்ணங்களின் பாதை. இந்தப் பாதைகள் மூலமாக குழப்பம் நிறைந்த காட்டில் சென்று சேர்ந்துவிடுவீர்கள். எங்கிருந்து விடுபடுவதற்கு இவ்வளவு முயற்சி செய்கிறீர்களோ, அந்தளவு நாலா புறங்களிலும் முட்களாக இருக்கும் காரணத்தினால் வெளியேற முடிவதில்லை. முட்கள் என்றால் என்ன?

எங்கு, என்னவாகும், இது என்ன! என்ற முட்கள் குத்துவது. சில நேரம் ஏன் என்ற முள் குத்துகிறது சில நேரம் எப்படி என்ற முள் குத்துகிறது, சில நேரம் தன்னுடைய பலஹீனமான சம்ஸ்காரங்களின் முள் குத்துகிறது நாலா புறங்களிலும் முட்களே முட்களாகத் தென்படுகிறது. பிறகு துணைவரே இப்பொழுது வந்து காப்பாற்றுங்கள் என்று கதறுவார்கள். பிறகு துணைவரும், அடி மீது அடி எடுத்து வைப்பதற்குப் பதிலாக வேறு பாதையில் ஏன் சென்றாய் என்று கேட்கிறார்? எப்பொழுது துணைவர் தன்னுடைய துணையைக் கொடுப் பதற்கு தானே முன்னுக்கு வருகிறார் என்றால், பிறகு ஏன் துணைவரை விட்டு விடுகிறீர்கள்? விலகி விடுவது என்றால், ஆதாரம் விடுபடுவது. ஏன் தனியானவர்களாக ஆகிறீர்கள்? எல்லைக்குட்பட்ட துணையின் கவர்ச்சியில் அது ஏதாவது சம்மந்தத்தினுடையதாக இருக்கலாம், அல்லது ஏதாவது சாதனம் தன்பக்கம் கவர்ந்திழுக்கலாம், இந்தக் கவர்ச்சியின் காரணமாக சாதனத்தை மற்றும் அழியும் சம்மந்தத்தை உங்களுடைய துணைவராக ஆக்கிக் கொள்கிறீர்கள். மற்றும் ஆதாரமாக ஆக்கிக் கொள்கிறீர்கள், அப்பொழுது தான் அழியாத துணைவரிடமிருந்து விலகி விடுகிறீர்கள். மேலும் ஆதரவு விடுபட்டு விடுகிறது. அரைக் கல்பம் இந்த எல்லைக்குட்பட்ட ஆதாரங்களை, ஆதரவு என்று புரிந்து, இது ஆதரவா? அல்லது புதை குழியா? என்று அனுபவம் செய்து விட்டீர்கள். அது மாட்டி விட்டதா, விழ வைத்ததா அல்லது இலட்சியத்தை சென்றடைய வைத்ததா? நல்ல முறையில் அனுபவம் செய்திருக்கிறீர்கள் இல்லையா!. ஒரு ஜென்மத்தின் அனுபவம் இல்லை, என்று, 63- ஜென்மத்தின் அனுபவி. இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஜென்மமும் அதிகம் வேண்டுமா? ஒரு தடவை ஏமாற்றம் அடைபவர் இன்னொரு தடவை ஏமாற்றம் அடையமாட்டார். ஒருவேளை அடிக்கடி ஏமாற்றம் அடைந்து கொண்டேயிருக்கிறார் என்றால், அவர் பாக்கியமற்றவர்! இப்பொழுதோ, பாக்கியத்தை உருவாக்கும் பிரம்மாபாபா, அவரே அனைத்து பிரமாணர்களின் பிறந்த ஜாதகத்தில், உயர்ந்த பாக்கியத்தின் நீண்ட ரேகையை போட்டு விட்டார் இல்லையா? பாக்கியத்தை உருவாக்குபவர், உங்களுடைய பாக்கியத்தை உருவாக்கி இருக்கிறார். பாக்கியத்தை உருவாக்குபவர் தந்தையாக இருக்கும் காரணத்தினால், ஒவ்வொரு பிராமணக் குழந்தைக்கும் பாக்கியம் நிறைந்த களஞ்சியம் என்ற ஆஸ்தியைக் கொடுத்து விட்டார். அப்படியானால், பாக்கியத்தின்

களஞ்சியத்தின் அதிபதியின் குழந்தைக்கு என்ன குறை இருக்க முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

என்னுடைய பாக்கியம் என்ன? என்று யோசிப்பதற்கும் அவசியம் இல்லை, ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்குபவரே தந்தையாக ஆகி விட்டார் என்றால், குழந்தைகளின் பாக்கியத்தின் சொத்தில் என்ன குறை இருக்கும். பாக்கியத்தின் பொக்கிஷத்தின் எஜமானன் ஆகி விட்டீர்கள் இல்லையா? அந்த மாதிரியான பாக்கியவான், ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய முடியாது. எனவே சகஜமான பாதையில் அடி மீது அடி எடுத்து வையுங்கள். நீங்களே தன்னை குழப்பத்தில் கொண்டு வருகிறீர்கள், துணைவனின் துணையை விட்டு விடுகிறீர்கள். நான் உயர்ந்த துணைவனின் துணையில் இருக்கிறேன் என்ற ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் வையுங்கள். சரி பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு எப்பொழுதுமே தன் மீது திருப்தியாக இருப்பீர்கள். புரிந்ததா? சகஜமான வழி. சகஜமானதை கடினமாக ஆக்காதீர்கள். எண்ணத்தில் கூட ஒருபொழுதும் கடினத்தை அனுபவம் செய்யாதீர்கள். அந்த மாதிரி திடமான எண்ணம் வைக்கத் தெரியும் தான் இல்லையா? அல்லது அங்கே உங்கள் இடத்திற்குச் சென்ற பிறகு கடினம் என்று கூறுவீர்களா.? பாப்தாதா பார்க்கிறார் பெயர் சகஜயோகி, ஆனால் அனுபவம் ஆவது கடினமாக இருக்கிறது. தன்னை அதிகாரி என்று நம்புகிறார்கள். பிறகு அடிமை ஆகி விடு கிறார்கள். இருப்பதோ பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தை, ஆனால் என்னுடைய பாக்கியம் இருக்கிறதா அல்லது இல்லையா தெரியவில்லை என்று யோசிக்கிறார்கள். ஒருவேளை இது தான் என்னுடைய பாக்கியமோ என்று நினைக்கிறார்கள், எனவே உங்களை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள், மேலும் எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு நேரத்திலும் இறைவனுடைய துணைவன் என்று புரிந்து நடந்து கொண்டே யிருங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் ஒவ்வொரு அடி மீது அடி எடுத்து வைக்கும், தந்தையைப் பின்பற்றி நடக்கும், எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்திலும் துணைவரது துணையை அனுபவம் செய்யும், எப்பொழுதும் ஒருவர் தான் என்னுடைய துணைவர் வேறு யாருமில்லை என்று அன்பை வைத்து நடந்து கொள்ளும், எப்பொழுதும் சகஜயோகி,

சிரேஷ்ட பாக்கியவான் விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு- குமாரிகளுடன்:**

**1. குமாரிகள் என்றால், அதிசயம் செய்பவர்கள்.** நீங்கள் சாதாரண குமாரிகள் இல்லை, ஆன்மீக குமாரிகள். இந்த உலகத்திலிருக்கும் குமாரிகள் என்ன செய்கிறார்கள், மேலும் ஆன்மீக குமாரிகள் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? இரவுக்கும் பகலுக்குமான வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் தேக அபிமானத்தில் இருந்து, மற்றவர்களையும் தேக அபிமானத்தில் விழ வைக்கிறார்கள், மேலும் நீங்கள் எப்பொழுதும் ஆத்ம அபிமானி ஆகி, நீங்களும் பறந்து கொண்டு, மற்றவர்களையும் பறக்க வைக்கிறீர்கள். நீங்கள் அந்த மாதிரியான குமாரிகள் தான் இல்லையா? எப்பொழுது தந்தை கிடைத்து விட்டார் என்றால், அனைத்து சம்மந்தங்களும் ஒரு தந்தையுடன் எப்பொழுதும் கண்டிப்பாக இருக்கும். இதற்கு முன்பு வெறும் சொல்லும் அளவிற்குத் தான் இருந்தது, இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது. பக்தி மார்க்கத்தில் கூட அனைத்து சம்மந்தமும் தந்தையுடன் இருக்கிறது என்று அவசியம் வர்ணித்து இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது நடைமுறையில் அனைத்து உறவுகளின் சுவை தந்தை மூலம் கிடைக்கிறது. அந்த மாதிரி அனுபவம் செய்பவர்கள் தான் நீங்கள் இல்லையா? எப்பொழுது அனைத்து ரசனையும் ஒரு தந்தை மூலமாக கிடைக்கிறது என்றால், வேறு எங்கேயும் எண்ணம் செல்ல முடியாது. அந்த மாதிரி நிச்சய புத்தியுடைய வெற்றி இரத்தினங்கள், எப்பொழுதும் மகிமை செய்யப்படு கிறார்கள். மேலும் பூஜிக்கப் படுகிறார்கள். அப்படியானால், நான் வெற்றியடையும் ஆத்மா, எப்பொழுதும் நினைவின் திலகமிட்ட ஆத்மா என்ற நினைவு இருக்கிறதா? இத்தனை குமாரிகள் என்ன அதிசய காரியம் செய்வீர்கள்? எப்பொழுதும் ஒவ்வொரு செய-ன் மூலமாக தந்தையைப் பிரத்யட்சம் (வெளிப் படுத்தும்) செய்வீர்கள். ஒவ்வொரு காரியத்திலும் தந்தை தென்பட வேண்டும். ஏதாவது பேசுகிறீர்கள் என்றாலும், அந்தப் பேச்சிலும் தந்தை தென்பட வேண்டும். உலகத்தில் கூட யாராவது மிகவும் நன்றாக பேசுபவர்களாக இருக்கிறார் என்றால், இவருக்கு கற்றுக் கொடுத்தது யார் என்று அனைவரும் கேட்பார்கள். அவர் பக்கம் பார்வை செல்லும். அதேபோன்று உங்களுடைய காரியம் மூலமாக தந்தையின் பிரத்யட்சம் ஆக வேண்டும். நீங்கள் அந்த மாதிரியான தாரணை மூர்த்தி. திவ்ய

மூர்த்தி இந்த விசேஷம் உங்களிடம் இருக்கிறது. சொற்பொழிவு நிகழ்த்துபவர்களாக அனைவரும் ஆவார்கள், ஆனால் தன்னுடைய ஒவ்வொரு செய-ன் மூலம் சொற்பொழிவு நிகழ்த்துபவர் கோடியில் சிலராகத் தான் இருப்பார். நீங்கள் அந்த மாதிரி விசேஷத்தைக் காண்பிப்பீர்கள் இல்லையா? தன்னுடைய சரித்திரம் (நடத்தை) மூலமாக தந்தையின் சித்திரத்தை காண்பிக்க வேண்டும். நல்லது.

**2. இது குமாரிகளின் கூட்டம். சேனை தயாராகிக் கொண்டிருக்கிறது.** அவர்களோ லெப்ட் ரைட் என்று செய்வார்கள். நீங்கள் எப்பொழுதும் ரைட் ரைட்டே செய்பவர்கள், இந்த சேனை எவ்வளவு சிரேஷ்டமானது, சாத்தி மூலமாக வெற்றியடைபவர் ஆகி விடுகிறார்கள். அமைதியின் மூலம் தான் சுயராஜ்யத்தை அடைந்து விடுகிறார்கள். எந்தவொரு குழப்பமும் செய்ய வேண்டியிருக்காது. அந்த மாதிரி நீங்கள் சக்தி சேனையின் உறுதியான சக்திகள், சேனையை விட்டு விட்டு செல்பவர்கள் இல்லை. கனவில் கூட யாரும் உங்களை அசைக்க முடியாது. நீங்கள் ஒருபொழுதும் யாருடைய தீய சேர்க்கையிலும் வருபவர்கள் இல்லை. எப்பொழுதும் தந்தையின் தொடர்பில் இருப்பவர்கள், மற்றவர்களின் பிறரின் சேர்க்கையில் வரமுடியாது. அந்த மாதிரி இந்த முழு குரூப்பும் வீரம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? வீரம் நிறைந்தவர்கள் என்ன செயல் செய்வார்கள்? மைதானத்தில் வருவார்கள். நீங்கள் அனைவரும் வீரம் நிறைந்தவர்கள் தான், ஆனால் மைதானத்தில் இன்னும் வரவில்லை, வீரம் நிறைந்தவர் மைதானத்தில் வருகிறார் என்றால், அந்த வீரனின் வீரத் திறமைக்காக, இசை வாத்தியங்கள் வாசிப்பார்கள், இதை நீங்கள் பார்த்திருக்கலாம், நீங்களும் எப்பொழுது மைதானத்தில் வருவீர்களோ, அப்பொழுது குஷியின் மேளதாளம் ஒலிக்கும், குமாரிகள் எப்பொழுதுமே உயர்ந்த எதிர்காலம் உள்ளவர்கள். குமாரிகளுக்கு சேவைக்கான மிக நல்ல வாய்ப்பு இருக்கிறது, மேலும் கிடைக்கவும் செய்யும். ஏனென்றால் சேவை அதிகமாக இருக்கிறது, சேவாதாரிகள் குறைவாக இருக்கிறார்கள். எப்பொழுது சேவாதாரிகள், சேவை செய்வதற்காக வெளிப்படுகிறார்கள் என்றால் எவ்வளவு சேவை நடந்தேறும்! குமாரிகள் என்ன அதிசயம் செய்கிறார்கள் என்று பார்க்கலாம், சாதாரண காரியமோ அனைவரும் செய்கிறார்கள், ஆனால் நீங்கள் விசேஷக் காரியம் செய்து காண்பியுங்கள். குமாரிகள் நீங்கள் வீட்டின் அலங்காரம், உலகத்தில்

குமாரிகளைப் பற்றி என்ன தான் நினைத்தாலும், ஆனால் பரலோகத் தந்தையின் வீட்டில் குமாரிகள் என்றாலே மகான்கள், குமாரிகள் இருக்கிறார்கள் என்றால், செண்டரில் கலகலப்பு இருக்கும். மாத்தாக்களுக்கும் விசேஷ லிப்ட் இருக்கிறது. முதலில் மாதா குரு. தந்தை மாதா குருவை முன்னுக்கு வைத்தார். அதனால் தான் எதிர்காலத்தில் மாத்தாக்களின் பெயர் முன்னுக்கு இருக்கிறது. நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: (1) எப்பொழுதும் தன்னை டபுல் லைட் ஃபரிஸ்தா என்று அனுபவம் செய்கிறீர்களா?** ஃபரிஸ்தா என்றால், அவருடைய உலகமே ஒரு தந்தை தான்! அந்த மாதிரியான ஃபரிஸ்தாக்கள் எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவர்கள். ஃபரிஸ்தா என்றால், தேகம் மற்றும் தேகத்தின் சம்மந்தங்களில் எந்தவொரு கவர்ச்சியும் இல்லை. ஏதேனும் காரணத்திற்காக தேகத்திலும், தேகத்தின் உறவினர்களோடும் காரியத்தில் வருகிறார்கள், ஆனால் பற்றுதல் இல்லை. ஏனென்றால் ஃபரிஸ்தாக்களுக்கு வேறு எந்த ரிஸ்தாவும் (உறவும்) இருப்பதில்லை. ஃபரிஸ்தாக்களின் உறவு ஒரு தந்தையுடன் இருக்கிறது. நீங்கள் அந்த மாதிரியான ஃபரிஸ்தாக்கள் இல்லையா? இந்த நேரம் காரியம் செய்வதற்காக தேகத்தில் வருகிறீர்கள், மேலும் அடுத்த நேரம் தேகத்திலிருந்து விலகி விடுகிறீர்கள். ஃபரிஸ்தாக்கள் ஒரு நொடியில் இங்கேயும், அடுத்த வினாடி வேறு எங்கேயும் இருப்பார்கள். ஏனென்றால், பறப்பவர்கள். காரியம் செய்வதற்காக உடலின் ஆதாரம் எடுப்பார்கள். பிறகு மேலே சென்று விடுவார்கள். நீங்கள் அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை எங்காவது பற்றுதல் இருக்கிறது. பந்தனம் இருக்கிறது என்றால், பந்தனம் உள்ளவர்கள் மேலே பறக்க முடியாது. அவர் கீழே வந்துவிடுவார். ஃபரிஸ்தா என்றால் எப்பொழுதும் பறந்து கொண்டு இருப்பவர். மேலே கீழே போகுபவர் அல்ல! எப்பொழுதும் மேலான நிலையில் இருப்பவர். ஃபரிஸ்தாக்களின் உலகத்தில் இருப்பவர். எனவே ஃபரிஸ்தாவின் நினைவு சொரூபம் ஆனீர்கள் என்றால், அனைத்து ரிஸ்தாக்களும் (உறவுகளும்) அழிந்து விட்டன. அந்த மாதிரி பயிற்சி உள்ளவர்கள் தான் நீங்கள் இல்லையா? காரியம் செய்தீர்கள், மற்றும் பிறகு விலகி விட்டீர்கள். லிஃப்டில் என்ன செய்கிறார்கள்? இந்த நேரம் கீழே, அடுத்த நேரம் மேலே செல்கிறார்கள். கீழே வந்தார்கள், காரியம் செய்தார்கள்,

மேலும் பிறகு சுவீட்சை அழுத்தினார்கள், மேலே சென்று விட்டார்கள். நீங்கள் அந்த மாதிரி பயிற்சி உள்ளவர்கள் தான் இல்லையா? நல்லது.

**2) அனைவரும் ஆன்மீக ரோஜா மலர் தான் இல்லையா?** நீங்கள் மல்லிகையா, அல்லது ரோஜாவா? எப்படி ரோஜா மலர் அனைத்து மலர்களிலும் உயர்ந்தது என்று கூறப்படுகிறது. அதேபோன்று ஆன்மீக ரோஜா என்றால், உயர்ந்த ஆத்மாக்கள். ஆன்மீக ரோஜாக்கள் எப்பொழுதும் ஆன்மீகத் தன்மையில் இருப்பார்கள், எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருப்பார்கள். எப்பொழுதும் ஆன்மீக சேவையில் இருப்பவர்கள். நீங்கள் அந்த மாதிரி ஆன்மீக ரோஜா மலர். இனறைய நாட்களின் நேரத்திற்கு ஏற்றபடி ஆன்மீகத் தன்மை அவசியமாக இருக்கிறது. ஆன்மீகத் தன்மை இல்லாத காரணத்தினால், இந்த அனைத்து சண்டை சச்சரவுகளும் நடக்கின்றன. நீங்கள் ஆன்மீக ரோஜா மலராகி, ஆன்மீகத் தன்மையின் நறுமணம் பரப்புபவர்கள். இது தான் பிராமண வாழ்க்கையின் தொழில். எப்பொழுதும் இதே தொழிலில் முழுமையாக ஈடுபட்டு இருங்கள்.

**டீச்சர்களுடன் சந்திப்பு: டீச்சர்கள் என்றால் தந்தைக்குச் சமமானவர்கள்!** எப்படி தந்தையோ, அப்படி பொறுப்பில் இருக்கும் சேவாதாரிகள். தந்தையும் பொறுப்பில் இருக்கிறார் என்றால், சேவாதாரிகளும் பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள். பொறுப்பிலிருக்கிறேன் என்று புரிந்து கொள்வதால், இயல்பாகவே தந்தைக்குச் சமமாகும் சம்ஸ்காரம் நடைமுறையில் வருகிறது. ஒருவேளை பொறுப்பில் இருக்கிறேன் என்று நினைக்கவில்லை யென்றால், தந்தைக்குச் சமமாக ஆக முடியாது. அப்படி ஒன்று பொறுப்பில் இருக்கிறேன், இன்னொன்று விலகியிருப்பது மற்றும் அன்பானவராக இருப்பது. இது தந்தையின் விசேஷம். அன்பானவராகவும் இருக்கிறார், விலகியும் இருக்கிறார். விலகியிருப்பவராக ஆகி, அன்பானவராக ஆகிறார். எனவே தந்தைக்குச் சமமானவர் என்றால், மிகவும் விலகியிருப்பவர், மேலும் மிகவும் அன்பானவர். மற்றவர்களிடமிருந்து விலகியிருப்பவர், தந்தைக்கு அன்பானவர். இந்த சமநிலை வேண்டும். தந்தையினுடையது இதே இரண்டு விசேஷங்கள் தான் எனவே தந்தைக்குச் சமமான சேவாதாரிகளும் அந்த மாதிரி இருக்கிறார்கள். இதே விசேஷத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே

முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பீர்கள். கடும் உழைப்பு செய்ய வேண்டியிருக்காது. எங்கு பொறுப்பாளராக மற்றும் கருவியாக இருக்கிறாரோ, அங்கு வெற்றி கண்டிப்பாக இருக்கும். அங்கு என்னுடையது என்பது வரமுடியாது. எங்கே என்னுடையது என்பது இருக்கிறதோ, அங்கு வெற்றி இருக்காது. பொறுப்புணர்வு மற்றும் கருவி என்ற உணர்வு வெற்றியின் சாவி. எப்பொழுது எல்லைக்குட்பட்ட உலகத்தின் என்னுடையது என்பதை விட்டு வீட்டீர்களோ, பிறகு வேறு என்னுடையது எங்கிருந்து வந்தது? என்னுடையது என்பதற்குப் பதிலாக பாபா, பாபா, என்று கூறுவதால், எப்பொழுதும் பாதுகாப்பு ஏற்பட்டு விடுகிறது. என்னுடைய சென்டர் இல்லை, ஆனால் பாபாவின் சென்டர். என்னுடைய மாணவர்கள் இல்லை, பாபாவின் மாணவர்கள். என்னுடையது என்பது அழிந்து, உன்னுடையது ஆகி விடுகிறது. உன்னுடையது என்று கூறுவது என்றால், பறப்பது. அந்த மாதிரி பொறுப்பில் இருக்கும் ஆசிரியர் என்றால், பறக்கும் கலைக்கான ஒரு உதாரணம். எப்படி நீங்கள் பறக்கும் கலையின் உதாரணமாக ஆகிறீர்களோ, அதேபோல் மற்றவர்களும் (அதிர்வலைகள்) ஆகிறார்கள். விரும்பாவிட்டாலும் யாருடைய பொறுப்பாளர் ஆகிறாரோ, அவர்களிடம் அந்த வைப்ரேஷன் இயல்பாக வந்துவிடுகிறது. எனவே பொறுப்பிலிருக்கும் ஆசிரியர், சேவாதாரி எப்பொழுதுமே விலகியிருப்பவர், எப்பொழுதுமே அன்பானவர். எப்போதாவது, ஏதாவது பரீட்சை வருகிறது என்றால், அதில் தேர்ச்சி அடைபவர்கள். நிச்சய புத்தியுள்ள, வெற்றியடைபவர்கள்!

**வரதானம்: பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஜீவன் முக்த் நிலையை அனுபவம் செய்யக் கூடிய, கர்மங்களின் பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

பிரம்மாபாபா காரியங்கள் செய்து கொண்டும், செய்யும் காரியத்தின் பந்தனத்தில் மாட்டிக் கொள்ள வில்லை. சம்மந்தத்தை வைத்து நடந்து கொண்ட போதிலும், சம்மந்தங்களின் பந்தனத்தில் கட்டுப்படவில்லை. அவர் பணம், செல்வம் மற்றும் சாதனங்களின் பந்தனத்திலிருந்தும் விடுபட்டு இருந்தார். பொறுப்புக்களை கவனித்துக் கொண்டும், ஜீவன் முக்த் நிலையை அனுபவம் செய்தார். அந்த மாதிரி நீங்களும் தந்தையைப் பின்பற்றி செய்யுங்கள். எந்தவொரு கடந்த காலத்தின்

கணக்கு வழக்கின் பந்தனத்தில் கட்டப்பட்டு விடக்கூடாது. சம்ஸ்காரம், சுபாவம், பிரபாவம் மற்றும் அடக்குதலின் பந்தனத்திலும் வராதீர்கள். அப்பொழுது தான் கர்மபந்தனத்திலிருந்து விடுபட்டவர். ஜீவன் முக்த் என்று கூறுவோம்.

**சுலோகன்: தன்னுடைய ஆன்மீக உள்ளுணர்வு மூலம் குடும்பத்தின் அனைத்து சூழ்நிலைகளையும் மாற்றம் செய்துவிடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 24.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஈஸ்வரிய அன்பின் மகத்துவம்!

இன்று அன்பின் கடல் தன்னுடைய அன்பான சாதகப் பறவை குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இக்குழந்தைகள் அநேக ஜென்மங்களாக அழியாத ஈஸ்வரிய அன்பின் தாகம் உள்ளவர்களாக இருந்தார்கள். பல ஜென்மங்களின் தாகத்திலிருந்த சாதகப் பறவை ஆத்மாக்களுக்கு இப்பொழுது உண்மையான அன்பு, அழியாத அன்பின் அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறது. பக்த ஆத்மாவாக இருக்கும் காரணத்தினால் நீங்கள் அனைத்து குழந்தைகளும் அன்பிற்காக யாசிப்பவர்களாக ஆகி விட்டீர்கள். இப்பொழுது தந்தை யாசிப்பவரிலிருந்து அன்பின் கடலின் ஆஸ்திக்கு உரியவராக ஆக்கிக் கொண்டிருக்கிறார். அனுபவத்தின் ஆதாரத்தில் அனைவரது இதயத்திலிருந்தும் ஈஸ்வரிய அன்பு எங்களுடைய பிறப்புரிமை என்ற ஓசை தான் இயல்பாகவே வெளிப்படுகிறது. அந்த மாதிரி யாசிப்பவரிலிருந்து அதிகாரி ஆகி விட்டீர்கள். உலகத்தில் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் வாழ்க்கையில் அவசியமான ஒன்று அன்பு தான். வாழ்க்கையில் அன்பு இல்லை யென்றால், அந்த வாழ்க்கை ஒரு சாரமற்ற வாழ்க்கையாக அனுபவம் ஆகும். அன்பு அந்தளவு உயர்ந்தது, அதை இன்றைய சாதரண மனிதர்களும் கூட அன்பு தான் தெய்வம் என்று நம்புகிறார்கள். அன்பு தான் பரமாத்மா மற்றும் பரமாத்மா தான் அன்பு என்று நினைக்கிறார்கள். அந்த மாதிரி பகவானை எந்தளவு உயர்ந்தவர் என்று நம்புகிறார் களோ, அந்தளவே அன்பும் உயர்ந்தது என்று நினைக்கிறார்கள். எனவே தான் பகவானை அன்பு என்று கூறுகிறார்கள். இது ஏன் கூறப்படுகிறது, அனுபவம் இல்லை, இருந்தாலும், பரமாத்மா தந்தை எப்பொழுது இந்த பூமியில் வருகிறார் என்றால், அனைத்து குழந்தைகளுக்கும் நடைமுறையில் வாழ்க்கையில் சாகார சொரூபத்தினால் அன்பு கொடுத்தார், கொடுத்துக் கொண்டிருக்கிறார். எனவே தான் அனுபவம் இல்லாவிட்டாலும் கூட, அன்பு தான் பரமாத்மா என்று நினைக்கிறார்கள். எனவே பரமாத்மா தந்தையின் முதல்

கொடுப்பினை அன்பு. அன்பு உங்கள் அனைவருக்கும் பிராமண ஜென்மம் கொடுத்தது. அன்பின் வளர்ப்பு உங்கள் அனைவரையும் ஈஸ்வரிய சேவைக்குத் தகுதியானவர் ஆக்கியது. அன்பு, உங்களை சகஜ யோகி, கர்ம யோகி, இயல்பான யோகியாக ஆக்கியது. அன்பு எல்லைக்குட்பட்ட தியாகத்தை பாக்கியம் என்று அனுபவம் செய்வித்தது. தியாகம் இல்லை, ஆனால் பாக்கியம் என்ற இந்த அனுபவத்தை உண்மையான அன்பு செய்வித்தது தான் இல்லையா? இதே அன்பின் ஆதாரத்தில் எந்தவிதமான புயலையும் ஈஸ்வரிய பரிசு என்று அனுபவம் செய்கிறீர்கள். அன்பின் ஆதாரத்தில் கடினத்தை மிக சுலபம் என்று அனுபவம் செய்கிறீர்கள். இதே ஈஸ்வரிய அன்பு அநேக சம்பந்தங்களில் ஈடுபட்டிருக்கும் இதயத்தை, அநேக துண்டுகளாக ஆக்கப்பட்ட இதயத்தை ஒருவருரோடு இணைத்து விட்டது. இப்பொழுது ஒரு இதயம் (தில்) ஒரு திலாராம். இதயம் துண்டு படவில்லை. அன்பு தந்தைக்குச் சமமானவராக ஆக்கி விட்டது. அன்பு தான் எப்பொழுதும் துணையை அனுபவம் செய்வித்து, எப்பொழுதும் சக்திசாலியானவராக ஆக்கி விட்டது. அன்பு யுகத்தை பரிவர்த்தனை (மாற்றம்) செய்துவிட்டது. கலியுகவாசியிலிருந்து சங்கமயுகவாசியாக ஆக்கி விட்டது. அன்பு தான் துக்கம் வேதனையின் உலகத்திலிருந்து சுகத்தின் குஷியின் உலகத்தில் பரிவர்த்தனை செய்துவிட்டது. ஈஸ்வரிய அன்பிற்கு இந்தளவு மகத்துவம் இருக்கிறது. யார் மகத்துவத்தை தெரிந்திருக்கிறாரோ, அவர் தான் மகான் ஆகி விடுகிறார். நீங்கள் அந்த மாதிரியான மகான் ஆக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? அனைத்தையும் விட சுலபமான முயற்சியும் இது தான். அன்பில் எப்பொழுதும் மூழ்கியிருங்கள். அன்பில் ஐக்கியமாகியிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரு பொழுதும் கனவில் கூட மாயாவின் பிரபாவம் ஏற்பட முடியாது. ஏனென்றால், அன்பில் ஐக்கியமாகியிருக்கும் நிலை மாயாவால் தாக்க முடியாத நிலையாகும். அன்பில் இருப்பது சுலபம் தான் இல்லையா. அன்பு அனைவரையும் மதுபன் நிவாசி ஆக்கி விட்டது. அன்பின் காரணமாகத் தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள் இல்லையா. பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளுக்கும் எப்பொழுதும் அன்பானவர் ஆகுக என்ற வரதானம் கொடுக்கிறார். அன்பு அந்த மாதிரி மந்திர சக்தி நிறைந்தது. அதனால் யாரிடமிருந்து என்ன கேட்டாலும், அதை பிராப்தி செய்ய முடியும். உண்மையான அன்பு மூலம், உள்ளபூர்வமான அன்பு மூலம், சுயநலமான அன்பினால் இல்லை, உண்மையான அன்பினால் அடைய முடியும். தேவையான நேரத்தில்

அன்பானவராக ஆகுபவர் இல்லை. எப்பொழுது ஏதாவது தேவையான நேரம் வருகிறதென்றால், அந்த நேரம் மட்டும் இனிமையான பாபா, அன்பான பாபா என்று கூறி நடந்து கொள்பவர் இல்லை. எப்பொழுதுமே இந்த அன்பில் மூழ்கியிருக்க வேண்டும். அம்மாதிரியானவர் களுக்கு பாப்தாதா எப்பொழுதும் பாதுகாப்பு குடைநிழலாக இருக்கிறார். தேவையான நேரத்தில் நினைவு செய்பவர்கள் மற்றும் ஏதோவொரு காரணத்திற்காக, சுயநலமாக நினைவு செய்பவர்களுக்கு, அவர்களுடைய சக்திகேற்றபடி, அன்பிற்கு கேற்றபடி, பிரதிபலனாக சகயோகம் கிடைக்கிறது ஆனால் சக்திகேற்றபடி தானே அன்றி, சம்பன்ன, சம்பூர்ண வெற்றி கிடைப்பதில்லை. எனவே எப்பொழுதும் அன்பின் மூலமாக அனைத்து பிராப்தி சொரூபத்தை அனுபவம் செய்வதற்காக உண்மையான உள்ளத்தின் அன்புடையவராக ஆகுங்கள். புரிந்ததா?

பாப்தாதா மதுபன் வீட்டின் அலங்காரமாக இருக்கும் குழந்தைகளுக்கு விசேஷமாக அன்பிற்காக வாழ்த்துக்கள் கூறுகிறார். ஒவ்வொரு குழந்தையும் தந்தையின் வீட்டின் விசேஷ அலங்காரம். இந்த எல்லைக்கு அப்பாற்பட்ட மதுபன் வீட்டின் கலகலப்பே குழந்தைகள் தான். அந்த மாதிரி தன்னை நினைக்கிறீர்கள் தான் இல்லையா? உலகத்தினரோ கிறிஸ்துமஸை கொண்டாடுவதற்காக எங்கெங்கோ செல்வார்கள். மேலும் இந்த விசேஷ வெளிநாட்டினர் மற்றும் பாரதத்தின் குழந்தைகள் இனிமையான வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். முக்கியமான பெரிய பண்டிகை நாளை, பெரியதிலும் பெரிய தந்தையோடு, பெரிய மனதோடு கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்து விட்டார்கள்.

இந்த முக்கியமான பண்டிகை நாள் விசேஷமாக தந்தை மற்றும் பிரம்மாபாபா அதாவது பாப்தாதா இருவர்களின் நினைவுச் சின்ன அடையாளமான நாள். ஒன்று கொடுப்பவர் ரூபத்தினால் சிவபாபாவின் அடையாளம் மற்றும் வயதான சொரூபம் பிரம்மாபாபாவின் அடையாளம். ஒருபொழுதும் இளமையான ரூபத்தில் காண்பிக்க மாட்டார்கள். கிறிஸ்துமஸ் தந்தையை வயதானவராகத் தான் காண்பிப்பார்கள். வெள்ளை மற்றும் சிகப்பு இந்த வர்ணங்களையும் அவசியம் காண்பிப்பார்கள். அப்படி இது தந்தை மற்றும் தாதா இருவரின் அடையாளம். பாப்தாதா சின்ன குழந்தைகளுக்கு அவர்களுடைய விருப்பமாக என்ன இருக்கிறதோ, அதை நிறைவேற்றி விடுகிறார். சின்ன

சின்னக் குழந்தைகள் மிகவும் அன்புடன் இந்த விசேஷ நாளன்று தன்னுடைய மன விருப்பமான பொருட்களை கிறிஸ்துமஸ் தந்தையிடம் கேட்பார்கள் மற்றும் எண்ணத்தை வைப்பார்கள். மேலும் அவர் என்னுடைய விருப்பத்தை அவசியம் நிறைவேற்றுவார் என்ற நிச்சயம் வைப்பார்கள். இந்த நினைவுச்சின்னம் குழந்தைகளாகிய உங்களுடையது தான். பழைய சூத்ர வாழ்க்கையில் எவ்வளவு தான் வயதானவராக இருந்தாலும், ஆனால் பிராமண வாழ்க்கையில் சின்னக் குழந்தைகள் தான். அந்த மாதிரி அனைத்து சின்னக் குழந்தைகளும் என்னென்ன சிரேஷ்ட மனவிருப்பங்கள் வைக்கிறீர்களோ, அது நிறைவேறுகிறது தான் இல்லையா? எனவே இந்த நினைவின் அடையாளம் கடைசி தர்மத்தை சேர்ந்தவர்களிலும் நடைமுறையில் வந்துக் கொண்டிருக்கிறது. உங்கள் அனைவருக்கும் இந்த சங்கமயுகத்தில் முக்கியமான பண்டிகை நாளின் மிகுந்த பரிசுகள் பாப்தாதாவிடமிருந்து கிடைத்து விட்டது தான் இல்லையா? விசேஷமாக இந்த பண்டிகை நாள் பரிசுகள் கொடுப்பதற்கும் பெறுவதற்குமான நாளாகும். பாப்தாதா மிகப் பெரிய பரிசாக சுய இராஜ்யம் மற்றும் சொர்க்கத்தின் இராஜ்யத்தைக் கொடுக்கிறார். அந்த இராஜ்யத்தில் இல்லை என்ற எந்த பொருளும் இருக்காது. நீங்கள் அனைத்து பிராப்தி சொரூபமானவராக ஆகி விடுகிறீர்கள். அந்த மாதிரி நீங்கள் பெரிய நாளை கொண்டாட கூடிய, பெரிய மனம் உடையவர்கள். உலகிற்கு கொடுப்பவர்களோ, பெரிய மனமுடையவர்களாக இருக்கிறார்கள் அல்லவா? எனவே அனைவருக்கும் சங்கமயுகத்தின் பெரிய பண்டிகை நாளின் வாழ்த்துக்களை, பெரிய மனதோடு. பெரியதிலும் பெரிய பாப்தாதா உங்களுக்கு கொடுக்கிறார். அவர்களோ 12 மணிக்கு பிறகு கொண்டாடுவார்கள். நீங்கள் அனைவரையும் விட முன்னுக்கு இருக்கிறீர்கள் இல்லையா? எனவே முதலில் நீங்கள் கொண்டாடுகிறீர்கள், பிறகு உலகத்தினர் கொண்டாடுவார்கள். விசேஷ ரூபத்தில் இரட்டை வெளிநாட்டினர் இன்று மிகுந்த ஊக்கம், உற்சாகத்துடன் தந்தைக்காக நினைவு மற்றும் பரிசுகளை ஸ்தூலமாக மற்றும் சூட்சம ரூபத்தில் கொடுக்கிறார்கள். பாப்தாதாவும் அனைத்து இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுக்கு அன்பின் பரிசுக்கு பிரதிபலனாக பல மடங்கு எப்பொழுதுமே அன்பான துணைவனாக இருப்போம், எப்பொழுதும் அன்புக் கடலில் முழ்கியிருந்து, அன்பில் ஐக்கியமான நிலையை அனுபவம் செய்வீர்கள் என்று அந்த வரதானம் நிரம்பிய

நினைவு மற்றும் அழியாத அன்பின் பலனாக பரிசுக் கொடுக்கிறார். எப்பொழுதும் பாடிக் கொண்டும் குஷியில் ஆடிக் கொண்டும் இருங்கள். எப்பொழுதும் வாய் இனிமையாகவே இருக்கும். அந்த மாதிரியே பாரதத்தின் அன்பான குழந்தைகளுக்கும் விசேஷமாக சகஜயோகி, இயல்பான யோகியின் வரதானத்தின் அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார்.

அனைத்து குழந்தைகளுக்கு வள்ளல் மற்றும் உருவாக்குபவர் பாப்தாதா அழியாத அன்பு நிரம்பிய எப்பொழுதும் சக்தி சொரூபத்தினால் சகஜமான அனுபவம் செய்வதின் அன்பு நினைவுகள் கொடுக்கிறார். அனைவருக்கும் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்டிகளுடன் சந்திப்பு: 1) எப்பொழுதும் தன்னை இந்த பழைய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து விடுபட்ட மற்றும் தந்தையின் அன்பிற்குரியவர் என்று அனுபவம் செய்கிறீர்களா?** எந்தளவு விலகியவராக இருப்பீர்களோ, அந்தளவு இயல்பாகவே அன்பிற்குரியவராக இருப்பீர்கள். விலகியிருக்க வில்லையென்றால், அன்பிற்குரியவராகவும் இல்லை, அந்த மாதிரி நீங்கள் விலகியிருந்து அன்பிற்குரியவராக இருக்கிறீர்களா அல்லது எங்காவது பற்றுதல் இருக்கிறதா? எப்பொழுது யார் மீதும் பற்றுதல் இல்லையென்றால், புத்தி இயல்பாகவே தந்தையின் பக்கம் செல்லும். வேறு இடங்களுக்கு செல்ல முடியாது. சகஜ மற்றும் நிரந்தர யோகியின் நிலை அனுபவமாகும். இப்பொழுது சகஜயோகியாக ஆகவில்லையென்றால், பின்பு எப்பொழுது ஆவீர்கள்? இந்தளவு சகஜ பிராப்தி இருக்கிறது, சத்யுகத்தில் கூட இப்பொழுதைய பிராப்தியின் பலன் தான் இருக்கும், எனவே இபொழுதைய சகஜயோகி மேலும் நிரந்தர இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி சகஜயோகி குழந்தைகள், எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக அருகில் இருப்பவர்கள். தன்னை தந்தையின் அருகில் உடன் இருப்பவராக அனுபவம் செய்கிறீர்களா? யார் உடன் இருக்கிறாரோ, அவருக்கு தந்தையின் ஆதரவு இருக்கிறது. உடன் இருக்கவில்லையென்றால் ஆதரவும் கிடைப்பதில்லை. எப்பொழுது தந்தையின் ஆதரவு கிடைத்து விட்டது என்றால், எந்தவொரு தடையும் வரமுடியாது. எங்கு சர்வசக்திவான் தந்தையின் ஆதரவு இருக்கிறதென்றால், மாயா அதுவாகவே விலகிச் சென்றுவிடும்.

சக்தியுள்ளவர் எதிரில் பலமற்றவரால் என்ன செய்ய முடியும்? விலகிச் சென்று விடுவார் அல்லவா. அதே போல் மாயாவும் எதிர்நோக்காமல் விலகிச் சென்றுவிடும். அந்த மாதிரி நீங்கள் அனைவரும் மாயாவை வென்றவர்களா? விதவிதமான முறையில் புதுப்புது ரூபத்தில் மாயா வருகிறது, ஆனால் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் மாயாவிடம் பயப்படுவதில்லை. அவர் மாயாவின் அனைத்து ரூபங்களையும் தெரிந்து கொள்வார், மேலும் தெரிந்த பிறகு விலகி விடுவார். இப்பொழுது மாயாவை வென்றவர் ஆகி விட்டீர்கள் என்றால், ஒருபொழுதும் யாரும் அசைக்க முடியாது. யார் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் நீங்கள் அசையாதீர்கள். அமிர்தவேளையிலிருந்து இரவு வரை தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த ஆர்வமும் இருக்க வேண்டாம். தந்தை கிடைத்தார், மேலும் நீங்கள் சேவாதாரி ஆனீர்கள். ஏனென்றால் என்ன கிடைத்திருக்கிறதோ, அதை எந்தளவு மற்றவர்களுக்கு வழங்குவீர்களோ, அந்தளவு அதிகரிக்கும். ஒன்றை கொடுங்கள் மற்றும் பல மடங்கைப் பெறுங்கள். நான் அனைத்து களஞ்சியங்களின் அதிபதி, களஞ்சியங்கள் நிரம்பியிருக்கின்றன என்ற இதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். யாரை முழு உலகமே தேடிக் கொண்டிருக்கிறதோ, அவருடைய குழந்தையாக நீங்கள் ஆகியிருக்கிறீர்கள். துக்கமான உலகத்திலிருந்து விடுபட்டு, சுகமான உலகத்திற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். எனவே எப்பொழுதும் சுகக் கடலில் நீந்திக் கொண்டே அனைவரையும் சுகத்தின் களஞ்சியங்களினால் நிரப்புங்கள். நல்லது.

**2) பிராமண வாழ்க்கையில் பண்பு என்ற கலாச்சாரத்தை கடைப்பிடியுங்கள்!** பிராமண குடும்பத்தின் முதல் நம்பர் கலாச்சாரம் பண்பு. எனவே ஒவ்வொருவரின் முகம் நடத்தையில் இந்த பிராமண கலாச்சாரம் வெளிப்பட வேண்டும். ஒவ்வொரு பிராமணனும் புன்முறுவல் செய்து கொண்டே ஒவ்வொருவரின் தொடர்பில் வரவேண்டும். யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் நீங்கள் உங்களுடைய இந்த கலாச்சாரத்தை ஒருபொழுதும் விடாதீர்கள். இப்பொழுது உங்களுடைய வாழ்க்கையில் புதிய பண்பின் சம்ஸ்காரத்தைக் காண்பியுங்கள். குறைவாகப் பேசுங்கள். மெதுவாகப் பேசுங்கள், இனிமையாகப் பேசுங்கள். ஒருவேளை விரும்பாவிட்டாலும் எப்பொழுதாவது கோபம் அல்லது சிடுசிடுப்பு வருகிறதென்றால், உள்ளப்பூர்வமாக இனிமையான பாபா என்று கூறுங்கள். பிறகு அதிகப்படியான உதவி கிடைத்து விடும்.

மனதிலிருந்து நல்ல பாவனை மற்றும் அன்பு நிறைந்த பாவனையை வெளிப்படுத்தினீர்கள் என்றால், மிகப் பெரிய எதிரியான கோபத்தை வெற்றியடைந்து விடுவீர்கள். சில குழந்தைகள் இன்றைய நாட்களில் ஒரு விசேஷ சொற்களை உபயோகிக்கிறார்கள். என்னால் அசத்தியத்தை பார்க்க முடியாது. அசத்தியத்தை கேட்க முடியாது எனவே அசத்தியத்தைப் பார்த்து பொய்யை கேட்டு மனதில் ஆவேசம் வருகிறது ஆனால் ஒருவேளை அவர் அசத்தியமாக இருக்கிறார், மேலும் உங்களுக்கு அசத்தியத்தைப் பார்த்து ஆவேசம் வருகிறது என்றால், அந்த ஆவேசமும் அசத்தியம் தான் இல்லையா? அசத்தியத்தை அழிப்பதற்காக தனக்குள் சத்தியத்தின் சக்தியை தாரணை செய்யுங்கள். சத்தியத்தின் அடையாளம் பண்பு. ஒருவேளை நீங்கள் உண்மையாக இருக்கிறீர்கள், சத்தியத்தின் சக்தி உங்களிடம் இருக்கிறதென்றால் பண்பை ஒருபொழுதும் விடாதீர்கள். சத்தியத்தை நிரூபியுங்கள், ஆனால் பண்பு நிறைந்து நிரூபியுங்கள். பண்பை விட்டு விட்டு பண்பற்ற நிலையில் வந்து, சத்தியத்தை நிரூபிக்க விரும்பினீர்கள் என்றால், அந்த சத்தியம் நிரூபணம் ஆகாது, பண்பற்ற நிலையின் அடையாளம் பிடிவாதம். மேலும் பண்பின் அடையாளம் பணிவு. சத்தியத்தை நிரூப்பிப்பவர் எப்பொழுதும் அவர் பணிவானவர் ஆகி பண்பு நிறைந்து விவகாரம் செய்வார். ஆவேசத்தில் வந்து யாராவது சத்தியத்தை நிரூப்பிக்கிறார் என்றால், அதில் அவசியம் ஏதாவது அசத்தியம் நிரம்பியிருக்கிறது. நான் முற்றிலும் உண்மை பேசுகிறேன். 100% சத்தியம் பேசுகிறேன் என்பது அநேக குழந்தைகளின் மொழி ஆகி விட்டது ஆனால் சத்தியத்தை நிரூபிப்பதற்கு அவசியம் இல்லை. சத்தியம் அந்த மாதிரியான சூரியன், அது மறைந்து இருக்க முடியாது. எவ்வளவு தான் சுவர்களை யாராவது எதிரில் எழுப்பினாலும், சத்தியத்தின் பிரகாசம் ஒருபொழுதும் மறைந்திருக்க முடியாது. பண்புகள் நிறைந்த வார்த்தை, பண்புகள் நிறைந்த நடத்தை இதில் தான் வெற்றி இருக்கிறது. எப்பொழுதெல்லாம் ஏதாவது அசத்திய விசயத்தை பார்க்கிறீர்கள், கேட்கிறீர்கள் என்றால் அசத்திய வாயுமண்டலத்தை பரப்பாதீர்கள். சிலர் இது பாவக் காரியம் தான் இல்லையா, என்னால் பாவக் காரியத்தைப் பார்க்க முடியாது என்று கூறுகிறார்கள், ஆனால் வாயுமண்டலத்தில் அசத்தியத்தின் விஷயங்களை பரப்புவதும் பாவம் தான். உலகிய குடும்பத்தில் கூட ஒருவேளை ஏதாவது அந்த மாதிரியான விஷயத்தை பார்க்கிறார்கள் அல்லது கேட்கிறார்கள் என்றால், அதைப் பரப்ப மாட்டார்கள். காதால்

கேட்டார்கள் மற்றும் இதயத்தில் மறைத்து வைத்து விட்டார்கள். ஒருவேளை ஏதாவது வீணான விஷயங்களைப் பரப்புகிறீர்கள் என்றாலும், அதுவும் பாவத்தின் அம்சமாகும். அந்த மாதிரி சின்ன சின்ன பாவங்கள் பறக்கும் கலையின் அனுபவத்தை முடித்து விடுகிறது. எனவே இந்த கர்மங்களின் ஆழமான விளைவுகளைப் புரிந்து கொண்டு, பண்பு நிறைந்த விவகாரம் செய்யுங்கள். பிராமண குழந்தைகள் நீங்கள் மிக மிக இராயலானவர்கள். உங்களுடைய முகம் மற்றும் நடத்தை இரண்டுமே சத்தியத்தின் பண்பை அனுபவம் செய்விக்க வேண்டும். பொதுவாகவே இராயல் ஆத்மாக்களை பண்பின் தேவி என்று கூறுவார்கள். அவர்கள் பார்ப்பது, பேசுவது, நடப்பது, உணவருந்துவது, அமர்வது, எழுவது அந்த மாதிரி ஒவ்வொரு காரியத்திலும் பண்பின் சத்திய நிலை இயல்பாகவே தென்படும். நானோ சத்தியத்தை நிரூபித்துக் கொண்டிருக்கிறேன், மேலும் பண்பே இல்லை என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. இது சரியானது அல்ல. சில குழந்தைகள் எனக்கு பொதுவாக கோபம் வருவதில்லை, ஆனால் யாராவது பொய் சொல்கிறார்கள் என்றால், கோபம் வந்து விடுகிறது என்று கூறுகிறார்கள். அவர் பொய் சொன்னார், நீங்கள் கோபத்துடன் பேசினீர்கள் என்றால், உங்கள் இருவரில் யார் செய்வது சரி? சிலர் சாதுர்யமாக நான் கோபப்படுவதில்லை, நான் பேசுவதே சப்தமாக இருக்கிறது ஆனால் எப்பொழுது அறிவியலின் சாதனங்கள் மூலம் சப்தத்தை குறைக்க முடியும் என்றால், அமைதியின் சக்தி மூலம் உங்களுடைய பேச்சின் சப்தத்தை கூட்டவோ, குறைக்கவோ முடியாதா என்ன? எப்படி கோபம் அஞ்ஞானத்தின் சக்தியோ, அதே போன்று ஞானத்தின் சக்தி சாந்தி மற்றும் சகித்துக் கொள்ளும் சக்தி. அஞ்ஞானத்தின் சக்தியான கோபத்தை மிக நல்ல முறையில் சம்ஸ்காரமாக ஆக்கி விட்டீர்கள். மேலும் உபயோகித்துக் கொண்டு இருக்கிறீர்கள், பிறகு மன்னிப்பும் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். அந்த மாதிரி இப்பொழுது ஒவ்வொரு குணத்தை ஒவ்வொரு ஞானத்தின் விஷயத்தை சம்ஸ்கார ரூபத்தில் கொண்டு வாருங்கள். பிறகு பண்பு வந்து கொண்டேயிருக்கும். சிலர் அனேகமாக கோபம் ஒரு விகாரமில்லை, அது ஆயுதம் என்று நினைக்கிறார்கள் ஆனால் கோபம் ஞான சொரூப ஆத்மாவிற்காக மிகப் பெரிய எதிரி, ஏனென்றால், கோபம் அநேக ஆத்மாக்களின் சம்மந்தம், தொடர்பில் வருவதினால் பிரசித்தி ஆகி விடுகிறது. மேலும் கோபத்தைப் பார்த்து. தந்தையின் பெயருக்கு மிகுந்த இழுக்கு ஏற்படுகிறது. சொல்பவர்கள் ஞான ஆத்மாக்களைப் பார்த்து

விட்டோம் என்று தான் கூறுவார்கள். எனவே இதன் அம்சம் மாத்திரத்தையும் அழித்து விடுங்கள். பண்புகள் நிறைந்த விவகாரம் செய்யுங்கள்.

**வரதானம்: நேரடியாக பரமாத்மா மின்சார விளக்கின் இணைப்பு மூலமாக இருளை விரட்டக்கூடிய கலங்கரை விளக்கு ஆகுக!**

குழந்தைகளாகிய உங்களிடம் நேரடியாக பரமாத்ம மின்சார விளக்கின் இணைப்பு இருக்கிறது. சுயமரியாதையின் நினைவு என்ற பொத்தானை நேரடி இணைப்போடு இயக்கி விட்டீர்கள் என்றால், மின்சாரம் வந்து விடும். மேலும் எவ்வளவு தான் சூரியனின் வெளிச்சத்தை மறைக்கக் கூடிய கருமேகமாக இருந்தாலும். அதுவும் ஓடிவிடும். இதன் மூலம் நீங்களோ, வெளிச்சத்தில் இருப்பீர்கள், ஆனால் மற்றவர்களுக்காகவும் கலங்கரை விளக்கு ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: சுய முயற்சியில் மிக வேகமாகச் செல்பவராக ஆனீர்கள் என்றால், உங்களுடைய வைப்ரேஷன் (அதிர்வலைகள்) மூலம் மற்றவர்களின் மாயா சுலபமாக ஓடிவிடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியத்தின் சக்தி!

சர்வ சக்திவான் தந்தை இன்று விசேஷமாக இரண்டு சக்திகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்று இராஜ்ய சக்தி அதாவது அரசியல் சக்தி இன்னொன்று ஈஸ்வரிய சக்தி, இந்த இரண்டு சக்திகளுக்கும் இப்பொழுது சங்கமயுகத்தில் விசேஷ பங்கு நடந்து கொண்டிருக்கிறது. அரசியல் சக்தி குழப்பத்தில் இருக்கிறது. ஈஸ்வரிய சக்தி எப்பொழுதும் நிலையானதாக அழியாததாக இருக்கிறது. ஈஸ்வரிய சக்தியை சத்தியத்தின் சக்தி என்று கூறலாம், ஏனென்றால், கொடுப்பவர் சத்திய தந்தை, சத்திய ஆசிரியர், சத்திய குரு. எனவே சத்தியத்தின் சக்தி எப்பொழுதும் உயர்வானது. சத்தியத்தின் மூலமாக சத்யுகம், சத்திய கண்டத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். சத்தியம் என்றால் அழியாதது என்ற பொருளும் இருக்கிறது. எனவே சத்தியத்தின் சக்தி மூலமாக அழியாத ஆஸ்தி, அழியாத வாழ்க்கையை பிராப்தி செய்விக்கும் படிப்பு, அழியாத வரதானத்தை பிராப்தி செய்திருக்கிறீர்கள். இந்த பிராப்தியை யாரும் அழிக்க முடியாது. சத்தியத்தின் சக்தியின் காரணமாக சத்தியத்தின் சக்தியுள்ள உங்களுக்கு, பக்தி மார்க்கத்தின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை முழு உலகமும் அழியாத மகிமை மற்றும் பூஜை செய்தே வருகிறது அதாவது மகிமையும், பூஜையும் அழியாததாகி விடுகிறது. அழியாதது என்றால் சத்தியமானது, எனவே முதன் முதலில் என்ன தெரிந்து கொண்டீர்கள்? தன்னைத் தானே அழியாத ஆத்மா என்று தெரிந்து கொண்டீர்கள். அழியாத தந்தையின் சத்தியமான அறிமுகத்தைத் தெரிந்து கொண்டீர்கள். இந்த சத்திய அறிமுகத்தினால், சத்திய ஞானத்தினால் சத்தியத்தின் சக்தி இயல்பாகவே சத்தியம் அதாவது அழியாதது ஆகி விடுகிறது. சத்தியத்தின் சக்தி மூலமாக அசத்தியம் என்ற இருள், அஞ்ஞானம் என்ற இருள் இயல்பாகவே அகன்று விடுகிறது. அஞ்ஞானம் எப்பொழுதும் அசத்தியமாக இருக்கும். ஞானம் சத்தியமானது, எனவே பக்தர்களும் தந்தையின் மகிமையாக சத்தியம் சிவம் சுந்தரம் என்று

கூறியிருக்கிறார்கள். சத்தியத்தின் சக்தி சுலபமாகவே இயற்கையை வென்றவர், மாயாவை வென்றவர் ஆக்கி விடும். நான் சத்தியமான தந்தையின் குழந்தை என்றால், எனக்குள் சத்தியத்தின் சக்தி எந்தளவு தாரணை ஆகியிருக்கிறது என்று உங்களை நீங்களே கேளுங்கள்.

சத்தியத்தின் சக்தி இருக்கிறது என்பதின் அடையாளம், அவர் எப்பொழுதும் பயமற்றவராக இருப்பார். முரளியில் கேட்டிருக்கிறீர்கள், உண்மை இருக்கிறது என்றால் நடனமாடுவார்கள், அதாவது சத்தியத்தின் சக்தி யுள்ளவர்கள் எப்பொழுதும் கவலையில்லாமல் இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் நடனமாடிக் கொண்டிருப்பார். எங்கு பயமிருக்குமோ, கவலையிருக்குமோ அங்கு குஷியில் நடனமாட முடியாது. தன்னுடைய பலஹீனங்களின் கவலையும் இருக்கும். தன்னுடைய சம்ஸ்காரம் மற்றும் எண்ணம் பலஹீனமாக இருக்கிறது என்றால், சத்ய மார்க்கமாக இருக்கும் காரணத்தினால் மனதில் தன்னுடைய பலஹீனத்தின் சிந்தனை அவசியம் இருக்கும். பலஹீனம் மனநிலையை மேலே கீழே அவசியம் கொண்டு வரும், எவ்வளவு தான் தன்னை மறைத்தாலும், அற்பகாலத்தின் நேரத்திற்கு ஏற்றபடி சூழ்நிலைக்கேற்றபடி வெளிமுகமாக போலியான புன்சிரிப்பை காண்பித்தாலும், ஆனால் சத்தியத்தின் சக்தி தன்னை அவசியம் உணர வைக்கும். தந்தையிடமிருந்து மற்றும் தன்னிடமிருந்து மறைக்க முடியாது. மற்றவர்களிடமிருந்து மறைக்க முடியும். அலட்சியத்தின் காரணமாக சில நேரம் உணர்ந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாமல் தன்னைத் தானே நடத்திக் கொள்வார்கள். இருந்தாலும் சத்தியத்தின் சக்தி மனதில் குழப்பத்தின் ரூபத்தில், வீணான எண்ணங்கள் ரூபத்தில், சோர்வின் ரூபத்தில், அவசியம் வரும், ஏனென்றால் சத்தியத்தின் எதிரில் அசத்தியம் நிலைத்திருக்க முடியாது. எப்படி பக்தி மார்க்கத்தில் - கடலின் நடுவே பாம்பின் மேல் நடனமாடிக் கொண்டிருக்கிறார் (ஸ்ரீ கிருஷ்ணர்) என்ற படத்தை காண்பித்திருக்கிறார்கள், அது பாம்பு தான், ஆனால் சத்தியத்தின் சக்தி மூலம் பாம்பும் நடனமாடுவதற்கான மேடை ஆகி விடுகிறது. எப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையாக இருந்தாலும், மாயாவின் கோரமான ரூபமாக இருந்தாலும், உறவு மற்றும் தொடர்பில் இருப்பவர்கள் தொந்தரவு செய்பவர்களாக இருந்தாலும், வாயுமண்டலம் எவ்வளவு தான் விஷமானதாக இருந்தாலும், சத்தியத்தின் சக்தி உள்ளவர், இவை அனைத்தையும் குஷியில் நடனமாடுவதற்கான

மேடையாக ஆக்கி விடுவார். அப்படியானால் இந்தப் படம் யாருடையது? உங்கள் அனைவரினுடையது தான் இல்லையா! அனைவரும் ஸ்ரீ கிருஷ்ணர் ஆகுபவர்கள். இதில் தான் கையை உயர்த்துகிறீர்கள் இல்லையா?! இராமரின் சரித்திரங்களில் அந்த மாதிரியான விஷயங்கள் இல்லை, அவருடையது இந்த நேரம் பிரிந்த நிலை, அடுத்த நேரம் குஷியில் இருப்பது என்றிருக்கும். எனவே ஸ்ரீ கிருஷ்ணன் ஆகக்கூடிய ஆத்மாக்கள் அம்மாதிரியான நிலை என்ற மேடையில் எப்பொழுதும் நடனமாடிக் கொண்டே இருப்பார்கள், எந்தவொரு இயற்கையும், மாயா அல்லது நபரும், வைபவங்களும் அவரை அசைக்க முடியாது. மாயாவையே தன்னுடைய மேடை மற்றும் படுக்கை ஆக்கி விடுவார், இந்தப் படத்தையும் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? பாம்பை படுக்கை ஆக்கி விட்டார் என்றால், வெற்றியடைந்தவர் ஆகி விடுவார். அம்மாதிரி சத்தியத்தின் சக்தியின் அடையாளமாக, சத்தியம் இருக்கிறது என்றால், நடனமாடலாம் என்று இந்தப் படம் இருக்கிறது. சத்தியத்தின் சக்தியுள்ளவர் ஒருபோதும் மூழ்க முடியாது. சத்தியம் என்ற படகு ஆடும், அசையும், ஆனால் மூழ்க முடியாது, ஆடுவது அசைவது கூட ஒரு விளையாட்டாக அனுபவம் ஆகும். இன்றைய நாட்களில் விளையாட்டைக் கூட வேண்டுமென்றே மேலே, கீழே ஆடக்கூடியதாக உருவாக்குகிறார்கள் இல்லையா? அது விழுவதாக இருக்கும் ஆனால் விளையாட்டாக இருக்கும் காரணத்தினால் வெற்றியடைந்தாக அனுபவம் செய்வார்கள். எவ்வளவு தான் மேலே, கீழே செல்வதாக இருந்தாலும், ஆனால் விளையாடுபவர் தான் வெற்றியடைந்தாக நினைப்பார். அந்த மாதிரி சத்தியத்தின் சக்தி என்றால் வெற்றியடைவதற்கான வரம் பெற்றவர் என்று தன்னை நினைக்கிறீர்களா? ஒருவேளை இதுவரையிலும் கூட ஏதாவது சஞ்சலம், பயம் இருக்கிறது என்றால், சத்தியத்தின் கூடவே அசத்தியமும் இன்னும் இருக்கிறது, எனவே சஞ்சலத்தில் கொண்டு வருகிறது. எனவே எண்ணம், பார்வை, உள்உணர்வு, வார்த்தை மற்றும் உறவு, தொடர்பில் சத்தியத்தின் சக்தி உறுதியாக இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். நல்லது. இன்று சந்திப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே இந்த சத்தியத்தின் சக்தியை பற்றி, பிராமண வாழ்க்கையில் எப்படி விசேஷம் நிரம்பி நடந்து கொள்ள முடியும் என்ற விஸ்தாரத்தைப் பின்பு கூறுவோம். புரிந்ததா.

இரட்டை வெளிநாட்டினர் கிறிஸ்துமஸ் கொண்டாடி விட்டீர்களா அல்லது இன்றும் கிறிஸ்துமஸ்ஸா? பிராமண குழந்தைகளுக்காக சங்கமயுகமே கொண்டாடுவதற்கான யுகம் தான். எனவே தினசரி பாடுங்கள், ஆடுங்கள், குஷியாக இருங்கள். கல்பத்தின் கணக்குப்படி சங்கமயுகம் கொஞ்ச நாட்களுக்கு சமமானது இல்லையா? எனவே சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் பெரியது. நல்லது.

அனைத்து சத்தியத்தின் சக்தி சொரூபமான, சத்திய தந்தையின் மூலமாக சத்திய வரதானம் மற்றும் ஆஸ்தியைப் பெறக்கூடிய, எப்பொழுதும் சத்தியத்தின் சக்தி மூலமாக வெற்றியடையும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இயற்கையை வென்ற, மாயாவை வென்ற, குஷியில் நடனமாடக் கூடிய சத்தியமான குழந்தைகளுக்கு சத்தியமான தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதி சந்திரமணி அவர்கள் பாப்தாதாவிடம் விடைபெற்று பஞ்சாப் சென்று கொண்டிருக்கிறார்கள்:** அனைத்து பஞ்சாப் வாசிகளாக இருப்பவர்கள் இப்பொழுது மதுபன் வாசி ஆகியிருக்கும் குழந்தைகள், பாப்தாதாவின் அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். அனைத்து குழந்தைகளும் எப்பொழுதுமே கவலை யில்லாத இராஜாவாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். ஏன்? யோக சொரூப குழந்தைகள் எப்பொழுதும் குடைநிழலின் உள்ளே இருக்கிறார்கள். யோகி குழந்தைகள் பஞ்சாப்பில் இருக்கவில்லை, ஆனால் பாப்தாதாவின் பாதுகாப்பு குடைநிழலில் இருக்கிறார்கள். பஞ்சாப்பில் இருந்தாலும் சரி, அல்லது வேறு எங்கு இருந்தாலும் சரி, ஆனால் குடை நிழலின் உள்ளே இருக்கும் குழந்தைகள் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஒருவேளை மேலே கீழே செல்லும் சஞ்சலத்தில் வந்துவிட்டீர்கள் என்றால், ஏதாவது காயம் ஏற்பட்டு விடுகிறது ஆனால் ஆடாமல் அசையாமல் இருந்தீர்கள் என்றால், காயம் ஏற்படும் ஸ்தானத்தில் இருந்தபோதிலும், ஒரு முடியைக் கூட அசைக்க முடியாது. பாப்தாதாவின் கை மற்றும் துணை இருக்கிறது, எனவே கவலையில்லாத இராஜாவாக இருங்கள். மேலும் அந்த மாதிரி அமைதியற்ற சூழ்நிலையில் அதிகமாக அமைதியின் கிரஹணங்களைப் பரப்புங்கள். நம்பிக்கை இழந்தவர்களுக்கு, ஈஸ்வரிய ஆதரவின் நம்பிக்கையைக் கொடுங்கள். குழப்பத்தில் இருப்பவர்களுக்கு அழியாத ஆதரவை நினைவூட்டி, உறுதியானவர்களாக ஆக்குங்கள். பஞ்சாப்பைச்

சேர்ந்தவர்களுக்கு விசேஷமாக இந்த சேவை தான் செய்ய வேண்டும். பஞ்சாப்பைச் சேர்ந்தவர்களுக்கு தங்களுடைய பெயரை புகழுடையச் செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறதென்று. ஏற்கனவே கூறி இருந்தோம். நாலாபுறங்களிலும் எந்தவொரு ஆதரவும் தென்படவில்லை. அந்த மாதிரியான நேரத்தில் இதயத்திற்கு ஆறுதல் கொடுப்பவர்கள், இதயத்திற்கு அமைதியின் ஆதரவு கொடுப்பவர்கள், இந்த சிரேஷ்ட ஆதமாக்கள் தான் என்று அனுபவம் செய்ய வேண்டும். அமைதி இல்லாத நேரத்தில், அமைதிக்கு மகத்துவம் இருக்கும், எனவே அம்மாதிரியான நேரத்தில் இந்த அனுபவத்தை செய்வியுங்கள். இதுவே பிரத்யக்சத்திற்கான ஒரு ஆதாரம் ஆகி விடும். பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் பயப்படக் கூடாது, ஆனால் அந்த மாதிரியான நேரத்தில் மற்ற அனைவரும் பயமுறுத்துபவர்கள், ஆனால் இவர்கள் ஆதரவு கொடுப்பவர்கள் என்று அனுபவம் செய்ய வேண்டும். எனவே அந்த மாதிரி ஏதாவது மீட்டிங் வைத்து திட்டத்தை உருவாக்குங்கள். பிறகு அந்த அமைதியற்ற ஆத்மாக்களின் கூட்டத்தில் சென்று அமைதியின் அனுபவம் செய்வியுங்கள். ஒருவர் இருவருக்குக் கூட அமைதியின் அனுபவம் செய்வித்தீர்கள் என்றால், ஒருவர் இன்னொருவர் மூலமாக அலை பரவிக் கொண்டிருக்கும், மேலும் இந்த செய்தி வலுவாகச் சென்றடையும். மீட்டிங் செய்து கொண்டிருக்கிறீர்கள், மிகவும் நல்லது. நீங்கள் தைரியம் உள்ளவர்கள், உற்சாகம் உள்ளவர்கள், மேலும் எப்பொழுதுமே சகயோகியாக, அன்பானவராக உடன் இருந்திருக்கிறீர்கள், மேலும் எப்பொழுதும் இருப்பீர்கள். பஞ்சாப்பின் வரிசை எண் பின்னால் இல்லை, முன்னுக்கு இருக்கிறது. பஞ்சாப்பை சிங்கம் என்று கூறுவார்கள், சிங்கம் பின்னால் இருக்காது, முன்னுக்கு இருக்கும். என்னனென்ன நிகழ்ச்சி கிடைக்கிறதோ, அதில் சரி செய்கிறோம், சரி செய்கிறோம் என்று கூறினால், அசம்பவமும் சம்பவம் ஆகி விடும். நல்லது.

**அனைத்து குழந்தைகளுடன் சந்தித்த பிறகு காலை 5.30-மணிக்கு பாப்தாதா சத்குருவாருக்கான அன்பு நினைவுகள் கொடுத்தார்**. நாலாபுறங்களிலுமுள்ள சத்திய தந்தை, சத்திய ஆசிரியர், சத்குருவின் உண்மையிலும் உணமையான, மிக நெருக்கமான, அன்பான எப்பொழுதும் துணைவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு, சத்குருவார் தினத்தன்று மிகுந்த அன்பு நினைவுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். இன்று சத்குருவார் தினத்தன்று பாப்தாதா அனைவருக்கும் எப்பொழுதும்

வெற்றி சொரூபமாக இருந்து, எப்பொழுதும் தைரியம், உற்சாகத்தில் இருங்கள். எப்பொழுதும் தந்தையின் குடைநிழலின் உள்ளே பாதுகாப்பாக இருங்கள். எப்பொழுதும் ஒரே பலம், ஒருவர் மேலுள்ள நம்பிக்கை என்ற நிலையில் நிலைத்திருந்து, பார்வையாளார் ஆகி, அனைத்து காட்சிகளைப் பார்த்துக் கொண்டே மகிழ்ச்சியாக இருங்கள். அந்த மாதிரி விசேஷ அன்பு நிறைந்த வரதானத்தை கொடுக்கிறோம். இதே வரதானங்களை நினைவில் வைத்துக் கொண்டு, எப்பொழுதும் சக்திசாலியாக இருங்கள், எப்பொழுதும் நினைவு இருக்கட்டும், மேலும் எப்பொழுதும் நினைவில் இருங்கள். நல்லது. - அனைவருக்கும் குட்மார்னிங் மேலும் ஒவ்வொரு நாளுக்குமான வாழ்த்துக்கள்! நல்லது.

**வரதானம்: தன்னுடைய வார்த்தைகளின் மதிப்பை புரிந்து அதன் சிக்கனம் செய்யக் கூடிய மகான் ஆத்மா ஆகுக!**

எப்படி மகான் ஆத்மாக்களை சத்திய வாக்கு கூறும் சுவாமி என்று கூறுகிறார்கள். அதே போல் உங்களுடைய வார்த்தை எப்பொழுதும் சத்திய வாக்காக அதாவது ஏதாவது பிராப்தி செய்விக்கும் வாக்காக இருக்க வேண்டும். பிராமணர்களின் வாயிலிருந்து ஒருபொழுதும் யாருக்கும் சாபமிடக்கூடிய வார்த்தைகள் வெளியாகக் கூடாது. எனவே யுக்தியுடன் பேசுங்கள். மேலும் காரியத்திற்காக பேசுங்கள். வார்த்தைகளின் மதிப்பைப் புரிந்து கொள்ளுங்கள். நல்ல வார்த்தைகள் சுகம் கொடுக்கும் வார்த்தைகள் பேசுங்கள், கேலியாக கிண்டல் என்று சிரித்து விளையாடும் வார்த்தைகளைப் பேசாதீர்கள். வார்த்தைகளில் சிக்கனம் செய்வீர்கள் என்றால் மகான் ஆத்மா ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: ஒருவேளை ஸ்ரீமத் என்ற கை எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறது என்றால், முழு யுகமுமே கையோடு கை கோர்த்து சென்று கொண்டேயிருப்பீர்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 31.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புதிய ஞானம் மற்றும் புதிய வாழ்க்கை மூலமாக புதுமையின் ஜொலிப்பைக் காண்பியுங்கள்!

இன்று நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் உடல் ரூபத்தில், மற்றும் ஒளிவடிவமான உடல் ரூபத்தில், புதுயுகம், புது ஞானம், புது வாழ்க்கையை கொடுக்கும், பாப்தாதாவுடன் புது வருடத்தை கொண்டாடுவதற்காக, இந்த ஆன்மீக மிக உயர்ந்த மற்றும் மிகவும் புனிதமான புதிய தர்பாரில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அனைத்து குழந்தைகளின் உள்ளத்தின் ஊக்கம், உற்சாகம் மற்றும் மாற்றம் செய்வதற்கான உறுதிமொழிகளின் நல்ல எண்ணங்கள், நல்ல பாவனைகள், நல்ல விருப்பங்கள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்துவிட்டன. பாப்தாதாவும் அனைத்து புது உலகைப் படைக்கும், உலகை மாற்றம் செய்யும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பழைய உலகத்தின் பழைய சம்ஸ்காரம், பழைய நினைவுகள், பழைய உள் உணர்வுகள், பழைய உடலின் நினைவின் உணர்விலிருந்து விலகியிருக்கக் கூடிய, அனைத்து பழைய விஷயங்களுக்கும் விடை கொடுப்பவர் களுக்கு சதா காலத்திற்காக வாழ்த்துக்கள் கூறுகிறார். கடந்தவைக்கு முற்றுப்புள்ளி இட்டு, சுயராஜ்யத்தின் திலகம் இடுபவர் களுக்கு சுயராஜ்யத்தின் திலகத்தின் வாழ்த்துக்கள் கூறுகிறார். அனைத்து குழந்தைகளுக்கும் இந்த விடைக் கொடுத்ததின் வாழ்த்துக்களுடன் சேர்த்து, புது வருடத்திற்கான விசேஷ பரிசாக -எப்பொழுதும் உடன் இருங்கள், எப்பொழுதும் சமமாக இருங்கள், எப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் அமர்ந்து, உயர்ந்த ஆன்மீக போதையில் இருங்கள் என்ற இதே வரதானத்தின் பரிசை கொடுக்கிறார்.

இந்த முழு வருடமும் உடன் இருக்கிறோம், தந்தைக்குச் சமமாக இருக்கிறோம் என்ற நினைவு இருக்கிறது என்றால், ஒவ்வொரு எண்ணத்திலும் விடைக்கொடுத்ததற்கான வாழ்த்துக்களை அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள். பழையவற்றிற்கு விடை கொடுக்கவில்லை என்றால், புதுமையின் வாழ்த்துக்களின் அனுபவம்

செய்ய முடியாது. எனவே எப்படி இன்று பழைய வருடத்திற்கு விடை கொடுத்து கொண்டிருக்கிறீர்கள், அதே போல் வருடத்துடன் சேர்த்து என்னென்ன பழைய விஷயங்களை மேலே கூறினோமோ, அந்த பழைமைக்கு சதா காலத்திற்காக விடை கொடுங்கள். புதுயுகம், புது பிராமணர்களின் அழகான உலகம், புதிய சம்மந்தம், புதிய பரிவாரம், புதிய பிராப்திகள். அனைத்துமே புதியதிலும் புதியது தான். பார்க்கிறீர்கள் என்றால் கூட ஆன்மீகப் பார்வையோடு, ஆத்மாவை பார்க்கிறீர்கள். ஆன்மீக விஷயங்களைத் தான் யோசிக்கிறீர்கள். அப்படி அனைத்தும் புதியதாக ஆகி விட்டது இல்லையா! முறை புதியது, அன்பு புதியது, அனைத்துமே புதியது. அப்படி எப்பொழுதும் புதுமையின் வாழ்த்துக்களில் இருங்கள். இதைத் தான் ஆன்மீக வாழ்த்து என்று கூறுவது. இது ஒரு நாளுக்காக மட்டும் இல்லை, ஆனால் எப்பொழுதும் ஆன்மீக வாழ்த்துக்கள் மூலம் வளர்ச்சியை அடைந்துக் கொண்டே யிருக்கிறீர்கள். பாப்தாதா மற்றும் அனைத்து பிராமண பரிவாரத்தின் வாழ்த்துக்கள் மற்றும் ஆன்மீக ஆசிர்வாதங் களினால் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் - இந்த மாதிரி புது வருடத்தை உலகில் யாரும் கொண்டாட முடியாது. அவர்கள் அற்ப காலத்திற்காக கொண்டாடுவார்கள். நீங்கள் அழியாத சதா காலத்திற்காக கொண்டாடுகிறீர்கள், அவர்கள் மனித ஆத்மாக்கள், மனிதர்களுடன் தான் கொண்டாடுவார்கள். நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் தந்தை பரமாத்மாவுடன் கொண்டாடுகிறீர்கள். உருவாக்குபவர் மற்றும் வரம் அளிப்பவருடன் கொண்டாடு கிறீர்கள், எனவே கொண்டாடுவது என்றால், பொக்கிஷங்களினால், வரதானங்களினால் சதா காலத்திற்காக பையை நிரப்புவது. அவர்களுடையது கொண்டாடுவது மற்றும் இழப்பது. இது பையை நிரப்புவது, எனவே தான் பாப்தாதாவுடன் கொண்டாடுகிறீர்கள் இல்லையா? அந்த மனிதர்கள் ஹாப்பி நீயூ இயர் என்று கூறுவார்கள், நீங்கள் எவர் ஹாப்பி நீயூ இயர் என்று கூறுகிறீர்கள். இன்று குஷியாக இருக்கிறீர்கள், ஆனால் நாளை துக்கத்தின் நிகழ்வு உங்களை துக்கமானவர் ஆக்குவதில்லை. எப்படிப்பட்ட துக்கமான நிகழ்வாக இருந்தாலும், ஆனால் அந்த மாதிரியான நேரத்திலும் சுகம், அமைதி சொரூப நிலை மூலமாக அனைவருக்கும் சுகம், சாந்தியின் கிரணங்களை கொடுக்கும், சுகத்தின் கடலின் பங்கை செய்கிறீர்கள், எனவே அந்த துக்க சம்பவத்தின் பாதிப்பிலிருந்து விலகி விடுகிறீர்கள். மேலும் யாரெல்லாம் ஹாப்பியை எப்பொழுதும் அனுபவம் செய்கிறீர்கள்?

## 1984 அவ்யக்த முரளி

இந்த புது வருடத்தில் என்ன புதுமை செய்வீர்கள்? மேளா செய்வீர்கள், மாநாடு கூட்டுவீர்கள். இப்பொழுது இந்த அனைத்து பழைய பழக்க வழக்களிலிருந்து, பழைய மாதிரி நடந்து கொள்வதிலிருந்து களைப்பு அடைந்திருக்கிறீர்கள். அனைவரும் ஏதாவது புதியது இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். புதியதாக என்ன இருக்க வேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்று அதைப் புரிந்து கொள்ள முடியாது. அந்த மாதிரி புதுமையின் ஆசை வைத்திருப்பவர்களுக்கு புதிய ஞானம் மூலமாக, புதிய வாழ்க்கை மூலமாக, புதுமையின் ஜொலிப்பின் அனுபவம் செய்வியுங்கள். இது நன்றாக இருக்கிறது, இந்தளவு புரிந்திருக்கிறார்கள் ஆனால் புதியது, இதே புதிய ஞானம், புதிய யுகத்தைக் கொண்டு வருகிறது என்ற இந்த அனுபவம் இப்பொழுது குப்தமாக (மறைவாக) இருக்கிறது. இருக்க வேண்டுமென்று இதைக் கூறுகிறார்கள். அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக புதிய வாழ்க்கையின் வெளிப்படையான உதாரணத்தை அவர்களின் எதிரே வெளிப்படையான ரூபத்தில் கொண்டு வாருங்கள். அதன் மூலம் புதிய ஜொலிப்பு அவர்களுக்கு அனுபவம் ஆகட்டும். எனவே புதிய ஞானத்தை வெளிப்படுத்துங்கள். ஒவ்வொரு பிராமணனின் வாழ்க்கை மூலம் புதுமையின் அனுபவம் ஆகட்டும், அப்பொழுது தான் புது உலகின் ஜொலிப்பு, அவர்களுக்குத் தென்படும். எந்த நிகழ்ச்சி செய்தாலும் அதில் அனைவருக்கும் புதுமை அனுபவம் ஆக வேண்டும் என்ற இலட்சியத்தை வையுங்கள். இவர்களும் நல்ல காரியம் செய்து கொண்டியிருக்கிறார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, இது புதிய ஞானம், புதிய உலகைக் கொண்டு வருவது என்று அனுபவம் செய்ய வேண்டும். புரிந்ததா? புது உலகின் ஸ்தாபனையின் அனுபவம் செய்விக்கும் அலையைப் பரப்புங்கள். புது உலகம் வந்து விட்டது, அதாவது நம் அனைவரின் சுப பாவனைக்கான பலன் கிடைக்கும் நேரம் வந்துவிட்டது என்று அந்த மாதிரியான ஊக்கம், உற்சாகம் அவர்களுடைய மனதில் எழவேண்டும். அனைவரின் மனதில் நம்பிக்கையின்மைக்குப் பதிலாக சுப பாவனையின் தீபத்தை ஏற்றுங்கள். எந்தவொரு முக்கிய நாளைக் கொண்டாடுகிறீர்கள் என்றால். தீபம் ஏற்றுகிறீர்கள், இன்றைய நாட்களிலோ இராயலான மெழுவர்த்திகள் வந்துவிட்டன, அந்த மாதிரி அனைவரது மனதிலும் இந்த தீபத்தை ஏற்றுங்கள். அந்த மாதிரி புது வருடத்தைக் கொண்டாடுங்கள். சிரேஷ்ட பாவனைகளின் பலனின் பரிசை அனைவருக்கும் கொடுங்கள். நல்லது.

எப்பொழுதும் அனைவருக்கும் புதிய வாழ்க்கை, புதிய யுகத்தின் ஜொலிப்பை காண்பிக்கக் கூடிய, புதிய ஊக்கம், உற்சாகத்தின் வாழ்த்துக்களைக் கூறக்கூடிய, அனைவரையும் எவர் ஹாப்பி ஆக்கக் கூடிய, உலகிற்கு புது படைப்பின் அனுபவம் செய்விக்கக் கூடிய, அந்த மாதிரியான மிக உயர்ந்த புது யுகத்தின் மாற்றம் செய்யும், உலகிற்கு நன்மை செய்யும், எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்யும், தந்தையின் நிரந்தர துணையாக இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** புது வருடத்தின், புது ஊக்கம், புது உற்சாகம் எப்பொழுதுமே இருக்க வேண்டுமென்று அந்த மாதிரியான திட எண்ணத்தை அனைவரும் வைத்தீர்களா? இது புது யுகம், இதில் ஒவ்வொரு எண்ணமும் புதியதிலும் புதியதாக இருக்கட்டும். ஒவ்வொரு காரியமும் புதியதிலும் புதியதாக இருக்கட்டும். இதைத் தான் புதிய ஊக்கம், புதிய உற்சாகம் என்று கூறுவது. அந்த மாதிரியான திட எண்ணத்தை வைத்தீர்களா? எப்படி தந்தை அழியாதவரோ அதேபோல் தந்தை மூலமாகக் கிடைக்கும் பிராப்தியும் அழியாதது. அழியாத பிராப்தியை திட எண்ணம் மூலம் பிராப்தி செய்ய முடியும். தன்னுடைய சேவை ஸ்தானத்திற்கு சென்ற பிறகு, இந்த அழியாத திட எண்ணத்தை மறந்து விடாதீர்கள். மறப்பது என்றால் பிராப்தியின்மை, மேலும் திட எண்ணம் இருக்கிறது என்றால், அனைத்து பிராப்தியும் இருக்கிறது.

எப்பொழுதும் தன்னை பல மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா? எந்த அடியை தந்தையின் நினைவில் எடுத்து வைக்கிறீர்களோ, அந்த ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் அடங்கியிருக்கிறது. எனவே எப்பொழுதும் தன்னை ஒரு நாளில் எண்ண முடியாத அளவிற்கு சம்பாதிக்கும் பலமடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று புரிந்து, ஆஹா என்னுடைய சிரேஷ்ட பாக்கியம் என்ற இதே குஷியில் எப்பொழுதும் இருங்கள். நீங்கள் குஷியாக இருப்பதைப் பார்த்து, மற்றவர்களுக்கும் பிரேரணை கிடைத்து கொண்டேயிருக்கும். இது தான் சேவைக்கான சகஜ சாதனம். யார் நினைவு மற்றும் சேவையில் எப்பொழுதும் மூழ்கியிருக்கிறார்களோ, அவர்கள் தான் பாதுகாப்பாக இருக்கிறார்கள், வெற்றியடைபவர்களாக இருக்கிறார்கள். நினைவு

மற்றும் சேவை அந்த மாதிரியான சக்தி அதன் மூலம் எப்பொழுதுமே முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பீர்கள். நினைவு மற்றும் சேவைக்கான சமநிலையை மட்டும் அவசியம் வைக்க வேண்டும். சமநிலை தான் ஆசீர்வாதங்களைப் பெற வைக்கும். தைரியம் உள்ள குழந்தைகளுக்கு, தைரியத்தின் காரணமாக எப்பொழுதுமே உதவி கிடைக்கிறது. தைரியம் என்ற ஒரு அடியை குழந்தைகள் எடுத்து வைக்கிறார்கள் என்றால், ஆயிரம் அடிகள் தந்தையின் உதவி கிடைத்து விடுகிறது.

(**இரவு 12-மணிக்கு பிறகு 01.01.1985 அன்று வெளிநாட்டு சகோதர, சகோதரிகள் புது வருடத்தின் குஷியில் பாடல் பாடினார்கள். மேலும் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள் கூறினார்**.)

எப்படி குழந்தைகள் தந்தையின் அன்பின் நினைவில் இருந்து பாடல் பாடினார்கள், மேலும் அன்பில் ஐக்கியமானவர் ஆகி விடுகிறார்கள். அதே போல் தந்தையும் குழந்தைகளின் அன்பில் முழ்கியிருக்கிறார். தந்தை பிரியதர்ஷனாக இருக்கிறார் என்றால், பிரியதர்ஷினியாகவும் இருக்கிறார். ஒவ்வொரு குழந்தைகளின் விசேஷத்தின் மேல் தந்தையும் பிரியதர்ஷினியாகி விடுகிறார். தன்னுடைய விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்களா? தந்தை உங்கள் மேல் எந்த விசேஷத்தின் காரணமாக ஈர்க்கப்பட்டார் என்று ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்களா?

முழு உலகத்திலும் எவ்வளவு குறைந்தவர்கள், தந்தையின் அன்பான குழந்தைகளாகி இருக்கிறார்கள். பாப்தாதாவும் அன்பு குழந்தைகளுக்கு புது வருடத்திற்காக மிகவும் உள்ளப் பூர்வமாக உயிருக்கும் மேலாக மற்றும் அன்புடன் பல மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். எப்படி நீங்கள் பாடல் பாடினீர்கள், அதேபோல் பாப்தாதாவும் குழந்தைகளின் குஷியின் பாடலை பாடுகிறார். தந்தையின் பாடல் மனதில் இருப்பது, மேலும் உங்களுடையது வாயால் பாடப்படுவது. உங்களுடைய பாடலையோ கேட்டு விட்டோம், தந்தையின் பாடலையும் கேட்டீர்கள் இல்லையா?

# 1984 அவ்யக்த முரளி

இந்த புது வருடத்தில் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் ஏதாவது ஒரு விசேஷத்தை அவசியம் காண்பித்துக் கொண்டேயிருங்கள். ஒவ்வொரு எண்ணமும் சாதாரணமானதாக இன்றி விசேஷமாக இருக்கட்டும். ஏன்? விசேஷ ஆத்மாக்களின் ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் விசேஷமாகவே இருக்கும். எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். ஊக்கம், உற்சாகம் என்பது விசேஷமான இறக்கைகள், இந்த இறக்கைகள் மூலமாக எவ்வளவு உயரமாகப் பறக்க விரும்புகிறீர்களோ, அந்தளவு பறக்க முடியும். இந்த இறக்கைகள் தான் பறக்கும் கலையின் அனுபவம் செய்விக்கும். இந்த இறக்கைகளால் பறந்து விட்டீர்கள் என்றால், தடைகள் அங்கு வரை வந்தடைய முடியாது. எப்படி விண்வெளியில் செல்கிறார்கள் என்றால், பூமியின் ஈர்ப்பு இழுக்க முடியாது. அதேபோல் பறக்கும் கலை உள்ளவர்களை தடைகள் ஒன்றும் செய்ய முடியாது. எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்துடன் முன்னேறிச் செல்வது மற்றும் முன்னேற வைப்பது தான் விசேஷ சேவை. சேவாதாரிகள் இந்த விசேஷத்தின் மூலம் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டேயிருக்க வேண்டும்.

**வரதானம்: யோகா செய்வது மற்றும் செய்விப்பதின் தகுதியின் கூடவே பிரயோகி ஆத்மா ஆகுங்கள்!**

குழந்தைகள் யோகா செய்வது, மற்றும் செய்விப்பது இரண்டிலுமே திறைமை மிகுந்தவர்கள் என்று பாப்தாதா பார்த்திருக்கிறார். எப்படி யோகா செய்வது மற்றும் செய்விப்பதில் தகுதியானவர்களாக இருக்கிறீர்கள், அதேபோல் பிரயோகம் செய்வதிலும் தகுதியானவர் ஆகுங்கள், மற்றும் ஆக்குங்கள். இப்பொழுது பிரயோகி வாழ்க்கையின் அவசியமாக இருக்கிறது. முதலில் தன்னுடைய சம்ஸ்காரத்தை மாற்றுவதில் எந்தளவு பிரயோகி ஆகியிருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள்? ஏனென்றால், சிரேஷ்ட சம்ஸ்காரம் தான், சிரேஷ்ட உலகத்தின் படைப்பிற்கான வேர். ஒருவேளை வேர் உறுதியாக இருக்கிறதென்றால், மற்ற அனைத்து விஷயங்களும் இயல்பாகவே உறுதியாகி விடும்.

**சுலோகன்: அனுபவம் நிறைந்த ஆத்மாக்கள், ஒருபொழுதும் வாயுமண்டலம் மற்றும் தொடர்பின் பாதிப்பில் வர முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂